தகவல்கள், அறிக்கைகள், விளக்கங்கள் மீது

கலைஞரின் சட்டமன்ற உரைகள்



தகவல்கள், அறிக்கைகள், விளக்கங்கள் மீது

கலைஞரின்
சட்டமன்ற உரைகள்

வெளியீடு :
தமிழ்க்கனி பதிப்பகம்
சென்னை - 600 004

ANNA CENTENARY LIBRARY

விற்பனை உரிமை :
பூம்புகார் பதிப்பகம்
127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108.

முதல் பதிப்பு : மே, 2008

G00238 2

894.8115
TAM

விலை ரூ. 250/-

ANNA CENTENARY LIBRARY
CHE.

உரிமை : ஆசிரியர்க்கே

Printed & bound by Eagle Press, Chennai - 600 013.

என்னுரை

1956ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்றது தி. மு. கழகத்தின் மாநில மாநாடு. தி. மு. கழகம் 1949ல் தொடங்கப்பட்டு ஏழாண்டுகள் ஆகியிருந்தன. அப்போதெல்லாம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், தி. மு. க. குறித்துப் பேசினாலும், எழுதினாலும், பேட்டி கொடுத்தாலும் - ஓர் அறைகூவல் விடத் தவற மாட்டார். ''தி. மு. க. காரர்கள் வெட்ட வெளியில் நின்று பேசுகிறார்களே; அவர்களுக்கு மக்கள் ஆதரவு இருப்பது உண்மையானால் சட்டசபைக்கு வந்து பார்க்கட்டுமே !'' என்பதுதான் அந்த அறைகூவல் - அவரது அந்த அறைகூவலை அன்பான அழைப்பாகவே கருதி, அறிஞர் அண்ணா அவர்கள், ''இனிமேல் வரும் தேர்தல்களில் தி. மு. க. போட்டியிடும்'' என்று ஒரு தீர்மானத்தை, திருச்சி மாநில மாநாட்டில் கூடியிருந்த லட்சோபலட்சம் மக்களின் தீர்ப்பாகவே வெளியிட்டார்.

அதன் விளைவாகக் கட்சியின் முன்னணித் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடும் இடங்களை - அண்ணா அவர்களே; கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் அறிவித்தார். அப்போது நண்பர்கள் வற்புறுத்தலுக்கு இணங்க; நான் எனது பிறந்த ஊரான ''திருக்குவளை'' உள்ளிட்ட நாகைத் தொகுதியில் நிற்கலாமென்று முடிவு செய்துகொண்டு சென்னைக்கு வந்தேன்.

சென்னையில் அண்ணா அவர்கள், அன்றைய தலைமைக் கழகமிருந்த ராயபுரம் அறிவகத்தில் இருந்தார்கள். சந்தித்தேன். அண்ணா கையாலேயே என் பெயரை "குளித்தலை தொகுதி"யில் குறிப்பிட்டு; என்னைக் கேட்காமலேயே அறிவித்துவிட்டார். மறுத்துரைக்காமல் குளித்தலையில் வேட்பாளராக நின்றேன். அந்தத் தேர்தலில் தூத்துக்குடி தொடங்கி, நாகை வரையில் இருந்த அனைத்துத் தொகுதிகளிலும் நான் ஒருவன் மட்டுமே குளித்தலையில் வென்றேன். ஆம்; சட்டப்பேரவை நுழைவுக்கான கதவு இப்படி எனக்குத் திறக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் அறிஞர் அண்ணா தலைமையில், நான், பேராசிரியர் க. அன்பழகனார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திருமதி சத்தியவாணிமுத்து, ஏ. கோவிந்தசாமி, ப. உ. சண்முகம், விருதாசலம் எம். செல்வராஜ், எம். பி சுப்பிரமணியம், ம. பா. சாரதி, களம்பூர் அண்ணாமலை, ஆனந்தன், இருசப்பன், பி. எஸ். சந்தானம், சி. நடராஜன் ஆகிய நாங்கள் 15 பேர் வெற்றிபெற்று, சட்டப்பேரவையில் இடம்பெற்றோம்.

அன்று முதல் இன்று வரை அனைத்துத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் எனக்கு; ஆம் கழகத்துக்கு; நான் போட்டியிட்ட தொகுதிகளில் வெற்றியைத்தான் அளித்தார்கள்.

இந்த ஐம்பது ஆண்டுக்காலத்தில் நான் சட்டப்பேரவையில், பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆற்றிய உரைகளை அவற்றின் அகல நீளம் கணக்கிடாமல் அப்படியே அச்சியற்றித் தருகிற

அரிய பணிக்குத் தன்னை ஒப்படைத்துக்கொண்ட தம்பி சண்முகநாதனை என்னால் மறக்கவே முடியாது. அவரது முயற்சிதான் அடுக்கடுக்கான இந்தத் தொகுப்புகள் என்பேன்.

1938 முதல் 70 ஆண்டுக்கால என் பொது வாழ்க்கையில் - அரசியல் வாழ்வில் ஓர் அங்கமான சட்டப்பேரவையில் தொடர்ந்து 50 ஆண்டுக் காலம் நான் ஆற்றிய பணிகளை, அந்த அவையில் ஆற்றிய இந்த உரைகள் விளக்கிடும் என்பதில் ஐயமில்லை.

சொல்லாடலில் சூடும், சுவையும் மாறி மாறி காணலாம் - அதன் காரணமாக மனித நேயம் - நாகரிகம் - பண்பாடு இவற்றை அணுப்பொழுதும் மறந்ததுமில்லை; அரசியல் பகை காரணமாக அறவே துறந்ததுமில்லை.

அவற்றில் சிலவற்றுக்குச் சான்று கூற விழைகிறேன். நான் பிறந்த ஊர் திருக்குவளையில் என் அன்னையின் பெயரால் "அஞ்சுகம் தாய் சேய் நல விடுதி''யை முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம்தான் திறந்துவைத்தார். என் அன்னை அஞ்சுகம் அம்மையார் மறைந்தபோது எனக்கு முன்பு சென்று என் இல்லத்தில் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தியவர் அன்றைய முதல்வர் திரு. காமராஜர் !

காமராஜருக்கும் எனக்குமிடையே எவ்வளவோ கடுமையான அரசியல் போராட்டம் - ஆனால் அவர் மறைந்த பிறகு சென்னையில் காமராஜர் சாலை - சென்னையிலும், விருதுநகரிலும் காமராஜர் நினைவகம் - கன்னியாகுமரியில் வரலாற்றுச் சின்னமாக காமராஜர் மணி மண்டபம் -

சென்னை விமான நிலைய உள்நாட்டு முனையத்திற்கு காமராஜர் பெயர் - அவர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட சட்டம் - இத்தனையும் அரசியல் பண்பாட்டின் அடையாளமாக நான் உருவாக்கியது - அதுபோல அவர் நினைவு போற்ற எத்தனையோ ஏற்பாடுகள்.

மனித நேயத்துடன் அரசியல் நடத்தப்பட்டது - அராஜகங்களுக்கிடையிலேயும் அன்பு மலர் பூத்தது.

இப்படி பல வடிவெடுத்த சூழ்நிலைகள் - சமுதாய மாற்றங்கள் - இவைகள் கடந்த ஐம்பதாண்டுகளில் எப்படியெல்லாம் வானத்தில் அலையும் மேகங்களைப் போல மாறி மாறிக் காட்சியான போதிலும் - மனிதனுக்குரிய மாண்பினை மாற்றிக்கொள்ளாமல்தான் என் அரசியல் பாதை அமைந்தது என்பதை நினைவூட்டி;

அரசியல் மாற்றங்களுக்கேற்ப இந்தத் தொகுப்பு உரைகளில் தலைகாட்டும் கருத்துக்கள், வார்த்தைகள், வாசகங்கள் அனைத்துக்கும் ஒரு பொதுமன்னிப்பை அளித்து;

என் நெஞ்சில் எழுந்த எண்ணங்களுக்கு - வாழ்த்து வழங்கி வலிமை சேர்த்திட வேண்டுகிறேன்.

அன்புள்ள,

22/4/2007

பதிப்புரை

காலத்தை வென்று, ஞாலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய வலிவும், பொலிவும் பெற்றவை கலைஞர் அவர்களின் நூல்கள். அவரது நூல்கள் பலவற்றைப் பதிப்பிக்கும் பொறுப்பும் சிறப்பும் தமிழ்க்கனி பதிப்பகத்திற்கு ஏற்கனவே வழங்கப் பட்டிருக்கிறது. கலைஞர் அவர்களுக்கு முழுமையாக நிறைவு தரும் வண்ணம் பதிப்பித்துத் தருவதென்பது மிகவும் கடினமான காரியம். எனினும், ஒவ்வொரு முறையும் திறன் அனைத்தையும் ஒருமுகப்படுத்தி, உழைத்து உருவாக்கிப் பதிப்பித்ததால்தான் மீண்டும் மீண்டும் அந்தப் பெருமை தமிழ்க்கனிப் பதிப்பகத்தார்க்கு கிடைத்து வருகிறது.

கலைஞர் அவர்களின் :

பொன்னர் சங்கர்

தொல்காப்பியப் பூங்கா

தாய் காவியம்

முத்துக்குளியல்

சிந்தனையும் செயலும்

காலப்பேழையும் கவிதைச் சாவியும்

போன்ற கற்கண்டுச் சொல்லோவியங்களைப் பதிப்பித்திடும் நல்ல வாய்ப்புக்களைப் பெற்று நாமணக்க நன்றி செலுத்தி நாளெல்லாம் மகிழ்ந்திருக்கிறோம். அந்த வரிசையில் மற்றுமொரு வாய்ப்பு தற்போது கிட்டியிருக்கிறது.

''சட்டப்பேரவையில் கலைஞர்'' பொன்விழா கொண்டாடப்படும் இந்தக் குதூகலமான வேளையில், கடந்த ஐம்பதாண்டுகளில், தமிழ்நாடு சட்டப் பேரவையில் கலைஞர் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறுபட்ட பொருள் களில் ஆற்றிய உரைகளையெல்லாம் தொகுத்துப் பதிப்பிக்கும் பேறு தமிழ்க்கனி பதிப்பகத்தாருக்கு வாய்த்திருக்கிறது.

ஆளுநர் உரைமீது உரைகள்

தொழில்துறை பற்றி உரைகள்

காவல்துறை பற்றி உரைகள்

நிதிநிலை அறிக்கையின் மீது உரைகள்

காவிரி பிரச்சினை மீது உரைகள்

ஒத்திவைப்பு, கவனஈர்ப்பு தீர்மானங்களின் மீது உரைகள்

தகவல்கள், அறிக்கைகள், விளக்கங்கள்மீது உரைகள்

அரசு தீர்மானம், சட்ட முன்வடிவுகள் மீது உரைகள்

மானியம், துணை மானியம், நிதி ஒதுக்கீடுகள் மீது உரைகள்

என சட்டப்பேரவையில் அவர் ஆற்றிய உரைகள் பகுக்கப்பட்டு பதிக்கப்பட்டு வெளிவருகின்றன.

"கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வேட்பமொழியும்" சொல்லேருழவர் கலைஞர். திறனறிந்து சொல்லைச் சொல்லுவதும், பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மையறிந்து சொல்லுவதும் கலைஞர் அவர்களுக்கு இயல்பாக வரப்பெற்ற கலையாகும். செறிந்த சிந்தனை, தேர்ந்த சொற்கள் - இவையிரண்டும் கலைஞரது சொற்பொழிவுகளின் அடிநாதங்களாகும். சட்டப்பேரவையில்

கலைஞர் ஆற்றிய உரைகளைப் படிக்கும்போது இந்த உண்மைகளை யாரும் எளிதில் உணர முடியும். பரபரப்பும் விறுவிறுப்பும், ஆழமும் அழகும் மிகுந்திருக்கும் அவரது உரைகள் காலத்தின் கண்ணாடிகளாகும். அவரது உரைகளில் காணப்படும் நுட்பமான புள்ளிவிவரங்களும், வாதத்திறமையும், நகைச்சுவையும் படிப்பவர்களின் கருத்தை நிச்சயம் கவர்ந்திழுக்கக்கூடியவை.

அரசியலிலும், அரசுத்துறைகளின் செயல்பாடுகளிலும் ஆர்வமுள்ளோர் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய இந்த நூல்களுக்கு தமிழ்கூறும் நல்லுலகில் மிகுந்த வரவேற்பு கிடைத்திடும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எங்களுக்கு நிரம்ப உண்டு.

- தமிழ்க்கனி பதிப்பகத்தார்

பொருளடக்கம்

உரை எண்.	தேதி	பொருள்	பக்கம்
1.	19.03.1966	பரோலில் விடுதலை	17
2.	09.11.1966	புயல் நிவாரணம்	25
3.	30.03.1968	தொழிலாளர் பிரச்சினை	30
4.	30.03.1968	மேட்டூரில் நீர் திறப்பு	34
5.	30.03.1968	போக்குவரத்து விபத்து	36
6.	24.08.1968	காவேரிப் பிரச்சினை	39
7.	10.03.1969	வானொலியில் இந்தி ஒலி பரப்பு	42
8.	25.03.1969	பஞ்சாலைத் தொழிலாளர் போராட்டம்	46
9.	07.09.1970	நக்சலைட் பிரச்சினை	51
10.	07.07.1971	மனுநீதித் திட்டம்	54
11.	08.12.1971	போர்வீரர்களுக்கு உதவிநிதி	58
12.	14.12.1972	எம்.ஜி.ஆர். கொடுத்த ஊழல் புகார்	61
13.	14.12.1972	ஊழல் புகாருக்கான பதில்கள்	65
14.	03.11.1973	அரசு அலுவலர் நலன்	72
15.	20.11.1973	மாநகராட்சி கலைப்பு	74
16.	29.01.1974	நதிகள் தேசிய மயம்	76
17.	17.03.1975	சி. சுப்பிரமணியத்திற்குப் பதில்	79

18.	01.04.1978	விதி 81இன் கீழ் அறிக்கை	94
19.	07.04.1978	இஸ்மாயில் கமிஷன் குறித்த அறிக்கை	100
20.	10.03.1979	காவல் துறையினரின் நடவடிக்கை	118
21.	30.03.1979	வழக்கறிஞர்கள் பிரச்சினை	122
22.	06.03.1981	சிறைக் கைதிகள் பிரச்சினை	125
23.	13.02.1982	பால் கமிஷன் அறிக்கை	127
24.	08.05.1990	இலங்கைத் தமிழர் பிரச்சினை	150
25.	09.05.1990	பெருமழை நிவாரணப் பணிகள்	162
26.	10.05.1990	வெள்ள மீட்பு பிரச்சினை	167
27.	11.05.1990	கண்ணகி கோயில்	172
28.	11.05.1990	புயல் நிவாரணப் பணி மத்திய அரசு உதவி நிதி	175
29.	12.05.1990	நகைமுகன் பிரச்சினை	177
30.	22.08.1990	ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம்	182
31.	25.05.1996	இரங்கல் தீர்மானத்தில் மரபு மீறலா?	185
32.	27.05.1996	மதுரை மீனாட்சியம்மன் கோவில்	188
33.	30.05.1996	விடுதலைப் புலிகள் பிரச்சினை	198
34.	02.08.1996	என்கவுண்டர் கொலை	201
35.	09.08.1996	ஜெ. மீது சி.பி.ஐ. விசாரணை	203
36.	16.08.1996	இட ஒதுக்கீடு பிரச்சினை	206
37.	31.08.1996	சிறைக் கைதிகள் விடுதலை	211
38.	27.01.1997	எம்.ஜி.ஆர். சிலை	215

39.	18.03.1997	அவை மரபு பற்றிய பிரச்சினை	219
40.	03.04.1997	சந்தன மரக் கிடங்கில் தீ விபத்து	223
41.	16.04.1997	அரசு அலுவலர்க்கு அகவிலைப் படி உயர்வு	231
42.	15.10.1997	காவல் நிலைய மரணம்	235
43.	17.04.1998	சத்துணவு அமைப்பாளர்கள் ஊதியம்	242
44.	24.04.1998	அகவிலைப்படி உயர்வு	244
45.	27.04.1998	மாநில அரசுகளைக் கலைக்கும் அதிகாரம்	246
46.	29.04.1998	தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த அதிகாரிகள்	250
47.	30.04.1998	நெசவாளர்கள் பிரச்சினை	254
48.	04.05.1998	சேலம் அரசினர் விடுதிப் பிரச்சினை	259
49.	06.05.1998	இலவச மின்சாரம்	262
50.	11.05.1998	கோவை குண்டு வெடிப்பு	268
51.	18.05.1998	அரசு அலுவலர் நலன்	296
52.	23.11.1998	இரயில்வே துறை நிகழ்ச்சி	298
53.	24.11.1998	காஞ்சி சங்கராச்சாரியார்	301
54.	27.11.1998	மாஞ்சோலை எஸ்டேட்	303
55.	23.03.1999	சட்டம் ஒழுங்குப் பிரச்சினை	306
56.	31.03.1999	செங்குன்றம் ஏரி	311
57.	16.04.1999	பொடா சட்டம்	314

58.	20.04.1999	கணினிப் பயிற்சி	317
59.	21.04.1999	காமராஜர் மணி மண்டபம்	321
60.	22.04.1999	கணினிப் பயிற்சி	324
61.	04.05.1999	கோவை சட்டம் ஒழுங்குப் பிரச்சினை	328
62.	05.05.1999	தென் மாவட்டங்களுக்கான குழு	334
63.	23.11.1999	திருச்சி, நாகை புயல் மழை	341
64.	06.04.2000	முத்து தேவன்பட்டி	346
65.	31.01.2001	அங்கீகரிக்கப்படாத மனைகள்	351

தகவல்கள், அறிக்கைகள், விளக்கங்கள் மீது

கலைஞரின்

சட்டமன்ற உரைகள்



தகவல்கள், அறிக்கைகள், விளக்கங்கள் மீது

கலைஞரின் சட்டமன்ற உரைகள்

பரோலில் விடுதலை

உரை : 1 நாள் : 19.03.1966

கலைஞர் மு. கருணாநிதி : கனம் தலைவர் அவர்களே, 57-வது விதியின்படி, இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த விவாதத்தில் இதற்கு முன்பு கூறப்பட்ட கருத்துக்களுக்கும், நான் கூற இருக்கின்ற கருத்துக்களுக்கும் நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் பதில் கூறுவதற்குப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறார்கள். இந்த விவகாரம் எத்தகைய அடிப்படையிலே ஆரம்பமானது என்பதை ஒரு முறை நாம் நினைவு கூர்வது இந்த விவாதத்திற்கு துணை புரியும் என்று நான் கருதுகிறேன். தோழர் உமாநாத் அவர்கள், பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு சிறையிலே வைக்கப்பட்டவர், பரோலில் சில பல காரணங்களுக்காக விடுதலை செய்யப்பட்டார். அவர் விடுதலை செய்யப்பட்ட நேரத்தில், ஒவ்வொரு நாளும் அவர் உறையூர் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று அங்கே ஆஜராக வேண்டுமென்ற நிபந்தனையொன்றும், சதி வேலைகளிலே ஈடுபடுவதோ அல்லது சதி வேலைகளைத் தூண்டுவதோ கூடாது என்ற நிபந்தனையும் ஆக இந்த இரண்டு நிபந்தனைகளும் விதிக்கப்பட்டன. இந்த இரண்டு நிபந்தனைகளும் விதிக்கப்பட்ட நேரத்தில், டெல்லிப் பாராளுமன்றத்திலே கேட்கப்பட்ட கேள்விகள், பாராளுமன்றக் கூட்டத்தில் திரு. உமாநாத் அவர்கள் விரும்பினால் கலந்து கொள்ளலாமா என்ற முக்கியமான

விஷயத்தைக் கோடிட்டுக் காட்டின. இந்தக் கேள்விக்கு பதிலளிப்பதற்கு முன்பு, உள்துறை அமைச்சர் அவர்கள் அங்கே "இதிலுள்ள சிக்கல்களை நான் ஆராயவேண்டும், இதற்கு போதுமான அவகாசம் வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். நமது முதலமைச்சர் அவர்களைப்போல அவசரப்படாமல் டெல்லியிலே உள்ள உள்துறை அமைச்சர் அவர்கள் இதிலுள்ள சிக்கல்களையெல்லாம் ஆராய்ந்து அதற்குப் பிறகுதான் முடிவு கூறுவேன் என்று கூறினார். இந்தப் பிரச்சினை ஆலோசனையில் இருக்கிறது என்று உள்துறை அமைச்சர் கூறிய கருத்துக்கு அடுத்து, திருச்சியிலே உள்ள திரு. உமாநாத் அவர்களுக்கு மார்ச் இரண்டாம் நாள் 'நீங்கள் டெல்லிக்குச் செல்லக்கூடாது' என்ற அறிவிப்பு - முதலமைச்சர் அவர்களுடைய மொழியிலே அறிவிப்பு என்றும், டெல்லி சபாநாயகர் அவர்களுடைய மொழியிலே அதற்கு உத்தரவு என்றும் பெயர் ைவக்கலாம் - அந்த உத்தரவு அவருக்கு வழங்கப்பட்டபோது, இது சபையினுடைய உரிமையைப் பாதிக்கிறது என்ற முறையிலே டெல்லிப் பாராளுமன்றத்திலே உரிமைப் பிரச்சினை எழுப்பப் பட்டது. இந்தப் புதிய உத்தரவு பழைய உத்தரவிலிருந்து மாறுபட்டதோ அல்லது புதிய நிபந்தனையோ அல்ல, பழைய உத்தரவின் விளக்கம்தான்; அதன் பொருள், அவர் தனது இல்லத்திலேயே தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதே என்று அங்கே உள்துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். முதலமைச்சர் அவர்கள் அது போலத் தகவல் அளித்திருந்த காரணத்தால் உள்துறை அமைச்சர் தவறான வகையில் இந்தப் பதிலைக் கூறவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டார். இந்தப் புதிய உத்தரவை - டெபுடி செகரட்டரி தமிழகத்தின் தலை நகரத்திலிருந்து அனுப்பிய வயர்லெஸ் தகவலை - போலீஸ் அதிகாரிகள் திரு. உமாநாத் அவர்களுக்கு அளித்ததைப்பற்றி டெல்லி உள்துறை அமைச்சருக்குத் தொலைபேசிமூலம் தெரிவித்த முதலமைச்சர் அவர்கள் 9-ம் தேதியன்று இங்கே கேள்வி கேட்ட நேரத்தில் இந்த மன்றத்திலே தெரிவிக்காதது உள்ளபடியே வியப்பிற்குரியது; வருந்தத்தக்க ஒன்றாகும்.

மத்திய சர்க்காரில் இருக்கின்ற உள்துறை அமைச்சர் அவர்கள் பழைய விளக்கத்திற்குத்தான் புதிய பொருள் தரப்பட்டு

உத்தரவு என்ற பெயரிலே அனுப்பப்பட்டிருக்கிறது என்ற அளவில் டில்லியிலே கூறியிருக்கிறார்கள். அந்தத் தகவலை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார். அதே நேரத்தில் இந்த மன்றத்தில் கேள்வி கேட்கப்பட்ட நேரத்தில் இந்த விஷயம் முழுவதையும் முதலமைச்சர் அவர்கள் சபை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க மறுத்து விட்டார்கள். டெல்லிக்குச் சொன்ன தகவலை இந்த மன்றத்திற்கு தெரிவித்திருக்கக் கூடாதா? என்பதுதான் அடிப்படையான கேள்வி. இதையொட்டி டெல்லியில் சபாநாயகர், மதிப்புக்குரிய ஹுகும்சிங் அவர்கள் வழங்கிய தீர்ப்பு இங்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற விவாதத்திற்கு மிக, மிக அனுசரணையானது என்பதால் இங்கே அதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

''மார்ச் 2-ம் தேதி தரப்பட்ட உத்தரவு, தகாத அக்கறையுள்ள ஒரு பொருளைத் தந்துள்ளது. புதிய உத்தரவு - விளக்கம்தான் என்றால் அது அனாவசியமானது!''

என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். நண்பர் வீரபாகு அவர்கள் எடுத்துச் சொன்னார்கள் - 'அது விளக்கம்தானே' என்று. அதை உத்தரவு என்று நாங்கள் சொன்னால் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதற்காகத்தான் டெல்லி பாராளுமன்றத்தில் வீற்றிருக்கின்ற பெருமை வாய்ந்த சபாநாயகர் தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கும் வரிகளைப் படித்துக் காட்டுகிறேன்.

"மார்ச் 2-ம் தேதி தரப்பட்ட உத்தரவு, தகாத அக்கறையுள்ள ஒரு பொருளைத்தந்துள்ளது. புதிய உத்தரவு - விளக்கம் தான் என்றால், அது அனாவசியமானது! அது புதிய நிபந்தனையை விதிப்பதாக இருந்தால், சபை அந்தப் பிரச்சினையை ஆராய்ந்து கொண்டிருக்கும்போது - இது போன்று செய்வது முறையற்றது."

'அனாவசியமானது, முறையற்றது' என்ற இப்படிப்பட்ட சொற்கள் எல்லாம் முதலமைச்சர் அவர்கள் மீது பாய்கிற நேரத்தில், உள்ளபடியே, முதலமைச்சர் அவர்கள் மீது அன்பு காட்டுகிற எங்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை, சபாநாயகர் அவர்களே, சகித்துக்கொள்ள முடியவில்லை.

"மூலக் கட்டுப்பாட்டு முதல் விதியின்படி, உமாநாத் விமானம் மூலம் டெல்லியை அடைந்து - சபையில் கலந்து கொண்டு - போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் திரும்ப ஆஜராகலாம்." என்ற நிலையையும், 'ஆனால் மார்ச் 2-ம் தேதி உத்தரவுப்படி அவர் கலந்து கொள்ள இயலாது' என்பதையும் டெல்லியில் சபாநாயகர் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இன்னொன்றையும் வெகு தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், டெல்லி சபாநாயகர் அவர்கள்,

"உமாநாத், உள்ளூர் போலீஸ் நிலைய எல்லைக்குள் நடமாடுவது குறித்தும், அவர் எல்லையைக் கடந்திடக் கூடாது என்பது குறித்தும், மூல உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை மார்ச் 2-ம் தேதி உத்தரவு தெரிவிக்குமானால், அவை தேவையற்ற விளக்கங்கள் என விவாதிக்கப்படலாம் - ஆனால் தற்போதைய சூழ்நிலையில் நிச்சயமாக அவர், சபை நடவடிக்கையில் பங்கேற்க டெல்லி செல்லக்கூடாது என்பதற்காகக் குறிப்பிட்டு அனுப்பப்பட்ட புதிய உத்தரவு இதுவெனக் கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை."

என்று டெல்லி சபாநாயகர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

திரு. ஏ. பி. சி. வீரபாகு : 'ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த விவாதத்திற்கு மேற்கோளாக லோகக்சபை சபாநாயகர் அவர்களுடைய ரூலிங்கைச் சுட்டிக்காட்டிப் பேசுகிறார்கள். அப்படிப் பேசினால் திருப்பி அந்த ரூலிங்கைப் பற்றிப் பேச வேண்டிய நிலைமை வந்துவிடும். இதை சபாநாயகர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

Sri. K. A. MATHIALAGAN : This is not a discussion on the ruling of the Hon. Speaker of the Lok Sabha. It is only a reference.

கனம் சபாநாயகர் : அந்த 'ரூலிங்'-கைச் சுட்டிக்காட்டிப் பேசினால் அதைப் பற்றி ஆர்க்யுமென்ட் பண்ணக்கூடிய நிலைமை வரும்.

Sri. A. P. C. VEERABAHU : The whole speech of the Hon. Deputy Leader of the Opposition is based on the reasoning of the Hon. Speaker of the Lok Sabha.

கனம் சபாநாயகர் : பார்லிமென்ட் ஸ்பீக்கருடைய ஒவ்வொரு ரூலிங்-கையும் ரீசன் சரிதானா, இல்லையா என்ற ஆர்க்யுமெண்டுக்குப் போகக் கூடாது. அது சரியல்ல. ஆகவே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்து இங்கே உள்ள நிலைமையை மட்டும் பேச வேண்டும்.

கலைஞர் மு. கருணாநிதி : பாராளுமன்ற சபாநாயகருடைய தீர்ப்பு சரி என்று அங்கு டெல்லியில் ஆளுங்கட்சியில் இருக்கக்கூடியவர்களே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் சின்ஹா அவர்கள் அந்த உத்தரவின் அடிப்படையில் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கனம் சபா நாயகர் : இங்கே ஆர்டர் போட்ட முறையிலே என்ன தப்புப் பண்ணினார்கள், எவ்வாறு தப்புப் பண்ணினார்கள் என்பதைக் குறித்துப் பேச வேண்டும். இந்த ஆர்டர் 'சஸ்டெய்னபிள்' அல்ல, தப்பு என்ற முறையில் பேசவேண்டும்.

கலைஞர் மு. கருணாநிதி : இது உத்தரவா, விளக்கமா என்பதற்கான சர்ச்சையை இங்கு கிளப்பிய காரணத்தினாலே தான் நான் பாராளுமன்ற சபாநாயகர் எடுத்துக் கூறிய அந்த வாதத்தை எடுத்து வைக்க வேண்டிய அவசியத்திற்கு ஆளாயிருக்கிறேனே தவிர, வேறல்ல.

"புதிய விளக்க உத்தரவு கொடுக்கப்பட்டதை அறிந்த போதும், மத்திய அரசு மாநில அரசுக்கு அந்தக் குறிப்பிட்ட உத்தரவை ரத்து செய்யவோ, நிறுத்தி வைக்கவோ ஆலோசனை கூறவில்லை" என்ற அடிப்படையில் வாதம் எழுப்பப்பட்டு அதைத் தொடர்ந்து பாராளுமன்ற சபாநாயகர் அவர்கள் தம்முடைய தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். "தமிழக அரசு பரோல் உத்தரவுக்குப் புதிய விளக்கம் தந்துவிட்டது என்பது விசித்திரமாக இருக்கிறது' என்பதைத்தான் பாராளுமன்ற சபாநாயகர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. உமாநாத் அவர்கள் போலீஸ் ஸ்டேஷனில் தினந்தோறும் ஆஜராக வேண்டுமென்ற நிபந்தனை போடப் பட்டிருக்கிறது என்பதைக் கனம் முதலமைச்சர் அவர்கள் இங்கே 9-ந் தேதி அளித்த பதிலில் குறிப்பிட்டார்கள். அப்போது நான் எழுந்து முதலமைச்சர் அவர்களைக் கேட்டேன் - 'அந்த நிபந்தனை அவர் பரோலில் விடுதலை கேட்கிற நேரத்தில் போடப்பட்டதா? அல்லது அவர் வெளியே வந்த பிறகு போடப்பட்டதா? என்று. அப்போதே திட்டவட்டமாக, தெளிவாக முதலமைச்சர் அவர்கள் 'அந்த நிபந்தனை வெளியே வந்த பிறகு அல்ல, முதலிலேயே போடப்பட்டது' என்று கூறினார்கள். இவ்வாறுதான் அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். அந்த விளக்கத்திற்குப் பொருள்கூறும் வகையில், நிபந்தனைக்குப் பொருள் கூறும் வகையில் இன்னொரு விளக்கம் தரப்பட்டிருக்கிறது என்ற உண்மையை முதலமைச்சர் அவர்கள் இங்கு எடுத்துச் சொல்லவில்லை.

"இந்த வகையிலுள்ள வழக்கு, இது முதல் வழக்கு என்பதால், இத்தகாத செயலுக்கு இச்சபை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுமாறு ஆலோசனை கூறப்படுகிறது" என்று பாராளுமன்ற சபாநாயகர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்தத் தகாத செயல் நம்முடைய முதலமைச்சர் அவர்களால் ஏற்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பரோலில் விடுவிக்கப்பட்ட பிறகு போலீஸ் ஸ்டேஷனிலே அவர் தினந்தோறும் கையெழுத்துப் போட வேண்டுமென்று சொல்கிற அளவுக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மரியாதைக் குறைவாக, கவுரவக் குறைவாக நடத்தப்படுகிற அளவுக்கு தகாத செயல் உருவெடுத் திருக்கிறது. இதைப்பற்றிப் பாராளுமன்றத்தில் பேசப்பட்ட பிறகு, திடீரென்று ஒரு உத்தரவு கோட்டையில் இருந்து குதித்தோடிச் செல்கிறது என்றால், அது அவர் டெல்லிக்குப் போகக்கூடாது என்று தடைபடுத்துகிற உத்தரவே தவிர வேறல்ல.

சப்-இன்ஸ்பெக்டர் 'போலீஸ் ஸ்டேஷனுக்கு வரவேண்டுமென்றால் என்ன அர்த்தம் தெரியுமா? வெளியூருக்குப் போகக் கூடாது; உள்ளூரிலேயேதான் இருக்க வேண்டும்' என்று விளக்கம் கூற முடியுமா? எங்கே மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் 'பாராளுமன்ற நடவடிக்கைகளில்

உமாநாத் அவர்கள் கலந்து கொள்ளலாம்' என்று சொல்லி விடுவார்களோ, அப்படிச் சொல்லிவிட்டால், எங்கே உமாநாத் அவர்கள் டெல்லிக்குப் போய்விடுவார்களோ, என்று பயப்பட்டதன் அடிப்படையில், அதற்கு அணை போட்டு, தடுப்பதற்காக, முன்கூட்டியே இத்தகைய உத்தரவு கோட்டையில் இருந்து அங்கே சென்றிருக்கிறது என்பதையும், அதை சப்-இன்ஸ்பெக்டர் நிறைவேற்றியிருக்கிறார் என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

இப்போது நமக்குள்ள முக்கியமான பிரச்சினையெல்லாம் முதலமைச்சர் அவர்கள் தனக்குத் தெரியாமல் இந்த விளக்கம் போய் விட்டது என்று குறிப்பிட்டார்கள். பிறகு பதில் சொல்லுகின்ற நேரத்தில், "இந்த அறிவிப்புபோனது தனக்குத் தெரியும்" என்று கூறுகிறார். இவ்வாறு அறிவிப்பு தெரியும், உத்தரவு தெரியாது என்று இப்படி முதலமைச்சர் அவர்கள் மழுப்புகிறார்கள் என்பதும் இந்த மன்றத்திலே எடுத்துக் காட்டப்பட்டது.

இப்போது கூட இதிலே ஒன்றும் ஆபத்து வந்து விடவில்லை. தங்களுக்குத் தெரியாத காரணத்தால் செய்த தவறுக்காகப் பாராளுமன்றத்தில் உள்ள அமைச்சர் திரு. சின்ஹா அவர்கள் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அது போற்றுதலுக்குரிய ஒன்றாகும். அதைப்போல் கேரள மாநிலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி சர்க்கார் இருந்த நேரத்தில், திரு. நம்பூதிரிபாட் அவர்கள் முதல்வராக இருந்தபோது ஏற்பட்ட தவறுக்காகப் பகிரங்கமாக வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஜாம்ஷெட்பூர் சிறையிலிருந்து, எஸ். எம். பானர்ஜியும், இந்திரஜித் குப்தா என்பவரும் பொறுப்பில் விடுதலையானபோது, மாவட்ட நீதிபதியும், எஸ்.டி.ஓ. வும் சபைக்கு அறிவிக்கவில்லை என்று திரு. அனந்தசயனம் அய்யங்கார் அவர்கள் சபாநாயகராக இருந்தபோது பாராளுமன்றத்தில் உரிமைப் பிரச்சினை கொண்டு போகப்பட்டு, அந்த உரிமைப் பிரச்சினையைத் திரு. அனந்தசயனம் அய்யங்கார் அவர்களும் ஏற்றுக் கொண்டு, அதை உரிமைக் குழுவுக்கு விடுவதற்கு முன்பாக பீகார் அரசாங்கத்தை விளக்கம் கேட்டார். ஏற்பட்ட தவறுக்காக பீகார் அரசாங்க உள்துறை

அமைச்சரும், உள்துறை செயலாளரும் மன்னிப்புக் கேட்டுக் கொண்ட பெருந்தன்மைக்கு வரலாறு இருக்கிறது. இப்போது இங்கே நடந்தது, அமைச்சரவைக்குத் தெரியாமல் சப்-இன்ஸ்பெக்டரே எடுத்துக் கொண்ட நடவடிக்கையா? அமைச்சருக்குத் தெரியாமல், அரசாங்கத்திற்குத் தெரியாமல் டெபுடி செகரட்டரி இப்படிப்பட்ட நடவடிக்கையை எடுத்துக் கொண்டார்களா? இதிலே அவர்களுக்கு ஏற்பட்ட தனி அக்கறை என்ன? அப்படியானாலும் இப்படிப்பட்ட ஒரு களங்கம் தமிழக சர்க்காருக்குத்தானே. அப்படி சர்க்காருக்குத் தெரியாமல் நடந்திருந்தால் இந்தச் சர்க்கார் அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இல்லை, தானும் பொறுப்பாளி என்றால் நம் முதல் அமைச்சர் அவர்கள் வருத்தம் தெரிவித்துக் கொள்வார்களா? என்பதுதான் என் கேள்வி. அப்படி வருத்தம் தெரிவித்துக் கொள்வது உள்ளபடியே மிகப் பெரியவர்களுடைய பண்பாடு. முதல் அமைச்சர் அவர்கள் பெரியவர், ஆழ்ந்த அனுபவ அரசியல்வாதி, காந்தி வழிவந்த தொண்டர், காந்தி அடிகள் பலமுறை ஏற்பட்டுவிட்ட தவறுகளுக்கு வருத்தத்தைத் தெரிவித்துக்காண்டிருக்கிறார்கள். அப்படி வருத்தம் தெரிவிப்பதன் மூலம் இந்த மன்றத்தின் புகழ் மேலும் மேலும் ஓங்கி வளரவும், மங்கிவிட்ட நிலையிலுள்ள, மாசுபடிந்த நிலையிலுள்ள இந்தச் சூழ்நிலை மாறுவதற்கு வழி வகுக்கவும் முதல் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

புயல் நிவாரணம்

உரை : 2 **நாள் : 09.11.1966**

கலைஞர் மு. கருணாநிதி : கனம் தலைவர் அவர்களே, வந்துபோய்விட்ட புயலைப் பற்றி, அதனால் ஏற்பட்ட சேதங்களைப் பற்றி அதிகமாக விவாதிப்பதை விட, புயலால் பாதிக்கப்பட்டிருக்கும் பகுதிகளுக்கும், புயலால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கும் உடனடியாக, போதுமான நிவாரணம் அளிக்க வேண்டும் என்பதிலே இந்த மன்றம் அதிக அக்கறைக் காட்ட வேண்டுமென்பதை நான் இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

(திரு. டி. கார்ச்சா கவுடர் தலைமை)

புயல் ஒவ்வொரு ஆண்டும் வந்து கொண்டிருக்கிறது. இப்படி வருகின்ற நேரத்தில் எல்லாம் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். கால்நடைகள் சாகின்றன. பல பகுதிகள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்படுகின்றன. இவைகளுக்கு நீடித்த நிவாரணம் உருவாக்கப்படும் வகையில், இந்த அரசாங்கம் திட்டமிட்டுச் செயல்பட்டிருக்கவேண்டும். இனியாவது அப்படிப்பட்ட நல்ல செயல்முறைத் திட்டங்களை வகுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள மிகவும் விரும்புகிறேன்.

இப்போது வீசிய புயலால், தென்னாற்காடு மாவட்டத்தில் பெரும் பகுதியும், செங்கற்பட்டு மாவட்டத்தில் பெரும் பகுதியும் வட ஆற்காடு மாவட்டம், சென்னை ஆகியவற்றின் பெரும் பகுதியும் பாதிக்கப்பட்டிருப்பதும், பல்லாயிரக்கணக்கான குடிசைகள் அழிந்திருப்பதும், ஏராளமானவர்கள் இறந் திருப்பதும் ஆகிய விவரங்களைக் கனம் முதலமைச்சர்

அவர்கள் இங்கு வாசித்தளித்த அறிக்கையில் குறிப்பிட்டிருக் கிறார்கள். இந்த அறிக்கை சரியான கணக்குகளின் அடிப்படையில் வெளிவரவில்லை என்பதை எதிர்க் கட்சியிலிருந்து நாங்கள் சொன்னால், முதலமைச்சர் அவர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. வேண்டுமென்று, குறைத்துக் காட்டவேண்டுமென்று தயாரித்தார்கள் என்று குற்றம் சொல்லவில்லை, சரியான விவரங்கள் கிடைக்கவில்லை என்ற விளக்கத்தைத்தான் அளிக்க விரும்புகிறேன்.

ஆளும் கட்சியில் இருக்கும் அம்மையார் திருமதி அனந்தநாயகி அவர்கள்கூட, 7,500 குடிசைகள்தான் சென்னையில் சேதமடைந்தன என்று கொடுக்கப்பட்ட புள்ளி விவரம் தவறானது என்றும், அதைப் போல மூன்று மடங்கு வீடுகள், குடிசைகள் நாசப்படுத்தப்பட்டிருக்கின்றன என்றும் குறிப்பிட்டார்கள். இன்னும் சரியான விவரங்களை எடுப்பதற்கு அரசினர் பெருத்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

விவசாயிகள், மீனவர்கள், குறிப்பாகவும் சிறப்பாகவும் ஆதித்திராவிட மக்கள், ஏழை எளியவர்கள், நடுத்தர மக்கள் இந்தப் புயலால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு புயலால் பாதிக்கபட்ட நேரத்தில் அரசாங்க இலாகாக்களுடைய உதவிகள் உடனடியாகக் கிடைத்தனவா என்றால், இல்லை என்பதைத்தான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். அரசாங்கம், இந்தக் காரியத்திலே இன்ன இன்ன இலாகாதான் கவனிக்க வேண்டுமென்று இல்லாமல் எல்லா இலாகாக்களும் இப்படிப்பட்ட கோரச் சம்பவங்கள் நடைபெறு கின்றபோது உதவி புரிகின்ற செயலில் இறங்க வேண்டும். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் போலீஸ் துறையில் இருப்பவர்கள்கூட இந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தப் படவேண்டும்.

நான் ஒன்றைச் சொல்வேன். நண்பர் திரு. நடராஜ கவுண்டர் சிக்கிக் கொண்ட அதே பகுதியிலே, மதுராந்தகம் பகுதியிலே புயலை நேரடியாகச் சந்திக்கும் அளவுக்கு நானும் சிக்கிக் கொண்டேன். சிக்கிக் கொண்ட நாங்கள் சட்ட மன்ற உறுப்பினர்கள், ஓரளவு வசதி படைத்தவர்கள். எங்களாலேயே புயலால் ஏற்பட்ட விளைவுகளை இரண்டு நாட்களுக்குத்

தாங்கிக் கொள்ள முடியவில்லை என்றால், இருக்கின்ற ஓட்டைக் குடிசைகளையும் இழந்து விட்ட மக்கள், ஹரிஜன மக்கள், ஏழை மக்கள், பாட்டாளிகள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருப் பார்கள் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். நான் சிக்கிக் கொண்ட இடத்திலிருந்து சென்னைக்கு வர இரண்டு நாட்கள் பிடித்தது. நல்ல காலமாக நெய்வேலியிலிருந்து வந்த புல்டோசர் அங்குள்ள ஆர்.டி.ஓ. உத்தரவுப்படி, அங்குள்ள மரங்களை எல்லாம் ஒதுக்கிவிட்டதன் காரணமாகக் காட்டுப்பாக்கம் வரையிலே காரிலே பிரயாணம் செய்ய முடிந்தது. நூற்றுக் கணக்கான பஸ்களில் மக்கள் காட்டுப்பாக்கம் வரையில் வர முடிந்தது. நான் இங்கே கேட்பதெல்லாம் - மதுராந்தகத்தில் இருந்து காட்டுப்பாக்கம் வரை சுமார் 40, 50 மைல் தேறும். அவர்கள் நெய்வேலியிலிருந்து புல்டோசரை வரவழைத்து மரங்களை அப்புறப்படுத்தினார்கள். ஆனால் காட்டுப்பாக்கத்தி லிருந்து சென்னைவரை உள்ள 20 கல்தொலைவில் உள்ள மரங்களைச் சென்னையிலுள்ள இலாகாவினர் அகற்றுவதற்கு எந்த வித முயற்சிகளையும் ஏன் எடுத்துக் கொள்ளவில்லை என்பதுதான். இதுபோன்ற நிலைமையில் துரிதமாக நடவடிக்கை எடுத்துக் கொள்வதில் இலாகாவினர் இறங்கவில்லை என்பதற்கு இது போதுமான சான்றாகும் என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சென்னை போன்ற இடங்களில் பல பகுதிகளில் தண்ணீர் தேங்கி இருக்கும் நிலையில் அந்தத் தண்ணீரை அகற்ற வேண்டும். அதற்காகத் தீயணைக்கும் படையினரை அழைத்தால், அதற்கான கட்டணத்தைக் கட்டினால்தான் தண்ணீரை அகற்ற முடியும் என்று சொன்னார்கள். இதனால் தீயணைக்கும் லாரிகள் வந்து தண்ணீரை இறைக்க முடியவில்லை. தீயணைக்கும் படையினர் மீது குற்றமாகச் சொல்லவில்லை. இப்படிப்பட்ட நேரங்களில் அரசாங்கம் உத்தரவு போட்டு, இந்த மாதிரிப் பகுதிகளில் தேங்கி நிற்கும் தண்ணீரை அகற்றுவதற்கு வழி செய்யவேண்டும். அப்படிப்பட்ட உத்தரவைத் தீயணைக்கும் படையினருக்கு இந்த அரசாங்கம் தந்திருக்க வேண்டும். இதுவரை அப்படிப்பட்ட உத்தரவைத் தராமல் இருந்தது உள்ளபடியே குற்றமாகும்.

ஆங்காங்கு தூர்ந்து கிடக்கின்ற வயல் வெளிகள், கழனிகள் ஆகியவற்றை மறுபடியும் பயன்படுத்தி விளைச்சல் நிலமாக்க தீவிரமான திட்டங்களை விவசாய இலாகா வகுக்க வேண்டும். அதற்கு மற்ற மாவட்டங்களிலிருக்கின்ற விவசாயக் கருவிகள், மற்றவைகள் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு வரவழைக்கப்படுகின்ற அளவில் அரசாங்கம் துரிதமாக நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு வரி நிவாரணம் அளிக்க வேண்டும். குறிப்பாக வீட்டு வரி, நிலவரி இவைகளிலே நிவாரணம் அளிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டது. அதையே நானும் வலியுறுத்திக் குறிப்பிட விரும்புகிறேன். நிலவரியை ரத்து செய்ய வேண்டுமென்பதைக் கொள்கை வடிவில் ஏற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அரசு 25 சதவிகிதம் சர்சார்ஜை விலக்குகிறோம் என்ற தீர்மானத்தையும் இந்த மன்றத்திலே கொண்டு வந்து முடிவெடுத்திருக்கிறது. இந்த 25 சதவிகிதம் வரியைப் போட்ட நேரத்திலேயே எதிர்க்கட்சியினராகிய நாங்கள் பலத்த கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறோம். இது விவசாயிகளுக்கு ஏற்றதல்ல, அவர்களை வாட்டுவதாகும் என்று கூறியிருக்கிறோம். ஆனாலும் பெரும்பான்மை காரணமாக அன்றையதினம் இந்த வரி போடுவது நிறைவேற்றப்பட்டது. இந்த வரி பலரிடம் வசூலிக்கப்பட்டும் இருக்கிறது. இப்போது அதை நீக்குகிறபோது, எல்லா மாவட்டங்களுக்கும் இல்லா விட்டாலும், இந்தப் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்காவது அவர்களிடமிருந்து முன்பு வசூலிக்கப்பட்ட அந்த 25 சதவிகிதம் சர்சார்ஜைத் திருப்பித் தரவேண்டுமென்பதையும் இந்த மன்றத்திலே எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயக் கடன்களையும் கூட்டுறவுக் கடன்களையும் கூடுமான வரையில் முழுவதும் தள்ள முடியாவிட்டாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐந்து வருஷ காலத்திற்காவது இந்தக் கடன்களைத் திருப்பிக் கேட்காமல் இருக்கும் அளவில் தள்ளிப்போடும் நிலைமையை உருவாக்க வேண்டும். மின்சாரக் கட்டணங்கள் குறிப்பிட்ட காலத்திற்குத் தள்ளப்பட வேண்டுமென்பதையும் அரசினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வீடு இழந்தவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கத் தேவையான பணம் கடன் கொடுக்கப்பட வேண்டும். தண்டராம்பட்டி கிராமத்தில் தீ விபத்தால் பாதிக்கப்

பட்டவர்களுக்குக் கனம் திரு. கக்கன் அவர்கள் முன் நின்று வீடு ஒன்றுக்கு 300 ரூபாய் வீதம் கடன் கொடுக்க ஏற்பாடு செய்து கொடுத்தார்கள் என்பதை ஞாபகப்படுத்தி, அதைப்போலவே புயலால் வீடுகளை இழந்த ஏராளமான விவசாயிகளுக்கு, ஏழை நடுத்தர மக்களுக்கு அவர்கள் கோருகின்ற கடனை அளித்து வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்ற நிலைமையை உருவாக்க வேண்டும்.

சென்னை நகரத்தில் ரோடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று பல உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு புயல் அடித்த போது சர்க்காருக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய இரண்டொரு பெரும் சாலைகளைத் தவிர, மநாகராட்சிப் பொறுப்பில் இருக்கக்கூடிய சாலைகளைப் பழுது பார்ப்பதற்காக 12 இலட்சம் ரூபாய் மாநகராட்சிக்கு அதிகச் செலவு ஏற்பட்டது. அதை அரசாங்கம் தரவேண்டுமென்று கேட்கப்பட்ட நேரத்தில், அரசாங்கம் அதைக் கண்டிப்பாக மறுத்துவிட்டது. புயலால் திடீரென்று ஏற்படுகின்ற செலவுகளைச் சரிக்கட்டும் வகையில் மாநகராட்சியின் நிதிநிலை போதுமானதாக இல்லாத நிலைமையில், அரசாங்கம் முன் நின்று அத்தகைய செலவுகளை ஈடுகட்ட உதவி செய்யவேண்டும். அப்படி உதவி செய்தால்தான் அத்தகைய சாலைகளை உடனடியாகப் பழுது பார்ப்பதற்கும், சுகாதார வசதிகளைக் காப்பாற்றவும் சூழ்நிலை உருவாகும். அதேபோல் ஊராட்சி மன்றம், நகராட்சி மன்றங்களுக்கும் விசேஷ கடன்களைத் தருவதற்கும் முன்வர வேண்டுமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக தென் ஆற்காடு, வட ஆற்காடு, சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் பாதிக்கப்பட்டிருக்கிற இந்த மக்களுக்கு உதவி செய்வதற்கு ஒரு பொதுவான கமிட்டி ஆங்காங்கு உருவாக்கப்பட்டு அந்தக் கமிட்டிகள் மூலம் ஏற்பட்டிருக்கிற சேதங்களை ஒழுங்காக ஆராயவும், சரியானத் தகவல்களைப் பெறவும், பெற்ற தகவல்களுக்கேற்ப அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும் இந்தக் கமிட்டிகளைப் பயன்படுத்திக் கொள்கிற முயற்சியில் இந்த அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

தொழிலாளர் பிரச்சினை

உரை : 3 நாள் : 30.03.1968

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வந்திருக்கின்ற இந்தப் பிரேரணையில், எனது ராஜினாமா பற்றியும் குறிப்பிட்டிருக்கிற காரணத்தால், அதனையொட்டி மாண்புமிகு முதல் அமைச்சர் பதிலளிக்கக் கடமைப்பட்டிருந்தாலும், என்னைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்ற காரணத்தால், நான் அவையின் முதல்வருடைய அனுமதியின் பேரில், பதிலளிக்க முன் வந்திருக்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானத்தில் மாணவர்களைப் பயன்படுத்திக்கொண்டு, சமூக விரோதிகள் இங்கே இருக்கும் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு வேண்டிய சூழ்நிலைகளை உருவாக்கிக்கொண்டு இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அது முற்றிலும் புறக்கணிக்கத்தக்க கருத்தல்ல. அப்படிப்பட்ட நிலைகள் உருவாகி வருவதையும் இந்த அரசு கூர்ந்து கவனித்துவருகிறது. என்னென்ன காரியங்கள் நடைபெறுகின்றன, யார் யார் என்னென்ன செய்கிறார்கள் என்பதையெல்லாம் இந்த அரசு கவனிக்காமல் இல்லை. அதுபற்றிய தகவல்கள் அரசுக்கு வராமலும் இல்லை. மாணவர்களைப் பயன்படுத்திக்கொண்டு இந்த அரசைக் கவிழ்த்து விடலாம் என்று எண்ணுவார்களானால், மாணவர்கள் அவ்வளவு ஏமாளிகள் அல்ல என்பதையும் நாம் நன்றாக உணரவேண்டும். இன்றையதினம் ஏற்பட்டிருக்கின்ற விரும்பத்தகாத, அசம்பாவிதமான நிகழ்ச்சிகளின் காரணமாக மாணவ நண்பர்கள் உணர்ச்சிவயப்பட்டிருக்கிறார்கள். பல உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளதைப்போல் மாணவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற தகராறு, மாணவ, தொழிலாளர் சமுதாயத்தினரிடையே மூட்டிவிடப்பட்ட

செயலாகும். நண்பர்கள் குறிப்பிட்டதைப்போல் இந்த இரு சமுதாயத்தினரும் ஒருவரையொருவர் தாக்கிக் கொள்கிற சூழ்நிலையை, ஒருவரையொருவர் கண்டித்து வசைமாரி பொழிந்து கொள்கின்ற சூழ்நிலையை மாற்றுவதற்கு அரசியல் தெளிவு படைத்தவர்கள் நாட்டிலே அமைதியை உண்டாக்க வேண்டுமென்று சொல்வது யாராலும் மறுக்க முடியாத ஒன்று. ஆனால், கடந்த இரண்டு மூன்று நாட்களாக நடைபெற்ற சில பேச்சுக்கள், சில கூட்டங்களிலே என்னைப்பற்றி எடுத்து வைத்து கருத்துக்களைத் திரித்துக் கூறி, பத்திரிகைகளில் - குறிப்பாக காங்கிரஸ் ஏடுகளில் - வெளியிட்டும், துண்டறிக்கைகளை வெளியிட்டும் இருக்கிறார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன் கோட்டைவாயில் வெளிப்புறத்தில் கூடிய தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை முன்வைத்து, அவைகளுக்குத் தீர்வு காண வேண்டும். 'நாங்கள் மாணவர்களால் பாதிக்கப்பட்டிருக்கிறோம்' என்று கூறியபோது, உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும், சட்ட மேலவை உறுப்பினர் திரு. எத்திராஜ் அவர்களும் தொழிலாளர்களிடத்திலே முதலில் போய்ப் பேசினார்கள். அதற்குப் பிறகு பொதுப் பணித் துறை அமைச்சர் என்ற முறையில், குறிப்பாக போக்குவரத்துத் துறை அமைச்சர் என்ற முறையில், நான் வந்து தொழிலாளர்களைச் சந்தித்து ஆறுதல் கூற வேண்டுமென்று அவர்கள் சொன்னபிறகு, நான் தொழிலாளர்களிடத்தில் போனேன். நான் அவர்களிடையே பேசிய நேரத்தில் கூறப்பட்ட கருத்துக்கள்தான் இன்று திரித்து வெளியிடப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்கள், "மாணவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறீர்களே, எங்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுகளை விடுகிறீர்களே, இது நியாயமா?" என்று கேட்டார்கள். அதற்குப் பதிலளிக்கையில் நான், "நீங்கள் சரியான தகவலைக் கூறவில்லை. உங்கள்மீது கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டன என்று பேசப்படும் இதே நேரத்தில், மாணவர்கள் மீதும், வேறொரு பகுதியில் ஒரு போலீஸ் ஸ்டேஷனிலே ஏற்பட்ட கலவரத்தின் காரணமாக, துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது" என்ற வார்த்தையை அவர்களிடத்தில் சொன்னேன். ஆனால் மருத்துவத் துறையிலே இருக்கின்ற மாணவர்களின் பெயரால் வெளியிட்ட துண்டறிக்கையில், நான் பேசிய வாசகம் உண்டா?

'தொழிலாளர்கள்மீது தடியடிப் பிரயோகம் செய்யச் சொன்னேன். ஆனால் இப்போது மாணவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படி உத்தரவிட்டிருக்கிறேன்' என்று நான் சொன்னதாக மிகத் தவறான தகவல் தரப்பட்டிருக்கிறது. முதலிலே இந்த இரண்டு ஆணைகளையும் பிறப்பிக்கும் அதிகாரம் எனக்கு இருக்கிறதா என்பதே பிரச்சினைக்குரிய ஒன்று. நான் அந்த அளவில் பேசக்கூடிய இயல்பு படைத்தவன் அல்ல, இந்த அரசும், இந்த அமைச்சரவையும் அப்படிப்பட்ட இயல்பு படைத்தது அல்ல என்பதை மாணவர்கள் இந்த நேரத்தில் உணராவிட்டாலும் காலப்போக்கிலே உணருவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக விரோத சக்திகளைச் சேர்ந்த சிலர், மாணவர்கள் தங்கியிருக்கும் கல்லூரி விடுதிகளுக்குச் சென்று, மாணவர்களைத் தூண்டிவிடுகிற நிலைமைகளின் காரணமாக நாங்கள் நொடித்துப் போய்விடவில்லையென்பதையும் அவர்கள் உணருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அறிஞர் அண்ணா அவர்களின் உருவம் போலவும், என்னுடைய உருவம் போலவும் அமைக்கப்பட்ட கொடும்பாவியை சிலர் எரித்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது. நேற்றையதினம் ஸ்டான்லி மெடிகல் காலேஜியில் பொதுப்பணித்துறை அமைச்சருடைய கொடும்பாவி ஒன்று கொளுத்தப்பட்டது. கொளுத்தப்பட்டது மட்டுமல்ல. என்னுடைய மனைவிபோல மாணவர் ஒருவருக்குப் பெண் வேடம் போட்டு, கொடும்பாவி எரிந்து சாம்பலான பிறகு, பெண் வேடம் போட்ட நண்பர் தாலி அறுக்கின்ற நிகழ்ச்சி நடைபெற்றது. இதை நான் உள்ளபடியே மகிழ்ச்சியோடு வரவேற்கக் காரணம் இந்தத் தகுதியைவிட சிறந்தது எனக்கு வேறு இல்லை. மாணவர்கள் என்னுடைய பெயரால் கொடும்பாவி கொளுத்துவது மட்டுமல்ல, அவர்கள் உயிரோடு என்னைக் கொளுத்த வேண்டுமென்று விரும்பினாலும்கூட நான் அவர்களிடத்திலே நேராகச் சென்று, அவர்கள் என்னைக் கொளுத்துவதையே சந்தோஷமாக வரவேற்பேன் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இப்படிப்பட்ட செயல்களைத் தூண்டிவிடுகின்ற காரணத்தால், இந்த அமைச்சரவையைக் கலைத்து விடலாம், இந்த அரசைக் கவிழ்த்துவிடலாம் என்று சமூக விரோதிகள் கனவு கண்டுகொண்டிருப்பார்களானால் அது நிச்சயமாகப் பலிக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர் திரு. கோதண்டராமன் போன்ற உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் அப்படிப்பட்ட சந்தேகம் ஏற்படத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் தொழிலாளர்களின் காலில் விழலாமா? அவர்களின் கையைப் பிடித்துக் கொள்ளலாமா - கையை அல்ல, காலைப் பிடித்துக் கொள்ளலாமா? என்று பல வட்டாரங்களில் பேசப்படுகின்றன. அதை வைத்துக் கொண்டு, நான், தொழிலாளர்களுக்கு உதவி செய்து, மாணவர்களைத் தாக்கச் சொன்னேன் என்று தவறான முறையில் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. இந்த மன்றத்திலேயே, ஜனவரி 23-ந்தேதி இந்தி ஒழிப்பு தீர்மானம் வந்தபோது, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், ''மாணவர்கள் சொல்வதையெல்லாம் கேட்பதா?'' என்று ஆத்திரத்தோடு கேட்டார்கள். அதற்கு நம்முடைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், "ஆமாம், மாணவர்களின் பேச்சை நான் கேட்பேன். மாணவர்கள் எங்கள் ரத்தத்தின் ரத்தம், சதையின் சதை'' என்று அளித்த பதிலை, இன்றையதினம் கூக்குரல் ஏற்பட்டிருக்கிற காரணத்தால், மாணவர்கள் ஒருவேளை மறந்திருக்கலாம். ஆனால் மாணவர்கள், அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நிச்சயம் மறக்கமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர்கள் அங்கத்தையும், மாணவர்கள் அங்கத்தையும் சரிநிகர் சமானமாக வைத்து இந்த அரசு பாதுகாக்கும், ஒருதலைப்பட்சமாக நீதியை வழங்காது, சமூகவிரோத சக்திகள் கண்டுபிடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய ராஜினாமாப்பற்றிக் கேட்டார்கள். ராஜினாமா போன்ற நாடகங்கள் ஆடுவதை நான் எப்போதும் விரும்புபவன் அல்ல. அந்த வார்த்தைகள் அவர்களோடு இருக்கட்டும். நான் ராஜினாமா செய்ய வேண்டுமென்று, இந்த அரசேகூட ராஜினாமா செய்ய வேண்டுமென்று தமிழ்ச் சமுதாயம் விரும்பினால், இந்த அமைச்சரவை ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, நண்பர் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை வலியுறுத்தாமல் திரும்ப பெற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேட்டூரில் நீர் திறப்பு

உரை : 4 **நாள் : 30.03.1968**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, தென் மேற்கு, வட கிழக்கு ஆகிய இரு கார்க் காலங்களும் இவ்வாண்டு பொய்த்ததன் விளைவால் இம் மாநிலம் இடுக்கண் எய்தியது. இயல்பாக மேட்டூர் நீர்த்தேக்கம் ஜூன் திங்கள் 12-ம் நாளன்று திறந்து விடப்படும். மேற்சொன்ன தேதியன்று நீர்த்தேக்கத்தில் இருந்த நீர் அளவு போதுமானதாக இல்லாத காரணத்தால், தென்மேற்குப் பருவ மழை தவறாது பெய்யும் என்பதற்கான சூழ்நிலைகள் உறுதியான பின்னர் 3-7-1967 அன்றுதான் நீர்த்தேக்கம் பாசனத்துக்குத் திறந்து விடப்பட்டது. காவிரி சங்கமுகப் பகுதியில் வழக்கமாகப் பயிரிடும் குறுவை இரு போகப் பயிர்ப் பரப்பளவைத் தவிர ஒரு போகப் பயிர் நிலங்களில் அதிகப் பரப்பளவில் எ.டி.டி. 27 நெல் வகையை முதல் பயிராகப் பயிரிடவும், அதன் பின்னர் பெரும் பரப்பளவில் ஒரு குறுகிற கால நடுத்தரப் பயிரை இரண்டாவது பயிராகப் பயிரிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தென் மேற்குப் பருவ மழை ஜூன் முடிவிலும் ஜூலை தொடக்கத்திலும் காலந் தாழ்ந்து பெய்தது. இயல்பாகப் பெய்யும் அளவிற்கும் குறைவாகவே அதாவது சுமார் 13 சதவிகிதம் குறைவாக இவ்வாண்டு மழை பெய்தது. இதனால் நீர்த்தேக்கத்திற்கு வருகிற நீரின் அளவு 17 சதவீதம் குறைந்தது. மிகவும் சிக்கனமாகவும், விழிப்போடும் பாசனத்திற்கான நீரை முறைப்படுத்தியதன்மூலம் சங்கமுகப் பகுதியில் குறுவை எ.டி.டி. 27 நெல் பயிர் நல்ல வகையில் வளர்ந்து அறுவடையாவதற்கு வகை செய்யப்பட்டது. தென்மேற்குப் பருவக்காலத்தில் இயல்பான அளவிற்குக் குறைவாகவே நீர்த் தேக்கத்தில் நீர் வந்ததால், இரண்டாம் பயிர்க் காலத்திற்குத் தேவையானதும் போதுமானதுமான நீரை மேட்டூர் நீர்த்தேக்கத்தில் தேக்க இயலவில்லை. இத்துடன் காவிரியின் நீர்கோள் பகுதியில் வட கிழக்குப் பருவ மழை பொய்த்து

விட்டது. அறுபது சதவீதம் குறைவாக மழை பெய்தது. நீர்த் தேக்கத்தின் வரவோ 65 சதவீதம் குறைந்தது எனினும், 1967 அக்டோபர் திங்களிலும், 1967 நவம்பர் திங்கள் முதல் பாதியிலும், 1967 டிசம்பர் திங்கள் முதல் பாதியிலும் சங்கமுகப் பகுதியில் பெய்த மழையைப் பயன்படுத்திக்கொண்டு இக்கால அளவுகளில் மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து நீர் விடுவது குறைக்கப்பட்டது. நீர் விடுவதற்கான முறை மாற்றுத் திட்டம் மூலமும், கால இடையீடுகளில் நீரை மொத்தமாக அனுமதிப்பதன் வாயிலாகவும் முறைப்படுத்தப்பட்டது. இந்த ஏற்பாடுகள் மூலம், சம்பாப் பயிரை வளரச் செய்யவும், அறுவடை செய்யவும் முடிந்தது.

தாளடிப் பயிரைப் பொறுத்தவரையில், மேட்டூர் நீர்த் தேக்கத்தின் நீரின் அளவையும் பயிருக்குத் தேவையான நீரின் அளவு குறித்தும் அரசு அடிக்கடி ஆய்வு செய்தது. 1967 டிசம்பர் பிற்பகுதியில் மழை பெய்யாததாலும், நீர்த்தேக்கத்தில் குறைவான நீர் இருந்ததாலும், நீர் விடுவது கடினமாயிருந்தது. தாளடிப் பயிர் வளரும் 4.6 லட்சம் ஏக்கரில், 2.3 லட்சம் ஏக்கருக்கு 11-2-1968 அன்றைய நிலையின்படி, இரண்டொருமுறை நீர் தேவைப்பட்டது. விளைந்து வருகிற பயிர்களை இயன்ற அளவுக்குப் பாதுகாக்கும்பொருட்டு, மேட்டூர் நீர்த்தேக்கத்தில் உள்ள நீரை 22.05 அடியிலிருந்து 14.55 அடி மட்டத்திற்குக் குறைத்துவிட்டு, சுமார் 205.4 கோடி கன அடி நீர் விடப்பட்டது. வேளாண்மைப் பொறியியல் துறை இயன்ற இடங்களில் கூடுதல் நீரை வழங்கும் பொருட்டு, 86 எண்ணெய்ப் பொறி விசேயேற்றங்களையும் டிராக்டர் பொருத்திய 20 விசையேற்றங் களையும் பயனுக்குக் கொணர்ந்தது, வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் பயன்படுத்தப்பட்டன. கிணறுகளிலிருந்து நீர் இறைப்பது சாத்தியமாயிருப்பதற்கென இயன்ற இடங்களில் விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கும்படி தமிழ்நாடு மின்சார வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டது. சங்கமுகப் பகுதியில் தாளடிப் பயிரைப் பாதுகாப்பதற்கென இவ்வாறெல்லாம், இயன்ற அளவு முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன.

போக்குவரத்து விபத்து

உரை : 5 நாள் : 30.03.1968

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டவிபத்து காவிரிபுரத்திற்கருகே 26-2-1968 அன்று இரவு சுமார் 10 மணியளவில் ஏற்பட்டது. தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அதிகாரி வழங்கிய முதல் அனுமதிச் சீட்டினைப் பெற்றிருந்த MSX 9566 எண்ணுள்ள சரக்குப் பேருந்து (லாரி) பயணிகளைக் கள்ளத்தனமாக ஏற்றிச் செல்லும்போது இந்த விபத்து ஏற்பட்டது. இந்த விபத்துக்காரணமாக இரண்டு பேர் விபத்து ஏற்பட்ட இடத்திலேயே இறந்தனர். இருபத்திரண்டு பேர் காயமடைந்தனர். காயமடைந்த 22 பேரில் மேட்டூர் அரசாங்க மருத்துவ மனையில் அகத்துள்ள பிணியாளர்களாக (in-patient) மூவர் சேர்க்கப் பட்டனர்; எஞ்சியவர்கள் புறத்துள்ள பிணியாளர்களாகக் (out patient) கருதி சிகிச்சையளிக்கப்பட்டனர். எதிரில் வந்து கொண்டிருந்த ஒரு வண்டிக்கு வழிவிடுவதற்காக, இச் சரக்குப் பேருந்து சாலையில் இடக்கோடிக்கு வந்தது. இந்தச் சாலை புதிதாகச் செப்பனிடப்பட்ட சாலையாகையால், சாலை ஓரப் பகுதி சரிந்துவிட்டதாகத் தெரிகிறது. இதன் காரணமாகச் சரக்குப் பேருந்து கவிழ்ந்தது.

இறந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் இழப்பீடு கொடுப்பதைப் பொறுத்தவரையில், இச் சரக்குப்பேருந்து அனுமதிச் சீட்டிலுள்ள நிபந்தனைக்கு முரணாகப் பயணிகளைக் கள்ளத்தனமாய் ஏற்றிச் சென்றதால் ஈட்டுறுதி நிறுவனம் (Insurance Company) இழப்பீடு அளிக்க முன்வரும் எனத் தோன்றவில்லை. எனவே, இதற்கு ஆகும் செலவினைச் சரக்குப் பேருந்தின் உரிமையாளரே ஏற்கவேண்டிவரும். இந்த விபத்தில்

இறந்தவர்களின் வாரிசுகளுக்கும், காயமடைந்தோருக்கும் இழப்பீடு கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அதிகாரி, சரக்குப் பேருந்து உரிமையாளருக்கு அறிவுரை வழங்கியுள்ளார். இறந்தவர்களின் வாரிசுகள், காயமடைந்தவர்கள் ஆகியவர்களின் பெயரும், முகவரியும் சேலம் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியிடமிருந்து கிடைத்தவுடன், இழப்பீடு கொடுக்கப்படுவதற்கு நடுவர் நீதி மன்றமாக அமைந்துள்ள மாவட்ட நீதிபதியிடம் அவர்கள் தங்கள் கோரிக்கைகளைக் கொடுக்குமாறு அவர்கட்கு ஆலோசனைக் கூறப்படும் என்றும் தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அதிகாரி அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த கோயம்புத்தூர், சேலம், தருமபுரி மாவட்டங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் புகழ்பெற்ற மாதேஸ்வரர் ஆலயத்திற்கு ஆண்டுதோறும் சிவராத்திரியின்போது செல்கின்றனர். இந்த ஆண்டிலும் இத் திருவிழாவை முன்னிட்டு சேலத்திற்கும், குளத்தூருக்குமிடையில் கூடுதல் பயணங்களை மேற்கொள்ள 73 பேருந்துகளுக்கு சேலம் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி தற்காலிக அனுமதிச் சீட்டு வழங்கினார். இத்திருவிழாவை முன்னிட்டு குளத்தூரில் மோட்டார் வண்டி உதவி மேற்பார்வையாளர் ஒருவரும், மேட்டூரில் மோட்டார் வண்டி உதவி மேற்பார்வையாளர் இருவரும் நியமிக்கப்பட்டனர். இவர்களைத்தவிர போக்குவரத்தினை முறைப்படுத்துவதற்காகவும் சரக்குப் பேருந்துகளில் பிரயாணிகளைக் கள்ளத்தனமாய் ஏற்றிச் செல்வதைத் தடுப்பதற்காகவும் மேட்டூரிலும், குளத்தூரிலும் காவல்துறை அதிகாரிகள் பலர் நியமிக்கப்பட்டனர். சேலம் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி, போக்குவரத்து ஏற்பாடுகளை முறைப் படுத்துவதற்காக 26-2-1968, 27-2-1968 தேதிகளில் மேட்டூரிலேயே தங்கி இருந்தார். இக்கால அளவில் பயணிகளை ஏற்றிச்சென்ற 15 சரக்குப் பேருந்து வண்டிகள் இந்த அலுவலக நேரிடப் பணியாளர்களிடம் பிடிபட்டன.

இத்தகைய முறைகேடுகள் கண்டுபிடிக்கப்படும்பொழுது கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறும், சந்தைகளின் பொழுதும், திருவிழாக்களின்பொழுதும் சரக்குப் பேருந்துகள்

அனுமதியின்றிப் பயணிகளையும் கள்ளத்தனமாக ஏற்றிச் செல்கின்ற நிகழ்ச்சிகளை அறிவிக்குமாறும், வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்குப் போக்குவரத்து ஆணையர் கட்டளை பிறப்பித்துள்ளார். கள்ளத்தனமாகப் பயணிகளை ஏற்றிச் செல்வதை விழிப்புடன் கவனித்துக் கண்டுபிடிப்பதற்காக நேரிடைப் பணியாளர்களைப் போதிய எண்ணிக்கையில் நியமிக்குமாறும் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்குக் கட்டளை இடப்பட்டுள்ளது.

சரக்குப்பேருந்துவண்டிகளின் உரிமையாளர்களும், பொதுமக்களும் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து, விதிகளைப் பின்பற்றி நடக்கவேண்டும்.

காவேரிப் பிரச்சினை

உரை : 6 நாள் : 24.08.1968

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 82-வது விதியின்கீழ் பேரவையின் கவனத்தை ஈர்த்து ஒரு முக்கிய பொருள் பற்றி இந்த அறிக்கையை அதன் முன்பு வைக்க விழைகிறேன்.

தமிழகத்தின் தலையாய பாசன ஆதாரம் காவேரி, 1924-ம் ஆண்டு மைசூருக்கும் தமிழ்நாட்டிற்கும் காவேரி பாசனம் சம்பந்தமான ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அது சம்பந்தப்பட்ட சில முக்கிய கூறுகள் - மேட்டூர் நீர்தேக்கத் திட்டத்தை நிறைவேற்றவும் தமிழகத்திற்கு நிலையாக உரித்தான நீர்ப்போக்கின் அளவு (limit flows) கணக்கிடப்படும். இவ்வாறு கணக்கிடப்பட்ட அளவு நீரை காவிரி ஆற்றின் வழி விடுவித்த பின்னரே மைசூர் அரசு கிருஷ்ணராஜசாகரில் நீரைத் தேக்கலாம் எனவும், மைசூர் மாநிலத்திற்கு சில பாசன வாய்ப்புக்களும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் தமிழக பாசனத்திற்கு நிலையாக உரித்தான நீர்ப்போக்கின் அளவு சிறிதேனும் குன்றாதவாறு, மைசூர் பாசன வாய்ப்புக்களை நிறைவேற்ற வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் 1974-வது ஆண்டு வரை செயல்திறன் உடையதாக இருக்கும்.

கிருஷ்ணராஜசாகர் பாசனத்திற்கான 1 லட்சத்து 25 ஆயிரம் ஏக்கர்களும் அப்போது மைசூரில் நிலவி வந்த ஒவ்வொரு பழைய பாசனக்காலின் கீழும் 1910-ம் ஆண்டு பாசனம்பெற்ற நிலப்பரப்புஅளவில் மூன்றில் ஒரு பங்கு கூடுதலாகவும், பாசனம் பெற ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றிற்கும் கூடுதலாக, 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தில் உள்ள ஷரத்து 10 (iv) -ன் படி காவிரி, அதன் உப நதிகள் இவற்றின் கீழ் புதிதாக பாசனவசதியை பெருக்கிக்கொள்ள மைசூருக்கு வழங்கப்பட்ட உரிமைக்கு 1,10,000 ஏக்கர்கள் அப்பொழுதைய உச்சவரம்பு என விதிக்கப்பட்டுள்ளது.

அந்த ஒப்பந்தத்தின் ஷரத்து 10 (vii) பிரிவின்படி மேலே குறிப்பிட்ட பாசனப்பெருக்கத்தை 1892-வது ஆண்டு ஒப்பந்தத்தின் "எ" ஷெடியூலில் குறிக்கப்பட்ட காவிரி அதன் உப நதிகள் இவற்றின்மேல் மாத்திரமே அணைகள் கட்டி, நீரைத் தேக்கி, பாசனத்தைப்பெருக்க மைசூர் அரசு ஒப்புக் கொண்டுள்ளது. அவ்வாறு கட்டப்படும் நீர்தேக்கங்களின் மொத்த நிகர கொள்ளளவு (effective capacity) 45 ஆயிரம் மில்லியன் கனஅடி எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒப்பந்தத்தின் அனுபந்தம் 1-ல் கண்டுள்ள கிருஷ்ணராஜசாகர் தேக்க செயல்முறை விதிகளின்படி (Rules of Regulation) தமிழகத்திற்கு உரித்தான நீர்ப்போக்கு அளவு குறைவின்றி பாதிக்கப்படாதவாறே, மைசூர் கட்டும் நீர்த்தேக்கங்களில் நீரைத் தேக்கிச் செயல்பட வேண்டும் எனவும் விதிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மைசூர் மாநிலம் கிருஷ்ணராஜசாகர் நீர்த்தேக்கத்தின் உள்வாய்ப் பகுதியில் காவிரி ஆற்றின் ஒரு உபநதியான ஹேமாவதியில் ஓர் அணை கட்டி நீரைத் தேக்கத் திட்டம் வகுத்துள்ளது. மைசூர் அரசு ஒப்பந்த ஷரத்துக்களின் 10 (iv), (vi) கீழ் ஏற்படத்தக்க, நீர்த்தேக்கங்களில் ஒன்றாக ஹேமாவதி திட்டத்தைக் குந்தகப்படக்கூடிய சூழ்நிலைகள் உருவாகும் எனவும், குறிப்பாக, தமிழகத்திற்கு உரிய நீர்ப்போக்கின் அளவு தொடர்ந்து அனுப்பப்பெற இயலுமா எனவும் மத்திய அரசுக்குத் தமிழக அரசின் சார்பில் அச்சம் தெரிவிக்கப்பட்டது. இந்த அச்சம் தீர்ந்து தொடர்ந்து 1924-ம் ஆண்டு ஒப்பந்த விதிமுறைகள் முற்றிலும் தொடர்ந்து பின்பற்றப்படுவதற்கும் அதற்கேற்ற உறுதிமொழிகள், விதி முறைகள், நடைமுறை ஏற்பாடுகள், தேக்கும் செயல்முறைகள் இவைகள் அனைத்தும் ஹேமாவதி திட்டம் ஏற்கப்படுமுன்னர் தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும் மத்திய அரசை கோரியது.

இந்த அடிப்படையில்தான் இரு நாட்கள் (19, 20-8-1968) டெல்லியில் மத்திய நீர் - மின்சாரக் குழுத் தலைவர்

அவர்களுடன் இரு மாநில செயலாளர்கள், பொறியியல் வல்லுநர்கள், ஆகியோர் கலந்து அதிகாரிகள் நிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இந்த பேச்சுவார்த்தைகளின் போக்கினை நான் தொடர்ந்து அப்போதைக்கப்போதே அறிந்து கூர்ந்து கவனித்து வந்தேன். அதனைத்தொடர்ந்து மத்திய பாசன மின்சார அமைச்சர் திரு. கே. எல். ராவ். அவர்களும், மைசூர் மாநில முதலமைச்சர் திரு. வீரேந்திர பட்டீல் அவர்களும், நானும் இது குறித்து, சந்தித்துப் பேசினோம். இவற்றின் பயனாக 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி தமிழகத்திற்கு உரித்தான நீர்ப்போக்கு அளவு சிறிதேனும் குறைவின்றித் தொடர்ந்து அனுப்புவதற்கு மைசூர் அரசு உறுதி அளித்துள்ளது. அந்த உறுதி நிறைவேற்றப்படும் வகையில், விதிமுறைகள் செயல்முறை, நிர்வாக நடைமுறை ஏற்பாடுகள் ஆகியவை பற்றி விரிவான விவாதம் நடத்தப்பட்டிருக்கிறது.

1924-வது ஆண்டு ஒப்பந்தத்திற்கு ஏற்பவும், உட்பட்டும், நீர் அளவைகள் ஏற்படுத்தல், அவற்றினை ஆய்ந்து கணக்கிடுதல், புதுத் தேக்கத்தில் எப்பொழுது, எவ்வாறு, இந்த உறுதி நிறைவேறும் வகையில், நீரைத் தேக்குவது என்பதற்கான விதிமுறைகள், அவ்விதிகள் செயல்முறையில் நிறைவேற்றப் படவும், நிறைவேற்றப்படுகின்றனவா எனக் கண்காணிப்பதற்கும் தேவையான ஏற்பாடுகள், பதிவு முறைகள், இவை குறித்து வரைவுகள் தயாரிக்கப்பட்டு, தொடர்ந்து இரு அரசுகளும் பரிசீலித்து முடிவு மேற்கொள்ளப்பெறும். டெல்லியில் நடந்துள்ள பேச்சு வார்த்தைகள் குறித்து தமிழக முதலமைச்சர் அவர்களுடன் கலந்து அரசின் சார்பில் மேற்கொண்டு (மத்திய அரசுக்கு) கருத்து அறிவிக்கப்படும் என்று டெல்லி பேச்சுவார்த்தையின் இறுதியில் தெரிவித்து விட்டு வந்திருக்கிறேன்.

வானொலியில் இந்தி ஒலிபரப்பு

உரை : 7 நாள் : 10.3.1969

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, எவ்வித அவசியமும், அவசரமும் இல்லாததொரு நிலையில் 1968-ஆம் ஆண்டு டிசம்பர் 8-ம் நாள் முதல் காலை 8-மணிக்கு அனைத்திந்திய வானொலியில் ஒலிபரப்பப்படும் ஆங்கிலச் செய்திக்குப் பதிலாக இந்திச் செய்தி ஒலி பரப்பப்பட்டு வருகிறது. இதனைப்பற்றிய செய்திகளைப் பார்த்தவுடனேயே 1968டிசம்பர் 10-ஆம் நாளான்று இந்திய அரசுக்கு, மாநில அரசு, மக்கள் உள்ளத்தில் பெருங் கலக்கத்தை உண்டாக்கியிருக்கும் இந்த மாற்றம் குறித்துக் பின்வரும் முறையில் ஓர் கடிதம் அனுப்பியது:-

1. பல்லாண்டுகளாக காலை 8 மணியளவில் ஆங்கி லத்தில் செய்தி ஒலிபரப்பப்பட்டு வந்திருக்கிறது. நீண்ட கால மாக நிலையூன்றி இருந்து வந்த பழக்கத்தை மாற்றுவதென்றால் வலுவான, திருப்தியான, ஏற்கத்தக்க காரணங்கள் இருந்தால் மட்டுமே செய்ய வேண்டும். ஆனால், அப்படிப்பட்ட காரணங்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஆங்கில ஒலிபரப்பை மாற்றுவதற்கு வேறெந்த அவசியமும் இருப்பதாகவும் தெரியவில்லை. பன்னெடுங் காலமாக ஆங்கிலச் செய்திகளைக் கேட்டு கடிகாரங்களைக் கூடச் சரிபார்த்துக் கொள்ளும் பழக்கத்தை மக்கள் கைக்கொண்டனர். மக்களுக்குப் பல வழிகளிலும் இந்த மாற்றம் அவதியைத் தருவதாகவே இருக்கிறது.

2. இதற்கு மேலாக இந்தி ஒலிபரப்பினை வேண்டு மென்று ஆங்கில ஒலிபரப்பிற்குப் பதிலாக அமைந்திருப்ப தினால் எல்லாச் செயல்களிலும் இனி ஆங்கிலத்தைக் காட்டிலும்

இந்திக்கு முதலிடம் கொடுப்பதற்கு இது ஓர் ஆரம்பமென மக்கள் கருத இடம் ஏற்படுகின்றது. இதனால் ஏற்படும் அரசியல் சிக்கல்கள் மத்திய அரசு அறிந்ததொன்றே. இந்த மாற்றத்தைக் குறித்து ஏற்கெனவே மக்களிடையே கொந்தளிப்பும் எதிர்ப்பும் இந்த மாநிலத்தில் பல இடங்களில் தோன்றியுள்ளது. ஆகவே காலை ஆங்கிலச் செய்தி அறிக்கையினை மாற்றி வைக்கும் துரதிர்ஷ்டவசமான முடிவினால் ஏற்படும் சிக்கல்களையும் எதிர்ப்புக்களையும் தவிர்க்க, பழைய நிலையை ஏற்படுத்துவது பற்றி ஆழ்ந்து சிந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இக் கடிதத்திற்கு மத்திய அரசு டிசம்பர் 24- ம் தேதி அளித்துள்ள பதிலில் ''இத்தகைய மாற்றங்களால் தொடக்கத்தில் சில வசதிக் குறைவுகள் இருக்கலாம் என்றும் இதற்கேற்ப சரிப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், காலை ஆங்கிலச் செய்தி ஒலிபரப்பும் நேரம் காலை 8 மணிக்குப் பதிலாக 8½ மணிக்கு மாற்றப்பட்டாலும் மாலை நேரத்தில் இன்னும் அதிக மானபேர்கள் கேட்கின்ற ஆங்கிலச் செய்தி ஒலிபரப்பு, முன்பு இருந்தபடியே இரவு 9 மணிக்கு மாற்றப்படாமல் தொடர்ந்து ஒலிபரப்பி வரப்படும்'' என்றும் விடையளித்தார்கள். மேலே குறிப்பிட்டவாறு இந்த அரசு எழுப்பிய முக்கிய பிரச்சினை களுக்கு மத்திய அரசின் இக் கடிதத்தில் எவ்விதத் தீர்வும் கூறப்படவில்லை.

இதற்கிடையே, மத்திய அரசிலிருந்து மேற்குறிப்பிட்ட கடிதத்திற்குப் பதில் வருவதற்கு முன்பேயும், அதனைத் தொடர்ந்தும் இந்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்திற்கு மற்றொரு கடிதம் செய்தி-விளம்பரத்துறை அமைச்சரால் எழுதப் பட்டது. அதில்-

''இந்திய அமைச்சரவை, வானொலியில் ஆங்கில செய்தி ஒலிபரப்பு நேரத்தில் ஏற்படுத்திய வேண்டாத மாற்றத்தை பற்றி இவ்வரசு எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டதைக் கவனமாக பரிசீலிக்குமாறு கேட்டுகொள்ளப்பட்டது. அதோடு கூட கீழ்க்கண்ட விபரங்களும் தெரிவிக்கப்பட்டன. டிசம்பர் 8- ம் தேதிக்கு முன்பு பகல்1-40 மணிக்கு மட்டும் ஒரு இந்தி செய்தி

ஒலிபரப்பு இருந்து வந்தது. அது சென்னை ''பி'' அலையிலும், திருச்சியிலும் ஒலிபரப்பு செய்யப்பட்டது. ஆனால் 8 டிசம்பர் 1968 முதல் இந்தி ஒலிபரப்பு நேரங்கள் ஒன்றிலிருந்து இரண்டாக அதிகரிக்கப்பட்டன. முதல் ஒலிபரப்பு காலையில் 8 மணிக்கும், இரண்டாவது இரவு 8-45 மணிக்கும் சென்னை ''பி'', திருச்சி வானொலி நிலையங்களில் ஒலிபரப்பு செய்யப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டு மக்கள், இந்த ஏற்பாட்டினை, வேண்டு மென்றே இந்தி பேசாத மக்களின் மீது திணிக்கின்ற வகையிலே செய்யப்பட்ட ஒன்று என்று கருதுகிறார்கள். ஆகவே இங்குள்ள சென்னை வானொலி நிலையமும், திருச்சி வானொலி நிலையமும் காலை 8 மணிக்கு டில்லியில் இந்தி செய்தி ஒலி பரப்பப்படுவதை ஒலிபரப்பி (ரிலே வருவதை மாற்றி) வேறு பொருத்தமான ஏதாவது ஒரு நிகழ்ச்சியை அவர்கள் விருப்பம் போல் ஒலிபரப்ப அனுமதிக்கும்படி இவ்வரசு பரிந்துரைத்தது.

மேலும், இந்தப் பொருள் பற்றி அடுத்து 1969 ஜனவரி 3 முதல் 8-ம் தேதி வரை ஹைதராபாத்தில் நடைபெற இருந்த தென்மண்டல மாநில செய்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டின் போதும், செய்தியமைச்சர் நேரில் தொடர்ந்து பேச விரும்புவ தாகவும் கூறப்பட்டிருந்தது.

இதுபற்றி முன்னர் செய்தித்துறை அமைச்சர் பொறுப்பு வகித்துவந்த டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்கள் முந்தைய மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சர் திரு ஷா அவர்களுடன் ஹைதராபாத்தில் நேரில் பேசினார்கள். அப்போது திரு ஷா அவர்கள், ''அம்மையார் கருதுவது மிகவும் நியாயமாகப் படுகிறது என்றும், அதைப் பரிசீலிப்பதில் கடினம் ஒன்றும் இருக்காது'' என்றும் கூறி, அவர்களுடைய பேச்சில் கலந்து கொண்ட அகில இந்திய வானொலி நிலைய தலைமை அதிகாரியிடம் பரிசீலித்துப் பரிந்துரைத்தார். இந்தச் செய்தி பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளது.

இந்நிலையில், பத்திரிக்கைச் செய்திகளின்படி பிப்ரவரி 19-ம் தேதி பாராளுமன்றத்தில் தற்போதைய மத்திய செய்தித் துறை மற்றும் தகவல் அமைச்சர், தமிழக அரசிடமிருந்து காலை நேர ஆங்கிலச் செய்தி அறிக்கை ஒலிபரப்பு நேரத்தில் செய்யப்

பட்டுள்ள மாற்றம் குறித்து அதிகாரப்பூர்வமான மறுப்புக் கடிதம் வரவில்லை என்பதாகத் தெரிவித்துள்ளார். ஆனால் காலஞ் சென்ற அண்ணா அவர்கள் இதுபற்றி அன்றைய செய்தி ஒலி பரப்பு அமைச்சரிடம் எடுத்துக் கூறியதாகவும், இந்த மாற்றம் குறித்து எல்லாவிதமான காரணங்களுடன் இந்திய அரசியல் கொள்கைகளையும் அமைச்சர் முதல்வருக்கு எடுத்துக் கூறியதாகவும் பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

இச் செய்தி பற்றி முதலமைச்சரிடம் நிருபர்கள் கேட்ட பொழுது மறைந்த முதலமைச்சர் அண்ணா ஏற்கனவே தமது எதிர்ப்பைத் தெரிவித்தது பற்றியும் மீண்டும் அன்றைய செய்தித் துறை அமைச்சர் இதுபற்றி மத்திய செய்தி தகவல் அமைச் சருடன் பேசியதையும் முதலமைச்சர் எடுத்துக் கூறியிருக்கிறார்.

இவ்வரசாங்கம் ஏற்கனவே இதுபற்றி உடனடியாக எதிர்ப் புத் தெரிவித்து அவர்களிடம் இருந்து பதிலும் வந்துள்ளது. நேரடியாகவும் இதுபற்றி விவாதிக்கப்பட்டது. ஆனால் அவ்வாறு எவ்வித அதிகாரப்பூர்வமான தகவலும் தரப்படவில்லை என்று பாராளுமன்றத்தில் அமைச்சர் குறிப்பிட்டதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி வருத்தத்தை அளிக்கிறது.

திரு. பெ. மலைச்சாமி: தலைவரவர்களே, இந்தச் செய்தி தொடர்பாக புதிய முதலமைச்சரவர்கள் மீண்டும் மத்திய அரசோடு உரையாட இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இதுபற்றி தொடர்ந்து மத்திய அரசோடு தொடர்பு கொள்ளப்படும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பஞ்சாலைத் தொழிலாளர் போராட்டம்

உரை : 8 நாள் : 25.03.1969

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய நிலை- அல்ல மூடப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய நிலையைக் கருதி அந்தப் பஞ்சாலைகள் விரைவில் திறக்கப்படாவிட்டால் போராட்டம் துவங்கப்படும் என்பதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றியிருக்கிற தீர்மானத்தைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அதுபற்றிக் குறிப்பிட்டுப் பேசுகிற நேரத்தில் இவர்கள் போட்டிருக்கிற தீர்மானம் அரசியல் இலாப நோக்கத்தோடு போடப்பட்டதாகச் சொல்லவில்லை. தொழிலாளர் பிரச்சினையை அரசியல் இலாபநோக்கத்தோடு அணுகக் கூடாது என்று எல்லாக் கட்சிகளையும் சேர்த்தே குறிப் பிட்டார்கள். அதைத் தனக்கென்று எடுத்துக்கொண்டு எதிர்க் கட்சித்தலைவர் பேசியிருக்கத் தேவையில்லை. அங்கு ஆலைகள் மூடப்பட்டிருக்கிற காரணத்தினால் பாதிக்கப்பட் டிருக்கும் பதினாலாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களது பிரச்சினையை இந்த அரசு மிகுந்த அனுதாபத்தோடு கவனித்து வருகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்த நேரத்தில் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் பலநேரங்களில் மாநாடுகளைக் கூட்டித் தொழிற்சங்கத் தலைவர்களையும், ஆலை அதிபர்களையும் அழைத்து அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். அதன்காரணமாக முன்பு ஒரு முறை பாதிக்கப்பட்டிருக்கிற

தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்க 2 லட்சம் வரையில் அரசு சார்பில் அளிக்கப்பட்டிருக்கிறது.

இப்போதுகூட அங்கிருக்கிற யூனியன்களுடைய தலைவர்கள் ஒன்று கூடிப் பொதுவாக எல்லா மில்களிலும் இருக்கிற தொழிலாளர்கள் தங்களுடைய 2 நாள் ஊதியத்தைப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கக் கொடுப்பதாகவும் அப்படி வசூலிக்கப்படுகிற 2 நாள் ஊதியம் பத்து லட்சத்திற்கு மேல் வரும் என்றும் அப்படிச் சேர்க்கப் படுகிற தொகைக்கு ஈடாக அரசும் தந்துதவவேண்டும் என்றும் சொன்னார்கள். ''நீங்கள் பத்து லட்சம் அல்லது 15 லட்சம் சேர்ப்பீர்களானாலும், எல்லா மில்களிலும் இருக்கிற தொழிலாளர்களிடம் இருந்து 2 நாள் சம்பளத்தின்மூலம் எவ்வளவு சேர்க்கிறீர்களோ அதற்கீடாகிய தொகையினை அரசும் தரும் என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆக மூடப்பட்டிருக்கிற பஞ்சாலைகளினால் யார், யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையினை இந்த அரசு உணர்ந்தேதான். இருக்கிறது.

இப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிப் போராட்டம் என்று ஆரம்பித்திருப்பதுகூட ஆலகள் மூடப்பட்டு விட்டதினால் முதலாளிகள் தவிக்கிறார்களே என்கிற அனுதாபத்தினால் அல்ல என்று கருதுகிறேன். அவர்களுடைய எண்ணம் எல்லாம் கஷ்டப்படுகிற தொழிலாளர்களுடைய நலனைக் கருதி மீண்டும் அவர்களுக்கு வாழ்வளித்து ஊக்குவிக்க வேண்டுமென்று நல்லெண்ணத்துடன், பேருணர்ச்சியுடன்தான் இத்தகைய தீர்மானத்தைப் போட்டிருப்பர்கள் என்று நினைக்கிறேன். தொழிலாளர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க, அவர்களுக்கு நிவாரணம் அளிக்கத் தன்னாலியன்ற உதவிகளைச் செய்ய அரசு தயாராய் இருக்கிறது.

இதற்கிடையில் போராட்டம் நடத்துவதாக, முடிவாகத் தீர்மானிக்கவில்லை என்று கருதுகிறேன். சில வாய்தாக்கள் கொடுத்திருக்கிறார்கள். வாய்தா என்ற வார்த்தையை உபயோகிக்கலாமோ என்னவோ- அது வழக்கு மன்ற வார்த்தை (சிரிப்பு). அந்த வாய்தா என்பது தீர்ந்து போய் போராட்டம் என்று நடத்தினால் நடக்கிற தொழிற்சாலைகளைக் கூட மூடப்பட

வேண்டிய சூழ்நிலையை உருவாக்கி விடுவோம் என்பதை மறந்து விட முடியாது. பாதிக்கப்பட்ட பதினாலாயிரம் தொழிலாளர்கள் மட்டும்தான் இதில் ஈடுபடுவார்கள் என்று சொல்ல முடியாது. திறந்து வேலை நடந்துகொண்டிருக்கிற தொழிற் சாலைகளைச் சேர்ந்தவர்களும் அனுதாப வேலை நிறுத்தம் என்பதாக ஏற்பட்டு இன்னும் நான்கைந்து ஆலைகள் மூடக் கூடிய சூழ்நிலையை நமக்குத் தெரிரிந்தோ, தெரியாமலோ உருவாக்கிவிடுவோம் என்பதை போராட்டம் நடத்துகிறவர்கள் சிந்திக்க வேண்டும்.

''சேம் சைட் கோல் போடுகிறார்கள்'' என்றார்களே, உண்மையில் அவர்கள்தான், ''சேம் சைட் கோல்'' போடு கிறார்கள். தீர்மானம் என்ன? பஞ்சாலைகளைத் திறக்காவிட்டால் போராட்டம். இதற்கு மத்திய சர்க்காரின் உதவிகள் பூரணமாக நமக்குக் கிடைக்கவில்லை. மராட்டிய மாநிலத்திற்குச் சென்றிருந்தபோது விசாரித்தேன். சம்பந்தப்பட்ட அமைச்சர் களிடத்தில், செயலாளர்களிடத்தில் பேசினேன். அது என்க் ரேஜிங் ஆக இல்லை, நஷ்டமே ஏற்பட்டு வருகிறது என்றார்கள்.

''எங்களுடைய காலத்தில் நான்கு மில்கள் மூடப்பட்ட தற்கு என்ன என்னவோ சொன்னீர்களே, இப்போது 27 மில்கள் மூடப்பட்டுவிட்டனவே, இவற்றை நீங்கள் திறக்கக்கூடாதா?'' என்கிறார்கள். ஆயினும் அவர்களுடைய காலத்தில் நான்கு மில்கள் மூடப்பட்ட நேரத்தில் நாங்கள் அவற்றைத் திறவுங்கள் என்று சொன்னோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எந்தவிதமான போராட்டத்திலும் ஈடுபடவில்லை. தொழிலாளர் பிரச்சினையை ஜாக்கிரதையாக அணுகவேண்டும். கண்ணாடிப் பாத்திரத்தைப் போலப் பயன்படுத்தவேண்டு மென்று அறிந்திருக்கிறோம். ஆகவேதான். அவர்களது ஆத்திர உணர்ச்சியைத் தூண்டிவிடாது- அந்த நேரத்தில் இருந்த மாநில அரசுக்கு எங்கள் கருத்தை எடுத்துச் சொல்லி அவற்றைத் திறந்து வைக்க வேண்டுமென்று- வற்புறுத்தியிருக்கிறோம். அப்போது தொழிலாளர்களுடன் நல்ல பழக்கமும்,தொழிற்சங்கத் திறமை யும் வாய்ந்த அமைச்சர் அவர்கள் இருந்தார்களே, அவர்கள் என்ன பதில் சொன்னார்கள். ''எங்களால் திறக்க இயலாது'' என்று சொன்னார்கள். அதைத்தான் நமது தொழிலாளர்

நலத்துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். கையில் சரியான புள்ளி விவரங்கள் கூட எதுவும் இன்றி நாங்கள் சொன் னோம், மராட்டியத்தில் திறந்து இருக்கிறார்களே என்பதாக. வெறும் எதிர்க்கட்சியாக இருந்து மட்டும் பழகியவர்கள் நாங்கள். ஆளும் கட்சியில் இருந்து பலவித புள்ளிவிவரங்களை எல்லாம் தெரிந்து வைத்துக் கொண்டிருப்பவர்கள் நீங்கள் (திரு.பி.ஜி. கருத்திருமன்: இல்லை) மந்திரியாக இருந்தால்தான் ஆளும் கட்சி என்று சம்மதிப்பார்கள் போலும். ஆகவே அந்தப் புள்ளி விவரங்களின் அடிப்படையில் திரு. வெங்கட்ராமன் அவர்கள் மூடப்பட்ட நான்கு மில்களைத் திறக்க முடியாது என்றார் என்றால் நான் கேட்கிறேன். உங்களால் நான்கு மில்களைத் திறக்க முடியவில்லையே, எங்களைப்பார்த்து 27 மில்களைத் திறவுங்கள் என்று சொல்கிறீர்களே, இது என்ன நியாயம் என்று.

நிச்சயமாக இந்த அரசு பதினாலாயிரம் தொழிலாளர் களுடைய பிரச்சினையை இதயப்பூர்வமாக உள்ள அனுதாபத் துடன் கவனிக்கும். ஐயோ 27 மில்களுடைய முதலாளிகள் என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறார்களே, தங்களுடைய மாளிகையில் இருந்து புகையாத மில்களைப் பார்த்து அவர்கள் மனம் வேதனையில் எவ்வளவு புகையும், ஆகவே அந்த மில்களைத் திறக்க முயற்சிக்க வேண்டும் என்கிற கோணத்தில் இல்லாமல் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், ஆகவே அவற்றைத் திறந்தாக வேண்டும் என்கிற எண்ணத்தில் அரசு நிரம்ப அக்கறை கொண்டிருக்கிறது. அதன் காரணத்தினால்தான் இன்று இருக்கும் நிலைமையை மேலும் கெடுத்துவிடாதிருக்க காங்கிரஸ் கட்சி போராட்டத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று எச்சரித்து தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கேட்டுக் கொண்டார். அப்படிக் கேட்டுக் கொண்டதற்கு எதிர்க்கட்சித் தலைவரும் தாம் எடுத்துக் கொண்ட வாய்ப்பில் இங்கே அதை மறு பரிசீலனை செய்கிறோம் என்று பெருந்தன்மையுடன் பதில் அளித்திருப்பாரானால் பாராட்டி யிருப்பேன். சொல்லாததனால் பெருந்தன்மை இல்லை என்று அல்ல. சொல்லியிருந்தால் பாராட்டுவதற்குரிய பெருந்தன்மை யாக இருந்திருக்கும்.

ஆகவே, எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப் படும். சட்ட மன்றம் நடந்துகொண்டிருப்பதன் காரணமாக முழுமையாக கவனிக்க முடியவில்லை. ஆயினும் அடுத்த திங்களில் இது சம்பந்தமான எல்லாக் காரியங்களும் கவனிக்கப்படும் என்கிற உறுதியினை இங்கே நான் அளிக்கிறேன்.

நக்சலைட் பிரச்சினை

உரை : 9 நாள் : 07.09.1970

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அறிக்கையை அளிக்க விழைகிறேன்.

கேரள மாநிலத்திலுள்ள திருநெல்லி கிராமத்தில் 9-2-1970-ல் நக்சல்பாரிகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, கேரள மாநிலக் காவல் துறையின் நீலகிரி மாவட்டக் காவல்துறையினரை எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொண்டனர். நீலகிரி மாவட்டக் காவல்துறையினர் உடனடியாக இயன்ற எல்லா முன்னெச்சரிக்கையான தடுப்பு நடவடிக்கை களையும் மேற்கொண்டனர். நக்சல்பாரிகள் இம்மாநிலத்திற்குள் ஊடுருவி வராமல் தடுப்பதற்கு, எல்லைப்பகுதிக் காவல் நிலையங்கள், சிறு நிலையங்கள் ஆகியவற்றை விழிப்புடன் இருக்கச் செய்தல், முதுமலைக்காடுகள் வழியாகச் சென்று ஜீப்கார்களில் எல்லைப்புறத்தை ரோந்து செய்தல் முதலிய நடவடிக்கைகள் உட்படத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. உள்ளூர்க் காவல்துறையினரின் விழிப்பு நடவடிக்கை காரணமாக 1969, டிசம்பர் மாதத்தில் நக்சல்பாரிகளால் தாக்குதலுக்கு உள்ளான குட்டாடி காவல் நிலைய எல்லையைச் சேர்ந்தவரெனப்படும் இருவர் ஐயப்பாடான சூழ்நிலைகளில் இ.பி.கோ. 55-வது பிரிவின்கீழ் 12-2-1970-ல் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். திருவனந்தபுரம், காவல்துறைத் துணைத்தலைவர், குற்றப் புலனாய்வுத் துறையினர், ரயில்வே துறையினர் ஆகியோருக்கு இதுபற்றிய தகவல் தெரிவிக்கப் பட்டது.

நெல்லகோட்டா காவல் நிலையத்தைத் தாக்குவதற்கு அதை நோக்கி நக்சல்பாரிகள் குழு ஒன்று சென்று கொண்டிருந்ததாக, கேரள மாநிலத்திலுள்ள சுல்தான் பாட்டரி காவல் நிலையத்திலிருந்து 16-2-1970-ல் கூடலூர் காவல்

நிலையத்திற்குத் தகவல் வந்தது. இக்கூட்டத்தினர், பிதர்காடு என்னுமிடத்தை அடைந்தது. அந்த இரவில் நடுவட்டம் காவல்நிலையத்தை அக்கூட்டம் தாக்குமென்றிருந்தது. எல்லைப் பகுதி நிலையங்கள், சோதனைச் சாவடிகள் அனைத்தையும் விழிப்பாயிருக்குமாறு செய்ததுடன் உள்ளூர்க் காவற்படையினர் இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்கள். இரவு முழுவதும் விழிப்பாக இருந்து காவல் செய்தனர். என்றாலும் வன்செயல் எதுவும் நடைபெறவில்லை.

எனினும் நக்சல்பாரிகளின் நடவடிக்கைகளைத் தடுக்கவும் கேரள மாநிலத்திலிருந்து நக்சல்பாரிகள் ஊடுருவி வருவதைத் தடுக்கவும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் எல்லைப்பகுதி நெடுகவும் உள்ள காவல் நிலையங்களும் சிறுகாவல் நிலையங்களும் காவல்துறையினரால் காக்கப்பட்டு வருகின்றன.

இந்த அச்சுறுத்தலைச் சரிபடுத்த, இந்த அரசும் காவல்துறையினரும் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள், மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்துச் சட்டமன்றப் பேரவையில் வெளியிடுவது பலகாரணங்களால் பொது நலனிற்கு ஏற்புடையதல்ல. இந்த இரண்டு மாவட்டங்களிலும் நக்சல்பாரிகள் நடவடிக்கைகளை உன்னிப்பாகவும், தொடர்ந்தும் அரசும் காவல்துறையினரும், கண்காணித்து வருவதாகவும் சட்டம், ஒழுங்கை நிலை நிறுத்தவும் எல்லைப் பகுதி வழியாக நக்சல்பாரிகள் ஊடுருவி வராமல் தடுப்பதற்கும் இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தால் போதுமானதாகும்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே இரண்டு மாவட்டங்களில் மாத்திரம் கடுமையான நடவடிக்கைகளும், கண்காணிப்பும் இருந்து வருகிறது என்று சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவை ஒட்டி மேற்கு தொடர்ச்சிமலை இரண்டு மாநிலங்களுக்கும் எல்லைக் கோடாக இருப்பதாலே, காவல்துறையினர் மட்டும் தான் அதைக் கண்காணிப்பார்கள் என்பதைவிட காட்டிலாகாவில் இருக்கின்ற காவல் துறையினரும் இதிலே அக்கரைக் காட்ட வேண்டுமென்று ஏற்பாடு செய்வதோடு, நக்சல்பாரிகள் நிறைய இருப்பதாலே அங்கே வந்து அந்தந்த ஊர்களிலே, யார்

முக்கியமானவர்கள், யார் எம்.எல்.ஏ.-க்கள், யார் பணக்காரர்கள் என்றெல்லாம் அந்த ஊரைச் சேர்ந்தவர்களைக் கேட்கிறார்கள் என்று ஹேஷ்யம் சொல்லப்பட்டிருக்கிறது. வரசநாடு கிராமத்தில் இருந்து வந்த இந்த ஹேஷ்யம், ஹேஷ்யம் மட்டும் அல்ல, உண்மையான தகவல் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. எனவே நடைமுறையில் காட்டு இலாகாவைச் சேர்ந்தவர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய தகவல்களையும் கவனத்தில் வைத்துக் கொண்டு காவலர்கள் ஏற்ற நடவடிக்கை எடுப்பார்கள்.

மனுநீதித் திட்டம்

உரை : 10 நாள் : 07.07.1971

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மனு நீதித் திட்டம் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சிலபேர் பேசியதாகவும், நாடகமாக இருக்கிறது என்று சந்தேகமாக இருக்கிறது என்று சொன்னதாகவும் அமைச்சரவர்கள் குறிப்பிட்டார் கள். மாண்புமிகு உறுப்பினர் இப்பொழுது பேசும்போதும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள விவரம் உங்களிடம் இருக்கிறதா என்றார்கள்.

மனு நீதித் திட்டம் என்பது 1969-ம் ஆண்டு, செப்டம்பர், 15-ம் தேதியன்று தொடங்கப் பெற்றது. மனுக்களைப் பெற்று, உடனடியாக நீதி அங்கேயே வழங்குவது என்ற அடிப்படையில், மக்கள் தங்களுடைய முறையீடுகளைத் தந்ததும் கூடுமானவரையில் மனுக்களைப் பார்த்து பரிகாரம் காணவேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டம். இந்தத் திட்டத்தின்படி, மக்கள் அதிகாரிகளைத் தேடி, சிறு சிறு காரியங்களுக்கெல்லாம் செல்ல வேண்டிய அவசியத்தைத் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் இருந்தவர்களை, அவர்களுடைய குறைபாடுகளைக் கேட்டு, சொல்லப்பட்ட குறைகளைக் களைய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் இந்தத் திட்டம் வகுக்கப்பட்டது.

அதன்படி, ஒவ்வொரு மாதமும் தமிழ் நாட்டின் 1,500 கிராமங்களில், மாதத்தின் 5-ம் தேதியன்று நம்முடைய மாவட்டத்திலே உள்ள அதிகாரிகள் கிராம மக்களைச் சந்தித்து, அவர்களுடைய முறையீடுகளைப் பெறுகிறார்கள். அப்படிப் பெறுகிற நேரத்தில், அதிலே மிக முக்கியமாக இடம் பெறக்கூடிய விஷயங்களை-விவசாய நிலங்களுக்கு பட்டா செய்து

கொடுத்தல், வீட்டு மனைகளுக்கு பட்டா செய்து கொடுத்தல் போன்றவை இதில் அடங்கும்-உடனடியாகக் கவனிக்கிறார்கள்.

இப்பொழுது இதுவரையில், மனு நீதித் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டதன் காரணமாக, 1970-71 மார்ச் வரையில், 4,04,072 ஏழை எளியவர்களுக்கு, நிலமற்றவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. 1969-70 மார்ச்வரை வீட்டு அடைமானம் செய்யப்பட்டுள்ளதன் எண்ணிக்கை 2,32,131 ஆகும். நத்தம் புறம்போக்கிலும், மற்ற புறம்போக்கிலும் அடைமானம் செய்யப்பட வேண்டிய வீட்டு மனைகளின் விவரம் : நத்தம் புறம்போக்கு 1,64,078; மற்ற புறம்போக்கில் 1,40,040. ஆக மொத்தம் 3,04,118 அடைமானம் செய்யப்பட வேண்டியதாக இருக்கிறது. இவைகளை யெல்லாம் மனு நீதித் திட்டத்தின் கீழ் விரைவாக அடைமானம் செய்ய முயற்சிகளை எடுத்திருக்கிறோம்.

குறிப்பாக இந்தத் திட்டத்தின்கீழ் என்னென்ன காரியங்கள் கவனிக்கப்படுகின்றன என்றால், நில அடைமானம், மனை அடை மானம், பட்டா மாற்றம், பட்டா நகல் கேட்டல், சர்வே எண் கேட்டு மனு, சப்-டிவிஷன் செய்தல், நிலத்தை அளந்து அத்துகாட்டுதல், ஆக்கிரமிப்புக்களை காலி செய்தல், 2-சி பட்டாவை நீக்கக் கோருதல், மரப் பட்டா செய்தல், நிலமாற்ற மற்றும் ஆர்ஜிதம் செய்தல், தண்டத் தீர்வை தள்ளுபடி, கடன் தொகை செலுத்தக் கெடு, நீர்ப்பாசன வசதி செய்தல், கால்நடைக்கு பவுண்டு கட்டுதல், முதியோர் உதவித் தொகை, சாதிச்சான்று வழங்குதல், வேலை வாய்ப்பு, ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு நஷ்ட ஈடு, வரிவஜா, கிராம அதிகாரிகள், தீவிபத்து நிவாரணம், பூதானம், செட்டில்மெண்ட், சாவடிகள் சம்பந்தமாக, தியாகிகள் மானியக் கோரிக்கை, இப்படிப்பட்ட விஷயங்களெல்லாம் மனு நீதித் திட்டத்தில் வருகின்றன. அதிகாரிகளிடம் சிறு சிறு விஷயங்கள் சொல்லப்படுகின்றன. அவற்றை அவ்வப்பொழுது அவர்கள் கவனிக்கிறார்கள்.

திருச்சி மாவட்டத்தில் மாத்திரமின்றி, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தாங்கள் செய்திருக்கும் காரியங்களை புத்தகமாகப் போட்டு, பொது மக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், இன்னும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களுக்கு இப்படிப்பட்ட புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

திருச்சியில், பட்டா நகல் கேட்டவர்கள் 431 பேர்கள்; 431 மனுக்கள் வந்தன. அவற்றில் முடிவு செய்யப்பட்டவை 387. இன்னும் நிலுவையில் உள்ளவை 44. அதேபோலத்தான் ஒவ்வொரு ஐட்டத்திலும் எண்ணிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். திருச்சி மாவட்டத்தில் 1970-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட புத்தகங்கள் கணக்கு இது.

கன்னியாகுமாரி மாவட்டத்தைப் பற்றிக் கேட்டார்கள். அங்கே பெறப்பட்ட மொத்த மனுக்கள் 6,082; அவற்றிலே முடிவு செய்யப்பட்டவை 5,513, நிலுவையில் இருக்கிறவை 569. இது 1970-ம் ஆண்டுக் கணக்கு. அதிலே பட்டா நகல் கேட்டுள்ளவை 15, முடிவு செய்யப்பட்டவை 11; நான்கு இன்னும் முடிவு செய்யப்படாமல் இருக்கின்றன. அதேபோல் உட்பிரிவு உள்ள பட்டா மாற்றம் கேட்டவர்கள் இரண்டு மனுக்கள், முடிவு செய்யப்பட்டவை இரண்டு. அதேபோலத்தான் நீர்ப்பாசன சிறு திட்டங்கள், முதியோர் உதவித்தொகை, குத்தகைப்பாட்டம் இவைகளெல்லாம் கவனிக்கப்பட்டிருக்கின்றன.

மொத்தத்தில், மனுக்கள் ஆங்காங்கே நல்ல வகையில் முடிவு காணப்படுகின்றன. நிதிநிலையைப் பொறுத்த பல காரியங்களை ஒத்திப்போடுகிறார்கள். இல்லாவிட்டால், அந்த இடத்திலேயே பட்டா வழங்குவது போன்றவைகள், இன்னும் சில்லறைக் காரியங்கள் தீர்க்கப்படுகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்து அவர்கள் வெளியிட்டிருக்கும், "மக்கள் குறை தீர மனு நீதித் திட்டம்" என்ற புத்தகத்தில், பல கிராமங்களில் செய்த வேலைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அதில் 5,6 படிக்க விரும்புகிறேன். மனுதாரர் பெயர், அப்துல் ஹையூப், மனு விவரம் பட்டா மாறுதல், எடுக்கப் பட்ட நடவடிக்கை, பட்டா வழங்கப்பட்டது, பஞ்சாயத்துத் தலைவர், சிட்டாகோட்டை, கேட்டது தெருவிளக்கு பல்பு; அது அங்கீகரிக்கப்பட்டது. சைபுதின் என்பவர் கேட்டது பட்டா மாறுதல், அது வழங்கப்பட்டது. மரியந்தாஹா என்பவர் கோரியது பட்டா மாறுதல், அதுவழங்கப்பட்டது. இன்னும் சில தாசில்தார் நடவடிக்கையில் உள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி மாவட்டந்தோறும் நடவடிக்கைகள் எடுக்கிறார்கள்.

ஆகவே, இந்த மனு நீதித் திட்டம், கிராம மக்களை சர்க்கார் அதிகாரிகள் நேரிலே சந்தித்து குறைகளை அறிவதற்கு ஏற்ற வகையில், நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்ட ஒரு திட்டமாகும். ஏதோ சில மாவட்டங்களில் சில கிராமங்களில் இந்தக் குறைபாடுகள் இருந்தால், அதைக் கண்காணிப்பதற்காகத் தான் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எங்கேயாவது அப்படித் தவறு நடந்திருந்து உறுப்பினர்கள் அதை உடனடியாக இந்த அரசின் கவனத்திற்கு எழுதி அனுப்பப்படுகின்ற நேரத்தில், அப்படிப்பட்ட அதிகாரிகள் நிச்சயமாக நடவடிக்கைக்கு உள்ளாவார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மக்களின் நன்மைக்காக இருக்கும் இந்தத் திட்டத்திலே குறைபாடுகள் இல்லாமல் நடக்க வேண்டிய அவசியத்தை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். அதற்கு உறுப்பினர்கள் எல்லாம் ஒத்துழைப்பு தரவேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக் கொள்ளுகிறேன். எனவே, "மனு நீதித் திட்டம்" ஒரு நாடகம் என்று கூறிவிடுவதால், இதுசம்பந்தமான புள்ளிவிவரங்கள் பொய்த்துவிடாது. அங்கங்கே இருக்கும் கிராம மக்களைச் சந்தித்து, எந்தெந்த கிராமங்களிலே மனு நீதித் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் விவசாய மக்களுக்கும், பொதுமக்களுக்கும் நல்லகாரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பது தெரியும்.

நாங்கள் இதுவிஷயமாக புள்ளிவிவரங்களைத் கேட்கும் பொழுது, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித்தலைவரும் அந்தக் கணக்குகளை தந்துகொண்டுதான் இருக்கிறார்கள். நாங்களும் அப்படிக் கொடுக்கும்படி அடிக்கடி வலியுறுத்திக்கொண்டு, அந்தத் திட்டம் செம்மையாக நடைபெற ஆவன செய்து வருகிறோம். எனவே, இந்தத் திட்டத்தை ஒரு "நாடகம்" என்று கூறிவிட்டால் மாத்திரம் போதாது. எங்கேயாவது குறைபாடு இருந்து, அதை எடுத்துத் தெரிவித்தால் அதை நீக்க ஆவன செய்வோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

போர்வீரர்களுக்கு உதவி நிதி

உரை : 11 நாள்: 8.12.1971

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்த அறிக்கை மேலவையிலே வைக்கப் பட்டிருக்கிறது. நேற்று நெருக்கடிநிலை இவைகளைப்பற்றி வானொலியில் பேசுகின்ற நேரத்திலே வானொலி மூலம் தமிழ்நாட்டு மக்களுக்குச் சில முக்கியமான செய்திகளைச் சொல்ல வேண்டியிருந்தது. வானொலியில் அந்த அறிவிப்பைச் செய்வதற்கு- அவை நடக்கிற நேரத்திலே- அதை இந்த அவையிலே சொல்ல வேண்டுமென்ற அடிப்படையிலே அந்தக் கருத்துக்கள் மேலவையிலே நேற்றையதினம் எடுத்துச் சொல்லப்பட்டது. மேலவையிலே எடுத்துச் சொல்லப்பட்ட அந்தக் கருத்துக்களைப் பேரவையிலும் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தோடு இதை அளிக்கிறேன்.

போர்க்களத்தில் தமிழ்நாட்டு வீரர்கள் பெரும்பாலோர் நாடு காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களில் போரில் பாதிக்கப்பட்டோர், கால், கை இழந்தோர், உயிர் தந்தோர் ஆகியோர் குடும்பங்களைக் காப்பாற்றத் தமிழக அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

தமிழ்நாட்டிலிருந்து களம் சென்று போரில் இறந்தோர் குடும்பங்களுக்கும், அங்கஹீனமாகிப் பணியாற்றிட தகுதி யிழந்தவர் குடும்பங்களுக்கும், ஐயாயிரம் ரூபாயும், மூன்று ஏக்கராப் புஞ்சை அல்லது 1¼ ஏக்கரா நஞ்சையும் தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும். அவர்கள் வீட்டுக் குழந்தை களின் படிப்புச் செலவுக்கும், உடைகளுக்கும் உதவி அளிக்கப் படும்.

வீர விருதுகள் பெறுவோர்க்குத் தமிழக அரசு பொற்கிழி அளிக்கிறது. பரம வீர சக்கர விருது பெற்றவர்க்குப் பத்தாயிர ரூபாய் என்று இதுவரையில் இருந்ததை பதினைந்தாயிரமாக இனிமேல் உயர்த்தி வழங்கப்படும். மகாவீரச் சக்கர விருது பெற்றவர்க்கு ஏழாயிரத்து ஐநூறு ரூபாய் என்று இதுவரையில் இருந்ததை இனிமேல் பத்தாயிரமாக உயர்த்தித் தரப்படும். வீரச்சக்கர விருது மூவாயிரம் என்று இருந்ததை ஐயாயிரம் ரூபாயாக இனிமேல் உயர்த்தித் தரப்படும். சேனா விருதுக்கு முதல் தடவையாக நமது தமிழக அரசின் சார்பில் மூவாயிரம் ரூபாய் வழங்கப்பட இருக்கிறது என்பதை அறிவிப்பதோடு, நாட்டுப் பாதுகாப்புக்கும், போர்முனையில் உள்ள வீரர்களுக்கு உதவுவதற்கும் அவ்வப்போது ஆக்கப்பூர்வமான யோசனை களைக் கூறவும், உடனடியாக செயல்களில் ஈடுபடவும், அனைத்துக் கட்சித் தலைவர்கள், சமூகப் பொதுப் பணியாளர் களைக் கொண்ட பாதுகாப்புக் குழு, மாநில அளவிலும், மாவட்டங்கள் அளவிலும் அமைக்கப்பட்டு அதன் பணிகள் விரைவிலே தொடர்ந்திடும் என்பதைத் தெரிந்துக்கொள்கிறேன்.

திருமதி. த.ந.அனந்தநாயகி: தலைவரவர்களே, போர்முனையில் ஈடுபட்டு இறந்தோர், பணியாற்றிடத் தகுதியிழந்தோர் குடும்பங்களுக்கு 3 ஏக்கராப் புஞ்சை அல்லது 1½ ஏக்கரா நஞ்சை தர இருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தக் குடும்பங்களுக்கு 5 ஏக்கரா நஞ்சை அல்லது 10 ஏக்கராப் புஞ்சை என்ற அளவில் மாற்றித் தர அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: தலைவர் அவர்களே, ஏதோ ஒன்றைச் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்வது நல்லது இல்லை. நான் ஐந்து ஏக்கரா என்று சொல்லி யிருந்தால் நீங்கள் 7 ஏக்கரா என்று சொல்லியிருப்பீர்கள், இதற்குக்கூட நிலம் கிடைக்குமா என்பது சந்தேகம். எங்கெங்கு அந்த வீரர்களின் குடும்பங்கள் இருக்கின்றனவோ அந்த இடங்களில் நிலங்கள் கிடைக்கின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். அதற்காகத்தான் முன்பு கொடுத்த விருதுகள் பத்தா யிரம் ரூபாய் என்றிருந்ததை பதினைந்தாயிரம் ரூபாய் என்றும்.

ஏழாயிரத்து ஐநூறை பத்தாயிரம் ரூபாய் என்றும், மூவாயிரமாக இருந்ததை ஐயாயிரமாகவும் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். இதுவரையில் எதுவுமே கொடுக்காத சேனா விருதுக்கு இப்போது முதல் தடவையாக மூவாயிரம் ரூபாய் நாம் தருகிறோம். இப்போது 3 ஏக்கரா புஞ்சை அல்லது 1½ ஏக்கரா நஞ்சை என்ற அளவுக்கு இருக்கிறது. போர்க்களத்தில் இருக்கும் வீரர்களில் தமிழ்நாட்டிலிருந்து சென்றவர்கள் பெரும்பான்மையானவர்களாக இருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் ஆற்றும் தியாகத்தைத் தமிழ்நாடு அரசும், தமிழ்நாட்டு மக்களும் அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதற்கான அடையாளங்களாக இந்தக் காரியங்கள் எல்லாம் செய்யப்படுகின்றன. போர் வீரர்களை மேலும் ஊக்குவிப்ப தற்காகப் பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகள் செய்யப் பட்டிருக்கின்றன. நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறபடி பாதுகாப்புக் குழு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் அமைக்க இருக்கின்றோம். தாங்கள் தெரிவிக்க விரும்புகின்ற கருத்துக்களை அந்தந்த கட்சிகளின் சார்பிலும், சமூகப் பொதுப்பணியாளர்கள் சார்பிலும் அறிவிக்கலாம். அந்தக் கருத்துக்களையெல்லாம் நல்ல முறையில் ஆராய்ந்து, செய்ய வேண்டியதைச் செம்மையாகச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

894.8115
TAM
ANNA CENTENARY LIBRARY
CHENNAI-600 085
C100223 82

எம்.ஜி.ஆர். கொடுத்த ஊழல் புகார்

உரை : 12 நாள் : 14.12.1972

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி : தலைவரவர்களே, இந்த அமைச்சரவை மீது திரு.எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களும், திரு. கல்யாணசுந்தரம் அவர்களும், அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த சிலரும் கையெழுத்திட்டு ஜனாதிபதியிடம் கொடுத்த குற்றச்சாட்டுகளின் பட்டியலை இந்த மன்றத்தில் வைப்பதற்கு ஏன் தயங்குகிறீர்கள் என்ற கேள்வியைக் கடந்த சில நாட்களாக நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், மற்றும் எதிர்க்கட்சியில் உள்ளவர்களும் இந்த மன்றத்தில் கேட்டு வந்திருக்கிறார்கள். இன்றைக்கும் திரு. ஹாண்டே அவர்கள் அதே பிரச்சினையை எழுப்பி அந்தப் பட்டியலை வைப்பதற்கு என்ன பயம், ஏன் தயக்கம் என்ற கேள்விக் கணைகளை விடுத்திருக்கிறார்கள். அதைப்போலவே, பிரதமருக்கு அனுப்ப வேண்டிய விளக்கங்களை ஏன் இன்னும் அனுப்பவில்லை என்று கேட்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கும், இந்த மன்றத்தின் மூலமாக நாட்டு மக்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பிரதமருக்கு அனுப்பப்படுகிற விளக்கங்கள் இன்றைய தினம் அனுப்பப்பட்டுவிட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே, ஏன் அந்தப்பட்டியல் இங்கே வைக்கப்படவில்லை என்பதற்கும் நான் என் விளக்கத்தை அளிக்கவேண்டியவனாக இருக்கிறேன். குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்ட அந்தப் பட்டியலை திரு. எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களும், திரு. கலியாணசுந்தரம் அவர்களும், அவர்களோடு சிலரும் சேர்ந்து ஜனாதிபதியிடத்தில் கொடுத்து இருக்கிறார்கள். அப்படிக் கொடுத்தபோது பிரதமர் நேரடியாக ஒரு விசாரணைக் குழுவை அமைக்க வேண்டும் என்பது அந்தப் பட்டியலைக் கொடுத்தவர்கள் விருப்பமாக இருந்தது. பிரதமர் அவர்கள் நம் கருத்தைக் கேட்க எனக்கு அதை அனுப்பி வைத்தார்கள்.

ரகசியமாகக் கொண்டுபோய் ஜனாதிபதியிடம் கொடுத்து, அது பிரதமரிடத்தில் வந்து, பிரதமர் என்னிடத்தில் அனுப்பிவைத்ததை வெளியிடலாமா என்று நான் பிரதமரிடத்தில் கேட்பதும், அதற்காக அனுமதி பெறுவதும் ஒரு மரபு, ஒரு நாகரீகம் என்று கருதினேன். அதற்காகத்தான் இத்தனை நாட்களாகத் தயக்கம் காட்டப்பட்டது. டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதைப் போல திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாடாளுமன்றத்தில் கட்சிக் குழுவின் தலைவராக இருக்கிற நண்பர் செழியன் அவர்களும் அதுபற்றி உடனடியாக அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இரண்டு நாளைக்கு முன்பு நானும் பிரதமருக்கு ஒரு 'டெலக்ஸ் மெசேஜ்' மூலமாக உடனடியாக நாங்கள் அதை வைக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். எதிர்த்தரப்பில் இருக்கிறவர்கள் அதை வலியுறுத்திக்கொண்டு இருக்கிறார்கள்; ஆகவே, மன்றத்தில் அந்தப் பட்டியலையும், பதிலையும் வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்ற விபரத்தையும் பிரதமருக்குத் தெரிவித்திருக்கிறேன். இதுவரையில் அதற்கான பதில் எதுவும் வரவில்லை.

குற்றச்சாட்டுப் பட்டியலை ஜனாதிபதியிடத்திலே கொடுத்து, அவர் அதைப் பிரதமருக்கு அனுப்பி வைத்திருக்கிறார். ஆனால் அந்தப் பட்டியலிலே கையெழுத்திட்டிருக்கின்ற திரு.கல்யாணசுந்தரம் அவர்களும், மற்றவர்களும் அந்தப் பட்டியலின் சாராம்சங்கள் அனைத்தையும் பத்திரிகைகளுக்குத் தந்திருக்கிறார்கள். அதைப் பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட ஏ.ஐ.ஆர். இல் கூடக் குறிப்பிட்டதாகவும் , அகில இந்திய வானொலியில் அமைச்சரவை மீது சாட்டப்பட்ட லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை திரு.கல்யாணசந்தரம் அவர்கள் பத்திரிகைகளுக்கு அளித்திருக்கிறார் என்று சொல்லப் பட்டதாகவும் தெரிவித்தார். ஆனால் விவரங்கள் முழு அளவில் வெளி வராவிட்டாலும் விஷயங்கள் வந்துவிட்டன.

நாட்டுமக்களின் எவ்வளவோ பிரச்சினைகளை இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல; நாட்டில் நடைபெறவேண்டிய பல்வேறு நல்ல காரியங்கள், மக்களுடைய அன்றாட வாழ்வுப் பிரச்சினை, தமிழ் நாட்டில் அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தாலும் புயலாலும்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்கவேண்டிய நிவாரணப் பணிகள், இதற்கிடையில் ஏதோ லஞ்சம், ஊழல் என்று கூறி மக்கள் உள்ளத்தைத் திசை திருப்புகின்ற முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கள் சாட்டிய குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் அரசு திகைத்துக்கொண்டிருப்பதைப் போலப் பேசுவதை நாங்கள் அறியாமல் இல்லை. ஆகவே, அதற்கான பதிலைத்தர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நாங்கள் எந்த மரியாதையைப் பிரதமரிடத்தில் வைத்து, எந்த மரபைக் காப்பாற்ற வேண்டுமென்று எண்ணினோமோ, எவ்வளவு நாகரீகமாக நடந்துகொள்ள வேண்டுமென்று கருதினோமோ அதற்கு மாறாக, அந்தப் புகார்ப் பட்டியலை அங்கே கொண்டுபோய்க் கொடுத்த திரு. கல்யாணசுந்தரம் அவர்களும், புகார்ப் பட்டியலில் கையெழுத்திட்ட, இந்த மன்றத்தில் உறுப்பினராக இருக்கும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு.கே.டி.கே.தங்கமணி ஆகியோரும் இவைகளை எல்லாம் பத்திரிகைகளுக்குத் தந்திருக்கிறார்கள். திரு.எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களும் அந்தப் பட்டியலில் உள்ளவைகளை வெளியில் சிலவற்றைப் பேசுவதும் இன்னும் நிறைய இருக்கிறது என்று குறிப்பிட்டுக் கொண்டிருப்பதும் இந்த அவையில் இருப்பவர்கள் அறியாததல்ல.

நேற்று கூடப் பார்த்தேன். மகஜரில் கையெழுத்திட்டிருக்கிற தலைவர்களில் ஒருவரான திரு.கே.டி.கே.தங்கமணி அரசாங்கத்தின் சார்பில் இந்தப் பட்டியலை தமிழக அரசாங்கமே வைக்க வேண்டுமென்று தமிழ்நாட்டு அரசாங்கத்தைப் பத்திரிகைகளில் அறிக்கை வாயிலாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார். ஆகவே புகாரைக் கொடுத்தவர்களே அந்தப் புகாரைப் பெற்றுக் கொண்டவர்கள் ஏற்ற நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை இல்லாமல், அதற்கு மாறாக யாரிடம் மதிப்பு மரியாதை வைத்துக் கொடுத்தார்களோ, அவர்களிடம் நம்பிக்கை இல்லாமல், அவர்களே இன்று அதை வெளியிட வேண்டுமென்று கூறி, அரசாங்கமே இதை வைக்க வேண்டுமென்று வலியுறுத்தி இருக்கிறார்கள்.

நான் டாக்டர் ஹாண்டே அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் திரு பொன்னப்ப நாடார் அவர்களும் அன்றைக்கே இந்தப் பிரச்சனையை எழுப்பி இதை அரசின் சார்பில் வைக்க

வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அவர்களுக்கும், அரசின் சார்பில் வைக்க வேண்டுமென்று இந்த அவைக்கு வராமல் அறிக்கை விட்டிருக்கிற கே.டி.கே. தங்கமணி அவர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் அறிவித்துக் கொள்கிறேன். இன்று அல்லது நாளை அந்தப் பட்டியலும், அதற்கு அரசு தருகிற பதிலும் இணைத்து, இங்கே அவையில் வைக்கப்படும் என்று கூறி, அவர்களுடைய குற்றப் பட்டியல் தனியாக வைக்கப்படும், அந்தக் குற்றச்சாட்டுகளுக்கான குறிப்பும், அதற்கான அரசாங்கத்தின் பதிலும் இந்த மன்றத்தில், அன்றைக்கு, தவறினால் நாளைக் காலையில், வைக்கப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊழல் புகாருக்கான பதில்கள்

உரை : 13 **நாள் : 14.12.1972**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரு.ஹாண்டே அவர்கள் எழுப்பிய பிரச்னைக்கு நான் அளித்த விளக்கத்தின் அடிப்படையில் இப்போது ஜனாதிபதியிடத்தில் திரு.எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களும், திரு.எம்.கல்யாணசுந்தரம் அவர்களும் மற்றவர்களும் அளித்த பட்டியலையும், அதற்கு அரசாங்கச் சார்பில் அளிக்கப்பட்ட, பிரதமருக்கு அனுப்பப்பட்டுள்ள பதில் பட்டியலையும் இந்தப் பேரவையின் முன்னால் இப்போது வைக்கிறேன். (ஆரவாரம்.)

தலைவர் அவர்களே, இரண்டாவது துணை மதிப்பீடுகள் பற்றிய கருத்துக்களைக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்களும், சுதந்திராக் கட்சியின் தலைவர் அவர்களும், ஆளும்கட்சியிலும், எதிர்க்கட்சிகளிலும் உள்ள உறுப்பினர்களும் இங்கே விவாதித்திருக்கிறார்கள். குறிப்பாக, துணை மதிப்பீடுகள் பற்றிய விவரங்களிலே யாரும் அதிகமாக நுழையாமல், இதனைப் பயன்படுத்திக்கொண்டு, இப்பொழுது ஏற்பட்டிருக்கிற மழை, பெருங்காற்று ஆகியவைகளினால் உருவான பாதிப்புகளிலிருந்து மக்களை மீட்கவேண்டும் என்கின்ற கருத்தினையும், தங்கள் தங்கள் தொகுதிகளில் செய்யப்பட்ட காரியங்களையும், இனி செய்யப்பட வேண்டிய காரியங்களையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அனைவருக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவாதத்தைத் தொடங்கிய நம்முடைய சுதந்திராக் கட்சி உறுப்பினர் நண்பர் வெங்கடசாமி அவர்கள் தர்மபுரி மாவட்டத்திற்குப் போதிய நிதி உதவி கொடுக்கப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டோடு தன்னுடைய பேச்சைத்

தொடங்கினார்கள். தர்மபுரி மாவட்டத்திற்கு ஏற்கெனவே வறட்சி நிவாரணப் பணிகளுக்கு மாத்திரம் வழங்கப்பட்ட தொகை, ஒதுக்கப்பட்ட தொகை ரூ.2 கோடி என்பதையும், அதற்கான வேலைகள் அங்கே வெகு வேகமாக நடைபெற்று வருகின்றன என்பதையும் நான் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். மேலும், ரூ.5 கோடி அளவுக்கு ஒரு சிறப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அந்தத் திட்டம் உலக வங்கியின் ஒப்புதலைப் பெறுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்காக நமக்கு ஆறுதல் வழங்கக்கூடிய ஒப்புதலும் விரைவிலே கிடைக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஹோகூரில் சிறப்புப் பால் திட்டம் நடைபெறவில்லை என்று அவர்கள் கவலைப்பட்டுக் கொண்டார்கள். இதற்கு அனைத்து இந்திய பால் பண்ணைக் கழகத்தின் ஒப்புதல் கோரி நாம் தொடர்புகளை வைத்துக் கொண்டிருக்கிறோம். விரைவிலே அந்த ஒப்புதல் கிடைக்கும் என்று நான் கருதுகிறேன்.

வேறு பல மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்களுடைய தொகுதிகளில் நடைபெற வேண்டிய காரியங்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் ஒரு மணிக்குள்ளாக என்னுடைய பதிலை முடிக்க வேண்டியிருக்கிற காரணத்தினால் அந்த விவரங்களையெல்லாம் எடுத்துச் சொல்வதற்கு நேரம் இல்லை என்பதைக் குறிப்பிட்டுவிட்டு, அவை குறிப்பு ஏடுகளில் ஏற்றப்பட்டிருக்கிற நிலைமையில் அவைகளை ஆராய்ந்து, ஏற்ற முடிவுகள் எடுக்கப்படும் என்பதை மாத்திரம் அந்தக் கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அண்மையிலே ஏற்பட்ட வெள்ளத்தில் அதிகாரிகள், குறிப்பாகப் பொறியாளர்கள் தங்களுடைய கடமையைச் செம்மையாகச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை இங்கே கடுமையாகத் தெரிவித்தார்கள். அந்த அதிகாரிகளின்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று எல்லாம் குறிப்பிட்டார்கள். அதுபற்றி நான் மேலும் விவரங்களைக் கோரி இருக்கிறேன் என்றாலும், எனக்குக் கிடைத்திருக்கிற இந்தத் தகவல்களை இந்த மன்றத்தில் வைப்பது, கடுமையாக கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குற்றம் சாட்டியிருக்கிற காரணத்தினால் இந்த நேரத்தில் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து தண்ணீரை முதலிலேயே திறந்து விட்டிருந்தால், இப்படிப்பட்ட தீங்கு ஏற்பட்டிருக்காது என்பது நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்

களுடைய வாதமாகும். ஆனால், சாத்தனூர் அணைக்கட்டுக்கு இரண்டு நாட்களில் வந்த தண்ணீர் அணைக்கட்டு கொள்ளக்கூடிய தண்ணீரைப்போல 5 மடங்கு அதிகமான தண்ணீராகும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

அப்படியும் எட்டு மணி நேரத்திற்கு ஒருமுறை அணைக்கட்டு நிரம்பி தண்ணீர் ஐந்து முறை திறந்து விடப்பட்டு அணைக்கட்டிலிருந்து வெளியே அனுப்பப்பட்டு இருக்கிறது. சாத்தனூர் அணை கொள்ளக்கூடிய அளவு 7,500 மில்லியன் கன அடி அளவாகும். மழை ஆரம்பிப்பதற்கு முன்னால் அதிலிருந்த தண்ணீர் சுமார் 4,000 மில்லியன் கன அடி என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இரண்டு நாளில் பெரு மழையின் காரணத்தால் வந்த தண்ணீர் 37,500 மில்லியன் கன அடிக்கு அதிகமாகும். எனவே 4,000 மில்லியன் கன அடி நீரைத் திறந்து விட்டு இருந்தாலும் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தைத் தடுத்து இருக்க முடியாது. இதையே முடிந்த முடிவாகச் சொல்வதாக நீங்கள் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. மேலும் இதுபற்றிய விவரங்களை ஆராய்வதற்கு நானும் இந்த அரசும் கடமைப்பட்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இதைப்போலவே அவர்கள் தேசீய நெடுஞ்சாலைகளில் பாலங்கள் மழைக் காலத்தில் பழுது பார்க்கும் வேலைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன என்ற குற்றச்சாட்டையும் கூறியிருக்கிறார்கள். குற்றச்சாட்டில் கூறப்பட்ட அவை உண்மையாக இருந்தால் அதற்கு ஏற்ற நடவடிக்கையை அந்த அதிகாரிகள்மீது எடுக்க அரசு தயங்காது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நம்முடைய சுதந்திராக் கட்சியினுடைய தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் நெல்லையில் நடைபெற்ற சம்பவம், திருச்சியில் நடைபெற்ற கிளைவ்ஹாஸ்டல் சம்பவம் இவைகளைப்பற்றி விவாதித்தார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் இங்கே அந்த விவரங்களைச் சொன்னார்கள். எனக்கு இருக்கிற வேதனை எல்லாம் இன்றைக்கு திருச்சியிலிருந்து வேறு சில கடிதங்களும் வந்தனவே டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு , அதைப்பற்றி எடுத்து வாதாடவில்லையே என்பதுதான் என்னுடைய வருத்தமாகும். திருச்சியில் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றி 11-ம் தேதி ஒரு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு இருக்கிறது. அந்த ஹர்த்தாலில் கட்சி வேறுபாடு இல்லாமல்கூட அனைவரும் கலந்துகொண்டு இருக்கிறார்கள் இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் திருச்சியில் இருக்கிற திராவிட

முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அங்கே நடைபெற்ற சர்வ கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசாங்கத்திற்குத் தெரிவிப்பதாகவும் ஆவன செய்வதாகவும் உறுதிமொழி கூறியிருக்கிறார். மாணவர்கள் அடிபடுவதைக் கண்டு யாரும் வேதனைப்படாமல் இல்லை. அதைக் கண்டு மகிழ்ச்சி அடையவும் இல்லை. அதைக் கண்டு அரசு வருத்தப்படுகிறது, வேதனைப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதைப்போல எல்லா வேதனை அளிக்கத்தக்க விஷயங்களிலும் மற்றவர்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும். பங்கிட்டுக்கொள்ள வேண்டும். யாருக்குத் தொந்தரவு வந்தாலும் அரசாங்கத் தரப்பில் ஆகட்டும் அல்லது எதிர் தரப்பில் ஆகட்டும் அப்படி பங்கிட்டுக் கொண்டால்தான் வன்முறையற்ற நிலைமை, சுமுகமான சூழ்நிலை பரவக்கூடிய நிலை உருவாக முடியும். 11-ம் தேதி நடைபெற்ற ஹர்த்தாலில் திருச்சியில் ஒரு ஊர்வலம் நடைபெற்று இருக்கிறது. அந்த ஊர்வலம் போலீஸ் பாதுகாப்போடு நடைபெற்று ஒரு இடத்தில் கூடி கூட்டம் கலைந்திருக்கிறது. அது வரையில் அமைதியாக இருந்தவர்கள், கலைந்து விட்டார்கள் என்ற செய்தியையும் போலீசார் அறிவித்து விட்டார்கள். நான்கூட பேரவையில் மகிழ்ச்சியோடு எடுத்துரைத்தேன். ஆனால் கலைந்து சென்றவர்களில் ஒரு பகுதி மூடப்பட்டு இருக்கிற பல்வேறு கடைகளில் புகுந்து நாசம் செய்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளார் கடைக்குச் சென்று-அவருடைய கடை ஹர்த்தாலை முன்னிட்டு மூடப்பட்டு இருக்கிறது-அவருடைய கடையைத் திறந்து உள்ளே இருக்கிற பொருட்களைச் சேதப்படுத்தி இருக்கிறார்கள். பத்தாயிரம் ரூபாய் என்று சொல்லப்படுகிறது. அவர் ஒலிபெருக்கி வியாபாரம் செய்கிறவர். ஒலிபெருக்கி இயந்திரங்கள் அத்தனையும் உடைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் புகைப் படங்கள் எல்லாம்கூட எடுத்து அனுப்பி இருக்கிறார்கள். அதே நாளில் சென்னை மாநகரத்தில் குறளகத்தில் நடைபெற்ற சம்பவத்தைப்பற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

நேற்று கோவில்பட்டியில் பஸ்ஸை எரிப்பதற்கு மாணவர்கள், மற்றவர்கள் முயன்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வன்முறைச் செயல்களில் சிலர் ஈடுபடுகிறார்கள் என்பதை இந்த அவையில் உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மறந்துவிடக் கூடாது. அரசாங்கத்திற்கு எதிராக ஒரு காரியம் நடைபெற்றால் அது தீய காரியமாக இருந்தாலும், அது ஆளுகிறவர்களுக்கு

எதிராகத்தானே நடைபெறுகிறது என்று அதை உசுப்பி விடவோ அல்லது ஊக்குவிப்பதோ அல்லது ஒன்றும் அறியாதவர்கள் போல இருந்து விடுவதோ நல்லது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திருச்சி பற்றிய சம்பவங்கள்பேரில் டாக்டர் ஹாண்டே அவர்கள் மேலும் தகவல்களைப் பெற வேண்டும் என்ற வகையில் திருப்பி திருப்பி அதை வலியுறுத்தினார். ஏற்கெனவே தகவல்கள் வந்துவிட்டன என்று அவர் வலியுறுத்தியதைப் புறக்கணித்துவிட வில்லை. மேலும் தகவல் பெறப்பட்டது. வந்த பிறகு எது சரி எது சரியல்ல என்ற ஆராய்ச்சியில் நாம் ஈடுபடுவதைவிட ஒரு நீதி விசாரணை வைக்கலாம் என்ற அந்தக் கோரிக்கைக்கும், இந்த அரசாங்கம் இணக்கம் தெரிவித்து நீதி விசாரணை கோரிக்கையையும் ஏற்றுக்கொண்டது. நீதி விசாரணை வைக்கப்பட்டது என்ற செய்தி வந்தவுடனே ஹர்த்தால் நிறுத்தப்பட்டு இருக்கலாம். ஆனால் அதை நடத்தியே தீர வேண்டும் என்ற அரசியல் நோக்கம் அதை நடத்துகின்றவர்கள் சிலருக்கு இருந்த காரணத்தால் பல வன்முறைச் செயல்கள் செய்ய முடிந்திருக்கிறது. நீதி விசாரணை ஏற்பாடு செய்தபிறகும், ஆர்.டி.ஓ.வை மாற்றவேண்டும் சஸ்பெண்ட் செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அந்த ஆர்.டி.ஓ. யார்; அவர் ஒரு கட்சிக்காரர் அல்ல; அவர் சபரிமலைக்குக்கூட செல்லக் கூடியவர் என்று திரு.காமாட்சி அவர்கள் சொன்னதற்குக் காரணம் அவர் நம் கட்சிக்காரர் அல்ல என்பதற்காகத்தான். நம் நாடார் அவர்கள்கூட சபரிமலைக்கு இரண்டு நாளைக்குப் பிறகு போகிறார். அந்த அளவு பக்தியுடையவர்தான் அந்த ஆர்.டி.ஓ.

திருச்சியில் அன்று நடந்த சம்பவம் மூன்று டிரைவர்களைக் காணவில்லை என்ற புரளி, செய்தி கிளப்பப்பட்டது. மேலவையில் பேசிய திரு. தீட்சிதர் அவர்கள்கூடச் சொன்னார். மூன்று டிரைவர்களை மாணவர்கள் அழைத்துச் சென்றிருக்கிறார்கள் என்ற புரளி கிளப்பப்பட்டது உண்மைதான் என்று. எனவே, அப்படிப்பட்ட புரளி எப்படிப்பட்ட கொந்தளிப்பை, உணர்ச்சிகளை ஏற்படுத்தும் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. ஆர்.டி.ஓ. தனியாகச் சென்று அந்த டிரைவர்கள் உள்ளே இருக்கிறார்களா என்று பார்க்கப் போனார். அப்படிப் போன ஆர்.டி.ஓ.வை மாணவர்கள் தாக்கியிருக் கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இப்படி வந்த தகவல்களில் எவை எல்லாம் சரி, எவை சரியல்ல என்று பார்ப்பதற்காகத்தான் நீதி விசாரணை. அதற்குப் பிறகும் திருச்சி சம்பவம்,

பாளையங்கோட்டை சம்பவம் தொடர்ந்து புதிய புதிய சம்பவங்கள் மூலம் வன்முறைகள் தூண்டப்படுகின்ற நேரத்தில் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சிகள் அதற்கு ஊக்கம் அளிக்காமல் இருக்கவேண்டும் என்று மிக மிகப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்கே வைக்கப்பட்டு இருக்கிற பட்டியலைப்பற்றி ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். பல நாட்களாகக் கேட்டு கேட்டு நாங்களும் தயங்கித் தயங்கி-தயங்கக் காரணம் பிரதமருக்கு அளிக்கவேண்டிய மதிப்பு-அதற்குப் பிறகு பட்டியலைக் கொடுத்தவர்களே வெளியிட்டுவிட்ட காரணத்தாலும் அரசாங்கத் தின் சார்பாக வை பார்க்கலாம் என்று கே.டி.கே. தங்கமணி அறிக்கை விட்டுவிட்ட காரணத்தாலும் இன்றைக்கு அந்தப் பட்டியல் வைக்கப்பட்டு இருக்கிறது. அரசாங்கச் சார்பு பதில்களோடு அந்தப் பட்டியல் வைக்கப்பட்டு இருக்கிறது. இதுவும் போதாது நீங்கள் விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். நான் இந்த மாமன்றத்தில் மெத்தப் பணிவோடு ஜனநாயக உணர்வோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதிலே இருக்கிற விஷயங்களில் உங்களுக்கு எதெதில் இன்னும் சந்தேகம் இருக்கிறதோ மேலான ஆதாரங்கள் குற்றச்சாட்டுகளுக்கு இருக்குமானால் அந்த ஆதாரங்களை நீங்கள் இந்த அவையில் சமர்ப்பிக்கலாம். அதற்கு எந்த விதமான தடையும் இல்லை. இதிலே இந்தக் குற்றச்சாட்டுகள் எப்படிப்பட்டவை என்பதை நீங்களே தெரிந்துகொள்ளலாம். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்களே அதைப்போல. இங்கே கூறப்பட்டிருப்பதில் ஒன்று முதலமைச்சர் கருணாநிதிக்கு சொந்தமான திருவாரூரில் 10-20 ஆண்டிற்கு முன்னால் 3,500 ரூபாய்க்கு வாங்கப்பட்ட ஒரு வீடு 94-ம் நம்பர் தெற்கு வீதி, இந்த வீடு பல லட்சக்கணக்கான ரூபாயில் கட்டப்பட்டு இருக்கிறது என்பதாகும். அந்த வீடு எப்படியிருக்கிறது என்பதற்காகச் சில நாட்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட அந்த வீட்டின் போட்டோவையே அந்தப் பதிலில் இணைத்து வைத்திருக்கிறோம். அதிலிருந்து அது எப்படிப் பட்ட வீடு என்பதை அறியலாம். அந்த வீட்டில் குடியிருப்பவர்கள் இதைப் பழுது பார்த்துத் தருகிறாயா? அல்லது வேறு வீட்டிற்குப் போகட்டுமா என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வீடு பல லட்ச ரூபாயில் கட்டப்பட்டிருக்கிறது என்பது குற்றச்சாட்டுகளில் ஒன்று.

அருணா ஓட்டல் கருணாநிதிக்கு சொந்தம். ஸ்பென்சர் அண்டு கோ, கருணாநிதிக்குச் சொந்தம் ; பைலட் தியேட்டர் கருணாநிதிக்குச் சொந்தம், இப்படியெல்லாம் சொல்லப்பட்டு வந்தது. இப்போது அதையெல்லாம் விட்டு விட்டு, புதிதாகக் குற்றச்சாட்டில் அண்ணாதியேட்டர் கருணாநிதிக்குச் சொந்தம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் போய் அந்த தியேட்டர் எனக்குச் சொந்தம் என்று சொன்னால், அந்தத் தியேட்டரின் உரிமையாளர் உதைக்க வரக்கூடிய நிலைமை; இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள்தான் அதில் அடங்கியிருக்கின்றன.

இதற்கு மேல் ஆதாரம் எங்களிடம் இருக்கிறது என்று சொன்னால் அதைத் தாருங்கள். குற்றச்சாட்டுகளைக் கொடுத்தவர்கள் அதை வந்து இங்கே சொல்ல மாட்டார்கள். வெளியிலேதான் வீரம் பேசுவார்கள். உள்ளே வந்து பிரச்சினைகளை நேருக்கு நேர் சந்திக்க அவர்கள் அஞ்சுகிறார்கள் என்பது தெரிந்து விட்டது.

டாக்டர் ஹாண்டே போன்றவர்களுக்கு நல்ல எண்ணத்தோடு ஏதாவது சந்தேகம் இருக்கலாம். கருணாநிதிக்கு இந்தப் பெயர் வரலாமா என்ற எண்ணத்தின் காரணமாகச் சந்தேகம் தோன்றலாம். அதைப்போலவே பொன்னப்ப நாடார் அவர்கள் தமிழ்நாட்டு அரசாங்கத்தின்மீது களங்கம் வரலாமா என்று நினைக்கலாம், அப்படிப்பட்ட சந்தேகம் இருந்தால், புதிதாக உங்களிடம் அந்த ஆதாரங்களைக் கொடுத்தாலும்கூட, நீங்கள் அதை அளித்தால், அதற்கான என்னென்ன ஆதாரங்கள் உங்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் தேவை என்று கருதுகிறீர்களோ அவைகளை அளிக்க இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்பதை எடுத்துச் சொல்லி, இந்தத் துணை மானியக் கோரிக்கையில் கருத்து தெரிவித்த அனைவருக்கும் நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

அரசு அலுவலர் நலன்

உரை : 14 **நாள் : 3.11.1973**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாநில அரசு ஊழியர்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயற்படுத்தி வருகிறது என்பதை இந்த அவை அறியும். பணியிலிருந்து ஓய்வு பெறும்போது அல்லது பணியாளர் இறந்துவிடுங்கால், உதவி அளிக்கவேண்டிய அவசியம் கருதியும் சில செயற்குறிப்புகள் அரசின் ஆய்வில் இருந்து வந்துள்ளன. அரசு ஊழியர்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டம் ஒன்றை அரசு செயலுக்குக் கொண்டுவர வேண்டுமென, அரசு தம் பதிவில்லாத அரசு ஊழியர்களின் சங்கமும் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. அரசு ஊழியர்கள் குறிப்பிட்ட தொகையை மாதா மாதம் கட்டி, பணியிலிருக்கும்போதே அரசு ஊழியர் இறந்துவிட்டால். அவருடைய குடும்பத்துக்கு இந்த உதவித்தொகை அளிக்கப்பட வேண்டும் என்றும், அல்லது அரசு ஊழியர் ஓய்வு பெறும்போது இத்தொகை அவருக்குக் கொடுக்கபட வேண்டும் என்றும் ஊழியர்கள் சங்கம் கோரியுள்ளது. இக்கருத்துக்களை மனத்தில் கொண்டு அரசு ஒரு புதிய திட்டத்தை வகுத்துள்ளது. திட்டத்தின் விவரங்கள் வருமாறு:

இப்புதியத் திட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் குடும்ப நல நிதித் திட்டம் எனப் பெயர் பெறும். இத்திடத்தின் கீழ் அரசு ஊழியர்கள் அனைவரும் ஒவ்வொரு மாதமும் ரூ.10 செலுத்த வேண்டும். இத்தொகை அவர்கள் மாதச் சம்பளப் பட்டியலில் இருந்து பிடித்துக்கொள்ளப்படும், இத்திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டபின், பணியில் இருக்கையில் ஊழியர் ஒருவர் இறந்துவிட்டால் அவர் ஆற்றிய பணிக்கால

அளவு எவ்வளவாக இருந்தபோதிலும் அவரது குடும்பத்திற்கு ரூ.10,000 கொடுக்கப்படும். தொகை செலுத்தும் அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்போது அல்லது அவர்கள் பணியிலிருந்து விலகிச் செல்லும்போது அவர்களுக்கு இந்நிதியிலிருந்து அவர்கள் செலுத்தி உள்ள தொகை, அதற்கேற்ப அரசு செலுத்தும் தொகை ஆகியவை அவர்களுக்கு கொடுக்கப்படும். எடுத்துக்காட்டாக, இத்திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்ட பிறகு 10 ஆண்டுகள் கழித்து பணியிலிருந்து ஓய்வு பெறும் அரசு ஊழியர் ஒருவர் இந்த நிதிக்கு ரூ.1,200 தொகை செலுத்தியிருப்பார். அரசு அளிக்கும் தொகை உட்பட அவர் மொத்தம் ரூ.1,600 பெறுவார். அதே போல, 20 ஆண்டுகள் கழித்து பணியிலிருந்து ஓய்வு பெறும் ஊழியர் மொத்தம் ரூ.4,000 பெறுவார். இதில் அவர் செலுத்திய தொகை ரூ.2,400 அரசு அளிக்கும் தொகை ரூ.1,600. 30 ஆண்டுகள் கழித்துப் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர் ரூ.7,200 பெறுவர். இதில் அவர் செலுத்தும் தொகை ரூ.3,600 அரசு செலுத்தும் தொகை ரூ.3,600. அரசு ஊழியர்களுக்கு கணிசமான அளவு நன்மை பயக்கும் இத்திட்டத்தினை இம்மன்றம் வரவேற்குமென நான் நம்புகிறேன். இத்திட்டம் 1974 சனவரி முதல் செயலுக்குக் கொண்டுவரப்படும்.

மாநகராட்சி கலைப்பு

உரை : 15 நாள்: 20.11.1973

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: எல்லாவற்றையும் கொடுத்துவிடலாம். தமிழ்நாட்டையே தூக்கிக்கொடுத்துவிடலாம் தலைவரவர்களே, இங்கே இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தையொட்டி, அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று எதிர்க்கட்சியிலே உள்ளவர்களும், அதை விவாதிக்கத் தேவையில்லை என்கிற கருத்தின் அடிப்படையிலே அமைச்சர் அவர்களும், தங்க ளுடைய எண்ணங்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் அறிவித்ததைபோல் மாநகராட்சி மன்றத்தில் அதிகாரிகள் சிலர் நடத்திய ஊழல், அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதனுடைய நிர்வாகப் பொறுப்பில் இருக்கின்ற தலைவர்கள், இதில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கிற முறையீட்டை என்னிடத்தில் கொண்டு வந்தவுடனே, உடனடியாக நடவடிக்கை எடுங்கள் என்று நான் ஆணை பிறப்பித்து, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தொடர்ந்து விஜிலென்ஸ் விசாரணை இப்போது நடைபெற்று அதன் தொடர்பாகப் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். திரு.சுப்பையா அவர்கள் இங்கே குறிப்பிட்டது போல், ஒரு அதிகாரியின் வீட்டிலிருந்து ரூ.30,000 அளவுக்குத் தொகை கைப்பற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, மிகத் தீவிரமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக் கின்றன என்பதற்கு இதைவிட வேறு ஆதாரங்கள் தேவை யில்லை என்று கருதுகிறேன். இதிலே யாரையும் தப்பிக்க வைக்கவேண்டுமென்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு நிச்சயம் இல்லை. இன்னும் சொல்லப்போனால், இதிலே

அரசியல் கட்சிச் சார்பின்றி, யாராக இருந்தாலும், எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், இந்த விசாரணை முடிவில் அவர்கள் இதிலே தொடர்புடையவர்கள் என்று நிரூபிக்கப்படுமானால் அவர்கள் மீதும் தகுந்த நடவடிக்கை, அவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் பாரபட்சம் பார்க்காமல் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சியில் உள்ள தலைவர்கள் பேசும்போது, மாநகராட்சி மன்றத்தைக் கலைத்துவிட்டு, இந்த விசாரணையை நடத்தலாம் என்ற யோசனையைச் சொன்னார்கள். நான் அவர்களுடைய யோசனையை ஏற்றுக்கொண்டு, மாநகராட்சி மன்றம் கலைக்கப்பட்டு, விசாரணை நடைபெறும் என்ற உறுதியை இப்போது தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்) அதற்கான உத்தரவுகள் முறைப்படி வெளியிடப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நதிகள் தேசிய மயம்

உரை : 16 நாள் : 29.01.1974

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நதிகளைத் தேசியமயமாக்குவது பற்றி அன்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு சித்ரா நாராயணசாமி அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அதுபற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். நாட்டிலுள்ள எல்லா நதிகளையும் தேசியமயமாக்கிவிட வேண்டும் என்கின்ற அந்தப் பிரச்சினையின்மீது தமிழ்நாடு அரசு தன் மாறுபட்ட கருத்தையும் எடுத்துக் கூறியிருக்கின்றது. இன்றைக்கு உள்ள அரசியல் சட்டத்தில் 262(1)வது பிரிவு மாற்றப்பட வேண்டும் என்று மத்திய அரசு விரும்புகிறது, இந்த நதிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக. அப்போது அதில் என்ன இருக்கின்றது, அதை எப்படி மாற்ற வேண்டும் என்று மத்திய அரசு விரும்புகிறது என்பதை நாம் கவனிப்பது நலம். இன்றைக்கு அரசியல் சட்டப்பிரிவு 262(1)ல் இருப்பது

...Parliament may by law provide for the adjudication of any dispute or complaint with respect to use, distribution or control of the waters of, or in, any inter-State river or river valley."

இது இப்போது இருப்பது.

அவர்கள் மாற்ற விரும்புவது.

"Parliament may by law provide for the settlement of any dispute or complaint with respect to use, distribution, control, regulation, or development of water including the waters, or in, any river or river valley." என்று

ஏற்கெனவே inter - State rivers or river valley என்று இருக்கிறது. இப்போது inter - State rivers என்பதை எடுத்துவிட்டு any river என்று மாற்றியமைக்க நினைக்கின்றார்கள். இப்படிப் போடுவது

காரணமாக **காவிரி நீர் பிரச்சினையைத் தீர்க்கும் நேரத்தில் அது inter - State river என ஆகிறது**. ஒரு மாநிலத்தை இன்னொரு மாநிலத்தோடு இணைக்கும் நதிகளுக்கும், ஒரு மாநிலத்திற்குள் ளேயே ஓடிக்கொண்டிருக்கும் நதிகளுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை மத்திய சர்க்காருக்கு உணர்த்தியிருக்கிறோம். "மாநிலத்திற்குள்ளேயே ஓடிக்கொண்டிருக்கும் நதிகளையும் நீங்கள் தேசியமயமாக்கும் திட்டத்தினை நாங்கள் ஏற்றுக்கொள்ள இயலாது" என்று மத்திய சர்க்காருக்குக் குறிப்பிட்டு எழுதியிருக் கிறோம். நாம் என்ன கருத்தைச் சொல்லியிருக்கிறோம் என்று சொன்னால், ஒரு நாடாளுமன்றத்தின் அதிகார வரம்பு, "மாநிலங்களுக்கு இடையிலே ஓடும் ஆற்றுநீரைப் பயன்படுத்திக் கொள்வதில் தகராறுகள் ஆகியவை குறித்து மட்டும்" என்று வரையறுக்கப்படலாம் என்று ஒப்புக்கொண்டிருக்கிறோம்.

இரண்டாவது, மாநிலங்களுக்கு இடையிலே ஓடும் ஆற்று நீர் குறித்துத் தகராறு எழுந்தால், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளுக்கு இடையே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும்.

மூன்று, அத்தகைய பேச்சுவார்த்தைகளில் உடன்பாடு ஏற்படாவிட்டால், பிறகு இந்தியத் தலைமை அமைச்சர் அல்லது தலைமை அமைச்சர் தலைவராக இருக்கும் தேசீய நீர்வாயில் குழு நடுவராக இருந்து அத்தகைய தகராறுகளைத் தீர்த்து வைக்கலாம். இந்த இறுதி முடிவிற்கு எதிராக தலைமை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்துகொள்ளலாம். அந்த மேல் முறையீட்டினை ஐந்து பேருக்குக் குறையாத தலைமை உயர்நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்டதொரு குழு முடிவு செய்ய வேண்டும் என்ற கருத்துக்களை நாம் எடுத்துக் கூறியிருக்கிறோம். ஏனென்றால் காவிரி போன்று ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையே ஓடும் நதிகளைத் தேசியமயமாக்கி, அதை தேசிய அளவில் அணுகுவதுதான் முறையாகும். ஆனால் மாநிலங்களுக்குள்ளேயே ஓடிக்கொண்டிருக்கும் ஆறுகளின் மீது மத்திய சர்க்கார் ஆதிக்கம் செலுத்த நினைப்பது, ஏற்கெனவே இருக்கும் ஆதிக்கங்களையெல்லாம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கும் நேரத்தில், புதிதாக இப்போது இந்த ஒரு ஆதிக்கத்தைச் செலுத்துங்கள் என்று கேட்பது போலாகும் என்று கருதி, தமிழக அரசு அதை அடியோடு மறுத்துவிடவில்லை. ஆனால், இத்தகைய மாற்று

யோசனைகளையும் மத்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறோம் என்பதை நான் கூறிக்கொள்கிறேன். காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி இங்கே திரு. தீட்சிதர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களும் நேற்றும் அதற்கு முன்தினமும் பேசியிருக்கின்றார்கள். இந்தப் பிரச்சினை குறித்து ஆராய பல்வேறு கட்டங்களிலே பல்வேறு குழுக்கள் போடப்பட்டன, அந்தக் குழுக்கள் ஒவ்வொரு பகுதியாக முடித்துவிட்டு இப்போது கடைசியாக 10-10-1973ல் அந்தக் குழுவின் இரண்டாவது கட்டப் பேச்சு விரைவில் டெல்லியில் நடைபெற்று முடிய நீர்ப்பாசன மின்வள இலாகாவின் இணைக் காரியதரிசி திரு. சி. சி. படேல் அவர்கள் அந்தக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டு, அவர் இந்த மூன்று மாநிலங்களுக்கும் சென்று நீர்ப்பாசனத் திட்டங்களைப் பார்வையிட்டு, எப்படிக் காவிரி நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தலாம் என்று மூன்று மாநிலங்களும் ஒரு ஆய்வு செய்ய வேண்டும் என்று கடைசியாகத் தீர்மானிக்கப் பட்டு, அவர் நம் மாநிலத்திற்கு வந்து 5-11-1973 முதல் 11-11-1973 வரையில் காவிரி டெல்டா பிரதேசத்தைப் பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். இன்னும் அந்தக் குழு தன் அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை என்று தெரிகின்றது. விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும், குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் அடுத்துப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும், அதற்கு மூன்று மாநில அமைச்சர்களும் அழைக்கப்படுவர் என்று டெல்லியிலிருந்து செய்தி வந்திருக்கும் காரணத்தினால், காவிரி நீர்ப் பிரச்சினைப் பற்றி இப்போது நாம் அதிக அளவிற்குக் கவலைப்படாமல் நம்பிக்கையோடு இருக்கலாம். நம் உரிமைகளை விட்டுக் கொடுத்துவிடாத அளவிற்கு தமிழக அரசு ஏற்கெனவே ஒவ்வொரு பிரச்சினையிலும் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கலந்து முடிவெடுப்பதுபோல காவிரி நீர்ப் பிரச்சினையிலும், மற்ற பொதுப்பிரச்சினைகளை அணுகுவதைப் போலவே, அனைத்துக்கட்சித் தலைவர்களின் முடிவினை தமிழக அரசு நிறைவேற்றும் என்பதை நான் இங்கே உறுதியாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சி. சுப்பிரமணியத்திற்குப் பதில்

உரை : 17 **நாள் : 17.03.1975**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மத்திய நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சென்னை தியாகராயநகர் தெருவிலே நடைபெற்ற ஒரு கூட்டத்தில் (கரவொலி) (குறுக்கீடு) ஆம். தெருவிலே நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசிய பேச்சுக்கு நான் சென்னை புதுப்பேட்டை தெருவிலே நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பதில் சொன்னேன். சுப்பிரமணியம் நாடாளுமன்றத்தில் பேசிய பேச்சாக இருந்தால், அதற்கு நான் சட்டமன்றம் நடக்கும்போது சட்டசபையில் பதில் சொல்ல வேண்டியது முறை என்று ஹாண்டே அவர்கள் சொல்வதை ஒத்துக் கொள்வேன். சுப்பிரமணியம் பொதுக்கூட்டத்தில் ஒரு கருத்தைச் சொன்னார். அதற்கு மற்றொரு பொதுக் கூட்டத்தில் நான் என்னுடைய கருத்தைச் சொன்னேன்.

இந்த மாநிலத்தின் வறட்சி நிவாரணத்திற்கு மத்திய நிதி உதவி கோரி ரூபாய் 7½ கோடி தருவதாகச் சொல்லி 6½ கோடி ரூபாய் வரை கொடுத்திருக்கிறார்கள். ஒரு பொறுப்புள்ள நிதி அமைச்சர் மத்திய பேரரசிலே வீற்றிருப்பவர் தமிழகத்திற்கு வரும்போது என்னை அழைத்து, நான் ஒரு முதலமைச்சர் என்ற முறையில் பேசுவது ஒன்றும் முரண்பாடான காரியமல்ல, இதற்கு முன்பு நடக்காததுமல்ல, முன்பொரு முறை அவர் வந்தது போல இப்போதும் தலைமைச் செயலகத்திற்குக் கூட வந்து அதிகாரிகளைக் கூட்டி வைத்து ரூபாய் 7½ கோடி என்னவாயிற்று? எவ்வளவு செலவு செய்திருக்கிறீர்கள்? வறட்சிப் பணிகள் எப்படி நடைபெற்றிருக்கின்றன? என்று என்னோடும், தொடர்புடைய அமைச்சர்களோடும் கலந்து பேசி, வேகமாக இந்தப் பணிகள் எப்படி நடைபெற வேண்டும் என்று யோசனை சொல்லி இருந்தால் நான் அதை வரவேற்பேன்.

இன்னின்ன தவறுகள் நடைபெறுவதாகக் கேள்விப்பட்டேன். அவைகளை யெல்லாம் சரிசெய்ய வேண்டும் என்று யோசனை சொல்லியிருந்தால் அதையும் வரவேற்றிருக்கலாம்.

அதற்குப் பதிலாக ஒரு பொதுக் கூட்டத்தில் போய் மத்திய அமைச்சர் ஒருவர் இப்படி ''நாங்கள் கொடுத்திருக்கிற பணம் ஒழுங்காகச் செலவு செய்யப்பட்டிருக்கும் என்று நம்புகிறேன்.மேற்பார்வையிட அடுத்த மாதம் வரப்போகிறேன்.'' என்றெல்லாம் பேசுவதும், அதை நான் கண்காணிக்கப் போகிறேன் என்று கூறுவதும், ஏதோ மத்திய அரசில் இருப்பவர்கள்தான் மிகவும் புனிதமான புத்தர்கள், நபிகள், ஏசு நாதர்கள்; மாநிலத்தில் இருப்பவர்கள் எல்லாம் ஊதாரிகள், ஊழல் பேர்வழிகள் என்று எண்ணிக் கொண்டு பேசுவதும் முறையல்ல.

இந்தப் பிரச்சினை எழுந்த காரணத்தால் இன்னொன் றையும் கூற விரும்புகிறேன். சென்ட்ரல் அசிஸ்டண்ட்ஸ் என்ற பெயரால் நமது ஆண்டுத் திட்டத்திற்கு 41 கோடி ரூபாய் வழங்கப்படுகிறது. 143 கோடி ரூபாய்க்கு ஒப்புதல்தான் வழங்கப்படுகிறது. மத்திய உதவி 41 கோடி என்பதில், 70 சதவிகிதம் கடனாகவும் 30 சதவிகிதம்தான் மானியமாகவும் வழங்கப்படுகிறது. அதற்கு உட்பட்டுத்தான் இப்போது தந்திருக்கின்ற 6½ கோடி ரூபாயும் இருக்கும். ''வறட்சிக்காக தனியாக ஒதுக்கப்படுவதில்லை; திட்டச் செலவில்தான் குறைத்துக் கொள்வோம்'' என்று அவர்கள் அழுத்தந் திருத்தமாகச் சொல்லிவிட்டார்கள். ஆக நடப்பாண்டில் வறட்சிக்காக இப்போது தந்திருக்கின்ற 6½ கோடியில் 70 சதவிகிதம் கடன்; 30 சதவிகிதம்தான் மானியம். இதற்குத்தான் இந்தப் பாடுபடுத்துகிறார்கள்.

இதே நேரத்தில் நாங்கள் கணக்கு காட்ட முடியாது என்று மறுக்கவில்லை. ஆனால் இவர்கள் மட்டுமே கணக்கு காட்ட வேண்டுமென்று கேட்க உரிமை படைத்தவர்களா என்றால் இல்லை. (கரவொலி). ஆனால் இந்த அரசின் மீது மாசு கற்பிக்கப் படுகிறது என்பதற்காக அந்தக் கணக்கைக் காட்டத் தயாராக இருக்கிறேன். அதை இந்த மன்றத்திலும் குறிப்பிட்டிருக்கிறேன்.

அக்கவுண்டண்ட்-ஜெனரல், ஆடிட்டர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் பார்க்கச் சொல்லலாம். அதிகாரிகளை எல்லாம் கூட்டி ஒரு மாநாடே போட்டு, என்னையும் உட்காரவைத்துக் கொண்டு, ஒரு பொறுப்புள்ள நிதியமைச்சர் செய்திருந்தால், நான் மனம் மகிழ்ந்து பாராட்டியிருப்பேன்.

பிரம்மானந்த ரெட்டியும் வந்தார்; அவர் உள்துறை அமைச்சர்; வேலூர் மருத்துவமனையில் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டது பற்றி அறிக்கை விட்டார். ''கருணாநிதியுடன் அதிகாரப்பூர்வமாக அல்ல; தோழமை முறையில் ராஜ்பவனில் பேசினேன்; வேலூர் விவகாரத்தில் ஒரு நல்ல முடிவை எடுத்திருப்பதற்காக நான் முதலமைச்சருடைய பெருந் தன்மையைப் பாராட்டுகிறேன்; இந்த முடிவிற்கு மகிழ்ச்சி தெரிவிக்கிறேன்'' என்று சொல்லியிருக்கிறார். அவர் ரொம்ப பெரிய மனிதர்; அவ்வளவு பொறுப்போடு மத்திய அமைச்சர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொன்னேன்.

மேற்பார்வை இடுவோம், கண்காணிப்போம் என்று சந்தேகக் கண்ணோட்டத்தோடு ஒரு மாநில அரசை மிக இழிவான முறையில் நடத்துவதாக இருந்தால் நாமெல்லாம் தமிழர்கள்; உணவை விட, வயிற்றைவிட மானம் பெரிது என்று மதிப்பவர்கள்; நாம் அவர்களிடம் கேட்பது பிச்சை அல்ல; நாம் கொடுத்த வரிப் பணத்திலிருந்து நமக்குத் தரவேண்டிய உரிமையைத்தான் கேட்கிறோம். இதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இனிமேல் உங்களை வறட்சி நிவாரண நிதி கேட்கப்போவதில்லை என்று சொன்னேன். சுப்பிரமணியம் நிதியமைச்சராக இருக்கிறவரை நிச்சயமாக கேட்கமாட்டேன்.

திரு. ஆலடி அருணா: தமிழ் நாட்டிலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஏற்ற பரிகாரம் தேடுவதற்கு ஏராளமான நிதி தேவைப்படுகிறது. இந்த நேரத்தில் நிதி வாங்க மாட்டேன், நிதி பெற மாட்டேன், கையேந்தி நிற்கமாட்டேன், மானம்தான் பெரிது என்று சொன்னால் இது

முதலமைச்சருடைய மானத்தைப் பற்றியது அல்ல; தமிழகத்திலே தவித்துக் கொண்டிருக்கிற மக்கள் நிலையைப் பொறுத்தது. அரசியல் குரோதத்தை மேடையிலே வைத்துக் கொள்ளலாம். அதை மக்கள் பிரச்சினையாக்க வேண்டாம். ஏற்கெனவே தவித்துக்கொண்டிருக்கிற மக்களுக்குத் தமிழகத்தின் 4½ கோடி மக்களுக்கு முதலமைச்சருடைய கருத்து, பெரிய திகைப்பாக இருக்கிறது. முதலமைச்சருடைய போக்கிலே சந்தேகம் உருவாகியிருக்கிறது. குறிப்பாக வறட்சியால் பாதிக்கப் பட்டிருக்கிற மக்களிடையே திகைப்பையும் சந்தேகத்தையும் போக்குகின்ற வகையில் ஒரு நீண்ட விவாதத்தை நடத்த இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே! மிகத் தீர்மானமான ஒரு முடிவினை முதலமைச்சராகிய நான் அறிவித்துவிட்டதாக நம்முடைய நண்பர் ஆலடி அருணா அவர்கள் இவ்வளவு தீவிரமாக முதலமைச்சர் சொல்லக் கூடாது என்று அமைதியான முறையில் கேட்டுக் கொண்டதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். ஏனென்றால் மத்திய அரசு எப்படி எல்லாம் மாநில அரசை வஞ்சிக்கிறது என்பதையும் மாற்றான் தாய் மனப்பான்மையோடு நடந்துகொள்கிறது என்பதையும் கடந்த இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு நண்பர் ஆலடி அருணா அவர்கள் பட்டியல் போட்டுக் காட்டினார்கள்.

மத்திய அரசு, ஆந்திராவுக்கு எவ்வளவு கொடுத்தது, மராட்டியத்திற்கு எவ்வளவு தந்தது, வங்கத்திற்கு வழங்கியது எவ்வளவு? ஆனால் தமிழ்நாட்டுக்கு மாத்திரம், மத்திய அரசு எவ்வளவு மாற்றன் தாய் மனப்பான்மையோடு நடந்து கொள்கிறது என்ற பட்டியலை இங்கே வெளியிட்டு ரொம்பத் தீவிரமாக இப்படிப்பட்ட ஒரு அரசியல் சட்டம் இருக்கவே கூடாது; வங்கக் கடலில் தூக்கி எறிய வேண்டுமென்று அன்றைக்கு இதே அருணா அவர்கள் சொன்னார்கள். அவர் இன்று அந்தத் தீவிரத்திலிருந்து பல படிகள் கீழே இறங்கிவந்து, முதலமைச்சர் தீவிரமாக இருக்கக்கூடாது என்கிற ஒரு விருப்பத்தை- வேண்டுகோளை என்று சொல்லமாட்டேன், நான் யார், என்னை அவர் வேண்டிக்கொள்ள, அவர்களுடைய விருப்பத்தை இங்கே தெரிவித்து இருக்கிறார்கள்.

மத்திய நிதி அமைச்சர் அவர்கள் தெருவிலே பேசியதற்கு முதலமைச்சர் தெருவிலே பதில் சொல்லிவிட்டார். பிறகு இங்கே ஏன் அதைப் பற்றி பேச வேண்டுமென்று அருணா அவர்கள் கேட்டார்கள்.

நேற்று முன்தினம் நண்பர் கோவை செழியன் அவர்கள் அது பற்றி இங்கே ஒரு பிரச்சினையை எழுப்பியபோதுதான் நான் இதற்கான பதிலை இந்த மன்றத்தில் சொல்ல வேண்டி வந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கணக்குக் கேட்கிற நேரத்தில் இப்போது இருக்கிற கணக்கு வழக்கு முறைகள் எவ்வாறு இருக்கின்றன என்பதை நாம் அனைவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

மத்திய அரசு தருகின்ற வறட்சி உதவித் தொகைக்கு அவ்வப்போது பணம் எவ்வளவு செலவழிந்தது என்பதற்கு மொத்தமாக ஒரு 'யுட்டிலிசேஷன் சர்ட்டிபிகேட்', ஒரு அறிவிப்புக் கடிதம்- அதனை மாநிலங்கள் மத்திய அரசுக்கு அனுப்புகின்றன.

அவர்கள் கொடுத்திருக்கிற பணம் எப்படிச் செல வழிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான யுட்டிலிசேஷன் சர்ட்டிபி கேட்டில், மாநிலங்கள் மத்திய அரசுக்கு தெரிவிக்கின்றன. ஆனால் இதிலே தணிக்கை என்பது வேறு விஷயம்.

தணிக்கையைப் பொறுத்தமட்டில், அக்கவுண்டன்ட் ஜெனரல் வறட்சி செலவுகள் உட்பட மாநிலங்களிலே ஏற்படு கின்ற எல்லாச் செலவுகளையும் தணிக்கை செய்கிறார். வறட்சி செலவு மாத்திரமல்ல; மாநிலத்தில் இருக்கிற எல்லாச் செலவு களையும்- வறட்சி செலவு உட்பட- அக்கவுண்டன்ட் ஜெனரல் தணிக்கை செய்கிறார்.

அப்படித் தணிக்கை செய்து அவர் தருகிற அறிக்கை யினைச் சட்டசபை பொதுக்கணக்குக் குழு ஆராய்கிறது; இந்தச் சட்டசபையும் ஆராயக் கடமைப்பட்டிருக்கிறது; அதன் மீது கருத்துக்கள் கூறுகின்ற உரிமையைப் படைத்திருக்கிறது. அக்கவுண்டன்ட்- ஜெனரலின் அறிக்கை டில்லியிலுள்ள ஆடிட்டர் ஜெனரல் ஆப் இந்தியா அவர்களுக்கு அனுப்பப் படுகிறது.

இதுவே நம்முடைய அரசியல் சட்டத்தில் கணக்கு முறைகளைத் தணிக்கை செய்வதற்கு, இப்போது வகுக்கப்பட்டிருக்கிற முறைகள் ஆகும். இந்த முறையைத்தான் நாமும் மற்ற மாநிலங்களும் கடைப்பிடித்து வருகிறோம்.

இப்போது உள்ளதுபோல ஒவ்வொரு தடவையும் வறட்சி நிவாரண நிதியைப் பெற்றுக்கொண்டு, அடுத்த தவணையாக நிதி கேட்பதற்கு முன்பு, மாநில அரசு வழக்கமாக அனுப்புகிற யுட்டிலிசேஷன் சர்டிபிகேட்டினை- அந்தக் கடிதத்தை மத்திய அரசுக்கு அனுப்ப நமக்கு எந்தவிதமான தடையும் இல்லை. அதுதான் இன்றைக்கு அரசியல் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள, இந்தக் கணக்கு வழக்குகள் முறையும் கூட. அதிலே நமக்கு ஆட்சேபம் கிடையாது. கொடுக்கப்பட்ட தொகை எப்படிச் செலவழிந்துள்ளது என்ற கணக்கைப் பார்த்துத்தான் மேற்கொண்டு தொகை தரமுடியும் என்று சுப்பிரமணியம் பேசியிருக்கிறார்.

கொடுக்கப்பட்ட ஏழு கோடி ரூபாய் அல்லது ஆறரைக் கோடி ரூபாய் எப்படிச் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று கணக்குப்பார்த்துப் பிறகுதான் மேற்கொண்டு தொகை தரமுடியும் என்று அவர் கூறியிருக்கிறார். இப்போது தரப்பட்ட தொகைக்கு அவருடைய கூற்றின்படி, கணக்குத் தணிக்கை எல்லாம் பார்க்கப்பட்டு, அந்தத் தணிக்கை எல்லாம் முடிந்து, அறிக்கை எல்லாம் வந்த பிறகுதான், மறு உதவி தரமுடியும் என்றால், தணிக்கை முடிய எத்தனை மாதம் ஆகுமோ, எத்தனை ஆண்டுகள் ஆகுமோ, சில நேரங்களில் இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டுகள் கூட தணிக்கை முடிய ஆகி விடுகிறது. ஆகவே இந்த ஏழு கோடி ரூபாய்க்கான கணக்கு வழக்குகள் எல்லாம் தணிக்கை செய்து, சரியா தவறா என்று தணிக்கையை முடித்துவிட்டு, மறுபடியும் கொடுப்பதற்கு அவர் கஜானாவில் கை வைக்கிற நேரத்திற்குள் தமிழ்நாட்டில் வறட்சி எல்லாம் முடிந்து விடும். இதை நாம் மனதில் எண்ணிப் பார்க்க மறுத்து விடக்கூடாது. இந்த விவரங்கள் எல்லாம் இந்த மாநிலத்தில் நிதி அமைச்சராக இருந்து, இப்போது மத்தியில் நிதி அமைச்சராக இருப்பவருக்குத் தெரியாதா என்றால், தெரியும். இவ்வளவு தெரிந்து வைத்துக்கொண்டிருந்த ஒரு மத்திய நிதி அமைச்சர்-

மாநிலத்தில் நிதி அமைச்சர் பொறுப்பேற்றவர்- வேண்டு மென்றே இந்த அரசின் மீது ஒரு மாசு கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகின்ற நேரத்தில், ''நான் மேற்பார்வை இடுவேன்; இப்போது கொடுக்கப் பட்டிருக்கிற பணத்திற்கான கணக்கு எல்லாம் பார்த்து விட்டுத்தான் மேற்கொண்டு தருவேன்'' என்றெல்லாம் சொல்வது, அவருக்கு இருக்கின்ற நிதி அமைச்சர் என்கின்ற பொறுப்பை, ஒரு அரசின் மீது களங்கம் சுமத்த வேண்டுமென்ற முறையில், மாசு கற்பிக்க வேண்டுமென்று, துஷ்பிரயோகம் செய்கிறாரோ, என்றுதான் நாம் எண்ண வேண்டியிருக்கிறது.

உணவுப் பிரச்சினையில் அரசியல் கூடாது என்று மாண்புமிகு மத்திய அமைச்சர் ஜகஜீவன்ராம் அவர்கள் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். வறட்சிப் பணி களைப் பார்வையிட வந்த மாண்புமிகு அமைச்சர் ஷிண்டே அவர்தான் இந்த வறட்சி நிவாரணப் பிரச்சினையில் அரசியலே கூடாது என்று தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஏன்? வேலூர் மருத்துவமனை விவகாரத்தில்கூட அரசி யல் கூடாது என்கின்ற வகையில் கவனிக்கப்பட வேண்டு மென்று மாண்புமிகு அமைச்சர் பிரம்மானந்த ரெட்டி அவர்கள் தமது கருத்தை மிகப் பெருந்தன்மையோடு வெளியிட்டார்கள்.

ஆனால், திரு. சி.எஸ். மத்திய நிதி அமைச்சர் என்ற முறையில் அவர் வெளியிட்டிருக்கிற இந்தக்கருத்தின் மீதுதான் நாம் விமரிசனம் செய்கிறோமே அல்லாமல், சி.எஸ். அவர்களுக்கும் நமக்கும் தனிப்பட்ட எந்தவிதமான விரோ தமோ கிடையாது. அவரைத் தன்னிலைப்படுத்தி வெறுப்பான வார்த்தைகளை அவர் மீது சொல்ல வேண்டுமென்ற எண்ணத் தோடு இந்தப் பிரச்சினையை அணுகவில்லை எனபதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் ராஜ்ய சபாவில், ''நான் எல்லா மாநிலங் களுக்கும் சேர்த்துத்தான் சொன்னேன்'' என்பதாகக் கூறியதாக ஒரு கருத்தை ஆலடி அருணா அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். தமிழ்நாட்டு மேடையில் சொன்னதை எல்லா

மாநிலங்களிலும் போய்ச் சொன்னாரா என்றால் இல்லை. இந்த மாநிலத்தில்தான், பொதுக்கூட்டம் போட்டுச் சொல்லி இருக் கிறார். எல்லா மாநிலங்களிலும் கணக்கு வழக்கு கேட்கட்டும். இப்போது அரசியல் சட்டம் வகுத்திருக்கும் கணக்கு முறைப்படி சொல்லட்டும். நாம் கேட்கின்ற மாநில சுயாட்சி கூட, தமிழ் நாட்டிற்கு மாத்திரமல்ல, எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்துத் தான் கேட்கிறோம். இதைபோலவேதான், மாநில உரிமைகளை எல்லா மாநிலங்களுக்கும்தான் கேட்கிறோம். ஆகவே, இதில்கூட தமிழ்நாட்டு முதலமைச்சர் என்கின்ற முறையில் எல்லா மாநிலங்கள் சார்பிலே கூட நான் வாதாடக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், எல்லா மாநிலங் களிலும் ஒன்றுதான் இந்த மாநிலம். அரசியல் சட்டத்திலே எந்த நடைமுறைக் கணக்குவழக்குகளைப் பொறுத்து பின்பற்ற வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதோ அதன்படி நாம் நடந்து வரும்போது, இப்படிப் பேசுவதானது நம்மை மிகுந்த அடிமைகளாக நடத்துகின்ற ஒரு போக்கினை, மத்திய அரசின் நிதி அமைச்சர் பொறுப்பேற்றிருக்கின்ற திரு. சுப்பிரமணியம் கொண்டிருக்கிறாரோ என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. அந்த மனப்போக்கைத்தான் நாம் வேதனையோடு கண்டிக்கிறோம் என்பதையும் இந்த வகையில் எடுத்துக்கூறக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

அவர்கள் குறிப்பிட்டிருக்கிற சர்வ கட்சியைச்சேர்ந்த தலைவர்கள் எல்லாம் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள் என்பதி லிருந்து, இதிலே அச்சமோ, ஐயமோ யாருக்கும் ஏற்படத் தேவையில்லை.

வரும் ஆண்டில் மத்திய அரசிடம் வறட்சி நிவாரணத் திற்காக நாம் கேட்டுள்ள பணத்தை, நமது நிதிநிலை அறிக்கை யில் வருவாய் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை என்பதை, யாரும் மறந்துவிடக் கூடாது. ஆனால், வறட்சிப் பணி செலவுக் கான மொத்தம் ரூபாய் 55 கோடி செலவு ஆகும் என்பதையும் சேர்த்துத்தான் நிதிநிலை அறிக்கையில் கணக்கிட்டு இருக் கிறோம் என்பது, நாம் கொடுத்துள்ள விவரத்தில் இருக்கின்றது. ஆனால், மத்திய அரசிடமிருந்து ரூபாய் 20 கோடி என்ற

அளவில் வருவாய் வரும் என்று எடுத்துக் கொண்டு வரவு செலவுத் திட்டம் வைக்கப்படவில்லை. வறட்சிப் பணிச் செலவுக்காக மொத்தம் ரூபாய் 55 கோடி செலவினைக் கணக்கில் எடுத்துக் கொண்டு வரவு செலவுத் திட்டம் இருந்தது.

அதன்படிதான் ரூபாய் 26 கோடி நமக்குத் துண்டு விழும் என்று காட்டப்பட்டிருக்கிறது. இந்த 26 கோடி ரூபாய் துண்டு விழுவதைச் சரிக்கட்டத்தான் 6 கோடிக்கு வரிகளைப் போட்டிருக்கிறோம். மீதம் உள்ள 20 கோடி ரூபாய் துண்டு திட்டங்களுக்காக மத்திய அரசு மேலும் கூடுதலாக, இவ்வளவு அளிக்க வேண்டுமென்று, மத்திய அரசிடம் நாம் வற்புறுத்தி இருக்கிறோம். மத்திய அரசு மாநிலங்களிலிருந்து வசூலிக்கின்ற வரி- பொதுவாக விதிக்கப்பட்டிருக்கிற வரியில் இருந்து, நமக்கு மேலும் அதிகமாகப் பங்கு கிடைக்கும் என்று எதிர் பார்க்கிறோம். ஆகவே, இவைகளையெல்லாம் வைத்து இந்த ரூபாய் 26 கோடி துண்டு விழுவதைச் சரிக்கட்டவும், மேலும் சிக்கன முறைகள், சேமிப்பு மூலம் சரிக்கட்ட முடியும் என்ற நம்பிக்கையும், இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை, நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படிச் சொல்கின்ற காரணத்தால் இந்த ரூபாய் 55 கோடியில் குறையும் என்றோ, அல்லது இதன் காரணமாகத் திட்டச் செலவுகளிலிருந்தும் திட்டத்தில் சேராத செலவுகளில் இருந்தும் குறைக்கப்பட்டு வறட்சிப் பணிகளுக்குச் செலவழிக்கப்படுமா என்ற சந்தேகம் கூட யாருக்கும் எழத் தேவையில்லை. திட்டத்தில் இருந்தும் திட்டத்திற்கு அப்பாற்பட்டும் ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் 20 கோடி கிராம வளர்ச்சிப் பணிகளுக்கும், வேலைவாய்ப்பு அளிப்பதற்கும் பயன்படும் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை குறையாது என்கிற மனப்பூர்வமான உறுதியை, இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (கரவொலி) இப்படிச் செய்தாலும்கூட, ஓரளவிற்கு நாம் மத்திய சர்க்காரிடம் வறட்சி நிவாரணம் கேட்டோம் என்றாலும்கூட, ஓரளவிற்கு வறட்சி நிதி தேவைப்படுகிறது, அவசியம் என்பதை நான் மறுக்கவில்லை. அதை நான் தமிழ்நாட்டுப் பொதுமக்களிடமிருந்தும் எதிர்பார்க் கிறேன். வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, வறட்சியால்

பாதிக்கப்படாத மக்கள் உதவியைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு நண்பர் அருணா அவர்கள் தந்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் எனது வேண்டுகோளை இந்த மன்றத்திற்கும், மன்றத்தின் சார்பாகத் தமிழ்நாட்டு மக்களுக்கும் விடுக்க விரும்புகின்றேன்.

''வறட்சி நிவாரண நிதி அமைப்பு'' என்ற ஒரு அமைப்பு பைனான்ஸ் டிபார்ட்மெண்டில்- நிதி இலாகாவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. அதற்கு அனைவரும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர்கள் ஒரு மாதச் சம்பளம்- மாதா மாதம் அல்ல- ஒரு மாதச் சம்பளத்தை வறட்சி நிவாரண நிதிக்காகத் தர வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய ஒரு மாதச் சம்பளத்தைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய ஒரு மாதச் சம்பளத்தை (கரவொலி)- ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிற அருணா உட்பட- தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சம்பளம் என்றால், ரூபாய் 200 அல்ல, அதிகப்படுத்தித் தந்திருக்கிற ரூபாய் 450, அதைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலவை உறுப்பினர்களும் தர வேண்டுமென்றும், இந்த அவையிலிருந்து நான் வேண்டுகோள் விடுப்பதைத் தவறாகக் கருதக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்க அலுவலாளர்களுக்கு இந்த அரசு எவ்வளவோ செய்திருக்கிறது. அதற்குப் பிரதி உபகாரமாக அல்ல, இந்த நாடும், நாட்டு மக்கள் கஷ்டப்படுகின்ற நேரம், அவர்கள், அரசாங்க அலுவலாளர்கள் ஆசிரியர்கள் ஒரு நாள் ஊதியத்தை, ஒரு மாதம் அல்ல, ஒரு நாள் ஊதியத்தை அவர்கள்வழங்க வேண்டுமென்று, அவர்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன்

தொழிலாளர்கள்பால் இந்த அரசு எவ்வளவு அக்கறை உடையது என்பதைத் தொழிலாளர்கள் உணருவர். ஆகவே, ஆலைத் தொழிலாளர்கள் தங்களுடைய ஒரு நாள் ஊதியத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் நிறுவனத்தினர், அவர்களும் இந்த நல்ல காரியத்திற்காக நன்கொடையைத் தருவார்கள் என்று நம்புகிறேன். கொடுப்பதாகச் சொன்னால் மாத்திரம் போதாது. கொடுக்கவும் வேண்டுமென்று தனியார் நிறுவனங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே 9 ஆயிரம் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. கார்ப்பரேஷன்களையும் சேர்த்து, தனியார் பேருந்துகளையும் சேர்த்து, பேருந்து ஒன்றிற்கு ஆயிரம் ரூபாய் என்று தருவார்களானால்; அதுவே பெரும் தொகையாக அமையும். ஆகவே, அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

அந்த வகையில் இந்த வறட்சி நிவாரண நிதிக்காக அனைவரும் பண உதவியைச் செய்ய வேண்டுமென்று இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பதில் கூறும் வகையில் வேண்டுகோளாக விடுத்து, நண்பர் ஆலடி அருணா அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை; இந்த என்னுடைய விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தலைவரவர்களே! தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ.ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே! மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, ‘‘கணக்குப் பார்த்து விட்டுத் தான் கொடுப்பேன்’’ என்று மத்திய அமைச்சர் திரு. சி.எஸ். அவர்கள் பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டதைக் கூறினார்கள். கணக்கைப் பார்ப்பது என்றால் வரவு செலவைப் பார்த்துக் கணக்குச் சரியா இல்லையா என்று பார்ப்பது அல்ல. அதற்கு மூன்று ஆண்டுகள் ஆகுமென்றெல்லாம் கூறினார்கள். அது அப்படி அல்ல. திரு. சி.எஸ். அவர்கள் அப்படிக் கூறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: தலைவரவர்களே! அப்படி அல்ல அவர் சொன்னது, இந்த ஏழு கோடி ரூபாய்க்கும் கணக்குப் பார்த்து விட்டுத்தான், மேற்கொண்டு தொகை

தரப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். அது எப்படி சாத்தியமாகும்?

திரு.ஏ.ஆர்.மாரிமுத்து: தலைவரவர்களே! கணக்குப் பார்ப்பது என்றால் வரவு செலவைப் பார்ப்பது அல்ல. பஞ்சாயத்து, முனிசிபாலிட்டி பகுதிகளில் செலவு செய்யப் பட்டிருக்கிறது என்று மத்திய அரசுக்கு நிதி அறிக்கை போகிறது. அந்தப் பகுதியில் பணம் முறையாகச் செலவழிக்கப் பட்டிருக்கிறதா என்று மேலெழுந்தவாரியாகப் பார்ப்பதே தவிர வவுச்சர் முதற் கொண்டு பார்ப்பது என்பதல்ல.

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: அதைத்தான் சொல்கிறேன் தலைவரவர்களே! அரசியல் ரீதியில் ஒரு அரசாங்கத்தைக் குற்றஞ் சாட்டுவதற்குத் தேர்தல் நேரத்தில் அரசியல் லாபம் பெறுவதற்குச் கட்சிகள் முயற்சி செய்வதை நான் தவறு என்று சொல்லமாட்டேன். மத்திய அமைச்சர் சி.எஸ். அல்லாமல் வேறொரு அமைச்சரோ, அந்தக் கட்சியைச் சேர்ந்த வேறு யாராவது ஒருவரோ மேடையில் பேசி இருப்பாரேயானால், இந்த அளவுக்கு அதைக் கவலையோடு அணுகியிருக்க மாட்டேன்; பெரிதுபடுத்தி இருக்க மாட்டேன். இதை நான் கூறுகிற போது, ''தவறு நடக்கத்தான் செய்யும்,நீ யார் கேட்பதற்கு?'' என்று ஆணவத்தோடு கூறவில்லை. மற்றவர்களைப் போன்று அல்லாமல், பொறுப்புள்ள மத்திய நிதி அமைச்சர் என்னை அழைத்து, தொடர்புள்ள அமைச்சரை அழைத்து, அதிகாரிகளை அழைத்து, தலைமைச் செயலகத்தில் ஒரு மாநாட்டை நடத்தி, ''ஏழு கோடி தந்திருக்கிறோம். என்ன என்ன காரியங்களைக் கவனிக்க வேண்டும். இன்னும் சீராகச் செய்ய வேண்டும்; இன்னும் வறட்சி நிவாரணப் பணியினைத் துரிதப்படுத்த வேண்டும் என்று அறிவுரை கூறியிருப்பாரே யானால், நிச்சயமாக மத்திய நிதி அமைச்சருடைய அறிவுரையை எடுத்துக்கொள்ளத் தயாராய் இருக்கிறோம். அதைவிட்டுவிட்டு, இதை ஒரு அரசியலாக்கி, ஒரு பொதுக் கூட்டத்தில் அரசாங்கத்தின் மீது கருத்தைத் தெரிவித்தார்களே என்பதுதான், எங்களுக்கு ஏற்பட்டுள்ள ஆதங்கம்.

திரு.ஏ.ஆர்.மாரிமுத்து: மத்திய நிதி அமைச்சர் தாம் குறிப் பிட்ட கருத்தைப் பற்றிப் பாராளுமன்றத்தில் தெளிவுபடுத்திச் சொல்லியிருக்கிறார். அவர் அதைச் சொல்லிய பிறகும், ஏன் முதலமைச்சர் தான் சொன்னதைத் திருத்திக் கொள்ள மறுக்கிறார்?

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: எந்த மாநிலத்தில் இப்போது அரசியல் சட்டத்தில் வகுத்துள்ள முறைகளுக்கேற்ப கணக்கு வழக்குகள் சம்பந்தமான முறைகள் இருக்கின்றன. அந்த வகையும் கொடுக்கிற பணத்திற்கு யுடிலிசேஷன் சர்டிபிகேட் கொடுத்தவுடன் பாக்கி பணத்தையும் கொடுப்பது வழக்கம். அதற்குப் பிறகுதான் கணக்கு வழக்குகளைப் பார்ப்பார்கள். அதற்கு மாறாக, 7 கோடி கொடுத்தேனே கணக்கைக் கொடு, அதற்குப் பிறகுதான் பாக்கியைத் தருவேன் என்று சொல்லுகிறார்கள்.

திரு.ஏ.ஆர்.மாரிமுத்து: நிதி அமைச்சர் சுப்பிரமணியம் குறிப்பிட்டது, யுடிலிசேஷன் சர்டிபிகேட் தான் என்று ஏன் எடுத்துக் கொள்ளக்கடாது என்று கேட்கிறேன்.

மாண்புமிகு. கலைஞர் மு.கருணாநிதி: திரு.ஏ.ஆர்.மாரி முத்து கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, சுப்பிரமணியம் வெளிப்படையாகத் தாம் குறிப்பிட்டது, யுடிலிசேஷன் சர்டிபிகேட்தான் என்று சொன்னார்களானால், அதற்குப் பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம்.

Dr.H.V.Hande: Sir, there is another problem and I do not know how the Hon. Chief Minister is going to solve it. We are preparing the Budget on a particular basis and we are going to get Rs.7 crores. In this particular context, it is better that we recast the whole Budget in the light of what the Hon. Chief Minister has stated. I am not supporting the Hon. Thiru Subramaniam who has adopted a vindictive attitude against our state and we are not here to support him.

But in the larger interest of the state, I am making a suggestion. Let us forget personal politics and I would make a

fervant and impassioned appeal to the Hon. Chief Minister to forget all these things we should forget and forgive, to consider how to carry on the Budget. We are here to give the money the Hon. Chief Minister wants.

ஸ்பீக்கரைக் கேட்கவில்லை என்றாலும் அவரும் கொடுப்பார்.

In the larger interest of the state, I would appeal to him to recast the Budget in the light of what he has stated now.....

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: இதனால் பட்ஜெட்டில் எந்த விதமான மாறுதலும் வராது. வறட்சி நிவாரணத்திற்காக மத்திய அரசிடம் நாம் கேட்டுள்ளதை, நமது வரவுக் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. வறட்சி நிவாரணப் பணிக்கான 55 கோடி ரூபாய் நமது வரவுசெலவுத் திட்டத்திலேயே சேர்க்கப்பட்டிருக்கிறது. இதன்படிதான் நமக்கு 26 கோடி துண்டு விழுகிறது. இந்த 26 கோடியைச் சரிசெய்ய என்ன வழியிருக்கிறது என்பதுதான் பார்க்கப்பட வேண்டும். இதில் பர்சனல் பாலிடிக்ஸ் வேண்டாம் என்று சொன்னார்கள். இப்போது, அங்கே நெருங்கியிருக்கும் திரு.ஹாண்டே அவர்கள் சுப்பிரமணியம் அவர்களிடம் இந்த அறிவுரையைக் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு.ஆலடி அருணா: தலைவர் அவர்களே! மத்திய நிதி அமைச்சர் அவர்கள், ஏற்கெனவே தாம் தமிழக அரசுக்கு மட்டும் சொல்லவில்லை; எல்லா மாநிலங்களுக்கும் பொதுவாகத்தான் சொன்னேன் என்று சொன்ன பிறகும், நமது முதலமைச்சர் அவர்கள், தம்முடைய தீவிரமான முடிவில் இருப்பது நாட்டுக்கும் நல்லதல்ல, வறட்சிப் பணிக்கும் நல்லது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.கோவைச் செழியன்: திரு. சுப்பிரமணியம் அவர்கள் நிதி அமைச்சராக இருக்கிற காரணத்தினால், அவர் கேட்டது மனதைப் புண்படுத்திவிட்டது என்று சொன்னார்கள். காங்கிரஸ் கட்சித் தலைவராக அவர் தெருக்கூட்டத்தில்தான் பேசினார். அதற்குத் தி.மு.க. தலைவர் ஒரு தெருப் பொதுக்கூட்டத்தில்

பதில் அளித்தவுடன் பிரச்சினை தீர்ந்து விட்டது. ஆனால் இந்த மன்றத்திற்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரு. சுப்பிரமணியம் நிதி அமைச்சராக இருக்கிற வரைக்கும், நான் எந்தவிதமான வறட்சி நிவாரண நிதியும் கேட்கமாட்டேன் என்று சொல்கிறார். மத்திய அரசிடம் இருந்து நமக்குப் பல கிராண்டுகள் வருகிறது. இதுவரை அவற்றைப் பெற்றுக் கொண்டு வந்திருக்கிறோம். இந்த மாதிரி சட்டமன்றத்திலே இவர் எழுந்து, நமக்கு வரவேண்டிய நியாயமாகக் கொடுக்க வேண்டிய பங்கைத் திரு. சுப்பிரமணியம் இருக்கிற காரணத்தினால் நாங்கள் வாங்கமாட்டோம் என்று சொல்வது, இந்த மன்றத்தின் உரிமையைப் பாதிக்கிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: வறட்சி நிதியைப் பொறுத்துத்தான் அவர் சொன்னார். அதைப் பொறுத்துத்தான் நானும் பதில் சொல்லியிருக்கிறேன். நாம் எந்த உரிமையையும் விட்டுக்கொடுப்பதாக இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

விதி 81-இன் கீழ் அறிக்கை

உரை : 18 **நாள் : 01.04.1978**

கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவரவர்களே, நான் வரும்போது தங்களிடத்தில், சட்டமன்ற விதி 81-ன்படி ஒரு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டு அனுமதியைப் பெற்றிருக்கிறேன். அதற்கிடையிலே நண்பர் இராதா அவர்கள் என்மீது ஓர் உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்து, அதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று நீண்ட உரை ஒன்றினை ஆற்றியிருக்கிறார்கள். நான் இந்த உரிமை மீறல் பிரச்னை குறித்து பதில் அளித்துவிட்டு, அதற்குப் பிறகு 81-வது விதியின்படி என்னுடைய விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

நான் அன்றைக்கு எடுத்துச்சொன்ன விவகாரங்கள் சரியா அல்லவா, எந்த ஆதாரத்தோடு சொல்லப்பட்டன என்பதை அடுத்து நீங்கள் வாய்ப்பளித்து இருக்கின்ற 81-வது விதியின்கீழ் அளிக்கின்ற விளக்கத்தில் விளக்க இருக்கிறேன். அதற்கிடையில் இந்த உரிமை மீறல் பிரச்னையைப் பற்றி தங்களுடைய கவனத்திற்கும், ஆய்விற்கும் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

சட்டமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் தங்களுக்குத் தெரிந்த தகவல்களை அவையிலே எடுத்து வைப்பதும், அந்தத் தகவல்கள் சரியானவைகளா, அல்லவா என்பதை அமைச்சர்கள் விளக்குவதும் சட்டமன்றத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற ஒன்றாக இருக்கிறது. உதாரணமாக, ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் ஒரு தரப்பிலே யிருந்து, ஒருவர் போலீஸ் லாக்கப்பில் இறந்து விடுகிறார் என்றால் லாக்கப்பில் அடித்துக் கொல்லப்பட்டு அவர் செத்து விட்டார் என்று ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து எதிர்க்கட்சியிலே உள்ள உறுப்பினர்கள் பேசுவது இந்த அவையிலே நடைபெற்றிருக்கின்ற நிகழ்ச்சிகள், பிறகு தொடர்புடைய

அமைச்சர் எழுந்து, அப்படி லாக்கப்பில் அடித்துக் கொல்லப்படவில்லை, தூக்குமாட்டிக்கொண்டு இறந்தார் என்ற தகவலைச் சொன்னதும் உடனடியாக ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் அப்படிச் சொன்னார் என்று அவர்மீது இதுவரையில் உரிமைப்பிரச்சினை கொண்டு வந்ததாக இந்த அவையின் வரலாற்றில் இடம் பெற்று இருப்பதாகத் தெரியவில்லை.

ஆகவே, தகவல்களை வைத்து உறுப்பினர்கள் பேசுவதும், அதற்கு அமைச்சர்கள் விளக்கம் அளிப்பதும் வாடிக்கையாக நடைபெறும் ஒன்று. தகவல்கள் தரப்பட்டன, அமைச்சர் தன்னுடைய விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். தகவலைத் தரும்பொழுதே நான் மிகக் கவனமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன், நடைபெற்றிருக்கின்ற முறைகேடுகளைப் பற்றித் தகவல் வந்திருக்கின்ற, இவைகளை முதலமைச்சரவர்கள், அமைச்சர்கள் ஆராய்ந்து பார்த்து தக்க நடவடிக்கை எடுத்து திருத்தவேண்டுமென்பதற்காகத்தான் இவைகளை இங்கே முன் வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.

இப்படி உறுப்பினர்கள் சொல்கின்ற எந்தப் பிரச்சினையும், அமைச்சர்களால் மறுக்கப்பட்டுவிடுமானால் உடனே அந்த உறுப்பினர் மீது உரிமைப்பிரச்னை கொண்டு வரப்பட வேண்டுமென்ற நிலைமை இங்கே அனுமதிக்கப்படுமானால் எந்த உறுப்பினரும் துணிந்து தாங்கள் எந்தக் கருத்துக்களையும் சொல்ல முன் வரமாட்டார்கள். எனவே, அந்த வகையில் ஆராய்ந்து தாங்கள் முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜனதா கட்சி சார்பிலே டாக்டர் நந்தகோபாலகிருஷ்ணன், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் லட்சுமி காந்தன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாகராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் புதுப்பேட்டை பசவலிங்கம், மற்ற அதிகாரிகள் அந்த மக்கள் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருடைய கையெழுத்து இடப்பட்டு வழங்கிய, 'எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் - புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள்' - என்ற தலைப்பில் 'நாமினேஷன்' வேலைகளைப் பற்றிய அறிக்கை, பஞ்சாயத்து யூனியன் பொறியாளரால் படிக்கப்பட்டு குழு

உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினருக்கு வழங்கப்பட்ட அறிக்கை என்னிடத்திலே இருக்கிறது. ஜனதா கட்சி உறுப்பினர் நந்தகோபாலகிருஷ்ணனுக்கு வழங்கப்பட்ட அறிக்கை என்னிடத்திலே இருக்கிறது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பருக்கு வழங்கப்பட்ட அறிக்கையும் என்னிடத்திலேதானிருக்கிறது. (மூன்று புத்தகங்களைக் காண்பித்தார்). இந்த மூன்று அறிக்கைகளும் என்னிடத்திலே இருக்கின்றன. இது அங்கே படித்துக்காட்டப்பட்டது.

படிக்கிறபொழுது அழகப்ப சமுத்திரம் டு குள்ளஞ்சாவடி, காட்டுக் கூடலூர் வரையில் உள்ள சாலை - நான் அன்றைக்குக் குறிப்பிட்டவாறு - அந்த அறிக்கையில் இருப்பது - பாலசுப்பிரமணியம், மணப்பத்தூர் என்பவருக்கே நான்காகப் பிரிக்கப்பட்டு நாமினேஷனில் தரப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதைத்தான் நான் படித்தேன். அப்படி ஒருவருக்கே நான்காகப் பிரித்தளிப்பதைப் பற்றி அந்த மக்கள் குழு கூட்டத்திலேயே ஜனதா கட்சி சார்பிலே நந்தகோபாலகிருஷ்ணன் மறுத்திருக்கிறார்.

அன்றைக்கு ரூ. 1,06,000 ஆக அறிவிக்கப்பட்ட, நான்காகப் பிரித்து அளிக்கப்பட்ட வேலை, அமைச்சர் படித்த அறிக்கையில் ரூ. 1,43,000 ஆக மாறியிருக்கிறது. இந்த மாற்றம் எதுவும் மீண்டும் அந்தக் குழுவினருக்கு அறிவிக்கப்படவே யில்லை. குழு உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்ட தகவலைத் தான் நாங்கள் சொல்ல முடியும். அதைத்தான் நான் ஆதாரமாகக் காட்டினேன். அதைத்தான் தங்களிடம் ஆதாரமாகக் காட்டிவிட்டுத்தான் இங்கே படித்தேன்.

அடுத்து, இன்னொரு வேலை, நான் குறிப்பிட்டது, அழகப்ப சமுத்திரம் ரோடு பிராஞ்சில் - பூவராகமூர்த்தி, விசுவநாதன் பார்ட்டிக்கு ஒரு வேலையை நான்காகப் பிரித்துத் தரப்படுவதாகவும் கமிஷனர் அறிக்கையிலே இருக்கிறது. அதன் மொத்த மதிப்பு ரூ. 1,37,500. ஆனால், நேற்று அமைச்சர் தந்த அறிக்கையில் அது ரூ. 1,05,000 ஆகக் குறைந்துள்ளது. நான் தந்த ஆதாரத்தில் கமிஷனர் கையெழுத்துப் போட்டுத் தந்திருக்கிறார்.

மூன்றாவது வேலை - சாத்திப்பட்டு ரோடு டு புதுப்பாளையம் என்பதில், கமிஷனருடைய அறிக்கையில் ஏழாகப் பிரிக்கப்பட்டு, ஒருவருக்கே ரூ. 2,50,000-க்குத் தரப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வேலையை, கமிஷனருடைய அறிக்கையில் வேணுகோபால் அண்ட் பழனி என்ற பார்ட்டிக்கே தந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால் அமைச்சர் படித்த அறிக்கையில் 1,95,000 ரூபாய்க்கு ஆறு வேலையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஏழாகப் பிரிக்கப்பட்டு பழனி, வேணுகோபால் என்பவருக்குத் தரப்பட்டதாகக் கமிஷனர் அறிக்கையில் சொல்லப்பட்ட வேலை ஆறாகப் பிரிக்கப்பட்டிருப்பதாக நேற்றையதினம் அறிவிக்கப் பட்டது. கமிஷனர் அறிக்கையின்படி அதே வேணுகோபால் - பழனி பார்ட்டிக்கு கே. கே, ரோடு - சொரத்தூர் வேலை என்ற வேறு வேலை 48,500 ரூபாய்க்குக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் நேற்று அளித்த அறிக்கையில் மணப்பத்தூர் பாலசுப்பிரமணியத்திற்கு ஒரு பணியும் தரப்படவில்லை என்று கூறியுள்ளார். நான் கமிஷனர் அறிக்கையில் உள்ளதைத்தான் எடுத்துக் காட்டினேன். ஒரு பணியும் தரப்படவில்லை என்றார் அமைச்சர்.

ஆனால் பாலசுப்பிரமணியத்திற்கு கொடுக்கப்பட்ட 'ஓர்க் ஆர்டரை' நான் கையிலே வைத்திருக்கிறேன். அதை அப்படியே படிக்கிறேன்.

(ந.க.எண். 10276/77-24 நாள் 28-12-77)

பொருள் : அரசு வேலை, அவசர புயல் வெள்ளப் பணி நிவாரண வேலை - பண்ருட்டி பஞ்சாயத்து ஒன்றியம் - சேமக்கோட்டை - மணப்புத்தூர் - பொன்னங்குப்பம் சாலை - கி. மீ. 0/0 - 0/8 விருப்ப ஒப்பந்தம் - ஒப்புதல் குறித்து :

பார்வை : உதவி கோட்டப் பொறியாளர், கடலூர், கடித எண். 4052/76 நாள் 25-12-77.

(இதன் வாசகம்)

உதவி கோட்டப் பொறியாளர், கடலூர் பார்வையில் குறிக்கப்பட்டுள்ள கடிதத்தில் சிபாரிசு செய்துள்ளபடி திரு. வி. பாலசுப்பிரமணியம் என்ற ஒப்பந்தக்காரரின் விருப்ப ஒப்பந்தம் மதிப்பீடு வேலைக்கு அனுமதிக்கப்படுகிறது.

(ஓ.ம்.) வேதாசலம்,
கோட்டப்பொறியாளர், கடலூர்.

இது 11-2-1978-ல் கண்காணிப்பாளர் கையெழுத்திடப் பட்டது. அந்த 'ஒர்க் ஆர்டரையும்' நான் வைத்திருக்கிறேன். அதைத் தவிர வேணு என்ற நபருக்கு எந்தப் பணியும் தரப்படவில்லை என்று அமைச்சர் நேற்று அவையிலே அளித்த அறிக்கையிலே குறிப்பிட்டார்.

அந்த அறிக்கையிலேயே கே. எஸ். வேணுகோபால் கீழக்குப்பம் என்பவருக்கு ஒரு வேலை கொடுக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார். நான் பேசும்போது கூட வேணு என்று குறிப்பிடவில்லை. வேணுகோபால் என்றுதான் குறிப்பிட்டி ருக்கிறேன். எனவே இந்த வேணு, வேணுகோபால் என்பது இருவர் அல்ல, இருவரும் ஒருவர்தான். நந்தகோபால் மக்கள் குழுக் கூட்டத்தில் இந்தக் கேள்விகளை எழுப்பிய பிறகு இந்த வேலைகள் தனித்தனிப் பணிகளாக ஒருவேளை பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கலாம். என்ன நடந்தது என்று அதிலே ஆராய்ந்து செல்ல நான் விரும்பவில்லை. அதை ஆராய வேண்டும் என்பதற்காகவே அமைச்சரிடம் அந்தப் பொறுப்பை அன்று எதிர்க்கட்சி சார்பாகத் தந்தேன். அப்படி இந்த வேலைகள் மாற்றப்பட்டிருந்தால்கூட – மக்கள் குழு என்று ஒன்று அமைந்து அந்தக் குழுவின் கூட்டத்தில் படித்துக் காட்டப்பட்ட அறிக்கை மீண்டும் திருத்தப்பட்டிருக்கிறது என்றால் மீண்டும் அந்த மக்கள் குழுவிற்குத் திருத்தப்பட்ட அந்த அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டதா என்றால் அதுவும் இல்லை.

பிரித்து அளிக்கப்பட்டதா, யாருக்கு அளிக்கப்பட்டது? உறவினர்களுக்கு பிரித்தளிக்கப்பட்டது உண்மையா? அந்த உறவினர்கள் யார் யார்? யாருக்கு என்ன முறை? என்ன உறவு? என்பதையெல்லாம் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து விசாரித்தறிய வேண்டும் என்று, முதலமைச்சர் இங்கே இல்லாத காரணத்தால் போக்குவரத்துத் துறை அமைச்சர் மூலம் இந்த வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்கள் குழுவிற்கு கமிஷனர் அளித்த அறிக்கையின் ஆதாரத்தோடுதான் நான் இங்கே பேசியிருக்கிறேன். ஆகவே இதுபற்றித் தக்க விசாரணை நடத்தி - குழு உறுப்பினர்களிடமும் தகவல் அறிந்து அரசு ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

முதலில் இந்தப் பகுதிகள் புயல் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டதா என்ற என்னுடைய கேள்விக்கு அமைச்சர் நேற்று தன் அறிக்கையில் எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

இன்னும்கூட ஒரு முறைகேடு நடைபெற்றிருக்கிறது. போக்குவரத்துத்துறை அமைச்சர் இதைச் சிந்திப்பார், ஏற்ற நடவடிக்கை எடுப்பார் என்பதற்காகச் சொல்கிறேன்.

மருங்கூர் பகுதியில் 74,500 ரூபாய்க்கான வேலைகள் தரப்பட்டு கமிஷனர் அறிக்கையில் 'எர்த் ஒர்க் புரோக்ரஸ்' என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால் திடீரென்று அந்த இரண்டு வேலைகளும் நிறுத்தப்பட்டு விட்டது. காரணம் என்னவென்றால் அந்த இரண்டு வேலைகளும் குமாரசாமி, தனபாலன் என்ற ஜனதா கட்சியைச் சேர்ந்த நண்பர்களுக்கு தரப்பட்டதால் அது நிறுத்தப்பட்டு விட்டதாகவும் எனக்குத் தகவல் அறிவிக்கப் படுகிறது.

ஆகவே, நான் பொறுப்போடுதான் எனக்குக் கிடைத்த ஆதாரங்களை ஆராய்ந்து, கமிஷனரின் கையெழுத்தோடு தரப்பட்ட ஆதாரங்களைத்தான் தங்களிடம் காட்டிவிட்டுத்தான் இந்த அவையில் படித்தேனே தவிர வேறு அல்ல. எனவே, இதைப்பற்றி ஒரு பொது விசாரணை நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அந்தத் துறை அதிகாரிகளைக் கொண்டோ அல்லது அவர்களே நடத்துவார் களானால் நானும் ஒத்துழைத்து அந்தப் பகுதி மக்களின் ஒத்துழைப்பையும் பெற்று இதிலே மேலும் பல உண்மையான விவரங்கள் வெளிவர வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இஸ்மாயில் கமிஷன் குறித்த அறிக்கை

உரை : 19 நாள் : 07.04.1978

கலைஞர் மு. கருணாநிதி : சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, நடந்து விட்ட, ஆனால் இனி என்றென்றும் நடக்கக் கூடாது என்று நாம் எண்ணுகின்ற கோர நிகழ்ச்சிகளைப் பற்றி நடைபெற்ற விசாரணையில் அறிக்கை மீது இரண்டு நாட்களாக இந்த மாமன்றம் விவாதத்தை நடத்தி, இந்த அறிக்கை மீது உடனடி நடவடிக்கையை எடுக்க இந்த அரசு முனைந்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிற நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற முற்படுகின்றேன்.

20 மாத காலமாக இந்தியாவை இருள் கவ்விக் கொண்டு இருக்கிறது என்று விமர்சிக்கப்பட்ட அந்த நேரத்தில் சென்னை மாநகரத்தில் சிறைச்சாலை பயங்கர குகையாக உருவெடுத்து மனிதர்கள் வேங்கைகளாகவும், புலிகளாகவும், சிறுத்தைகளாகவும், நரிகளாகவும் மாறி மிசாக் கைதிகளாகச் சிறையில் அடைக்கப்பட்ட பல்வேறு கட்சித் தோழர்கள் கொடுமை படுத்தியது குறித்து இஸ்மாயில் கமிஷன் தன்னுடைய அறிக்கையினைத் தந்துஇருக்கிறது.

அறிக்கை தரப்பட்டு 5 திங்கள்களுக்கு மேலாகியும் இன்னும் நடவடிக்கை அந்த அறிக்கை மீது எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பது மக்களின் ஒரு பெரும் மனக்குறை என்பதை நான் சுட்டி காட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

ஏற்பட்டுவிட்ட கொடுமைகளுக்கு யார் காரணம், எவர் காரணம் என்கின்ற ஆராய்ச்சியில் இரண்டு நாட்களாக இந்த மாமன்றம் இந்த அறிக்கையின் அடிப்படையில் ஆராய்ந்து தங்கள்

தங்களுடைய கருத்துக்களை உறுப்பினர்கள் வழங்கி யிருக்கின்றார்கள். இவ்வளவு கொடுமைகளுக்கும் அதிகாரிகளைத் தூண்டிவிடக் காரணமாக இருந்தது நெருக்கடிக்கால பிரகடனம் என்பதை யாரும் மறுத்திட இயலாது.

ஒரு குழந்தையைக் கிணற்றில் தூக்கிப் போட்ட குற்றம் முன்பு இருந்த மத்திய அரசைச் சாரும் என்றால் இந்தக் குழந்தையின் தலையில் ஒரு பெரும் பாறாங்கல்லைத் தூக்கிப் போட்ட குற்றம் அதைத் தொடர்ந்து நடவடிக்கை எடுத்த அதிகாரிகளைச் சாரும் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

ஒன்றை நான் நினைவு படுத்த வேண்டுமானால், உச்ச நீதி மன்றத்தில் அன்றைய அட்டர்னி ஜெனரலாக இருந்தவர் மிகக் கம்பீரமாக எழுந்து நின்று ஒரு பயங்கரமான கருத்தைத் தெரி வித்தார். சிறைச்சாலையில் வைக்கப்படும் மிசாக் கைதிகள் எக்கதிக்கு ஆளாக்கப்பட்டாலும், சுட்டுக் கொல்லப்பட்டாலும், கவர்னரையே சிறையில் அடைத்தாலும், என்ன நடந்தாலும்,. நீதிமன்றம் ஏன் என்று கேட்கக் கூடாது என்று அரசின் சார்பில் அட்டர்னி ஜெனரல் வாதாடிய நேரம் அந்த நேரம்.

அப்படிப்பட்ட நேரத்தில் இனி ஒருமுறை சுதந்திர ஒளியை இந்திய நாட்டு மக்கள் காண்பார்கள் என்ற எண்ணமே இல்லாத சூழலில், சுதந்திர மூச்சினை இந்திய நாட்டு மக்கள் சுவாசிக்க இயலும் என்று நம்ப முடியாத ஒரு நிலை. அந்த நேரத்தில் தான் 1976 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31-நாள் நெருக்கடி நிலையை எதிர்த்தோம் என்ற காரணத்திற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது வெறுப்பு கொண்டு, மத்திய அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசை கலைத்தது. அப்படி கலைக்கப்பட்டப் பிறகு 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட கழகத்தினர் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள், பழைய காங்கிரஸைச் சேர்ந்த தோழர்கள், திராவிடக் கழக நண்பர்கள், நெருக்கடி நிலையை எதிர்த்த கட்சிகள் எவை எவையோ அந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மிசா கைதிகளாக தமிழகத்திலே பல்லாயிரக் காணக்கானோர் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டார்கள். அவர்கள் அங்கே கொடுமைப் படுத்தப்பட்டார்கள் என்பதையும், அதுபற்றி விசாரிக்க வேண்டும் என்பதையும் கவர்னர்

பெருமதிப்பிற்குரிய மேதகு பட்வாரி அவர்கள் பதவிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பு என்னுடைய நண்பர் லத்தீப் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல ஏற்கெனவே இருந்த கவர்னர் ஆட்சியில் இலாகாப் பூர்வமான விசாரணை நடைபெற்று எந்த விதமான தவறும் எத்தகைய கொடுமையும் சிறைச்சாலையிலே நடைபெறவில்லை என்று அறிவிக்கப்பட்டிருக்க நீதிபதியைக் கொண்டு விசாரிப்பதே மேல் என்று சொல்லி, 1977 மே திங்கள் 12-ம் நாள் தமிழக அரசு சிறப்பு வெளியீட்டில் கவர்னர் பட்வாரி அவர்கள் ஆட்சியில் போடப்பட்ட ஆணை பின் வருமாறு:-

"சென்னை மத்திய சிறையிலே காவல் பாதுகாப்பு அரசியல் கைதிகள் கொடுமைப் படுத்தப்பட்டதாகவும், அடிக்கப்பட்டதாகவும் 1976 பிப்ரவரியில் குற்றச்சாட்டுக்கள் செய்யப்பட்டது. அந்த நிலையில் அந்தக் குற்றச்சாட்டுக்கள்பற்றி இலாகா அளவில் விசாரணை நடத்திட அரசு ஆணையிட்டது. அந்த விசாரணையின் போது குற்றச்சாட்டுக்கள் மெய்ப்பிக்கப்படவில்லை. நாடா ளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு மீண்டும் இந்தக் குற்றச் சாட்டுக்களை விசாரணை செய்ய வேண்டும் என்ற முறையீடு எழுந்தது. அதற்கிணங்க இந்தக் குற்றச் சாட்டுகளை விசாரணை செய்ய நீதிபதி இஸ்மாயில் அவர்களை கொண்டு தனி விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படுகிறது." என்ற அறிவிப்பு வெளியாயிற்று.

எனவே, இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் சென்னை சிறைச்சாலையிலே அரசியல் கைதிகள் தாக்கப்பட்டது, கொடுமைப்படுத்தப்பட்டது உண்மை என்று திட்டவட்டமாக தெளிவாக அறிவிக்கபட்டிருக்கிறது. அதற்கு அதிகாரிகள் பொறுப்பாளிகள் என்றும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இத்தனையும் அறிவித்து-நண்பர் லத்தீப் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல இலாகா விசாரணையில் எதுவுமே நடக்கவில்லை என்று அறிவித்து இருக்கிறார்களே, அதுவே மாபெரும் குற்றமாகும். எனவே, அரசியல் கைதிகளை, அடித்தவர்கள், நொறுக்கியவர்கள், கொடுமைப்படுத்தியவர்கள்-அவர்கள் யார்? அவர்கள் மீது ஏன்

நடவடிக்கை எடுக்கவில்லை? என்பதற்கு முன்பு அப்படி நடக்கவே இல்லை என்று விசாரணை நடத்தி அறிவித்தார்கள் அவர்கள் யார்? எவர் என்று தெரிந்து அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அரசை மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை சிறைச்சாலையில் சம்பவங்கள் எப்படி நடைப்பெற்றன என்ற சுருக்கத்தை அறிக்கையிலே நாம் காணுகிறோம் என்றாலும் நான் அது குறித்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

1976 ஜனவரி 31-ம் தேதி மாலை 6.30 மணியளவில் கழக ஆட்சி கலைக்கப்பட்டது என்ற செய்தியை நாங்கள் அன்றைக்கு செய்தி நிறுவனங்கள் மூலமாக அறிகிறோம். வானொலி மூலமாக அறிகிறோம். அந்த செய்தி எங்கள் காதிலே விழுகிற அதே நேரத்தில் எல்லா அமைச்சர்கள் வீட்டு டெலிபோன்களும் துண்டிக்கப்படுகின்றன. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல மாநிலம் முழுவதும் முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட பல் வேறு கட்சிகளைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கானோர் கைது செய்யப் படுகிறார்கள். அப்படி கைது செய்யப்பட்ட யாரையும் இன்டர்வியூ காண - நேர் காணல் என்ற ஒரு முறை இருக்கிறதே அதை பயன்படுத்திக் கொள்ள எந்த உறுப்பினருக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை.

என்ன காரணத்திற்காக கைது செய்யப்பட்டார்கள் உடனடியாக உறவினர்களுக்கு இண்டர்வியூ காண சந்தர்ப்பம் அளிப்பதுதானே சிறைச்சாலையிலே உள்ள முறை. ஏன் அளிக்கப்படவில்லை என்று ஒரு நாள் பொறுத்துப்பார்த்தோம், ஒரு வாரம் பொறுத்துப்பார்த்தோம் இதற்கிடையில் எங்களுக்கு செய்தி எட்டுவதற்கு முன்பாக பல மைல் தொலைவிலுள்ள உற்றார் உறவினர்களுக்கெல்லாம் சென்னை சிறையிலே அரசியல் கைதிகள் மிசா கைதிகள் மிக பலமாக அடித்து நொறுக்கப்படுகிறார்கள் என்ற செய்தி தமிழ்நாடு முழுவதும் பரப்பப்படுகிறது.

ஏன் தமிழகத்தின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் இந்தக் கொடுமை நடைபெறவில்லையா? சென்னைச் சிறைச்சாலையிலே

நடந்தது மட்டும் அப்படி பரப்பப்படுகிறது. அரசியல் கட்சிக் காரர்களை அச்சுறுத்துகின்ற நோக்கத்திலே தமிழ் நாட்டிலே ஒரு பெரும் பீதியை ஏற்படுத்தி உள்ளே யார் யார் அடிபடுகிறார்கள் என்ற செய்தி பரப்பப்படுகிறது. அவர்களுடைய உற்றார். உறவினர் எல்லாம் வெளியே இருக்கிறோம். எங்களுக்குத் தகவல்கிட்டுவதற்கு முன்பாக பல கல் தொலைவில் இருக்கின்ற மக்களுக்கு இந்தச் செய்தி பரப்பப்படுகிறது.

சென்னை சிறைச்சாலையிலே திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்ஸிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, பழைய காங்கிரஸ் திராவிடர் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் பலர் கைதிகளாக அடைக்கப்பட்டார்கள். அவர்கள் கடுமையாக அடிக்கப்படு கிறார்கள். அவர்களிலே பலபேர் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறார்கள் என்கிற அளவுக்குச் செய்திகள் வருகின்றன. இங்கே சிறைச்சாலை வாசலிலே உற்றார் உறவினர் காத்திருக்கிறார்கள் அவர்களிலே யாருக்கும் நேர் காணலுக்கு (இண்டர்வியூ) அனுமதி தரப்படவில்லை. இதற்குப் பிறகு நாங்கள் பிப்ரவரி 26ஆம் நாள் வரையில் பொறுத்துப் பார்த்தோம். அதற்குப் பிறகு குடியரசுத் தலைவரவர்களுக்கும், இந்தியப் பிரதமருக்கும். . . . குறுக்கீடு. . . . . .

திரு. கே. பண்ணை சேதுராமன் : தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் நேரில் காண்பதற்கு இண்டர்வியூ கொடுக்கப்படவில்லை என்று சொன்னார். உண்மையிலேயே அந்தக் கருத்தை நாம் ஆதரித்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் நம்முடைய மாண்புமிக எதிர்க் கட்சி தலைவரவர்களே முதலமைச்சராக இருந்த நேரத்தில் 1973ஆம் ஆண்டில். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். அமைச்சர் பதிலளிக்கும்போது அதற்கு பதில் சொல்லி கொள்வார். நீங்கள் உட்காருங்கள்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பிப்ரவரி திங்கள் 26 ஆம் நாளன்று இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கும் இந்தியக் குடியரசுத் தலைவரவர்களுக்கும், ஆளுநருக்கும் ஒரு தந்தி கொடுத்தேன். அந்தத் தந்தியில்.

"Interview for relatives of MISA detenus of DMK party in Tamil Nadu not yet granted for the past 26 days in Madras prison/ Reason We reliably understand the detenus are mercilessly beaten inside the prison. M. Ps., former MLAs and office-bearers of DMK party are amongst such detenus so beaten." Request your immediate intervention preventing illtreatment and necessary action to get interview."

என்று ஒரு தந்தியை திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்கிற முறையில் அளித்து அந்தத் தந்தியின் நகல்களை இரா. செழியன் எம். பி-க்கும் கவர்னரின் ஆலோசகர், தவேவுக்கும் தமிழ்நாடு அரசு சீஃப் செக்கரட்டரிக்கும், எம். ஜி. கோரே எம். பி-க்கும் (சோசலிஸ்ட் பார்ட்டி பாம்பே)-க்கும் டி. கே. சீனுவாசனுக்கும், ஹோம் மினிஸ்டர் பிரமானந்த ரெட்டிக்கும், ஸ்டேட் மினிஸ்டர் ஃபார் ஹோம் டிப்பார்ட்மெண்ட் ஓம் மேத்தாவுக்கும் அனுப்பிவைத்தேன். இத்தனைப் பேர்களுக்கும் அந்தப் பிரதிகளை அனுப்பி வைத்தேன். 26ஆம் தேதி தந்தி கொடுத்தது மாத்திரமல்ல 27-ம் தேதியன்று குடியரசுத் தலைவருக்கு மிசாக் கைதிகள் இந்த நிலையிலே சிறைச்சாலையிலே நடத்தப்படுகிறார்கள் என்பது குறித்து ஒரு கடிதம் எழுதினேன்.

Your Excellency.

After the DMK Ministry has been dissolved followed by the imposition of president Rule in Tamil Nadu, the convict warders and warders of other category in the Madras Central jail have been used for brutal attacks over the arrestal person for 2 or 3 days from january 31st onwards. They have terribly beaten and tortured the MISA detenus. including DMK prisoner No with standing the pain and torture, it is said that some people have signed on compulsion. They were not even provided with proper food and water till one week after they were locked up inside the galolws. Among those who have been treated so very badly. Some are Deputy Secretaries of the DMK Head Office, some are Members of parliments, some are Member of the Leg

islative Assembly. They have been soloded in abusive and filthy language. They have been treated bitterly. They have been locked inside the cells even at day time till 10 days. I do hope that the Government would not have ordered to treat them like this.

Those people who have been brutally beaten have been terrorised that if they reveal the fact outside, they will be beaten once again inside the jail If your Excellency want to know the facts about those tortures you can gather information from the Confident CIDs, Things have happened.

I requset you to take necessary steps to protect the prisoners of Madras Central Jail from such tortures at least in the near future.

MISA detenus who are kept in Madurai and Vellore Jails have been allowed for interview for the past two weeks, But in Madras Central Jail the relatives of the MISA detenus have not been allowed for interview even now.

I do hope that your conscience will not accept the way in which the political prisoners have been treated worser than those who have been convicted for murder. I request you to save the jail birds from torture by the Madras Central Jail authorities."

என்று குடியரசுத் தலைவருக்கு நான் எழுதி இருக்கிறேன்.

இதற்கிடையில் சென்னை தவிர மற்றச் சிறைச்சாலைகளில் உறவினர்கள் அல்லது பெற்றோர்கள், நெருங்கிய உறவினர்கள் மிஸா கைதிகளை இண்டர்வியூ பார்க்கலாம் என்பதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டு விட்டன. நான் டெல்லிக்கும் இங்குள்ள கவர்னருக்கும் கடிதமும் தந்தியும் அனுப்பிய பிறகும் எந்த விதமான பதிலும் விளக்கமும் எங்களுக்குக் கிடைக்காத நிலையில் அடுத்து இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் பிற்பகல் 1 மணி அளவில் அப்போது போலீஸ் ஐ. ஜி. யாக இருந்த அருள் அவர்களை தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டேன். ஏறத்தாழ 27 நாட்களுக்கு மேலாகிறது. எங்கள்

கட்சியைச் சேர்ந்தவர்கள் மற்றக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு அவர்களை இதுவரையில் நேர்காண அனுமதிக்கப்படவில்லை. நான் ஒரு நாள் உங்களுக்கு நேரம் தருகிறேன். அதற்குள்ளாக எங்களுக்கு நீங்கள் தக்கபதில் அளிக்காவிட்டால் மறுநாள் காலையில் என்னுடைய தலைமையில் உள்ளே இருக்கிற அரசியல்வாதிகளுடைய வீட்டார் அனைவரும் புறப்பட்டு சென்னை சிறைச்சாலை வாசலிலே உட்கார்ந்து உண்ணா விரதம் தொடங்குவதாக இருக்கிறோம் என்று ஐ. ஜி. அவர்களுக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தேன்.

அப்போது ராஜாஜி மண்டபத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு. ஆளுநர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உடனடியாக ஐ. ஜி. அவர்கள் ராஜாஜி மண்டபத்திற்கு விரைந்து சென்று அங்கே செய்தியை அறிவித்து அதற்குப் பிறகு மறுநாள் எங்களுக்கு உள்ளே இருக்கிற கைதிகளைக் காண அந்தத் கைதிகளின் உறவினர்களுக்கு அனுமதி வழங்கப்படுவதாக டெலிபோன்கள் வருகின்றன. அதைத் தொடர்ந்து கடிதங்களும் வருகின்றன. நாங்கள் இண்டர்வியூ பார்க்கப்போன நேரத்தில் இங்கே கூட ஒரு நண்பர் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

கருணாநிதி இண்டர்வியூ பார்க்கப்போனபோது அவருடைய மகன் ஸ்டாலினே கூட தான் அடிப்பட்டதாகச் சொல்லவில்லை என்று இஸ்மாயில் அவர்கள் குறிப்பிட்டிருக் கிறார்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். அதற்குப்பிறகு தொடர்ந்து என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் நீதிபதி இஸ்மாயில் அவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. தான் அடிப்பட்டோம் என்பதை சொல்லக்கூட முடியாத நிலைமையிலே அங்கே மிஸா கைதிகள் இருந்தார்கள் என்பதற்கு அது ஒரு உதாரணம், நானும் எங்கள் வீட்டாரும் சென்று அமர்ந்திருக்கிற நேரத்தில் ஸ்டாலினையோ மாறனையோதான் பார்க்க முடியும். உற்றார்- உறவினர்களைத்தான் பார்க்க முடியும்,. என்ற விதி இருப்பதால் மற்ற நண்பர்களைப் பார்க்க இயலாது. அப்படி உட்கார்ந்திருக்கிற நேரத்தில் எங்களை சுத்தி வளையம் போல் அதிகாரிகள் வந்து நின்றுகொள்ளவார்கள். இன்னும் சொல்லப்போனால் வெளியே இருக்கிற போலீஸ் அதிகாரிகள்

கூட வந்து நின்று கொள்வார்கள், சௌக்கியமாய் இருக்கிறாயா என்று கேட்கலாம். ஆமார். இருக்கிறேன். என்று சொல்லலாம். அடிப்பட்டாயாமே என்று நான் கேட்டதற்கு, அதையெல்லாம் கேட்கக் கூடாது என்று என்னிடத்தில் சொல்லிவிட்டு என் மகனிடத்தில் அந்தப் போலீஸ் அதிகாரி ஒரு பார்வையைத் திருப்ப அவன் கண்கள் கலங்கி என்னிடத்தில் சொன்ன அந்தக் காட்சியினை நான் மறந்துவிடவில்லை. அடிபடவில்லை என்றுதான் சொன்னான். ஆனால், ஆம் அடிபட்டோம் என்று அவன் சொல்லியிருப்பானேயானால் அன்று மாலையோ அல்லது அடுத்த நாள் காலையோ அவன் மட்டுமல்ல சிறைச்சாலையில் இருந்த அரசியல் கைதிகள் அனைவரும் அதே கோர நிலையைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது என்பதை நான் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

சிட்டிபாபுவினுடைய நாள் குறிப்பு புத்தகம் பற்றி இங்கே பேசப்பட்டது. சிட்டிபாபு என்ன மறைவதற்கு முன்பு இப்படியொரு நிலைவரும் என்று எதிர்பார்த்தா அந்த டைரியை எழுதினான்? சிட்டிப்பாபுவை நமக்கெல்லாம் தெரியாதா? எங்களைவிட நெருங்கிய நண்பன் அல்லவா சிட்டிபாபு நிதியமைச்சர் மனோகரன் அவர்களுக்கு. நாமெல்லாம் ஒன்றாக இருந்தபோது சிட்டிபாபு இந்த சென்னையில் மேயராக வீற்றிருந்து-அவன் ஆற்றிய பணிகள் மாற்றாரும் புகழ்கிற அளவிற்கு இருந்திடவில்லையா? நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து நாடு மெச்சுகின்ற அளவுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் போற்றுதலுக்கும்,. பாராட்டுதலுக்கும் ஆளாகின்ற அளவிற்கு சிட்டிபாபு பணிகளை ஆற்றவில்லையா? அவனுடைய டைரியையா நாம் சந்தேகிக்கிறோம்? அவன் எழுதிய நாட்குறிப்பையா நாம் சந்தேகிக்கிறோம்? அவன் எழுதிய எழுத்துக்களையா நாம் சந்தேகிக்கிறோம்? என்பதை தயவு செய்துஎண்ணிப் பார்க்க வேண்டும்.

இப்படி இஸ்மாயில் கமிஷன் வரும் என்று சிட்டிபாபு டைரி எழுதிய நேரத்தில் எண்ணியிருக்க முடியாது. அந்த விசாரணைக்கு இந்த டைரி சாட்சியாகச் செல்லும் என்று கூட

சிட்டிபாபு எண்ணியிருக்க முடியாது. நடந்தவைகளை நடந்தவைகளாக எழுதிக் கொண்டு வந்த டைரிதான் சிட்டிபாபு எழுதிய அந்த நாள்குறிப்புப் புத்தகம். நீதிபதி இஸ்மாயில் அவர்களுக்கு கிடைத்த வலுவான சாட்சியங்களில் ஒன்றாக அது கிடைத்ததால் அந்த அடிப்படையிலும் வேறு பல சாட்சியங்களின் அடிப்படையிலும் தன்னுடைய அறிக்கையை நமக்கு தந்திருக்கிறார். சிட்டிபாபுவின் நாட்குறிப்பின் பல்வேறு பகுதிகளை இந்த அறிக்கையிலே இஸ்மாயில் அவர்கள் சுட்டிக்காட்டி இருப்பதை ஒருமுறை இங்கே படிப்பதின்வாயிலாக இந்த அவையின் நடவடிக்கை குறிப்பில் அது பதிவாகுமேயானால் சிட்டிப்பாபுவுக்கு நான் செய்த கடமை அதைவிட வேறு ஒன்றும் இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன்.

அந்த வீரமறவனுக்கு என்னுடைய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கோவிந்தராசன் அவர்கள் பேசும் போது சிட்டிபாபுவினுடைய குடும்பத்திற்கு ஐந்து லட்சம் ரூபாய் நிதி தரவேண்டுமென்று சொன்னார்கள். அதுகூடத் தேவையில்லை. ஆனால் அவன் எழுதிய டைரி இந்த அவைக் குறிப்பில் ஏறுவது இருக்கிறதே அது அந்த மாவீரனுக்கு நாம் காட்டுகிற மரியாதை என்று சொன்னால் அது மிகையாகாது. அவன் எழுதுகிறான்.

“மாலை 5 மணி மீண்டும் உணவு களியுடன்கூடிய தட்டு யாரோ பயன்படுத்திய தட்டுகள். யாரோ பயன்படுத்தி, சிறுநீர் பானைகள், யாரிடம் கேட்பது, கேட்டால் பதில் யார் சொல்வது, இரவு 7-30 மணி, அறைக்குள்ளே இருட்டுத்தான். ஆயினும் வெளிவாசலில் ஓரிரு விளக்குகள். மங்கலான ஒளியில் எட்டு மணியளவில் சில உருவங்கள் வருவதை காணமுடிந்தது. காரணம் நான் இருந்த இடம் வருவோரை போவோரை பார்க்கும் வகையில் அமைந்திருந்தது. காக்கி உடைகள், வெள்ளை உடைகள் சற்றேறக்குறைய இருபதுக்கும் மேற்பட்டோர், சிறை அதிகாரிகள் இருவர் ‘கயூம்’ அழகான பெயர். அன்பு என்ற சொல்லுக்கு அளித்திட்ட உருது சொல்தான் கயூம். ஆமாம், அந்த அன்புத்தான் அந்த அரசியல் கைதிகளை அடித்திட்ட ஆட்களுடன் அங்கே நின்றிருந்தார்.

அவர் மட்டுமல்ல. அவர் கீழ் உள்ள அதிகாரிகள் உட்பட அவரது கையசைவில் அத்தனை பேரும் நாங்கள் இருக்கும் மண்டபத்திற்குள் நுழைந்தனர். எப்படி இருகோடுகள் தனித் தனியே எடுத்துவைத்தால் இருக்குமோ அப்படிப்பட்ட அமைப்பில் அவர்கள் நின்றிருந்தனர். அவர்களது கையிலிருந்த தடிகளை அவர்கள் நீட்டினால் ஏற்படும் அளவே இருகோடுகளுக்கும் இடையேயுள்ள இடைவெளி, பட்டாளத்தின் வீரர்களைப்போல் அவர்கள் நின்றிருந்தனர். இதற்குள் காக்கியுடை அணிந்த பள்ளி ஆசிரியர்கள் கம்பீரமாக குரல் எழுப்பினர். அறை பத்து அருகில் கண்களுக்குத் தெரியாமல் காலன் கவர வருவான், உயிரை என்பார்கள், கட்டையாகி விழப்போகிறவர்கள். அதே போலக் கதவு அருகே காக்கி உடையில் காவலாளிகள் காலனைப்போல்"

"கதவு திறக்கப்படும் ஒலி. கம்பீரமான குரல் பேசியது. பெயர் சொல்லி அறை விட்டு வருதல் வேண்டும். சர்ச் என்ற பெயரால் திறக்கப்பட்ட கதவு பளீர் என்ற சத்தத்துடன் திறந்து கொண்டது. ஏதோ சினிமாவில் காணும் காட்சி போல் இருந்தது. கொலைகார கைதிகளின் கைத்தடிகள் அரசியல் வாதிகளின் உடலை சுவைத்துக் கொண்டிருந்தன. அலறல், அழுக்குரல்கள், ஐயோ, அப்பா, அம்மா என்னும் அபயக் குரல்கள்.

"ஓடு உள்ளே என்ற உத்தரவு. சர்க்கஸ் புலி ஆட்டுக் குட்டியின் தலையை தன் அகண்ட வாயில் வைத்துச் சுவைக்காமல் காண்போருக்கு வித்தை காட்டுவதுபோல், கண நேர அதிர்ச்சி. ஓடு என்றவுடன் தீ வளையத்தை தாண்டிச் செல்லும் சிங்கம் போல் கூண்டுக்குள் அடங்கியது. அறை பத்து, அடுத்த அறை ஒன்பது அப்படியே ஐந்து வரை வந்து கொண்டிருந்தது. அடுத்த ஓர் அறைதான், அதற்கு அடுத்தது என் அறைதான். அறையிலுள்ளவர்கள் அடுத்தடுத்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் காட்சியிலே அவர்கள் அடிபட்டதைப் போன்ற உணர்வு, தங்களை அறியாமல் என்ன என்ற கேள்வி. அழுவதா சிரிப்பதா என்றிருக்கும் நிலை எனக்கு. காரணம் அது போன்ற காட்சிகளை நான் இரண்டு முறை கண்டவன் மட்டுமல்ல. நானே ஒரு அங்கமாக அகப்பட்டுள்ளவன். அதனால்தான் எனக்கு அதிர்ச்சி இல்லை. ஆனாலும், எனது நண்பர்களைப் பார்த்து

ஆடை அணிந்து கொண்டே வெளியே போக வேண்டும். அவன் சொல்வது போல் ஆடையை கழற்றிவிட்டு போக்க கூடாது என்று சொன்னேன். ஆனால் அனைவரும் மழையில் நனைந்த குழந்தைகள் போல் உடல் ஆடிக்கொண்டே இருப்பதையும் காணாமல் இருக்க முடியவில்லை.

"அறை நான்கு முடிந்து பூட்டும் போடப்படுகிறது. அடுத்து நாம்தான். பூட்டு திறக்கப்படும் சப்தம் கேட்டது. கதவைத் தள்ளினார்கள். "வாங்கடா" என்ற குரல். கடைசி அறை, அது உக்கிரம் அதிகமாக உள்ள நிலை. அலுத்துப் போய் விட்டார்கள். அல்ல அவர்கள். அதிகாரி வேறு வெளியில் நின்றபடி என்னடா மெதுவாக அடிக்கிறீர்கள் என்று அதட்டுகிறார். உத்தரவு உக்கிரமாக வருகிறபோது உதைவேகத்தைக் கேட்கவா வேண்டும்.

"கதவு திறந்ததும் யார் முன்னே வெளியில் செல்வது என்ற நிலை. காலம் கதவுகளை மூடப்போவதில்லை. அர்ச்சனைக்கு கொண்டு வந்த அரசியல் மலர்கள் அல்லவா நாங்கள். எனவே திரும்பிப் பார்த்தேன். தீர்மானமாகவே முதலில் வெளியில் வந்தேன். பெயர் சொல்லி அழைத்தனர். எதிர்பார்த்த ஆள் அல்லவா நான். எனவே ஓர் அடி எடுத்து வைப்பதற்குள் கன்னத்தில் வீழ்ந்த அறைகள். அடடா. . . . நிலைக்கண்ணாடி கல்பட்டு உடைந்து விழுந்ததுபோல எனக்குத் தோன்றியது,. கண்கள் கணநேரம் காண்பது எல்லாம் கார் இருள்போல் இருந்தது. இரு கோடுகளுக்கு இடையில் தள்ளப்பட்ட எலி. ஆம் அவர்கள் அடித்ததும் அப்படித்தான் அவர்கள் அசந்தனர். இது எலி அல்ல, புலி என்று, காரணம் அத்தனை அடிக்கும் என் உடல் விழவில்லை தரை நோக்கி: தள்ளினார்கள் மதில் சுவர்மீது. சட்டென்று திரும்பிக் கொண்டேன். வயிற்றில் எட்டி உதைத்து விட்டான். சுவரின் மீதே சாய்ந்து கீழே உட்கார நினைத்தேன். ஆனால் நீண்ட நெடுமரத்தை மதயானை இடக் காலாலும், வலக் காலாலும், துதிக்கையாலும் வெறிபிடித்து உதைப்பதுபோல் உதைத்தனர்.

"வீராசாமி நெடுமரமாக கீழே சாய்ந்து கிடந்தார். வெறிக் கூட்டம் முரசு பறை அறைவதுபோல்," இரு கைகளால் அடி கொடுத்துக் கொண்டிருந்தன. ஒரு புறத்தில் இக்காட்சி, பள்ளிக் கூட மாணவன் பெஞ்சு மீது ஏறி நிற்பதுபோல் இரும்பு ஏணி

அருகில் கன்னத்தில் கை வைத்துக்கொண்டு கதறும் வி. எஸ். கோவிந்தராசன். ஒரே குத்துத்தான் நீலநாராயணனுக்கு. குள்ள உருவம் அவருக்கு, மேலே நிமிர்ந்து பார்த்திட மார்பகத்தில் மற்றொரு குத்து. முதுகில் இரண்டு தடி அடி. அவ்வளவுதான். குலை நோயில் கேவிக்கொண்டு கீழே விழும் நோயாளி போல் சுருண்டு விழுவதைக் கண்டேன். கால் எடுத்துவைத்து கைகொடுக்க முடியுமா என்று அசைந்தேன். தொண்டையில் ஒரு குத்து எனக்கு. மீண்டும் சுவர் மீது தள்ளப்பட்டேன். அய்யோ, என்று சாய்ந்தேன் நான்.

"அருகே என் அன்புத் தம்பி. ஆமாம் ஸ்டாலின் தான் தமிழகத்து முதல் அமைச்சரின் மகன் என்று நேற்றுவரை அறிந்த அந்த சுருளிராஜன், தன் கால் பூட்சால் அவன் அழகிய முகத்தைச் சுவைப்பார்க்க உதைத்தான். அடுத்து கொலைக்காரன் ஒருவன் ஓங்கிய கோல் அவனது தோள் பட்டையில், காக்கி உடை அணிந்த வார்டர் ஒருவன் கன்னத்தில் கை நீட்டினான். கண்டேன் காட்சியை. இவர்கள் அவனை அடித்தே கொன்று விடுவர் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. மற்றவர்கள்தான் மண்ணுடன் சாய்ந்து கிடப்பவர்களாக இருக்கின்றனர். உதவிக்கு எழ அவர்கள் முடியாதபடி அருகில் எமதூதர்கள், என்ன செய்வது எனக்கென்று ஓர் துணிவு. திடீரென்று குறுக்கே பாய்ந்தேன். தம்பியைத் தள்ளிக்கொண்டே தடிகள் கழுத்தில், அவைகள் அடிகள் அல்ல. உலைக்களத்தில் பழுக்கக் காய்ச்சிய இரும்பை தட்டிப் பதப்படுத்தும் உளியாக மாறி சம்மட்டி அடிகளாக எனக்கு அமைந்தது. கழுத்தில் அத்தனையையும் தாங்கிக் கொண்டேன். அன்புத் தம்பி அறைக்குள்ளே ஓடிவிட வழி கிடைத்தது.

"வீராசாமியை தூக்கி நிறுத்தி ஒரு குத்துவிட்டு உள்ளே தள்ளினர். நீல நாராயணன் மூச்சுத் திணற, வி. எஸ். கோவிந்தராசனைத் தாங்கிப் பிடித்து அழைத்துச் சென்றார். தம்பியோர், தான் பட்ட அடியை மறந்து, தன் உடன்பிறப்புக்களை அழைத்துச் செல்லும் காட்சி கண்டேன். அவர்களைப் படுக்க வைக்க, தன் தோள்துண்டை தரையில் போட்டு, தாக்கப்பட்ட வர்களை தாங்கி படுக்கவைத்த காட்சி கண்டேன். என்னை ஒருவன், வாடா தம்பி வா என்று வாயில் ஒரு குத்துவிட்டு உள்ளே தள்ளினான்.

"கொடிய காற்றில் நெடிய மரம் சாய்ந்து விழுவதுபோல் அறையில் நான் விழுந்தேன். இல்லை தள்ளப்பட்டேன். அறை முழுவதும் இருள் அல்லவா நினைவு வேறு எனக்குப் பாதி யாகத்தானே இருக்கிறது. பூட்டு பூட்டப்பட்டது. உள்ளே அழுகுரல், முனகல், அப்பா, அம்மா என்ற ஒலி. அன்புத் தம்பியோ அருகில் வந்தான். அண்ணன் நீலத்தையும், கோவிந்தராசனையும் மார்பில்சாய்த்துவிட்டு, அவன் தன் பிஞ்சு கரங்களால் என் முகத்தைத் தடவிக்கொண்டே கேட்டான். 'அண்ணே, இன்னும் உயிருடன் இருக்கிறாயா?' ஆமாம். அவன் கேட்டதில் நியாயம் இருக்கிறது. அடிக்க வந்தவர்கள் அல்லவே அவர்கள். கொலைவெறித் தாக்குதல் அல்லவா நடத்தினார்கள். அன்புத் தம்பியோ அதிர்ச்சி அடைந்திடவில்லை. அழுகையில் என்னைக் காண்கிறான். அவன் அச்சம் கொள்ளக்கூடாது என்று அன்பொழுக சொன்னேன்.

"அடி பலமா உனக்கு என்றேன். அதெல்லாம் இல்லை அண்ணே என்று பெற்றவனைப்போல் பேசினான். தெம்பு குறையக் கூடாது. என்பதற்காக தம்பி உன்னையும் அடித்தார்களா, பாவிகள், என்றேன். இருக்கட்டும் அண்ணே, என்று சொல்லி அவன் என்னைத் தன் கரங்களால் அடிபட்ட இடங்களைத் தடவிக் கொடுத்துக்கொண்டே, என் கிழிந்த சட்டையைக் கழற்றிட உதவிபுரிந்தான். முகத்தைத் துடைத்துக்கொண்டே. தம்பி தண்ணீர் தேவை என்றேன். பாவம் அவன் என்ன செய்வான், அறையில் இருந்தால்தானே தர. அதற்குள் அதட்டல் குரல் யார்டா சிட்டிபாபு, வீராசாமி, நீலநாராயணன், வாங்கடா வெளியே.'

□"பூட்டு திறக்கப்பட்டது, தம்பியைப் பார்த்தேன். அவன் எங்களை மீண்டும் அடிக்கப் போகிறார்கள் என்று எண்ணியிருப்பான் போலும். பாவம் தண்ணீர் கேட்டதற்கு அவன் அப்பொழுது கண்ணீர் விட்டான். அந்தக் காட்சிகள் இதய இணைவுகள் அல்லவா? அகமும், புறமும் ஒன்றாக இணைய என் இதயம் முடிவெடுத்த நேரம் அதுதானே? ஆமாம், அன்னையிடம், அன்பு மனைவியிடம், அருள்மிகு மக்களிடம் பெற முடியாத அன்பை அன்று அவனது கண்ணீர்த் துளிகள் எனக்குத் தன் கண் பார்வையில், எனது இதயத்தையே தாரை தந்து விட்டது அவனிடம்.

"அதிகாரிபோல் வந்தவர்கள் என்னை வீரமணி இருந்த அறை எண் எட்டில் தள்ளினார்கள். அதுபோல் நண்பர்கள் வீரா சாமியையும், நீலநாராயணனையும் தனித்தனியே பூட்டியதைப் போல் ஸ்டாலினையும் தனியாக்கினர். அது பிரிவின் முதற்கட்டம்.

"அறை எட்டு, ஏற்கனவே அங்கு ஏழு பேர் அத்தோடு நானும். அடிபட்ட வேகத்தில் விடுதலை ஆசிரியர் வீரமணிக்குமுகம் வீங்கிவிட்டது. எற்கனவே அறுவை சிகிச்சைக்கு ஆட்பட்ட விடுதலை சம்பந்தம் அடிபட்டபோது, அவரது அறுவை சிகிச்சையில் மீண்டும் அவதி. இதய நோயுடன் வேதனைப்படும் தியாகராஜன், இவர்களுடன் நீதிபதியின் மகன் சத்தியேந்திரன் அன்னியில் மேலும் மூவர். என்னுடன் சேர்த்து ஆக எட்டு. அறையும் எட்டு என்ற இலக்கத்தில். 'அடி பலமா' என்று ஆசிரியர் வீரமணி கேட்டார். அழுவதைத் தவிர, அவருக்கு என்ன பதில் என்னால் அப்போது தர முடியும்?

"கழுத்து, வயிறு, தோள், கை, கால் இவைகள் போதாது என்று வீங்கிய உதடுகள். இத்தனையும் பார்த்தே அவர்கள் எப்படித் தாங்கினாய் என்றனர். என்ன செய்வது? என்னால் படுக்க, ஏன், நிற்க,. நீட்டி உட்கார முடியாததால் சத்தியேந்திரன் தாங்கிப் பிடித்து சுவரில் சாய்த்து உட்கார வைத்தார். வழக்கறிஞர் அவர். அவரும் அடிபட்டவர்தானே. சீறுநீர் கழிக்கவேண்டும் என்று எண்ணினேன். நகர்ந்தே கம்பி அருகில் வந்தேன். சிறுநீர் வந்தால்தானே? வயிறு வெடித்திடும் போன்ற பிரமை. அப்பா, அம்மா என்ற முனகல்'- அவர்களது அச்சம், என்னை அமைதியாகத் தூங்கு, மறுபடியும் ஏதாவது ஏற்படப் போகிறது? என்றனர். இன்னும் என்ன ஏற்படுவது? எல்லாம் தான் முடிந்துவிட்டதே? இனி தேற எத்தனை நாட்கள் ஆகுமோ? தொப்புள் வேறு ஊதிக்கொண்டேயிருந்தது. பார்க்கப் பார்க்க ஆத்திரமும் அழுகையும், ஆமார் அவர்கள் சொன்னார்கள். அமைதியாகப் படு என்று, எனக்கு எப்படி அமைதிவரும்."

இது சிட்டிபாபுவின் டயரி. இறுதியாக சில மாதங்களில் சிட்டிபாபுவுக்கு நீண்ட அமைதியே வந்துவிட்டது. மிசா கைதியாக இருந்தவர்கள், இந்தச் சட்டமன்றத்தில் உறுப்பினர்களாக

இருந்திருக்கிறார்கள். இப்போதும் இருக்கிறார்கள். நாடாளு மன்றத்தில் உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். இப்போதும் இருக்கிறார்கள். மேலவையில் உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். இப்போதும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் எந்த வகையில் நடத்தப்பட்டார்கள்? எப்படிப்பட்ட கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார்கள்? இவ்வளவுக்கும் யாரோ தனிப்பட்ட ஒருவர்தான் காரணம் என்று நான் கூறிட மாட்டேன். இங்கே பேசிய பல நண்பர்கள் எடுத்துக்காட்டியது போல் ஒன்றைச் செய்தார்கள். அதனுடைய பல்வேறு விளைவுகள் இந்த அளவுக்குக் கொண்டு வந்து விட்டன என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

நெருக்கடி நிலை என்ற அந்தக் கோரப் பிசாசு அவிழ்த்து விடப்பட்ட காரணத்தால் இப்படிப்பட்ட கொடுமையான நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் நடக்கக் காரணமாய் இருந்தது என்பதை யாரும் மறுத்திட முடியாது. அரசு நெருக்கடி நிலை நிலையை வகுத்தது. அதைத் தொடர்ந்து தி. மு. க. மற்றுமுள்ள கட்சிகள் நெருக்கடி நிலை கூடாது என்ற நிலையை எடுத்தது. இது கொள்கை மாறுபாடு அல்லது கொள்கை முரண்பாடு என்ற அளவில் முடிந்திருக்க வேண்டிய ஒன்றே அல்லாமல் சென்னை, சிறைச்சாலையை மற்ற சிறைச்சாலைகளுக்கெல்லாம் பூச்சாண்டி காட்டுகிற இடமாக, தமிழ்நாட்டில் இருக்கும் மக்களை எல்லாம் பீதி கொள்ளச் செய்கிற ஒரு நிலையமாக ஆக்கிக் கொள்ளவும். எங்கள் மீது, போடப்பட்டிருக்கும் சர்க்காரியா கமிஷனுக்குக்கூட சாட்சிகளைக் கட்டாயப்படுத்தி தயாரிக்கின்ற இடமாகவும் ஆக்கிக்கொண்டார்கள் என்றால், அந்த அதிகாரிகள் யாராக இருந்தால் என்ன, எந்த மதத்தைச் சேர்ந்தவர், எந்த வகுப்பைச் சேர்ந்தவர், எந்த சாதியைச் சேர்ந்தவர் யாருக்கு வேண்டியவர்கள் என்பதல்ல முக்கியம். அதிகாரிகள் எந்த வகுப்பு, எந்த மதம், எந்த சாதி, யாருக்கு வேண்டியவர் என்று பார்த்தால் மாத்திரம் போதுமா? அடிப்பட்டவர்கள் யார்? அதிகாரியிலே ஒருவர் இன்ன இனத்தைச் சேர்ந்தவர் என்றால் அடிப்பட்ட சத்தியேந்திரன் எந்த இனத்தைச் சேர்ந்தவர்? முத்துராமலிங்கம் எந்த இனத்தைச் சேர்ந்தவர்? மறந்துவிட முடியுமா? கையூம் என்ற அதிகாரி தவறு செய்தார் என்று இஸ்மாயில் என்ற நீதிபதி தீர்ப்பளிக்கவில்லையா?

அறிக்கை தரவில்லையா? அப்படிப்பட்ட முடிவு எழுதவில்லையா? இதிலே சாதிகள், மதங்கள், வகுப்புகள் அனைத்தையும் கடந்த ஒரு நிலைமைத்தான் நாம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாளையங்கோட்டை சண்முகத்தைப் பற்றி இங்கே நண்பர் கந்தசாமி பேசினார். இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது எடுத்துக்கொண்ட நேரத்தைவிட பாளையங்கோட்டை சண்முகத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்கு அவர் எடுத்துக் கொண்ட நேரம் அதிகம்.

பத்து ஆண்டு காலத்திற்கு முன்பு பாளையங்கோட்டை சண்முகம் கொண்டிருந்த கொள்கைக்கும், இன்றைக்கு உள்ள கொள்கைக்கும் உள்ள மாறுபாட்டைச் சொன்னார்கள். அரசியலில் நேற்றைக்கு ஒரு கொள்கை, இன்றைக்கு ஒரு கொள்கை என்று வெகு துரித காலத்தில் கொள்கைகள் மாறிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், 10 ஆண்டு காலத்தில் ஒரு கொள்கை மாற்றம் பாளையங்கோட்டை சண்முகம் அவர்களுக்கு ஏற்பட்டது என்பதை-அதுவும் கந்தசாமி அவர்கள் சொல்கிற நேரத்தில் எனக்கு மிக மிக ஆச்சரியமாக இருந்தது. எனவே, கொள்கை மாற்றங்கள் அல்ல-நடவடிக்கை எடுக்க வேண்டியது இஸ்மாயில் கமிஷன் அறிக்கைப்படி யார் மீது என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கும் நேரத்தில் அவர் மக்களைத்□தூண்டி விடுகிறார் என்றால் மக்கள் நடவடிக்கை எடுப்பார்கள்'' என்று சொல்லுகிறார்கள் என்றால், அரசு எவ்வழியோ, குடிகள் அவ்வழி.

'மக்கள் பார்த்துக்கொள்வார்கள்' என்பதற்கு என்ன நியாயம் கற்பிக்கப்படுகிறதோ, அதே நியாயந்தான் பாளையங்கோட்டை சண்முகம் சொல்கிற "மக்கள் நடவடிக்கை எடுப்பார்கள்." என்பதற்கும் நியாயம் கற்பிக்கப்படவேண்டும். ஆகவே 'மக்கள் நடவடிக்கை எடுப்பார்கள்' என்றால் ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் அல்ல, வன்முறையில் அல்ல, அறமுறையில், அன்பு முறையில், அரசுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய முறையில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை 'மக்கள் எடுப்பார்கள்' என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பாளையங்கோட்டை சண்முகத்திற்கு ஏதோ ஒரு வகுப்பார் மீது துவேஷம் என்றெல்லாம் வெளியே பேசப்படுகிறது, பத்திரிகையில் செய்தி போடப்படுகிறது. துண்டு அறிக்கை வெளியிடப்படுகிறது. அவரே கூட்டங்களில் பேசியிருக்கிறார். பேசுகிறார். செந்தாமரை என்ற அந்த அதிகாரியும் நீக்கப்படவேண்டுமென்று பேசுகிறார். செந்தாமரைக்கும், பாளையங்கோட்டை சண்முகத்திற்கும் என்ன உறவு என்பதும், அவர்கள் இருவரும் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதும் நிதியமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இதிலே வகுப்பு பேதம் இல்லை, சாதி பேதம், மத பேதம் இல்லை. மனிதனை மனிதனாக எண்ணாமல் மிருகங்களைப் போல் நடத்தி, மாக்களைப்போல் நடத்தி, மிருக ஆட்சியைச் சிறைச்சாலையில் புரிந்த, அதற்குத் துணை நின்றவர்கள் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி நடைபெறுகிற விவாதம். அதிலே திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கருத்தை எடுத்து வைத்திருக்கிறது.

ஆகவே, இனியும் காலதாமதம் செய்யாமல், யார் யார், எந்த எந்த அதிகாரிகள் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்கள் மீது இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைத்தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த அரசு சிறைச்சாலைச் சம்பவங்களுக்குப் பொறுப்பு அல்ல என்றாலும், நடைபெற்றுவிட்ட சம்பவங்களுக்கு விசாரணை நடத்தி, அறிக்கை வைத்த பிறகு, அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், அந்தப் பொறுப்பும், பழியும் இந்த அரசின்மீது ஏற்பட்டு விடக்கூடும் என்பதை நான் எச்சரித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

காவல் துறையினரின் நடவடிக்கை

உரை : 20 நாள் : 10.03.1979

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை நான் இங்கே எழுப்பியதற்கான காரணத்தை தொடக்கத்திலேயே கூறியிருக்கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பு அவை முன்னவர் அவர்கள் இங்கே இல்லாத சமயம் இந்தப் பிரச்சினையை நான் எழுப்பினேன். அப்போது மாண்புமிகு மின்வாரியத்துறை அமைச்சர் அவர்கள், இதுபற்றிய விளக்கம் என்னிடத்தில் இல்லை, விளக்கம் பெற்று பிறகு நான் அதை பற்றிக் கூறலாம். இப்போது திடீரென்று கேட்பதால் என்னால் விளக்கம் கூற இயலாது என்று மிகுந்த பொறுப்போடு மின்வாரியத்துறை அமைச்சர் அவர்கள் அன்றைக்கு பதில் அளித்தார்கள். நேற்று கேள்வி நேரம் முடிந்து, மற்ற விவாதங்கள் ஒத்திவைப்பு எல்லாம் முடிந்து நான் சற்று ஓய்வுக்காக என் அறைக்குச் சென்றிருந்த நேரத்தில் இங்கே பேசிக் கொண்டிருந்த திரு. துரை கலியமூர்த்தி அவர்கள் பேசிய பொருள்பற்றி அதன் தொடர்பாக இல்லாவிட்டாலும் இந்த உளிவீச்சு சம்பவம் குறித்து குற்றம்சாட்டப்பட்ட செபாஸ்டின் மனநோய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பது குறித்து பேச உடனடியாக நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் அளித்து பத்திரிகைகளில் வந்திருக்கிற செய்தியை யார் படித்தாலும் நான் அன்றைக்கு எழுப்பிய பிரச்சினையையும் அவர்கள் அளித்த விளக்கத்தையும் யார் பார்த்தாலும் கருணாநிதி உண்மைக்கு மாறான ஒரு தகவலை இந்த அவைக்குத் தந்தார் என்றுதான் நிச்சயமாக எண்ணத் தோன்றும். பத்திரிகைகளில் அப்படித்தான் வந்திருக்கிறது. சட்டசபையில் கருணாநிதி இப்படிக் குறிப்பிட்டிருந்தார் அல்லவா. சென்னையில் செபாஸ்டின் மனநோய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார் என்று குறிப்பிட்டார் அல்லவா. அதற்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. சௌந்திரராஜன் பதில் அளிக்கும்போது, செபாஸ்டின் மனநோய் மருத்துவமனையில் சேர்க்கப்பட

வில்லை. அவர் போலீஸ் கண்காணிப்பிலேதான் இருக்கிறார் என்று பதில் அளித்து பத்திரிகைகளில் அந்தச் செய்தியைப் படிப்பவர்கள் எதிர்க்கட்சித்தலைவர் சொன்னது தவறு என்ற முடிவுக்குத்தான் நிச்சயமாக வருவார்கள். எனவே இந்த அவையில் மாத்திரமல்ல தமிழ்நாட்டில் இருக்கிற மக்கள் அத்தனைபேர்களையும் இன்று திசை திருப்புகிற அளவிற்கு ஒரு செய்தி வந்துவிட்டது. திசை திருப்பும் நோக்கத்தோடு சொன்னார்களா அல்லவா என்று திரு. லத்தீப் அவர்கள் கேட்டார்கள். அதுவல்ல பிரச்சினை. வந்துள்ள செய்தி, நான் இங்கு எடுத்துக்கூறியது தவறு என்ற வகையில் செபாஸ்டின் மனநோய் மருத்துவமனைக்குச் செல்லவில்லை. அவர் போலீஸ் கண்காணிப்பில்தான் இருக்கிறார் என்ற அளவிற்கு வந்திருக்கிறது. இப்போதுகூட அவர்கள் மிகத் திறமையோடு, மாண்புமிகு அமைச்சர் திரு. சௌந்திரராஜன் அவர்கள் பேசுகிற போது சொன்னார்கள். சேர்க்கப்படவில்லை என்றுதான் சொன்னேனே தவிர புறநோயாளியாக இல்லை என்று சொல்லவில்லை என்று குறிப்பிடுகிறார். இதெல்லாம், வார்த்தை ஜாலங்களுக்குள்ளே புகுந்து தப்பித்துக் கொள்கிற காரியமே தவிர வேறு அல்ல என்பதை நான் இதில் தீர்ப்பளிக்க வேண்டிய பொறுப்பில் இருக்கிற அவைத் தலைவராகிய உங்களுக்கு எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல், போலீஸ் கண்காணிப்பில்தான் இருக்கிறார் என்று அமைச்சர் திரு. சௌந்திரராஜன் அவர்கள் சொன்னது மிகத் தவறானதாகும். அது எப்படி தவறு என்பதை மின்வாரியத் துறை அமைச்சர் அளித்த பதில் மூலம் அது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. அவர் சென்னை மத்தியச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டு புறநோயாளியாக அங்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்று கூறுவதிலிருந்து போலீஸ் கண்காணிப்பில் அவர் இல்லை என்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. அதுமாத்திரமல்ல. என் கையில் இருப்பது அந்த மனநோய் மருத்துவமனையினுடைய கேட் பாஸ். அதில், செபாஸ்டின், அட்மிஷன் டேட் 4-3-79 சேர்க்கப்பட்டிருக்கிறார். டிஸ்சார்ஜ் டேட் 5-3-79. ஆக புறநோயாளி என்றால் அழைத்துச் சென்றவுடனே மீண்டும் அழைத்து வந்திருக்க வேண்டும். ஒருநாள் முழுவதும் அந்த மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்ததற்கு இந்த கேட் பாஸ் நம்பர் 294621, அட்மிஷனுக்கு இந்த கேட் பாஸ் போதுமான

சான்றாக அமைந்திருக்கிறது. 4-ம் தேதி சேர்க்கப்பட்டு 5-ம் தேதி டிஸ்சார்ஜ் செய்யப்பட்டிருக்கிறார் என்ற அளவிற்கு. மறுபடியும் சேர்க்கப்பட்டாரா இல்லையா, எனக்கு அந்த விவரங்கள் தெரியாது. நான் கேட்டுக்கொள்ள விரும்புவது பேராசிரியர் அவர்கள் அல்லது எல்லாக் கட்சித்தலைவர்களும் இங்கு எடுத்துக்காட்டியதும், ஒரு குற்றம் செய்தவர் அவர் ஆளும் கட்சிக்காரர் என்பதற்காக அதிலிருந்து அவரை மீள வைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அவர் மூளைக் கோளாறு உள்ளவர், மனநோயாளி என்று திசை திருப்பும் முயற்சியில் தன்னுடைய கடமையைச் செய்யும் என்று அடிக்கடி சொல்கிற ஒரு ஆட்சி நடந்துகொள்வது முறைதானா என்பதே என் கேள்வியாகும்.

நம்முடைய உழைப்பாளர் கட்சித் தலைவர் திரு. மார்க்கபந்து அவர்கள் ஒன்றை சொன்னார்கள். குற்றஞ் சுமத்துபவர் மீது நீதிபதியே பார்த்து, கேள்விகளைக் கேட்டுவிட்டு, அவர் சித்த சுவாதீனம் உள்ளவரா இல்லையா என்று அறிந்து கொள்ள நீதிபதிதான் உத்தரவிட வேண்டும் என்ற கருத்தை திரு. மார்க்கபந்து அவர்கள் வெளியிட்டார்கள். நான் அவை முன்னவர் அவர்களையும் அரசையும் கேட்டுக் கொள்வது, அது போன்று நீதி மன்றம் ஒன்றாம் தேதி திசையன்விளை இன்ஸ்பெக்டர் ரிமாண்ட் மனு கொடுத்த நேரத்தில், செபாஸ்டியானை விசாரிப்பதற்கு முன்னால், அவர் சித்த சுவாதீனம் உள்ளவரா இல்லையா என்று சோதனை செய்ய வேண்டும் என்று சொன்னதின் அடிப்படையில் அவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டாரா, அதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா என்பதை இந்த அரசாங்கம் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. ஜனவரி 31-ம் தேதி உளிவீச்சு சம்பவம் குறித்து, திசையன்விளை இன்ஸ்பெக்டர், ராதாபுரம் சப்-இன்ஸ்பெக்டர் அல்ல, திசையன்விளை இன்ஸ்பெக்டர் நீதிமன்றத்தில் ரிமான்ட் மனு கொடுத்த நேரத்தில், இவர் எ.டி.எம்.கே. கட்சியைச் சேர்ந்தவர் என்று அந்த மனுவில் குறிப்பிட்டு கொடுத்திருக்கிறார். அதன்மீது 15 நாட்கள் ரிமாண்ட் வாங்கப்பட்டு இருக்கிறது. அவர் நெல்லை மாவட்டத்திலுள்ள பாளையங் கோட்டையிலோ அல்லது நெல்லையிலோ இவர் மூளைக் கோளாறு உள்ளவரா என்பதைக் கண்டறிவதற்கு போலீஸ்காரர்களே அக்கறை எடுத்துக்கொண்டு அந்தப் பிரச்சினையில் ஈடுபட்டிருக்கிறார்கள். 'நார்மல்' என்ற அளவில்

அங்குள்ள டாக்டர்கள் சொல்ல, அதற்கு மேலாக, திரு. சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டது போல் மதுரையிலுள்ள பெரிய மனநோய் வைத்தியரிடம் போயிருக்கலாம். அப்படிப்பட்ட பெரிய வைத்தியரையும் கலந்து கொள்ளாமல் சென்னைக்கு அழைத்து வந்து அவரை கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன வந்தது?: இதையெல்லாம் எண்ணிப்பார்க்கின்ற நேரத்தில், பிரச்சினையை திசை திருப்புவதற்காக இந்த அரசு இந்த சாதாரண விஷயத்தில் குறுகிய நோக்கத்தோடு நடந்து கொள்கிறது என்ற குறைபாடு எனக்கு மட்டுமல்ல, எல்லாக் கட்சித்தலைவர்களுக்கும் நாட்டிலுள்ள நடுநிலைமையாளர்களுக்கும் ஏற்படுவது இயல்புதான். இதன் தொடர்பான உணர்ச்சிவசப்பட்டு நடந்த நிகழ்ச்சிகள், நடந்த பேச்சுக்கள், இங்கு பரிமாறிக்கொள்ளப்பட்டன. இவை பத்திரிகையில் இடம் பெறலாமா? அப்படி இடம் பெறுவது, இந்த சபையின் மரபையும் கண்ணியத்தையும் காப்பாற்றுவதற்கு உதவுமா என்று அவை முன்னவர் அவர்களும் பிறக் கட்சித் தலைவர்களும் எடுத்துக்கூறிய கருத்தோடு நானும் என்னுடைய கருத்தைப் பிணைத்துக்கொள்ள, இணைத்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். இதுபற்றி காரசாரமான விவாதம் நடைபெற்றது என்று வேண்டுமானால் இடம் பெற வேண்டுமே யொழிய எதிர்க்கட்சித் தரப்பிலிருந்தும், ஆளும் கட்சித் தரப்பிலி ருந்தும் வீசப்பட்ட சொல் அம்புகள், அந்தக் கணைகள், கேட்பதற்கு நம்முடைய செவி கூசுகின்ற நம் மனம் கூசுகின்ற வார்த்தைகள் நிச்சயமாக இடம் பெறவேண்டாம் என்ற மற்ற கட்சித் தலைவர்களின் கருத்தோடு நானும் உடன்பாடாக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலையில், நமது முன்னவர் அவர்கள் சொல்வது போல், அவர்கள் மீது நம்பிக்கை வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். நாங்கள் நம்புகிறோம், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில்கூட இதைத்தான் கூறினேன். எனவே இப்படிப்பட்ட பேச்சுகளின் மூலமாக காவல் துறையினரின் நடவடிக்கைகளை திசை திருப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு அமருகிறேன்.

வழக்கறிஞர்கள் பிரச்சினை

உரை : 21 **நாள் : 30.03.1979**

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து கடந்த சனிக்கிழமையன்று எதிர்க்கட்சிகளி னுடைய தலைவர்கள் அனைவரும் வழக்கறிஞர்கள் சார்பாக முறையீட்டை வைத்து, வழக்கறிஞர்களுக்கும், காவல்துறை யினருக்கும் ஒரு நீண்ட மோதுதலை நிலையானதாக ஆக்கிவிடக் கூடாது என்ற கருத்தின் அடிப்படையில் உடனடியாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்று வலியுறுத்தினோம். அதை வலியுறுத்தியதற்கு மேலும் வலிமையூட்டுகின்ற வகையில் இந்த அவையிலே அமைதியான முறையிலே நாங்கள் எழுந்து நின்று இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணுகின்ற வரையில் நாங்கள் உட்காருவதாக இல்லை என்றும் குறிப்பிட்டோம். அப்போது முதல் அமைச்சர் அவர்களும் இந்த மன்றத்திலே இருந்தார். அப்போது அவை முன்னவர் முதலமைச்சர் சார்பாகப் பொறுப்பேற்றுக்கொண்டு பதில் அளித்தார். செவ்வாய் அன்று மாலைக்குள் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் என்று குறிப்பிட்டார்கள். நான் கூட சொன்னேன். செவ்வாய் வெறும் வாயாகி விடக் கூடாது என்று. அவை முன்னவர் அவருக்கே உரிய தமிழ் சொல்லாடல் திறமையின் காரணமாக செவ்வாய்க் கிழமையன்று நீ வெல்வாய் என்று சொன்னார். நானும் அதற்கு அடிக்கடி நீ அப்படித்தான் சொல்வாய் என்றேன். ஆனால் நான் அன்றைக்குச் சொன்னது தான் உண்மையாகிவிட்டது. பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அதற்கு பதிலாக அரசின் சார்பாக ஒரு அறிக்கையைத்தான் படித்தார்கள். பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று அவர் சொன்னதை எப்படி நாங்கள் எடுத்துக் கொண்டோம். எப்படி நம்பினோம் என்றால், எதிர்க்கட்சிகளின் தலைவர்களையும் வழக்கறிஞர்களின் பிரதிநிதிகளையும்,

அரசாங்கத்தினுடைய சார்பில் அமைச்சர்களையும் உட்கார வைத்துப் பேசி திங்கள் அல்லது செவ்வாய்க் கிழமைக்குள் இந்தப் பிரச்சினை முடிந்து வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களுக்குத் திரும்பினார்கள் என்ற நிலை ஏற்படும் என்ற நம்பிக்கையோடு தான் அவை முன்னவர் அளித்த வாக்குறுதியை அன்றைக்கு நாங்கள் எடுத்துக் கொண்டோம். ஆனால், இன்றைக்கு அதற்கு மாறாக நிலைமைகள் தலைகீழாகி விட்டதைத் தான் பார்க்கிறோம். நேற்றுக் கூட ஒரு வழக்கு சம்பந்தமாக நான் நீதிமன்றத்திற்குச் சென்றபோது ஒரு ராணுவ முகாமிற்குள் நுழைகிறோமோ என்று ஐயம்படத் தக்க அளவிற்கு போலீஸார் நூற்றுக் கணக்கில் அங்கே குவிக்கப்பட்டிருந்ததை நான் கண்டேன். அவைகளைப் பற்றி எல்லாம் மற்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் இங்கே தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். முதலமைச்சர் திருநெல்வேலி யிலே நிருபர்களிடத்திலே பேசியதாக தினத்தந்தி பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. "வக்கீல்கள் நேரடியாக தலைமை நீதிபதியைச் சந்தித்து அவருடைய கருத்தைத் தெரிந்து கொள்வது நல்லது" என்று முதலமைச்சர் பதில் அளித்து இருக்கிறார். அது எவ்வளவு சரியான தகவல் என்று எனக்குத் தெரியாது. நாங்கள் கேட்பது எல்லாம் ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியை, அவர் ஓய்வு பெற்றவராக இருந்தாலும், நியமித்து அவரைக் கொண்டு ஏன் இந்த விசாரணையை நடத்தக் கூடாது என்பதுதான். ஆளுங்கட்சியினுடைய பொதுச் செயலாளர் கூட பேசியதாக பத்திரிகையிலே செய்தி படித்தேன். நாவலர் அவர்கள் பேசியதாக, அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சம்பவம் பற்றி கழக ஆட்சியிலே ஓய்வு பெற்ற நீதிபதியை நியமிக்கவில்லையா என்று கேட்டு இருக்கிறார். அப்போது நியமிக்கப்பட்டது உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி. இப்போது வழக்கறிஞர்கள் பிரச்சினைப் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்டு இருப்பது ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி. இங்கே நண்பர் ஜேம்ஸ் அவர்களும் மற்றவர்களும் எடுத்துக் காட்டியதைப் போல. ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி வழக்கறிஞராகிவிடுகிறார். மாவட்ட நீதிபதி இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறவரைப் போடவேண்டும் அல்லது ஓய்வு பெற்றவரைத்தான் போடவேண்டுமென்றால், உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதியைப் போடவேண்டும். இது வழக்கறிஞர்கள் சமரஸத்திற்கு வர இந்த அரசுக்கு நாங்கள் எடுத்து வைக்கிற

யோசனை. சஸ்பென்ட் செய்ய முடியாது, தற்காலிக வேலை நீக்கம் கூடாது என்று அரசு முடிவைத் தெரிவித்து விட்ட காரணத்தாலே எதிர்க் கட்சிகளின் சார்பாக எங்களுடைய சமரச யோசனை, அவர் திருப்பரங்குன்றத்திலிருந்து தல்லாகுளத்திற்கு மாற்றிய நிலைக்கு முற்றிலும் மாறாக வேறு ஒரு மாவட்டத்திற்கு அவரை வேலை மாற்றம் செய்கிறோம் என்று அரசு உறுதி அளித்தால் இந்த பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டுவிடும். ஜனநாயகத்திலே நீதித்துறை, சட்டமன்றத் துறை, நிர்வாகத் துறை இந்த மூன்றும் ஒரு அரசின் முக்கியமான அம்சங்கள். அதிலே ஒரு துறை இன்றைக்கு ஒழுங்காகச் செயல்படாத அளவிற்கு, செம்மையாக நடைபெறாத அளவிற்கு நிர்வாகத் துறை காரணமாக இருக்கிறது என்றால் அதை சட்டமன்றத் துறை தான் ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். சட்டமன்றத்திலே இருக்கிற எதிர்க்கட்சிகள் அனைத்தும் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு அரசாங்கத்தோடு ஒத்துழைக்கின்ற வகையில் நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே இந்தக் கோரிக்கைகளை எடுத்து வைக்கிறோம். ஓய்வு பெற்ற நீதிபதியைத்தான் போட வேண்டுமென்றால், ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதியைப் போடுங்கள். அவரை வேலை நீக்கம் செய்ய முடியாது என்றால் - சஸ்பென்ஷன் செய்ய முடியாது என்றால் - வேறு மாவட்டத்திற்காவது அந்த அதிகாரியை மாற்றுங்கள், இதற்காகவாவது இந்த அரசு உடன்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறைக் கைதிகள் பிரச்சினை

உரை : 22 நாள் : 6.3.1981

கலைஞர் மு.கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே! தங்களுடைய முன் அனுமதியோடு, இங்கே ஒரு முக்கியமான பிரச்சினையை இந்த அரசின் கவனத்திற்கு, குறிப்பாகவும், சிறப்பாகவும் சிறைச்சாலைத் துறை நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

இது ஒரு மனிதாபிமான பிரச்சினை. தமிழ் நாட்டில் அண்மையில் நடைபெற்ற அரசாணை எரிப்புப் போராட்டத் தில், பல சிறைச்சாலைகளில் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் பல்லாயிரக்கணக்கில் அடைக்கப்பட்டிருக் கின்றார்கள். இரண்டொரு சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வேறொருவரை பொறுத்த வரையில் ஓரளவு அந்தக் குறைபாடு நீக்கப்பட்டிருக்கின்றது. அப்படி நீக்கப்பட்டதற்கு நான் அரசிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிற அதே நேரத்தில், திருச்சி, கோவை போன்ற இடங்களில் இன்னும் அந்தக் குறைபாடுகள் நீக்கப்படாமல் இருக்கின்றன. நேற்று திருச்சி சிறைச்சாலையிலுள்ள கைதிகள் உண்ணாமலேயே இருந்திருக் கிறார்கள்.

அங்கே அவர்கள் நடத்தப்படுகின்ற முறையும் கொடூர மானதாகவும் ஈவு இரக்கமற்றதாகவும் இருக்கிறது என்று எனக்குச் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. ஒரு வேளை அங்குள்ள அதிகாரிகளுக்குத் தகுந்த வசதி வாய்ப்பு களை கொடுக்காத காரணத்தாலோ அல்லது செய்துகொடுக்க விரும்புகின்ற வசதி வாய்ப்புகள் துரிதமாகப் போய்ச் சேராத

காரணத்தாலோ அந்த நிலை ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கருதுகிறேன். அன்றைக்கு முதலமைச்சர் அவர்களும் உறுதியளித்தார்கள். உடனடியாகக் கவனிக்கப்படும் என்று. அந்தத் துறை அமைச்சர் அவர்களும் என்னிடத்திலும் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்களிடத்திலும் இது குறித்துப் பேசி உடனடியாக ஆவன செய்வதாகச் சொன்னார்கள். இருந்தும்கூட அங்கு எதுவும் நடைபெறவில்லை. தங்களுடைய அனுமதியோடு இங்கே இந்தப் பொட்டலத்தைக் காட்ட விரும்புகிறேன். தங்களிடத்திலே காட்டினேன் அனுமதியைப் பெற்று. (வேகாத சோளப் பொட்டலத்தைக் காட்டினார்கள்). இது அங்குள்ள கைதிகளுக்குத் தரப்படுகிற உப்புமா. அளவு அல்ல இது; இது உப்புமாவுக்குத் தரப்படுகிற சோளத்தின் நொய்யும் அல்ல, சமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிற உப்புமா, நான் எடையைச் சொல்லவில்லை. தரத்தைச் சொல்லுகிறேன். அமைச்சர் அவர்களும் கருணை கூர்ந்து இதைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாத்திரம் உரிய பிரச்சினையல்ல, இந்த மன்றத்திலே இருக்கிற எல்லா எதிர்க்கட்சிகள், ஆளுங்கட்சியிலே உள்ள மனிதாபிமானம் உள்ள அத்தனை பேருக்கும் உரிய பிரச்சினை என்ற காரணத்தினால் உடனடியாக ஆவன செய்வதற்கு அரசு முயற்சிகளை எடுத்துக் கொள்ளுமா என்று கேட்டு இந்தப் பிரச்சினையை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பால் கமிஷன் அறிக்கை

உரை : 23 நாள்: 13.02.1982

கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள நீதிபதி பால் அவர்களுடைய அறிக்கையைக் குறித்தும், அதன் தொடர்பாக அல்லது அதற்கு மேலாக என்று எண்ணிக்கொண்டு வைக்கப்பட்டுள்ள திரவியம் அவர்களுடைய அறிக்கையைக் குறித்தும் நடைபெறுகின்ற விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்துக்களை நான் எடுத்துக்கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். நேரம் அதிகம் இல்லை எனினும் நேற்றைய தினம் அவை முன்னவரோடும், முதல்வரோடும், தங்களோடும் பேசி முடித்தவாறு 11 மணிக்குள்ளாக என்னுடைய பேச்சை முடித்துவிட விரும்புகிறேன்.

1980ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26ஆம் நாள் திருச்செந்தூரிலே சரிபார்ப்பு அதிகாரி சுப்பிரமணியப் பிள்ளை இறந்தது குறித்த செய்தி வெளிவந்தது. அந்தச் செய்திகளுடனே அது மர்ம மரணம் என்றும், தற்கொலை என்றும், கொலை என்றும் பல்வேறான செய்திகள் வெளிவந்தன.

இங்கே பல்வேறு கட்சிகளுடைய தலைவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல திராவிட முன்னேற்றக் கழகம் மாத்திரம், இது தனக்குரிய ஒரு பணி என்று எடுத்துக் கொள்ளாமல், அந்தப் பகுதியிலே உள்ள அனைத்துக் கட்சிகளும் இந்த மர்ம மரணம் பற்றி அரசு உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுத்து ஆய்வு செய்து அதனை உலகுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்தன. அதனுடனை தொடர் பாகத்தான் இன்றைக்கு இந்த மன்றத்திலேகூட 8 அல்லது 9 கட்சிகள் ஆளுங்கட்சியைத் தவிர என்றுகூடச் சொல்லலாம், அனைத்துக் கட்சிகளும் இந்தக் கோரிக்கையை முன்வைத்து, சரியான நீதி, நியாயம் வழங்கப்பட வேண்டுமென்பதிலே,

அழுத்தந் திருத்தமாக, வாதாடுகின்ற காட்சியினை நாம் காண் கிறோம். சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் மர்மமாக மரணம் அடைந்திருக்கிறார் என்ற தகவலை உலகுக்கு அறிவித்து, அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று ஆலய ஊழியர்களுடைய சங்கத்தினர் தீர்மானம் போட்டார்கள். அந்தப் பகுதியிலே உள்ள எல்லாக் கட்சியைச் சேர்ந்த, மாவட்ட அளவிலே உள்ள நிர்வாகிகள், தலைவர்கள், கண்டனக் கூட்டங்களை நடத்தினார்கள். ஊர்வலங்களை நடத்தினார்கள். டிசம்பர் 2ஆம் தேதி அன்று திருச்செந்தூரில் ஒரு முழு அடைப்பு-- கடை அடைப்பு, வேலை நிறுத்தம், என்கிற அளவுக்கு நடைபெற்றது. இவ்வளவும் நடந்து முடிந்து, டிசம்பர் 3-ஆம் தேதி வரையிலே காத்திருந்த நான் இப்படி பல்வேறாகச் செய்திகள் வந்தபொழுது பிரதமருக்கும், மத்திய உள்துறை அமைச்சர் மாண்புமிகு ஜெயில் சிங் அவர்களுக்கும், மேதகு தமிழக ஆளுநருக்கும், மாண்புமிகு முதலமைச்சருக்கும் பின்வருமாறு ஒரு தந்தியினை நான் அனுப்பினேன்.

""Subramania pillai, Jewel verification Officer-cum- Assistant commissioner of Hindu Religious and Cnharitable Endowments Department of Thirunelveli dead under mysterious circumstances on 26th November at Subramaniaswami Devasthanam Inspection Bungalow, Tiruchendur. All political parties suspect murder. Trust Board Members absconding. Hartal by public on and December at Tiruchendur demanding proper investigation and enquiry. Please intervene. Cause proper investigation and enquiry by independent CID branch."

என்ற இந்தத் தந்தியை நம்முடைய முதலமைச்சர் உள்ளிட்ட அனைவருக்கும் நான் அன்றைக்கு அனுப்பினேன். எனவே, எடுத்த எடுப்பில், சி.பி.ஐ.விசாரணை வேண்டு மென்கிற அளவுக்கு நான் போகாததற்குக் காரணம், அல்லது கழகம் கருதாததற்குக் காரணம், இங்குள்ள நேர்மையான காவல் துறை அதிகாரிகளைக் கொண்டே இந்த விசாரணையை இந்த அரசு நடத்தும் என்ற நம்பிக்கையினுடைய அடிப்படையிலே தான். ஆனால் 3ஆம் தேதி இப்படிப்பட்ட ஒரு தந்தியை, எதிர்க்கட்சியினுடைய தலைவன் என்கின்ற முறையிலே நான்

அனுப்பியதற்கு மறுநாள் டிசம்பர் 4ஆம் நாள், அறநிலையத் துறை அமைச்சர், அருமை நண்பர். மாண்புமிகு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் நிருபர்கள் கூட்டத்தைக் கூட்டி, அதிலே தன்னுடைய கருத்துக்களையும், அதிகாரிகள் தந்த அறிக்கை யினையும் எடுத்து வைத்தார். அவருடைய கட்சி ஏடான. அண்ணா பத்திரிகையிலே, 4-12-1980 என்று திருச்செந்தூரில் நடந்தது என்ன? இறந்தவரை வைத்து கருணாநிதி நடத்தும் அரசியல் மோசடி, ஆர்.எம்.வீ. கடும் கண்டனம் என்று தலைப் பிட்டு, 'திருச்செந்தூரில் உண்டியல் எண்ணும்போது நடந்த சம்பவம்பற்றி பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. நேற்று முதல் எதிர்க்கட்சித் தலைவர் அந்த விஷயத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார். அடிப்படையே இல்லாத ஆதாரம் ஏதும் இல்லாத முழுப்பொய்யை ஜோடித்து ஒரு கற்பனைக் கதையை எதிர்க்கட்சித் தலைவர் உருவாக்கி இருக்கிறார். அனைத்திந்திய அண்ணா தி.மு.கழக ஆட்சிமீதும் அறங்காவலர் மீதும் பழி போடும் வேலையில் எதிர்க்கட்சித் தலைவர் ஈடுபட்டுள்ளார். அவரது குடும்பப் பத்திரிகையும் அந்தப் பணியில் ஈடுபட் டுள்ளது. பெரிய கொலை நடந்திருப்பதாகப் பிரதமருக்கு அவர் தந்திகூட அனுப்பி இருக்கிறார். நான் முதல்வருக்கும் அனுப் பினேன். ஆனால், அமைச்சர் அவர்கள் இப்படி குறிப்பிடு கிறார்கள்.

இன்றைய முரசொலியில் எட்டுக்காலத் தலைப்பிட்டுச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அ.தி.மு.க.வினர் அடித்துக் கொன்றனர் என்ற செய்தி வெளியிட்டுள்ளனர். பொறுப்பற்ற முறையில் இப்படிப்பட்ட செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. அங்கே என்ன நடந்தது என்ற உண்மை விவரங்களை வெளியிடக் கடமைப்பட் டுள்ளோம். இந்தச் சம்பவம் நடந்தபோது அங்கே 50, 60 பேர்கள் இருந்திருக்கிறார்கள். அங்கே நடந்த சம்பவம் குறித்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் துறை உயர் அதிகாரியும் அறிக்கை அனுப்பியுள்ளனர். மாவட்ட ஆட்சித்தலைவர் அனுப்பியுள்ள அறிக்கையில் கூறி இருப்பதை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். (அதற்குப் பிறகுதான் அறிக்கையையே அவர் வெளியிடுகிறார். அதுவரையில் எதிர்க் கட்சித் தலைவருக்கு உரிய அர்ச்சனை நடைபெறுகிறது?)அந்த

அறிக்கையிலே சுப்பிரமணியப் பிள்ளை உண்டியலைத் திருடினார் என்றும் அதன் காரணமாக ஓடி ஒளிந்தார் என்றும். அவரைத் துரத்திச் சென்று அந்தப் பணத்தைக் கைப்பற்றினார் என்றும், அவமானம் தாங்க மாட்டாமல், அவர் தற்கொலை செய்து கொண்டார் என்றும் அந்த அறிக்கையை அமைச்சர் அவர்கள் படித்து முடிந்ததும், நிருபர் கேட்கிறார், ''அந்த அதிகாரியின் உடையிலே ரத்தக்கறை இருந்ததாக கருணாநிதி எழுதி இருந்தாரே'' என்று கேட்ட போது அமைச்சர், ''யார் யாரோ எதை எல்லாமோ எழுதுவார்கள், ரத்தக் கறை'' எதுவும் இல்லை. அந்த அதிகாரி வராமலே உண்டியல் உடைக்கப்பட்ட தாகக்கூட எழுதி இருக்கிறார்கள். ஆனால் அந்த அதிகாரி முதல் நாள் இரவே பியூனுடன் வந்து, தங்கியிருக்கிறார். அவர் பார்த்த பிறகுதான் உண்டியல் உடைக்கப்பட்டது. 7 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்தவர், எதிர்க்கட்சித் தலைவராக இப்போது இருப்பவர், நேற்று முதல் இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டு பொறுப்பற்ற முறையிலே எழுதத் தொடங்கி இருக்கிறார். ஒரு மரணம் ஏற்பட்டால் அதை எடுத்து வைத்துக் கொண்டு பொறுப்பற்ற முறையில் மனமறிந்து, பொய்களைச் சொல்கிறார். அடித்துக் கொன்றதாகச் சொல்கிறார். எதிர்க்கட்சித் தலைவர் இப்படிப்பட்ட மோசடியில் ஈடுபட்டிருப்பது வருந்தத்தக்கது. இந்த மரணத்தை வைத்துக்கொண்டு அரசியல் மோசடி செய்கிறார். திருச்செந்தூரில் இந்தச் சம்பவம் பற்றி எல்லா விவரமும் தெரிந்திருப்பதால் அங்கு எந்தப் போராட்டமும் நடக்கவில்லை'' என்று கூறினார் என்று அண்ண பத்திரிகையிலே முதல் பக்கத்தில் வெளிவந்தது.

திருச்செந்தூரிலே எந்தப் பரபரப்பும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியது எவ்வளவு அப்பட்ட மான உண்மைக்கு மாறான தகவல் என்பதை நேற்றைய தினம் பேசிய என் அருமை நண்பர் நெடுமாறன் இங்கே கூறி இருக்கிறார். அதைப்போலவே மற்றக் கட்சியினுடைய தலைவர் களும், திருச்செந்தூர் மக்கள் எந்த அளவுக்கு கொந்தளித் திருக்கிறார்கள், குமுறுகிறார்கள், கடை அடைப்பு வரையிலே சென்றார்கள். ஆனால் டிசம்பர் 4-ந் தேதி அமைச்சர் அவர்கள் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் நாவலர் அவர்களும் சென்றதாக எனக்கு நினைவு, நெல்லைக்குச்

சென்றவர்கள், திருச்செந்தூர் சென்று அந்த ஆலயத்தையும் ஆலய வளாகத்தையும், ஆய்வகத்தையும் பார்வையிட்டு, சென்னைக்குத் திரும்பிய பிறகு டிசம்பர் 11-ந் தேதி இதுகுறித்து நீதிவிசாரணை நடக்கும் என்று முதல் அமைச்சர் அவர்கள் சென்னையிலே அறிவித்தார்கள். பிறகு டிசம்பர் 19-ந் தேதி நீதிபதி பால் அவர்களுடைய பெயர் அறிவிக்கப்பட்டு அரசு ஆணையின் மூலம் அது தெரிவிக்கப்பட்டது. பால் அவர்கள் அதை மிக உன்னிப்பாக, கவனமாக பல்வேறு விதமான விசாரணை செய்து ஆய்ந்து ஒரு அறிக்கையினை இன்றைக்கு இந்த அரசாங்கத்தினிடத்தில் தந்திருக்கிறார். பால் அவர்க ளுடைய விசாரணைக் கமிஷன் நடைபெற்றபோது, அவர்களே குறிப்பிட்டு இருப்பதைப்போல் இரண்டு தரப்பினர் இதிலே விசாரிக்கப்பட்டார்கள். அல்லது விசாரணையில் கலந்து கொண்டார்கள். 'அ' தரப்பு என்பது அறங்காவலர் குழுவைச் சேர்ந்தவர்கள், காவல் துறையைச் சேர்ந்தவர்கள், இவர்கள் எல்லாம் 'அ' தரப்பினுடைய முக்கியமான பணியாக இது இருந்தது என்றால், அதிகாரி சுப்பிரமணியப் பிள்ளை தூக்கு மாட்டிக் கொண்டு, தற்கொலை செய்து கொண்டார் என்பதை மெய்ப்பிப்பதற்காகத்தான் அவர்கள் அரும்பாடுபட்டார்கள். அவர்கள் சார்பில், அறங்காவலர் குழு சார்பில் வழக்கறிஞர் விருத்தாசலம் ரெட்டியார் அவர்களும், அரசின் சார்பில் பத்மினி ஜேசுதுரை அவர்களும், வாதிட்டார்கள். அடுத்து 'ஆ' தரப்பினர் இது தற்கொலை அல்ல என்று வாதாடுகின்ற தரப்பு. அந்தத் தரப்பின் சார்பில் வழக்கறிஞர்கள் எட்மண்ட், இரணியல்ரவி, ஏ.எல்.சுப்பிரமணியம் மற்றும் சில வழக்கறிஞர்களும் இந்த விசாரணையிலே ஈடுபட்டார்கள். இந்த விசாரணைக்கு என்று ஒருவரம்பு, டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ், தரப்பட்டது. இப்போது வைக்கப்பட்டிருக்கின்ற அரசு ஆணையிலே சொல்லப்பட்டிருக் கின்ற குற்றச்சாட்டே, நீதிபதி பால் அவர்கள் இந்த டெர்ம்ஸ் ஆப் ரெபரன்சை, விசாரணை வரம்பை மீறி இருக்கிறார் என்பதுதான். என்ன அந்த விசாரணை வரம்பு முதலில் தரப்பட்டது (அ) இந்து சமய அறநிலையத் துறையின் சரிபார்ப்பு அதிகாரி திரு.சி.சுப்பிரமணியப் பிள்ளை இறந்ததற்கான காரணத்தையும், சந்தர்ப்ப சூழ்நிலையையும் பற்றி விசாரணை செய்யவும் (ஆ) அத்தகைய சம்பவம் மீண்டும் நிகழாமல்

தடுப்பதற்குத் தக்க நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்யவும் என்பதுதான் டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்' இதிலே எப்படி விசாரணை வரம்பு மீறப்பட்டது என்பதை அரசு யூகிக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. ஒரு சாவுக்கான காரணம் விபத்தாக இருக்கலாம், தற்கொலையாக இருக்கலாம், கொலையாக இருக்கலாம் அல்லது இயற்கைச் சாவாக இருக்கலாம். இதிலே இயற்கைச் சாவு என்பதும், விபத்து என்பதும் வருவதற்கு இடமே இல்லை. தற்கொலை என்றால் சுப்பிரமணியப் பிள்ளை உண்டியல் பணத்தைத் திருடினார் என்ற குற்றச் சாட்டோடு அது இணைகிறது. அந்தக் குற்றச்சாட்டு, அடிப் பட்டுப் போகிறபோது, கொலை என்பது நிரூபிக்கப்படுகிறது. கொலைக்கான காரணங்களை ஆராய்ந்தும் விசாரணை வரம்புக்கு உட்பட்ட காரியமேயாகும். கொலைக்கான காரணங் களை ஆராயச் சொல்லித்தான் 'டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்' தரப்பட்டது.

அறங்காவலர்களும், நிர்வாகிகளும் நடத்திய உண்டியல் திருட்டுக்கு சுப்பிரமணியப் பிள்ளை உடந்தையாக இல்லை. மாறாக மறுப்பு தெரிவிக்கிறார். அதனால் கொல்லப்படுகிறார். எனவே, சுப்பிரமணியப் பிள்ளை மரணத்திற்கான காரணங் களை விசாரிக்க வேண்டியது பால் அவர்களின் விசாரணை வரம்புக்கு உட்பட்டது. அவர் கண்டுபிடித்துத் தெரிவித்து இருக்கிறார். அந்தக் காரணங்களின் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும். அறங்காவலர் குழுவினர் கோவில் நிர்வாகி களாக இருப்பதால் நீக்கி வைக்கப்பட வேண்டும் என்பதுதான் அந்த அறிக்கையின் முடிவான கருத்து.

காரணஸ்தர்களாலே தான் காரணம் ஏற்படுகிறது என்பதை மறந்து விடக்கூடாது. காரணம் அரூபமானது. அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. காரணஸ்தர்கள் உருவம் உடையவர்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னால் அது எப்படி விசாரணை வரம்பை- டர்ம்ஸ் ஆப் ரெபரன்சை கடந்ததாக இருக்கும் என்பதை அரசுதான் விளக்க வேண்டும். எனவே, விசாரணை வரம்பு எதுவுமே மீறப்படவில்லை என்பதுதான் இந்த விளக்கத்தின் மூலம் தெளிவுபடுகிறது.

நீதிபதி பால் தெரிவித்துள்ள முடிவான கருத்துக்கள் தெளிவாக இருக்கிறது. சுப்பிரமணியப் பிள்ளை கோவிலுக்கு வந்து சேரும் முன்பே உண்டியல்கள் திறக்கப்பட்டன. அதைக் கண்ட சுப்பிரமணியப் பிள்ளை எதிர்ப்பு தெரிவித்து, எண்ணிக் கையில் கலந்து கொள்ளாமல், அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப் போவதாகச் சொல்லிவிட்டு ஆய்வகம் சென்றுவிட்டார். அதன் பிறகு அவர் தாக்கப்பட்டு, அவருக்கு காயங்கள் விளைவிக்கப் பட்டன. அதன் விளைவாக அவர் உணர்வு இழந்தார். அவரது குரல்வளை நெறிக்கப்படுவதற்கான முயற்சிகள்கூட செய்யப் பட்டு இருக்கலாம். அவர் தற்கொலை செய்துகொண்டார் என்று தோன்றுமாறு செய்ய அவர் துவலைக் குழாயில் தொங்கவிடப் பட்டார் என்று சந்தேகிக்க ஆதாரங்கள் உள்ளன. சுருங்கச் சொன்னால், மரணம் விளைவிக்கக்கூடிய வன்முறை காரணமாக அவர் தன்னுடைய மரணத்தைச் சந்தித்தார் என்று நம்புவதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன. இச்சம்பவத்தைக் கோவிலில் உள்ள ஊழியர்கள் மட்டுமே பார்த்து இருக்க முடியும். அவர்கள் கமிஷன் முன்னிலையில் சாட்சியம் தரமாட்டார்கள். அறங்காவலர் குழு இன்னும் செயல்பட்டுக் கொண்டு இருப்பதால் ஊழியர்கள் சாட்சியம் சொல்ல அஞ்சுவார்கள் என்ற 'ஆ' தரப்பினரின் வாதத்தை தள்ளிவிட முடியாது. இச்சூழ்நிலையில் அறங்காவலர் குழுவைத் தற்காலிகமாக விலக்கியோ அல்லது நீக்கியோ வைத்தபிறகு, குற்றப்புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவு போன்றதோர் தனிப்பட்ட குற்றப் புலனாய்வு அமைப்புகளால் முழு அளவில் தீர ஆய்வு செய்யப்பட வேண்டும். அறங்காவலர் குழுவினால்தான் தேவஸ்தான ஊழியர்களும், மற்றவர்களும் இது பற்றி இன்னும் அதிகமாக விளக்கம் அளிக்க முன்வரலாம்.

நீதிபதியின் இந்த அறிக்கைதான் விசாரணை வரம்பை மீறுகிறது என்று அரசாணை குறிப்பிடுகிறது. மரணம் அடைந்த காரணத்தை, சூழ்நிலையைக் குறித்து விசாரணை நடத்தச் சொன்னீர்கள். அந்த நீதிபதி காரணத்தை அறிவித்து இருக் கிறார்கள். இத்தகைய நிகழ்ச்சி மீண்டும் நடக்காமல் இருப்பதற் குரிய நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கச் சொல்லியிருக் கிறீர்கள். அதைத்தான் அவர் பரிந்துரைத்துள்ளார்கள். நடந்த

நிகழ்ச்சியில் எடுக்கும் நடவடிக்கைதான், இதுபோன்ற நிகழ்ச்சி மீண்டும் நடக்காமல் தடுப்பதற்கேற்ற பரிந்துரை என்று ஏன் நீங்கள் எண்ணிடத் தவறுகிறீர்கள் என்பதுதான் எனக்குப் புரிய வில்லை. அரசின் சார்பிலே எழுதப்பட்டுள்ளன மறுப்புக் கருத்துகள் இந்த அவையில் வைக்கப்பட்டுள்ளன. அவைகள் அனைத்தும் ஏற்கெனவே விசாரணை கமிஷனிலே வழக்கறிஞர் விருத்தாசலம் ரெட்டியார் அவர்களால் 'அ' தரப்பிற்காக வாதிக்கப்பட்டு, நீதிபதியால் ஏற்றுக் கொள்ளப்படாத அந்தக் கருத்துக்களைத்தான் நீங்கள் மீண்டும் அரசு அறிக்கையாக அதாவது விருத்தாசலம் ரெட்டியாரின் அந்தக் கருத்துக்களை அந்த வாதங்களை இங்கே அச்சடித்து வைத்து இருக்கிறீர்கள் என்று நான் கூற விரும்புகிறேன்.

'அ' தரப்பை மட்டும் விசாரித்தது கமிஷன். 'ஆ' தரப்பை விசாரிக்கவில்லை. இது அரசு ஆணையிலே நீங்கள் சுட்டிக் காட்டியுள்ள ஒரு குற்றச்சாட்டு. நான் முதலிலேயே சொல்ல விரும்புகிறேன். 'ஆ' தரப்பை விசாரிக்க வேண்டுமென்று 'அ' தரப்பு வழக்கறிஞர்களால் கோரப்படவே இல்லை என்பதுதான் இதற்கு நான் அளிக்கின்ற பதிலாகும்.

பொதுவாக ஒரு வழக்கிலே இரண்டு வழிகள் உண்டு. ஒன்று தனது தரப்பில் கண்கண்ட அதாவது 'ஐ' விட்னஸ் சாட்சிகளையும், சூழ்நிலை அதாவது 'சர்கம் ஸ்டன்ஷியல்' சாட்சிகளையும் விசாரிப்பது. இது 'பாசிடிவ் மெதேடு'. அடுத்து மாற்றுத் தரப்பு சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்து அவர்களது கூற்றைப் பொய்யாக்குவது, இது நெகடிவ் மெதேடு. இந்த இரண்டாவது முறை நெகடிவ் மெதேடுதான் இந்த விசாரணையிலே கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. மேலும் 'அ' தரப்பினர் 'ஆ' தரப்பு சாட்சிகளை விசாரிக்க வேண்டுமென்று கூறவே இல்லை.

அது மட்டுமல்ல. சுப்பிரமணிய பிள்ளை பணத்தைத் திருடி, அது கண்டுபிடிக்கப்படவே மானத்துக்கு அஞ்சி தற்கொலை செய்து கொண்டார். அதற்கான நேரடி சாட்சிகள் என்று சொல்லிக் கொள்கின்றவர்கள், அதை உண்மை என்று கூறும் காவல் துறையினர்தான். சுப்பிரமணிய பிள்ளை கொலை செய்யப்படவில்லை. தற்கொலை செய்துகொண்டார் என்று

திட்டவட்டமாக நிரூபிக்க வேண்டியவர்கள் அவர்கள். மேலும் கொலை செய்யப்பட்டார் என்று கூறுபவர்களுக்கு புலன் விசாரணை செய்ய உரிமை இல்லை, வசதி இல்லை. அவர்கள் எதிர்த்தரப்பினரை குறுக்கு விசாரணை செய்து, சுப்பிரமணியப் பிள்ளை தற்கொலை செய்யவில்லை என்று நிரூபித்துக் காட்டினாலே போதும். அதைத்தான் அவர்கள் செய்திருக்கிறார்கள். எனவே இதில் 'அ' தரப்பினர் விசாரிக்கப்படவில்லை என்று கூறுவது அவர்களை விசாரிக்குமாறு 'ஆ' தரப்பினர் கோர வில்லை என்ற பதில் மூலம் அடிபட்டுப் போகிறது என்பதை நான் இந்த அவையிலே எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக் கிறேன்.

அரசு ஆணையில் இரண்டாவதாகக் கூறப்படுவது, எச்.ஆர். அண்டு சி.இ.கமிஷனரின் உதவியாளர் அர்ச்சுனன் என்பவர் சாட்சியத்திற்கு கமிஷன் முக்கியத்துவம் அளித் துள்ளது. அவர் சுப்பிரமணியப் பிள்ளை எளியவர் என்றும் அவர் மீது எந்தப் புகாரும் கிடையாது என்றும் கூறியுள்ளார். ஆனால் அதே அதிகாரியான அர்ச்சுனன் சுப்ரமணியப் பிள்ளை பற்றி வந்த புகார் குறித்து அவரிடமே விசாரித்த சம்பவங்கள் பற்றிய அறிக்கைகள் அரசிடம் உள்ளன என்று பின்னால் கூறியிருக்கிறார்.'' இது நீங்கள் இங்கே வைத்திருக்கிற அரசு ஆணையில் அச்சிடப்பட்டிருக்கிறது. நான் கேட்க விரும்பு கிறேன். அப்படியானால் அரசிடம் இருக்கிற அதே அர்ச்சுன னுடைய அறிக்கைகளை ஏன் விசாரணை நடைபெற்ற நேரத்தில் கமிஷன் முன் வைக்கவில்லை. எனவே அர்ச்சுனன் கூறியதாகச் சொல்லப்படுபவை எல்லாம் அவர்கள்மீது எந்தப் புகாரும் இல்லை என்று முதலிலே நீதிபதி பால் கமிஷன் முன்னால் சொன்ன எச்.ஆர்.அண்ட் சி.இ. கமிஷனர் உடைய உதவியாளர் அர்ச்சுனன் பிறகு இப்படிப்பட்ட புகார்கள் அவர் மீது உள்ளன' என்று விசாரணை முடிந்த பிறகு சொல்கிறார் என்றால் இது ''ஆஃப்டர் தாட்'' அதற்கும் பிறகு அர்ச்சுனனை கசக்கிப் பிழிந்து ஆரம்பத்திலே இப்படிப்பட்ட ஒரு மறுப்பு அறிக்கையை வைத்துக் கொள்கிற அளவுக்கு தேவையற்ற முறையற்ற ஒரு தன்மையில் ஒரு நடவடிக்கை அமைச்சர் மூலம் நடைபெற்றிருக்கக்கூடும் என்ற ஐயப்பாட்டைத்தான் இது உறுதிப்படுத்துகிறதே அல்லாமல் வேறு அல்ல.

மூன்றாவதாகச் சொல்கிறார்கள். எச்.ஆர்.அண்ட் சி.இ. செயலாளரையும் கமிஷனரையும் விசாரித்த கமிஷன் கலெக்டரையோ காவல்துறை அதிகாரிகளையோ ஏன் விசாரிக்க வில்லை என்று அரசு கேட்கிறது. எச்.ஆர்.அண்ட்.சி.இ. செயலாளரையும் கமிஷனரையும் சாட்சியமாக அழைக்க வேண்டுமென்று கமிஷன் விரும்பவில்லை. அதற்கு மாறாக 'ஆ' தரப்பு தற்கொலை அல்ல என்று வாதாடுகின்ற தரப்பிலே உள்ள இரணியல் ரவி போன்ற வழக்கறிஞர்கள் கொடுத்த மனு மீதான ஆணை பிறப்பிக்கப்பட்டு எச்.ஆர். & சி.இ. செயலாளரும் கமிஷனரும் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். கலெக்டரையோ காவல்துறை அதிகாரிகளையோ விசாரிக்க வேண்டுமென்று 'அ' தரப்பு வழக்கறிஞரான விருத்தாச்சலம் யாரோ அரசாங்க வழக்கறிஞரான பத்மினி ஜேசுதுரையோ கமிஷன் முன் கேட்டிருக்கலாம். அவர்கள் கேட்கவில்லை. எனவே அரசு ஆணையிலே எடுத்து வைத்திருக்கிற இந்த வாதமும் பொருந்தாத வாதம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மேகநாதன் அவர்களுடைய உறுதிமொழிப் பத்திரத்தை யும் குறுக்கு விசாரணையின்போது அவர்கள் அளித்த 'சஜஷன்'களையும் முரண்பாடு உள்ளவை என்று நீதிபதி கூறியதை அரசு தரப்பு தனக்கு ஆதரவாக எடுத்துக்காட்டுகிறது. ஆனால் நீதிபதி பால் மேகநாதன் அவர்களுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாமல் தன்னுடைய முடிவுகளை வழங்கி யிருக்கிறார். மேகநாதன் அவர்களுடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத பால் அவர்கள் இப்படிப்பட்ட ஒரு முடிவை அறிவித்திருப்பதிலிருந்து மேகநாதன் அவர்களுடைய கருத்துக் களை கண்ணை மூடிக் கொண்டு ஏற்றுக் கொள்ளவில்லை என்ற அவர்களுடைய நடுநிலைத்தனம்தான் இதிலே புரிகிறதே அல்லாமல் நீதிபதி பால் குறையுடையவர் அல்ல என்பதை நான் இந்த பதில் மூலம் அரசுக்கு எடுத்துக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

உண்டியல் திருடப்பட்டதை. சுப்பிரமணியப்பிள்ளை உடனடியாக ஏன் மேலதிகாரிகளுக்கு தந்தி மூலமோ தொலை பேசி மூலமோ தெரிவிக்கவில்லை? இது அரசாங்கத்தினுடைய

கேள்வி, அதற்கு நான் சொல்கிற ஒரே பதில் உயிரோடு இல்லாத ஒரு மனிதர் எப்படி தெரிவிக்க முடியும் என்பதுதான்; அதுமாத்திரமல்ல. சாவதற்கு முன்புகூட அவருக்கு தொலை பேசியில் பேச இடம் கொடுத்திருக்க மாட்டார்கள். ஒருவேளை அவர் ரிப்போர்ட் எழுதிக் கொண்டிருந்திருக்கலாம் ஆய்வகத் திலே அமர்ந்து. கொலை செய்யப்பட்டதை ஒட்டி எப்படி அவ ருடைய டைரியும் அவருடைய எழுதுகோலும் திருடப் பட்டதோ அதைப் போல அவர் எழுதிய ரிப்போர்ட்டும் திருடப்பட்டிருக்கலாம். எனவே இந்தச் சம்பவம் இந்த அரசுக்கு உள்ளத்திலே தோன்றவில்லையா? வேண்டுமென்றே தொலை பேசியில் தெரிவிக்கவில்லை என்று ஒரு புதிய வாதத்தை எடுத்து வைத்து நீதிபதி பால் அவர்கள் அளித்திருக்கின்ற ஒரு முடிவுக்கு மாறாக ஒரு புதிய தீர்ப்பை வழங்க வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு எப்படி ஏற்பட்டது என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

மிக முக்கியமான ஒன்றைச் சொல்கிறார்கள். உதவி இயக்குநர் ராமன் பிரச்சினைக்குரிய அந்த வேட்டி தொங்க விடப்படுவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்க முடியும் என்ற கருத்துக்களை வழங்கியுள்ளார். ராமன் என்ற உதவி இயக்குநர் தந்துள்ள சாட்சியத்தில் முதல் பகுதியிலே உள்ள 4 வரிகளை மாத்திரம் எடுத்துப்போட்டு ஒரு அரசு மற்ற வரிகளை எல்லாம் மூடி மறைத்து வாதம் செய்வது நியாயம்தானா என்று நான் கேட்க விரும்புகிறேன். அவர் சொல்கிறார் தொங்கவிட இது பயன்படுத்தப்பட்டிருக்க முடியும் என்று சொல்கிறார். தொங்க விட என்ற அந்தச் சொல்லை ஆழ்ந்து கவனித்தால் ஒரு பிணத்தைத் தொங்கவிட என்று ஏன் நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது? ராமன் அவர்கள் சொன்னதில் முதல் வரியை மாத்திரம் எடுத்துக் கொண்டீர்கள். ஆனால் ராமன் மேலும் என்ன தெரிவிக்கிறார்? அதே பேராகிராஃபிலே அந்தப் பகுதியிலே அடுத்து என்ன சொல்கிறார்? மடிக்கப்பட்டிருந்த வேட்டியின் நீளம் மிகவும் குட்டை என்றும், எந்த முனையிலும் ஒரு முடிச்சுப்போட மட்டுமே பயன்படுத்தி இருக்க முடியும் என்றும் அவ்வாறு போடுவதற்குக் கூட சாமர்த்தியம் வேண்டும் என்றும் 7 அடி 6 அங்குலம் உயரத்திலே உள்ள ஒரு குழாய் மீது ஒருவர் தொங்குவதாகக் கற்பனை செய்து பார்த்தால் அவர்

அனேகமாக குழாயின் உயரத்திற்குத் தானே எம்பித்தான் அவ்வாறு செய்ய வேண்டி இருந்திருக்கலாம். அந்த வேட்டியைக் கொண்டு இறந்த சுப்பிரமணியப் பிள்ளை போன்ற தடித்த கழுத்தை உடைய பருமனான ஒருவர் முதலிலே சுருக்கு வளையம் போட்டுக் கொண்டு கழுத்தைச் சுற்றி பின்னால் சுருக்கிட்டுக்கொண்டு தானே தொங்குவது என்பது மிகவும் கடினமானதாகும் என்று ராமன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். அந்த ராமனுடைய சாட்சியத்திலே உள்ள பிற்பகுதி அனைத்தையும் விட்டுவிட்டு முற்பகுதியிலே தொங்கவிட அது பயன்பட்டது என்ற இரண்டு வரிகளை மாத்திரம் எடுத்து கையாண்டு ஒரு அரசு ஆணையின் மூலமாக நீதிபதி பால் தெரிவித்திருக்கின்ற ஒரு நல்ல தீர்ப்பினை மறைக்க முயல்வது தேவைதானா என்று இந்த அரசை நான் கேட்க விரும்புகிறேன்.

பிணப் பரிசோதனை நடத்திய டாக்டர் ராமமூர்த்தி பிரச்சினையிலே உள்ள வேட்டி தன்னைத் தூக்கிட்டுக்கொள்ள இறந்து போனவரால் பயன்படுத்தப்பட்டிருக்க முடியும் என்று உறுதியாகக் கூறியுள்ளார் என்றும் அரசாங்கத்தினுடைய அறிக்கை கூறுகிது. டாக்டர் ராமமூர்த்தி பிணப் பரிசோதனை செய்ய மறுத்தவர். வேட்டி பற்றிக் கருத்துக் கூற அவருக்குத் தகுதி இல்லை. வேட்டியைப் பற்றி ராமமூர்த்தி சொன்னதைப் பெரிதாகத் தங்களுக்கு அனுசரணையாக அரசு எடுத்துக் கொண்டு இங்கே அச்சியற்றி வைத்திருக்கின்றது. ஆனால் அந்த வேட்டி பற்றி நீதிபதி பால் என்ன கூறுகிறார் என்பதைக் கவனிக்க வேண்டாமா? வேட்டியை நீதிமன்த்திலே வெளிப் படையாக அளந்து பார்த்ததில் 352 சென்டிமீட்டர் நீளம் இருந்தது. டாக்டர் ராமமூர்த்தி அவர்களுடைய சாட்சியத்தில் சுப்பிரமணியப்பிள்ளையினுடைய உடலை சவப் பரிசோதனைக் காக தன்னிடத்திலே கொண்டு வந்தபோது அதிகாரி தானே தூக்கிட்டுக் கொண்டதாகச் சொல்லப்பட்டும் வேட்டியைக் கொண்டு வரவில்லை என்றும் அதாவது பிரதேத்தைக்கொண்டு வரும்போது பிரேதப் பரிசோதனைக்குக் காத்திருந்த ராமமூர்த்தி யினிடத்தில் அதிகாரியுடைய அந்த வேட்டி கொண்டுவரப்பட வில்லை என்றும் அதைப்பற்றி சப்இன்ஸ்பெக்டரிடம் ராமமூர்த்தி கேட்டபோது அந்த வேட்டி ரத்தக்கறை படிந்ததாக இருந்ததால் அது கொண்டு வரப்படவில்லை என்று உதவி சப்

இன்ஸ்பெக்டர் அவரிடத்திலே கூறியதாகவும் உடனடியாக வேட்டியைக் கொண்டு வருவதாகவும் கூறி இருந்தார். ஆனால் அது கொண்டு வரப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். டாக்டர் ராமமூர்த்தி சம்பவம் நடந்த இடத்தை 27-11-80 அன்று பார்வையிட்டார். அப்போது வேட்டியை அளந்து 330 சென்டி மீட்டர் நீளம் இருந்ததைத் தன்னுடைய சவப் பரிசோதனைக் குறிப்பில் எழுதி வைத்ததாகக் கூறுகிறார்.

எனவே மேற்படி சாட்சியத்திலிருந்து இறந்து போனவர் தூக்கிட்டுக் கொண்டதாகச் சொல்லப்படுகிற வேட்டி முதலிலே இரத்தக்கறை படிந்தது என்று கூறப்பட்டதாகத் தெரிகிறது.

டாக்டர் இராமமூர்த்தி தன்னிடத்திலே காண்பிக்கப்பட்ட வேட்டியில் எந்தவிதமான கறையும் இல்லை என்று தெரிவித் திருக்கிறார். எனவே கமிஷனிடம் கொடுக்கப்பட்ட வேட்டி, வேறு ஒரு வேட்டிக்குப் பதிலாக கொண்டு வரப்பட்ட வேட்டி என்று நம்புவதில் நியாயம் இருக்கிறது என்று நீதிபதி பால் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அந்த வாதங்களை எல்லாம் மறைத்துவிட்டு, ஒரு வாச கத்திலே ஒரு பகுதியை மாத்திரம் வெட்டி எடுத்து, வேண்டும் என்றே அறங்காவலர்களை பாதுகாக்க அரசு முயற்சித்திருப் பதை நான் மிக மிக வன்மையாகக் கண்டிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

டாக்டர் கோபாலகிருஷ்ணன் அவர்களின் சாட்சியத்தைப் பற்றியும், டாக்டர் கோபாலகிருஷ்ணன் அவர்கள், இராம மூர்த்தியைவிட கெட்டிக்காரர் அல்ல என்றும் அரசு வாதிட்டு இருப்பதற்கு மாறாக, நீதிபதி பால் அவர்கள் டாக்டர் கோபால கிருஷ்ணன் அவர்கள் எவ்வளவு திறமை படைத்தவர் என்பதையும், எவ்வளவு காலம் அந்தத் துறையிலே அனுபவம் உள்ளவர் என்பதையும், ஏறத்தாழ 2,000 பிணங்களை பரிசோதனை செய்தவர் இராமமூர்த்தி என்றால், 14,000க்கு மேற்பட்ட பிணங்களை பரிசோதனை செய்து அதனுடைய முடிவுகளை அனுப்பியவர் கோபாலகிருஷ்ணன் என்பதையும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். எனவே, இதிலே நான்

அதிகமாகச் சென்று விவரிக்க விரும்பவில்லை நேரம் இல்லாத காரணத்தால்.

அரசு அறிக்கையில் ஒரு முக்கியமான விஷயம் பக்கம் 7 பேரா 23ல் டாக்டர் இராமமூர்த்தி, அடிபட்ட காயம் சுப்பிர மணியப் பிள்ளையின் உடல் மீது எதுவுமே இல்லை என்று அழுத்தந்திருத்தமாக சாட்சியம் கூறியிருக்கிறார். இது அப்பட்ட மான உண்மைக்கு மாறாக எடுத்து வைக்கப்பட்ட கருத்து. நீதிபதி பால் அவர்களுடைய அறிக்கையில் பக்கம் 54ல், ''சாவு குறித்து பின் ஆய்வு செய்யப்பட்ட போது, தலையில் காணப் பட்ட 3 காயங்களும் சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் இறப்பதற்கு முன்பாக ஏற்பட்டிருக்க வேண்டும் என்று இராமமூர்த்தி விளக்கமாக கூறியுள்ளார்.'' என்று நீதிபதி பால் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த உண்மையை அரசு மறைக்க வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அறங்காவலர் குழுவைக் கலைக்க வேண்டும் என்றால் அறநிலையத்துறை சட்ட விதிகளின்படிதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். கமிஷன் அளித்த தீர்ப்பின் முடிவை மாத்திரம் அடிப்படையாக வைத்து நடவடிக்கை எடுக்க முடியாது என்று விவாதிக்கும் அரசு, இதற்கு சான்றாக, இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில், மனோகரன் என்ற அதிகாரியின் மீது, கமிஷனின் முடிவின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு, பின்னர், அவர் தமது முறையீட்டை கேட்காமல் கமிஷன் எடுத்த முடிவுகளின்படி நடவடிக்கை எடுத்தது என்று வாதாடி வெற்றி பெற்றதைச் சான்றாகக் கொடுக்கிறார்கள் அரசு குறிப்பிலே.

நான் இங்கே குறிப்பிட விரும்புவது எல்லாம், மனோகரன் என்ற அதிகாரி இஸ்மாயில் கமிஷன் முன்னால் வந்து அவருடைய முறையீட்டைச் சொல்ல வாய்ப்பு இல்லை என்று எடுத்துக் கூறி, இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டார், வழக்குத் தொடுத்தார். ஆனால் இங்கே நிலைமை என்ன? அறங்காவலர் குழுத் தலைவர் பாலகிருஷ்ணனுக்கோ, அல்லது மற்றவர்களுக்கோ அப்படி வாய்ப்பு, நீதிபதி பால் கமிஷன் முன்னாலே அளிக்கப்படவில்லை என்றால், நிரம்ப அளிக்கப் பட்டிருக்கிறது. மனோகரனுக்கோ தனது கருத்தைச் சொல்ல

வாய்ப்பு அளிக்கப்பெறவில்லை. எனவே, இஸ்மாயில் கமிஷனுக்கு எதிராக மனோகரன் என்ற அதிகாரி தனது கருத்தை தெரிவித்தார். ஆனால், இங்கே, அறங்காவலர் குழுவில் உள்ள தலைவர்களுக்கும், மற்றவர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வேறுபாட்டை உணராமல், அரசு அறிக்கையிலே இப்படி கூறப்பட்டிருப்பதற்காக நான் என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் கமிஷன் குற்றவாளிகள் யார் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்பது அரசாங்கத்தினுடைய வாதம். குற்றமே நடைபெறவில்லை என்றோ, அல்லது கொலையே நடைபெறவில்லை என்றோ நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுவரையில் இங்கே வாதிக்கவில்லை. அது வரையில் அவர்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். நம்முடைய அறநிலையத்துறை அமைச்சர் அவர் களைப்போல, அவர் இந்தக் கொலைக்கு உள்ளே சென்று கொலையா, தற்கொலையா என்று விவாதித்து தமது முடிவை அறிவிக்கவே இல்லை. ஆனால் சந்தேகத்தை பல நேரங்களில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். பால் கமிஷன், குற்றவாளி யார் என்று குறிப்பிட்டுச் சொல்ல வில்லையே என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கிடையே குற்றவாளிகளை கைது செய் என்று கேட்கிறீர்களே என்று எதிர்க்கட்சிகளை (எல்லாக் கட்சிகளையும் சேர்த்து)- அவர் பல நேரங்களில் கேட்டிருக் கிறார்கள்.

ஆனால் பால் கமிஷன் அறிக்கையில் ''சாட்சியங்களின் நிலைமை'' என்ற தலைப்பில் 44, 45 ஆகிய பக்கங்களில் குற்றவாளிகள் குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிறார்கள். அதிலே 45ஆம் பக்கத்திலே ஒரு பகுதியிலே என்ன சொல்லி யிருக்கிறார்கள் என்றால் ''சரிபார்ப்பு அதிகாரிக்கு உடனடியாக அவர்கள் முதலுதவி அளிக்கவோ, அவருக்கு மூச்சு வரச் செய்யவோ, சிகிச்சை அளிக்கவோ முன் வரவில்லை என்றும், ஏனெனில் அவருக்கு மூச்சு வந்து, உணர்வு வந்தால், அவர்களுக்கு எதிராக மரண வாக்குமூலம் கொடுக்கக்கூடும் என்று அவர்கள் அச்சப்பட்டார்கள். என்றும் ''ஆ'' தரப்பினரின் வழக்கறிஞர்கள் கூறிய வாதத்திற்கு, இவர்களின் விசித்திரமான

போக்கு ஆதரவா கிறது'' என்று நீதிபதி பால் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அந்த அவர்கள் யார்? அவர்களுக்கு எதிராக மரண வாக்கு மூலம் சுப்பிரமணியப் பிள்ளை கொடுப்பார்களோ என்று அஞ்சினார்களே அந்த அவர்கள் யார்? 4வது பக்கத்திலே குறிப்பிடுகிறார்கள். அந்த ஆய்வகத்தில் இருந்தவர்கள் யார் யார் என்று குறிப்பிடுகிறார்கள். அங்கே யார் யார் இருந்ததாகச் சொல்கிறார்கள் 44வது பக்கத்தில்? டாக்டர் பாலகிருஷ்ணன், சீனிவாச பாண்டியன், கோவில் சூப்பரின்டென்ட்டென்ட் மகாதேவன், நிர்வாக அதிகாரி ராஜாராம், கேசவ ஆதித்தன் ஆகியோர் இருந்திருக்கிறார்கள் என்று நீதிபதி பால் அவர்கள் 4வது பக்கத்தில் குறிப்பிடுவதிலிருந்து குற்றவாளிகள் யார் என்று இன்னும் அரசாங்கத்திற்குத் தெரியவில்லை என்றால் நான் உள்ளபடியே வேதனைப்படுகிறேன். தெரிந்தும் தெரியாததைப்போல் நீங்கள் இருக்கிறீர்களா என்று நான் உங்களிடம் கேட்க விரும்புகிறேன்.

பால் கமிஷனுடைய அறிக்கை வெளியிடப்பட்டு- அவையில் வைக்கப்படுவதற்கு முன்பு என்னால் வெளியிடப் பட்டது என்பதையொட்டி நீங்கள் எடுத்திருக்கிற நடவடிக்கை களில் பாதி நடவடிக்கைகளாவது, ஒரு கால் பகுதி நடவடிக்கை களாவது இந்தக் கொலைகாரர்களைக் கண்டுபிடிக்க, கொலை காரர்களைக் கைது செய்ய அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்க இந்த அரசு எடுத்துக்கொண்டதா என்றால் இல்லை. பால் கமிஷன் அறிக்கையை முன்கூட்டியே வெளியிட்டதை ஒரு பெரிய குற்றமாகக் கருதி- நான் அதை வெளியிட்ட காரணங்களை, கருத்துக்களைப் பற்றி இங்கே விமர்சிக்க விரும்பவில்லை. சண்முகநாதன் கைது செய்யப்பட்டார். சதாசிவம் என்ற ஒரு அதிகாரி கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டது மாத்திரமல்ல. அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு அதிகாரிகளும் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எந்தளவிற்கு அதனால் அவர்கள் இழப்பிற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை மறந்து விடக்கூடாது.

எனது நேர்முக உதவியாளர் சண்முகநாதனின் அடிப் படைச் சம்பளம் ரூ.950 டியர்னஸ் அலவன்ஸ். ரூ.239 எச். ஆர்.ஏ. ரூ.165 சிட்டி காம்பன்சேட்டரி அலவன்ஸ் ரூ. 90/- ஸ்பெசல் பே ரூ. 325. கன்வேயன்ஸ்-க்காக ரூ.80 ஆகவே ரூ.1849 மாதந்தோறும் பெறவேண்டிய என் நேர்முக உதவியாளர் சண்முகநாதனுக்கு இப்போது கிடைக்கிற தொகை எவ்வளவு என்றால் இந்த எச்.ஆர்.ஏ.,ஸி.ஸீ.ஏ., ஸ்பெஷல் பே, கன்வேயன்ஸ் இவையெல்லாம் ரூ.660. இனிமேல் வழக்கு நடைபெற்று அந்த வழக்கில் சண்முகநாதன் விடுதலை பெறுகிற அந்தக் காலம் வரையில் இந்த ரூ. 660/- மாதந் தோறும் அவர் இழக்க நேரிடுகிற பணமாகும். அதை மறந்து விடக்கூடாது. மீதமுள்ள அடிப்படைச் சம்பளம் ரூ. 950ல் பாதிச் சம்பளம் ரூ.475 தான், மற்றச் சலுகைகள் டீ.ஏ. போன்றவைகள் எல்லாம் ரூ.239, ஆக ரூ.714 ரூபாய்தான் இந்த ரூ.714ல் ஏற்கெனவே கல்யாணம் போன்றவற்றிற்கு பட்டிருக்கிற கடனுக்குக் கழித்தது போக என் நேர்முக உதவியாளர் சண்முகநாதனுக்குக் கிடைக்கிற சம்பளம் ரூ.208 தான். எனவே இப்படிப்பட்டதொரு நிலையே சென்னையில் குடும்பம் நடத்துகிற சண்முகநாதனுக்கோ அல்லது சதாசிவம் என்ற அதிகாரிக்கோ ஏற்படுத்த வேண்டும் என்று இந்த அரசாங்கத்திற்கு யாராவது ஆலோசனை கூறியிருப்பார் களேயானால் அப்படி ஆலோசனை கூறியவர்களுடைய குடும்பம் உருப்படுமா என்பதை மாத்திரம் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். சண்முகநாதன் மீது வழக்குத் தொடரப்பட்டு கைது செய்யப்பட்டது மாத்திரமல்ல. எதிர்க்கட்சித்தலைவர் என்ற முறையில் எனக்குத் தரப்பட்டிருந்த இரண்டு டைப்ரைட்டிங் மெஷின்களைக் கூட இந்த அரசு, அரசாங்கத்துறை இந்த அவையினுடைய செயலாளர் மூலமாக கேட்டுப் பெற்றுக் கொண்டார்கள் - பிடுங்கிக்கொண்டார்கள் என்று சொல்ல மாட்டேன் - கேட்டுப் பெற்றுக் கொண்டார்கள். இரண்டு டைப்ரைட்டிங் மெஷின்களை, அவைத் தலைவர் அவர்களே! உங்களுக்குத்தான் சொல்கிறேன், எதிர்க்கட்சித் தலைவர் இரண்டு டைப்ரைட்டிங் மெஷின்களைக் கூட பயன்படுத்த முடியாமல் பால் கமிஷன் அறிக்கையை வெளியிட்டதன்

விளைவாக அதைக்கூட இந்த அரசு பறித்துக் கொண்டிருக்கிறது. அந்த அளவுக்குக் கடுமையான நடவடிக்கைகள்- முரசொலி சொல்வதை ஏதோ பெரிய பயங்கரவாதி யைப்போல், கட்டபொம்மன் போல், அல்லது மருது பாண்டியர்கள் போல் அல்லது கம்யூனிஸ்ட் இயக்கத்தில் மாபெரும் தலைவர்கள் அண்டர் க்ரவுண்டில் செல்வார்கள் என்று சொல்வார்களே அதைப்போல் அவர் சென்று விடுவார் என்பதுபோல் முரசொலி செல்வத்தை வீட்டில் வந்து கைது செய்வதற்குப் பதிலாக விமான நிலையத்திற்குச் சென்று எங்கே விமானத்தில் ஏறி வெளிநாட்டுக்கு ஓடிவிடுவார் என்று பயந்தோ என்னவோ- அப்படி டிக்கட் வாங்கியிருக்கிறாரா என்பதைக் கூட ஆராயாமல் விமான நிலையத்தில் போலீஸ் உடுப்பு அணியாதவர்கள், சாதாரண உடுப்பில் சென்றவர்கள் திடீரென்று சுற்றி காரிலே ஏற்றி, அங்கே சென்றிருந்த பெண்மணிகளை, என்னுடைய வீட்டார் யாரோ என்று தெரியாமல் தடுத்த நேரத்தில் அவர்களை அடித்து வீழ்த்தி அவர்களுக்கும் காயங்கள் உண்டாக்கி கேவலப்படுத்துகிற அளவிற்கு சண்முகநாதன், சதாசிவம் என்ற அதிகாரி, முரசொலி செல்வம் இவர்களை பால் கமிஷன் அறிக்கை வெளியிட்ட காரணத்தை யொட்டிய சூழ்நிலையில் இந்தப் பாடுபடுத்தியிருக்கிற இந்த அரசு பால் கமிஷனிலே வந்திருக்கின்ற இந்த உண்மைகளின் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்க ஏன் தயக்கம் என்பதுதான் என்னுடைய கேள்வியாகும்?

எப்படி அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள்? இங்கே பேசிய போது அருமை நண்பர் சங்கரய்யா அவர்கள், நம் அருமை நண்பர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த வர்கள், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சுந்தரராஜன் அவர்கள், நெடுமாறன் அவர்கள், குமரி அனந்தன் அவர்கள், ஆண்டித் தேவர் அவர்கள், விஜய ராகவன் அவர்கள் இப்படி எல்லாக் கட்சியைச் சார்ந்த தலைவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அதிகாரிகள் எந்த அளவிற்கு தவறாக நடந்து கொண்டிருக் கிறார்கள் என்பதை குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலும் அருமை நண்பர் நெடுமாறன் அவர்கள் பேசும்போது, அன்றைக்கே தான் 80ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 18ஆம் தேதி திருச்செந்தூருக்குச் சென்றதாகவும், உடனடியாக கோவில்

அதிகாரிகள் வைத்திருக்கின்ற ரெக்கார்டுகளையும், ரெவின்யூ துறையைச் சார்ந்த அதிகாரிகள் வைத்திருக்கின்ற ரெகார்டு களையும் அறங்காவல் துறையிலே உள்ளவர்கள் வைத்திருக்கின்ற ரெக்கார்டுகளையும், போலீஸ் அதிகாரிகள், மருத்துவத்துறையினர் ரெக்கார்டுகளையும், அரசாங்கம் கைப்பற்ற வேண்டுமென்று சொன்னதாகவும், அந்தக் காரியங்கள் நடைபெறவில்லை என்றும் சொன்னார்கள்.

ஜகந்நாத ஆழ்வார் என்ற தாசில்தார் இன்னொரு குழப் பத்தை ஏற்படுத்தியிருக்கிறார். அதைப் பாருங்கள் கொலையை மறைக்க எந்த அளவிற்கு அதிகாரிகள் பயன்படுத்தப்பட்டிருக் கிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன்.

'Jagannatha Alwar Thasildar and Executive Magistrate, Thiruchendur (from) to the Assistant Director of Regional Forensic Science Laboratory, Madurai Medical College Buildings, Tirunelveli-2 எழுதுகிறார், என்ன எழுதுகிறார் தெரியுமா?

'The Inspector of Police, Tiruchendur has reported that the deceased shri Subramania Pillai of Eraniel village has committed suicide by consuming poison. The body of the deceased was examined by the Medical officer, Thirunelveli in TNC.No.225/80 dated 27.11.80 and he has preserved the vicera for chemical analysis. The vicera of the deceased is sent through the police constable 995,

ஆக அவர் விஷம் சாப்பிட்டு தற்கொலை செய்து கொண் டார் என்கிற அளவிற்கு கதையை ஜோடிப்பதற்கு அதிகாரிகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அதிகாரிகள் அதற்கு முன் வந்திருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் அறங்காவலர்கள் குழுவைக் கலைக்க வேண்டு மென்று சொல்லுகின்ற நேரத்திலே, அதிகாரிகள் மீது நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்திலே, கொலைகாரர்கள் மீது கிரிமினல் குற்ற வழக்கு தொடுத்து, கைது செய்ய வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்கின்ற நேரத்திலே, என்னைப் பார்த்து திருப்பிக் கேட்பார்கள். நீ ஆட்சி நடத்தினாயே, இப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்தாயா? என்று.

நேற்றைக்கு நெடுமாறன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலேகூட, அருமை நண்பர் வீரப்பன் அவர்கள் பழைய உதாரணங்களை யெல்லாம் எடுத்துச் சொல்ல இருக்கிறேன் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.

நான் முதலமைச்சர் அவர்களைப் பார்த்து கேட்க விரும்புகிறேன். அவர்கள் இங்கே இப்போது இல்லா விட்டாலும், தன் அறையிலே இருந்து கேட்டுக் கொண்டிருப் பார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். பாளையங்கோட்டையில் நடந்த ஒரு சம்பவத்திற்கு கோதண்ட ராமராஜன் என்ற நீதிபதி விசாரணை வைத்து 4 போலீஸ் காவலர்கள், இரண்டு தலைமைக் காவலர்கள், இன்ஸ்பெக்டருடைய மகன்கள் இருவர் மீது வழக்குத் தொடர்ந்து, அவர்கள் தண்டனை பெற்று வேலையிலிருந்து நீக்கப்படுகிற அளவிற்கு நடவடிக்கை எடுத்த கருணாநிதிதான் நம்முடைய முதலமைச்சர் எம்.ஜி.ஆரைப் பார்த்து, இந்த நடவடிக்கையை இப்போது மேற்கொள்ளுங்கள் என்று கேட்கிறேனே அல்லாமல் வேறல்ல. கிளைவ் ஆஸ்டல் சம்பவத்தின் மீது நீதிபதி குப்பண்ணன் விசாரணை அமைத்து, அவர் அறிக்கையைப் பெற்று, அந்த அறிக்கைக்கு எதிர் அறிக்கை வைக்காமல், அந்த அறிக்கையின்படியே போலீஸ் அதிகாரிகள், போலீஸ் சூபரின்டென்ட் ஹரிஹரன் டிபுடி போலீஸ் சூபரின்டென்ட் குணசேகரன். ஆர்.டி.ஓ. ராமசாமி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க ஆணை பிறப்பித்தது. இலாகாபூர்வமான நடவடிக்கை எடுக்க திரு.கார்த்திகேயன் அவர்களை போலீஸ் உயர் அதிகாரியாக நியமித்த கருணாநிதி தான் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து இந்தக் கோரிக்கையை வைக்கிறேன்.

இதே போன்று இந்த மாமன்றத்திலே ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம்தான் கொண்டு வரப்பட்டது. சென்னை மாநகராட்சி யில் நடைபெற்ற ஒரு சம்பவம் குறித்து. கண்டனத் தீர்மானம் கூட அல்ல. அப்படி அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் வந்த நேரத்திலே, அதற்கு முன்பு விஜிலன்ஸ் மூலம் அதிகாரிகள் கைது செய்யப்பட்டு, வழக்கு நடைபெற்றாலுங்கூட மாநகராட்சி உறுப்பினர்களும் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று குற்றஞ்

சாட்டப்பட்டு, அதற்கு சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று டாக்டர் ஹண்டே அவர்கள் எழுந்திருந்து கேட்டபோது, அன்புக்குரிய கே.டி.கே.தங்கமணி அவர்கள் கேட்ட நேரத்தில், சட்டசபையிலேயே எழுந்து நின்று சென்னை மாநகராட்சியில் தவறு நடந்ததை சட்டசபையில் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் சொல்லியிருக்கின்ற காரணத்தினால் மாநகராட்சி மன்றம் கலைக்கப்படுகிறது என்று சட்டசபையிலே அறிவித்து மேயர், முன்னாள் மேயர், துணை மேயர் போன்ற என் பழம்பெரும் நண்பர்களையெல்லாம் உள்ளிட்ட அத்தனை பேர்களையும் கைது செய்து நடவடிக்கை எடுத்த கருணாநிதிதான் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து நீங்கள் அந்த வழியைப் பின்பற்றக் கூடாதா என்று கேட்கிறேனே அல்லாமல் வேறு அல்ல.

தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கியிலே ஒரு கையாடல் நடந்து விட்டது என்பதைச் சுட்டிக்காட்டி தஞ்சை நகரிலே உள்ள அனைத்துக்கட்சித் தோழர்களும் ஒரு ஊர்வலம் நடத்தி மாணிக்கவாசகம் என்ற என்னுடைய ஆருயிர் நண்பர், வழக்கறிஞர், அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னவுடனே நடவடிக்கை எடுத்து கைது செய்து இரண்டாண்டு காலம் சிறைத்தண்டனைப் பெற்று, அது மாத்திரமல்ல; வழக்கறிஞர் தொழிலையே இன்றைக்கு அவர் நடத்த முடியாத அளவுக்கு- ஆளாக்கப்படுகின்ற அளவுக்கு நடவடிக்கை எடுத்த கருணாநிதிதான் இன்றைக்கு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பார்த்து இந்தக் கோரிக்கையை வைக்கிறேனேயல்லாமல் வேறு அல்ல.

திருத்தணியிலே திருவேங்கடம் என்ற ஒரு அறங்காவலர் குழு உறுப்பினர் ஒரு பெண்ணிடம் தவறாக நடந்தார் என்ற செய்தி வந்தவுடனே அவரை அந்தக் குழுவிலிருந்து நீக்குவதற்கு ஆணை பிறப்பித்த கருணாநிதிதான் முதலமைச்சர் அவர்களைப் பார்த்து இந்தக் கோரிக்கையை வைக்கிறேனே அல்லாமல் வேறல்ல.

குடந்தையிலே ஒரு அறங்காவலர் நம்முடைய நாவலருக்கு நன்றாகத் தெரியும். நம்முடைய செயலாளருடைய சகோதரர். அவர் அங்குள்ள கோயில் பிரகாரத்திலே கடைகள்

வைப்பதற்காக பிரகாரத்தை இடித்தார் என்று கேள்விப்பட்டவுடன் அவர்மீது நடவடிக்கை எடுக்க ஆணை பிறப்பித்த கருணாநிதி தான் இன்றைக்கு முதலமைச்சர் அவர்களிடத்திலே அதே நியாயத்தை எதிர்பார்த்து, கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இந்தக் கோரிக்கையை வைக்கிறேனே அல்லாமல் வேறல்ல.

நாம் எல்லாம் ஒன்றாக இருந்தபோது நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். நம்முடைய அமைச்சரவையில் இருக்கின்ற 3 அமைச்சர்கள் மீது முழுமையாகக்கூட அல்ல, சூசகமாக, ஜாடையாக சில குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்ட நேரத்திலே நம்முடைய கழக செயற்குழுவைக் கூட்டி அதிலே தீர்மானம் போட்டு 3 அமைச்சர்களை நாம் நீக்கி வைத்தோம். அப்போது அந்தப் பொறுப்பிலே நாம் எல்லோரும் சேர்ந்து எடுத்த அந்த முடிவை நிறைவேற்றிக் காட்டிய கருணாநிதிதான் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து இங்கே கேட்கிறேனே அல்லாமல் வேறு அல்ல.

நான் கேட்பது அறங்காவலர் குழு கலைக்கப்பட வேண்டும். அந்தக் குழுவிலே உள்ள குற்றவாளிகளும், நிர்வாகிகளும், கிரிமினல் வழக்கிற்கு உள்ளாக்கப்பட வேண்டும். கொலைக்கு உடந்தையாக இருந்த ரிக்கார்டுகளை மாற்றிப் பொய் ஆவணங்களைப் புனைந்த கோயில் அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள், ரெவின்யு அதிகாரிகள், மருத்துவத் துறையினர் இவர்கள் எல்லாம் சஸ்பென்ட் செய்யப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வளவையும் மூடி மறைக்கின்ற வகையிலே பல காரியங்களை ஆற்றுகின்ற மாண்புமிகு அமைச்சர் திரு.வீரப்பன் அவர்கள் ராஜிநாமா செய்ய வேண்டுமென்று நான் சொல்லமாட்டேன். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சரியாகப் புரிந்து கொண்டு,

''பழுது எண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்ஓர்
எழுபது கோடி உறும்.''

என்ற திருக்குறளைப் புரிந்து கொண்டு 70 கோடி பகைவர்களைவிட பக்கத்திலே இருந்து பழுது எண்ணிக்

கொண்டிருக்கின்ற மந்திரி ஆபத்தானவர் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணர்ந்து அந்த அமைச்சர் மீது நடவடிக்கை எடுத்து அவரைப் பதவியிலிருந்து விலக்கம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு, இந்த அவையிலே நீங்கள் வைத்த இந்த அறிக்கையில் இது போலீஸ் (விசாரணைக் கமிஷன் அறிக்கையைக் காட்டி) இது விஷம் (அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குறிப்பைக் காட்டி) நல்லவேளை இரண்டையும் கலக்காமல் தனித்தனியாக வைத்திருக்கின்றீர்கள். இதைக் கலக்காமல் திரு.சுந்தரராஜ் சொன்னதைப்போல் ஒன்றைத் திரும்பப் பெற்று பால் கமிஷன் பரிந்துரை மீது நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை

உரை : 24 நாள்: 8.5.1990

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரதராசன் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு ஒரு சிறு விளக்கத்தைத் தெரிவிக்கின்றேன்.

1984ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ஆம் நாள் அன்றைய நிலவரப்படி நாடற்றவர்களாகக் கருதப்பட்ட 9.75 இலட்சம் பேர் இலங்கையிலே இருந்தவர்கள், அவர்கள் இந்திய மக்களின் வழிவந்தவர்களாகையால் இந்திய-இலங்கை நாடுகளுக்கிடையே 31.10.1984 அன்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இது 1965ஆம் ஆண்டு சாஸ்திரி-சிரிமாவோ ஒப்பந்தத்தினுடைய அடிப்படையில் மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெற்று 31.10.1984ல் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி 5.25 இலட்சம் பேருக்குக் குடியுரிமை வழங்க இந்தியா ஒப்புக்கொண்டது. அதாவது இங்கே திருப்பி அழைத்துக்கொள்ள இந்தியா ஒப்புக்கொண்டது. பின்னர், 27.1.1974 அன்று உருவாக்கப்பட்ட பிறிதொரு ஒப்பந்தப்படி மேலும் 75,000 பேருக்குக் குடியுரிமை வழங்க இந்தியா-இலங்கை ஏற்கெனவே ஒப்புக்கொண்டன. இவ்வாறு இரண்டு ஒப்பந்தங்களின் அடிப்படையில், 6 இலட்சம் பேரை இந்தியா எடுத்துக் கொள்வதென ஒப்புக்கொள்ளப்பட்டது. 6 இலட்சம் பேர் என்றால், அப்படி ஒப்பந்தம் ஆனபிறகு அவர்களுக்குக் குழந்தைகள் பிறந்தால் அதையும் சேர்த்து, அதைத்தான் அவர்கள் இயற்கை உற்பத்தியுடன் என்று இணைத்துச் சொல்கிறார்கள். அவர்களையும் சேர்த்து, 6 இலட்சம்பேரை சேர்த்து எடுத்துக்கொள்வது என ஒப்புக்கொள்ளப்பட்டது. இதற்கிடையில் இலங்கையில்

ஏற்பட்ட 1983-ஆம் ஆண்டு இனக் கலவரத்தையொட்டி 1986-ல் மீண்டும் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டபோது மேலும் 94,000 பேருக்குக் குடியுரிமை வழங்க இலங்கை அரசு ஒப்புக்கொண்டது. எனவே, இந்தியா எடுத்துக்கொள்ள வேண்டிய மொத்த எண்ணிக்க 6 இலட்சத்திலிருந்து 5.06 இலட்சமாகக் குறைந்தது. இதுவரையில் 3.34 இலட்சம் பேர் இன்றைக்கு இந்தியாவிற்குத் திரும்பியிருக்கிறார்கள். மேலும் திரும்ப வேண்டியவர்கள் என்று இலங்கை அரசு கூறுவது 1.72 இலட்சம் பேர். அதாவது அவர்களுடைய இயற்கை அதிகரிப் போடு 1.72 இலட்சம் இருந்தாலும், பிறகு அவர்களுக்கு குழந்தை பிறந்தால், அவர்களையும் சேர்த்து அவர்கள் இந்தியா விற்குத் திரும்ப வேண்டுமென்ற ஒரு நிலை. இதற்கிடையே நம்முடைய உறுப்பினர் அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல இலங்கை அமைச்சர் அங்குள்ள நாடற்றவர்கள் என்று கருதப் படுகின்ற ஏறத்தாழ 1¾ இலட்சம் அல்லது 2 இலட்சம் பேரை இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பவேண்டுமென்று அறுதி யிட்டுக் கூறியிருக்கிறார். இந்தச் சூழ்நிலையில் இந்தியா, அதிகம் குறிப்பாக தமிழ்நாடுதான் அந்தப் பெரும் சுமையைத் தாங்கவேண்டுமென்ற நிலையில் ஏற்பதற்கு நாம் தயார் நிலையிலே இல்லை. காரணம் ஈழத் தமிழர் பிரச்சினையால் 1983 முதல் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட ஈழத் தமிழர்கள் தமிழ்நாட்டில் அகதிகளாக இருக்கிறார்கள்.

இது குறித்து ஏற்கனவே முன்னாள் முதலமைச்சர் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் கூட இந்தியப் பிரத மருக்கு 22.2.1986ல் எழுதிய கடிதத்தில் திட்டவட்டமாக அதிலே கூறியிருக்கிறார். இங்கே உள்ள இலங்கை அகதிகள், ஈழத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்பட்ட பிறகுதான் அங்கிருந்து வருகின்ற தமிழர்களை ஏற்பது பற்றி யோசிக்க முடியும் என்று இந்தியப் பிரதமருக்கு ஏற்கெனவே முன்னாள் முதலமைச்சர் கடிதம் எழுதியிருக்கிறார். அதே நிலைதான் இன்றைக்கு இந்த அரசும் எடுக்கின்ற திட்டவட்டமான நிலையாகும். அப்படியே ஏற்பதாக இருந்தாலும் திடீரென்று லட்சத்திற்கு மேற்பட்டவர் களை தமிழகத்திலே குறிப்பாக, இந்தியாவிலே ஏற்றுக்கொள்வது என்பதும் அவர்களை வைத்து சமாளிப்பது, அவர்களுக்கு

வாழ்வு அளிப்பது, மறுவாழ்வு தருவது என்பதெல்லாம் பெரிய பிரச்சினை. சிறிது, சிறிதாகத்தான் அவர்களை நாம் ஏற்றுக் கொள்ள இயலும். இருந்தாலும் இங்குள்ள இலங்கைத் தமிழ் அகதிகள், ஈழத் தமிழ் அகதிகள் ஒரு இலட்சம் பேர் திருப்பி அனுப்பப்பட்ட பிறகு தான் அதை நம்மால் யோசிப்பதற்கே இயலும். இதை மத்திய அரசுக்கு நாம் தெரிவித்திருக்கிறோம். நம்முடைய தலைமைச் செயலாளர் நேரடியாகவே டெல்லிக்குச் சென்று இந்தக் கருத்தை அங்குள்ள செயலாளரிடத்திலே அறிவித்திருக்கிறார். அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அவர் களுக்கு மறுவாழ்வு அளிப்பது என்பது மனிதாபிமான அடிப் படையில் செய்யப்பட வேண்டிய ஒன்று, எனவே ''ரிபேட்ரி யாட்ஸ், ரெஃபூஜிஸ்'' இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு. ரிபேட்ரியாட்ஸ் என்பது அங்கு குடியுரிமை இல்லாமல் இங்கே குடியுரிமை பெறவேண்டியவர்கள். ரெஃபூஜிஸ் (அகதிகள்) அவர்கள் திரும்பிச் செல்ல வேண்டியவர்கள். ரிபேட்ரியாட்ஸ் என்றால் வந்தவர்கள் திரும்பிச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இங்கே குடியுரிமை அவர்களுக்கு வழங்கப்பட்டு, மறுவாழ்வு அளிக்கப்பட வேண்டியவர்கள். அகதிகள் என்றால் அவர்கள் திருப்பி அனுப்பப்பட வேண்டியவர்கள். இந்த வித்தியாசம் இருந்தாலும் கூட ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட அகதிகளைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற தமிழகம் மேலும் இந்தச் சுமையைத் தாங்கத் தயாராக இல்லை என்ற கருத்து மத்திய அரசுக்கு எடுத்து விளக்கப்பட்டு இருக்கிறது. தொடர்ந்து அது வலியுறுத்தப்படும். மத்திய அரசோடு பேசப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொன்று, டெல்லி பாராளுமன்றத்திலே எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்து நண்பர் வரதராசன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அண்மையிலே இந்த அவையில் பல நேரங்களிலே இது குறித்து பல கட்சிகளுடைய நண்பர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கான விளக்கங்களை நான் தந்திருக்கிறேன். ஏதோ மத்திய அரசு மாநில அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருப்பதாகவும், மாநில அரசு அதிகாரிகள், தலைமைச் செயலாளர் மற்றும் டி.ஜி.பி. போன்றவர்கள் இது விஷயத்திலே

எச்சரிக்கப்பட்டு இருப்பதாகவும் அதை அவர்கள் இன்னும் கேட்கவில்லை என்றும் பத்திரிகையிலே வந்திருக்கின்ற செய்திகள், டெல்லியிலே ''டைம்ஸ் ஆப் இந்தியா'' என்ற ஒரு பத்திரிகையில் இந்தச் செய்திகள் மிகைப்படுத்தி வேண்டு மென்றே போடப்பட்டிருக்கின்றது. நேற்றைய தினம் நண்பர் ரமணி அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல, எதையாவது ஒன்றை வைத்துக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு தொல்லை தருவது அல்லது ஆட்சியை சட்டம்-ஒழுங்கு, அமைதி இவைகளைக் காட்டி கவிழ்ப்பது என்கின்ற அற்ப ஆசைக்கு சில பேர் ஆட்பட்டு இப்படி எழுதியும், பேசியும் வதந்திகளைப் பரப்பியும் வருகிறார்கள். அந்த வதந்திகளை நம்பியோ, என்னவோ அல்லது வேண்டும் என்றோ எனக்குத் தெரியாது. நான் பாராளுமன்றத்திலே நடை பெற்ற நிகழ்ச்சிகளை விமர்சிப்பது முறையல்ல. இருந்தாலும் சொல்லப்பட்டு இருக்கின்ற தகவல்களை மிகைப்படுத்தி சொல்லப்பட்டவை. மாநில அரசுக்கு மத்திய அரசு எச்சரிக்கை அல்ல, முன்னறிவிப்பு செய்வது வாடிக்கை. இது ஒன்றும் புதிதல்ல. இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படக்கூடும். எனவே ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று முன்னறிவிப்பு செய்வதும், அதற்கான பதிலை மாநில அரசு மத்திய அரசுக்கு அனுப்புவதும் வாடிக்கையானது, இயல்பானது. அந்த வகை யிலே மாநில அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இங்கு நடக்கின்ற நிலைமைகளை எல்லாம் அடிக்கடி எடுத்துச் சொல்லி வருகிறது.

அண்மையிலே கூட அங்கே நடைபெற்ற மாநாட்டிற்கு நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சென்ற போது, நான் இங்கே அவையிலே அறிவித்ததற்கிணங்க, அவர் வெளியுறவு அமைச்சரைச் சந்தித்து, இங்கே கடல் எல்லை இன்னும் சரியாகக் குறிப்பிடப்படாத காரணத்தால், அதைத் தெரிந்துகொள்கின்ற நிலை, தமிழ்நாட்டு மீனவ மக்களுக்கு இல்லாத காரணத்தால், அதை அவர்களுக்கு விளக்குகின்ற வகையிலே அங்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சரிடத்திலே நம்முடைய வருவாய்த்

துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். அது மாத்திரமல்ல. தமிழக அரசின் சார்பாக மத்திய அரசுக்கு 'கோஸ்ட் கார்டு' ஏற்படுத்தப்பட வேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. இதுவரையிலே மத்திய அரசு அதற்கான நடவடிக்கையிலே ஈடுபடவில்லை. அதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை என்பது தான் நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஏனென்றால் இன்றைக்கு இலங்கையிலே, தமிழ் ஈழத்திலே விடுதலைப் புலிகளுடைய செல்வாக்கு இருக்கலாம். கிட்டத் தட்ட அவர்களுடைய ஆட்சியே நடைபெறுவது போன்ற ஒரு நிலை. நாளைய தினம் எதிர்காலத்திலே, அவர்களுக்கும், இலங்கை அரசுக்கும் எத்தகைய சூழல் உருவாகும் என்று நான் சொல்ல முவடியாது. அப்படிப்பட்ட ஒரு சூழல் உருவாகிற நேரத்தில் இங்கே 'கோஸ்ட் கார்டு' மிக அவசியம் என்பதும் 'நாவாய்-நேவிகள்' இங்கே நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்பதும் மிக அவசியம் என்பதை மத்திய அரசுக்கு நாம் எடுத்துச் சொல்லி இருக்கிறோம்.

ஆனால், தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் ஆதிக்கம் இருப்பதாகச் சொல்லப்படுவது கடைந்து எடுத்த, உண்மைக்கு மாறான ஒரு செய்தி ஆகும். பொய் என்று கூடச் சொல்லலாம். ஏன் என்றால், இங்கே உறுப்பினர்கள் சொன்னது 'பொய்' என்று சொன்னால்தான் குற்றம். ஆனால் பத்திரிகைகளில் வெளி வருவது, அதைப்பற்றிப் பிரச்சாரம் செய்வது எல்லாம் கடைந்து எடுத்த பொய், இன்னும் சொல்லப்போனால் வடிகட்டிய பொய் என்றுதான் அதைச் சொல்லவேண்டும். தமிழ்நாட்டிலே விடு தலைப் புலிகளின் ஆதிக்கம் இருப்பதற்கு நியாயமே இல்லை. ஒரு காலத்திலே இங்க பல முகாம்கள் இருந்தன. இன்னும் சொல்லப்போனால் இங்கே எந்த முகாம்களும் கிடையாது என்று அன்றைய பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் அறிவித்த அந்தக் காலக்கட்டத்திலே தமிழ்நாட்டில் 36 முகாம்கள் இருந்தன. 36 கேம்புகள் இருந்தன. அதிலே பயிற்சி பெற்றவர்கள், டெலோ, ஈராஸ், இ.பி.ஆர்.எல்.எப்., பிளாட் போன்றவர்கள். எல்.டி.டி.இ. அல்ல. எல்.டி.டி.யினுடைய கொள்கையே அவர்கள் இந்தியாவிலே பயிற்சி பெறக்கூடாது என்பது ஆகும். எனவே,

அவர்கள் இங்கே எந்த கேம்பும் நடத்தவில்லை. அவர்கள் இங்கே புழங்கிக்கொண்டு இருந்தார்கள்; சிலர் இங்கே தங்கி நடமாடிக்கொண்டு இருந்தார்கள். அன்றைக்கு இந்த அரசோடு, இங்கே இருந்த அரசியல், கட்சித் தலைவர்களோடு எல்லாம் கூடத் தொடர்பு கொண்டு இருந்தார்கள். அவர்களுக்குக் கிட்டத் தட்ட 4 கோடி ரூபாய் ஒரே நாளில் தமிழக அரசின் சார்பிலே கூட வழங்கப்பட்டிருக்கிறது. அதை அவர்கள் ஆயுதங்கள் வாங்கப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதற்கான தகவல்கள் எல்லாம் அன்றைக்கு வெளிவந்திருக்கின்றன. இப்படி 36 கேம்புகளை இங்கே அவர்கள் நடத்திவந்த காலத்திலே கூட இந்திராகாந்தி அவர்கள் கேம்புகளே இங்கே இல்லை என்று சொன்னார்கள்.

இன்றைக்கு நான் சொல்லுவது அந்த அடிப்படையிலே அல்ல. உண்மையிலேயே கேம்புகள் இல்லை. அப்படி ஓரிரு கேம்புகள் இருந்தாலும் அவர்கள் வேறு இயக்கத்தைச் சேர்ந்த வர்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. அதிலே இருந்தவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். அவர்கள் மாத்திரமல்ல, விடுதலைப் புலிகளே கூட அப்படி கேம்பு நடத்தினால், அது கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது யாராவது சுட்டிக்காட்டப்பட்டால், அன்றைக்கு நம்முடைய திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்னது போல் உடுமலைப்பேட்டைக்குப் பக்கத்திலே இருப்பதாகச் சொன்னார்கள். மறுநாளே அங்கே அதைப்பற்றி ஆராயச் சொல்லப்பட்டது. எதுவும் இல்லை என்ற தகவல் தான் கிடைத்தது. அப்படி ஏதாவது இருந்தால் உடனடியாக அடையாளம் காட்டப்பட்டால், அவர்கள் விடுதலைப் புலிகளாக இருந்தாலும், யாராக இருந்தாலும், நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமாத்திரம் அல்ல, இங்கே 20 திராவிடர் கழகத் தோழர் களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும் விடுதலைப் புலிகள் பயிற்சி அளிக்கிறார்கள் என்று கூட அங்கே சொல்லப்பட்டிருக்கிறது. போயும், போயும் 20 பேருக்குப் பயிற்சி அளித்து என்ன செய்வார்கள் என்று எனக்குப் புரிய

வில்லை. திராவிடர் கழகமோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களோ அப்படிப்பட்ட வன்முறைப் பயிற்சியிலே நாட்டம் கொண்டவர்கள் அல்ல. அப்படிப்பட்ட வன்முறைப் பயிற்சிக்கு அவர்கள் தங்களை ஆளாக்கிக் கொண்டவர்கள் அல்ல. அப்படி எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் வளர்க்கவில்லை என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். யாருக்காவது சந்தேகம் இருக்குமானால் பத்திரிகையாளர்கள் அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் கூட, நாம் எல்லாம் சேர்ந்து ஒரு குழுவாகக் கூட இந்தக் கடற்கரை பக்கத்திலே செல்லலாம். வேதாரண்யம் பகுதியிலே, சட்டமன்ற உறுப்பினர் நம்முடைய திரு. இராஜேந்திரன் என்னோடு வரலாம், அதேபோல் நாகப்பட்டிணம் பகுதியிலே திரு. வீரையன் அவர்கள் என்னோடு வரலாம். அல்லது சட்டமன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் எல்லாம் ஒரு குழுவாகக் கூட என்னுடைய தலைமையிலே- என்னுடைய தலைமையை இந்தக் குழுவுக்கு ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்- அனைவரும் என்னோடு வந்தால் நாமே கூட அந்தக் கடற்கரைப் பகுதியிலே சென்று தவறு இருந்தால் அதைக் களைவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது; அல்லது பத்திரிகை நிருபர்கள் கூட ஒரு குழுவாக வந்தால் அவர்களோடு சென்று பார்வையிடக்கூட நான் தயாராக இருக்கிறேன். வேண்டும் என்றே இந்த அரசுக்கு ஒரு களங்கம் கற்பிக்க, சட்டம்-ஒழுங்கு, அமைதி இங்கே கெடுகிறது என்ற ஒரு நிலையை உருவாக்கி, மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் ஒரு மோதுதலை உருவாக்க சில பேர் நடத்துகின்ற முயற்சி நிச்சயமாக வெற்றி அடையாது என்பதையும் நான் இங்கே பேசிய இந்தக் கருத்துக்களே மத்திய அரசுக்கு நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதங்களுக்கு ஏற்ற பதிலாக அமையும் என்று நான் கருதுகிறேன். இங்கு எந்தத் தீவிரவாதங்களையும், எந்த வன்முறைகளையும் இந்த அரசு அனுமதிப்பதற்குத் தயாராக இல்லை.

விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டில் வந்து செல்வாக்கைப் பெறவேண்டிய அவசியம் இல்லை. காரணம் அவர்கள்,

இன்றைக்குச் செல்வாக்கைப் பெற்றவர்களாக தமிழ் ஈழத்திலே, கிட்டத்தட்ட தமிழ் ஈழம் கிடைக்கவில்லையே தவிர, அந்தப் பெயர் கிடைக்கவில்லையே தவிர, அவர்களுடைய ஆட்சிதான் அங்கே இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அவர்கள் தமிழ்நாட்டில் வந்து இடம் தேட வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது ஒரு கொள்கை விளக்கத்தை இந்த அவைக்குத் தந்து இருக்கிறார்கள். அதிலே அவர்கள் குறிப்பிடுகின்றபோது மத்திய அரசு மீண்டும் மீண்டும் கேட்கும் Coast Guard என்று சொல்லக்கூடிய கடற்கரைப் பாதுகாப்புப் படையும், நேவி இந்திய இராணுவத்தில் இருக்கக்கூடிய பகுதியாகிய நாவாய் அடங்கிய படை வகுப்பும் மீண்டும் மீண்டும் மத்திய அரசிடம் கேட்டு வரவில்லை என்று அவர்கள் ஆதங்கத்தோடு சொன்னார்கள். இன்றையதினம் பாராளுமன்றத்திலே ஒரு தகவல் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. தளபதி கல்கத் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் இந்திய இராணுவத்தை குறைத்துப் பேசியதை சுட்டிக்காட்டி மத்திய அரசுக்கு ஒரு கடிதம் எழுதியதாகச் சொல்லப்பட்டிருக் கிறது. அதனால் இந்திய இராணுவத்தைச் சார்ந்த அந்த வீரர்கள் இங்கே தமிழகத்தின் பாதுகாப்புக்காக வர அஞ்சுகிறார்களோ என்கின்ற ஐயமும் எங்களுக்கு இருக்கிறது. இது சம்பந்தமாக ஏதேனும் தகவல்கள், நமது மாண்புமிகு முதலமைச்சரிடம் விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறதா என்று நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசு கடற்படையை (Coast Guard) இன்னும் அனுப்பவில்லை என்று ஆதங்கத்தோடு சொன்னேன் என்று பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒரு கற் பனைச் செய்தியை இங்கே சொன்னார்கள். நான் ஆதங்கத்தோடு சொல்லவில்லை; ஆர்வத்தோடு சொன்னேன். உடனடியாக அவர்கள் அனுப்ப வேண்டுமென்ற ஒரு செய்தியைத்தான்

சொன்னேனேயல்லாமல் வேறு அல்ல. அவர்கள் இன்னொன்றை யும் சொன்னார்கள். யாரோ கல்கத் தளபதி இவர்களெல்லாம் தமிழக முதலமைச்சரைப் பற்றிக் குறை கூறி, டெல்லியிலே உள்ள மத்திய அரசுக்கு எழுதி இருப்பதாக அவர்கள் சொன்னார்கள். நான் இன்றைக்கும் சொல்லுகிறேன். இந்திய இராணுவத்தை நான் குறை கூறிப் பேசவில்லை. இந்திய இராணுவத்தை வரவேற்க ஏன் செல்லவில்லை என்று கேட்டதற்குத்தான் பதில் சொன்னேனேயல்லாமல் நான் செல்லாததற்குக் காரணத்தைச் சொன்னேன். என்றைக்கும் நான் இந்திய இராணுவத்தைக் குறை கூறிப் பேசவில்லை. ஆனால் குறை கூறுவது தவறு அல்ல. முன்னாள் குடியரசுத் தலைவர் ஜெயில்சிங்கே, இந்திய இராணுவ நடவடிக்கைக்காக அமிர்தசரஸ் கோயிலுக்குச் சென்று வருத்தம் தெரிவித்துக் கொண்டார். அவர்தான் முப்படையினுடைய தலைவர். அவரே வருத்தம் தெரிவித்துக் கொண்டார் என்ற விளக்கங்களையும் இங்கே நான் அளித்திருக்கிறேன். இன்னும் சொல்லப் போனால், மத்திய அமைச்சரவையிலே இடம் பெற்றிருக்கிற தோழர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் இந்திய அமைதிப்படையைப் பற்றிப் பேசியது, எழுதிய கட்டுரையெல்லாம் அண்மையிலே வெளியிடப்பட்டு புத்தகமாக வந்திருக்கிறது. 'மைலாய்' என்கின்ற அந்தப் புத்தகத்திலே வந்திருக்கிறது. எவ்வளவு கொடுமைகள் அந்தப் பகுதியிலே நடைபெற்றன என்று இந்திய அமைதிப்படையைப் பற்றி ஜார்ஜ் பெர்னாண்டஸ், இன்றைக்கு மத்தியிலே அமைச்சராக இருப்பவர், அவர் எழுதிய கட்டுரையில் வெளியிடப்பட்டிருக்கிறது. ஒருவேளை முதலமைச்சர் குறை கூறிய காரணத்தாலே இங்கே இராணுவத்தினர் வர அஞ்சுகிறார்களோ என்று அல்போன்ஸ் அவர்கள் கேட்டார்கள். போலீஸ் மானியத்திலே போலீஸை இவ்வளவு குறை கூறினீர்களே, அதற்காகப் போலீஸ் வராமலா இருந்துவிடும்?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரத்தி னுடைய பேச்சைக் கேட்ட பிறகு, இதை உள்ளபடியே ஒத்தி

வைத்து விவாதம் நடத்தினால் அங்கே புகைந்து கொண்டிருப்பது எரியத் தொடங்கிவிடுமோ என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டிருக் கிறது. இருந்தாலும், இதை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதற்கான சில குறிப்புகளை இந்த அவையின் முன்னாலே வைக்க விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் தோகூர் காவல் சரகத்தில் ஓரத்தூர், நந்தமங்கலம் ஆகிய இரண்டு கிராமங்களும் அருகருகே உள்ளன. இரண்டு கிராமங்களையும் சேர்ந்த தாழ்த்தப்பட்ட வர்கள் ஆயிரம் குடும்பத்தினர் அங்கே உள்ளனர். ஓரத்தூரில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த 1,500 குடும்பத்தினர் உள்ளனர். இருவரும் ஒருவருக்கொருவர் தாண்டிக் கொண்டு தான் கடைகளுக்கோ, வேறு இடங்களுக்கோ செல்ல வேண்டு மென்றால் செல்ல வேண்டும். கடந்த 21.3.1990 அன்று ஓரத்தூர் கிராமத்தில் வடமலை என்பவருடைய மனைவி, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பெண் மரணம் அடைந்தது தொடர்பாக இறுதிச் சடங்கிற்கு வந்த 10 பேர் டி.சி.ஓ. 2332 என்ற வாடகைக் காரில் திரும்பியபோது, காரின் உரிமையாளர் ரத்தினசாமி என்பவரின் தம்பி சுதர்சன் என்பவர் அத்தனை பேரும் காரில் ஏறியதற்காகக் கண்டித்திருக்கிறார். ஓரத்தூரைச் சேர்ந்த தர்மராஜ், நந்தி என்கிற ராஜசேகர் ஆகியோர் தாழ்த்தப்பட்ட மக்களைக் கையால் அடித்துவிட்டனர். இது தொடர்பாக, சுதர்சன் கொடுத்த புகாரின் பேரில் தோகூர் காவல் நிலைய எண் 57/90, இ.த.ச. 341 மற்றும் 323 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்யப்பட்டது.

இறுதிச் சடங்கிற்கு வந்தவர்கள் பின்னால், வாடகைக் கார் வேண்டாம் என்று கூறிவிட்டு பூதலூர் புகைவண்டி நிலையத் திற்குச் சென்றுவிட்டார்கள். சுதர்சன் தாக்கப்பட்டதால் ஆத்திரம் அடைந்து அவரைச் சேர்ந்த மக்கள் புகைவண்டி நிலையம் சென்று அங்கே புகைவண்டிக்காகக் காத்திருந்தவர்களைக் கண்டித்திருக்கிறார்கள். அது தொடர்பாகக் காவல் நிலையத்திற்கு எந்தப் புகாரும் தரப்படவில்லை. இத்தனை குழப்பத்தோடு நச்சினார்க்கினியன், தர்மராஜன், முருகேசன், கிருஷ்ணன், குண சேகரன், ராஜசேகரன் ஆகியோர் வேணுகோபால் என்பவரை

அடித்துக் காயப்படுத்தியிருக்கிறார்கள். அது குறித்து வேணு கோபால் கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண் 58/90, 147, 148, 323 இ.த.ச. பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கப்பட்டிருக்கிறது. குற்ற எண் 57/90 மற்றும் 58/90 வழக்குகளில் சம்பந்தப்பட்ட எதிரிகளும் கைது செய்யப்பட்டு ரிமாண்ட் செய்யப்பட்டுள்ளார்கள். அமைதிக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. எதுவுமே செய்யவில்லை என்று குற்றம் சாட்டியதற்கு விளக்கமாகச் சொல்கிறேன். எதிரிகள் கைது செய்யப்பட்டு ரிமாண்ட் செய்யப்பட்டுள்ளனர். அமைதிக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இரண்டு கிராமங்களுக்கும் போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும் இரண்டு பிரிவினரிடையே விரோத மனப்பான்மை வளர்ந்து வந்தது. 30.4.1990 அன்று இரவு 11 மணிக்கு நச்சினார்க்கினியன், காவல் நிலையத்திற்கு வந்து, தான் தபால் அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்தபோது, கலையழகன் மற்றும் 7 பேர் தன்னை விரட்டியதாகக் கொடுத்த புகார் மீது குற்ற எண் 70/90 இ.த.ச. 147, 148, 506 (1) பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. திருக்காட்டுப்பள்ளி ஆய்வாளர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று, விசாரணை செய்தார். 5.5.1990 அன்று திருவையாறில் இரண்டு பிரிவினரையும் அழைத்து வைத்து, வட்டாட்சியர் ஒரு அமைதிக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். அதற்கிடையில் 5.5.1990 அன்று அதிகாலை 5 மணிக்கு ஓரத்தூரைச் சேர்ந்த ஒரு கூட்டத்தினர் பயங்கர ஆயுதங்களோடு ஒன்று சேர்ந்து, நந்தமங்கலம் கிராமத்திலிருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தின் கீற்றுக் கொட்டகையைச் சேதப்படுத்தி, தீ வைத்துக் கொளுத்தி இருக்கிறார்கள். நச்சினார்க்கினியன் போன்றவர்களின் குடியிருப்புகளில் புகுந்து 18 கூரை வீடுகளையும், 8 ஓட்டு வீடுகளையும் சேதப்படுத்தியதோடு, கத்தி, கம்பு, அரிவாள் முதலிய ஆயுதங்களால் காயப்படுத்தி இருக்கிறார்கள். இவர்களில் 12 பேர் திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகளாக சிகிச்சை பெற்றார்கள். 10 பேர் உள் நோயாளி

களாக சிகிச்சை பெற்றார்கள். அம்பேத்கார் மக்கள் நற்பணி மன்றம் அமைந்திருந்த ஓட்டு வீடும் சேதமடைந்துள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளின் கொடிக் கம்பங்களும் சேதப்படுத்தப் பட்டன. இந்தச் சம்பவங்களின் தொடர்பாக 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகளில் எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

சம்பவம் பற்றித் தகவல் தெரிந்தவுடன் தஞ்சை காவல் துறைக் கண்காணிப்பாளர் அவர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளார். தஞ்சை சப்-கலெக்டரும் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரித்துள்ளார். மீதமுள்ள எதிரிகளை விரைவில் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், கிராமத்தில் தேவையான காவல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. நிலைமை இப்போது சகஜமாக உள்ளது. மேலும், கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதிலே வேடிக்கை என்னவென்றால் இரு தரப்பிலே, ஒரு தரப்பிலே நச்சினார்க்கினியன், இன்னொரு தரப்பிலே கலையழகன், தமிழ்ப் பெயருக்கு ஒன்றும் குறைவில்லை. ஆனால், தகராறுதான் ஓயவில்லை.

பெருமழை நிவாரணப் பணிகள்

உரை : 25 **நாள்: 9.5.1990**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயல், பெருமழை இவைகளின் காரணமாக தமிழகத்திலே சில பகுதிகளும் குறிப்பாக சென்னை மாநகரமும் பெரும் பாதிப்புக்கு ஆளாகும் என்ற நிலை மாறி மழையும் நமக்குக் கிடைத்தது, அதே நேரத்தில் மன ஆறுதலும் கிடைத்தது என்ற அளவில் இங்கே வீச இருந்த புயல் இப்போது மசூலிப்பட்டினத்தினுடைய பகுதிக்கு அருகே கரையைக் கடக்கக் கூடும் என்ற செய்தி வந்துள்ளது. இருந்தாலும்கூட அங்கேயும் மக்கள் எத்தகைய பாதிப்புக்கு ஆளாவார்களோ என்ற அச்சத்தோடு அந்தச் செய்தியையும் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது குறித்து முன் நடவடிக்கைகள் உரிய நேரத்திலே அறிவிக்கப்பட்டதா என்ற ஐயப்பாட்டை எதிர்க்கட்சித் தலைவர் இங்கே எழுப்பியுள்ளார்.

கடந்த 2, 3 நாட்களாக இதுபோன்ற முன்னறிவிப்புகள் எல்லாத் துறைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன. அது மீன்வளத் துறையாக இருந்தாலும், வேளாண்மைத்துறையாக இருந்தாலும், காவல்துறையாக இருந்தாலும், மின்சாரத் துறையாக இருந்தாலும் எங்கெங்கே தக்க பாதுகாப்புகள் செய்யப்பட வேண்டுமோ, எச்சரிக்கைகள் செய்யப்பட வேண்டுமோ அவைகள் அனைத்தும் செய்யப்பட்டிருக்கின்றன.

மின் துறையைப் பொறுத்தவரையில் உடனடியாக, சில இடங்களில் நிவாரணம் இன்னும் கிடைக்கவில்லை என்ற கருத்தை எதிர்க்கட்சித் தலைவர் இங்கே குறிப்பிட்டார். இன்று காலையிலேதான் மழை நின்று இருக்கிறது. தொடர்ந்து பெய்து கொண்டிருந்த மழையில் எந்தப் பணிகளையும் யாரும் ஆற்றிட

இயலவில்லை. பாதிக்கப்பட்ட ஏழையெளிய மக்களைக் காப்பாற்றவும், அவர்களுக்கு உணவு தரவும், அவர்களுக்கு உறைவிடங்கள் ஏற்பாடு செய்வதற்கும்தான் பெரும்பகுதி நம்முடைய அலுவலர்களுடைய பணி பயன்பட்டிருக்கிறதே யல்லாமல், மின்தடை, தொலைபேசித் தடை இவைகளை யெல்லாம் கவனிக்க மாநில அரசு ஊழியர்களுக்கோ, மத்திய அரசு ஊழியர்களுக்கோ நேரம் இல்லை. நேரம் இருந்தாலும் கூட மழை அல்லது புயல் அபாயம் என்ற நிலை அதற்கு இடம் தரவில்லை. தொடர்ந்து அத்தகைய துயர்துடைப்புப் பணிகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. நமக்கு வந்துள்ள தகவலின்படி நேற்று இரவு அநேகமாக எல்லா மாவட்டங் களிலும் மழை குறைந்து இருக்கிறது. நேற்றும் அதற்கு முன் தினமும் பெய்த மழையினால், தென்னாற்காடு, செங்கை-அண்ணா ஆகிய மாவட்டங்களில் ஏரி, குளங்களுக்குத் தண்ணீர் வரவு அதிகரித்துள்ளது. மாவட்டங்களிலே உள்ள நிலைமைகள் குறித்துத் தகவல்கள் முழுமையாக வந்து சேரவில்லை. வந்து கொண்டிருக்கின்றன. காரணம், மாவட்ட அதிகாரிகள் ஆங்காங்கே துயர் துடைப்புப் பணிகளிலே ஈடுபட்டிருக்கிற காரணத்தால், அத்தகைய கணக்குகளை, விவரங்களைத் தெரிவிப்பதற்கு சற்று காலதாமதம் ஏற்படுகிறது. காற்று, மழை காரணமாகப் பல இடங்களில் மின் கம்பிகள் அறுந்து விழுந் துள்ளன. அவைகளைச் சரிப்படுத்தும் முயற்சிகளும் தேவைக் கேற்ப செய்யப்பட்டு வருகின்றன. இந்த மின் கம்பிகளை மழை நீரில் தெரியாமல் மிதித்து விட்ட 3 பேர் அந்த விபத்துக்குப் பலியாகி இருக்கின்றார்கள். சென்னை, டி.பி. சத்திரத்தைச் சேர்ந்த ஜெயவேல் என்பவரும், எண்ணூர் பெரிய குப்பத்தைச் சேர்ந்த 21 வயதுடைய குமார் என்பவரும், சென்னையிலே அடை யாளம் தெரியாத ஒருவரும் இந்த மின் விபத்துக்குப் பலியாகி இருக்கின்றார்கள். சில இடங்களில் சுவர்கள் விழுந்து மரங்கள் விழுந்தும் சேதம் ஏற்பட்டிருக்கின்றது. அது குறித்தெல்லாம் உடனடியாக நிவாரணப் பணிகளை மேற்கொள்ள தமிழக அரசின் அனைத்துத் துறை அதிகாரிகளும் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார்கள். வீடு இல்லாதவர்களுக்குத் தங்குவதற்கான இட வசதிகள் செய்யும் பணியும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு

இருக்கிறது. பள்ளிகளிலும், திருமண மண்டபங்களிலும் தங்க வைக்கப்பட்டவர்களுக்கு சென்யைிலே மாநகராட்சி மன்றத்தின் சார்பில் உணவுப் பொட்டலங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு இருக்கின்றன. இதுவரை சுமார் 1 இலட்சத்துக்கும் மேற்பட்ட உணவுப் பொட்டலங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக் கின்றன.

எண்ணூர் நெடுஞ்சாலையில் கடல் அரிப்பால் பாதிக்கப் பட்ட பகுதிகளைச் செப்பனிடும் பணியினை நெடுஞ்சாலைத் துறையினர் விரைவாக மேற்கொண்டு உள்ளார்கள். இந்தப் பகுதிகளிலும் போக்குவரத்துத் தடை ஏற்பட்டுள்ளது. அதனை விரைவிலே தொடரச் செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. பழவேற்காடு பகுதியில் தண்ணீரால் சூழப்பட்ட குடும்பங்களைக் காப்பாற்ற நேற்று படகு மூலமாக அவர்களுக்கு ஏழாயிரம் உணவுப் பொட்டலங்கள், அனுப்பப் பட்டன. எண்ணூரில் பலகைக்குப்பம், ரெட்டிக்குப்பம், சத்திய வாணிமுத்து நகர், பாரதியார் நகர் ஆகிய பகுதிகளில் கடல் தண்ணீர் புகுந்துவிட்ட காரணத்தால் அந்தப் பகுதிகளிலே உள்ள மக்கள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டு பாதுகாப்பான இடங்களில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

சென்னை நகரில் இன்று காலை வரை உள்ள 24 மணி நேரத்தில் 67.9 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. நகரிலே பல தொலைபேசிகள் இந்த மழை காரணமாக இயங்காமல் உள்ளன. அந்தத் துறையுடன் பேசி அவைகளுக்கு மீண்டும் இணைப்புத் தருவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னை நகரிலேயும், சுற்றுப் பகுதிகளிலேயும் பெய்த கடும் மழை காரணமாக நகர மக்களுக்கு குடிநீர்ப் பஞ்சம் ஓரளவு துடைக்கப்பட்டுள்ளது. புழல் ஏரியிலே மாத்திரம் நேற்று மாலை வரை சுமார் 10 கோடி கன அடி நீர் அதிகரித்து உள்ளது. இன்று இது மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து மேலும் வேறு விவரங்கள் இன்னும் அந்தந்தத் துறையினரிடமிருந்து வந்து சேரவில்லை. அதற்கான காரணத்தை நான் சொல்லியிருக்கிறேன். இவைகளெல்லாம் வந்த பிறகு

நாளை அதை ஒரு அறிக்கையாக இந்த அவைக்கு வைக்க நான் தயாராக இருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசேந்திரன் அவர்களும் நேற்றைய தினம் என்னிடத்திலே பழையாறு பகுதி குறித்தும் அதிராம்பட்டினம் பகுதி குறித்தும் இரண்டு முறையீடுகளைத் தந்தார்கள். உடனடியாக அவைகளைக் கவனிக்குமாறு அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டு அது குறித்து வந்துள்ள விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சீர்காழி, பழையாறு பகுதியில் 6.5.1990 அன்று கடலில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் திரும்பவில்லை என்பதை அறிந்த மாவட்ட நிர்வாகம், அவர்களைத் தேடும் பணியிலே ஈடுபட்டது. காணாமல் போனதாகச் சொல்லப்பட்ட 5 மீனவர்களும் நேற்று 8.5.1990 காலையில் பத்திரமாக ஊர் திரும்பி விட்டார்கள். அதைப் போலவே, அதிராம்பட்டினம் பகுதியில் மீன் பிடிக்கச் சென்று காணாமல் போனதாகச் சொல்லப்பட்ட 15 மீனவர்களை மாவட்ட நிர்வாகம் தேடிக் கண்டுபிடித்து நேற்று 8.5.1990 நடுப் பகலில் அவர்களைக் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்துள் ளார்கள். புயலை ஒட்டி மீனவர்களுக்குத் தகுந்த எச்சரிக்கை நடவடிக்கை தரப்படவில்லை என்று கூறுவது சரியல்ல. ஆனால் புயல் வரக்கூடும் என்று தெரிவதற்கு முன்பே அவர்கள் எல்லாம் மீன் பிடிக்கச் சென்றவர்கள்.

அதைப்போலவே, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் ஒரு விவரத்தைத் தந்தார்கள். அதைப்பற்றி எதிர்க்கட்சித்தலைவர் அவர்களும் இப்போது குறிப்பிட்டார்கள். செங்கை-அண்ணா மாவட்டம் கடலூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த பெரிய குப்பம், சின்னக்குப்பம், ஆழிகுப்பம் ஆகிய தாழ்வான பகுதிகளிலிருந்து மொத்தம் 263 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப் பட்டு அங்கே வைக்கப்பட்டுள்ளார்கள். 138 குடும்பங்கள் கடலூரில் உள்ள புயல் புகலிடத்திலே- இது செங்கை- அண்ணா மாவட்டத்தில் உள்ள கடலூர்- அதாவது சைக்ளோன் ஷெல்டரிலே

வைக்கப்பட்டுள்ளார்கள். 128 குடும்பங்கள் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது. சின்னக் குப்பம், பெரியகுப்பம், ஆழிகுப்பம் ஆகிய இடங்களில் யாருக்கும் உயிர்ச் சேதமோ, பொருள் சேதமோ எதுவும் இல்லை. மீன் பிடிக்கச் சென்று காணாமல் போனவர்கள் மீட்கப் பட்ட பகுதிகளைச் சொன்னேன். இன்னும் மீட்கப்படாத நிலை யில் சிலர் இருந்தாலும்கூட அவர்களைத் தேடுகிற முயற்சியில் அரசு அதற்குரிய எல்லாவிதமான முனைப்பான நடவடிக்கை களையும் எடுத்துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொண்டு, மேலும் வருகிற விவரங்களை அவ்வப்போது இந்த அவை யிலே அறிவிப்பேன் என்று கூறி, இந்த அளவில் என்னுடைய செய்திகளை நிறைவு செய்கிறேன்.

வெள்ள மீட்பு பிரச்சினை

உரை : 26 **நாள் : 10.05.1990**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5.5.90 அன்று மாலை வங்காள விரிகுடாவில் தென் மேற்கு திசையில் 650 கிலோ மீட்டர் தூரத்தில் கடலூருக்குத் தென் கிழக்கே, குறைந்த காற்றழுத்த மண்டலம் ஏற்பட்டதன் விளைவாக சென்னை, செங்கை அண்ணா, தென்னாற்காடு, தஞ்சை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் பலத்த மழை பெய்யக்கூடும் என வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்தது. உடனடியாக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படி கூறப்பட்டார்கள். 7.5.1990 அன்று காலை 11 மணி அளவில் வருவாய்த்துறைச் செயலாளர் தலைமையில் இயற்கை இடர்ப்பாடுகள் பற்றிய உயர்நிலைக் குழு கூட்டப்பட்டது. வருவாய் நிர்வாக ஆணையாளர், பொதுத்துறைச் செயலாளர், சென்னை மாநகராட்சி ஆணையாளர், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர், மீன்வளத்துறை இயக்குநர், உள்ளூர் பாதுகாப்பு இயக்குநர், விமானப்படை, கடற்படை மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். தீயணைப்புத்துறை இயக்குநரும், மீன்வளத்துறை இயக்குநரும் தேவையான தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டார்கள். தாழ்வான பகுதிகளில் உள்ள மக்களைப் பத்திரமான இடங்களுக்குக் கொண்டு சேர்ப்பது, உணவு அளிப்பது, வெள்ள மீட்பு, சாலைத் தடைகளை

அகற்றுதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ள விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டன.

விமானப்படை ஹெலிகாப்டர்களும், ராணுவப்படை களும், தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மேற்கொள்ளப் பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பற்றி, அவ்வப் போது பொதுமக்களுக்கு அறிவிப்புகளும் வெளியிடப்பட்டன. சென்னை நகரில் இப்புயலால் ஏற்பட்ட பலத்த மழையால் பாதிக்கப்பட்ட சுமார் 2000 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். சுமார் ஒரு லட்சம் உணவுப் பொட்டலங் களும் வழங்கப்பட்டன. கடும் மழையால் சாலைப் போக்கு வரத்து சில இடங்களில் பாதிக்கப்பட்டன. சில இடங்களில் மரங்கள் சாய்ந்தன. அவற்றையெல்லாம் அப்புறப்படுத்த அவ்வப்போது உடனடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

மின்சாரம் தாக்கியதால் சென்னையில் இருவரும், செங்கை அண்ணா மாவட்டத்தில் ஒருவரும் உயிர் இழந்தார்கள், அது தவிர, மேலும் 3 பேர் இந்தக் கடும் மழையின் காரணமாக உயிர் இழந்திருக்கிறார்கள். அவர்களின் குடும்பத்திற்குத் தலா 2,000 ரூபாய் வீதம் நிவாரண நிதி நாளை மாலைக்குள் வழங்கப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளன.

பழவேற்காடு பகுதியில் வெள்ளத்தால் சூழப்பட்ட மக்களுக்கு படகுகள் மூலம் உணவு வழங்கப்பட்டது. எண்ணூர் நெடுஞ்சாலையில் கடல் அரிப்பால் போக்குவரத்து பாதிக்கப் பட்டது. சாலைகளைப் பழுது பார்க்கும் பணி வேகமாக நடை பெற்று வருகிறது. நானும், பொதுப்பணித்துறை அமைச்சரும், மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சரும் அதிகாரிகளோடு சென்று, கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட சாலைகளையும், பாதிக்கப் பட்ட குடிசைவாழ் மக்களையும் பார்த்து, நிலைமைகளைக் கேட்டறிந்து உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நிவாரணப் பணிகளையெல்லாம் மேற்கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் மழை அதிகம் இல்லை என்ற போதிலும், சோணாங்குப்பம், கிள்ளை என்ற பகுதிகளில்

மட்டும் சுமார் 700 குடும்பங்கள் புயல் பாதுகாப்புக் கட்டிடங் களுக்கு, அவர்கள் பத்திரமான இடங்களுக்கு, அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் 9.5.90 அன்று அவர்கள் எல்லாம் மீண்டும் அவரவர் வீடுகளுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப் பட்டனர். இந்த மாவட்டத்தில் 8 கட்டு மரங்கள் கடலில் அடித்துச் செல்லப்பட்டன. உயிர்ச்சேதம் ஏதுமில்லை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ராமேஸ்வரம், மீன்பிடித் துறைமுகத்தில் உள்ள 2 தூண்கள் இடிந்து விழுந்ததால் 8 பேர் காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். சென்னைக்குத் திரும்பிக்கொண்டிருந்த 1116 என்ற எண் கொண்ட படகு, புலிகாட் என்ற இடத்தின் அருகில் வரும்போது இயந்திரக் கோளாறு ஏற்பட்டது. அது கூனங்குப்பம் அருகில் கரையேற்றப்பட்ட பிறகு, அதிலிருந்த 4 மீனவர்களும் பத்திர மாகக் கரை சேர்க்கப்பட்டார்கள். முருகன் என்ற பெயர் கொண்ட படகு பழுதாகி, அதிலிருந்து 5 மீனவர்களோடு சென்னையி லிருந்து 25 கி.மீ. தூரத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தது. ஜெய் அம்பிகா என்ற பெயர் கொண்ட, அந்த வழியாகச் சென்று கொண்டிருந்த ஒரு கப்பலால், பழுதான படகு கண்டுகொள்ளப் பட்டு, அதிலிருந்த தயாளன், மணி, நாகலிங்கம், விஜயன், ஆறுமுகம் என்ற 5 மீனவர்களும் காப்பாற்றப்பட்டார்கள். இயந்திரக் கோளாறு காரணமாக ஒரு விசைப்படகு (எண். 1086) ஸ்ரீ ஹரிகோட்டாவுக்கு அருகில் நங்கூரம் பாய்ச்சப்பட்டு நின்றிருப்பதாகத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. அதிலிருந்த மீனவர்களில் 3 பேர் சென்னை திரும்பி விட்டார்கள். மற்ற 2 மீனவர்களைக் காப்பாற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. எம்.எஸ். 937 என்ற எண் கொண்ட படகு ஒன்று சென்னையை விட்டு 2.5.90 அன்று மீன் பிடிக்க ஆந்திரக் கரைக்குச் சென்று, சென்னை திரும்பும் வழியில் பழவேற்காடு அருகில் மூழ்கிவிட்டதாகத் தெரிகிறது. படகிலிருந்து 5 மீனவர்களில் 4 பேர் கரை சேர்ந்துவிட்டார்கள். மற்ற ஒருவரைப் பற்றிய விவரம் தெரியவில்லை.

அதிராம்பட்டினத்தில் உள்ள கரையூர் தெருவிலிருந்து 5.5.90 அன்று மீன் பிடிக்கச் சென்ற 15 மீனவர்கள் காணவில்லை என்ற தகவல் கிடைத்ததும், மாவட்ட நிர்வாகம் அவர்களைத்

தேடிக் கண்டுபிடிக்க ஏற்பாடுகள் செய்து, அவர்கள் அனை வரும் கரை சேர்க்கப்பட்டுள்ளார்கள். அதே இடத்திலிருந்து 6.5.90 அன்று கடலுக்குள் சென்ற 3 மீனவர்கள் மாவட்ட நிர்வாகத்தின் உதவியோடு 8.5.90 அன்று கரை சேர்க்கப்பட்டு உள்ளார்கள்.

நாகப்பட்டினம் அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த 12 மீனவர்கள் 5.5.90 அன்று மீன்பிடிக்கச் சென்றார்கள். அவர்கள் காணவில்லை என்ற தகவல் கிடைத்தது. அவர்களைத் தேடும் பணியிலே மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டது. மூன்று மீனவர்கள் 7.5.90 அன்றும், ஒன்பது மீனவர்கள் 8.5.90 அன்றும் கரை சேர்க்கப்பட்டுள்ளனர். நாகை, நம்பியார் நகரைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் (பழனியாண்டி, முருகேசன், நொண்டி), 6.5.90 அன்று மீன்பிடிக்கச் சென்றனர். அவர்கள் மூவரும் 8.5.90 அன்று காலை 10 மணிக்கு மல்லிப்பட்டிணம் வந்து சேர்ந்தனர். பின்பு அவர்கள் சொந்த இடத்திற்கு அனுப்பப்பட்டார்கள்.

கோடியக்கரைக்கு அருகிலே உள்ள ஆற்காட்டுத்துறை கடற்கரைப் பகுதியில் படகில் மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்கள் காணவில்லை என்ற தகவல் கிடைத்துள்ளது. இந்த நான்கு மீனவர்களும் நாகப்பட்டினம் அக்கரைப்பேட்டையைச் சேர்ந்தவர்கள். 6.5.90 அன்று மீன்பிடிக்கச் சென்றவர்கள். Coast Guard மற்றும் தொடர்புடைய இதர அமைப்புகள் அவர்களைத் தேடும் பணியிலே ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். விமானம் மூலம் தேடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலங்கை தூதுவருக்கும் இது சம்பந்தமாகத் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. புதுக் கோட்டை மாவட்டம், ஜகதாப்பட்டினம் கடற்பகுதியில் ஒரு மீனவர் மின்னலால் தாக்குண்டு இறந்துவிட்டார். இவர் மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர். ஆதலால், இவரது குடும்பத் திற்கு காப்புறுதித் தொகை ரூபாய் 15,000 வழங்க ஏற்பாடு செய்யப்படும். புயல் எச்சரிக்கைகளை எல்லாம் பொருட்படுத் தாமல் 7.5.90 அன்று இராமநாதபுரம் வட்டம், கீழக்கரையைச் சேர்ந்த 4 மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றார்கள். 'வத்தை' என்று பொதுவாக அழைக்கப்பெறும் நாட்டுப் படகில் அவர்கள் சென்றார்கள். மீன்பிடிப்பதற்காக அவர்கள் 3 முறை வெடி

மருந்துக் குச்சிகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். முதல் முறையாகவும், மூன்றாம் முறையாகவும் அவர்கள் பயன்படுத்திய வெடிமருந்துக் குச்சிகள் உடனடியாக வெடித்தன. இவர்களுக்கு மீன்கள் கிடைத்தன. இரண்டாவது முறையாக பொருத்தப்பட்ட வெடிமருந்துக் குச்சி முதலிலே வெடிக்காமல் எதிர்பாராத விதமாக திடீரென்று வெடித்ததால், வெடி மருந்துக் குச்சிக்கு அருகில் சென்ற 19 வயது நிரம்பிய பால்ராஜ் என்பவர் தீ காயங்களுக்கு உள்ளாகி, கடல் நீரில் மூழ்கிவிட்டார். மீதமிருந்த 3 மீனவர்களும் பால்ராஜ் சடலத்தைக் கடலிலேயே விட்டுவிட்டு கடற்கரை விரைந்துவிட்டார்கள். 8.5.90 அன்று கீழக்கரை கடற்கரையில், இறந்த பால்ராஜ் சடலம் காணப்பட்டது. கரை திரும்பிய மூன்று மீனவர்களில் தோழன் மகன் சின்னத்தம்பி, மத்தியாஸ் மகன் சின்னத்தம்பி ஆகிய இருவரும் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். முனியாண்டி மகன் மலைராஜ் என்ற மீனவர் தலைமறைவாகியுள்ளார். கீழக்கரை காவல் நிலையத்தினர் இது தொடர்பாக வழக்கு ஒன்று பதிவு செய்து, புலன் விசாரணை செய்து வருகிறார்கள். பெருமழையால் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்த விவரங்கள் ஆங்காங்கே மாவட்ட நிர்வாகத்தினரால் கணக்கு எடுக்கப்பட்டு வருகிறது. ஓரிரு நாட்களில் அந்தக் கணக்கு எடுக்கும் பணி முடிந்து விடும். அதன்பின்தான் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பின் அளவுக்கேற்ப நிவாரணத் தொகைகள் வழங்கப்படும்.

கண்ணகி கோயில்

உரை : 27 நாள்: 11.05.1990

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அந்த அரசு என்று குறிப்பிடாமலே அந்த அரசைச் சுட்டிக் காட்டியதற்கு நன்றி. எனவே, கண்ணகி கோயிலைப் பொறுத்தவரையில் எனக்கு வந்துள்ள தகவல்- கூடலூர் இராம சாமி அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பற்றியெல்லாம் சொன்னார்கள். அங்கே ஒட்டப்பட்ட சுவரொட்டி அனுமதிக்கப் படவில்லை என்று சொன்னார்கள். ஏற்கெனவே, இந்த அவையில் இதுகுறித்துப் பிரச்சினை எழுந்து, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சரும், நானும் ஏற்ற விளக்கங்களை எல்லாம் இங்கே தந்திருக்கிறோம். இதற்கிடையில் கேரளத் திற்கும் தமிழகத்திற்கும் இடையில் கசப்புணர்வு ஏற்படாத வகையில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். நானும் கேரள முதலமைச்சர் அவர்களைச் சந்திப்பதாக இருக்கிறேன் என்றெல்லாம் அன்றைக்குக் குறிப்பிட்டு இருக்கிறேன். ஆனால், அங்கே இந்தத் திருவிழாவை ஒட்டி, அந்தக் கோயிலைப்பற்றிக் குறிப்பிடும்போது, அங்கே ஒட்டப்பட்ட சுவரொட்டியில் கூடலூரில் உள்ள கண்ணகி ஆலயம் என்று எழுதி ஒட்டப்பட்ட காரணத்தால், அதைக் கேரள அரசின் சார்பாக மறுத்து இருப்பதாகத் தான் எனக்கு தகவல் வந்தது. அந்தக் கூற்று எவ்வளவு சரியானது என்பது எனக்குத் தெரியாது. இருந்தாலும், இது போன்ற மிக உணர்ச்சிகரமான பிரச்சினைகளில் நாம் கசப்புணர்வை இன்னொரு மாநிலத்திற்கு இடையே உருவாக்கக் கூடாது என்ற அடிப்படையில்தான் இதைக் கூறுகிறேனே அல்லாமல் வேறு அல்ல.

7.5.1990 அன்று இந்த அவையிலே கண்ணகி கோயில் பிரச்சினை பற்றிப் பேசப்பட்டு, கேரள அரசோடு உடனடியாகத் தொடர்பு கொண்டு, அவர்களோடு பேசி அந்த அடிப்படையில் கண்ணகி கோட்டத்திற்கு, விழாவிற்குச் செல்பவர்களுக்குத் தடை இல்லாமல் பார்த்துக் கொள்வதாகக் கேரள அரசினுடைய செயலாளர் அவர்கள் நம்முடைய செயலாளருக்கு உறுதி அளித்தார்கள். இந்த 3 நாள் விழாவிற்கு துணை செய்ய கேரள அரசைக் கேட்டிருக்கவேண்டும் என்ற வாதம் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அதைக்குறித்து, நேற்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தக் குறிப்பைத் தந்தவுடனே, நேற்று மீண்டும் கேரள அரசோடு தொடர்பு கொண்டு இதுபற்றிப் பேசப்பட்டது. கேரள அரசு இந்தப் பிரச்சினை குறித்து இடுக்கி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் உடனடியாக அறிக்கை கேட்டு மேற்கொண்டு ஆவன செய்வதாகத் தெரிவித்தது. அதற் கிடையில், நம்முடைய அரசின் பொதுத்துறைச் செயலாளர் தொலைபேசி மூலமாக நேரடியாக இடுக்கி மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு பேசினார்.

கண்ணகி கோயில் விழா என்பது ஆண்டிற்கு ஒரு நாள் மட்டுமே, அதாவது சித்திரை முழு நிலவு அன்று கொண்டாடப் படுகிறது என்று அந்த மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்து இருக்கிறார். மதுரை மாவட்ட ஆட்சித்தலைவரும் இடுக்கி மாவட்ட ஆட்சித்தலைவரோடு பேசி இருக்கிறார். அப்போது இடுக்கி மாவட்ட ஆட்சித்தலைவர் தமிழ் மொழி தெரிந்த அர்ச்சகரை அமர்த்தி, தேவையான வழிபாடுகளைச் செய்யவும், குடிநீர் தேவைப்பட்ட அளவிற்கு வருகிற பக்தர்களுக்கு விநி யோகம் செய்யவும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்திருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், எந்தவிதமான புகாருக்கும் இடம் இல்லாமல் அனைத்து வசதிகளும் விழாவிற்கு வருகிற பக்தர்களுக்குச் செய்து கொடுப்பதாகவும் இடுக்கி மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்லி இருக்கிறார்.

பொதுவாகத் தமிழகத்திலிருந்து செல்கிற மக்கள் இந்த விழாவை 3 நாட்கள் தொடர்ந்து கொண்டாட வேண்டுமென்று விரும்பினாலும், கேரள மாநில அரசு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், இந்த விழா ஒரு நாள் மட்டும் எடுக்கப்பட இயலும்

என்றும், ஏனென்றால் பல ஆண்டுகளாக இந்த முறைதான் அங்கே தொடர்ந்து இருந்து வருகிறது என்றும், பக்கத்தில் சிறுத்தைப் புலிகள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதி என்பதால் இரவில் தங்குவது என்பது அவ்வளவு நல்லதல்ல என்று கருதப்படுவதாலும் 3 நாட்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பது தங்களுக்கு மிகுந்த சிரமம் என்பதைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

அதிலே அங்கே மூன்று நாட்கள் விழா நடக்குமேயானால், அங்கே பூஜை செய்கின்ற காரியங்களைச் செய்யக் கூடியவர்களுக்கு அதிக வருமானம் கூட கிடைக்கக்கூடும் என்ற அடிப்படையில் கூட இது போன்ற வேண்டுகோள்களை அந்த விழாவினையொட்டித் திரும்பத் திரும்ப எழுப்பி வருவதாகவும் ஒரு தகவல் கூறப்பட்டு இருக்கிறது. எனினும் எந்த வகையிலே பார்த்தாலும், உணர்ச்சியோடு பின்னிக் கிடக்கின்ற ஒரு சம்பவம் இது. இந்தப் பிரச்சினையில் நாம் நம்முடைய அணுகுமுறையை- எதிர்க்கட்சித் தலைவரே குறிப்பிட்டதைப் போல கனிவோடும் துணிவோடும் இருக்க வேண்டும் என்பதை இந்த அரசு ஏற்றுக் கொண்டு, கனிவோடு பேசி, அவர்களுடைய சம்மதத்தைப் பெற்று, கண்ணகி ஆலயம் தமிழகத்தினுடைய எல்லைக்குள்ளே இருக்குமாறு செய்ய எல்லா வகையான முயற்சிகளும் மேற் கொள்ளப்படும். அந்தப் பிரச்சினை தீருமானால், இதுபோன்ற திருவிழாப் பிரச்சினைகள் வருவதற்கே இடம் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புயல் நிவாரணப் பணி மத்திய அரசு உதவி நிதி

உரை : 28 நாள்: 11.05.1990

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று தொலைக்காட்சியில் தமிழகத்திற்கு நிவாரண நிதியாக ரூ. 39 கோடி என்று அறி விக்கப்பட்டதும் நான்கூட கொஞ்சம் ஆதங்கப்பட்டேன். புயல் கொஞ்சமாவது இங்கு வீசக் கூடாதா என்று ஆதங்கப்பட்டேன். உடனடியாக உரியவர்களோடு தொடர்பு கொண்டு விசாரித்து, பிறகு அதை இங்கே விளக்கவேண்டுமென்று எண்ணிக் கொண் டிருந்தேன். அதற்கிடையே நம்முடைய நண்பர் அப்துல் லத்தீப் அவர்கள் இதைப்பற்றி இங்கே பிரச்சினையை எழுப்பியிருக் கிறார்கள். அதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

1.4.1990 முதல் 9ஆவது நிதிக் குழுவின் பரிந்துரைக் கேற்ப இயற்கை இன்னல் நிவாரணப் பணிகள் செலவை மத்திய மாநில அரசுகள் ஏற்கும் முறை மாற்றிஅமைக்கப் பட்டிருக்கிறது. இதுவரை அதாவது 31.3.1990 வரை, தமிழக அரசும் மத்திய அரசும் 50:50 அதாவது பாதிப்பாதி விகிதத்தில் ஒவ்வொரு ஆண்டும் அதற்கு ரூ. 15.50 கோடி நிதி ஒதுக்க வேண்டும். அதாவது ரூ. 15½ கோடி ஒதுக்க வேண்டுமென்று இதற்கு முன்பு இருந்தது. 50:50 என்ற வகையில். அதைவிட அதிகத்தொகை செலவழிக்க வேண்டியிருந்தால் தேவைகளை விவரித்து நிதி ஒதுக்கக் கோரி மத்திய அரசுக்கு மாநில அரசு ஒரு விண்ணப்பம் அனுப்ப வேண்டும். ஏற்கெனவே இருந்த முறை இது. மத்திய அரசு ஒரு அலுவலர் குழுவை அனுப்பிப் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடச் செய்து, அவர்கள் அறிக்கையின் மீது அதிகபட்சம் ஒவ்வொரு இனத்திற்கும் எவ்வளவு செலவிடலாம் என்று நிர்ணயித்து ஒரு உத்தரவு வழங்கும். இனி இந்த உச்சவரம்பிற்குட்பட்டுச் செய்யப்படும்.

செலவும் மத்திய மாநில அரசுகளால் குறிப்பிடப்பட்ட வெவ்வேறு விகிதங்களில் பகிர்ந்தளிக்கப்படும். உச்சவரம்பிற்கு

மேற்பட்ட செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்க வேண்டும். இந்த நடைமுறையினால் மாநில அரசு செய்ய வேண்டிய செலவுக்கு மத்திய அரசின் முன்னனுமதி கோரும் பிரச்சினை ஒரு பக்கம், நிர்வாகச் சிக்கலும் காலதாமதமும் மறுபக்கம் என்ற வகையில் மாநிலங்கள் சிரமப்பட்டுக் கொண் டிருந்தன. இந்த ஆண்டு முதல் அமலுக்கு வருகின்ற புதிய கொள்கையின்படி ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு துயர் துடைப்பு நிதி ஏற்படுத்தப்படும். இதன் அளவை நிதிக் குழுவே நிர்ணயித்திருக்கிறது. அதன்படி தமிழக அரசின் நிதி அளவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 39 கோடியாகும். இந்நிதிக்கு மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் பணம் செலுத்தும். வெள்ளம், புயல், வறட்சி, தீ விபத்து முதலிய எல்லாவிதமான இடர்பாடுகளுக்கும் நிவாரணம் இந்நிதியிலிருந்து மாநில அரசுகளுடைய விருப்பப்படி செலவிட்டுக் கொள்ளலாம். மத்திய அரசினுடைய அலுவலர் குழு பார்வையிடுதல், அவர்களின் முன் அனுமதி பெறுதல், போன்ற நடைமுறைகள் கிடையாது. இந்த நிதிக்கு மேலும் செலவு செய்ய வேண்டு மென்றால் அதை மாநில அரசே முழுவதும் ஏற்க வேண்டும். இந்த ஆண்டு நிதியே மிகுதியாக இருந்தால் அதை அடுத்த ஆண்டுச் செலவிற்கும் மாற்றிக் கொள்ளலாம். இந்த நிலையில் தமிழக வெள்ள நிவாரணத்திற்கு மத்திய அரசு ரூ. 39 கோடி அளிப்பதாக அறிந்திருக்கிறது என்று சொல்வது சரியல்ல. மேலே சொன்ன துயர் துடைப்பு நிதி இன்னும் அமலுக்கே வரவில்லை. மத்திய அரசு அதற்கான விதிமுறைகளையும் வழி முறைகளையும், பரிசீலித்துக் கொண்டு இருப்பதாகத்தான் செய்தி வந்துள்ளது. எனவே, புயல் வேகத்தில் மத்திய அரசு அறிவித்ததாகத் தொலைக்காட்சியில் சொல்லப்பட்டது. புயல் வேகத்தில் சொல்லப்பட்ட ஒரு செய்தியே அல்லாமல் வேறு அல்ல. உண்மை நிலவரம் இதுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று, ''ரா''வைப் பற்றி ஒரு தலைவர் இங்கே பேசியிருப்பதாக நம்முடைய நண்பர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் குறிப்பிட்டு விளக்கம் கேட்டார். அதுவும் அவர்கள் திருவிளையாடல்தான்.

நகைமுகன் பிரச்சினை

உரை :29 நாள்: 12.05.1990

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராஜேந்திரன் ஒரு அரிய சொற்பொழிவையே இங்கு நிகழ்த்தி இருக்கிறார். ஒரு கருத்தரங்கத்திற்குத் தேவையான வாதங்களை எடுத்து வைத்திருக்கிறார். அவர் குறிப்பிட்ட நகைமுகன் பற்றிய பிரச்சினை வழக்கு மன்றத்திற்கும் வர இருக்கின்ற காரணத்தால் நான் அதிலே அதிகமாக சட்ட நுணுக்கங்களில் செல்ல விரும்பவில்லை. பத்திரிகைகளிலே வந்த செய்தியை வைத்துக்கொண்டு இந்த மாமன்றத்திலே அது குறித்த பிரச்சினைகளை எழுப்பியவர்கள் யார் என்பது மாண்புமிகு தம்பி இராஜேந்திரன் அவர்களுக்கு மிக நன்றாகவே தெரியும். ஏதோ தமிழ்நாட்டிலே பிரிவினைவாதம் தலை தூக்கி நிற்பதாக அடிக்கடி காங்கிரஸ் கட்சியினுடைய துணைத்தலைவர், இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் இந்த அவையிலே பேசியிருப்பதை அனைவரும் அறிவார்கள்.

அது மாத்திரமல்ல. அவர் பிரிவினை வாதத்தை ஒழிப்போம் என்கின்ற தலைப்புகளிலே கூட வெளி மேடைகளிலும், அவருடைய கட்சி மேடைகளிலும் அல்லது கட்சியினர் ஏற்பாடு செய்கின்ற மேடைகளிலும் பேசி வருகின்றார்கள். தமிழ் நாட்டிலே ஒரு பிரிவினைவாதம் நடந்து கொண்டிருக்கிறது. அதை இந்த அரசு அனுமதித்துக் கொண்டிருக்கிறது என்பது போன்ற புகார்கள் இன்று வடக்கே உள்ள மாநிலங்களிலே பரப்பப்படுகின்றன. அதைப் பரப்புகின்றரர்கள் சாதாரணமானவர்களாக இருந்தால் நான் கூட பொருட்படுத்த மாட்டேன். இந்தியாவினுடைய பிரதமராக இருந்த அன்புக்குரிய மாண்புமிகு

ராஜீவ்காந்தி அவர்கள்- இன்றைக்கு இந்தியாவினுடைய பிரதான எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறார். அவர்களே கூட தமிழ் நாட்டிலே இன்றைக்கு பிரிவினைவாதம் தலைதூக்கி நிற்கிறது. பிரிவினைப் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. பிரிவினை உணர்வு கிளப்பிவிடப்பட்டிருக்கிறது என்பது போன்ற செய்திகளைச் சொல்லி வருகிறார். தமிழ்நாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1962-ஆம் ஆண்டிலேயே பிரிவினை கோஷத்தைக் கைவிட்டு, இந்திய ஒருமைப்பாடு, இந்தியாவினுடைய பாதுகாப்பு இந்தியா வின் ஒற்றுமை இவைகளிலே திராவிட முன்னேற்றக் கழகம் தன்னை இணைத்துக் கொள்கின்றது என்று குறிப்பிட்டு அதற்கான பாராட்டுக்கள் எல்லாம் கூட அன்றைய முதலமைச்சராக இருந்த பெரியவர் பக்தவத்சலம் அவர்களால் இந்த மாமன்றத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. இருந்த போதிலும் ஏதோ ஒரு அரசியல் காழ்ப்புணர்வின் காரணமாக இந்த ஆயுதத்தை வைத்து இங்குள்ள மாநில அரசை ஏதாவது செய்ய முடியுமா என்று எண்ணி சிலபேர் இதுபோன்ற முயற்சிகளிலே இன்றைக்கு ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்கான கருவிகளாக, விடுதலைப் புலிகள் மீது இங்கே தமிழ்நாட்டிலே ஒருசிலர் செய்கின்ற பிரச்சாரங்கள் பயன்படுகின்றன என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் உண்மையிலேயே விடுதலைப்புலிகளுக்கு தமிழ்நாட்டிலே இன்றைக்கு ஆதிக்கம் இருக்கிறது என்று செய்யப்படுகின்ற பிரச்சாரம் எவ்வளவு தவறானது என்பதை நாம் மிக நன்றாக அறிவோம்.

அதைப்போலவே, பிரிவினைவாதம் இங்கே பேசப்படு கின்றது என்றால்- யாரோ ஒரு சிலர்- அந்த ஒரு சிலர் தவறாகக் கருதிக் கொள்ளக்கூடாது- நான் உண்மையைச் சொல்கிறேன். அவர்களை பின்பற்றுபவர்கள் எவ்வளவு பேர் என்ற கணக்கை நாம் பார்க்க வேண்டும். 'followers' எவ்வளவு பேர்? ஒரு சில ருக்கு அவர்களுடைய நிழல்கள் கூட அவர்களைத் தொடர்வது இல்லை என்பது கூட எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் சில நேரங்களில் அவர்கள் திடீரென்று இந்தப் பிரிவினைப் பேச்சைக் கட்டவிழ்த்து விடுவதும், அதன் காரணமாக இங்குள்ள அரசுக்கு ஒரு சிக்கலை ஏற்படுத்தலாம் என்று எண்ணுவதும் அதை பெரிதாக, கடுகை மலையாக ஆக்கி, டில்லியிலே உள்ள

அரசிடம் திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பற்றிக் கோள் கூறுவதும், பத்திரிகையாளரிடத்திலே ராஜீவ் காந்திபோன்ற மிகப் பெரும் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர்களேகூட இப்படிப்பட்ட பிரச்சாரத்திலே ஈடுபடுவதும், நாம் இதுபோன்ற காரியங்களை அனுமதித்துக் கொண்டிருக்கிறோமோ என்கின்ற சந்தேகம் பொதுமக்களுக்கு வருவதும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய, சிந்தித்துச் செயல்பட வேண்டிய ஒன்றாக இருக்கிற காரணத்தாலேதான், நகைமுகன் என்ற நண்பர் பஞ்சாபிலுள்ள மானும், இலங்கையிலே ஈழத்திலே உள்ள புலிகளும் இரண்டு பேரும் சந்திக்கப் போகிறார்கள் என்ற செய்தியைச் சொல்லி, அந்தச் சந்திப்பை அவரே ஏற்பாடு செய்யப் போவதாகச் சொல்லி, அதை இந்தியாவில் உள்ள பல பத்திரிகைகள், குறிப்பாக தமிழ்நாட்டிலுள்ள பல பத்திரிகைகளில்எல்லாம் தலையங்கங்கள் எல்லாம்கூடத் தீட்டப்பட்டு, இன்றைக்கு பத்திரிகைகளுடைய கருத்துக்களுக்கு மதிப்பு அளிக்க வேண்டும். அதையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். எவர் சொன்னார் என்பதல்ல. என்ன சொன்னார் என்பதுதான் முக்கியம் என்ற வகையிலே அதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன் வந்ததே தவிர வேறல்ல, அதைத்தான் நான் இங்கே மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

பலம் வாய்ந்த இயக்கத்தைத் தன்னகத்தே வைத்துக் கொண்டிருந்த தந்தை பெரியார் அவர்கள் அன்றும் சரி, இன்றும் சரி- ஒரு பலம் வாய்ந்த 'Followers' - உறுதி வாய்ந்த தொண்டர்கள்- இவர்களைக் கொண்ட தந்தை பெரியார் அவர்கள் பிள்ளையார் சிலையை உடைப்பதாக அறிவித்த அந்தக் காலகட்டத்தில், அன்றைக்கு முதலமைச்சராக இருந்த மூதறிஞர் ராஜாஜி அவர்கள், அதிகாரிகள் எல்லாம் பெரியார் மீதும், திராவிடர் கழகத் தொண்டர்கள் மீதும், பிள்ளையாரை உடைப்ப வர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்ன போது, ராஜாஜி அவர்கள் கோப்பிலே எழுதினார், 'Ignore it' -அதை அலட்சியப்படுத்துங்கள் என்று எழுதினார். அவ்வளவு வலிவு வாய்ந்த ஒரு இயக்கத்தினுடைய செயல்களையே அலட்சிப்படுத்த வேண்டும்; ஏனென்றால் அதை அலட்சியப்

படுத்தாமல் அவர்களைக் கைது செய்தால் அதன் காரணமாகப் பிள்ளையாரைப் பற்றிய விமர்சனங்கள், இராமரைப் பற்றிய விமர்சனங்கள் எல்லாம் வரக்கூடும். அது பெரிதாக ஆகக்கூடும் என்ற காரணத்தினால் அதை அலட்சியப்படுத்தச் சொல்லி அன்றைக்குக் கோப்பிலே ராஜாஜி எழுதினார். அதைப்போன்ற ஒரு முறையைத்தான் நாமும் கடைப்பிடிக்க வேண்டும் என்று இருந்தாலும் கூட உள்ளபடியே சில பேருக்கு இந்த விஷயங் களை எல்லாம் பூதாகாரமாக ஆக்கிக்காட்டி உண்மையிலேயே பிரிவினை உணர்வு தமிழகத்திலே வரவேண்டும், இந்தியாவிலே வரவேண்டும் என்று எண்ணுகிறார்களோ, காஷ்மீரத்திலே பிரி வினை தோன்றுவதற்கு காரணமாக இருந்தவர்கள் இன்றைக்கு, தமிழ்நாட்டிலே பிரிவினைச் சக்திகளை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வளர்க்கிறது என்று கூறுவது எவ்வளவு கடைந் தெடுத்த தவறு என்பதை எடுத்துக்காட்டத்தான் இதையெல்லாம் நான் இங்கே கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய தம்பி இராஜேந்திரன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். தானே சென்று மத்திய சிறையிலே நகைமுகனை சந்தித்து அவரிடத்திலேயிருந்து விபரங்களை அறிந்து வந்ததாகச் சொன்னார். இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளலாம், ஒரு காங்கிரஸ் கட்சி நண்பருக்கே நகைமுகனோடு இவ்வளவு தொடர்பும், இரக்க மனப்பான்மையும் இருக்கும்போது கழக ஆட்சியிலே இருக்கின்ற நாங்கள் குறை சொல்லப்படுவது நியாயம்தானா? நான் அவரைக் குறை சொல்லவில்லை. நியாயம் என்ன என்று கேட்பதற்குச் செல்கிறார். அவர் என்ன கருத்தைச் சொல்கிறார் என்று கேட்பதற்கு நம்முடைய இராஜேந்திரன் அவர்கள் சிறைச்சாலைக்குச் சென்றிருக்கிறார். அதை வைத்துக் கொண்டு இராஜேந்திரன் அவர்களுக்கும், நகை முகனுக்கும் தொடர்பு என்று பத்திரிகையிலே போட முடியுமா? முடியாது. எப்படி தொடர்பு இல்லையோ, அதுபோல அவரு டைய நிலை என்ன கருத்து என்ன என்று அறியச் சென்றிருக் கிறார். அவர் சொன்ன அந்தக் கருத்துக்கள் உண்மையாக இருக்குமேயானால் அவர் குற்றமற்றவர்தான். நான் இல்லை என்று மறுக்கவில்லை. ஆனால் அந்தக் கருத்துக்கள் எடுத்துச்

சொல்லப்பட வேண்டிய இடம் சட்டமன்றமா அல்லது நீதிமன்றமா என்பது கேள்விக்குரிய பிரச்சினை. அதற்கு நான் இப்போது எந்தவிதமான முடிவுக்கும் இந்த நேரத்திலே வந்துவிட முடியாது. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நண்பர் இராஜேந்திரன் அவர்கள் சொன்ன அந்தக் கூற்று, நகைமுகன் அவர்கள் சொன்னதைப்போல் உண்மையாகவே இருக்குமானால் அதற்கும் மீறி- அப்படிப்பட்ட ஒரு எண்ணமே இல்லாமல் அவரைப் பற்றி தவறாக பத்திரிகைகள் கருத்துக்களை வெளியிட்டு இருக்கும்போது- பத்திரிகைகளிலே தவறான அடிப்படையில் வந்த கருத்துக்களையொட்டி ஒருவரை இம்சிப்பது, துன்புறுத்துவது நியாயம் அல்ல என்று என்னுடைய மனச்சாட்சியே எனக்குச் சொல்லுகிறது. எனவே நகைமுகன் அவர்கள் சொல்லுவது- நண்பர் இராஜேந்திரன் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டுவதுபோல் உண்மையாக இருக்குமானால், அது குறித்து அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். யாரையும் வேண்டும் என்று பழிவாங்காது என்பதையும், அதே நேரத்திலே எந்தப் பிரிவினை எண்ணங்களுக்கும் தமிழ்நாட்டிலே இடம் இருக்க முடியாது. ஏதோ தமிழ்நாட்டிலே பிரிவினை எண்ணங்கள் தலைதூக்க ஆட்சி துணை போகின்றது என்று பரப்பப்படுகின்ற கருத்து, டெல்லியிலே பாராளுமன்றம் வரையிலே பரப்பபடுகின்ற கருத்து எல்லாம் உண்மைக்கு மாறானவை; இந்த அரசுக்குத் துன்பம் தருவதற்காக செய்யப்படுகின்ற பிரச்சாரம் என்பதை எடுத்துச் சொல்லி இந்தச் செய்திகளைச் சொல்வதற்கு நம்முடைய தம்பி இராஜேந்திரன் அவர்கள் எழுப்பிய இந்த 'ஸ்பெஷல் மென்ஷன்' பயன்பட்ட காரணத்தால் அவருக்கும் நன்றி கூறி அமர்கின்றேன்.

ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம்

உரை : 30 நாள்: 22.08.1990

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் மிகவும் நலிவுற்றபடியால் மத்திய அரசின் தொழில் மற்றும் நிதி சீரமைப்புக் குழுவினரால் பதிவு செய்யப்பட்டு, 9.12.1988 அன்று நலிவுற்ற நிறுவனம் என்று அறிவிக்கப்பட்டது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி-ஐ.டி.பி.ஐ.- இதன் செயல் முனைவராக நியமிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்த நிறுவனத்தின் நிர்வாகம் கைமாறி திரு. ஏ.சி. முத்தையா இந்த நிறுவனத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார். தொழிலாளர்களுடன் தொடர்ந்த பேச்சு வார்த்தைக்குப் பின்னரும் ஒரு நல்ல முடிவு ஏற்படாத தால் நிர்வாகம் இந்நிறுவனத்தின் செயலாக்கத்தை 7.2.1989 முதல் நிறுத்தி வைத்தது.

தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழு தொடர்ந்த பல விசாரணைகளுக்குப் பிறகு 26.2.1990 அன்று அதன் பெஞ்ச் விசாரணையில் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் இந்த நிறுவனத்துக்கான புனரமைப்புத் திட்டத்தை மாற்றம் செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி இந்திய தொழில் வளர்ச்சி வங்கி இந்த நிறுவனத்துக்கான புனரமைப்பு மற்றும் புதுமைப்படுத்தும் ஒரு திட்டத்தைக் கொடுத்து, அந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அது குறித்த பிரச்சினை களையும், திருத்தங்களையும் தெரிவிக்குமாறு கேட்டு அனுப்பப் பட்டது. 26.6.1990 அன்று தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழு மீண்டும் விசாரணை நடத்தியது. புனரமைப்புத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தன்னால் 4.13 கோடி ரூபாய் தருவதற்கு இயலாது என்றும், 2 கோடி ரூபாய் மாத்திரம் தருவதற்கு இயலும் என்றும் திரு. ஏ.சி. முத்தையா தெரிவித்தார். இந்த நேரத்தில்

மாநில அரசும் தன்னால் ரூபாய் 3 கோடி அளவுக்கு மானியமோ அல்லது கடனோ வழங்க இயலும் என இறுதியாகக் கூற முடிய வில்லை. 6.7.1990 அன்று நானும், தலைமைச் செயலாளரும், நிதித்துறைச் செயலாளரும் மற்ற அதிகாரிகளையும் அழைத்து இது குறித்துப் பேசியதற்குப்பின் ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனத்திற்காக கோடி ரூபாய் அளவுக்கு அரசின் சார்பில் முன் பணமாக வழங்கலாம் என்று முடிவெடுத்தது. இந்த முடிவு அந்தத் தொழிலாளர் பிரச்சினைக்காக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த தோழர் ஏ.எம்.கோபு அவர்களுக்கும், என் மூலம் கடிதமாகத் தெரிவிக்கப்பட்டு அவரின் உண்ணாவிரதத்தை நிறுத்துவதற்கும் அந்த முடிவு அடிப்படையாக அமைந்தது. ஆனாலும் இந்த முடிவானது தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழுவுக்கும், திரு. ஏ.சி. முத்தையா அவர்களுக்கும் தொலை பேசி மூலமாகவும், கடிதம் மூலமாகவும் உடனடியாகத் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து தனது கருத்தை திரு. ஏ.சி. முத்தையா அவர்கள் இன்னும் தெரிவிக்கவில்லை.

பி.ஐ.எஃப்.ஆர். அதாவது தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழு இந்த நிறுவனத்திற்கு புதிய முனைவர் ஒருவரைக் கண்டுபிடிக்குமாறு ஆலோசனை வழங்கி இருந்தது. விருப்பமுடைய பல தொழில் முனைவர்களோடு அரசாங்கம் இதுகுறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது. பின்வரும் தொழில் அதிபர்கள் இதிலே ஆர்வம் காட்டினார்கள்.

1. விஜய் மல்லயா - யு.பி. க்ரூப்

2. ஜே.வி. பட்டேல் - இங்கிலாந்தில் வாழும் இந்தியர். தலைவர், ஏ.ஏ.ஜி. ஹோல்டிங்ஸ் லிமிடெட்.

3. திரு. சகாணி, ஆர்.ஜே. - அசோக் லேலண்ட்

4. ரவி புருஷோத்தமன், காந்தி வெங்கடபதி இன்ஜினியரிங் பிரைரேட் லிமிடெட்.

5. திரு. பழனிச்சாமி, சேரன் க்ரூப் ஆஃப் கம்பெனி.

இந்தத் தொழில் முனைவர்களுடன் தமிழக அரசு இப் போது ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கிறது. நான் தெரிவித்த

முதல் மூன்று தொழில் முனைவர்களும் மிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். தற்போதுள்ள புனரமைப்புத் திட்டத்திற்கு திரு. ஏ.சி. முத்தையா அவர்கள் ஒத்து வராவிட்டால் மேற்குறிப்பிட்ட திட்டம் குறித்து மத்திய அரசின் தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழுவிடம் இந்தப் பிரச்சினையைத் தமிழக அரசு எடுத்துச் செல்லும். இது குறித்து திரு. ஏ.சி. முத்தையா அவர் களிடம் இருந்து இறுதி முடிவைத் தெரிந்துகொள்வதற்காக தலைமைச் செயலாளர் அவர்கள் இன்று ஒரு கூட்டத்தைக் கூட்டி இருக்கிறார்கள். எனவே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு எல்லா விதமான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இடையிலே மூன்றாயிரத்து முப்பத்து ஆறு தொழி லாளர்களுக்கு இடைக்கால நிவாரணமாக தலா 200 ரூபாயும், நிவாரணம் பெறாது விடுபட்ட 50 தொழிலாளர்களுக்கு அடுத்த உத்திரவுப்படி தலா 200/- ரூபாய் வீதமும் வழங்கப்பட்டது என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். எவ்வளவு விரைவில் ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை பிரச்சினை தீர்ந்து தொழிலாளர்கள் வேலைக்குச் செல்ல வேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறையோடு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே 3036 தொழிலாளர்களுக்கு முதல் தடவையாக 200 ரூபாயும், விடுபட்ட 50 தொழிலாளர்களுக்கு இரண்டாவது உத்திரவு மூலம் 200 ரூபாயும் அந்த 3086 தொழிலாளர்களுக்குத் தரப்பட்டது போல், இப்போதும் இங்கே இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்ட பின்னர் இந்தப் பிரச்சினை யில் அந்தத் தொழிலாளர்களின் தேவையான வாழ்வை எண்ணி அந்த 3086 தொழிலாளர்களுக்கும் தலா 250 ரூபாய் வீதம் நிவாரணம் அளிக்க இந்த அரசு முன் வருகிறது என்பதையும், அதற்கு சுமார் 7½ லட்சம் ரூபாய் செலவாகும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரசுக்கு இதிலே மிகுந்த அக்கறை இருக்கின்றது என்ற காரணத் தால் இதிலே அக்கறையுடன் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இதை மேலும் வலியுறுத்தமாட்டார்கள் என்று நம்பி இந்த அளவில் என்னுடைய கருத்தை நிறைவு செய்கிறேன்.

இரங்கல் தீர்மானத்தில் மரபு மீறலா?

உரை : 31 **நாள் : 25.05.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய இந்தத் தீர்ப்பிற்குப்பிறகு அல்லது இந்தக் குறிப்புரைக்குப்பிறகு நான் பேசுவதற்கு தங்களுடைய அனுமதியை கோருகின்றேன். அனுமதி அளிப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு, எனக்காக மாத்திரமல்ல, அலுவல் ஆய்வுக் குழுவிலே கலந்துகொண்ட எல்லா கட்சிகளுடைய உறுப்பினர்கள் சார்பாக நான் சிலவற்றை இங்கே சொல்ல வேண்டியிருக்கிறது.

இப்பொழுது இந்திய தேசீய லீக்கினுடைய தலைவர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் எழுப்பிய பிரச்சினையின் காரணமாகவும், அதைத் தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் பேசியதன் காரணமாகவும், இந்த அவையில் திருமதி ஜானகி அம்மையார் அவர்களுடைய அனுதாபத் தீர்மானம், அண்ணியார் திருமதி ராணி அண்ணாதுரை அவர்களைப்பற்றிய அனுதாபத் தீர்மானம் இவைகளை எல்லாம் ஏதோ ஒரு கேலிக்குரியதாக ஆகிவிட்டதோ, அதற்கு எல்லா கட்சி அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்களும் காரண கர்த்தாக்களாக ஆகிவிட்டார்களோ என்ற கலக்கம் எனக்கு ஏற்பட்டுள்ளது. அலுவல் ஆய்வுக் குழுவில் நடைபெறுகின்ற எந்த நிகழ்ச்சிகளையும் அந்த குழுவில் கலந்துக்கொண்டவர்களால் வெளியிடப்படக்கூடாது என்ற விதிமுறை இருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது, அப்படி ஒரு சம்பிரதாயம், அதாவது மரபு கடைபிடிக்கப்பட்டு இதுவரையில் வந்திருக்கின்றது. அதற்கு மாறாக, இன்று இந்த அவையில் இந்த விவாதம் எழுந்திருக்கின்றது. அன்றைக்குச்

சட்டப் பேரவையினுடைய செயலாளர் அவர்கள் தங்களுடைய அறையில் அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்களுக்கு, ஏற்கெனவே மறைந்த முன்னாள் முதல்வர்களுக்காக எவ்வளவு நேரம், அதாவது எத்தனை நாள் என்ற அளவிற்கு அவை ஒத்திவைக்கப்பட்டது என்ற விவரங்களை எடுத்துச் சொன்னார்கள்.

தாங்களே இங்கு படித்துக் காட்டியதைப் போல மறைந்த குமாரசாமி இராஜா அவர்கள் முன்னாள் முதல்வர் என்ற முறையிலே மறைந்தபோதும், ஓமந்தூரார் அவர்கள் முன்னாள் முதல்வர் என்ற முறையிலே மறைந்தபோதும் ½ மணி நேரம் என்றும் 15 நிமிடங்கள் என்றும்தான் அவை ஒத்திவைக்கப் பட்டிருக்கின்ற நிகழ்ச்சிகளையெல்லாம், அன்றைக்கு செயலாளர் அவர்கள் தங்களுடைய உரையிலே எடுத்துக் காட்டினார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் ஒருநாள் ஒத்திவைத்தால் என்ன என்ற கருத்தைச் சொன்னபோது நானும் ஏற்றுக்கொண்டேன். அலுவல் ஆய்வுக்குழுவின் எல்லா உறுப்பினர்களும், எல்லாக்கட்சி உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டார்கள். எல்லாக் கட்சி உறுப்பினர்களும் இந்த அலுவல் ஆய்வுக்குழுவில் அங்கம் வகிக்கின்ற அளவுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. முதலில், சட்டப்படி இவ்வளவு பேருக்குத்தான் இடம் அளிக்க வகையுண்டு என்று சொல்லப் பட்டபோதும்கூட, தங்களிடத்திலும், சட்டமன்றத்துறை செயலாளரிடத்திலும் நானும் அவை முன்னவர் பேராசிரியர் அவர்களும்தான் வாதாடி, இங்கேயுள்ள சில கட்சிகள் ஒரு உறுப்பினர், இரு உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தாலும் கூட, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அகில இந்திய கட்சிகளிலே ஒன்று, இரண்டு மாநிலங்களிலே இன்றைக்கு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற கட்சி, ஜனதாதள கட்சி, இன்றைக்கு டெல்லி யிலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற கட்சி என்று இவைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, நம்முடைய கிருஷ்ணசாமி அவர்களுடைய கட்சியையும் அலட்சியப்படுத்தி விடக்கூடாது. எனவே, எல்லாக் கட்சிகளும் அலுவல் ஆய்வுக் குழுவிலே இடம்பெறவேண்டும் என்று நாங்கள் வைத்த கோரிக்கையை பெருமனதோடு அன்றைக்கு ஏற்றுக்

கொண்டீர்கள். எல்லோரும் கலந்து எடுத்த முடிவைத்தான் இந்த அவையில் நாம் நிறைவேற்றி இருக்கின்றோம். தங்களை அன்று பாராட்டிப் பேசுகின்ற நேரத்திலேயே, ஒரு பாராட்டு நிகழ்ச்சியிலேகூட சில விரும்பத்தகாத வார்த்தைகள், குறுக்கீடு இவைகளெல்லாம் ஏற்பட்டது உள்ளபடியே மனச்சங்கடத்தை உருவாக்கக்கூடியதாகும். அதைப்போல திருமதி ஜானகி அம்மையார் அவர்களுடைய இரங்கல் தீர்மானத்தில் பேசும்போது, கடந்த கால நிகழ்ச்சிகள், இந்த அவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இவைகளைப் பற்றியெல்லாம் யாராவது எடுத்துச் சொல்லி ஒரு விரும்பத்தகாத நிலை ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் அதை வெளிப்படையாகக்கூட அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுத்துச் சொல்லி எல்லோரும் ஒருமனதாக ஒத்துக்கொண்ட பிறகுதான் தாங்களே அந்தத் தீர்மானத்தைப் படிப்பது என்ற ஒரு முடிவு ஏற்பட்டது. மறைந்தவர்கள் இருவரும், என்னைப் பொறுத்தவரையில், ஜானகி அம்மையார் சகோதரி போன்றவர், அண்ணியார் ராணி அவர்கள் எனக்கு அன்னையைப் போன்றவர்கள். நேற்றைக்குக்கூட நான் கேபினெட் அறைக்குச் சென்றபோது அலுவலர்களை அழைத்து உத்தரவிட்டிருக்கிறேன். கேபினெட் அறையிலே எல்லா முதலமைச்சர்களுடைய படமும் இருக்கிறது. ஜானகி அம்மையாருடைய படம் இல்லை. முதல் பெண் அமைச்சர் என்ற முறையில் அவர்களுடைய படத்தையும் உடனடியாக மாட்டுங்கள் என்று நான் உத்தரவிட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). எல்லோரிடத்திலும், மறைந்தவர்களிடத்திலே மரியாதை செலுத்துகின்ற, மாற்றாராக இருந்தாலும் மரியாதை செலுத்துகின்ற ஒரு மரபை இந்த அவையில் நாம் வளர்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த மரபுக்கு ஊனம் வராமல் இனிமேல் நாம் நடந்துகொள்ள வேண்டும் என்று தாங்கள் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்தை நானும் ஏற்றுக்கொண்டு இந்த விளக்கத்தை இந்த அவையின் முன் வைத்து அமர்கின்றேன்.

மதுரை மீனாட்சியம்மன் கோவில்

உரை : 32 நாள் : 27.05.1996

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலே நடைபெற்ற குண்டு வெடிப்பு நிகழ்வு குறித்து அதிகாரிகள் மூலமாக நான் பெற்றுள்ள குறிப்பை முதலில் இந்த அவையின் முன் வைத்துவிட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களுக்கான விளக்கத்தை பிறகு கூறலாம் என்ற நிலையில் முதலில் அந்த அறிக்கையினை படிக்க விரும்புகிறேன்.

மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில் சந்நிதியில் இரண்டாவது பிரகாரத்தில் கிரகக் கதவுகள் உள்ள பதினோரு அறைகளில் ஏகதச சிவலிங்கங்கள் உள்ளன. அந்த சிவலிங்கங்களுக்கு பூஜைகள் எதுவும் நடைபெறுவதில்லை. பொதுவாக இரண்டாம் பிரகாரத்தில் பொதுமக்கள் நடமாட்டம் மிகவும் குறைவாகவே இருக்கும். திருக்கோயில் காலை 4 மணி முதல் பிற்பகல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் வழிபாட்டுக்காக திறந்திருக்கும். பாதுகாப்புக்காக தனி காவல் அலுவலர்களும் திருக்கோயில் பாதுகாப்பு அலுவலர்களும் பணியில் அமர்த்தப்பட்டு உள்ளார்கள். 18-5-1996ஆம் நாள் மேற்படி 16 அலுவலர்கள் மேலரதவீதி, அம்மன் சந்நிதி, ராஜகோபுரம், சாமி சந்நிதி, தெற்கு ஆடி பொற்றாமரைக்குளம், வடக்கு ஆடி கருவூலம், அஷ்டாதி மண்டபம் ஆகிய இடங்களில் பணியில் இருந்தார்கள். அன்று இரவு சுமார் 7.25 மணிக்கு சாமி சந்நிதி மேற்புற இரண்டாவது பிரகாரத்தில் வெடிகுண்டு வெடிக்கும் சத்தம் கேட்டு கோயில் ஊழியர்களும் பாதுகாப்பு அலுவலில் இருந்த மதுரை மீனாட்சியம்மன் ஆலய காவல் நிலையத்தின் சார்பு

ஆய்வாளரும் விரைந்து சென்றார்கள். மேற்படி சந்நிதியிலிருந்து வெடி மருந்து வாசனையும், புகையும் வந்துள்ளன. கிரில் கதவு பூட்டியபடி காணப்பட்டது. மின்சார பல்பு ஒன்று உடைந்து காணப்பட்டன. சிவலிங்கம் இருந்த சந்நிதியின் சுவரில் குண்டு வெடித்ததில் சிதறிய இரும்புத் துகள்கள் ஏற்படுத்திய சிறுசிறு சேதங்கள் காணப்பட்டன. சிவலிங்கத்திற்கு எந்தவிதமான சேதமும் இல்லை. சந்நிதியின் முன்னறையின் கதவோரமும் இரண்டாவது அறையில் சிவலிங்கத்தின் முன்பும் தரையில் குண்டு வெடித்ததற்கான அடையாளமாக சிறு சிறு பள்ளங்கள் இருந்தன. உடனடியாக கிடைத்த தகவலின்பேரில் காவல்துறை உயர் அதிகாரிகளும் மாவட்ட ஆட்சியரும் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டார்கள். வெடிபொருள் சட்டம் பிரிவு 3-ன் கீழ் மதுரை மீனாட்சியம்மன் கோவில் காவல் நிலைய குற்ற எண் 262/96-ல் இச்சம்பவம் தொடர்பாக 18-5-1996 அன்று இரவு 8.30 மணிக்கு சார்பு ஆய்வாளர் ஒரு வழக்கைப் பதிவு செய்தார். கைரேகை நிபுணர் மற்றும் நடமாடும் ஆராய்ச்சிக்கூட அதிகாரி ஆகியோரும் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டார்கள். சம்பவம் நடந்த இடத்தில் சிதறிக் கிடந்த இரும்புத் துண்டுகளும் வெடிபொருள் வாசனை உள்ள நொறுங்கிய கற்களும் வெடிகுண்டை மறைத்துக் கொண்டு வருவதற்குப் பயன்படுத்தப்பட்ட சிதறிய காகிதத்துண்டுகளும், எரிந்த மற்றும் எரியாத தீக்குச்சியும் கைப்பற்றப்பட்டன. சம்பவத்திற்கு நேரடியான சாட்சிகள் யாரும் இல்லை. கோயில் வளாகத்தில் இருந்த சிவலிங்கத்திற்கோ, பொதுமக்களுக்கோ சேதமோ அல்லது காயமோ இல்லை. புலன் விசாரணை நடத்த தனிக்குழு ஒன்று காவல் உதவி ஆணையாளர் தலைமையில் அமைக்கப் பட்டுள்ளது. புலன் விசாரணையில் வெடித்த வெடிகுண்டுகள் இரும்புக்குழாய் ரக வெடிகுண்டு என்றும் ஜெல்லட்டின் என்ற வெடி பொருளை கருமருந்து திரி மற்றும் டெட்டனேட்டர் மூலம் வெடிக்கச் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிய வந்துள்ளது. வழக்கு விசாரணையில் 21-5-1996 அன்று மதுரையைச் சேர்ந்த அலி என்பவருடைய மகன் சீனி நயினா முகமது என்பவர் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவருடைய ஒப்புதல் வாக்குமூலத்தின்படி 2 பைப் குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவர் 1994ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்து முன்னணி மாநில செயலாளராக இருந்த ராஜகோபால் என்பவர் கொலை யுண்ட வழக்கில் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளி வந்தவர்.

மேலும் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளான மதுரை நரிமேடு காதர் பாட்சா என்பவர் மகன் காஜா உசேன் மற்றும் மதுரை நெல்பேட்டை சிக்கந்தர் என்பவரின் மகன் சேட் என்கின்ற சேக் அப்துல்லா ஆகிய இருவரையும் 23-5-1996 அன்று கைது செய்து 24-5-1996 அன்று மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். வெடிகுண்டு சம்பவம் நடந்தவுடன் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களும், காவல் துறை - டி.ஜி.பி. - தலைவர் அவர்களும் அங்கே சென்று இடத்தைப் பார்வையிட்டுள்ளார்கள். தற்போது மதுரை கோவிலில் எந்தவிதமான அச்சமும் இன்றி மக்கள் வந்து செல்கிறார்கள். போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எந்தவிதமான பதட்டமோ, பீதியோ இன்றி அமைதியான சூழ்நிலை அங்கே நிலவுகிறது. இது பெறப்பட்டுள்ள அறிக்கை. இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களைப் பற்றி நான் சில விளக்கங்களை அளிக்க விரும்புகின்றேன்.

கடந்த காலத்தில் தலைநகரத்தில் சேத்துப்பட்டில் ஆர். எஸ். எஸ். அலுவலகத்தில் குண்டு வெடித்து 11 பேர் பலியானார்கள். சென்னை சிந்தாதிரிபேட்டையில் இந்து முன்னணி அலுவலகத்தில் குண்டு வெடித்து இந்து முன்னணியினுடைய மாவட்ட செயலாளரே பலியானார். மயிலாடுதுறையில் பி.ஜே.பி. தலைவருக்கு பார்சலில் ஒரு வெடிகுண்டு வந்ததாக கடந்த கால ஆட்சியில் செய்தி வந்தது. நாகூரில் பார்சல் குண்டு வெடித்து இந்து முன்னணி பிரமுகருடைய துணைவியார் மரணம் அடைந்தார். திரைப்பட இயக்குநர் மணிரத்தினம் இல்லத்து முகப்பில் குண்டு வெடித்தது. சேலம் மாவட்டம் வாழப்பாடியில் வெடிகுண்டு வெடித்ததில் 8 பேர் பலியானார்கள். இவைகள் எல்லாம் கடந்த காலத்தில் நடைபெற்றவை. கொரட்டூரில் கோஷ்டி சண்டையிலே வெடிகுண்டு கையாளப்பட்டது. அரியாங்குப்பம் அருகே காவல் நிலையத்தின் மீதே வெடிகுண்டு வீசப்பட்டது. இவைகள் எல்லாம் கடந்த கால நிகழ்வுகள்.

நான், கடந்த கால நிகழ்வுகள் முன் மாதிரியாக இருந்தது, இந்தக் காலத்திலும் இவைகள் தொடரவேண்டும் என்று விரும்புகிறவன் அல்ல. இந்த அவையில் உள்ள யாரும் அப்படி நிச்சயமாக விரும்பமாட்டீர்கள் என்று எனக்கு மிக நன்றாகத் தெரியும். அதிகாரிகள் தந்துள்ள இந்த அறிக்கையிலுள்ள அத்தனையும் உண்மை என்று நான் நம்பி இதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற சொல்லமாட்டேன். இந்த அவை இருப்பதே எடுத்து வைக்கப்படுகின்ற கருத்துக்களில் உங்களுக்குள்ள மன வேறுபாடுகளை, கருத்து வேறுபாடுகளை எடுத்துச் சொல்வதற்காகத்தான். எனவேதான், இன்னும் உண்மையை அறிந்துகொள்ள சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்றும், நீதி விசாரணை தேவை என்றும் மாண்புமிகு உறுப்பினர்களால் இங்கே எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. பொதுவாக மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன எடுத்துச் சொன்னாலும், குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் ஏதோ இந்த ஆட்சி வந்தால் கோவிலுக்கு எல்லாம் ஆபத்து என்று முன்பே எச்சரிக்கப்பட்டது போலவும் அது இப்போது உண்மையாகிவிட்டதைப் போலவும், ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார். அது அவர்கள் நடத்திய பிரச்சாரம். அந்தப் பிரச்சாரம் மக்கள் இடத்திலே எடுபட்டதா, இல்லையா என்பது இந்த அவையைப் பார்த்தாலே தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே நான் அதற்கு வேறு எந்த பதிலும் சொல்ல விரும்பவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, அதனுடைய தலைவனாக ஏற்றுக் கொள்ளப்பட்ட எனக்கு, கோவில்களைப் பற்றி உள்ள கொள்கை என்ன என்பதை இன்று அல்ல, ஏறத்தாழ ஒரு 40, 50 ஆண்டுகளுக்கு முன்பே பராசக்தி படத்தில் விளக்கியிருக்கிறேன். கோவில்கள் கூடாது என்பது அல்ல, கோவில்கள் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கொள்கை என்று விளக்கியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே கோவில்களுக்கு எந்த ஆபத்தும் இந்த ஆட்சியினால் வராது என்பதற்கு கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியே சான்று பகன்று கொண்டிருக்கிறது. திருவாரூரில் ஓடாமல் கிடந்த திருவாரூர் தேரை, 20 ஆண்டு காலம் ஓடாமல் இருந்த தேரை, 1967ஆம் ஆண்டு கழக ஆட்சி வந்த பிறகுதான் அதிலும்

குறிப்பாக நான் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகுதான் ஓட வைத்த நிகழ்ச்சி நடைபெற்றது. பல ஆலயங்களுக்குக் குடமுழுக்குகள் நடைபெற்றிருக்கின்றன. பல ஆலயங்களுக்குத் திருப்பணிகள் நடைபெற்றிருக்கின்றன. இங்கே அவைத் தலைவராக அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உங்களுடைய தந்தையார் அவர்களே இந்தத் திருப்பணிகள் செய்வதில் எவ்வளவு ஆர்வம் படைத்தவர் என்பதும், அதற்கு மதுரை மீனாட்சியம்மன் ஆலயமே சான்று பகன்று கொண்டிருப்பதும் இந்த நாட்டிலே உள்ள அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

வேண்டுமென்றே, ஒரு வெடிகுண்டு நிகழ்ச்சியை வைத்துக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்தலாம் என்று வெடிகுண்டு வீசியவர்கள் கருதியதைவிட அதைப்பற்றிப் பேசுகின்றவர்கள் கருதுவது நல்லதல்ல என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

இதில் திட்டமிட்ட சதி இருப்பதாக என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் இந்திய தேசிய லீக் கட்சியினுடைய தலைவர் அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துக்கூறி, எனவே இதற்கு சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று குறிப்பிட்டார். மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சி.பி.ஐ. வைத்தாலும் சரி, நீதி விசாரணை வைத்தாலும் சரி, இரண்டில் ஒன்றை, அல்லது போதுமான தடுப்பு நடவடிக்கைகள் எடுங்கள் என்று அவர் கேட்டுக்கொண்டார். டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும் தன்னுடைய கருத்தை இங்கே வலியுறுத்தி, இனி இதுபோன்ற காரியங்கள் நடைபெறாமல் தடுக்க வேண்டுமென்று எடுத்துக் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதுபோன்ற காரியங்கள் நடைபெறாது என்று நான் திட்டவட்டமாக நிச்சயமாகக் கூற முடியாது. ஏனென்றால், இந்தக் கலாச்சாரம் இன்றைக்கு இந்தியத் திருநாட்டில் பல ஆண்டுக் காலத்திற்கு முன்பே பரவிவிட்ட ஒன்றாகும். உலக உத்தமர் காந்தியடிகளையே சுட்டுக் கொன்ற பெருமையிழந்த நாடு இந்த நாடு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அன்னை இந்திரா காந்தியே அவருடைய பாதுகாப்பாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்கின்ற சிறுமைக்கு ஆளான நாடு இந்த

நாடு. இந்தியாவினுடைய இளந்தலைவர் ராஜீவ் காந்தி அவர்களையே சுட்டுக் கொன்ற நாடு, பிணமாக்கிய நாடு, பரிதாபத்துக்குரிய இந்த நாடு என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

ஒரு நடிகர் வெடிகுண்டு கலாச்சாரத்தைப் பற்றிப் பேசினார், இப்பொழுது அவர் எங்கே போனார் என்றெல்லாம் தாமரைக்கனி அவர்கள் விலாசத்தை விசாரித்துக் கொண்டிருந்தார். அவர் நடிகர் என்று குறிப்பிட்டாலும்கூட அவர் யார் என்பதை ஞானசேகரன் அவர்கள் குறிப்பிடுகையில் விளக்கினார், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களைப்பற்றி.

அவர் அரசியலிலே முழுமையாக ஈடுபடாவிட்டாலும் கூட, சட்டமன்றத்திலே பேசப்படுகின்ற அளவிற்கு நம்முடைய தாமரைக்கனி அவர்கள் அவருக்கு ஒரு சிறப்பு அளித்தமைக்காக நான் நண்பர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் சார்பிலே நன்றிக் கூறிக் கொள்ளத்தான் வேண்டும்.

அவர் என்ன பேசினார்? இயக்குநர் மணிரத்தினம் வீட்டில் ஒரு குண்டு வெடித்தது. அந்தக் குண்டு வெடித்ததைச் சோதனை செய்ய வந்த போலீஸ்காரர்கள் மிரட்டப்பட்டார்கள் என்றார். யாரால்? ஆட்சியாளர்களால், உன்னை யார் அங்கே போகச் சொன்னது, உன்னை யார் அதைப்பற்றி ஆராயச் சொன்னது என்று மிரட்டப்பட்டார்களாம். இன்று அப்படி அல்ல. ஒரு நடவடிக்கை நடந்தால் அதைப்பற்றி விசாரிக்கச் செல்கின்ற போலீஸ்காரர்கள் சுதந்திரமாகச் செயல்பட விடுகின்ற ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. அன்றைக்கு மணிரத்தினம் வீட்டிலே குண்டு வெடித்தபோது அதைப்பற்றி விசாரிக்கச் சென்றவர்கள், அதைத் தொடர்ந்து மணிரத்தினத்தினுடைய இல்லத்திற்குப் பாதுகாப்பு அளித்தவர்களெல்லாம் அன்றைக்கு தண்டிக்கப்பட்டார்கள்.

எனவேதான் ரஜினிகாந்த் அவர்கள், அவர் பேசிய ஒரு விழாவில், மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்களையும் வைத்துக்கொண்டு பேசிய விழாவில், தமிழ்நாட்டில் வெடிகுண்டு கலாச்சாரம் பரவி வருகிறது, அது தடுக்கப்பட வேண்டுமென்று தான் சொன்னார். அதற்கு எவ்வளவு பெரிய தண்டனை! யாருக்கு? ஆர். எம். வீரப்பனுக்கு. அவர் பேசியதை அமைச்சர் கேட்டுக் கொண்டிருந்தார் என்பதற்காக அவருடைய அமைச்சர் பதவியே

போய்விட்டது. இப்பொழுது தாமரைக்கனி பேசியதை இவ்வளவு அமைச்சர்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக ஒரு அமைச்சருடைய பதவியும் போய்விடவில்லை; போய்விடாது.

எனவே நிகழ்ச்சிகள், அந்த நிகழ்ச்சிகள் தடுக்கப்பட்டனவா அல்லவா என்பதைவிட அந்த நிகழ்ச்சிகளுக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா அல்லவா என்பதுதான் மிக முக்கியமான பிரச்சினை. அது மாத்திரமல்ல; அது தடுக்கப்பட வேண்டும் என்பதற்குப் பதிலாக ஊக்கப்படுத்தப்படுகின்ற அளவிற்கும், உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல், அகப்படாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்ற அளவிற்கும் ஆட்சியாளர்களே துணை போவதுமான நிலை இந்த ஆட்சியில் நிச்சயமாக இருக்காது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய லத்தீப் அவர்களும், தாமரைக்கனி அவர்களும், நம்முடைய ஞானசேகரன் அவர்களும், கிருஷ்ணசாமி அவர்களும் எடுத்துக் காட்டியதைப்போல யாரோ குற்றம் செய்யப் போய் யாரோ சிக்கிக் கொள்கிற நிலைமை இல்லாமல் இதற்கு நிச்சயம் ஒரு சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று கருதுவீர்களேயானால் நான் உடனடியாக ஆம், வைக்கிறேன் என்று உறுதி அளிக்க முடியாவிட்டாலும் அதைப்பற்றி தக்க பரிசீலனை செய்து, தேவை என்றால் அதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று கூறி அமைகின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் தீர்மானம் வெடியாக இருந்தது. இரண்டாவது வெறும் இடியாக இருக்கிறது. (சிரிப்பு) ஏனென்றால், இந்த இரண்டு வார்த்தைகளும், இரண்டு தீர்மானங்களிலும் மிகத் தாராளமாக, ஏராளமாக புழங்கின. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்திய தேசிய லீக் கட்சியினுடைய தலைவர் அப்துல் லத்தீப் அவர்களும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும் கொண்டுள்ள உணர்வுக்கு சற்றும் மாறுபட்டதல்ல, இந்த அரசின்

உணர்வு என்ற காரணத்தினாலேதான் இந்தப் பிரச்சினை குறித்து ஆளுநர் உரையிலேயே விளக்கமாக எடுத்துக்காட்டப்பட்டிருக் கின்றது. அந்த உரை பற்றி நடைபெறும் விவாதத்தில் அதைப் பற்றி பேசவேண்டிய கருத்துக்களையெல்லாம் அந்த வட்டாரத்தைச் சேர்ந்த தொகுதிகளின் உறுப்பினர்கள் என்ற முறையில் உரிமை எடுத்துக் கொண்டு திரு. லத்தீப் அவர்களும், திரு. ஞானசேகரன் அவர்களும் இங்கே உரையாற்றிக் கொண்டிருக்கிறார்கள். உணர்வு ஒன்றுதான் என்றாலும்கூட சில விவரங்களை இந்த அவையும் அறிந்துகொள்ள வேண்டும். நாடும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சில புள்ளிவிவரங்களைத் தர நான் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழ்நாட்டில் தோல் பதனிடும் நிறுவனங்களில் வட ஆற்காடு - அம்பேத்கர் மாவட்டத்தில் 569-ம், திண்டுக்கல் - அண்ணா மாவட்டத்தில் 70-ம், செங்கை - எம். ஜி. ஆர். மாவட்டத்தில் 165-ம், திருச்சி மாவட்டத்தில் 23-ம், பெரியார் மாவட்டத்தில் 64-ம், புதுக்கோட்டை மாவட்டத்தில் 2-ம், தென்னாற்காடு - வள்ளலார் மாவட்டத்தில் 1-ம் என்ற வகையில் மொத்தம் 894 நிறுவனங்கள், தோல் பதனிடும் நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த 894 தோல் பதனிடும் நிறுவனங்களில் வட ஆற்காடு - அம்பேத்கர் மாவட்டத்தில் 208-ம், திண்டுக்கல் - அண்ணா மாவட்டத்தில் 70-ம், செங்கை - எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 45-ம், திருச்சி மாவட்டத்தில் 23-ம், பெரியார் மாவட்டத்தில் 60-ம், புதுக்கோட்டை மாவட்டத்தில் 1-ம் என்ற வகையில் 407 நிறுவனங்கள் உச்சநீதிமன்ற ஆணைக்கிணங்க மூடப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித்தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட புள்ளிவிவரங்களின்படி, வட ஆற்காடு - அம்பேத்கர் மாவட்டத்தில் சுமார் 25,600 பேரும், பெரியார் மாவட்டத்தில் சுமார் 5,000 பேரும், திண்டுக்கல் - அண்ணா மாவட்டத்தில் சுமார் 16,000 பேரும், ஆக மொத்தம் சுமார் 46,600 தொழிலாளர்கள் இந்த 3 மாவட்டங்களில் மட்டும் பணி இழந்திருக்கின்றார்கள். தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுகளினால் வட ஆற்காடு - அம்பேத்கர் மாவட்டத்தில் 1லட்சம் ஏக்கர் நிலமும், திண்டுக்கல் - அண்ணா மாவட்டத்தில் 22,230 ஏக்கர் நிலமும், பெரியார் மாவட்டத்தில் காவிரி நதியின் பாசன ஆயக்கட்டு நிலங்களும், காளிங்கராயன் கால்வாய் ஆயக்கட்டுதாரர்களும் பாதிக்கப் பட்டுள்ளதாகத் தகவல் பெறப்பட்டுள்ளது.

வட ஆற்காடு - அம்பேத்கர் மாவட்டத்திலுள்ள 569 தொழிற்சாலைகளில் 51 தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் தோல் கழிவுகளை சுத்திகரிக்கும் வசதி தனித்தனியே உள்ளது. இது தவிர, 461 பொது கழிவு சுத்திகரிப்பு அமைப்புகள் வாயிலாக தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கழிவுகளை சுத்திகரிக்க வசதி உள்ளது. 57 தொழிற்சாலைகள் எந்தவித சுத்திகரிப்பு வசதியும் இன்றி உள்ளன. வேலூர் மக்கள் நல மன்றம், வட ஆற்காடு - அம்பேத்கர் மாவட்டத்தில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுகளால் சுற்றுப்புறச் சூழல் பாதித்துள்ளது என்றும், குடிநீர் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வேளாண்மை நிலங்கள் பாதிக்கப்பட்டு விட்டன என்றும் அவற்றிற்கு பரிகாரம் தேட, உச்சநீதி மன்றத்தில் வழக்கு ஒன்றை 1991ஆம் ஆண்டு தொடுத்து, அந்த வழக்கு 914/91 என்ற எண்ணில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கை விசாரித்து வரும் உச்சநீதிமன்றம் 1-5-1995-ல் இந்த மாவட்டத்திலே உள்ள 57 தோல் பதனிடும் தொழிற்சாலைகளை கழிவு சுத்திகரிப்பு இல்லாத காரணத்தால் மூடிவிட வேண்டும் என்றும், எஞ்சியுள்ள 494 தொழிற்சாலை களில் 51 தொழிற்சாலைகள் தங்களுடைய தனிப்பட்ட முறையிலான சுத்திகரிப்பு நிலையங்களை வைத்துள்ளன என்றும், 445 தொழிற்சாலைகள் 20 பொது சுத்திகரிப்பு அமைப்புகள் வாயிலாக கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகள் பெற்றுள்ளன என்ற அளவில் சட்டப்படியான சுத்திகரிப்பு நிலையை நடைமுறைப் படுத்த 3 மாத கால அவகாசம் அளித்தது. மேலும் 10-5-1995 ஆணையின்படி ஏற்கெனவே மூடும்படி ஆணையிடப்பட்ட 57 தொழிற்சாலைகளில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப் பட்டால் அவற்றை நேரடி ஆய்வு செய்து அறிக்கை அனுப்பும்படியும் தெரிவிக்கப்பட்டது. பின்னர் 8-9-1995ஆம் தேதியிட்ட ஆணை வாயிலாக உச்சநீதி மன்றம் மேலும் 14 பொது சுத்திகரிப்பு அமைப்புகளின் பால்பட்ட 162 தோல் பதனிடும் தொழிற்சாலைகளை உடனடியாக மூடிவிட வேண்டும் என்றும் ஆணையிட்டது. எஞ்சியுள்ள 6 பொது சுத்திகரிப்பு அமைப்புகளுக்குட்பட்ட 299 தொழிற்சாலைகள் சட்ட நிலைக்கு உட்பட்ட சுத்திகரிப்பு நிலையை அடைய 31-12-1995 வரை கால அவகாசம் கொடுத்தது.

உச்சநீதிமன்றம் பிறகு பிறப்பித்த ஆணைகளின் வாயிலாக ஏற்கெனவே மூடப்பட்ட 57 தொழிற்சாலைகளில்

15-ஐயும், 162-ல் 7 தொழிற்சாலைகளையும்தான் இயங்க அனுமதி அளித்தது. உச்சநீதிமன்றம் தனது 9-4-1996 தேதியிட்ட ஆணையில் வடஆற்காடு - அம்பேத்கர் மாவட்டத்தில் 34 தொழிற்சாலைகளை மூடும்படி ஆணையிட்டது. மேற்படி ஆணையில் 6 பொது சுத்திகரிப்பு அமைப்புகளுக்குட்பட்ட 299 தொழிற்சாலைகள் சட்டநிலைகளுக்குட்பட்ட சுத்திகரிப்பு அளவை எய்தியதால் அவை நடைபெற ஆணையிட்டது. 6-5-1996ஆம் தேதியிட்ட ஆணையின்படி வட ஆற்காடு - அம்பேத்கர் மாவட்டத்தில் மேலும் 23 தொழிற்சாலைகளைத் திறக்க அனுமதித்தது. வட ஆற்காடு - அம்பேத்கர் மாவட்டத்தில் பொது சுத்திகரிப்பு அமைப்புகளை நிறுவி செயல்பட இதுவரை ரூ. 1086 இலட்சம் மானியமாக மத்திய, மாநில அரசுகள் தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகக் கொடுத்துள்ளன. இதில் மத்திய அரசின் மானியம் மட்டும் ரூ. 409 இலட்சம் ஆகும். தற்போதுள்ள திட்டத்தின்படி மாநில, மத்திய அரசுகள் மானியம் தலா 25 சதவீதம் அல்லது ரூ. 100 இலட்சத்திற்கு மிகாமல் வழங்க வகை உள்ளது. பொது சுத்திகரிப்பு அமைப்புகள் கம்பெனிகளாக ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மத்திய மாநில அரசுகளின் மானியம் தவிர வங்கி, நிதி நிறுவனங்கள் வாயிலாகக் கடன் உதவி பெற்றால்தான் இவைகளை நிறைவேற்ற முடியும். அநேக அமைப்புகள், ஐ.டி.பி.ஐ., ஹட்கோ போன்ற அமைப்புகளிடமிருந்து கடன் உதவி பெற இயலாத நிலையில் தங்களுடைய சுத்திகரிப்பு நிலையங்களைக் கட்டி முடிக்க முடியாத சூழ்நிலையில் உள்ளன. இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்ட காரணத்தால் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் துயரம் குறித்து, முன்பே இந்த அரசு அறிந்திருந்த காரணத்தால்தான், ஆளுநர் உரையில் இந்தப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டு, விவசாயிகளின் நலன் பாதிக்கப் படாமல், அதே நேரத்தில் குடிநீரும் பாதிக்கப்படாமல், தோல் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர் வாழ்க்கையும் பாதிக்கப்படாமல் தமிழக அரசு முயற்சி எடுத்து முத்தரப்பு பேச்சு வார்த்தை நடத்தித் தீர்வு காணப்படுமென்று விளக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் தோல் தொழிலாளர்கள் துயரத்தைப் போக்க இந்த அரசு எல்லாவித நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ளும் என்ற உத்தரவாதத்தை நான் தெரிவித்துக் கொண்டு அமர்கின்றேன்.

விடுதலைப் புலிகள் பிரச்சினை

உரை : 33 நாள் : 30.05.1996

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, வேடிக்கையாகப் பேசுவதைப்போல் விஷத்தைப் பரப்பிவிடக்கூடாது. 1989-ஆம் ஆண்டில்தான் விடுதலைப் புலிகள் அல்லது இலங்கைப் போராளிகள் தமிழகத்திலே கால் ஊன்றினார்கள் என்று சொல்வது தவறான தகவல். உண்மைக்கு முற்றிலும் புறம்பானது. 1983-ஆம் ஆண்டிலேயே ஈழப் போராட்டப் போராளிகள் தமிழகத்திலே வந்துவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினருக்கு நினைவுபடுத்த வேண்டுமேயானால் 1984-ஆம் ஆண்டு சென்னை மீனம்பாக்கம் - அன்றைக்கு மீனம்பாக்கம் விமானநிலையம் என்று பெயர், இப்போதுதான் அண்ணா பெயராலும், காமராஜர் பெயராலும் அது விளங்குகிறது - அந்த விமான நிலையத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டு 40-க்கும் மேற்பட்டவர்களுடைய உடல் சிதறி, விமானநிலையத்திலும் பல இடங்களில் இடிபாடுகள் ஏற்பட்டதை யாரும் மறந்து விடுவதற்கில்லை. ஆகவே, 1983-ஆம் ஆண்டிலேயே போராளிகள் இங்கு வந்துவிட்டார்கள். தியாகராய நகர் கடைத்தெருவிலேயே போராளிகளுக்குள்ளே ஒருவருக்கொருவர் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. அதற்குப் பிறகு 1989 வரையில் எத்தனையோ வன்முறைச் சம்பவங்களுக்கு தமிழ்நாடு அந்தப் போராளிகளுக்கு இடம் அளிக்கக்கூடிய இடமாக இருந்தது. அப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இங்கே இல்லை என்பதை நான் நினைவு படுத்துகின்றேன். விடுதலைப் போராளிகளுக்கு, ஈழப் போராளிகளுக்கு ஆதரவு அளிக்காத எந்தக் கட்சியும் தமிழ்நாட்டிலே இல்லை. எல்லாக் கட்சிகளும் தங்களால் இயன்ற அளவுக்கு ஆதரவு அளித்திருக்கின்றன.

என்னுடைய அருமை நண்பர், மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் 4 கோடி ரூபாயை

அவர்களுக்கு காசோலையாகவே தந்தது பத்திரிகைகளிலே அப்போது படம் பிடித்துப் போடப்பட்டது. பகிரங்கச் செய்தியாக வந்தது. அதை எம்.ஜி.ஆர். அவர்களும் மறுக்கவில்லை. அந்த அளவுக்கு இலங்கைப் போராளிகளுக்கு தமிழகத்திலே கால் ஊன்றக்கூடிய இடம் இருந்தது. இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது தமிழகத்திலே நூற்றுக்கும் மேற்பட்ட முகாம்கள் விடுதலைப் போராளிகளுக்காக அமைக்கப் பட்டிருந்தன. ராஜீவ்காந்தி காலத்திலேகூட அந்த முகாம்கள் இருந்தன. இவைகளையும் யாரும் மறுக்கமுடியாது. 1989-90-லே தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோது பத்மநாபா மற்றும் 10 பேர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அந்த நேரத்தில் விடுதலைப் புலி கள்தான் இதற்குக் காரணம் என்று நான் டெல்லியிலிருந்தவாறே அறிவித்தேன். டெல்லியில் இருந்தேன் அப்போது. செய்தி வந்தவுடன், 'இதற்கு எல்.டி.டி.இ. தான் காரணமாக இருக்கக்கூடும்' என்று நான் நிருபர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். பிறகு இரண்டுமாதம் கழித்து, அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த செல்வி ஜெயலலிதா அம்மையார் அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த ஆதரவும் அளிக்கவில்லை. ஆதரவு அளிக்க வேண்டும் என்று அறிக்கை விட்டார்கள். அறிக்கைவிட்டது மாத்திரமல்ல. எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலையை திறக்க ராஜீவ் காந்தி அவர்கள் வந்தபோது ராஜீவ் காந்தி முன்னிலையிலேயே, அதே மேடையில், ஜெயலலிதா அம்மையார் அவர்கள் தமிழ்நாட்டு மக்கள் விடுதலைப் புலிகளுக்கு, ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். ஆங்கிலப் பத்திரிகைகளான 'இந்து', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆகிய இரண்டு பத்திரிகைகளுக்கும் அவர் அளித்த பேட்டியில் - அப்போது அவர்கள் ஆட்சிக்கு வரவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெறுகிறது. அந்த பேட்டியில் - அவர்கள் சொன்னார்கள். 'எம்.ஜி.ஆர். அவர்கள் விடுதலைப் போராளிகளுக்கு அளித்த அளவிற்கு கருணாநிதி ஆதரவு அளிக்கவில்லை' என்று சொல்லி என்மீது குற்றம் சாட்டினார்கள். நிருபர்கள் கேட்டார்கள், 'அவர்கள் பத்மநாபாவையே கொலை செய்துவிட்டார்களே, பத்துப் பேரைச் கொலை செய்துவிட்டார்களே, அதற்குப் பிறகு எப்படி ஆதரவு அளிப்பது, என்று கேட்டபோது, செல்வி ஜெயலலிதா அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், 'கடந்த 2 மாதங்களுக்கு முன்பு

இந்த நிகழ்ச்சி நடைபெற்றது, இப்போது விடுதலைப் புலிகள் நல்லவர்களாக ஆகிவிட்டார்கள், எனவே, அவர்களுக்கு உதவி அளிப்பது தவறு இல்லை' என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இதெல்லாம் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது சொல்லப்பட்ட கருத்துக்கள். அது மாத்திரம் அல்ல, பங்களாதேஷை, படையெடுத்துச் சென்று எப்படி தனிநாடாக இந்திய அரசு ஆக்கிக்கொடுத்ததோ அதைப்போல இலங்கையிலே படையெடுத்துச் சென்று தமிழ் ஈழத்தை ஆக்கித்தரவேண்டும் என்று சொன்னார்கள். பிரபாகரனுக்கு ஒரு ஆபத்து என்றால் தமிழகம் கொந்தளிக்கும் என்றும் செல்வி ஜெயலலிதா அம்மையார் அவர்கள் அன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள். எனவே கால் ஊன்றியது 1989-க்கு பிறகு அல்ல, 1983-க்கு முன்பே, அதற்காக நான் ஈழத் தமிழர்களுடைய பிரச்சினையைக் குறைத்து மதிப்பிட மாட்டேன். இன்றைக்கும் அங்கே மடிந்துகொண்டிருக்கிற அப்பாவித் தமிழகர்களுக்காக திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே உள்ள எல்லா இயக்கங்களும் கண்ணீர் வடிக்கத்தான் செய்கின்றன. அந்த அப்பாவித் தமிழர்களை இந்த அபாயத்திலிருந்து மீட்பதற்கு ஒரு அரசியல் தீர்வு காணவேண்டும். மத்தியிலே ஒரு அரசு நிலையாக அமையும் என்று எதிர்பார்க்கிறேன். அப்படி அமையும்போது இந்தப் பிரச்சினை பற்றி தமிழக அரசு சார்பில் அவர்களிடத்திலே பேசப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்கவுண்டர் கொலை

உரை : 34 **நாள் : 02.08.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை குறித்து அதிக விளக்கங்கள் தர நான் விரும்பவில்லை. அவரவர்களே நாட்டுக்கு தாங்கள் யார் என்பதைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். நான், அம்மையார் அவர்களுடைய, ஜெயலலிதா அம்மையார் அவர்களுடைய அறிக்கையை வெளியிட்ட பத்திரிக்கைகளை எல்லாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன். ஏன் என்றால், அப்போதுதான் அந்த உருவத்தை, அவர்களுடைய உள்ளத்தை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள இயலும் என்ற வகையில் (மேசையைத் தட்டும் ஒலி). அந்த அறிக்கையை வெளியிட்டு இருக்கின்றார்கள். திரு. தாமரைக்கனி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். வெளியிலே உள்ளவர்களைப் பற்றிப் பேசலாமா என்று. வெளியிலே உள்ளவர்கள் என்றால் இந்த அவையில் அமைச்சர்களாக இருந்து, முதலமைச்சர் பொறுப்பை வகித்தவராக இருந்து, கடந்த ஆட்சிக்குச் சொந்தக்காரராக இருந்தவர்களைப் பற்றி விமர்சிப்பது தவறு அல்ல. இந்த ஆட்சியைப் பற்றி அடுத்து வருகின்ற ஒரு ஆட்சியில் விமர்சிக்கலாம். அதுதான் பாராளுமன்ற மரபு ஆகும். அது விதிமுறைக்கு விரோதமான ஒன்று அல்ல என்பது நிலைநாட்டப்பட்ட ஒன்றுதான்.

1992ஆம் ஆண்டு முதல் ஏகபோகமாக ஆதிக்கம் செலுத்தி வெறும் குற்றப்பதிவு எண்கள் மாத்திரமே குறிக்கப்பட்டு வழக்கு நிலையிலே இருந்த 2, 3 குண்டர்கள் நேற்றைக்கு முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கின்றார்கள் என்பதை அறிந்து இந்த அவையிலுள்ள எல்லாக் கட்சிகளுடைய தலைவர்களும், உறுப்பினர்களும் தங்களுடைய மகிழ்ச்சியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொண்டார்கள். ஆனால்

திரு. தாமரைக்கனி அவர்கள் பேசும்போது பாராட்டி, மேலும் உள்ள ரவுடிகளை எல்லாம் பிடிக்க வேண்டும் என்றுதான் சொன்னார். ஏதோ ஒரு வாக்குமூலம் வாங்குவதற்காக முயற்சி நடைபெற்றதாகச் சொல்லப்படுவது உண்மைக்கு மாறான தகவல். அதை நான் திட்டவட்டமாக மறுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டி.ஜி.பி. ஓய்வு பெற்று இன்னொரு டி.ஜி.பி. பொறுப்புக்கு வந்திருக்கிறார். அவர்கள் சொல்லுவது, அதாவது ஜெயலலிதா அம்மையார் சொல்லியிருப்பது, அவர் ஏற்கெனவே 5 நாளைக்கு முன்பு அல்லது ஒரு வாரத்திற்கு முன்பே பிடிபட்டு விட்டார், அவரை இப்போது சுட்டுக் கொன்று இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கின்றார். இதை ஒரு சாதாரண நிலையிலே சாதாரண அறிவு படைத்தவர்கள் சிந்தித்துப் பார்த்தால், ஓய்வு பெற்ற டி.ஜி.பி. காலத்திலேயே அவர்கள் பிடிபட்டு இருந்தால் அந்தப் பெருமை தனக்குச் சேர வேண்டும் என்றுதான் அந்த டி.ஜி.பி. விரும்பியிருப்பாரே அல்லாமல், அதை புது டி.ஜி.பி. கையில் கொடுத்து, அந்தப் பெருமை புது டி.ஜி.பி.யாகிய இவருக்கு வரட்டும் என்று மனித இயல்பு உள்ள யாரும் எண்ணியிருக்க மாட்டார்கள். இது சாதாரண அறிவு உள்ளவர்களுக்கேகூட தெரியக்கூடிய உண்மை ஆகும். ஆனால் அம்மையார் அவர்களுடைய அறிவு சாதாரண அறிவு அல்ல, அது உச்சக் கட்ட அறிவு. (மேசையைத் தட்டும் ஒலி). எனவேதான் அவர்கள் இந்தக் கூற்றை வெளியிட்டு இருக்கின்றார்கள். வாக்குமூலம் வாங்குவதற்காக, வழக்குகள் ஜோடிப்பதற்காக முயன்று அதிலே தோல்வி ஏற்பட்ட காரணத்தால் சுட்டு விட்டார்கள் என்று ஜெயலலிதா அம்மையார் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நான் இந்த அவைக்குச் சொல்கின்றேன், பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த அவையில் மூலமாக நாட்டுக்குச் சொல்கின்றேன், யார் இடத்திலும் வாக்குமூலம் வாங்கத் தேவையே இல்லை. இவர்களை கூண்டில் நிறுத்த, இருக்கிற ரெக்கார்டுகளே போதுமானது. (மேசையைத் தட்டும் ஒலி). எழுதப்பட்ட, இவர்களே கையெழுத்திட்ட ரெக்கார்டுகளே ஏராளம் இருக்கின்றன. அவைகளே போதும். யாரிடத்திலும் வாக்குமூலம் வாங்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

ஜெ. மீது சி.பி.ஐ. விசாரணை

உரை : 35 **நாள் : 09.08.1996**

திரு. ஆர். சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அம்மையார் மீது சி.பி.ஐ. விசாரணை செய்யும் என்ற ஒரு செய்தியைப் பத்திரிகைகளில் எல்லாம் பார்த்தோம். அந்த சி.பி.ஐ.. விசாரணை எது குறித்து செய்யப்படுகின்றது? அந்த விசாரணை குறித்து தமிழக அரசு மத்திய அரசுக்கு ஏதேனும் பரிந்துரை செய்திருக்கிறதா என்பன போன்ற விவரங்களை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் மீது சி.பி.ஐ. விசாரணை யாரால் முதலில் தொடங்கப்பட்டது என்ற வினாவை மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் இங்கே எழுப்பியிருக்கின்றார்கள். வருமான வரித் துறையிடமிருந்து இந்த அரசுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 3 லட்சம் அமெரிக்கன் டாலர் நன்கொடையாக வாங்கியிருக்கிறார், 3 லட்சம் டாலர் என்றால் ஏறத்தாழ ஒரு கோடிக்கு (குறுக்கீடு) ஒரு கோடியே 5 லட்சம் என்று கணக்கிடுகிறார்கள். அஃதன்னியில் இந்தியாவுக்குள்ளேயே 3 கோடி ரூபாய் நன்கொடையாகப் பெற்றிருக்கிறார்கள். எனவே, இந்த பல கோடி ரூபாய் பற்றி விசாரணை நடத்த தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வருமான வரித்துறை இந்த அரசுக்கு எழுதியது. அதுவும் நம்முடைய குற்றவியல்

பிரிவு காவல்துறையைக் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எழுதியது. உடனே தமிழக அரசு அந்தக் கடிதத்தை கிரைம் பிராஞ்ச், குற்றப் புலனாய்வுத் துறைக்கு அனுப்பி விசாரிக்க தமிழக அரசு கோரியது. அவர்கள் அதைப் பரிசீலித்து விட்டு சொன்னார்கள், விளக்கம் தந்தார்கள், எங்களுக்கு எழுதினார்கள். என்ன எழுதினார்கள் என்றால், இந்தப் பிரச்சினையிலே அமெரிக்கன் டாலர் விவகாரம் இருக்கிறது. 3 லட்சம் டாலர் விவகாரம் இதிலே இருக்கின்ற காரணத்தாலும், இது வெளிநாட்டுத் தொடர்பு உடையதாக இருக்கின்ற காரணத்தாலும், இதிலே இங்கே உள்ள போலீசார் மட்டும் விசாரித்துப் பயன் இல்லை. எனவே மத்திய அரசு சம்பந்தப்பட்ட சென்ட்ரல் ஏஜென்சி மூலம் விசாரிப்பதுதான் தகுந்த முறையாக இருக்கும் என்று அவர்கள் எங்களுக்குத் தெரிவித்தார்கள். இந்தத் தகவலை நாங்கள் மத்திய அரசுக்குத் தெரிவித்து நீங்கள் எங்களுக்கு இன்கம் டாக்ஸ் ஆபீஸ் மூலமாக தந்த தகவலின்படி விசாரிக்க எங்களுடைய புலனாய்வுத் துறையினால் இயலாது என்றும் இதற்கு சென்ட்ரல் ஏஜென்சிதான் தேவைப்படும் என்றும் சொல்கிறார்கள் என்ற தகவலை மத்திய அரசுக்கு நாங்கள் அனுப்பி வைத்தோம். மத்திய அரசு உடனடியாக அதற்கு சி.பி.ஐ. விசாரணை இன்றைக்கு அமைத்திருக்கிறது. இதுதான் உண்மை நிலவரம்.

திரு. ஆர். சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஊரில் ஒரு சப் இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ் ஓய்வு பெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக, அவர் கட்டிய வீட்டில் காம்பவுண்டு சுவரில் 6 ஆயிரம் ரூபாய் கூடுதலாகச் செலவாகியிருக்கிறது. அதற்கு முறைப்படி நீங்கள் கணக்குக் காட்டவில்லை - disproportionate to your income - என்று சொல்லி அவருடைய வருமானத்திற்குக் கூடுதலாக அந்த 6 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது என்று சொல்லி அவர் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார், ஓய்வு பெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக. ஆக ஒரு ரூபாய் மாத வருமானம் என்று வாங்கிக்கொண்டு கோடிக்கணக்கான ரூபாயை வருமானமாகக் காட்டி, வெளிநாட்டிலிருந்து வந்தது, உள்நாட்டிலிருந்து வந்தது, என்று சொல்பவர்கள்மீது இன்னும் நடவடிக்கை எடுக்காமல்

மத்திய அரசும், மாநில அரசும் தூங்கிக்கொண்டு இருக்கிறதா என்று மக்கள் கேட்கக்கூடிய கேள்விகளுக்கு எங்களால் பதில் சொல்ல முடியவில்லை. ஆகவே, இதுபோன்ற நடவடிக்கைகளை எல்லாம் நீங்கள் துரிதப்படுத்தி, உரிய தண்டனையை சட்டப்படி நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மிக முக்கியமான மானியம் என்பதற்காக கேள்வி நேரத்தைக் கூட ஒத்திவைத்து விட்டு என்னையே முழுமையாக இந்த அவை இன்றைக்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்களுடைய இந்த ஆதங்கத்திற்கு நான் விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுபோன்ற நிகழ்வுகளில் சிலரைக் கைது செய்தும் சிறையில் அடைத்தும் விசாரணைகள் நடத்துவது உண்டு. சிலரைக் கைது செய்யாமலும் விசாரணை நடத்துவது உண்டு. இந்த இரண்டு முறையையும் இந்த அரசு பின்பற்றுவது தவறு இல்லை என்று நான் கருதுகிறேன். ஒருவரைக் கைது செய்யவில்லை என்பதற்காக அவர் குற்றவாளி அல்ல என்று பொருள் அல்ல. சில நேர்வுகளில் குற்றவாளிகளைக் கைது செய்தும் விசாரிப்பது உண்டு; கைது செய்யாமலேகூட நேரடியாக வழக்கு மன்றத்திற்குச் செல்வது உண்டு. கைது செய்யப்பட்டால் முன்கூட்டிலே கைது செய்யப்பட்டு, பிறகு விசாரிக்கப்பட்டு, பிறகு தண்டனை பெற்று பிறகு சிறைக்குச் செல்வார்கள். கைது செய்யப்படாமல் இருந்தால் வழக்கு முடிந்து தண்டனை பெற்று சிறைக்குச் செல்வார்கள். இதுதான் வித்தியாசம்.

இட ஒதுக்கீடு பிரச்சினை

உரை : 36 **நாள் : 16.08.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஞானசேகரன் அவர்களும், திரு. சுப்பராயன் அவர்களும், திரு. தாமரைக்கனி அவர்களும், பேராசிரியர் தீரன் அவர்களும் தமிழகத்திலே கடந்த காலத்திலே நாம் அனுபவித்து வந்த இட ஒதுக்கீட்டுக்கு ஏற்பட்டுள்ள இடுக்கண் குறித்தும், அதனை எப்படித் தவிர்ப்பது என்பது குறித்தும் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறி, உச்ச நீதிமன்றத்திலே இன்று அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பின் காரணமாக தமிழகத்திலே பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மலைவாழ் பழங்குடி மக்களிடத்திலே உருவாகியுள்ள கொந்தளிப்பையும், பதட்ட நிலையையும் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இட ஒதுக்கீட்டுக்கு நீதிக் கட்சி காலத்திலிருந்து தமிழ்நாட்டு வரலாற்றில் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டக் கூடிய ஒரு சிறப்பான வரலாறு உண்டு. அந்த வரலாற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிடுமோ என்ற கேள்விக்குறி எழுகிற விதத்தில் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு அமைந்திருக்கிறதோ என்கிற ஐயப்பாடு பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுடைய முன்னேற்றத்தில் அக்கறையுள்ள அனைவருக்கும் எழுவது இயல்பே ஆகும். அந்த எண்ணத்தின் அடிப்படையிலேதான் இந்தப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து பேச வேண்டுமென்று கேட்கக்கூடிய அளவுக்கு ஒரு முன்னறிவிப்பு தந்து, அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மன உளைச்சலை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இட ஒதுக்கீட்டில் 1991ஆம் ஆண்டு வரையிலே 69 சதவிகிதம்

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, பழங்குடி மக்களுக்கு என்று இருந்ததை அனைவரும் அறிவோம். அதற்குப் பிறகு வழக்கு ஒன்றின் காரணமாக 50 சதவிகிதம் என்ற நிலை உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பால் ஏற்பட்டபோது, தமிழகத்திலே உள்ள எல்லாக் கட்சிகளும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுடைய முன்னேற்றத்திலே அக்கறையும், ஆர்வமும் உள்ள எல்லாக் கட்சிகளும் குரல் கொடுத்ததன் காரணமாக எல்லாக் கட்சிகளி னுடைய ஒத்துழைப்போடு, இந்தச் சட்டமன்றத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, 69 சதவிகிதத்தை உறுதிப்படுத்துகின்ற வகையில். அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே ஒரு சட்டமும் இங்கே நிறைவேற்றப்பட்டது. முதன் முதலாக நான் இங்கே சொல்லுவதாகக் கருதுகிறேன். அந்தத் தீர்மானத்தை வடிவமைத்துக் கொடுத்ததே திராவிடர் கழகம்தான். ஆனால் அந்த ஆட்சிக்காலத்திலே அதற்கு ஒரு நன்றிகூட சொன்னதாக எனக்குத் தெரியவில்லை. திராவிடர் கழகம் தான் அந்தத் தீர்மானத்தை வடிவமைத்துக் கொடுத்து, அந்தத் தீர்மானம் இங்கே நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தை வரவேற்ற அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் - அப்போது மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள்கூட அந்த அணியிலே எங்களோடு இருந்தார்.

எல்லோரும் அந்தத் தீர்மானம் போதுமானதல்ல, மன்னிக்கவேண்டும், அந்தச் சட்டம் போதுமானதல்ல, இருந்தாலும்கூட அந்தச் சட்டத்தை 9-வது அட்டவணையிலே சேர்க்க வேண்டுமென்று குரல் கொடுத்தோம். அதுமாத்திரமல்ல, இங்கே ஒரு பெரிய புயல் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலே எழுந்த அந்த நேரத்திலே நான் வடபுலத்திலே உள்ள எல்லாத் தலைவர்களுக்கும், அகில இந்தியக் கட்சிகளி னுடைய தலைவர்களுக்கும் கடிதங்கள் எழுதி, உங்களுடைய ஆதரவெல்லாம் தேவை, நீங்கள் நாடாளுமன்றத்திலே தமிழ் நாட்டினுடைய இந்தச் சட்டத்தை அங்கீகரித்து 9-வது அட்டவணையிலே சேர்ப்பதற்குத் துணை நிற்கவேண்டுமென்று எழுதினேன். நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள், அந்தக் கடிதத்திற்கு

முதன் முதலில் ஆதரவு அளித்து பதில் எழுதியவர் பாரதீய ஜனதாக் கட்சியினுடைய தலைவர் வாஜ்பாய் அவர்கள் ஆவார்கள். சில நிபந்தனைகளோடு அவர் அதை வரவேற்று எனக்கு ஆதரவு தெரிவித்தார்கள். பிறகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சுர்ஜித் அவர்கள் எழுதினார்கள். தொடர்ந்து எல்லாக் கட்சித் தலைவர்களும், நாங்கள் ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம் என்று கடிதங்கள் எழுதினார்கள். இந்திரஜித் குப்தா அவர்கள் எழுதினார்கள். அவ்வளவு கடிதங்களையும் பெற்ற ஆவலோடு அந்தக் கடிதங்களுடைய நகல்களை எல்லாம் எடுத்து அன்றைய மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து இதனை 9-வது அட்டவணையிலே சேர்க்க உதவிட வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நானும் கேட்டுக் கொண்டேன். மற்ற எல்லாக் கட்சிகளும், இதிலே அக்கறை உள்ள கட்சிகள் அனைத்தும், தங்களுடைய ஆவலை மத்திய அரசுக்குத் தெரிவித்து வலியுறுத்தினார்கள். அதற்குப் பிறகு 9-வது அட்டவணையிலே அது சேர்க்கப்பட்டது. அரசியல் சட்டத்திலே சேர்க்கப்பட்டு 9-வது அட்டவணையிலும் சேர்க்கப்பட்டது. அது போதுமானது அல்ல என்ற கருத்து என்னவென்றால், ஒவ்வொரு மாநிலமும் - 69% என்ன, 70% என்ன, இப்போதே வடக்கே இருக்கின்ற சில மாநிலங்களில் - 80 சதவிகிதம் கூட பிற்படுத்தப்பட்ட மக்கள் என்ற பெயரால், மலைவாழ் பழங்குடி மக்கள் என்ற பெயரால் ஒதுக்கப்படுகிறது. எனவே அந்தந்த மாநிலங்களின் நிலைகளுக்கு ஏற்ப இந்த இட ஒதுக்கீட்டை அந்தந்த மாநில அரசுகளே நிர்ணயம் செய்து கொள்கின்ற அதிகாரம் மாநில அரசுகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற முறையில் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற கருத்தை - கழகத்தின் சார்பில் நாங்கள் எடுத்து வைத்தோம். பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் டாக்டர் இராமதாஸ் அவர்கள் வலியுறுத்திச் சொன்னார்கள். அதற்காக பல மாநாடுகள் நடைபெற்றன. பல தீர்மானங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டன. ஆனால் அரசியல் சட்டத்திலே திருத்துவது என்றால் அதற்கு நாடாளுமன்றத்திலே மூன்றில் இரண்டு பங்கிற்கு மேற்பட்ட வாக்குகள் தேவை என்கிற ஒரு நியதி இருக்கின்ற காரணத்தால் இப்போது அது முடியுமா, இயலுமா என்பது பிரச்சினையாக இருக்கிறது. இருந்தாலும் அந்த முயற்சியிலே இந்த அரசு ஈடுபடும் என்பதை நான் தெரிவித்துக்

கொள்கிறேன். அந்த முயற்சி எந்த அளவுக்கு வெற்றிபெறும் என்பதையும், தமிழ்நாட்டுக்கு மாத்திரமாவது, இந்த மாநிலம் இதைத் தீர்மானித்துக் கொள்ளக் கூடிய உரிமையைப் பெறுவதற்கு அரசியல் சட்டத்திலே ஒரு திருத்தம் வர வேண்டுமென்ற அந்தக் கருத்தையாவது நாடாளுமன்றத்திலே இடம்பெற்றுள்ள எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளுமானால் தீர்மானம் நிறைவேற்றவும், அரசியல் சட்டத்திலே இந்தத் திருத்தம் நிச்சயமாக இடம் பெறவும் கூடும். அதையும் நாம் எதிர்பார்க்கிறோம்.

அதற்கிடையிலே, கடந்த காலத்திலே இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டு 9-வது அட்டவணையிலும், அரசியல் சட்டத்திலும் சேர்க்கப்பட்ட சட்டத்தை உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கின்போது கடந்த கால அரசின் காலத்தில் வழக்கறிஞர்கள் வலியுறுத்திக் கூறாத காரணத்தினாலே, மன்னிக்க வேண்டும் வலியுறுத்திக் கூறாதது என்று சொல்வதுகூட தவறு, நினைவூட்டவே தவறிவிட்ட காரணத்தினாலே, உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் அந்தத் தீர்ப்பிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அன்றைக்கு சட்ட அமைச்சர் இந்த அவையிலே அதை விளக்கமாக உங்களுக்குப் படித்துக் காட்டியிருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அந்த 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்ட செய்தியையே வழக்கறிஞர்கள் - கடந்தகால அரசில் - எடுத்துச் சொல்லாத காரணத்தாலே இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது. உறுப்பினர் தாமரைக்கனி இங்கே பேசும்போது சொன்னார். அதைக் குறை கூறுகிறீர்கள், இப்போது நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்றார். 'முதல் கோணல் முற்றிலும் கோணல்' என்பார்கள். அதைப்போல முதல் கோணல் ஒன்று ஏற்பட்டு விட்ட காரணத்தாலே இடஒதுக்கீட்டிலே ஒரு மூளி ஏற்பட்டுவிட்டது என்பதை யாரும் மறுப்பதற்கு இல்லை. இருந்தாலும் தொடர்ந்து இந்த வழக்கை நடத்தத்தான் போகிறோம்.

ஆனால், இந்தத் தீர்ப்பை அளித்துள்ள நீதிபதிகள், உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் இறுதியாக ஒன்றைக் குறிப்பிட்டிருக் கிறார்கள். தற்காலிகமாக இந்த உத்தரவை அவர்கள் அளித்தாலும்கூட இறுதியாக 14-8-1996ல் வந்துள்ள தீர்ப்பில், சுதந்திர தினத்தில் நமக்கு கிடைத்துள்ள பரிசாக, பிற்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் மலைவாழ் மக்களுக்கும் கிடைத்த

பரிசாக 14-8-1996ல் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பில் நல்லவேளையாக ஒரு ஒளிக்கீற்று, மின்னல் கீற்று, இருண்ட வானத்திலே புறப்பட்டு வருவதைப் போல கடைசியாகக் கூறியிருக்கிறார்கள்.

"It shall be open to the State of Tamil Nadu to request the Hon'ble Chief Justice of India for an early posting of these matters which have already been referred to the Constitution Bench" என்று இந்த வழக்கு "கான்ஸ்டிட்யூஷன் பெஞ்சில்" இருக்கிறது. அதை விரைவாக நடத்திக்கொள்வதற்கு ஒரு வழிமுறையை கடைசியாக நமக்கு அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, "கான்ஸ்டிட்யூஷன் பெஞ்சிலே" இருக்கிற அந்த வழக்கை விரைவுபடுத்தி, உரிய நேரத்திலே நடத்துவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. எனவே, இது இடைக்காலத் தீர்ப்புதான் என்பதை எடுத்துக்கூறி, எப்படியும் இந்த ஐந்து ஆண்டுகால ஆட்சிக்குள் உரிய இடஒதுக்கீட்டை தமிழ்நாடு பெற்றே தீரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உறுதியை அளித்து, மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வும் அதுவாக இருக்கின்ற காரணத்தினால் வெற்றி நாம் பெறுவோம் என்பதை எடுத்துச் சொல்லி இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே நம்முடைய சுப்பராயன் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல அனைத்துக் கட்சிக் கூட்டம் எதுவும் தேவையில்லை, எல்லோருடைய கருத்தும் ஒன்றாகத்தான் இருக்கிறது என்ற அளவில் இதை எடுத்துரைத்து அமைகிறேன். வணக்கம்.

சிறைக் கைதிகள் விடுதலை

உரை : 37 **நாள் : 31.08.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த சில ஆண்டுக் காலமாக சுதந்திர நாள் போன்ற முக்கியமான நாட்களிலும், முக்கியத் தலைவர்களின் நூற்றாண்டு விழாக்களிலும், அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டியும் சிறைக் கைதிகள் ஒரு குறிப்பிட்ட காலத் தண்டனையை அனுபவித்தவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதன்படி, 1968-ல் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள். அடுத்து, அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய ஆட்சியில், 1977-ல் அறிஞர் அண்ணா பிறந்த நாளில் சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள். பின்னர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் நூற்றாண்டு விழாவில் சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள். பின்னர், 1989-ல் கழக ஆட்சியில் அண்ணா அவர்கள் பிறந்த நாளில் கைதிகள் விடுதலைச் செய்யப்பட்டார்கள். 1990-ல் கழக ஆட்சியில் டாக்டர் அம்பேத்கர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆகியோரின் நூற்றாண்டு விழாக்களையொட்டி சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள். அதற்குப் பிறகு 1992, 1993, 1994 ஆகிய மூன்று ஆண்டுகளில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் பிறந்த நாளில் சிறைக் கைதிகள் விடுதலை செய்யப் பட்டார்கள். அதற்கான உத்தரவுகளை அவரே இட்டிருக்கிறார். நான் பிறந்த நாளிலோ, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். பிறந்த நாளிலோ கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை. காரணம், நாங்கள் ஜெயலலிதா அளவிற்குப் பெரிய தலைவர்கள் இல்லை.

இப்படி, விடுதலை செய்வதற்கான சில நிபந்தனைகள் என்னவென்றால், (1) சிறையில் இருந்த காலத்தில் அவர்களது

பொது நடத்தை திருப்திகரமாக இருந்திருக்க வேண்டும். (2) அவர்கள் விடுவிக்கப்பட்ட பிறகு அவர்களது உயிருக்கு எந்த ஆபத்தும் வெளியில் இல்லை என்ற நிலை இருக்க வேண்டும்.. (3) விடுதலை செய்யப்படுபவர்கள் - அரசாணை எண் 1762, உள்துறை, நாள் 20-7-1987-ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கடுங்குற்றங்களான கற்பழிப்பு, கொள்ளை, கொடூரமான குற்றங்கள், ஏமாற்று வேலை, கள்ளக்கடத்தல், பொருளதார குற்றங்கள், பதுக்கல், அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல், விபச்சாரம், மருந்துச் சட்டம் மற்றும் - உணவுக் கலப்படச் சட்டங்களின் கீழ் குற்றம் புரிதல் முதலியவர்கள் விடுவிக்கப்பட மாட்டார்கள். இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு, 15-9-1996 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் 88-வது பிறந்த நாளையொட்டி, அந்தத் தேதியில் 10 ஆண்டுகள் தண்டனையை அனுபவித்து முடித்த ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுவிக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. இன்று செய்யப்படும் இந்த அறிவிப்பின் மூலமாக 419 சிறைக் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 12-6-1996 அன்று பெய்த தொடர் மழையினால், சென்னை பி. அண்டு சி. ஆலைக்குள் வெள்ளம் மற்றும் சாக்கடை நீர் புகுந்து விட்டது என்றும் அதன் காரணமாக ஆலையிலுள்ள இயந்திரங்கள் மற்றும் இதரப் பொருட்கள் பெருத்த சேதத்திற்குள்ளாகி விட்டன என்றும் கூறி, பின்னி நிர்வாகம் ஆலையில் 15-6-1996 அன்று உற்பத்தி நிறுத்தம் செய்தது. அதன் காரணமாக தொழிலாளர் மத்தியிலே பதட்ட நிலை ஏற்பட்டு, தொழில் தகராறு ஏற்பட்டது. நிர்வாகத்திற்கும், சென்னை தொழில் சங்கத்திற்கும், பணியாளர் சங்கத்திற்கும் இடையே ஏற்பட்ட தொழில் தகராறு குறித்து ஒரு முடிவிற்குக் கொண்டுவர வேண்டுமென்ற அடிப்படையில், தொழிலாளர் நல அமைச்சர், தொழிற் சங்கத்துடனும், நிர்வாகத்துடனும், பணியாளர் சங்கத்தினருடனும், பல்வேறு நாட்களில் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். நானும், இரு தரப்பினரையும் கோட்டையிலே சந்தித்து, இந்தப் பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்த்து, விரைவிலே ஆலையைத் திறப்பதற்காக முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். இதன் விளைவாக கடந்த 16-7-1996 அன்று ஒரு உடன்பாடு ஏற்பட்டு, 12(3) ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

எந்த தேதியிலிருந்து ஆலையைத் தொடங்குவது என்பது குறித்து நிர்வாகத்திற்கும், தொழிற்சங்கத்திற்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதன் காரணமாக, ஒரு தொழில்நுட்ப வல்லுநர் குழு அமைப்பது என்றும், அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், எந்தத் தேதியில் ஆலை திறக்கப்பட வேண்டும் என்பதை, தமிழக அரசே முடிவு செய்து அறிவிப்பது என்றும், அந்த முடிவை அனைவரும் ஏற்றுச் செயல்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. 12(3) ஒப்பந்தத்தின்படி தமிழக அரசு 22-7-1996 அன்று ஒரு வல்லுநர் குழுவை - சிட்ரா - அமைத்து, அந்தக் குழுவை, இரண்டு வாரத்திற்குள் அறிக்கையைத் தரவேண்டுமென்று பணித்தது. வல்லுநர் குழு பின்னி ஆலையைப் பார்வையிட்ட பின்னர், அதன் அறிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பித்தது. அரசின் பரிசீலனையில் அந்த அறிக்கை இருக்கும்போதே விரைவில் ஒரு சுமூகமான உடன்பாடு, இருதரப்பினரையும் பாதிக்காத வகையில் அனைத்துத் தரப்பினரையும் அழைத்துப் பேசி, விரைவில் தீர்வுகாண வேண்டுமென்று, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சருக்கு நான் கூறினேன். அதன்படி, அமைச்சர் அவர்களும் அவர்களை அழைத்து, 30-8-1996 அன்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். பேச்சுவார்த்தையின்போது, நிர்வாகத்தினர், பின்னி ஆலையைத் திறந்து இயக்க 3½ மாத காலம் தேவை என்று கூறியிருக்கிறார்கள். தொழிற்சங்கங்கள், செப்டம்பர் 30ஆம் தேதிக்குள் அது இயங்கப்பட வேண்டுமென்று கருத்துத் தெரிவித்தன. இருந்த போதிலும் என்னுடைய முடிவுக்குக் கட்டுப்படுவதாக இருசாராரும் கூறியுள்ளனர். வல்லுநர் குழுவினுடைய அறிக்கையையும் 12(3) ஒப்பந்தத்தினுடைய சாராம்சங்களையும் தீவிரமாகப் பரிசீலனை செய்தேன். கச்சாப் பொருள்களை மீட்பதற்கும், இயந்திரங்களை சரிசெய்து, ஆலையின் உற்பத்திக்குத் தயார் நிலைக்குக் கொண்டு வருவதற்கும் தேவையான காலத்தையெல்லாம் நான் கணக்கிலே எடுத்துக் கொண்டு, நிர்வாகம், தொழிற்சங்கங்கள் கூறிய நேரங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, பின்னி ஆலையை இந்த ஆண்டு நவம்பர் திங்கள் 1ஆம் தேதி திறப்பது என்ற முடிவை

அறிவித்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதனை அனைவரும் ஏற்றுக்கொண்டு, இதற்கான பணியிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த 12-6-1996-க்கு முன்னர் எவ்வளவு தொழிலாளர்கள் அல்லது பணியாளர்கள் பணியிலே இருந்தார்களோ, அவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் ஆலையை முழு அளவில் பின்னி நிர்வாகம் ஏற்கும் என நம்புகிறேன்.

எம்.ஜி.ஆர். சிலை

உரை : 38 **நாள் : 27.01.1997**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம். ஜி. ஆர். அவர்களுடைய சிலையை வைப்பதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு கடந்த கால ஜெயலலிதா தலைமையில் இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப்போல நடந்து கொள்ளாது என்பதை இந்த அவைக்கு நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). எம். ஜி. ஆர். அவர்களுடைய சிலையை வைக்க இன்றைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக சட்டமன்றத்திலே வீற்றிருக்கின்ற திருநாவுக்கரசு அவர்கள் என்ன பாடுபட்டார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். திருநாவுக்கரசு அவர்கள் அறந்தாங்கியிலே வைத்த எம். ஜி. ஆர். சிலையை நானே திறந்து வைத்தேன். ஆனால் அதற்கு முன்பு எவ்வளவு கஷ்டங்களை அவர் அனுபவிக்க நேர்ந்தது என்பதை நான் மிகமிக நன்றாக அறிவேன். எம். ஜி. ஆர். அவர்களுடைய சிலையை வைப்பதில், அது உரிய இடத்தில், உரிய நேரத்தில், உரிய முறையில் வைக்கப் படவேண்டும் என்பதுதான் நான் இங்கே எடுத்துக் கூறுகின்ற கருத்தாகும். எம். ஜி. ஆர். அவர்களுடைய சிலை மாத்திரமல்ல; எந்தத் தலைவருடைய சிலையாக இருந்தாலும், சிலை வைக்கிறோம் என்கின்ற பெயரால், அந்தத் தலைவர்களை நம்மை அறியாமலேயே, இழிவுபடுத்துகின்ற காரியத்திலே நாம் இறங்கக் கூடாது.


எனக்கு வந்துள்ள தகவலின்படி, 17-1-1997 அன்று, பொழுது விடிவதற்கு முன்பாக, நள்ளிரவில், எந்தவிதமான

முன்னறிவிப்பும் இல்லாமல், ஆட்டையாம்பட்டி, மாகாளிப்பட்டி சாலை சந்திப்பில் காவல் நிலையத்திற்கு எதிரே, சிமெண்டால் செய்யப்பட்ட எம். ஜி. ஆர். சிலை ஒன்று, சாலையின் மத்தியிலே கொண்டுவந்து வைக்கப்பட்டது. இந்தச் சிலையை, முன்னறி விப்பு ஏதும் இல்லாமல், யாருடைய அனுமதியையும் கேட்காமல் வைத்து விட்டார்கள். அதற்குப் பிறகு, அந்தச் செய்தியை அறிந்து, அதிகாரிகள் சிலை வைத்தவர்களை அழைத்து விசாரித்தபோது, "நாங்கள் இந்தச் சிலையை இங்கே நிறுவ, 1995-ஆம் ஆண்டிலேயே அனுமதி கோரியிருக்கிறோம்" என்று கூறியிருக்கிறார்கள் என்றால், அப்போது யாருடைய ஆட்சி நடைபெற்றது என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை. பிறகு, அதிகாரிகள், "நீங்கள் அனுமதி கோரி கொடுத்த கடிதத்தின் நகல் இருந்தால், கொண்டு வாருங்கள்" என்று கேட்டிருக்கிறார்கள். அதையும் அவர்கள் யாரும் கொண்டு வரவில்லை. சிலை வைக்கப்பட்ட இடம் - சிமெண்ட் சிலை வைக்கப்பட்ட இடம் - போக்குவரத்திற்கு மிகமிக நெருக்கடியான இடம். எனவேதான் அது மறுக்கப்பட்டிருக்கிறது. அது மாத்திர மல்ல; சிலையை அங்கே வைத்துவிட்டு, அங்கே ஒரு 'டி.வி' பெட்டியையும் வைத்து, படமும் காட்ட ஆரம்பித்து - திரைப்படம் காட்ட ஆரம்பித்து - கூட்டமும் சேர்க்கப்பட்டது. எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், மாண்புமிகு உறுப்பினர் இங்கே எடுத்துக் காட்டியதைப்போல, அதிகாரிகள் ஏறத்தாழ 4 மணி நேரம் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, "சிலையை அகற்றி விடுங்கள், பிறகு, வேறோர் இடத்திலே, அரசு அனுமதிக்கிற இடத்திலே, நெடுஞ்சாலைத் துறையும், பொதுப்பணித் துறையும் அனுமதிக்கின்ற இடத்திலே, சிலை வைக்கலாம்" என்று சொல்லியுங்கூட, கேட்காமல் போய் விட்டார்கள். அதற்குப் பிறகு, அந்தச் சிலை அகற்றப் பட்டிருக்கிறது.

எம். ஜி. ஆர். அவர்களுடைய சிலையை வைக்கக் கூடாது என்பது அரசினுடைய நோக்கமல்ல. எம். ஜி. ஆர். சிலை ஒழுங்கான முறையில் உரிய முறையில், விதிமுறைகளுக்குட் பட்டு வைக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய நோக்கம் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இந்தச் சிலையைப் பற்றிச் சொல்லும்போது, ஒன்றைக் குறிப்பிட வேண்டியது அவசியம். கோவை மாநகரத்தில், அண்ணா அவர்களுடைய சிலையை நிறுவுவதற்கான ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் சார்பில், நான் முதலமைச் சராக இருந்தபோது - கடந்த காலத்திலே முதலமைச்சராக இருந்தபோது - அண்ணா சிலை ஒன்று வைக்கப்பட்டது. அந்தச் சிலை, கடந்த ஆண்டு அ. தி. மு. க. ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ஒரு லாரி மோதி, உடைக்கப்பட்டது. சுக்குநூறாக ஆகிவிட்டது. அதே இடத்திலே அண்ணா சிலையை வைக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், எத்தனையோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, சிலையும் செய்யப்பட்டு, ஓராண்டுக் காலம் அந்தச் சிலை கோவைக்கு எடுத்துச் செல்லப்படாமல், அனுமதி கிடைக்காத காரணத்தினால், சென்னையிலேயே இருந்தது. நாங்கள் கோரிய இடத்திலேயே அந்தச் சிலையை வைக்க அனுமதி கொடுக்காமல், அது இடைஞ்சலான இடம் என்று சொல்லிவிட்டு, அவர்களே அந்த இடத்திலே ஒரு சிலையை வைத்தார்கள். தி. மு. க. கோரிய இடத்திலே சிலையை வைக்க அனுமதி கொடுக்கவில்லை. அதற்குப் பிறகு இந்த ஆட்சி வந்தது. அதற்கு முன்பே, அனுமதி கொடுக்காவிட்டால், ஒரு போராட்டம் நடத்துவோம் என்று அறிவித்த பிறகுதான் சிலை வைக்க அனுமதி தரப்பட்டு, இந்த ஆட்சி வந்த பிறகு, அந்த இடத்திலே, திராவிட முன்னேற்ற,க் கழகத்தின் சார்பாக, அண்ணாவினுடைய சிலை வைக்கப் பட்டிருக்கிறது. எனவே, இந்தச் சிலை விவகாரங்களில், சில்லறைப் பிரச்சினைகளை எழுப்புகின்ற அந்த அளவுக்குக் கீழ்த்தரமான நிலை, 'இந்த அரசுக்குக் கிடையாது என்பதையும், சரியான இடமாக இருந்தால், உரிய இடமாக இருந்தால், அந்தச் சிலையை வைக்க அரசு அனுமதி அளிக்கும் என்பதையும், மற்ற துறைகளும் அனுமதி அளிக்கும் என்பதையும் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இதிலே யாருடைய தலையீடும் இல்லை. வேண்டுமென்றே, எம். ஜி. ஆர்.-உடைய பெயரைச் சொன்னால், எம். ஜி. ஆர்.-உடைய சிலையை எடுத்து விட்டார்கள் என்று சொன்னால், அது இலாபமாக இருக்காதா என்று சிலபேர் கருதுகிறார்கள். அதற்குத்தான் இதைப் பயன்படுத்துகிறார்கள்.

இவர்கள் ஏதாவது ஒரு குற்றம் செய்துவிட்டால்கூட, இதை எம். ஜி. ஆர். செய்யவில்லையா என்று கேட்டு, எம். ஜி. ஆருக்கே இழுக்கை ஏற்படுத்துகிறார்கள், இந்தச் சிலையை வைக்கிற காரணத்தினால், எம். ஜி. ஆருக்குப் பெருமை தேடித் தரமுடியாது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, சரியான இடத்திலே, சரியான முறையிலே, எந்தச் சிலையை வைப்பதாக இருந்தாலும், எந்தத் தலைவருடைய சிலையை வைப்பதாக இருந்தாலும், அரசு குறுக்கே நிற்காது என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். திடீரென்று யாரும் அறியாமல், சொல்லப் போனால் - பச்சையாக சொல்லப்போனால் - திருட்டுத்தனமாக ஒரு சிலையை வைப்பது, அந்தத் தலைவருக்கே நாம் தருகின்ற மரியாதை ஆகாது என்பதை மாத்திரம் இங்கே எடுத்துக்காட்டி, இந்த அளவில் என்னுடைய உரையை, விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.



அவை மரபு பற்றிய பிரச்சினை

உரை : 39 **நாள் :18.3.1997**

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து, தாங்கள் இன்று இந்த அவையிலே ஆற்றியுள்ள உரை, கருத்துரை, ஏனென்றால் வேறு எந்தப் பொருள் குறித்தும் ஆற்றிய உரையல்ல இது. ஒரு முக்கியமான பொருள் குறித்து ஆற்றிய கருத்துரை, இந்தப் பேரவையினுடைய வரலாற்றில் இடம் பெறக்கூடிய மிக முக்கியான உரையாகும். தங்களைப் பேரவையினுடைய தலைவராக இருக்க வேண்டும் என்று கேட்டு, தாங்களும் ஒப்புதல் அளித்தபோது, நான் உள்ளபடியே எந்த உணர்வோடு தாங்கள் இந்த அவைத் தலைவர் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று விரும்பினேனோ, அந்த விருப்பம் இன்றைக்கு நூற்றுக்கு நூறு பங்கு நிறைவேறி இருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தாங்கள் அமர்ந்திருக்கின்ற இந்த இடத்தில், எனக்கு முதலமைச்சர் பதவி வேண்டாம். அந்தப் பதவிதான் வேண்டும் என்று கேட்டு நான் அமர்ந்திருந்தாலும்கூட, இப்படிப்பட்ட ஒரு கண்ணியமான, கருத்தோட்டம் மிக்க ஆதாரப்பூர்வமான, நெஞ்சு நெகிழத்தக்க ஒரு கருத்தை இந்த அவைக்குத் தந்திருக்க முடியுமா என்றே சந்தேகப்படுகிறேன். வேறு யாரையும் ஒப்பிட்டுக் காட்டுவது சரியல்ல என்பதால், என்னையே ஒப்பிட்டுக் காட்டிச் சொல்கின்றேன். அந்த அளவு இன்று அருமையான வாதங்களை எடுத்து வைத்து. நல்லதொரு உரையை நாடும், நாட்டுக்குத் தேவையான ஜனநாயகமும் காப்பாற்றப்படுவதற்கு நீங்கள் இங்கே வழங்கியிருக்கின்றீர்கள். அ.தி.மு.க. சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் திரு.எஸ். திருநாவுக்கரசு அவர்கள், ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். அவர்கள் உரையில், திரு. இரா. தாமரைக்கனி,

ஏதோ ஆதாரத்தைக் கொடுத்ததாக, சரியாகவோ, தவறாகவோ வாக்கியத் தவறாகவோ குறிப்பிட்டார்கள். ஆதாரம் தரப்பட வில்லை. அதைத்தான் தாங்கள் ஏறத்தாழ ஒரு மணி நேரத்திற்கு மேலாக உரையாற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இங்கு மாத்திர மல்ல எங்களையெல்லாம் அழைத்து, எல்லாக் கட்சித் தலைவர் களையும், அழைத்து, எதிர்க் கட்சித் தலைவரையும் அழைத்துக் கொண்டு, பக்கம் பக்கமாக அந்தத் தாள்களையெல்லாம் காட்டி, இவைகள் எல்லாம் வெறும் அவதூறுகள். இன்னும் சொல்லப் போனால் ஃபோர்ஜரி செய்யப்பட்ட கடிதங்கள் என்பதை யெல்லாம் விளக்கியிருக்கின்றார்கள். இதற்குப் பிறகு அளிக்கப் பட்ட ஒரு தீர்ப்பு சாதாரணமான தீர்ப்புதான் என்றாலும் கூட திரு.எஸ்.திருநாவுக்கரசு அவர்கள் இங்கே கேட்டுக் கொண்டதைப்போல, சுட்டிக்காட்டியதைப்போல இந்தத் தீர்ப்பு அளிக்கக்கூடிய அவசியம்கூட இந்த அவைக்கு, தங்களுக்கு, பேரவை முன்னவருக்கு வந்திருக்க வேண்டுமா என்ற வினா எழாமல் இல்லை.

ஆனால் ஒன்றை நினைவுபடுத்துகிறேன். இந்த அவையில் பேரவைத் தலைவராக வீற்றிருந்தவர்கள் எத்தகைய தீர்ப்புகளை எல்லாம் அளித்திருக்கிறார்கள் என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். பட்ஜெட் கூட்டத் தொடர் முடியும் வரையில் அவைக்குள்ளே நுழையக்கூடாது என்று திரு.துரை முருகன், திரு. அ.இரகுமான்கான், திரு.க.சுப்பு இந்த 3 உறுப்பினர்களும் திரு.எஸ்.திருநாவுக்கரசு அவர்கள் ஆளும் கட்சியிலே அமர்ந்திருந்தபோதுதான் வெளியேற்றப்பட்டார்கள். பட்ஜெட் கூட்டத்தொடர் முடிகிற வரையிலே அவர்கள் உள்ளே நுழையக் கூடாது என்று. அதற்காக அன்றைக்கிருந்த நாங்கள் அனைவருமே வெளியேறி அந்தப் பட்ஜெட் கூட்டத்தொடர் முடியும் வரையிலே அந்த 3 பேருக்காக நாங்களும் அவைக்கு வராமலே இருந்து ஒவ்வொரு நாள் மானியத்தையும் நாங்கள் சென்னையிலே கூட்டம் போட்டு ஒவ்வொரு நாள் பொதுக் கூட்டத்திலே பேசிக் கொண்டிருந்தோம். அது வரலாறு.

இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதற்காக- இந்தியை எதிர்ப்ப தற்காக அல்ல- இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதற்காக. தி.மு.க., அ.தி.மு.க. இரண்டு கட்சிகளும் ஏற்றுக்கொண்ட கொள்கை: அண்ணா வழியிலே வந்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிற

நாம் ஏற்றுக்கொண்ட கொள்கை இந்தி ஆதிக்க எதிர்ப்பு; அதை எதிர்ப்பதற்காக நம்முடைய பேராசிரியர் அவர்களும், அவரையும் சேர்த்து 10 சட்டமன்ற உறுப்பினர்களும் அரசியல் சட்டத்தினுடைய நகலை எரித்தார்கள் என்பதற்காகக் கைது செய்யப்பட்டார்கள். யார் சட்டத்தை மீறினாலும் கைது செய்யப்படுவது இயற்கை எந்த ஆட்சியிலும். அதை நான் குறை சொல்ல மாட்டேன். ஒரு போராட்டம் என்று வந்து விட்டால் கைது செய்யப்படுவதற்காகத்தான் போராடுவது. கைது செய்யப்பட்டு தண்டிக்கவும் பட்டார்கள்.

அதற்குப் பிறகு அன்றைக்கிருந்த பேரவைத் தலைவர் அதற்குத் தந்த தண்டனை என்ன தெரியுமா? பேராசிரியர் உள்ளிட்ட 10 எம்.எல்.ஏ.க்களும், எம்.எல்.ஏ. பதவியை இழக்க வேண்டும் என்று சொல்லி, இந்தி ஆதிக்கத்திற்காகவே அண்ணா தலைமையிலே நாங்கள் எல்லாம் இருக்கிறோம் என்று மார்தட்டிக் கொண்டிருந்த நாவலர் நெடுஞ்செழியன், நிதி யமைச்சர், அவை முன்னவர் அவர் எழுந்து தீர்மானம் கொண்டு வந்து பேராசிரியரையும் மற்றும் 9 பேரையும் நீங்கள் எம்.எல்.ஏ.க்களே இல்லை என்று வெளியே அனுப்பி விட்டார்கள். அவர்கள் பிறகு அந்தப் பதவியிலே இல்லை. அந்த பீரியட் முடிகிற வரையிலே. அந்தக் காலகட்டம் முடிகிற வரை யில் அவர்கள் எம்.எல்.ஏக்கள் இல்லை. மொழிக்காக அவர்கள் செய்த தியாகம் என்று அதை நாங்கள் எடுத்துக் கொண்டோம்.

பரிதி இளம்வழுதி இந்த அவையிலே எத்தனை முறை வெளியேற்றப்பட்டார். சிறந்த ஸ்பீக்கர் இருந்தபோது (சிரிப்பு) என்பதைத் திரு. திருநாவுக்கரசு அவர்கள் அறிவார்கள். அவர்களுடைய அனுபவமும் அவருக்குத் தெரியும்.

முரசொலி ஆசிரியர் இந்த அவையிலேதான், கூண்டு கட்டப்பட்டு கூண்டில் நிறுத்தப்பட்டார். நிறுத்தப்பட்டவர் என்னுடைய மருமகன் என்பதற்காக நான் வருத்தப்படவில்லை. ஒரு பத்திரிகையினுடைய ஆசிரியர் இந்த மாமன்றத்தினுடைய வரலாற்றில் கூண்டு கட்டப்பட்டு கூண்டிலே நிறுத்தப்பட்டார்.

விகடன் ஆசிரியர் இந்தப் பேரவைத் தலைவர் ஒருவரைப் பற்றியோ அல்லது அவையைப் பற்றியோ ஒரு கேலிச் சித்திரம் வெளியிட்டதற்காகக் கைது செய்யப்பட்டார்.

இவர்கள் எல்லாம் இந்தப் பேரவையினுடைய கடந்த கால வரலாறு. ஆனால் இன்றைக்கு தாங்கள் தந்திருக்கின்ற தீர்ப்பும் அவை முன்னவர் அவர்கள் இங்கே படித்து அனைவரும் ஒப்புக்கொண்டு இருக்கின்ற தீர்ப்பும் உள்ளபடியே கூட்டத்தொடர் வரையிலே- சுமார் 40 நாள் என்று கருதுகிறேன். இன்று முதல் 40 நாள் இருக்கலாம். ஏனென்றால் ஏப்ரல் கடைசி வரையிலே அவை நடக்கக்கூடும். அது அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுக்க வேண்டிய தீர்மானம்-- சுமார் 40 நாள் இன்று முதல். அதுவரையிலே அவர் கலந்துகொள்ளக்கூடாது என்ற தீர்ப்பை இந்த அவை தீர்மானமாக வடித்து எடுத்து இருக்கிறது.

நான் ஒன்றை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அஸாம் மாநிலத்தில் இதுபோன்ற ஒரு அவதூறை பேரவை யிலே கூறிய ஒரு உறுப்பினர் அவையிலே மன்னிப்பு கேட்டுக் கொண்ட பிறகும்கூட அவரை அந்தக் கூட்டத்தொடர் வரையிலே விலக்கி வைத்த செய்தி உண்டு. அதையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்கிற அதே நேரத்தில் இனி இப்படிச் செய்ய மாட்டார் என்று திருநாவுக்கரசு அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்தக் காரணத்தையும் மனதில் கொண்டு இந்த 40 நாள் என்பதை 20 நாளாகக் குறைத்து 20 நாள் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளக் கூடாது என்ற அளவிலே குறைக்கலாம்- அதற்குக்கூட அவர் தன்னுடைய வருத்தத்தை தெரிவித்துக் கொள்ள வேண்டும்; இனி இப்படி நடக்காது என்பதற்கேற்ப திருநாவுக்கரசு அவர்கள் சொல்லிய அந்த உறுதிமொழியை நான் நம்பினாலும்கூட அவர் யாரைச் சொல்லி, யாரை நம்பி இந்த உறுதிமொழியைச் சொல்கிறார் என்பதை அவருடைய மனசாட்சி தான் அவருக்குச் சொல்ல வேண்டும். இருந்தாலும் அவரால் குறிப்பிடப்பட்ட அந்த உறுப்பினர் திரு.தாமரைக்கனி அவர்கள் ஆதாரம் அற்ற ஒரு செய்தியை அவதூறாகத் தங்களிடத்திலே கொடுத்தமைக்காக வருத்தம் தெரிவித்துக்கொண்டு இந்த அவையிலே சொன்னார்களானால் இந்த 40 நாட்களை 20 நாட்களாகக் குறைக்கலாம் -என்ற என்னுடைய கருத்தைத் தாங்களும், இந்த அவையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிலையிலே எடுத்து முன்வைத்து அமர்கிறேன். வணக்கம்.

சந்தன மரக் கிடங்கில் தீ விபத்து

உரை : 40 **நாள் : 03.04.1997**

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு- அம்பேத்கார் மாவட்டம். திருப்பத்தூரில் உள்ள சந்தனமரக் கிடங்கில் 16-3-1997 ஞாயிற்றுக்கிழமை மாலை சுமார் 4¾ மணி அளவில் தீ விபத்து ஏற்பட்டு, சுமார் 68 கோடி ரூபாய் மதிப்புள்ள சந்தனக் கட்டைகள் எரிந்து சாம்பலாகி விட்டன என 17-3-1997 அன்று பேரவையில் ஓர் அறிக்கை அளிக்கப்பட்டது.

அந்தச் சம்பவம் குறித்து, மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறை விசாரணை மேற்கொள்ள ஆணையிடப்பட்டது. குற்றப் புலனாய்வுத் துறையின் விசாரணைத் தொடர்பாக 29-3-1997 அன்று வனத் துறையைச் சார்ந்த சார்நிலைப் பணியாளர்கள் திருவாளர்கள் எஸ். வைத்தியலிங்கம் என்ற வனச் சரகரும், கோவிந்தன், கே.லட்சுமணன், சிவானந்தன், கன்னியப்பன் ஆகிய வனக் காப்பாளர்களும், பழனி என்ற சந்தன மரக் கிடங்கு எழுத்தர் மற்றும் கிடங்குப் பணியாளர் வரதன் ஆகியோரும், கோவிந்தன் என்பவருடைய மனைவி திருமதி முத்தம்மாள் என்பவரும் கோவிந்தனுடைய பேரன் சுதாகரன் என்ற சிறுவனும் கைது செய்யப்பட்டு திருப்பத்தூர் குற்றவியல் முன்பு ஆஜர்படுத்தப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப் பட்டுள்ளார்கள். சிறுவன் சுதாகரன், வேலூரில் உள்ள சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இந்தத் தீ விபத்து சுதாகரன் என்ற சிறுவன், சம்பவ நாளன்று, சந்தனக் கிடங்கிலே அடுப்புப் பற்றவைத்து சோறு பொங்கி விளையாடியதாகவும், அப்போது அருகில் இருந்த

ஓலைக் கொட்டகையில் தீப்பற்றி அது சரிந்து சந்தனக் கட்டை மேல் தீ பரவி இருக்கிறது என்றும் முதல் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அதை அணைப்பதற்கு உதவும் முகத்தான் வந்த காவல் துறையினரையும், பொதுமக்களையும், வனத் துறையைச் சார்ந்த மேற்கூறப்பட்ட வனத்துறைப் பணியாளர்கள் தடுத்திருக் கிறார்கள் என்பதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அவர்களின் இச்செயலால், தீப்பிடித்த பகுதியிலே இருந்து சந்தனக் கட்டைளை எடுத்துப் பாதுகாப்பான இடத் திற்குக் கொண்டு செல்ல விடாமல் தடுக்கப்பட்டுள்ளது. மேற் கண்ட நபர்கள், பெரியதாகத் தீ பரவுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திய குற்றத்திற்காக இ.பி.கோ. 436-ன் கீழும், அரசு அலுவலர்களை கடமையைச் செய்ய விடாமல் தடுத்த குற்றத் திற்காகப் பிரிவு 353-இன் கீழும், பொதுச் சொத்துக்கள் சேதம் விளைவித்தல் தடுப்புச் சட்டப் பிரிவு 3-ன் கீழும் இ.பி.கோ. 201 மற்றும் பிரிவு 285-இன் கீழும் குற்றம் சுமத்தப்பட் டுள்ளார்கள்.

மேற்படி குற்றவாளிகளின் ஜாமீன் மனு 2-4-1997அன்று வேலூர் செஷன்ஸ் கோர்ட் நீதிபதியால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இத் தீவிபத்து காரணமாக அரசுக்கு ஏற்பட்டுள்ள பேரிழப்பைக் கருதியும், மேலும் உண்மைகள் வெளி வரவும் உயர்நீதிமன்ற அமர்வு நீதிபதியினால் விரிவான முறையில் வெளிப்படையான நீதி விசாரணை ஒன்றை நடத்திட அரசு முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கான முறையான அறிவிப்பு மிக விரைவில் வெளியிடப்படும். இந்தத் தீ விபத்து தொடர்பாக எந்தவொரு தகவலையும் தெரிவிக்க விரும்பும் எந்தவொரு நபரும் இந்த விசாரணைக்கு உதவக் கூடிய வகையில் விரிவான முறையிலே விளம்பரங்கள் செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (தட்டும் ஒலி) எனவே, தயவுசெய்து மதங்களின் பெயரால், மடாலயங்களின் பெயரால், விவேகானந்தரின்

பெயரால் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன், விவே கானந்தர் சொன்னபடி தீயிட்டுப் பொசுக்க வேண்டிய பிசாசுத்தன கருத்துக்களை உருவாக்காதீர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பிரச்சினை குறித்து இங்கே சில கருத்துக்களை எடுத்துக்கூறி, அதற்கு என்னுடைய விளக்கம் என்ன என்று கேட்டிருக்கிறார்கள். நான் விளக்கம் அளிப்பதற்கு முன்பு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய முன்னோடித் தலைவர்களில் ஒருவரான திரு.சுப்பராயன் அவர்கள், அவருடைய கருத்தையும் அவருடைய கட்சியின் கருத்தாக எடுத்துச் சொல்லி, விவேகானந்தரை மேற்கோள் காட்டியிருக்கின்றார். விவேகானந் தரைப் போலவே மகாத்மா காந்தியடிகளும்கூட கோயில்களைப் பற்றி ஒரு வார்த்தையைச் சொல்லியிருக்கிறார். அதை நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை; தேவையில்லை என்பதால். அது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். கோயில்கள் என்றால் என்ன என்பது பற்றி காந்தியடிகளே சொல்லியிருக்கின்றார். நான் சாதாரணமானவன் சொல்லிவிட்ட காரணத்தினால், இன்றைக்கு அது பெரிதுபடுத்தப்படுகிறது. மக்கள் அனைவரும் குமுறிக் கொண்டிருப்பதாக திரு.வேலா யுதன் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், அந்தக் குமுறலை திரு.வேலாயுதன் அவர்கள் இங்கே சொல்லும்போது சிரித்த முகத்தோடு (சிரிப்பு) சொன்னதுதான் எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. நண்பர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள், திருமண விழாவில் பேசிய கருத்தை வரிக்கு வரி அப்படியே ஆதரிப்பதாக எடுத்துக் கூறினார்கள். முதலில், திருமண விழாவில் நான் என்ன பேசினேன் என்பதை ஏடுகளிலே நீங்கள் பார்த்திருப்பீர்கள். பன்னாரி அம்மன் கோவிலிலே நடந்த திருவிழா, இன்று நேற்றல்ல பல ஆண்டு காலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு நான் அதைப்பற்றி விமர்சிக்கவில்லை. காரணம் விமர்சிக்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டதில்லை. அதற்கு முன்பும் நான் விமர்சிக்கவில்லை. பொதுவாக, திராவிட

இயக்கத்தினுடைய கொள்கை, தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கை, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கை- இவைகளில் ஒன்றில் சற்று கடுமையான குரலாக இருக்கும். பெரியாருடைய கொள்கையில் அதை எதிரொலிப்பதில், அண்ணாவினுடைய கொள்கை. அதுவேயானாலும் கனிவாக எடுத்துச் சொல்கின்ற முறையிருக்கும்.. நான் பெரியாருடைய மாணவனாக பெரியாருடைய ஈரோடு குருகுலத்திலே இருந்து, அவர்களால் தட்டி வளர்க்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். அறிஞர் அண்ணா அவர்களுடைய கரம் பிடித்து, வளர்ந்த தம்பி மார்களில் நானும் ஒருவன். பெரியார் அவர்கள் பிள்ளையாரை உடைக்க வேண்டுமென்று சொன்னபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள், 'நான் பிள்ளையாரையும் உடைக்க மாட்டேன். பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்க மாட்டேன்' என்று சொன்னார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடவுள் கொள்கை என்ன வென்று கேட்டபொழுது, 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்பதுதான் எங்களுடைய கடவுள் கொள்கை என்று அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால், அண்ணாவைப் பொறுத்தவரையில், என்னைப் பொறுத்த வரையில், இன்னும் கட்சியில் இருக்கின்ற தலைவர்களைப் பொறுத்தவரையில், நாங்கள் நாத்திகர்கள்தான், இதைச் சொல்ல நாங்கள் என்றைக்கும் அச்சப்பட்டதும் இல்லை, அச்சப்படப் போவதும் இல்லை.' (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், தன்னை ஒரு நாத்திகர் என்று விளம்பரப்படுத்திக் கொண்டவர். பஞ்சாப் சிங்கம் பகத் சிங், 'நான் ஏன் நாத்திகன் ஆனேன்' என்று ஒரு புத்தகமே எழுதியிருக்கிறார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஆனந்த விகடன் பத்திரிகை யில் 'இந்து' திரு.ராம் ஒரு பேட்டி கொடுத்தபோது, தன்னை ஒரு நாத்திகன் என்றே அதில் அறுதியிட்டுக் கூறியிருக்கிறார். நாத்தி கனாக இருந்தாலும், ஆத்திகர்களுடைய மனதைப் புண்படுத்தக்

கூடாது என்பதில், அறிஞர் அண்ணா அவர்களும் நானும் மிகவும் அக்கறை உள்ளவர்கள்.அதனால்தான், அறநிலையத் துறை அமைச்சராக, எங்களுடைய அமைச்சர்கள் யார் பொறுப் பேற்றிருந்தாலும்- அண்ணா அவர்கள் காலத்தில் நாவலர் நெடுஞ்செழியன் கொஞ்ச காலம் பொறுப்பு ஏற்றிருந்தார். பிறகு நான் முதலமைச்சராக இருந்தபோது, கோவை கண்ணப்பன் பொறுப்பு ஏற்றிருந்தார்; சுப்பையா பொறுப்பு ஏற்றிருந்தார்; கே.பி.கே.பொறுப்பு ஏற்றிருந்தார்; இப்பொழுது செங்குட்டுவன் பொறுப்பு ஏற்று இருக்கிறார்- இவர்களெல்லாம் ஆலயங் களுக்குச் செல்வதையோ ஆலயங்களில் நடைபெறுகின்ற முறைகளைக் கவனிப்பதையோ, அந்த விழாக்களில் கலந்து கொள்வதையோ என்றைக்கும் தடுத்ததில்லை. ஏனென்றால், அரசின் சார்பில் ஒரு துறை இருக்கும்போது, அந்தத் துறைக் குள்ள அமைச்சர் அங்கே செல்வதில் எந்தவிதமான தவறும் இல்லை என்று அதை நாங்கள் தடுக்கவும் இல்லை, அதைப் பற்றி விமர்சித்ததும் இல்லை; கூடாது என்று அவர்களுக்கு உத்தரவிட்டதும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், இதற்கு முன்பு 20 ஆண்டுகளாக ஓடாமல் இருந்த திருவாரூர் தேரை ஓட்டியவனே நான்தான் என்பதை நாடு நன்றாக அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) பக்தர்கள் தங்களுடைய கொள்கையில் இருக்கும்போது, அந்தக் கொள்கைக்கு அவர்கள் எவை தேவை என்று கூறுகிறார்களோ அவைகளையெல்லாம் செய்து கொடுப்பதாக இந்த அரசு இருக்க வேண்டுமென்று எண்ணக் கூடியவன்.


'காட்டுமிராண்டித்தனம்' என்று எதைச் சொன்னேன் என்றால், கலைஞருடைய ஆட்சி நீடிக்க வேண்டுமென்று நான் தீ மிதிக்கிறேன் என்று ஒரு அமைச்சர் தீ மிதிப்பதோ, சட்டமன்ற உறுப்பினர்கள், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் தீ மிதிப்பதோ 'காட்டுமிராண்டித்தனம்' என்றுதான் நான் குறிப்பிட்டேனே அல்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) பன்னாரி அம்மன் பக்தர் களெல்லாம் காட்டுமிராண்டிகள் என்று நான் சொல்லவில்லை. நான் அப்படிச் சொன்னது கிடையாது. கடந்த ஆண்டோ அல்லது அதற்கு முன்பு இருந்த ஆண்டுகளிலோ இப்படிப்பட்ட காரியங்

களைப் பற்றி இது நல்லதல்ல, நாகரிகம் அற்றவை என்று நான் சொல்லியிருக்கக்கூடும். அது எங்களுடைய அறிவுக்கு ஒத்து வராதது என்று கூறியிருக்கக் கூடும். நாங்கள் அறவே கடவுளை மறுப்பவர்கள் அல்ல. ஒரே கடவுள், அந்த ஒரே கடவுள்-மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு மீனாட்சியம்மனாக இருக்கலாம் (சிரிப்பு) நான் அதைத் தடுத்தது கிடையாது. அதைப்போல அவரவர்களுக்கு இஷ்டப்பட்ட ஒரு கடவுளை அவர்கள் வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தில் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் உண்டு. அவர்களுக்கிடையில்தான். நாங்கள் சில பேர் நாத்திகனாக இருக்கிறோம். அதையும் நான் மறுப்பதற்கில்லை. இருந்தாலும், கடவுள் பெயரால் சில தவறுகள் நடைபெறுவதை நாம் கண் மூடிக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போதுகூட எல்லா மதத்திலும் பல காட்டுமிராண்டித்தனமான காரியங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். இதுகூட பக்தர்களுடைய மனதைப் புண்படுத்தக்கூடிய வார்த்தைதான். (சிரிப்பு) இங்கே பதிவேட்டில் ஏறிவிட்டது. அதை மாற்ற முடியாது. மாற்றவும் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். (சிரிப்பு) என் கையில் இருப்பது விடுதலை பத்திரிகை. இந்தப் பத்திரிகையில் படம் ஒன்று வந்திருக்கிறது. கோவை மாவட்டம் காரமடையில் ஆண்டுதோறும் பங்குனித் திருவிழா என்ற பெயரால், பூசாரியினுடைய வாயில் உள்ள வாழைப்பழத்தைப் பெண்கள் தங்கள் வாயால் கவ்வி விழுங்குகிறார்கள். அப்படி விழுங்கினால், பிள்ளை இல்லாதவர்களுக்குப் பிள்ளை பிறக்கும் என்று சொல்கிறார்கள். இதிலே படமே இருக்கிறது. பாருங்கள். பூசாரியினுடைய வாயில் வாழைப்பழம், அந்தப் பழத்தை பூசாரியினுடைய வாயிலிருந்து கவ்வுகிறார்கள். இதை என்னத்தனம் என்று கூறுவது என்பதை பகுத்தறிவு உலகத்தை உருவாக்க வேண்டுமென்று எண்ணுகின்ற நாம்தான் எண்ணிப்பார்க்க வேண்டும். எனவே, பன்னாரி அம்மன் கோயில் பக்தர்களைப் புண்படுத்த வேண்டுமென்ற எண்ணம் எனக்கு என்றும் கிடையாது.

கடந்த காலத்திலே தீ மிதி, காவடி எடுத்தல், கரகம் ஆடுதல், அங்கப்பிரதட்சணம். மண் சோறு சாப்பிடுதல் போன்ற பல காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஒரு வீட்டிலேகூட தன்னுடைய கொள்கையைத் திணிப்பது கூடாது. என்னுடைய வீட்டிலேயே கூட சில பேர். என்னுடைய சகோதரியாரோ. மற்றவர்களோ தெய்வபக்தி உள்ளவர்களாக இருக்கலாம்; நான் தடுப்பது கிடையாது. இன்னும் சொல்லப்போனால் தந்தை பெரியாருடைய இல்லத்திலேயே அவருடைய சகோதரிகள் அப்படி இருந்திருக்கலாம். அவர் ஒரு கோவிலினுடைய டிரஸ்டியாக இருந்து தீர வேண்டிய நெருக்கடியின் காரணமாக, அவருடைய இல்லத்திலேயே ஒரு கோயில் இருந்தது. அப்போதே அவர் சுயமரியாதை கருத்துகளைச் சொல்கிறபோது. 'உங்கள் வீட்டிலேயே கோயில் இருக்கலாமா' என்றெல்லாம்கூட அன்றைக்குக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் பெரியார் தன்னைப் பொறுத்தவரை, தன்னுடைய கொள்கைகளை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்கிற அதே நேரத்தில், யாரிடத்திலும் திணிப்ப வராக என்றைக்கும் இருந்ததில்லை. அதை அழுத்தம் திருத்தமாக, வேகமாகச் சொல்பவராகத்தான் இருப்பார். அதைப் போலத்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற நாங்கள், எங்கள் கொள்கைகளை மற்றவர்களுடைய மனதிலே திணிக்க என்றைக்கும் முயற்சித்தது கிடையாது. பக்தி வேறு; இது வேறு; நான் யாரையும் புண்படுத்த வேண்டுமென்பதற் காகச் சொல்லவில்லை; நாடு பண்பட வேண்டுமென்பதற்காகச் சொன்ன வார்த்தையே அல்லாமல் வேறல்ல (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அளவில் என்னுடைய விளக்கம் போதுமானது என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு மாத்திரம் அல்ல, பன்னாரி அம்மனுடைய பக்தர்களுக்கெல்லாம் கூறிக் கொள்கிறேன். அவர்களைப் புண்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இல்லை. என்னுடைய அமைச்சர், என்னுடைய கட்சி எம்.எல்.ஏ.க்கள், இந்த ஆட்சி வாழ வேண்டுமென்பதற்காக தீ மிதித்தார்கள் என்றால் அது தேவையில்லை என்பதுதான். ஏனென்றால் எத்தனையோ தீயைத் தாண்டியிருக்கிறோம்.

ஆகவே இந்தத் தீயைத் தாண்டித்தான். இந்த ஆட்சியைக் காப்பாற்ற வேண்டுமென்ற அவசியமில்லை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சி எத்தனையோ காரணங்களுக்காகக் கலைக்கப்பட்டது உண்டு. ஜனநாயகத்தை தூக்கி நிறுத்துவோம் என்று குரல் கொடுத்ததற்காக நாங்கள் ஆட்சியை இழந்தவர்கள். ஈழத்தில் இருக்கிற தமிழர்களுக்காகக் குரல் கொடுத்த காரணத் தால் விடுதலைப் புலிகளோடு எங்களை சம்பந்தப்படுத்தி, அந்த நேரத்திலே எங்களுடைய ஆட்சியை இழந்தவர்கள். இப்போது பகுத்தறிவுக்காக ஒருமுறை ஆட்சியை இழக்க வேண்டு மென்றாலும்கூட அதற்கும் தயாராக இருப்பவர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்திலேயுள்ள நாங்கள் (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால் விளக்கம் அளிக்க விரும்புகிறேன். யாரையும் புண்படுத்த வேண்டுமென்ற எண்ணம் எங்களுடைய நோக்கமல்ல. என்னுடைய கட்சிக்காரர்கள், என் பெயரைச் சொல்லி என்னுடைய ஆட்சி நீடிக்க வேண்டுமென்பதற்காக தீ மிதிப்பது காட்டுமிராண்டித்தனம் என்பதை இன்றைக்கும் சொல்கிறேன். இதை அவர்கள் ஏற்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டுவிட்டார்கள். குமுதம் பத்திரிகையிலே ஒரு தலையங்கம் படித்தேன். 'கடிதோச்சி மெல்ல எறிக' என்ற குறளை கலைஞ ருக்கு ஞாபகப்படுத்துகிறோம் என்று சொன்னார்கள். நான் உடனே குமுதம் ஆசிரியருக்கு டெலிபோன் செய்து சொன்னேன். உங்கள் முறையைத்தான் பின்பற்றி இருக்கிறேன். 'கடிதோச்சி மெல்ல எறிக' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். கடிதோச்சினேன் கொஞ்சம் வேகமான வார்த்தையைப் போட்டு; மெல்ல எறிந்தேன் அவர்களை மன்னித்து என்று அவர்களுக்குச் சொன்னேன் (மேசையைத் தட்டும் ஒலி) இதைத்தான் விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.



அரசு அலுவலர்க்கு அகவிலைப்படி உயர்வு

உரை : 41 நாள் :16.4.1997

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு அலுவலர்களுக்கு 1-1-1997 முதல் மைய அரசு அலுவலர் களுக்கு இணையாக அகவிலைப்படி வழங்கப்படும். அதன்படி மாதம் ரூ.3,500 வரை ஊதியம் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் 159 விழுக்காடு என்பது 170 விழுக்காடு எனவும், மாதம் ரூ.3,500/-க்கு மேல் ஊதியம் பெறுபவர் களுக்குத் தற்போது வழங்கப்படும் 119 விழுக்காடு என்பது 128 விழுக்காடு எனவும் உயர்த்தி அகவிலைப்படி வழங்கப்படும். இதனால், குறைந்தபட்ச அகவிலைப்படி உயர்வு ரூ.82/- ஆகவும். அதிகபட்ச அகவிலைப்படி உயர்வு ரூ.513/-ஆகவும் இருக்கும்.

இந்த அகவிலைப்படி உயர்வு. ஊதியக்குழு பரிந்துரைத் துள்ள ஊதிய முறையில் சம்பளம் பெறும் அனைத்து அரசு அலுவலர்கள். உள்ளாட்சி நிறுவனங்கள், அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் வருவாய்த் துறையிலே பணிபுரியும் கிராம உதவியாளர்களுக்கும் பொருந்தும்.

அரசு அலுவலர்களின் அகவிலைப்படி, உயர்த்தி வழங்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் பெறும் அலுவலர்களுக்கு 1-1-1997 முதல் பின்வருமாறு ஊதிய உயர்வு வழங்கப்படும்.

மாதம் ரூ.150/-க்குக் குறைவாக மதிப்பூதியம் அல்லது தொகுப்பூதியம் பெறுபவர்களுக்கு... மாதம் ரூ.10/-

மாதம் ரூ.150/ம் அதற்கு மேலும் மதிப்பூதியம் அல்லது தொகுப்பூதியம் பெறுபவர்களுக்கு... மாதம் ரூ.20/-

இந்த உயர்வு சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் அலுவலர்கள் உள்ளிட்ட மதிப்பூதியம் மற்றும் தொகுப்பூதியம் பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் வழங்கப்படும். மேலும், ஊதியக் குழுவின் சம்பள விகிதங்களுக்கு அப்பாற்பட்டு சம்பள ஏற்றமுறையில் உள்ள சத்துணவு அமைப்பாளர்கள் போன்றவர்களுக்கு ஏற்கெனவே 125 விழுக்காடு அகவிலைப் படியும், 23 விழுக்காடு கூடுதல் அகவிலைப்படியும் வழங்கப் பட்டு வருகிறது. அவர்களுக்குக் கூடுதல் அகவிலைப்படி 23-லிருந்து 34 விழுக்காடாக உயர்த்தி வழங்கப்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வு சனவரி 1997 முதல் ரொக்கமாக வழங்கப்படும். இதனால் சுமார் 12 இலட்சம் அலுவலர்கள் பயன்பெறுவார்கள்.

அதேபோல், தமிழ்நாடு மாநில அரசு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மத்திய அரசில் கொடுத்திருப்பதுபோல், மேலும் ஒரு அகவிலைப்படி தவணை 1-1-1997 முதல் வழங்கப்படும். அதன்படி ரூ.1,750/-வரை ஓய்வூதியம் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் அக விலைப்படி 159 விழுக்காடு என்பது 170 விழுக்காடு எனவும் ரூ.1,750/-க்கு மேல் ரூ.3,000/-வரை பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் அகவிலைப்படி 119 விழுக்காடு என்பது 128 விழுக்காடு எனவும், ரூ.3,000/-க்கு மேல் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் அகவிலைப்படி 103 விழுக்காடு என்பது 110 விழுக்காடு எனவும் உயர்த்தி அளிக்கப்படும் இதனால், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய் வூதியம் பெறுபவர்கள் மாதத்திற்கு குறைந்தபட்சம் ரூ.41/-ம், அதிக பட்சம் ரூ.315/-ம் பணப்பயன் அடைவார்கள்.

மேற்குறிப்பிட்ட திருத்திய அகவிலைப்படி, தமிழ்நாடு மாநில ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள், உள்ளாட்சி மற்றும் அரசு மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த ஓய்வூதியம் மற்றும் குடும்ப

ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் மாதம் ரூ.150/- கருணைத் தொகை பெறுபவர்கள் உட்பட, எல்லோருக்கும் வழங்கப்படும். இதனால், ஏறக்குறைய 2.86 இலட்சம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் நன்மை அடைவார்கள்.

மேற்குறிப்பிட்ட சலுகைகளால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு மொத்தமாக 206.19 கோடி ரூபாயாகவும், நடப்பாண்டில் இச்செலவினம், 274.92கோடி ரூபாயாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் பின்வரும் அறிக்கையினை வெளியிட முன் வருகின்றேன்:

மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993-ன் பிரிவு 21-ன்படி தமிழ்நாட்டில் மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைக்கும் கருத்து 1993 அக்டோபரிலிருந்தே அரசின் பரிசீலனையில் இருந்து வந்தது. மத்திய அரசும், மாநில மனித உரிமைகள் ஆணையத்தினை உடனடியாக அமைக்கும் பொருட்டு அவ்வப்போது அன்றிருந்த அரசுக்கு வலியுறுத்தி வந்துள்ளது. எனினும், இந்த அரசு பதவியேற்கும்வரை இது சம்பந்தப்பட்ட ஆணைகள் எதுவும் முன்பு இருந்த அரசால் வெளியிடப்படவில்லை. இந்த அரசு பொறுப்பேற்ற உடனேயே துரித நடவடிக்கைகள் மேற்கொண்டு, தமிழ்நாட்டில் மாநில மனித உரிமைகள் ஆணையத்தினை அமைத்திட, அரசு ஆணை நிலை எண்.1466, பொதுத்துறை, நாள் 20-12-1996-ல் ஆணைகள் பிறப்பித்தது. இந்த மாநில மனித உரிமைகள் ஆணையம் சம்பந்தப்பட்ட விதிமுறைகள் மற்றும் அதன் உறுப்பினர்களின் பணி நிபந்தனைகள் ஆகியவையும் அரசால் வெளியிடப்பட்டுள்ளன.

தற்போது மேதகு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன மாநில மனித உரிமைகள் ஆணையத்திற்குத் தலைவரையும், உறுப்பினர்களையும் கீழ்க்கண்டவாறு நியமனம் செய்து ஆணைகள் பிறப்பித்துள்ளார்கள். தலைவர், ஓய்வுபெற்ற

உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி, நீதிபதி திரு.நயினார்சுந்தரம். உறுப்பினர்கள், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு.கே. சுவாமிதுரை, ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு.அப்துல்கனி, மனித உரிமைகள் சம்பந்தப்பட்டவற்றில் தனித்துவம் வாய்ந்த இரண்டு பேர்; ஒருவர் திரு.ஆர். இரத்தினசாமி, இன்னொருவர் டாக்டர் எம். சுசிலா ராஜ்.

மேதகு ஆளுநர் அவர்களின் மேற்சொன்ன நியமன ஆணைகள் குறித்த அறிக்கை ஒன்று அரசால் வெளியிடப்பட வுள்ளது என்ற அளவில் இந்த அறிக்கையை இந்த அவையின் முன் வைக்கின்றேன்.

காவல் நிலைய மரணம்

உரை : 42 நாள் :15.10.1997

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம் மணவாள நகர் காவல் நிலையத்தில் 9-10-1997 அன்று விடியற்காலையில் கோவிந்தசாமி என்பவர் இறந்த சம்பவம் குறித்து காவல் துறையின் சார்பில் நான் பெற்ற அறிக்கையின் ஒரு பகுதியை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நான் ஒவ்வொரு முறையும் இதுபோன்ற அறிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடும் போது, இந்த அறிக்கையை முழுமையாக நம்பி ஏற்றுக்கொண்டு அவைக்குத் தெரிவிப்பதாக கருதிக் கொள்ளக்கூடாது. இது ஆய்விலே உள்ள ஒரு அறிக்கைதான். இது பரீசிலிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதைத் தெரிவித்திருக்கிறேன். அதே எண்ணத்தோடுதான் இப்போது இந்த அறிக்கையிலே உள்ள சில பகுதிகளைப் படிக்க விரும்புகிறேன்.

'திருப்பதி குடை வருகையை முன்னிட்டும், புரட்டாசித் திங்கள் வாரத் திருவிழாவை முன்னிட்டும், ஜல்லிமேடு, அண்ணா நகரிலே உள்ள பெருமாள் கோயிலில் திருவிழா நடத்துவது பற்றி 1-10-1997 அன்று அந்த ஊர் மக்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றிருக்கிறது. அப்போது அந்தப் பெருமாள் கோயிலின் பராமரிப்பாளர் என்ற முறையில் எல்லப்பன் என்பவர் அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் திருவிழா குறித்த செலவினங்களை ஒதுக்கியிருக்கின்றார். இறுதி யில் தன்னுடைய பங்கிற்கு திருவிழா குறித்த அழைப்பிதழை அச்சிடுவதாகவும் கூறியிருக்கிறார். அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டிருந்த மறைந்த கோவிந்தசாமியின் 28 வயது மகன் இராமலிங்கம் என்பவர் எல்லப்பனைப் பார்த்து 'நீ என்ன

எல்லோருக்கும் செலவினங்களை ஒதுக்குவது?' உனக்கு மட்டும் செலவு குறைந்த வேலையை ஒதுக்கிக் கொள்வதா?' என்று கேட்டிருக்கிறார். இதன் காரணமாக இருவருக்கும் இடைய தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது இராமலிங்கம், ''கைப் பின்னல் தொழிற்சங்கத்தின் பணம் ரூபாய் ஆயிரத்தைக் கூட நீ கையாடல் செய்திருக்கிறாய்'' என்று எல்லப்பனிடம் கூற, தகராறு வலுத்து, இருவருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டு, அங்கிருந்த ஊர் மக்கள் அவர்கள் இருவரையும் சமாதானப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு, கோவிந்தசாமி தனது குடும்பத்தோடு நடைப்பயணமாக திருப்பதிக்குச் சென்று விட்டு 8-10-1997 அன்று ஊர் திரும்பியிருக்கிறார். அன்று மாலையில் ஊர் மக்கள் முன்னிலையில் மீண்டும் நடைபெற்ற ஊர்ப் பொதுக்கூட்டத்தில் 1-10-1997அன்று நடைபெற்ற சம்பவத்திற்கு, கோவிந்தசாமி, எல்லப்பன் காலில் விழுந்து மன்னிப்புக் கோரியிருக்கிறார். ஊர் மக்களுக்காக மன்னிப்புக் கேட்டாலும் மனம் உறுத்திய கோவிந்தசாமி தனது மனக்குமுறலை அடக்க மது அருந்தி, தனது வீட்டின் அருகே எல்லப்பனை அசிங்கமான வார்த்தைகளால் திட்டியிருக்கிறார்.

இதனைத் தனது தம்பி நாகப்பன் மூலமாக அறிந்து எல்லப்பன், கோவிந்தசாமியைத் தட்டிக் கேட்க, அதனால் கோவிந்தசாமி, அவரது மகன் இராமலிங்கம் மற்றும் பலர் ஒன்று கூடி இரவு 9 மணிக்கு எல்லப்பனையும், அவரோடு வந்தவர்களையும் கத்தியாலும், தடியாலும் அடித்துள்ளார்கள். இந்தச் சம்பவத்தில் காயம் அடைந்த எல்லப்பன், அவரது தம்பி, தம்பி மனைவி அம்பிகா மற்றும் அவரது தங்கை கௌரி ஆகியோருடன் 8-10-1997 அன்று இரவு 11 மணிக்கு மணவாள நகர் காவல் நிலையம் வந்து தங்களை அடித்தது பற்றிக் கூறியிருக்கிறார். காயம்பட்டவர்களுக்கு இரத்தம் அதிகமாகப் பெருகவே, அப்பொழுது காவல் நிலையத்திலிருந்த உதவி ஆய்வாளர் கரியப்பா உடனே திருவள்ளூர் அரசு மருத்துவ மனைக்கு அவர்களைச் சிகிச்சைக்காக அனுப்பியிருக்கிறார்.

பின்பு, உதவி ஆய்வாளர், திருவள்ளூர், அரசு மருத்துவ மனைக்குச் சென்று, காயம் அடைந்த எல்லையப்பனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின் காவல் நிலையத்துக்கு வந்து, இரவு 11-45 மணிக்கு மணவாள நகர் காவல் நிலையக் குற்ற எண் 452/97, சட்டப் பிரிவு 307 இ.பி.கோவில் வழக்குப் பதிவு செய்துள்ளார். பிறகு இரவு 12-15 மணிக்கு சம்பவ இடத்திற்கு உதவி ஆய்வாளர், காவலர்களோடு சென்று எதிரியைத் தேட, எதிரி தலைமறைவாகி விட்டதால் மீண்டும் இரவு 1 மணி 40 நிமிடம் அளவில் காவல் நிலையத்திற்குத் திரும்பியிருக்கிறார். பின்பு இரவு 1-55 மணிக்கு கோவிந்தசாமி, அவரது மனைவி அன்னம்மாள், அவரது மகன் பாஸ்கர் ஆகியோர், காவல் நிலையம் வந்து தங்களை எல்லப்பன், வடிவேலு, பழனி, கன்னியப்பன் மற்றும் பல ரௌடிகள் உருட்டுக் கட்டையாலும், பல ஆயுதங்களாலும் தாக்கியதாகவும், இது குறித்துப் புகார் கொடுக்க காவல் நிலையம் வரும் வழியில் தசரதன் மற்றும் பலர் மீண்டும் தங்களை உருட்டுக் கட்டையாலும், பல ஆயுதங்களாலும் தாக்கியதாகவும் கூறியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக அன்னம்மாள் கொடுத்த புகாரை ஒட்டி வழக்கு ஒன்றும் 116/97-லே பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இதுவரையிலே நடந்த சம்பவங்கள் பெருமளவிற்கு உண்மையாக இருந்தாலும்கூட அடுத்து, காவல் நிலையத்தில் அந்த கோவிந்தசாமி இறந்துவிட்டார் என்பதைப் பற்றி, அவர் காவல் நிலையத்திலே அடிக்கப்பட்டாரா, அல்லது காவல் நிலையத்திற்கு வருவதற்கு முன்பு நடைபெற்ற தாக்குதல் சம்பவத்திலே காயமுற்றாரா, உட்காயம் ஏற்பட்டதா அல்லது காவல் துறையினர் கூறுவது போல நிலையத்திலே அவர் தூக்கு மாட்டிக் கொண்டாரா என்பவையெல்லாம் இப்போது ஆர்.டி.ஓ. விசாரணையிலே இருந்து வருகின்றன.

ஆர்.டி.ஓ.வினுடைய இடைக்கால அறிக்கையும் தரப்பட்டு, காலையிலே நான் மாவட்ட ஆட்சித் தலைவரோடு, டி.ஜி.பி.யோடு தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்ட விவரம்:- ஆர்.டி.ஓ. விசாரணையிலே பெறப்பட்ட இந்த

இடைக்கால அறிக்கையில் சந்தேகத்திற்குரிய மரணம் என்பதாக அவர் குறிப்பிட்டிருக்கின்றார். இதையொட்டி, தலைமைக் காவலர் ஒருவரும், நிலையக் காவல் பணியிலே இருந்த முதுநிலைக் காவலர் ஒருவரும் தற்காலிகப் பணி நீக்கம் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கிறார்கள், உடனடியாக. இன்று காலையிலே அந்தச் செய்தி வந்த பிறகு, சப்- இன்ஸ்பெக்டரும், இன்ஸ்பெக்டரும் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட வேண்டுமென்று அவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கோவிந்தசாமியினுடைய குடும்பத்தின் ஏழ்மை நிலையைக் கருத்திலே கொண்டு, அவருடைய குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலேயிருந்து ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது; அதற்கான உத்தரவும் நேற்றைக்கு முன்தினமே வழங்கப்பட்டு விட்டது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

காவல் நிலையத்திலே ஏற்படும் இத்தகைய மரணங்கள் குறித்து அரசு எவ்வளவு கவலைப்படுகிறது என்பதையும், கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதிலே தீவிரமாக இருக்கிறது என்பதையும் இங்கே இந்தக் கவன ஈர்ப்பின் அடிப்படையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

10-9-1997இல் நடைபெற்ற காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் நான் ஆற்றிய உரையின் சுருக்கத்தை- ஒரு பகுதியை இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன்:

‘காவல் நிலையங்களில் ஏற்படும் மரணங்கள் தவிர்க்கப் பட வேண்டுமென்று நான் பலமுறை கூறி வந்திருக்கிறேன். இருப்பினும் இது தொடர் நிகழ்வாக நடந்து வருகிறது. இந்தப் போக்கு மிகவும் வருந்துவதற்கு உரியது ஆகும். இதனால் அரசுக்குப் பிரச்சினைகள் ஏற்படுவது மட்டுமல்லாமல், காவல் துறைக்கும், அரசுக்கும் மிகுந்த அவப் பெயர் ஏற்படுகிறது. இது முற்றிலுமாகத் தவிர்க்கப்பட வேண்டும். இதைப்பற்றி அனைத்துக் காவல் துறை அதிகாரிகளுக்கும் எடுத்துக் கூறி,

இனியேனும் காவல் நிலைய மரணங்கள் நிகழாவண்ணம், தக்க நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டும். காவல்துறை ஒருவரைக் கைது செய்யும்போது ஒரு சாட்சியின் கையெழுத்தைப் பெற வேண்டும் எனவும், கைது செய்து விசாரிக்கும்போது கைது செய்யப்பட்டவரின் நண்பர் அல்லது உறவினருக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென்றும் தற்போது உத்தரவிடப்பட்டுள்ளது. காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் அடிக்கடி காவல் நிலையங்களைப் பார்வையிட்டு காவலர்களுக்கு அறிவுரை வழங்கினால் இந்தக் காவல் நிலைய மரணங்கள் தவிர்க்கப்படும் என்று நம்புகிறேன். இனிமேல் இது போன்று காவல் நிலைய மரணம் நிகழ்ந்தால் உயர் அதிகாரிகளையும் அதற்குப் பொறுப்பாக்க அரசு முடிவு செய்திருக்கிறது'' என்று குறிப்பிட்டுவிட்டு, அந்த மாநாட்டில் இறுதியிலே நான் உரையாற்றியபோது பின்வருமாறு குறிப்பிட்டேன்:

''ஒரு குற்றம் வெளிப்படாமல் போனால்கூட பரவாயில்லை, குற்றம் சாட்டப்பட்ட ஒருவன் கொலையுண்டான், காவல் நிலையத்திலே கொலையுண்டான் என்ற செய்தி அவமானகரமானது, அரசிற்கு மாத்திரமல்ல, காவல் துறைக்கும்தான் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. ஒரு காவல் நிலையத்தில் இருக்கின்ற கைதி இறந்துவிட்டான் என்பதற்குப் பிறகு சென்று விசாரிப்பதைவிட, அடிக்கடி மாவட்ட மேலதிகாரிகளாகிய நீங்கள் காவல் நிலையத்திற்குச் சென்று ஆய்வு செய்வதன் வாயிலாக அங்கே அடைக்கப்பட்டிருக்கின்ற கைதியைப் பார்த்துக்கூட, குற்றம் சாட்டப்பட்டவனைப் பார்த்துக்கூட நீங்கள் விசாரிக்கலாம். போலீசார் அவர்களிடம் உண்மையை வரவழைப்பதற்காக அடித்தார்கள் என்ற செய்தி உங்களுக்குக் கிடைத்தால்கூட நீங்கள் அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அடிப்பதே குற்றம் என்பது அவர்களுக்குப் புலப்பட்டால்தான் அதற்கே எச்சரிக்கை உண்டு. நடவடிக்கை உண்டு என்பது அவர்களுக்குத் தெளிவாக்கப்பட்டால்தான், லாக்கப்பில் அடித்துக் கொலை செய்வது எவ்வளவு பெரிய குற்றம் என்பதை அவர்களால் உணர முடியும்'' என்பதை நான் குறிப்பிட்டேன். இதற்கேற்ப, இந்தச் சமயத்திலேகூட இன்ஸ்பெக்டர், சப்-

இன்ஸ்பெக்டர் என்கிற அளவிற்கு உயர் அதிகாரிகள் மீது நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆர்.டி.ஓ. வினுடைய அறிக்கை வந்த பிறகு, மேலும் இங்கே உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல, இதற்கு மேலும் விசாரணை தேவையா என்பதை அறிந்து நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். நண்பர் தீரன் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, அவர்களுடைய பகுதியிலே, காவல் நிலையத்திலே கொலையுண்டதாக அறிவிக்கப்பட்ட சடையனுடைய குடும்பத்திற்கு உதவியளிப்பதைப் பற்றி அரசு பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, காவல் நிலையச் சாவுகள் என்பது, பல ஆண்டுகளாக, எந்த அரசாக இருந்தாலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த அரசில் அது தவிர்க்கப்பட வேண்டுமென்று எவ்வளவோ முயற்சிகளை நாம் மேற்கொண்டாலும்கூட, நம்மையும் மீறி இந்தக் காரியங்கள் நடைபெறுகின்றன. இதற்கு முழுப் பொறுப்பை ஏற்க வேண்டியது காவல்துறைதான் என்றாலும், காவல் துறையைக் கையிலே வைத்திருக்கின்ற அரசுக்கும் அந்தப் பொறுப்பு இருக்கிறது என்பதை உணர்ந்து அரசு செயல்படும் என்பதை எடுத்துக்காட்டி, இனி இத்தகைய குற்றங்கள் தொடர்ந்து நடக்காமல், நண்பர் மணி எடுத்துக் காட்டியதைப்போல இந்தக் குற்றங்களுக்குக் காரணமாகவோ அல்லது பொறுப்பாகவோ இருக்கின்றவர்கள்மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஏற்கெனவே பல இடங்களில் நடைபெற்ற இந்தச் சம்பவங்களில் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. யாரும், எந்தக் காவல் அதிகாரியும் மன்னிக்கப்படவில்லை, இடமாற்றம் அல்லது பணிமாற்றம் அல்லது பணி இறக்கம் அல்லது பணியிலிருந்து விலக்கம் என்ற அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கைது செய்யப்பட்ட சிலர் மீது வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன. அதைப்போல இந்தச் சம்பவத்திலும் நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற உறுதியினை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்ற கட்சிகளினுடைய தலைவர்களும் எடுத்துக் காட்டிய குறைபாடுகளுக்கு, உணர்வுப்பூர்வமான செய்திகளுக்கு, உள்ளபடியே இருக்கின்ற நிலைமை என்ன என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் அளித்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 1990-ஆம் ஆண்டிற்குப் பிறகு 36 ஆலைகள் இவ்வாறு மூடப்பட்டிருக்கின்றன. அதிலே ஒன்றுதான் இந்த ஆலை. இந்த ஆலையைப் பொறுத்தவரையிலே, இது அரசுக்குச் சொந்தமானது என்றாலும்கூட, இப்போது நீதிமன்றத்திலே யாருக்குச் சொந்தம் என்ற கேள்வி எழுந்து இன்னும் தீர்ப்பு வராமல் உள்ள சூழ்நிலையில் அதை உடனடியாக அரசு எடுத்து நடத்துவது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. இதைப் பற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கின்ற காரணத்தாலும், தீர்ப்புக்குப் பிறகு ஒரு நல்ல முடிவை தொழிலாளர்கள் சார்பாக எடுக்க முடியும் என்ற நம்பிக்கை இருப்பதாலும், இந்த அவையில் அரசின் சார்பாக நான் தருகின்ற உறுதிமொழியை ஏற்று நண்பர் தங்கமணி அவர்கள் தன்னுடைய உண்ணாநோன்பைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு அமைப்பாளர்கள் ஊதியம்

உரை : 43 நாள் :17.4.1998

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு அமைப்பாளர்கள் தற்போது 200-5-250-10-400 என்ற சம்பள விகிதத்தில் உள்ளார்கள். 1-1-1996ல் அவர்கள் பெற்ற மொத்த ஊதியம் ரூ.524 அத்தேதியில் சத்துணவு மையங்களில் பணிபுரியும் சமையலர்கள் மாதம் ஒன்றுக்கு மொத்தம் ஊதியமாக ரூ.225பெற்று வந்தார்கள். சத்துணவு மையங்களில் உதவியாளர்களாக பணிபுரிபவர்கள் மாதம் ஒன்றுக்கு மொத்த ஊதியமாக ரூ.185 பெற்று வந்துள்ளார்கள்.

ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசு மாற்றியமைத்த ஊதிய விகிதங்களை மாநில அரசு ஊழியர்களுக்கும் அளிக்க முடிவெடுத்த போது சத்துணவு அமைப்பாளர்களுக்கும் சம்பள விகிதம் ரூ.600-10-700-20-1100 என்று மாற்றி அமைக்க அரசு முடிவெடுத்திருந்தது. இவர்களுக்கும் மதிப்பூதியத்திலுள்ள சமையலர்களுக்கும், உதவியாளர்களுக்கும் 40 சதவிகித உயர்வு, அடிப்படை ஊதியத்தில் வழங்க அரசு முடிவு செய்து இருந்தது.

சத்துணவு ஊழியர்களுக்கு ஊதியத்தை மேலும் அதிகரிக்க வேண்டுமென்று அந்தச் சங்கங்கள் கோரியிருந்தன. மேலும் சமையலர்கள் மற்றும் உதவியாளர்கள் ஓய்வுபெறும் வயதையும் அதிகரிக்க வேண்டும் என்றும் கோரியிருந்தார்கள். சத்துணவு மையங்களில் பணிபுரியும் அலுவலர்களின் கோரிக்கையை பரிவோடு பரிசீலித்து இந்த அரசு பின்வரும் முடிவுகளை எடுத்துள்ளது.

1. சத்துணவு அமைப்பாளர்களுக்கு ரூ.600 முதல் 1100 ஊதிய அடிப்படையில் ஊதியம் 1-1-1996ல் ரூ.760 என்று நிர்ணயிக்கப்படும். இதன்மூலம் தற்போது அவர்கள் பெறும் மொத்த ஊதியம் ரூ.645-லிருந்து ரூ.928ஆக உயரும்.

2. சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையலர் களுக்கு 1-1-1996ல் மதிப்பூதியம் ரூ.450 ஆக நிர்ணயிக்கப் படும். இதன்மூலம் தற்போது அவர்கள் பெறும் மொத்த ஊதியம் ரூ. 280-லிருந்து ரூ.440ஆக உயரும்.

3. மற்ற அரசு ஊழியர்களுக்கு ஊதிய நிலுவையை அளிப்பது பற்றிய முடிவு இவர்களுக்கும் பொருந்தும்.

4. சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையலர் களுக்கும் உதவியாளர்களுக்கும் ஓய்வு பெறும் வயது 55-லிருந்து 58 ஆக உயர்த்தப்படும்.

6. சிறப்பு சேமநல மற்றும் பணிக்கொடை திட்டம் (Special provident Fund & Gratuity Scheme) சத்துணவு ஊழியர்கள் அனைவருக்கும் விரிவுபடுத்தப்படும். இதன்மூலம் அவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.20 என 148 மாதங்களுக்குச் சேமிக்க வேண்டும். அவர்கள் ஓய்வு பெறும்போது அவர்கள் சேமித்தத் தொகை, அதற்கான வட்டியோடு அரசின் பாங்காக ரூ.5000-மும் சேர்த்து வழங்கப்படும்.

இதன் மூலம் இரண்டு இலட்சத்து பதினெட்டாயிரம் பேர் பயன் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அகவிலைப்படி உயர்வு

உரை : 44 **நாள் : 24.4.1998**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் இந்த அறிக்கையை அவைமுன் வைக்கிறேன், தங்கள் அனுமதியோடு. மத்திய அரசு அலுவலர்களுக்கு விலைவாசிப் புள்ளி உயர்வின் அடிப்படையில் 1-1-1998 முதல் அகவிலைப்படியை ஊதியத்தில் 13-ல் இருந்து 16 விழுக்காடு என உயர்த்தி, மத்திய அரசு 13-4-1998 அன்று ஆணை பிறப்பித்துள்ளது. அதனையொட்டி, தமிழக அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்கள் மற்றும் காவலர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் 1-1-1998 முதல் அகவிலைப்படி ஊதியத்தில் 13-ல் இருந்து 16 விழுக்காடு என உயர்த்தி வழங்கப்படும். இதனால் குறைந்தபட்சமாக அகவிலைப்படி உயர்வு ரூ.76-ஆகவும், அதிகபட்சமாக ரூ.657-ஆகவும் இருக்கும். இந்த அகவிலைப்படி உயர்வு, திருத்திய ஊதிய விகிதத்தில் சம்பளம் பெறும் அனைத்து அரசு அலுவலர்களுக்கும், உள்ளாட்சி நிறுவனங்கள், அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் பொருந்தும். மேலும், இதே விகிதத்தில் சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்கள் மற்றும் கிராம உதவியாளர்களுக்கும் இந்த அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும். அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்படுவதைக் கருத்தில் கொண்டு, சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் சமையலாளர் மற்றும் உதவியாளர்களுக்கும், இதர தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் பெறும் அலுவலர்களுக்கும், 1-1-1998 முதல் பின்வருமாறு தற்காலிக உயர்வு (Ad hoc increase) வழங்கப்படும்.

1-1-1996க்குமுன் மாதம் ரூ.150-க்குக் குறைவாக மதிப்பூதியம், தொகுப்பூதியம் அளிக்கப்பட்டவர்களுக்கு மாதம் ரூ.10-; 1-1-1996-க்கு முன் மாதம் ரூ.150-ம், அதற்கு மேலும் மதிப்பூதியம், தொகுப்பூதியம் அளிக்கப்பட்டவர்களுக்கு மாதம் ரூ.20-;

மேற்கூறிய அகவிலைப்படி உயர்வால், மொத்தத்தில் சுமார் 12.42 இலட்சம் அலுவலர்கள் பயன்பெறுவார்கள். மேலும், மாநில அரசு ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர் களுக்கும், மத்திய அரசைப் பின்பற்றி ஒரு அகவிலைப்படித் தவணை 1-1-1998 முதல் வழங்கப்படும் அதன்படி, ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர்களது அகவிலைப்படி, 13-லிருந்து 16 விழுக்காடு என உயர்த்தி பெறுவோர்களது அகவிலைப்படி, 13-லிருந்து 16 விழுக்காடு என உயர்த்தி வழங்கப்படும். இதனால், குறைந்தபட்சம் ரூ.38-ம், அதிகபட்சம் ரூ.290-ம் பணப்பயன் அடைவார்கள். மேற்குறிப்பிட்ட திருத்திய அகவிலைப்படி, தமிழ்நாடு மாநில ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் மாதம் ரூ.150 கருணைத் தொகை பெறுபவர்கள் உட்பட எல்லோருக்கும் வழங்கப்படும். இதனால், ஏறத்தாழ 2.86 இலட்சம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் பயனடைவார்கள். மேற்குறிப்பிட்ட அகவிலைப்படி உயர்வு, 1-1-1998 முதல் ரொக்கமாக வழங்கப்படும். இந்தச் சலுகையினால், அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்படக்கூடிய செலவினம் ரூ.200.50 கோடி ஆகும். இந்தத் திருத்திய அகவிலைப்படி உயர்வினால், வழங்க வுள்ள நிலுவைத்தொகையும் சேர்த்து- (Arrears)- அரசுக்கு நடப்பாண்டில் 233.92 கோடி ரூபாய் மொத்தச் செலவினம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநில அரசுகளைக் கலைக்கும் அதிகாரம்

உரை : 45 நாள் : 27.4.1998

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.சுப்பராயன் அவர்கள் கூறிய இந்தச் செய்திகளை நானும் பத்திரிகையிலே படித்தேன். தமிழ், ஆங்கிலம் முதலிய எல்லா ஏடுகளிலும் வெளிவந்திருக்கிறது. திரு.செகாவத், தன்னுடைய கருத்தாகச் சொல்லியிருப்பது: 'மாநில அரசுகளைக் கலைக்கும் அதிகாரத்தை, மத்திய அரசுக்கு வழங்கும் அரசியல் சட்டத்தின் 356ஆவது பிரிவை நீக்குவதில் எனக்கு விருப்பம் இல்லை; அதை நீக்கக் கூடாது; தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு, தி.மு.க. அரசு தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறது; தமிழக அரசுக்கு எழுந்துள்ள நிர்பந்தம் காரணமாக தி.மு.க. அரசுக்கு எதிராக ஜெயலலிதா போர்க்கொடி தூக்கியுள்ளார்'' என்றெல்லாம் கூறி விட்டு, ''தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டும்.'' என்றும் அவர் முத்தாய்ப்பாகச் சொல்லியிருக்கிறார். அரசியல் சட்டப் பிரிவு 356-ஐ நீக்குவதா அல்லது நீக்க வேண்டாமா என்ற அந்தக் கருத்தைச் சொல்வதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. ஆனால் அவர், தமிழகத்திலே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைப்பதற்கு உண்மைக்கு மாறான காரணங்களா அல்லது உண்மையான காரணங்களா என்பதுகூட வேறு விவாதம். ஆனால், ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சர், இன்னொரு மாநிலத்தைப் பற்றி இப்படிப்பட்ட ஒரு கடுமையான கூற்றினை வெளியிடுவது பொருத்தம் உடையதா என்பதை நாம் யோசிக்க வேண்டும். இது கண்டிக்கத்தக்கது என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.சுப்பராயன் அவர்கள் கூறிய கூற்றில் எந்தத் தவறும் இல்லை என்றே நான் கருதுகிறேன். இதில் என்ன ஆச்சரியம் என்றால், இதே இராஜஸ்தான் முதலமைச்சர் செகாவத்

அவர்கள்- ஐக்கிய முன்னணி ஆட்சி நடந்தபோது, இன்டர் ஸ்டேட் கவுன்சில் கூட்டங்கள் நடைபெறு வது வாடிக்கை; இன்டர் ஸ்டேட் கவுன்சில் என்பது அரசியல் சட்டத்தில் இடம்பெற்றுள்ள ஒன்று. அது பல காலமாகக் கூட்டப் படாமல் இருந்து, திரு.வி.பி.சிங் அவர்கள்தான் முதன்முதலாக அந்தக் கூட்டத்தைக் கூட்டினார். அந்த கூட்டமும் அடிக்கடி நடைபெறும். அந்த 'ஸ்டாண்டிங் கமிட்டியி'லே- திரு.செகாவத், இராஜஸ்தான் மாநிலத்தின் முதலமைச்சர் அவர்கள்- அரசியல் சட்டத்தின் 356ஆவது பிரிவை அறவே ஒழிக்க வேண்டும் என்று மிகக் காரசாரமாகக் கருத்தைத் தெரிவித்து, 356-ஐ நீக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். ஆந்திர முதலமைச்சர், அஸ்ஸாம் முதலமைச்சர் ஆகியவர்களோடு, அந்தக் கமிட்டியிலே இடம்பெற்றிருந்த திரு.முரசொலி மாறன் ஆகியவர்கள் எல்லாம் அந்தக் கருத்தைக் கூறியிருக்கிறார்கள். அந்தக் கமிட்டிக்கு திரு.இந்திரஜித் குப்தா அவர்கள்தான் தலைவராக இருந்தார்.

இவ்வளவு தூரம் அது கண்டிக்கத்தக்கது' என்று Inter& State Council Standing Committee-யிடம் வாதிட்ட திரு.செகாவத் அவர்களுக்குத் திடீரென்று- அன்றைக்கு 356-ஐ விலக்க வேண்டுமென்று சொன்னவருக்கு-356-ன் மீது காதல் ஏற்பட்டிருப்பது பற்றி நமக்குக் கவலையில்லை. 356 என்கின்ற அந்தப் பிரிவைப் பயன்படுத்தி திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைக்க வேண்டும் என்ற சொன்னதற்கு உள்ள காரணங்களால்தான் வேடிக்கையாக இருக்கிறேன். ஏனென்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், அது பா.ஜ.க. அரசாக இருந்தாலும்கூட 356-ஐப் பயன்படுத்தி மாநில அரசு கலைக்கப்படக்கூடாது என்பதிலே கடந்த காலத்திலே மிக உறுதியாக இருந்திருக்கிறது. உத்திரப்பிரதேச அரசு பாபர் மசூதி இடிக்கப்பட்ட நேரத்திலே கலைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து இராஜஸ்தான்- இதே இராஜஸ்தான் அரசு, மத்தியப்பிரதேச அரசு, இமாச்சலப்பிரதேச' அரசு ஆகிய மூன்றும் பா.ஜ.க. அரசுகள், இந்த 3 அரசுகளும் கலைக்கப்பட்டபோது தி.மு.க. அதைக்

கண்டித்தது. உத்திரப்பிரதேசத்திலே ஏற்பட்ட அசாதாரணமான நிலை காரணமாக அதைக் கலைத்தார்கள். அதைத் தொடர்ந்து பா.ஜ.க. வினுடைய 3 மாநில அரசுகளை- இராஜஸ்தானிலே, மத்தியப்பிரதேசத்திலே, இமாச்சலப்பிரதேசத்திலே- கலைத்தது தவறு என்று அப்போதே கண்டித்து நாங்கள் அறிக்கையைக் கழகத்தின் சார்பிலே வெளியிட்டிருக்கிறோம். அது மாத்திரம் அல்ல. அண்மையிலே இந்த ஆட்சி வருவதற்கு முன்பு. ஐக்கிய முன்னணி ஆட்சி நடைபெற்றபோது, உத்திரப்பிரதேச அரசைக் கலைப்பதற்கு ஐக்கிய முன்னணி அரசு முனைந்தபோது அதை திரு.மாறன் போன்றவர்கள் கேபினெட்டிலேயே, அமைச்சரவையிலேயே எதிர்த்தார்கள் என்பதற்காக திரு.முரளி மனோகர் ஜோஷி அவர்கள் மாறனுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள்.

"Dear Shri Maran,

This is to Congratulate you for your firm and bold oppsitionoto the invocation of Artcile 356 for imposing president's Rule in U.P. This will go a long way in establishing proper Centre- State relationship and upholding democratic norms.

With best wishes,

Yours Sincerely,
Murli Manohar Joshi"

என்று திரு.மாறனுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை. எந்த அரசாக இருந்தாலும், கொள்கை வேறுபாடுடைய ஆட்சியாக இருந்தாலும், மாநில ஆட்சிகளை 356-ஐப் பயன்படுத்திக் கலைக்கக் கூடாது என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை.அதை நான் எப்போதும் மாற்றிக்கொள்வதாக இல்லை. ஆனால் பாரதிய ஜனதாக் கட்சிக்காரர்கள் இன்றைக்கு அதை மாற்றிக் கொண்டு, பிரதமர் ஒரு மாதிரிப் பேசுகிறார். அவருடைய அமைச்சரவை யில் இருக்கிற அமைச்சர்கள் ஒரு மாதிரிப் பேசுகிறார்கள். அது போதாது என்று அவருடை மாநில முதமைச்சர்களும் இவ்வாறு

பேசுகிறார்கள். இங்கே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தி.மு.க. அரசு தொடர்ந்து ஆதரவு அளிப்பதாக அவர் சொல்லியிருக் கிறார். இந்த 1½ ஆண்டு காலத்திலே எத்தனை விடுதலைப் புலிகளுடைய ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதெல்லாம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படிக் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளுடைய ஆதரவாளர்கள், விடுதலைப் புலிகளுக்காகக் கள்ளக்கடத்தல் செய்து பொருள் கொண்டுபோன ம.தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த ம.தி.மு.க.-வோடு தோளோடு தோள் நின்று தழுவிக் கொண்டிருக்கிற பா.ஜ.க., இன்றைக்கு தி.மு.க. ஆட்சி விடுதலைப் புலிகளோடு உறவு கொண்டிருக் கிறது, அவர்களை ஆதரிக்கிறது எந்று சொல்வது அப்பட்டமான, உண்மைக்கு மாறான செய்தியாகும். எனவே,ஒரு மாநில முதல மைச்சர் இன்னொரு மாநிலத்தைப் பற்றி இப்படிப் பேசுகிறார் என்பது வருந்தத்தக்கது, கண்டிக்கத்தக்கது. பிரதமருடைய கவனத்திற்கு இந்த அவையில் எழுப்பப்பட்ட இந்தப் பிரச்சினையின் மூலமாக இந்தச் செய்தி செல்லும் என்று நான் நம்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த அதிகாரிகள்

உரை : 46 நாள் : 29.4.1998

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சரவை என்பது ஒரு கூட்டுப் பொறுப்பு. எந்த அமைச்சரைச் சொன்னாலும், அதற்கு முதலமைச்சரும் கட்டுப்பட்டவர்தான். அமைச்சர் யாராவது அப்படிப்பட்ட தவறு செய்திருந்தால் அதிக நடவடிக்கை எடுக்க முதலமைச்சருக்கு உரிமை உண்டு. அதைக் குறிப்பிட்டு என்னிடத்திலே டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் குறிப் பிடலாம். அப்படி யாரும்- எத்தனையோ அமைச்சரவைக் கூட்டங்கள் நடைபெறுகின்றன- யாரும் இந்த மக்களுக்கு விரோதமாக, அதாவது குறிப்பாகச் சுட்டிக்காட்டுவதற்காகச் சொல்கிறேன், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு விரோதமாக எந்த அமைச்சரும், எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பை, கிருஷ்ணசாமி பேசுவார் என்று எதிர்பார்த்தே, நான் வைத்திருக்கின்ற குறிப்பை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்த ஆட்சியிலேதான், 100 ஆண்டு காலமாக உயர்நீதி மன்றத்திற்கு தாழ்த்தப்பட்டவர், அங்கே நீதிபதியாக வராமல் இருந்த நிலையை மாற்றி, கழக ஆட்சியிலேதான், வரதராஜன் என்பவர் உயர்நீதிமன்றத்திற்கு நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அவர் பிறகு, உச்ச நீதிமன்ற நீதிபதியாகவும் வர முடிந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டி.ஜி.பி.யாக துரை அவர்கள், இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர், தி.மு.க. ஆட்சியிலேதான் வந்தார். அதைப் பாராட்டி

நம்முடைய அக்காள் பொன்னம்மாள்கூடப் பலமுறை பேசியிருக்கிறார்கள். அவர் ஒருவர் வந்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், எதிர்க்கட்சியினர் இப்படியெல்லாம் பேசுகிறார்களே என்றுகூட இங்கே அவர்கள் குமுறிப் பல நேரங்களிலே பேசியிருக்கின்றார்கள்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதி தணிகாசலம் அவர்கள், தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்க வழிவகை செய்ததும் இந்த அரசுதான் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1970ஆம் ஆண்டு, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவராக பாலசுந்தரம் அவர்கள் நியமிக்கப்பட்டார். அவரும் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். அதுவும் கழக அரசிலேதான்.

1996-ல் டி.முருகராஜ், சர்வீஸ் கமிஷன் தலைவராக நியமிக்கப்பட்டார். இடையில் யாரும் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அந்தப் பதவியிலே நியமிக்கப்படவில்லை. அவர்தான் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இப்பொழுது பாரதிதாசன் பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தர் பதவியில் நியமிக்கப்பட்டிருக்கிற ஜெகதீசன் யார் என்பது கிருஷ்ணசாமி அவர்களுக்குத் தெரியும். அவரும் நம்முடைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான்.

நான் தற்போது முதல்வர் பொறுப்பை ஏற்றதும், என்னுடைய செயலாளராக நியமித்துக் கொண்டதும் அதே முருகராஜைத்தான்.

முருகராஜ் சர்வீஸ் கமிஷன் செயலராகச் சென்றவுடன் என்னுடைய - முதல்வருடைய முதன்மைச் செயலராக நிய மிக்கப்பட்டிருப்பவர் - இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருப்பவர் விஸ்வநாதன், ஐ.ஏ.எஸ். அவரும் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான்.

ஜெயலலிதா அவர்களுடைய ஆட்சியிலே 3 பேர் செயலாளர்களாக நியமிக்கப்பட்டார்கள் இந்த சமுதாயத்திலே.

ஆனால் அவர்களெல்லாம் 2 மாதங்கள், 3 மாதங்கள்கூட நீடிக்கவில்லை.

அதிலே ஒருவர் தங்கராஜ், ஐ.ஏ.எஸ். அவர் இந்த ஆட்சியிலேதான் வணிகவரி சீர்திருத்த உயர்மட்டக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இதே தங்கராஜ், ஐ.ஏ.எஸ். அவர்கள் பின்னர் தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தின் உறுப்பினராகவும் இந்த ஆட்சியிலே நியமிக்கப்பட்டு இருக்கின்றார்.

தற்போது தமிழக அரசின் சிறப்புத் தலைமைச் செயலாளர் - இப்பொழுது இருக்கிற தலைமைச் செயலாளர் - சீஃப் செகரட்டரி - இன்னும் இரண்டொரு மாதங்களில் ஓய்வு பெறப் போகிறார். எனவே, இப்பொழுதே பயிற்சி பெறுவதற்காக, அடுத்த தலைமைச் செயலாளர் இவர்தான் என்று நிர்ணயித்து ஏ.பி. முத்துசாமி, ஐ.ஏ.எஸ்., அவர்கள் இன்றைக்கு அந்தப் பணியிலே நியமிக்கப்பட்டிருக்கிறார். அவரும் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான்.

சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கின்ற மணிவண்ணன், ஐ.ஏ.எஸ். அவர்கள், அவர்தான் நியமிக்கப்பட வேண்டுமென்று நான் மத்தியிலே உள்ள அரசோடு - அன்றிருந்த அரசோடு வாதாடி, போராடி, அவர்தான் - மணிவண்ணன்தான் இன்றைக்கு அந்தப் பொறுப்பிலே நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி சாமிதுரை அவர்களை மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினராக நியமித்தது இந்த அரசுதான்.

டாக்டர் திருமதி சுசீலாராஜ் என்ற டாக்டரையும் அந்தக் குழுவிலே உறுப்பினராக நியமித்திருப்பதும் இந்த அரசுதான்.

இன்றைக்கிருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய எண்ணிக்கையை எடுத்துக் கொண்டாலும்கூட, திருமதி கண்ணகி, திருவண்ணாமலை மாவட்டம்; திரு. சோனை, நீலகிரி மாவட்டம்; திரு. காட்டாரியா, நாமக்கல் மாவட்டம்; திரு.உமாசங்கர்,

கன்னியாகுமரி மாவட்டம்; சிவதாஸ் மீனா, நாகப்பட்டினம்; இப்பொழுதுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களில் 5 பேர் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் இருக்கிறார்கள்.

சென்னை நகரத்தினுடைய காவல் துறை கமிஷனர் காளிமுத்து; மாநகராட்சி ஆணையர் கோலப்பன் எல்லோரும் நம்மவர்கள்தான் என்பதை கிருஷ்ணசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

நெசவாளர்கள் பிரச்சினை

உரை : 47 **நாள் : 30.04.1998**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் இந்த அறிக்கையை அவையில் வைக்கிறேன்.

1998-99ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை 27-3-1998 அன்று சட்டப் பேரவையில் வைத்தபோது நான் அறிவித்ததற்கிணங்க, கைத்தறித் துறைச் செயலாளரை அமைப்பாளராகவும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பி.என். சுப்பிரமணி, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. நா. பெரியசாமி, திரு. இரா. தாமரைக்கனி, திரு. கு.ர.கோ. தனபாலன், நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் திரு. ஜெ. சுத்தானந்தன், திரு. ச.சி. பெருமாள் மற்றும் நிதித் துறைக் கூடுதல் செயலாளர் ஆகியோர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

இக்குழு, கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்ற காரணத்தால் உருவாகியுள்ள பிரச்சினைகள், நெசவாளர்களுக்கு எளிதாக நியாய விலையில் நூல் கிடைக்க வழிவகைகள், நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்புக் கிடைப்பதற்கும், தேவையான கடன் வசதி எளிதில் பெறுவதற்குமான செயல்பாடுகள் போன்றவற்றை ஆராய்ந்து மே மாதம் முதல் தேதிக்குள் அரசுக்கு அறிக்கையினை வழங்கிடக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதற்கிணங்க, இக்குழு சென்னை மற்றும் நெசவாளர்கள் அதிகமாக உள்ள இடங்களுக்கு நேரில் சென்று, அவர்களின்

குறைகளைக் கேட்டறிந்தது. மேலும், இக்குழு கூட்டுறவு சாராத நெசவாளர் சங்க அமைப்புகள், நபார்டு மற்றும் வங்கி அலுவலர்கள், நூற்பாலைகள், தொடர்புடைய துறை அலுவலர்கள் ஆகியோர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து தனது பரிந்துரைகளைக் கொண்ட அறிக்கையினை 27-4-1998 அன்று என்னிடம் அளித்தது.

இக்குழுவின் பரிந்துரைகள் நேற்று 29-4-1998 அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

(1) கோ-ஆப்டெக்ஸ் மற்றும் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் 31-3-1998 வரை தேங்கியுள்ள கைத்தறித் துணிகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் 20 சதவிகிதத் தள்ளுபடியுடன் மேலும் 10 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடி மே மாதம் முதல் தேதியிலிருந்து (மேசையைத் தட்டும் ஒலி) மூன்று மாதங்களுக்கு அளிக்கப்படும்.

(2) கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய 1994-95 மற்றும் 1995-96 ஆகிய ஆண்டுகளுக்கான பழைய பாக்கி, தள்ளுபடி மானியமான ரூ. 43.25 கோடி மே மாத முடிவுக்குள் அளிக்கப்பட்டுவிடும்.

(3) கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து ரூ. 50 கோடி மதிப்பிற்குக் கொள்முதல் செய்திட, உற்பத்தித் திட்டத்தினை 'கோ-ஆப்டெக்ஸ்' உடனடியாக அந்தச் சங்கங்களுக்கு வழங்கிடும்.

(4) கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து. கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்திட, 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனத்திற்குத் தேவையான நிதியுதவி, அவ்வப்போது அளிக்கப்படும்.

(5) கூட்டுறவுச் சங்கங்களும், 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனமும் செய்திடும் மொத்த விற்பனைக்கும் 20 சதவிகிதம் தள்ளுபடி அளிக்கப்படும்.

(6) தள்ளுபடி மானிய பாக்கிகள், ஒவ்வொரு காலாண்டும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படும்.

ஏற்கெனவே, சரியாக அளிக்கப்படவில்லை. எனவேதான், தள்ளுபடி மானிய பாக்கிகள் ஒவ்வொரு காலாண்டும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படும்.

(7) கைத்தறித் துணிகள் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில், அரசுத் துறைகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள், தங்களுக்குத் தேவையான துணிகளை, பிரதமச் சங்கங்கள் மற்றும் 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனத்திடமிருந்து நேரடியாக வாங்கிக்கொள்ள ஆணை பிறப்பிக்கப்படும்.

(8) 'கோ-ஆப்டெக்ஸ்' பிரதமச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்யும்பொழுது, துணியின் முழு மதிப்பையும் சங்கங்களுக்கு அளித்து, அவற்றின் விற்பனையின்போது, நுகர்வோருக்கு அரசுத் தள்ளுபடியினை அளித்து, அதன் பின்னர் அத்தள்ளுபடித் தொகையினை, அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளும்.

(9) உண்மையான கைத்தறி நெசவாளர்கள்தான் அரசின் திட்டங்களால் பயன்களைப் பெறுகிறார்கள் என்பதை உறுதி செய்து கொள்ளும் வகையில், சங்கங்கள் தங்களது நெசவாள உறுப்பினர் அனைவருக்கும் அடையாள அட்டைகளை வழங்கும்.

(10) மத்திய அரசு முன்பு அமல்படுத்தி வந்த, சிட்டா நூல் மானியத் திட்டத்தினை மீண்டும் செயல்படுத்திட, மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்தும்.

(11) 'கோ-ஆப்டெக்ஸ்' மற்றும் கூட்டுறவு நூற்பாலைகள், பிரதம நெசவாளர் சங்கங்களுக்குக் கடனிலும் நூல் வழங்கும்.

(12) நூல் விலையினை நிர்ணயம் செய்வதற்காக, மாநிலத்தின் பல்வேறு நெசவாளர் மையங்களிலுள்ள நெசவாளர் சங்கப் பிரதிநிதிகள், அலுவலர்கள் ஆகியோரை உறுப்பினர் களாகக் கொண்டு, மாநில அளவில் ஒரு குழு அமைக்கப்படும்.

(13) 'டான்சில்க்' நிறுவனத்திடமிருந்து பட்டுச் சங்கங்கள் கடனில் வாங்கிய பட்டு நூலுக்கான, தவணை தவறிய பாக்கிக்கு விதிக்கப்பட்டுள்ள 2 சதவிகிதத் தண்ட வட்டி, சங்கங்கள்

குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நிலுவையைச் செலுத்தி விட்டால், ரத்துச் செய்யப்படும்.

(14) நடப்பு ஆண்டிற்கு, பிரதமச் சங்கங்களுக்கு மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் 'நபார்டு' வழங்கும் ரொக்கக் கடன், 1997-98ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அளவிற்கு வழங்கிடவும், சங்கங்களுக்கு வரவேண்டிய தள்ளுபடி மானிய முழுத் தொகையினை வங்கிக் கடனுக்கு நிதியாதாரமாக எடுத்துக் கொள்ளவும், சங்கங்களுக்கு அளிக்கப்படும் 3 சதவிகித வட்டி மானியத்தை, முன்பு நடைமுறையில் இருந்ததுபோலவே வங்கிகளே நேரடியாக அரசிடமிருந்து பெற்றுக் கொள்வதை மீண்டும் அமல்படுத்த வேண்டும் என்றும் 'நபார்டு' வங்கியிடம் வலியுறுத்தப்படும்.

(15) நெசவாளர் சங்கங்கள் வங்கிக் கடன் பெறுவது போன்ற பிரச்சினைகளை அவ்வப்போது தீர்த்துக்கொள்ளும் வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நெசவாளர் சங்கங்கள் மற்றும் வங்கிகளின் பிரதிநிதிகள் அடங்கிய மாவட்ட அளவிலான குழு அமைக்கப்படும்.

(16) நெசவாளர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் காப்பீட்டுத் தொகையான ரூ. 25,000/- என்பது ரூ. 35,000/- என உயர்த்தி வழங்கப்படும்.

(17) கூட்டுறவுச் சங்க நெசவாளர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், பணிபுரிவோர் உட்பட - இப்போது பணிபுரிந்தால் இல்லை என்று இருக்கிறது; நெசவுத் தொழில் புரிந்தால் இல்லை என்றிருக்கிறது; அதை மாற்றி, கூட்டுறவுச் சங்க நெசவாளர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், பணிபுரிவோர் உட்பட 60 வயதான உறுப்பினர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் நிபந்தனைகள் தளர்த்தப்படும்.

(18) 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனத்திற்கு ஓர் ஆலோசனைக் குழு அமைக்கப்படும்.

(19) கைத்தறி ஒதுக்கீட்டுச் சட்டம் முறையாக அமலாக்கம் செய்யப்படும்.

(20) தனியாரிடம் உள்ள நெசவாளர்களின் நலனைக் காத்திட, கைத்தறித் தொழிலாளர்கள் நலச் சட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

(21) மாநில அளவில் 1989ஆம் ஆண்டில் இருந்ததைப் போல், கைத்தறி அமைச்சர் தலைமையில், மாநிலக் கைத்தறி ஆலோசனைக் குழு மீண்டும் அமைக்கப்படும்.

(22) கைத்தறித் துணித் தேக்கத்தினால் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினரல்லாத தனியார் நெசவாளர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வேலைவாய்ப்பு இழந்துள்ளார்கள். எனவே, தனியார் துறையில் ஏற்பட்டுள்ள துணித் தேக்கத்தைப் போக்கி, அவர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளித்திட, 'நபார்டு' மறுநிதித் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலமாகக் கடனுதவி வழங்கப்படும்.

(23) தமிழகக் கைத்தறி நெசவாளர்களுக்குத் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குக் கைத்தறி ஏற்றுமதியில் உருவாகியுள்ள சுணக்கமும் ஒரு காரணமாகும். தமிழக அரசு, தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியை அதிகரிக்க சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய அரசை வலியுறுத்தும்.

(24) 'நன்றாக இயங்கி வந்து கடந்த ஆட்சியில் நலிவடைந்த 18 கூட்டுறவு நூற்பாலைகளைப் புனரமைத்திட நபார்டு,' நிதி நிறுவனத்தின் ஆலோசனையுடன் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அவை தொழிலாளர்கள், வங்கிகள் ஆகியோருடைய ஒத்துழைப்புடன் மீண்டும் நன்முறையில் இயங்க முயற்சிகள் எடுக்கப்படும்' என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருந்தேன். அதற்கேற்ப, 16 கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் புனரமைப்புத் திட்டங்கள் உருவாக்கப் பட்டுவிட்டன. மீதமுள்ள இரண்டு கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் புனரமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவு நூற்பாலைகள் இலாபகரமாக இயங்கும் வகையில் இத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதன் மூலம் இந்த நூற்பாலைகளில் நிலுவையில் உள்ள பஞ்சுக் கொள்முதல் பாக்கி மற்றும் இதர நிலுவைகள் மிக விரைவில் தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சேலம் அரசினர் விடுதிப் பிரச்சினை

உரை : 48 நாள்: 04.05.1998

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதுபற்றிய விவரத்தை என்னுடைய உரையிலே தெரிவிக்கலாம் என்று இருந்தேன். இப்போது விவாதமாக ஆகிவிட்ட காரணத்தால் அதைப்பற்றி இடையிலேயே சில வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினை குறித்து பத்திரிகைகளிலே செய்தி வெளிவந்தது. ஜெயலலிதா அவர்கள், ஏதோ மத்திய அ.தி.மு.க. அமைச்சர் ஒருவரை தி.மு.க. அரசு அவமானப்படுத்திவிட்டது என்று பத்திரிகைகளில் அறிக்கைகள் விடுத்த உடனேயே, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உடனடியாக அதைப் பற்றிய குறிப்பு அனுப்ப வேண்டும் என்று ஆணையிடப்பட்டு, நேற்று அந்தக் குறிப்புகள் வந்து சேர்ந்திருக்கின்றன.

அந்தக் குறிப்பின்படி 1.5.1998 அன்று மாலை 6.40 மணி அளவில் 'வெஸ்ட்கோஸ்ட்' இரயில் மூலம் சேலம் வந்தடைந்த மத்திய சட்டத்துறை அமைச்சரை, வருவாய்த் துறை அதிகாரிகளும், காவல்துறை அதிகாரிகளும் வரவேற்று, அவருக்கு சேலம் உருக்காலை விருந்தினர் விடுதியிலே தங்குமிடவசதி செய்து தரப்பட்டுள்ளதையும், அரசு சுற்றுலா மாளிகையில் தேவைப்படின் இரண்டு அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்கள். அதன்பின், சேலம் உருக்காலை விருந்தினர் விடுதியை நோக்கிச் சென்ற மத்திய அமைச்சர், நடுவழியில் திரும்பி 'ஓட்டல் துவாரகா' என்ற தனியார் தங்கும் விடுதியிலேயே தங்கிவிட்டார். உடனடியாக அவரைச் சந்தித்த சேலம் வட்டாட்சியர், அவருக்கு சேலம் சுற்றுலா மாளிகையில் இடவசதி உள்ளதை எடுத்துக்கூறி, அங்கு வந்து தங்குமாறு

அழைத்தும், அந்தக் கோரிக்கையை, அமைச்சர் செவிமடுக்க வில்லை. பின்னர், 1.5.1998 அன்று இரவு 7½ மணி அளவில் 'ஓட்டல் துவாரகா'வில் மத்திய அமைச்சரை சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சந்தித்து 10 நிமிடங்கள் உரையாடி யிருக்கிறார். அப்போது மாவட்ட ஆட்சியரிடம் மத்திய அமைச்சர் தனது தங்குமிட வசதி குறித்தோ அல்லது போக்கு வரத்து வசதி குறித்தோ எந்தவிதமான குறைகளையும் கூற வில்லை.

அன்று, அதாவது 1.5.1998 இரவு. சேலம் பட்டக்கோவில் என்ற இடத்தில் மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய மைய சட்டத் துறை அமைச்சர் தனக்கு மாவட்ட நிர்வாகம் தங்குமிட வசதி செய்து தரவில்லை என்றும், தனது மார்ச் மாத வருகையின் போது போக்குவரத்துக்கு தனியார் சீருந்து வசதி செய்து தரப்பட்டது என்றும் குறை கூறியுள்ளார். சேலம் சுற்றுலா மாளிகை, சேலம் உருக்காலை விருந்தினர் விடுதி, இவற்றிற்கும் சேலம் இரயில் வண்டி நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 8 கிலோமீட்டர் மட்டுமே. சேலம் உருக்காலை விடுதியிலே மிக முக்கிய விருந்தினர்கள் தங்கும் அளவில் நன்கு வசதிகள் உள்ள அறைகள் உண்டு. அங்கு முன்னாள் மத்திய அமைச்சர்கள், மற்றும் ஆளுநர் ஆகியோர் தங்கிச் சென்றுள்ளார்கள். இவ்வளவு சிறப்பான வசதிகள் செய்து தரப்பட்டிருந்தும், தனக்கு சரியான தங்குமிட வசதியோ அல்லது சீருந்து, அதாவது கார் வசதியோ செய்து தரப்படவில்லை என்று மத்திய அமைச்சர் கூறியுள்ளது உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியாகும்.

அதுமாத்திரமல்ல, சேலத்திலே அவர் குறிப்பிடுகிற விருந்தினர் விடுதியில் ஏற்கெனவே உள்ள இந்தப் பழைய கட்டடத்தைவிட, சிறப்பான கட்டடங்கள் இரண்டு அறைகள் கொண்ட கட்டடங்கள் இருக்கின்றன.

அதிலே மத்திய அமைச்சர்கள் எல்லாம் வந்து தங்கியிருக் கிறார்கள். அங்கே இரண்டு அறைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று அவருக்குக் கூறப்பட்டிருக்கிறது. இருந்தும்கூட நான் அங்கே செல்லவில்லை என்று கூறிவிட்டு, அவர் அங்கேயிருந்து புறப்பட்டுச் சென்றிருக்கின்றார். செல்லும் வழியில் திரும்ப வந்து, துவாரகா ஓட்டலில் அவர் அறை எடுத்து அங்கே தங்கி

விட்டார். அவருக்காக அந்த இடம் ஏற்பாடு செய்யப்படா விட்டாலும் அதற்கு மாற்று இடமாக ஏற்பாடு செய்யப்பட்ட இரும்பு ஆலைக்கு அருகிலுள்ள அந்த விருந்தினர் மாளிகை மிகவும் சிறப்புடையது. அதிலே ஆளுநர் அவர்கள்- கவர்னர் அவர்கள்- தங்கியிருக்கின்றார்கள்; ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் அங்கே தங்கி இருக்கின்றார்கள்; மத்திய அமைச்சர்கள் திரு. டி.ஆர். பாலு போன்றவர்கள், திரு. டி.டி. வெங்கட்ராமன் போன்றவர்கள், என்.வி.என்.சோமு போன்றவர்கள் எல்லாம் அங்கே தங்கியிருக்கின்றார்கள். எனவே ஏதோ புறக்கணிக்கப்பட்டவர், தங்க இடமில்லை என்ற அளவில் இந்தக் காரியம் அங்கே நடைபெறவில்லை.

அங்கே போய் மே தினத்தில் அவர்கள் பேசும்போது ஏதோ அரசியல் எல்லாம் பேசியிருக்கிறார்கள். என்னென்ன அரசியல் பேசினார்கள் என்பதெல்லாம் தெரியும். இங்கே மாவட்ட நிர்வாகத்திலுள்ள குறையை மாத்திரம் சொல்லுகிற நண்பர்- அவர் ஒரு மத்திய அமைச்சர்- ஒரு மாநிலத்திற்கு வரும்போது என்னென்ன பேசுவது என்கின்ற அந்த அளவு கோலையும் தெரிந்திருக்க வேண்டும். அவர் சொல்லியிருக் கிறார், திரு. ப. சிதம்பரம் ஏற்கெனவே 200 கோடி ரூபாய், ரிலையன்சுக்கு தவறான முறையிலே அள்ளிக் கொடுத்து விட்டார் என்றும், அதிலே முதலமைச்சர் அவர்களுக்கும் கொடுத்துவிட்டார் என்றெல்லாம் சொல்லி இருக்கிறார். இவைகள் எல்லாம் தேவைதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எவ்வளவு அவதூறானவை; எவ்வளவு உண்மைக்கு மாறானவை என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தெரியும், நமக்குப் பேசத் தெரியும். எத்தனை பொறியியல் கல்லூரிகள் அந்த அமைச்சருடைய பெயரில் தமிழ்நாட்டில் இருக்கின்றன என்றும், அங்கெல்லாம் என்னென்ன மோசடிகள் நடைபெற்றன என்பதும் எங்களுக்கும் தெரியும். நான் லாவணி பாட விரும்பவில்லை என்பதை மாத்திரம் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இலவச மின்சாரம்

உரை : 49 நாள்: 06.05.1998

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் திரு. ஆலடி அருணா அவர்கள் 1996ஆம் ஆண்டு தில்லியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு இலவச மின்சாரத்தை இரத்து செய்ய சம்மதம் தெரிவித்தார் என்று மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் சொன்னதாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். இதைப்பற்றி சில விஷயங்களை நான் குறிப்பிட விரும்பு கிறேன். பொதுவாக இதைப்பற்றி விளக்கமாக நம்முடைய மின்சாரத்துறை அமைச்சர், பிறகு கருத்துக்களைச் சொல்ல இருக்கிறார். இடையில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்பு கின்றேன்.

திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் இன்னொன் றையும் கூறியிருக்கிறார். ஏதோ இலவச மின்சாரம் பறிபோகிறது என்று திராவிட முன்னேற்றக் கழக அரசு பிரச்சாரம் செய்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். இது அவருடைய நிலைக்கு உகந்ததல்ல. நான் அவரிடத்திலே வைத்திருக்கின்ற மரியாதைக்கும், மதிப்புக்கும் இது ஏற்றதல்ல. இந்த அவையிலே இருக்கிற எல்லோருக்கும் தெரியும். நாட்டுக்குத் தெரியும். செய்தியாளர்களுக்கும் தெரியும். பத்திரிகைக்காரர்களுக்கும் தெரியும். இந்தச் சட்டத்தைப்பற்றிய இந்தப் பிரச்சினை பத்திரிகைகளிலே வெளி வந்தவுடன் அதைப் படித்துணர்ந்த நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இந்த அவையிலே இருக்கின்ற பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து, அதிலே அவர்கள் உரையாற்றும்போது, இலவச மின்சாரம் இரத்து செய்யப்படக்கூடிய அபாயம் வந்திருக்கிறது என்று

குறிப்பிட்டார்கள். இதற்கு முதலமைச்சரும் ஒத்துக் கொள்கிறாரா என்று அவர்கள் என்னைப் பார்த்துக் கேட்டபோது, இலவச மின்சாரம் இரத்துச் செய்யப்படுவதற்கு நான் இன்றல்ல, ஏற்கெனவே மறுப்பைத் தெரிவித்திருக்கிறேன். ஐக்கிய முன்னணி அரசு நடைபெறுகின்றபொழுதே மறுப்புத் தெரிவித்திருக்கிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறேன், அவ்வளவுதான். நாங்களாக எடுத்துப்போட்டுக் கொண்டு, இலவச மின்சாரத்தை இரத்து செய்யப் போகிறார் மத்திய அமைச்சர், திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் என்று யாரும் பிரச்சாரம் செய்யவில்லை.

இங்கே பிரச்சினை எழுப்பப்பட்டது. அக்கறை உள்ளவர்கள், ஆர்வம் உள்ளவர்கள், எதிர்க்கட்சியினுடைய கடமை என்ன என்பதை உணர்ந்தவர்கள், இலக்கணம் என்ன என்பதை தெரிந்தவர்கள் தங்களுடைய கடமையை அன்றைக்கு ஆற்றினார்கள். பொறுப்போடு இருக்கின்ற ஓர் ஆளும் கட்சி அதற்குரிய பதிலை அன்றைக்குச் சொன்னது விவசாயிகளுக்கு எந்தவிதத்திலும் வேதனையை ஏற்படுத்த மாட்டோம், இலவச மின்சாரம் இரத்துச் செய்யப்படாமல் மாநில அரசு நடந்து கொள்ளும் என்று நான் அன்றைக்குக் குறிப்பிட்டிருக்கிறேன்.

அடுத்து, இப்போது நம்முடைய திரு. தாமரைக்கனி சொன்னால்கூடப் பரவாயில்லை. திரு. இரா. தாமரைக்கனி எத்தனையோ வேடிக்கையான விஷயமெல்லாம் பேசுவார். ஆனால் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம், ஆலடி அருணா, சட்ட அமைச்சர், இந்த இலவச மின்சாரத்தை இரத்து செய்வதை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்ற ஒரு தவறான, உண்மைக்கு மாறான செய்தியைக் குறிப்பிட்டிருக்கின்றார். என் கையில் இருப்பது 'தினத்தந்தி' பத்திரிகை, 6.12.1996. திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் குறிப்பிடுகிற அந்த மாநாட்டையொட்டி வெளிவந்த அந்த 'தினத்தந்தி' பத்திரிகை. 'தினத்தந்தி' மாத்திர மல்ல. என்னிடத்திலே ஆங்கிலப் பத்திரிகையினுடைய செய்திக்குறிப்பும் இருக்கிறது. 6.12.1996இல் 'தினத்தந்தி'யிலே தலைப்பு - 'விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை இரத்து செய்ய மாட்டோம். டெல்லி மாநாட்டில் ஆலடி அருணா அறிவிப்பு. இதற்குப் பிறகும் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம்

திரு. தாமரைக்கனி பாணியிலே பேசினால், அது முறையா என்பதைப் பெரிய இடத்திலே இருக்கின்ற, பெரிய வீட்டுப் பிள்ளையான மத்திய அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம்தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்தக் கூட்டத்தில், டெல்லியில் நடைபெற்ற அந்த மாநாட்டில் நான் சென்று கலந்துகொள்ள முடியவில்லை. அன்றுதான் நானும், மின்சாரத் துறை அமைச்சரும் சென்னா ரெட்டி அவர்கள் காலமாகிவிட்டதைத் தொடர்ந்து ஐதராபாத் சென்றுவிட்ட காரணத்தால், அன்றைக்குச் சட்ட அமைச்சர் கலந்து கொண்டார். அதிலே பேசும்போது, சட்ட அமைச்சர் சொல்லிய விஷயங்கள் அப்படியே பத்திரிகையில் வந்திருக்கின்றன. 'நிகழ்ச்சி நிரலில் உள்ள பல பிரச்சினைகளில் எங்களுக்கு உடன்பாடு உள்ளது. உதாரணத்திற்கு மின் திட்டங்களைச் சீர்படுத்துதல், நவீனப்படுத்துதல், கணிசமான அளவுக்கு மின் இழப்புகளைத் தவிர்த்தல், மின் உற்பத்திக்கு ஊக்கம் அளித்தல் போன்றவைகளில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை.

ஆனால் சில பிரச்சினைகளில் எங்களுக்கு மாறுபாடு உண்டு. ஒன்று, தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் விவசாயி களுக்கு இலவச மின்சாரம் கொடுப்பதை இரத்து செய்ய முடியாது. விவசாயப் பம்பு செட்டுக்குக் கட்டணம் விதிப்பதை எங்கள் மக்கள் எதிர்க்கிறார்கள். 1972ஆம் ஆண்டு விவசாய பம்பு செட்டுக்குக் கட்டணம் யூனிட்டுக்கு 11 காசு என்று இருந் ததை ஒரு காசு அதிகமாக உயர்த்தி, 12 காசாக ஆக்கியபோது, அந்த ஒரு காசு உயர்த்தியதைக்கூட விவசாயிகள் ஏற்கவில்லை, எதிர்த்தார்கள். போராடினார்கள். அதற்குப் பின்னர் எல்லா விவசாய பம்புசெட்டுகளுக்கும் இலவச மின்சாரம் அளிக்கும் திட்டம் அமலுக்கு வந்தது. இலவச மின்சாரம் அளிப்பதால் உணவு உற்பத்தி அதிகரித்தது. இலவச மின்சாரம் அளிப்பதைத் திரும்பப் பெற்றால் உணவு உற்பத்தியும் பாதிக்கும், சட்டம்-ஒழுங்கிற்குக் குந்தகம் ஏற்படும். எனவே, விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்ற கொள்கையை ஏற்க இயலாது. அதுமாத்திரம் அல்ல, அவருடைய பேச்சின் முடிவில், 'இந்த மாநாட்டில் நான் எதை

வற்புறுத்த விரும்புகிறேன் என்றால், இதுபோன்ற பிரச்சினைகளில் மாநில அரசுகளே சூழ்நிலைக்கேற்ப முடிவுகளை மேற்கொள்ள அனுமதியுங்கள், இந்தப் பிரச்சினைகளில் மத்திய அரசின் அரிய ஆலோசனைகளை வரவேற்கிறோம், ஆலோசனைகளை வழங்குங்கள், ஆணையிடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்' என்று ஆலடி அருணா பேசியிருக்கிறார். அதுதான் தி.மு.க.-வின் நிலை, தி.மு.க. அரசின் நிலை அன்றைக்கிருந்த அரசின் நிலை அதுதான், இன்றைக்கு இருக்கும் அரசின் நிலை இதுதான். மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு ஆலோசனைகளை வழங்கலாம், ஆனால் ஆணையிடாதீர்கள் என்பதுதான். மாநில சுயாட்சியினுடைய தத்துவமே அதிலேதான் அடங்கியிருக்கிறது. அந்தத் தத்துவத்தினுடைய தத்துவமே அதிலேதான் அடங்கியிருக்கிறது. அந்தத் தத்துவத்தினுடைய அடிப்படையிலேதான் சட்ட அமைச்சர் ஆலடி அருணா அவர்கள் அன்றைக்குப் பேசினார்கள். அதே செய்தி 6-12-1996 'இந்து' பத்திரிகையிலும் வெளியாகியிருக்கிறது.

அதிலே கூட, 'It opposed the levy of any charge for the supply of power to the farm sector. The State Government was not in a position to withdraw the policy of free power supply to farmers. Because of the free power supply, food production had increased. Withdrawal of the concession would only create a law and order problem and lead to decline in food production. So, we are unable to endorse the policy of fixing tariff for the power consume by the farmers.'

அதிலே இறுதியாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'In all these items, we welcome your advisory opinions and not mandatory directions, he said.'

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' 6-12-1996 அதிலேயும் அருணா பேச்சு வந்திருக்கிறது.

'The Tamil Nadu Government has stated that it is not in a position to withdraw the policy of free power supply to

pumpsets of farmers and disagreed on the policy of fixing tariff for the power consumed by the farmers.

Law Minister Aladi Aruna deliberating at the chief Ministers conference on power held on December 3, said on Thursday the Government and the people were against levying any charge for the supply of power to the pumpsets of farmers.

Because of the free power supply, the State was able to increase its food production. If the concession was withdrawn, it would create only law and order problem and led to decline in food production, he said.'

இவ்வளவுக்குப் பிறகும், திரு. ரங்கராஜன் குமாரமங்கலம், செல்வி ஜெயலலிதா மாதிரியே உண்மைக்கு மாறாகத்தான் பேசுவது என்று ஒரு முடிவு எடுத்துக்கொண்டு பத்திரிகைகளுக்குச் செய்திகள் அறிவிக்கிறார் என்றால். உள்ளபடியே வருத்தப்படுகின்றேன், மிகவும் வருத்தப்படுகின்றேன். திரு. ஆலடி அருணா எங்கே ஒத்துக்கொண்டிருக்கிறார்? புழுதிவாரி இறைப்பதைப்போல எது சொன்னாலும், தாங்கள் பெரிய இடத்திலே இருக்கின்ற காரணத்தால், எது சொன்னால் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று எண்ணுகிற ஓர் அவநம்பிக்கையின் காரணமாக இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுகிறார்கள். இதை நான் வன்மையாக மறுக்கிறேன். சட்ட அமைச்சர் திரு. ஆலடி அருணா கழக அரசின் சார்பாக அங்கே கலந்து கொண்ட அந்தக் கூட்டத்தில் இலவச மின்சாரம் இரத்து செய்வதைக் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளவில்லை; இரத்து செய்தால் என்னென்ன ஏற்படும், அதனுடைய விளைவுகள் என்னென்ன என்பதையும் எடுத்துரைத்திருக்கிறார். இத்தனைக்கும் ஆதாரங்களை நான் காட்டியிருக்கிறேன். ஆதாரம் இல்லாமல் பேசுவார்கள்; எதையாவது பேசுவார்கள். சிக்கிக் கொண்டு விட்டு, நேற்றைக்கு சிக்கிக் கொண்ட பிறகு, திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் கடிதம் எழுதுகிறார். நான் கேட்கிறேன். இவ்வளவு பெரிய சபையிலே நாம் பேசியிருக்கிறோம்.

முதலமைச்சர் பேசி இருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் பேசி இருக்கிறார், மற்ற பொறுப்புள்ள கட்சிகளிலேயிருந்து பேசி யிருக்கிறீர்கள். ஏன் அந்தக் கடிதத்தை முதலமைச்சருக்கு எழுதி இருக்கக்கூடாது? வியாக்கியானத்தை அவர்... என்ன செய்வது பாவம்... அங்கே எழுதாவிட்டால், அங்கே ஆட்சி நிலைக்குமா, நிலைக்காதா என்கிற அந்த அச்சம் இருக்கின்ற காரணத்தால், அங்கே எழுதுகின்றார். எங்கே வேண்டு மானாலும் எழுதட்டும். ஆனால் உண்மை நிலை என்ன என்பதை அவையிலே இருக்கின்ற உங்களுக்கும் நாட்டு மக்களுக்கும், குறிப்பாகத் தமிழ்நாட்டு விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் தெரிவிப்பது எங்களுடைய கடமை என்ற காரணத்தால், இந்த விளக்கத்தை அளித்தேன்.

கோவை குண்டு வெடிப்பு

உரை : 50 நாள் : 11.05.1998

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், அவையிலே வைக்கப்பட்டுள்ள வெள்ளை அறிக்கை குறித்துத் தங்களுடைய சீரிய கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக் கின்றார்கள்.

நான் முன்னுரையிலே சில வார்த்தைகளில் குறிப்பிட்டதைப் போல, 23-4-1998 அன்று, கோவை குண்டுவெடிப்பு சம்பந்தமாக இந்த அவையிலே வைக்கப்பட்ட வெள்ளை அறிக்கையில் 16ஆவது பகுதியில், 3ஆவது பாராவில், 'காவல் துறைத் தலைவர் ஒருவர் தலைமையில் மாநிலக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்பு விசாரணைக் குழு திறம்பட புலன் விசாரணை மேற்கொண்டு, இக்குற்றவாளிகளைக் கைது செய்ததுடன், சதியை அம்பலப்படுத்தக்கூடிய மிகப் பயனுள்ள சாட்சியங்களையும் சேகரித்துள்ளது' என்று குறிப்பிட்டிருக் கின்றேன். அவை குறித்த விவரங்களை இந்த அவையின் முன்னால் வைப்பது என்னுடைய கடமை ஆகிறது.

அதற்கு முன்பு ஒரு வேண்டுகோளை நான் விடுக்க விரும்புகிறேன். இந்த அறிக்கை குறித்து உரையாற்றி இருக்கின்ற, தங்களுடைய கருத்துக்களையெல்லாம் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் கட்சிகளின் தலைவர்கள் பலர் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல, இது ஒரு அரசியல் கட்சிக்கு மாத்திரம் உரிய பிரச்சினை அல்ல; இது ஒரு ஆட்சி மாத்திரம் சமாளிக்கக்கூடிய, சந்திக்கக்கூடிய பிரச்சினை அல்ல; இது சட்டப் பிரச்சினை மாத்திரம் அல்ல;

சமுதாயப் பிரச்சினை. சட்டக் கண்ணோட்டத்தோடு மாத்திரம் அணுகாமல், சமுதாயக் கண்ணோட்டத்தோடும் இதனை அணுக வேண்டுமென்ற மற்றக் கட்சித் தலைவர்களுடைய வேண்டுகோளோடு, என்னுடைய வேண்டுகோளையும் நான் இணைத்துக்கொள்கின்றேன்.

சிலர் இதை அரசியலாக்க விரும்பினாலும்கூட, இன்றைக்கு இங்கே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப் பொறுப்பிலே இருந்தாலும் அல்லது எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தாலும், என்றைக்குமே இதுபோன்ற நிகழ்ச்சிகளைப் பொதுவான முறையிலே, அணுகித் தீர்வு காண முன்வந்திருக்கிறதே அல்லாமல், எந்தக் கட்சியினுடைய அரசாக இருந்தாலும், அந்த அரசோடு ஒத்துழைக்க முன்வந்திருக்கிறதே அல்லாமல், அதை வைத்து அந்த ஆளும் கட்சிக்கு தொல்லை கொடுக்கவேண்டுமென்று என்றைக்கும் எண்ணியதும் இல்லை; அப்படிச் செயல்பட்டதும் இல்லை.

இதே மாமன்றத்தில் 1957ஆம் ஆண்டு நடைபெற்ற முதுகுளத்தூர் ரணகளத்தைப் பற்றி அன்றிருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய அமைச்சரவையின் மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் வந்தபோது, அந்தத் தீர்மானத்தை முன் வைத்து எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்கள் எல்லாம் மிகுந்த கடுமையான பதப்பிரயோகங்களைப் பயன்படுத்திப் பேசிய போது, காமராஜருடைய அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்ற, வாக்கெடுப்புக்கு விடுகின்ற அந்தக் காலகட்டத்திலே அறிஞர் அண்ணா அவர்கள் இந்த அவையிலே அமர்ந்திருந்தார்கள். அவர்கள் எழுந்து, ‘‘நாம் இந்த தீர்மானத்தின் மூலமாக, பிரச்சினைகளை விவாதிப்பதற்கு ஒரு வாய்ப்பாக இதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமே யல்லாமல், பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய தலைமையிலுள்ள அமைச்சரவை பதவி விலக வேண்டுமென்று சொல்லுகின்ற ஒரு நோக்கத்திற்கு இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள இயலாது’’ என்று குறிப்பிட்டு, ‘நாங்கள் இதிலே நடுநிலை வகிக்கிறோம்’ என்பதற்கு அடையாளமாக அந்தத் தீர்மானம் நிறைவேறுகின்ற நேரத்தில் வெளிநடப்புச் செய்து காட்டினார்கள். அப்போது, அண்ணா அவர்களுடைய

தலைமையிலே நானும், பேராசிரியர் அவர்களும், மொத்தம் 15 உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தோம். இதை ஏன் சொல்கிறேன் என்றால், இதுபோன்ற சம்பவங்களைப் பயன்படுத்திக்கொண்டு, எதிர்க்கட்சி, ஆளும் கட்சிக்குத் தொல்லை கொடுப்பது கூடாது; இது ஒரு பொதுப் பிரச்சினை. இதிலே எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்பதற்காகத்தான். இதுபோல், பல சம்பவங்களில், இயற்கைச் சீற்றத்தால் ஒரு மாநில அரசுக்கு அல்லது நாட்டிற்கு ஒரு தொல்லை ஏற்படுகின்றபோது, எப்படி எல்லாக் கட்சிகளும் அரசியல் சார்பற்ற நிலையில் ஒன்றுகூடிப் பணியாற்ற வேண்டுமோ, அதைப் போலத்தான், இந்தச் சம்பவங்களில், அது ஜாதிச் சண்டையானாலும், மதப் போராட்டமானாலும், அதிலே ஒரு பொது நோக்கோடு எல்லாக் கட்சிகளும் தங்களுடைய தூய உள்ளத்தைத் திறந்து ஈடுபட வேண்டுமென்ற அந்த நிலையை நான் இங்கே நினைவூட்ட மீண்டும் மீண்டும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் எடுத்துக்காட்டியதைப்போல, வெள்ளை அறிக்கையிலே குறிப்பிட்ட அந்தத் தனி விசாரணைக் குழு, தன்னுடைய புலன் விசாரணையைத் தீவிரமாக நடத்தத் தொடங்கி, இந்த அறிக்கையிலே பல விஷயங்கள் குறிப்பிடப் படவில்லையே என்றெல்லாம், பல தரப்பிலேயிருந்து எடுத்துக் காட்டப்பட்ட குறைபாடுகளையெல்லாம் நீக்குகின்ற வகையிலே பல செய்திகளை நமக்கு இன்றைக்கு வழங்கியிருக்கிறது. அவை முழுமையானவை அல்ல. அந்தச் செய்திகளை நோக்கி இந்தப் புலன் விசாரணைக் குழு தீவிரமாக நடைபோடுகிறது என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். இந்த விசாரணைக் குழு I.G திரு. பரம்வீர் சிங், ஐ.பி.எஸ். அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

கோவை குண்டுவெடிப்பு வழக்கு சம்பந்தமாக 171 எதிரிகள் அடையாளம் கண்டறியப்பட்டிருக்கிறார்கள். இதில் 9-5-1998 முடிய 113 எதிரிகளை சிறப்பு விசாரணைக் குழு போலீசார் கைது செய்திருக்கிறார்கள்.இதிலே 8 எதிரிகள் இறந்து போயிருக்கிறார்கள். 15-2-1998 அன்று காலை சுமார் 4 மணி யளவில் கோவை திருமால் வீதியிலே போலீசாரின் அதிரடிச்

சோதனையின்போது 6 தீவிரவாதிகள் இறந்திருக்கிறார்கள். 15-2-1998 அன்று காலை சுமார் 6½ மணியளவில் கோவை ஒப்பணக்கார வீதியிலே உள்ள, மோகன் ரேடியோ என்ற பூட்டி வைக்கப்பட்ட கடையில் குழாய் வெடிகுண்டு வெடித்ததில் எதிரி முகமது ரபீர் என்பவர் பலத்த காயமடைந்து இறந்தார். 14-2-1998 அன்று போலீசார் நடவடிக்கை எடுத்தபோது, இஸ்மாயில் என்ற குற்றவாளி இறந்து போனார். 17-2-1998 அன்று கோவை அல் அமீன் காலனியில் தரையிலே மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டுகள் இருப்பது தெரியாமல் அங்கே விளையாடிக்கொண்டிருந்த நான்கு முஸ்லீம் சிறுவர்கள் இறந்து போனார்கள். இந்தச் சூழ்நிலை ஏற்படுவதற்கான ஆரம்பக் காரணங்களை இங்கே உரையாற்றிய அத்தனை உறுப்பினர்களும், தலைவர்களும் எடுத்துக்கூறி இருக்கிறார்கள். எப்போது தொடங்கப்பட்டது என்பதைக் குறிப்பிடும்போது, 1983ஆம் ஆண்டிலேயிருந்து கோவை மாநகரத்திலே இந்த மதக் கலவரம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 10-6-1983இல் கோவை தியாகி குமரன் மார்க்கெட்டில் உள்ள மதவெறிக்கு வித்திட்ட இந்து மற்றும் முஸ்லீம் அனுதாபிகளால் சிறு சிறு சண்டைகள் பெரிதாக ஆக்கப்பட்டு மதத் தீவிரவாதம் ஊக்குவிக்கப்பட்டது. இவையெல்லாம் புலன் விசாரணையிலே வருகின்ற விவரங்கள்.

பா.ஜ.க.வின் மாநிலத் தலைவர் திரு. திருக்கோவிலூர் சுந்தரம் என்பவர் இஸ்லாமிய மதத்தைக் குறைகூறிப் பேசினார் என்பதற்காக,பொதுடையிலே, இஸ்லாமியச் சமுதாயத்தைச் சேர்ந்த எஸ்.ஏ. பாட்சா மற்றும் அவருடைய 8 கூட்டாளிகளும் சேர்ந்து, திருக்கோவிலூர் சுந்தரத்தைப் பயங்கர ஆயுதங்களால் தாக்கினார்கள். இது சம்பந்தமாக, பி-2 ஆர்.எஸ். புரம் காவல் நிலையக் குற்ற எண் 748/83, சட்டப் பிரிவுகள் 147, 148, 341 மற்றும் 307 - இந்திய தண்டனைச் சட்டத்தின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கின் முடிவில், எஸ்.ஏ. பாட்சாவிற்கு 3 வருடக் கடுங்காவல் தண்டனையும், அவரது கூட்டாளிகளுக்குத் தலா 9 மாதம் கடுங்காவல் தண்டனையும் அப்போது வழங்கப் பட்டது.

1983ஆம் ஆண்டு முதல் கோவை நகரம் மற்றும் ஊரகப் பகுதிகளில் 172 மதக்கலவரங்கள் நடைபெற்றிருக்கின்றன. இதன் மூலம், கடந்த 15 ஆண்டுகளாகக் கலவரம் வளர்ந்த காரணங்களால், டிசம்பர் 1997 மற்றும் 14-2-1998-ல் நடந்த கொடுமையான பழிவாங்கும் நிகழ்ச்சிகள் உருவாயின. அதைத்தான் இங்கே பேசிய நம்முடைய திரு. சுப்பராயன் போன்றவர்கள் எல்லாம் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். 1983 முதல் நடந்த கொடுமையான சம்பவங்கள் சரியான முறையில் தீர்க்கப்படாத சூழ்நிலையில், 6-12-1992 அன்று பாபர் மசூதி இடிக்கப்பட்டதும் முஸ்லீம் தீவிரவாதம் கூடுதலாக உருவாகக் காரணமாக ஆகிவிட்டது.

எஸ்.ஏ. பாட்சா மற்றும் அவரது ஆதரவாளர்கள், மதக் கலவரங்கள் உருவாகத் தூண்டுதலாக இருந்தார்கள். கோவை நகரில் 3 கோவில்கள் இடிக்கப்பட்டன. ஒரு பொதுப் போக்குவரத்துப் பேருந்து தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. இதில் 12 பேர் காயமடைந்து உள்ளார்கள். மேலும் 12 அரசுப் போக்குவரத்து வாகனங்கள் சேதமடைந்தன. போலீசார் இரு முறை கோவை, கோட்டைமேடு பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இதன் விளைவாக, எஸ்.ஏ. பாட்சா தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்க் கைது செய்யப்பட்டு, 3 மாதத்திற்குப் பிறகு வெளியே வந்தார். தேசியப் பாதுகாப்புச் சட்டத்திலே கைது செய்யப்பட்டவர்களை விடுவித்துவிட்டார்கள் என்றெல்லாம் இப்போது முன்னாள் முதலமைச்சரும், அவரைச் சார்ந்தவர்களும் குற்றம் சாட்டுகிறார்களே, நான் அவர்களுக்கு நினைவூட்டுகிறேன், தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்க் கைது செய்யப்பட்டு ஜாமீனிலே வெளிவந்தவர்தான் இந்த பாட்சா என்பதை மறந்துவிடக் கூடாது.

1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அவர் இந்தப் பாதுகாப்புச் சட்டத்தின்படிக் கைது செய்யப்பட்டார், 1992 டிசம்பரில். பிப்ரவரி 1993-ல் அவர் விடுதலை செய்யப்பட்டார். இதோ என்னுடைய கையிலே இருப்பது 1993ஆம் ஆண்டு 'மாலை முரசு' பத்திரிகை. இந்தப் பத்திரிகையில், 'சென்னை குண்டு வெடிப்பு' 13 பேர் பலி - R.S.S. அலுவலகம் தகர்க்கப்

பயன்படுத்தியது 20 கிலோ நவீன டைம் பாம். பம்பாயில் வெடிக்கப்பட்டது போன்று சக்தி வாய்ந்த குண்டு. R.D.X. வெடிமருந்தால் தயாரித்து சூட்கேஸில் வைக்கப்பட்டிருந்தது. குண்டு வைத்தது யார்? திடுக்கிடும் தகவல் - சென்னை R.S.S. அலுவலகத்தில் குண்டு வெடித்து 13 பேர் பலியானார்கள். இதற்கு 20 கிலோ எடையுள்ள நவீன டைம் பாம் பயன்படுத்தப் பட்டுள்ளது. இது பம்பாயில் வெடிக்கப்பட்டது போன்ற சக்தி வாய்ந்த குண்டாகும்'' என்று அந்தப் பத்திரிகையிலே, இவ்வளவு பெரிய தலைப்பிலே செய்தி வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்தக் குண்டு வெடிப்பு ஆகஸ்ட் மாதம் 8ஆம் தேதி நடைபெறுகிறது.

அன்றைய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் அன்றைக்கு ஊரிலே இல்லை. 1 மணி 45 நிமிடத்திற்குக் குண்டு வெடித்தது. ஆனால் அம்மையார் அவர்கள் 2-45 மணிக்கு சென்னையிலிருந்து ஸ்பெஷல் விமானம் என்கிறார்கள், அல்லது ஹெலிகாப்டர் என்கிறார்கள் - அதிலேறிப் புறப்படுகிறார். மறுநாள் காலையில்தான் திரும்பி வருகிறார். குண்டு வெடித்து, R.S.S. கட்டடமே இடிந்து நொறுங்கிய பிறகு, 13 பேர் இறந்தார்கள் என்ற செய்தி வந்த பிறகு, அவர்கள் திண்டுக்கல் செல்கிறார்கள். மறுநாள் காலையில்தான் திரும்பி வருகிறார்கள். திரும்பி வந்த பிறகு, அவரோடு அந்த இடத்தைப் பார்வையிட்ட R.S.S. மாநில அமைப்பாளர் ஷண்முகநாதன், இந்து முன்னணித் தலைவர் இராமகோபாலன், பா.ஜ.க. துணைத் தலைவர் ஜனா. கிருஷ்ணமூர்த்தி, பா.ஜ.க. பொதுச் செயலாளர் கோவிந்தாச் சாரியார், ரங்கசாமித் தேவர் ஆகியோர் சம்பவம் பற்றி விளக்கிக் கூறினார்கள். 10 மணிக்கு ஜெயலலிதா அந்த இடத்தை விட்டுக் கிளம்பினார். ஜெயலலிதா, நிருபர்களிடம், அவர்களை யெல்லாம் வைத்துக்கொண்டு பேட்டி அளிக்கிறார். அப்பொழுது சொல்கிறார். ''நான் நேற்று மதியம் 2-45 மணிக்கு, சென்னையி லிருந்து புறப்பட்டேன் அப்பொழுது எனக்கு எதுவும் தெரியாது'' என்று கூறுகிறார். கிழடு தட்டிப்போன உளவுத் துறை என்று திரு. சுப்பராயன் இன்றைக்குச் சொல்கிறாரே, அப்போதைய உளவுத் துறை படுகிழமாக இருந்திருக்கிறது (சிரிப்பு) 2-45 மணிக்கு,

சென்னையிலிருந்து புறப்பட்டார். ''அப்பொழுது எனக்கு எதுவும் தெரியாது. மீனம்பாக்கம் விமான நிலையம் செல்லும் வழியில் குண்டு வெடித்த செய்தி வந்தது. அது இவ்வளவு கடுமையானது என்பது பற்றிய விவரம் எனக்குத் தெரியவில்லை'' என்று சொல்கிறார். 'கட்டடம் தூள்' தூளானது. 13 பேர் செத்தார்கள் என்று செய்தி. இது கடுமையானது என்று அவருக்குத் தெரிவிக்கப்படவில்லை என்கிறார். மறுபடியும் அவர் சொல்கிறார். மாலை 6-00 மணிக்கு திண்டுக்கல் சேர்ந்தேன்'' என்கிறார். 2-45 மணிக்குப் புறப்பட்டு திண்டுக்கல்லுக்கு 6-00 மணிக்குச் சென்றிருக்கிறார். விமானத்தில் பயணம் செய்து பார்த்து இந்த நேரத்தைக் கணக்கிட வேண்டும். அல்லது ஹெலிகாப்டரில் பயணம் செய்து பார்த்து, இந்த நேரத்தைக் கணக்கிட வேண்டும். ''6-00 மணிக்கு திண்டுக்கல் சேர்ந்தேன், அப்பொழுதுதான் எனக்கு விவரமே தெரியவந்தது. உடனடியாக சென்னை திரும்ப விரும்பினேன். ஆனால் முடியவில்லை. காரணம், ஹெலிகாப்டரில் லைட் கிடையாது'' அது உண்மை - ஹெலிகாப்டரில் மாலை 6-00 மணிக்கு மேல் பறக்க முடியாது. அது உண்மையான காரணம். எனவே, இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று சொல்கிறார். அப்பொழுது அந்த அம்மையார் சொல்கிறார் ''தமிழ்நாட்டில் இதுபோன்ற குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்தது கிடையாது. இப்பொழுது நடந்து இருப்பது வேதனை அளிக்கிறது. இதுபற்றிய விசாரணை Crime Branch Police (CB-CID) -க்கு மாற்றப்பட்டுள்ளது என்று சொல்கிறார். அப்பொழுது அருகில் இருந்த இராமகோபாலன் சொல்கிறார், ''விரும்பினால் C.B.I. விசாரணைக்கு விடலாம்''. உடனே ஜெயலலிதா சொல்கிறார். ''அநாகரிகமான அரசியல் விமர்சனங்களுக்கு நான் பதில் கூற விரும்பவில்லை'' என்று. இராம கோபாலனுக்கு அந்த இடத்திலேயே கிடைத்த பரிசு (சிரிப்பு). இப்பொழுது அவர்களெல்லாம் ஒன்றாக இருந்துகொண்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைப்பதற்குத் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ''விரும்பினால் C.B.I. விசாரணைக்கு விடலாம்'' என்று இராமகோபாலன் சொல்ல, ஜெயலலிதா ''அநாகரிகமான அரசியல் விமர்சனங்களுக்கு நான்

பதில் கூற விரும்பவில்லை'' என்று சொல்கிறார். எல்லாம் 'மாலை முரசில்' வந்திருக்கிறது. இது authenticated பத்திரிகைதான். அதிலே வந்திருக்கிறது. உடனே ஷண்முகநாதன் அவர்கள் சொல்கிறார்கள், ''R.S.S. இயக்கம் கட்டுக்கோப்பான இயக்கம்; போலீஸார் மிகுந்த கெடுபிடி செய்கிறார்கள், கூட்டம் நடத்த அனுமதிப்பதில்லை, ஆனால், சிலர் minority அமைப்பு என்று கூறிக்கொண்டு அராஜகம் செய்கிறார்கள். அவர்களை போலீஸார் அனுமதிக்கிறார்கள். எனவே, எங்களுக்கு நீதி வழங்க வேண்டும்'' என்று சொல்கிறார். ''போலீஸாரைக் குறை கூறக்கூடாது. நான்தான் தடை உத்தரவையே போடச் சொன்னேன்'' என்று ஜெயலலிதா சொல்கிறார்.

மறுநாள் மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் சென்னைக்கு வருகிறார். 'மாலை முரசிலேயே' தலைப்பு என்ன தெரியுமா? ''கோட்டையில் 30 நிமிடம் சந்திப்பு - பேட்டி, பைலட் விசாரணை ஜெயலலிதாவிடம். வெடிமருந்துக் கடத்தல் - எச்சரித்தும் நடவடிக்கை எடுக்காதது ஏன்- C.B.I. விசாரணைக்குப் பரிசீலனை'' - இது தலைப்பு. இந்தத் தலைப்பிட்டு வந்த செய்தியில் 8ஆம் பக்கத்தில் ஒருவேளை பேசி முடித்த பிறகு, வெளியிட்ட செய்தியில் ''கடந்த மாதம் மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் சென்னை வந்தபோது, பெரும் அளவிலான R.D.X. வெடிமருந்து தமிழ்நாட்டிற்கு, குறிப்பாகக் கடற்கரை வழியாகக் கடத்தி வரப்பட்டிருக்கின்றது. குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தவிர்க்க தமிழக அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டுப் போனார். கடந்த மார்ச் 12ஆம் தேதிக்கு முன்னர் கடத்தப்பட்ட அந்த வெடிகுண்டுகள் தமிழகத்திற்கு கடத்தப்பட்டது குறித்து மத்திய, மாநில அரசுகளுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. அதைக் கண்டுபிடிக்க போலீஸார் சில காலம் சோதனை செய்தார்கள். ஆனால், வெற்றி கிடைக்கவில்லை'' - இதெல்லாம் அந்தச் செய்தியையொட்டி வந்துள்ள துணைச் செய்திகளாகும்.

இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், 'ஏதோ இந்த அரசுக்கு மத்திய அரசிடம் இருந்து உளவுத் துறை தகவல்

அனுப்பியது; அதை கவனிக்கவில்லை' என்று சொல்கிறார்களே, உளவுத்துறை அப்பொழுதும், அவர்களுக்கும் செய்தி அனுப்பி யிருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால், மத்திய அமைச்சரே அதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார். பத்திரிகையிலே செய்தி வந்திருக்கின்றது. ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரு சம்பவம் நடைபெற்றதையொட்டி டெல்லியி லிருந்து அனுப்பப்பட்ட செய்திகளையெல்லாம், நாங்கள் யாரும் கவலைப்பட்டு, அக்கறையோடு கவனிக்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை எங்கள் மீது சுமத்துவது என்ன நியாயம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அந்தக் குண்டு வெடிப்பிற்குப் பிறகு 8ஆம் தேதி குண்டு வெடிப்பு என்றால், நான் முதலிலேயே குறிப்பிட்டேனே. முதுகுளத்தூர் சம்பவத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி நடந்து கொண்டது; அண்ணா அவர்கள் எப்படி நடந்துகொண்டார்கள் என்று. அதைப்போல, அந்த R.S.S. அலுவலக குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றி நான் விடுத்த அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்கின்றேன்.இது 8ஆம் தேதி வெளியிடப்பட்ட அறிக்கை - ''கருத்து வேறுபாடுகள் எவ்வளவு இருந்தாலும் இதுபோன்ற வன்முறைச் சம்பவங்களைத் திராவிட முன்னேற்றக் கழகம் கடுகளவும் ஏற்றுக்கொள்ள இயலாது. சம்பவத்தில் உண்மையான குற்றவாளிகளை உடனே கண்டுபிடிக்க வேண்டியது போலீஸ் துறையின் பொறுப்பாகும். கடந்த காலங்களில் சில குற்றங்கள் கண்டுபிடிக்க முடியாது போயுள்ளன. அவற்றில் இதுவும் ஒன்றாகிவிடக் கூடாது.'' - இப்படித்தான் நான் அறிக்கை விட்டிருக்கிறேனேயல்லாமல், ''உடனடியாக ஜெயலலிதா அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும்'' என்றோ, ''அந்த அரசுதான் அதற்கெல்லாம் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்'' என்றோ அரசியல் ரீதியான அறிக்கை எதையும் நான் அன்றைக்கு விடவில்லை என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல ஆகஸ்ட் 15ஆம் தேதி ஜெயலலிதா கோட்டைக் கொத்தளத்திலே கொடியேற்றி வைத்துவிட்டு, உரையாற்றுகிறார். அதிலே சொல்கிறார்; ''கடந்த 8ஆம் தேதி R.S.S. அலுவலகத்தில் நடைபெற்றது சோகமான, துயரமான

நிகழ்ச்சி. இந்தச் சூழ்நிலையில் தமிழக அரசும், காவல்துறையும் தங்கள் கடமைகளை விரைந்தும், முழுமையாகவும் மேற்கொண்டுள்ளார்கள். இதிலும் அரசியல் ஆதாயம் தேடுவதற்கென்றே, பொறுப்பற்ற சிலர் வேண்டாத பல அறிக்கைகளைக் கொடுத்து வருகிறார்கள்'' அதுமாத்திரம் ''பொறுப்பற்ற சிலர்'' இதில் யாராவது அரசியல் ஆதாயம் தேடினால் அவர்கள் பொறுப்பற்றவர்கள். இவர்கள் தேடினால் ரொம்பப் பொறுப்புள்ளவர்கள். ''அமைதிப் பூங்காவான தமிழகத்தில் வன்முறையைத் தூண்டிவிட்டு, வன்முறைக் கலாச்சாரத்தைத் தங்கள் சொந்த நலனுக்காக உருவாக்க ஒருசில தீய சக்திகள் முயன்று வருகிறார்கள். பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்து, அரசியல் ஆதாயம் தேடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை வன்மையாகக் கண்டிக்கிறேன். இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில், குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்க ஒருபோதும் தயங்கமாட்டேன். விசாரணை துரிதமாக நடைபெற வேண்டும் என்பதற்காக, நான் எடுத்த உடனேயே இந்த வழக்கை மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்ற ஆணையிட்டேன். -க்கு எங்கள் கடமைகளை எவ்வாறு செய்யவேண்டும் என்று யாரும் இந்த அரசுக்கும், காவல்துறைக்கும் புதிதாகப் பாடம் கற்றுத் தரவேண்டிய அவசியம் இல்லை.''

இங்கே அமர்ந்திருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்ற தலைவர்களும், நீங்கள் எல்லாம் இங்கே பேசும்போது, நான் குறுக்கிட்டு, ''நீங்கள் யாரும் எனக்கு அறிவுரை சொல்லவேண்டாம்'' என்று சொன்னதுண்டா? எதிர்க்கட்சித் தலைவர் அருமையான யோசனை ஒன்றைச் சொன்னார், State Security Committee ஒன்றைப் போட வேண்டுமென்று. அதைப்பற்றிக்கூடப் பரிசீலிக்க வேண்டு மென்றுதான், பக்கத்திலே உள்ளவர்களிடம் நான் பேசிக் கொண்டிருந்தேன். அதை விட்டுவிட்டு ''எங்கள் கடமைகளை எவ்வாறு செய்ய வேண்டுமென்று யாரும் இந்த அரசுக்கும், காவல்துறைக்கும் புதிதாகப் பாடம் கற்றுத்தர வேண்டிய அவசியம் இல்லை'' - எங்கே? கோட்டையிலே சுதந்திர தின

விழாவிலே கொடியேற்றும்போது. அம்மையார் மேலும் பேசுகிறார், சுதந்திர தின விழாவிலே கொடியேற்றியபோது - ''மத்திய அமைச்சர் ஒருவர் இங்கே வந்து புலனாய்வுப் பணிகளைத் துரிதமாகச் செய்யுங்கள் என்று நம் காவல்துறைக்கு அறிவுறுத்துகிறார். இது தேவையா?'' அந்த அம்மையார் கேட்கிறார். ''இவர் இவ்வளவு தூரம் சென்னைக்கு வந்து இதைச் சொல்லாவிட்டால், நம் காவல்துறையினர் அப்பணிகளைத் துரிதமாகச் செய்யமாட்டார்களா?'' இதே மத்திய அமைச்சரிடம், வழக்கு விசாரணை CBI = எடுத்துக்கொள்ளலாம் என்று நாம் கூறினால், உடனே அவர், ''தமிழகக் காவல்துறையினர் மிகவும் திறமை வாய்ந்தவர்கள்; அவர்களாலேயே இந்த வழக்கை நடத்த முடியும்'' என்கிறார். அப்போது அவரே certificate கொடுத்திருக்கிறார், தமிழகக் காவல்துறைக்கு. அந்தக் காவல் துறை இருக்கும்போதுதான், இப்போது CBI வழக்கு விசாரணையை நடத்த வேண்டும் என்று இந்த அம்மையார் கேட்கிறார் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

அதுமாத்திரமல்ல; இந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் முன் கூட்டியே மத்திய அரசினுடைய உளவுத் துறையினுடைய எச்சரிக்கைகள் வந்தனவா என்று தாமரைக்கனி கேட்டார்; ஜெயலலிதாவும் கேட்டுக் கொண்டிருக்கிறார். ஜெயலலிதா கேட்டதை, தாமரைக்கனி இங்கே கேட்டார். அதையே திரு. கணேசனும் இங்கே கேட்டார். கேட்கக்கூடிய காலம் இது. அவர் கேட்கக்கூடிய காலம், நாம் அதைக் கேட்டுக்கொள்ளக் கூடிய காலம்.

''இப்படியெல்லாம் நடக்கும்போது, மத்திய அரசிடமிருந்து வந்ததா'' என்று கேட்கிறார். ஜெயலலிதா அவர்கள் வெள்ளை அறிக்கையைப் படித்துப் பார்த்துவிட்டு, என்ன சொன்னார்கள் என்றால் - வெள்ளை அறிக்கையிலே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள - ''1984ஆம் ஆண்டு தொடங்கி, நடைபெற்றதாக, கருணாநிதியால் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள குண்டு வெடிப்புச் சம்பவங்கள் எல்லாம் அரசுக்குக் கிடைத்த, சரியான, பல புலனாய்வுத் தகவல்களுக்குப் பின்னரும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் விட்டதால் நடைபெற்றவை அல்ல''. நடவடிக்கை எடுத்தார்களாம். அதையெல்லாம் கேட்டு,

நடவடிக்கை எடுத்தோம் என்று சொல்கிறார்கள். இவர்கள் கேட்கிறார்கள், அந்தமாதிரி ஒன்றுமே அனுப்பவேயில்லையா என்று. நம்முடைய திரு. கணேசன் அவர்களும் நம்மிடம் கேட்டார். இதோ இருப்பது, அவர்கள் அனுப்பியதுதான். From Secretary to Government, Public Department, Madras - அப்போது Madras 14-3-1993.

Following is the wireless message received from Home, New Delhi. New Delhi Home Department - இடமிருந்து வந்திருக்கிற message - ஐ இங்கே இருக்கிற உளவுத் துறைக்கு அனுப்பி வைத்திருக்கிறது. "In the wake of recent bomb blasts in Bombay, there may be repercussions on the communal situation in your State. Intelligence and security forces may be alerted, round the clock vigil be maintained on all important installations, buildings and places of worship. All necessary precautionary measures be taken to ensure that no untoward incident takes place and peace and communal harmony is maintained. Please take all precautionary measures to maintain law and order and public tranquility. Inform the Chief Secretary's Control Room on significant development". இவ்வளவுக்கும் பிறகுதான் - இவையெல்லாம் வந்த பிறகுதான். R.S.S. அலுவலகக் கட்டடம் நொறுக்கப்பட்டது. அந்தக் குண்டு வெடிப்பிலே, 13 பேர்களிலே 11 பேர்களுடைய பிணங்கள் அங்கிருந்து கண்டு எடுக்கப்பட்டன. 2 பேர் காணாமல் போனதாகச் சொல்லப்பட்டது. அந்த 13 பேர்களிலே சிலபேர் பெண்களும்கூட என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது என்பதற்காக நான் இதை நினைவுபடுத்துகிறேன்.

பாபர் மசூதி இடிக்கப்பட்டதை அடுத்து, தமிழ்நாட்டிலே எந்தச் சம்பவமும் நடக்கவில்லை என்று கணேசன் இங்கே குறிப்பிட்டார்கள். திருநாவுக்கரசு பேசும்போதுகூட, ஒருவேளை மறதியின் காரணமாகவோ, என்னவோ, அப்போதுகூட தமிழ்நாடு அமைதியாகத்தான் இருந்தது என்று சொன்னார். அதை இவர்கள் பயன்படுத்திக்கொள்வார்கள். ‘‘திருநாவுக்கரசு அவர்கள் இப்படிச் சொல்லிவிட்டார்’’ என்று. ஆனால் பாபர் மசூதி 6-12-1992-லே இடிக்கப்பட்டதை அடுத்து, தமிழ்நாட்டில்

நடந்த சம்பவங்களைச் சுருக்கமாகக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அயோத்தியிலே, பாபர் மசூதி இடிக்கப் பட்டதை அடுத்து, கல்வீச்சு, கறுப்புக்கொடி ஏற்றுதல், இந்து இயக்கங்களின் தலைவர்களின் உருவ பொம்மைகள் எரித்தல், கோயில்கள் மற்றும் மசூதிகள் மீது தாக்குதல், இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் சொந்தமான சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பு, இரு மதத்தினரும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளுவது, மாணவர்களின் வகுப்புப் புறக்கணிப்பு, முஸ்லீம்களின் ஊர்வலம் மற்றும் தீ வைப்புப் போன்றச் சம்பவங்கள், 6-12-1992 முதல் 11-12-1992 வரையில் தமிழகத்தின் பல இடங்களில் நடைபெற்றன. அந்தக் காலகட்டத்தில் கல்வீச்சுக் காரணமாக மொத்தம் 158 வாகனங்கள், அதிலே 124 அரசுப் பேருந்துகள், 32 தனியார் பேருந்துகள், ஒரு லாரி மற்றும் ஒரு காவல்துறையின் வேன் இவையெல்லாம் மிகவும் சேதப்படுத்தப்பட்டன. இவை தவிர, 18 வாகனங்கள், 3 அரசுப் பேருந்துகள், ஒரு தனியார் பேருந்து, 2 மொபெட்டுகள், 4 டேங்கர் ட்ரெய்லர்கள், ஒரு டெம்போ, 2 வேன்கள், 2 கார்கள், ஒரு காவல்துறை ஜீப், ஒரு டிராக்டர் ட்ரெய்லர் மற்றும் ஒரு தீயணைப்புப் படை வாகனம் இவையெல்லாம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. மாநிலத்தில் நடைபெற்ற 33 இனக் கலவரங்களில் 14 முஸ்லீம்களும், 12 இந்துக்களும், 78 காவல்துறை அதிகாரிகளும் காயம் அடைந்தார்கள். டிசம்பர் 8ஆம் தேதியன்று சென்னை அண்ணா சாலையிலுள்ள அண்ணா சிலை முன்பாக தீக்குளிக்க முயன்ற 5 முஸ்லீம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். முன்னெச்சரிக்கை நடவடிக்கையின்கீழ் 1840 நபர்களும் குறிப்பிட்ட குற்றங்களுக்காக 2486 நபர்களும் கைது செய்யப் பட்டார்கள். வன்முறை, தீ வைப்பு ஆகிய சம்பவங்களால் மொத்தம் 51 இலட்சத்து 52 ஆயிரத்து 600 ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன.

8-12-1992 அன்று சில மாவட்டங்களில் வன்முறைகள் நடைபெற்றதன் காரணமாக காவல்துறை துப்பாக்கிச் சூடு திருநெல்வேலி மாவட்டத்தில் நான்கு முறையும் வேலூர் மாவட்டத்தில் மூன்று முறையும், கோவை நகரத்தில் இரண்டு முறையும், தஞ்சை மாவட்டத்தில் இரண்டு முறையும், குமரி

மாவட்டத்தில் ஒரு முறையும் நடத்த வேண்டியதாயிற்று. துப்பாக்கிச் சூட்டில் இரண்டு நபர்கள் இறந்து போனார்கள். 21 பேர் காயம் அடைந்தார்கள். இவை தவிர, காவல்துறையினர் மூன்று சம்பவங்களில் கண்ணீர்ப் புகை மற்றும் தடியடிப் பிரயோகம் செய்ய வேண்டியதாயிற்று. 11-12-1992 அன்று கீழக்கரையில் உள்ள மசூதி அருகில் முஸ்லீம்களில் ஒரு பிரிவினர் பட்டாசுகள் உள்ளே வைக்கப்பட்ட பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் திரு. எல்.கே. அத்வானி அவர்களின் உருவ பொம்மையைக் கொளுத்தினார்கள். பட்டாசுகள் வெடித்து ஓசை எழுந்ததால் மசூதியிலே தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லீம்கள், இந்துக்கள் தங்களது மசூதி முன்பாக பட்டாசு வெடித்திருப்பார்கள் என்று சந்தேகப்பட்டு இந்துக்களுக்குச் சொந்தமான கடைகள் சிலவற்றை அடித்துச் சேதப்படுத்தினார்கள். இதனால் இரண்டு மதங்களுக்கிடையே பகைமை உருவானது. காவல்துறையினர் கூட்டத்தினைச் சம்பவ இடத்தில் துரத்தியபோது காவல்துறை அலுவலர்கள் மீது அக்கூட்டம் கற்களை வீசியதால் இரண்டு காவலர்கள் காயம் அடைந்தார்கள். இச்சம்பவத்தில் இந்துக்களுக்கு சொந்தமான 20 கடைகள் சேதப்படுத்தப்பட்டன. இரண்டு ஆட்டோ ரிக்ஷாக்கள், ஒரு ஜீப் மற்றும் முஸ்லீம்களுக்குச் சொந்தமான கொட்டகை ஆகியவற்றிற்குத் தீ வைக்கப்பட்டது. இது சம்பந்தமாக 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இவை எல்லாம் பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் ஆங்காங்கு பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற கலவரங்களின் சுருக்கம்.

இதற்குப் பிறகு சென்னையிலே R.S.S. அலுவலகத்திற்கு 8-8-1993-ல் குண்டு வைத்தது தொடர்பான வழக்கில் 16-11-1993 அன்று பாட்சா கைது செய்யப்பட்டார். மூன்று மாதங்கள் கழித்து பாட்சா கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு பிறகு TADA சட்டப் பிரிவுகளிலும் சேர்க்கப்பட்டு நடைபெறத் தொடங்கியது. இந்த வழக்கிலே மத்திய புலனாய்வுத் துறை விசாரணையை மேற்கொண்டு 8-4-1994 அன்று வழக்கிலே குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்தது. ஒரு வருடம் கழித்து C.B.I. அதை எடுத்துக்கொண்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. இந்த வழக்கிலே 22-5-1996 அன்று பாட்சாவையும், மற்றும் 5 குற்றவாளிகளையும் TADA நீதிமன்றம் நிபந்தனை

யின்றி ஜாமீனில் விடுதலை செய்ய உத்தரவிட்டது. அந்த ஜாமீனில் விடுதலையானவர்கள் கோயம்புத்தூரில் இருக்கக் கூடாது என்றும், சென்னையில் இருக்க வேண்டுமென்றும் அவர்களுக்கு அன்றைக்குச் சொல்லப்பட்டது. ஜனவரி 1997-லே பாட்சாவிற்கும் மற்றும் 15 பேர்களுக்கும் நீதிமன்றம் ஜாமீனில் விடுதலை செய்ய உத்தரவிட்டது. இதையடுத்து 27-1-1997-ல் பாட்சா விடுதலை செய்யப்பட்டார். நிபந்தனையோடு சென்னையிலே தங்க அன்றைக்கு அவர் அனுமதிக்கப்பட்டார். இதற்கிடையிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்த அல்-உம்மா இயக்க ஆவணங்கள், அந்தத் தேதியிட்ட ஆவணங்கள் சில இந்த விசாரணையின்போது கிடைத்திருக்கின்றன. அதிலே ஒரு 'பத்வா',-'பத்வா' என்றால் 'மதவாதஆணை' என்று பொருள். இஸ்லாமியத் தற்கொலைப் படையால் வெளியிடப்பட்ட ஒரு 'பத்வா' கையால் எழுதப்பட்ட ஒரு 'பத்வா' கைப்பற்றப்பட்டது. அதில் என்ன எழுதியிருக்கிறது என்றால் ''இஸ்லாமிய இளைஞர்கள் இஸ்லாத்தைக் காக்க இறப்பதற்கும் தயார். இஸ்லாத்திற்கு உழைத்த பாட்சா பாயை கைது செய்து இஸ்லாமிய மக்களைத் துன்புறுத்தும் காட்டுமிராண்டி கமிஷனர் கணேசன் குடும்பத்தை அழித்தே தீருவோம்.'' இங்கே குறிப்பிட்டார்களே அந்த கணேசன் என்று கருதுகின்றேன். ''ஆர்.எஸ்.எஸ். வெறிநாய்கள் மூகாம்பிகை மணி, பரமசிவன், அர்ஜுன் சம்பத் மற்றும் தற்சமயம் பொதுச்செயலாளர், இந்து மக்கள் கட்சி ஆகியோரையும் தமிழகத்தைக் கெடுத்த இராம கோபாலனையும், இந்து முன்னணி மாநில அமைப்பாளர் ஸ்ரீதரனையும் 10 நாட்களில் கொல்வோம். தினமலர் கட்டடத்திற்கு வெடிகுண்டு வைத்து அழிப்போம். தீன் மதத்தைக் காப்போம். புனித ஜிகாத் தொடங்கிவிட்டது. இப்படிக்கு இஸ்லாமிய தற்கொலைப் படை'' என்று ஒரு துண்டு விளம்பரம் அன்றைக்கு வெளியிடப்பட்டது.

இதுபோன்ற சம்பவங்கள், இதுபோன்ற பிரச்சாரங்கள் இரு தரப்பிலும் போட்டி போட்டுக்கொண்டு நடைபெற்ற அந்தச் சூழ்நிலையில்தான் 29-11-1997ஆம் தேதியன்று கோயம் புத்தூரில் உதவி ஆய்வாளர் சந்திரசேகரன் என்பவர் அல்-உம்மா உறுப்பினர் ஒருவரோடு இரு சக்கர வாகனத்தின்மீது சிறு வழக்கு

போடப்பட்டது சம்பந்தமாக அல்-உம்மா அமைப்பாளர் முகமது அன்சாரிக்கும் மேற்படி உதவி ஆய்வாளருக்குமிடையே நடந்த வாக்குவாதத்திற்குப் பிறகு அன்று இரவே உக்கடம் பகுதியிலே பணியில் இருந்த போக்குவரத்துக் காவலர் செல்வராஜ் என்பவர் கொலைக்கு ஆளானார். இது 29-11-1997 அன்று நடைபெற்ற சம்பவம். இதைத் தொடர்ந்து 30-11-1997 மற்றும் 1-12-1997-ல் நடந்த வன்முறைச் சம்பவங்களிலும், போலீஸ் துப்பாக்கிச் சூட்டிலும் இறந்த முஸ்லீம்கள் 18 பேர். இந்தக் கொடுமையான கொலைகளுக்கும், முஸ்லீம்களின் சொத்துக்களுக்கு பெரும் சேதம் விளைவித்தமைக்கும் அல்-உம்மாவைச் சேர்ந்த தீவிரவாதிகளால் மேற்படி குண்டு வெடிப்பு நிகழ்வு நடந்தேறியிருக்கிறது என்பது தெள்ளத் தெளிவாகிறது. இது புலன் விசாரணையில் வருகின்ற விவரங்கள். இவற்றுக் கெல்லாம் பழி வாங்கவேண்டும் என்பதற்காகத்தான் - 18 முஸ்லீம்கள் கொல்லப்பட்டார்கள் - ஒரு செல்வராஜ் கொல்லப் பட்டதையொட்டி 18 முஸ்லீம்கள் கொல்லப்பட்டார்கள். முஸ்லீம்களின் சொத்துக்களுக்கு பெரும் சேதம் விளைவிக்கப் பட்டது. எனவே அல்-உம்மாவைச் சேர்ந்த தீவிரவாதிகள் மேற்படி குண்டு வெடிப்பு நிகழ்வை நடத்தத் திட்டம் தீட்டினார்கள் என்பது தெளிவாகிறது.

30-11-1997, 1-12-1997-ல் நடந்த கொடுஞ் செயல்கள் யாவும் R.S.S., பா.ஜ.க., இந்து முன்னணி ஆகியோர்களோடு போலீசும் சேர்ந்துகொண்டு முஸ்லீம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொடூரச் செயல்கள் என்று அல்-உம்மா மற்றும் தீவிர இயக்கங்கள் காரணம் கூறுகின்றன. அந்தக் கொடுஞ் செயல்கள்தான் இவற்றுக்கெல்லாம் காரணம் என்று இந்த இயக்கங்கள் இன்றைக்குத் தெளிவாக, தாங்கள் அப்படித்தான் கருதுகிறோம் என்று காரணம் கூறுகிறார்கள்.

டிசம்பர் 3ஆம் தேதி நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் இறந்த முஸ்லீம்களுடைய உடல்களை நிர்வாணமாகவும், காயம்பட்ட அந்தரங்க உறுப்புகளைக் கோரமாகப் படம் எடுத்தும், வீடியோ எடுத்தும், அவ்வாறு எடுக்கப்பட்ட கோரக் காட்சிகளை முஸ்லீம் இனத்தவரிடம் காண்பித்து அவர்களுடைய

ஆத்திரத்தைத் தூண்டிவிட்டு, அவர்களுடைய ஆதரவையும் அனுதாபத்தையும் பெற்று பழிக்குப்பழி வாங்க அல்-உம்மா தீவிரவாத அமைப்பினர் திட்டம் தீட்டினார்கள் என்பது மற்றொரு உண்மையாகும்.

மேலும், இந்தப் புலன் விசாரணைத் தகவலில், தீவிரப் பழிவாங்கு நடவடிக்கைக்கான கூட்டுச் சதியின் தோற்றம் 1997, டிசம்பர் 1,2,3 தேதிகளில் ஆரம்பமாகியிருக்கிறது. இந்தச் சம்பவங்களுக்குப் பிறகு இந்தக் கூட்டுச் சதியின் தோற்றம் ஆரம்பமாகியிருக்கிறது. அதற்குப் பிறகு 1997, டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் எஸ்.ஏ. பாட்சா, முகமது அன்சாரி, அல்-உம்மாவின் பொதுச் செயலாளர், அப்துல் உசைன், சித்திக் அலி, எஸ்.ஏ. பாட்சாவின் மகன் நவாப்கான், எஸ்.ஏ. பாட்சாவின் இளைய சகோதரன் அப்துல் நசீர் மதானி மற்றும் சிலர் கோவையில், தனியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ சேர்ந்து ஒரு பெரிய பழிவாங்கும் நடவடிக்கையை உருவாக்கினார்கள். எவ்வாறு செயல்படவேண்டும் என்ற செயல் திட்டமும், கர்நாடகா மற்றும் கேரளாவிலிருந்து வெடிமருந்துகள் மற்றும் வெடிபொருட்கள் சேகரித்தலும் தொடங்கப்பட்டன. இவை எல்லாம் டிசம்பருக்குப் பிறகுதான். தேர்ந்த வெடி சாதனங்களை உருவாக்க முடிவெடுக்கப்பட்டன.பொறுப்புகள் பலருக்கு வழங்கப்பட்டு அவை பலமுறைகளில் மேற்பார்வை யிடப்பட்டன. 1997 டிசம்பர் மாத முதல் வாரத்தில் அன்சாரி கேரள மாநிலம் கோழிக்கோட்டைச் சேர்ந்த தேசிய ஜனநாயகப் படையினர் எம்.பி. முகமது அஸ்ரப் என்பவரைச் சந்தித்தார். அன்சாரி, கேட்டுக்கொண்டதற்கு இணங்க அஸ்ரப் 10 நாட்டு கைத்துப்பாக்கிகளைத் தருவதற்கு சம்மதித்தார். எஸ்.ஏ. பாட்சா மற்றும் முகமது அன்சாரி சொன்னபடி சத்தியமங்கலத்தைச் சேர்ந்த முகமது அலிகான் என்கின்ற குட்டி 625 கிலோ எடையுள்ள ஜெலட்டின் குச்சிகள், 1500 மின்சார டெட்டனேட்டர்கள், 1500 சாதாரண டெட்டனேட்டர்கள் மற்றும் 80 மீட்டர் ஃபியூஸ் வயர்களைக் கர்நாடகாவிலுள்ள சாம்ராஜ் நகரைச் சேர்ந்த சம்ஜித் முகமது என்பவரிடமிருந்து வாங்கினார். இப்போது அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இவற்றை அவர்

முகம்மது தஸ்தகீர் - அவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார் - மேனேஜர், இந்திய வெடிபொருள் கழகம், மைசூர் என்பவரிடமிருந்து வாங்கியுள்ளார். திட்டமிட்டபடி பழி வாங்கும் நடவடிக்கைகளை ரம்சான் பண்டிகைக்கு ஒரு வாரம் கழித்து நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்த முடிவுக்கு மாறாக, நாடாளுமன்றத் தேர்தல் நடக்கவிருப்பதைக் கருத்தில் கொண்டு மேற்படித் திட்டம் தள்ளிப் போடப்பட்டது.

இதற்கிடையில் 7-2-1998 அன்று திரு. அத்வானி அவர்கள் 14ஆம் தேதி தேர்தல் கூட்டத்திலே கலந்துகொள்ள கோயம்புத்தூர் வருவதாகச் செய்திகள் வெளிவந்தன. ஏற்கெனவே திட்டமிட்டபடி பழிவாங்கும் நடவடிக்கைகளை 22-2-1998-ல் கோயம்புத்தூரிலும் மற்றும் மாநிலத்தில் பல பகுதிகளிலும் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் 14ஆம் தேதி எல்.கே. அத்வானி அவர்கள் கோயம்புத்தூர் வருவது தெரிந்ததும் அன்சாரி தன் பழிவாங்கும் திட்டத்தை அதே தேதியிலே நடத்த முடிவு செய்தார். அன்றைய தினத்திலே R.S.S. மற்றும் பா.ஜ.க. கட்சித் தொண்டர்கள் அதிக அளவில் கூட்டம் நடைபெறும் இடத்திலும் மற்ற இடங்களிலும் இருக்கக்கூடும் என்பதால் மேற்படி சதித் திட்டம் திட்டமிட்டபடி தொடர் குண்டுவெடிப்புச் சம்பவங்களை நிகழ்த்தினால் அதிக அளவில் மேற்படி தொண்டர்கள் காயமுறுவார்கள் என அன்சாரி கருதினார். தற்கொலை வெடிகுண்டுப் படை மூலமாக எல்.கே. அத்வானியைக் குறி வைக்கவும் அன்சாரி திட்டமிட்டார். அன்சாரியின் திட்டத்திற்கு பாட்சா சம்மதித்து சித்திக் அலி மூலமாக அன்சாரிக்குக் குண்டு வெடிப்புக்கான இடங்களைக் குறிப்பிட்டு அனுப்பி வைத்தார். இது தொடர்பாக 10-2-1998-ல் மெக்கான் தர்காவில் நடைபெற்ற கூட்டத்தில் அன்சாரி, ஓசீர், ரகுமான், சித்திக் அலி, அஸ்லாம், சலாம் மற்றும் ஊமை பாபு ஆகியோர் கலந்து கொண்டார்கள். இந்தக் கூட்டத்தில் சித்திக் அலி, பாட்சா திட்டமிட்டுத் தயாரித்த தொடர் குண்டு வெடிப்புக்கான இடங்களின் பட்டியலைக் கொடுத்தார்.

1888/93 வழக்கில் சம்பந்தப்பட்ட பாட்சாவின் டைரி ஒன்று கைப்பற்றப்பட்டது. அந்த டைரியில் என்ன எழுதப்

பட்டிருந்தது என்றால், எல்.கே. அத்வானி மற்றும் அசோக் சிங்கால் ஆகியோர்களை போலீசார் பாபர் மசூதி இடிப்பு வழக்கில் ராஜ மரியாதையுடன் நடத்தியதாகவும் முஸ்லீம் இனத்தவரை அவ்வாறு சரியான முறையில் நடத்தவில்லை என்றும் அந்த டைரியிலே குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் விசாரணையில் அல்-உம்மா அமைப்பைச் சேர்ந்த தலைவர் களிடமும் மற்ற உறுப்பினர்களிடமும் கடந்த 15 ஆண்டுகளாக நடைபெற்ற பல சம்பவங்களில் முஸ்லீம் இனத்தவரைக் காவல் துறையினர் சரியான மரியாதையுடன் நடத்தவில்லை என்ற உணர்வு ஊடுருவி இருந்தது. அந்த டைரியிலே இந்தச் செய்திகள் எல்லாம், இவை எல்லாம், இந்தச் சாயல்கள் எல்லாம் இருந்தன. எனவே, மேற்கண்ட சம்பவங்களைக் கருத்திலே கொண்டு 1997ஆம் ஆண்டு நவம்பர் - டிசம்பர் மாதங்களில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் 18 முஸ்லீம்கள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்தும் பாட்சாவின் தலைமையிலே இயங்கி வரும் அல்-உம்மா இயக்கத்தால் மேற்படி சம்பவத்திற்குப் பழிவாங்கும் எண்ணத்தோடு தேர்தல் பிரச்சாரத்தின்போது அத்வானியைக் குறி பார்த்தும் மற்றும் கோயம்புத்தூரில் அதிக அளவில் உயிர்ச் சேதமும், பொருள் சேதமும் ஏற்படுத்த திட்டமிடப்பட்டது என்ப தெல்லாம் விசாரணையிலே, இதுவரையில் நடைபெற்றுள்ள விசாரணையில் இவை எல்லாம் தெரியவந்துள்ளன.

14-2-1998 அன்று இடுப்பிலே வெடிகுண்டைக் கட்டிக்கொண்டு கோவை ஆர்.எஸ். புரத்திலே நடந்த பொதுக் கூட்டத்திலே கலவரம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட மூன்று இளம் முஸ்லீம்களின் அடையாளம் புலன் விசாரணையிலே தெரிய வந்துள்ளது. அந்த மூன்று முஸ்லீம் இளைஞர்களும் இஸ்லாத்திற்காக உயிர்த் தியாகத்தையும் செய்யும் அளவிற்கு மூளைச் சலவை செய்யப்பட்டு சென்னையிலிருந்து எஸ்.ஏ. பாட்சாவால் கோவைக்கு 10-2-1998 அன்று அனுப்பப்பட்டு இருக்கிறார்கள். இதுவரையில் விசாரிக்கப்பட்ட அந்தக் குற்றவாளிகளின் வாக்குமூலங்களிலிருந்து 14-2-1998 அன்று திரு. அத்வானியைக் கொலை செய்வதற்கான முயற்சி,

காவல்துறையினரால் பொதுக்கூட்ட மேடைக்கு அருகே எடுக்கப்பட்ட கடுமையான சோதனை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளால் கைவிடப்பட்டதாகத் தெரிய வருகிறது. போலீசார் அந்த மேடையைச் சுற்றியும் அந்தக் கூட்டத்தைச் சுற்றியும் அளித்த பெரும் பலத்த பாதுகாப்பின் காரணமாக ஒரு பிரதமருக்கு அளிக்கப்பட்டது போன்ற பாதுகாப்புத் தரப்பட்டதன் காரணமாக இந்தக் குண்டுகளைக் கட்டிக்கொண்டு வந்தவர்கள் யாரும் உள்ளே நெருங்க முடியவில்லை என்றும் விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது. இதுவரையில் நடந்து முடிந்த புலன் விசாரணையில் உடனடியாக வெடிக்கக்கூடிய குண்டுகள் மற்றும் கையெறி குண்டுகளோடு அனுப்பப்பட்ட அந்த 7நபர்களும் காவல்துறையினரால் அமைக்கப்பட்ட பாதுகாப்பு வளையங்களை ஊடுருவி பொதுக்கூட்ட மேடைக்கு அருகே செல்வதற்கான சாட்சியக்கூறு எதுவும் அகப்படவில்லை. பொதுக்கூட்ட மேடை அருகிலே இந்த 7 பேர் கொண்டு வந்த உடனடியாக வெடிக்கும் வெடிகுண்டோ அல்லது கையெறி குண்டோ வெடித்ததற்கான சாட்சியக் கூறுகளும் இல்லை.பொதுக்கூட்ட மேடைக்கு அருகிலோ அல்லது அந்தப் பொதுக்கூட்டம் நடக்கவிருந்த இடத்தைச் சுற்றி எழுப்பப்பட்ட காவல்துறை பாதுகாப்பு வளையத்தின் அருகிலோ வெடிகுண்டுகள் வெடித்ததற்கான சாட்சியக் கூறுகளும் இல்லை. அஃதன்னில், மேடைக்கு வெளியேகூட, போலீசின் பலத்த பாதுகாப்பு, கண்காணிப்பி னால், இவை எல்லாம் தடுக்கப்பட்டு விட்டன. அதனால் எந்த விதமான மனித வெடிகுண்டும் கூட்டங்களுக்கு வெளியிலேகூட வெடிக்கவில்லை. இவ்வளவு விவரங்களும் நான் இங்கே வைத்த வெள்ளை அறிக்கைக்குப் பிறகு, அப்போதே நான் குறிப்பிட்டதற்கு ஏற்ப, புலன் விசாரணையில் இதுவரையிலே கிடைத்துள்ள தகவல்கள். எனவே, இந்த அரசு, எதையும் மறைக்க விரும்பவில்லை.

போலீசார்மீது குற்றங்கள் சாட்டப்பட்டன. கடுமையான வார்த்தைகள் எல்லாம் இங்கே பயன்படுத்தப்பட்டன. இவை எல்லாம் போலீசாரேகூட, தங்களைத் திருத்திக் கொள்வதற்குப்

பயன்படுத்திக்கொள்ள வேண்டுமேயல்லாமல், கோபப்படுவதற்காக இவை பயன்படுத்தப்பட்டதாக யாரும் கருதக்கூடாது. ஏனென்றால், பறிக்கப்பட்ட உயிர்கள் சாதாரணமானவை அல்ல. யாரோ இரண்டு எதிரிகள் ஒருவருக்கொருவர் கத்தியால் குத்திக்கொண்டு செத்த கதை அல்ல இது. வீரப் போராட்டமல்ல. யாருக்கோ வந்த எரிச்சலின் காரணமாக, யாருக்கோ ஏற்பட்ட வெறியின் காரணமாக, அதிலும், ஏற்படக்கூடாத மத வெறியின் காரணமாக, மத நல்லிணக்கத்திற்கு விரோதமாக, மனித நேயத்திற்கு விரோதமாக நடைபெற்றிருக்கிற ஒரு காரியத்தில் அப்பாவிப் பொதுமக்கள், இந்தச் சர்ச்சையைப் பற்றியே தெரிந்து கொள்ளாத பொதுமக்கள், இதைப்பற்றியே கவலைப்படாத, நாட்டு நடப்பைப் பற்றியே கவலைப்படாத பொதுமக்கள், அவர்கள் எல்லாம் செத்து ஒழிவது என்றால், அதை அந்த அளவுக்கு விட்டுவிட்ட அல்லது அலட்சியப்படுத்திவிட்ட யாராக இருந்தாலும், அவர்கள் மற்றவர்களால் கோபத்திற்கு ஆளாகித்தான் தீருவார்கள் என்பதிலே எந்தவிதமான இரு வேறு கருத்துக்கும் இடமில்லை. எனவே, இங்கே பேசப்பட்ட அந்த வார்த்தைகள் கடுமையாக இருந்தாலும்கூட, அவற்றை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், ஒன்றை மறந்துவிடக்கூடாது. அந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. தமிழ்நாடு முழுவதும் பிப்ரவரி மாதம் 1ஆம் தேதியிலிருந்து 13ஆம் தேதி வரையில், எங்களுக்கு வந்த தகவல்களை, சென்னையிலே உள்ள தமிழக போலீஸ் உளவுத் துறையின் மூலமாகக் கிடைத்த தகவலானாலும் சரி அல்லது மத்திய போலீசினுடைய உளவுத் துறையின் தகவலானாலும் சரி, அத்தனையையும் உடனுக்குடன் அனுப்பி வைக்கிறோம்.

அதுமாத்திரமல்ல, நானே தொலைபேசியிலே அடிக்கடி தொடர்பு கொண்டு, பாதுகாப்புகள் எப்படி இருக்கின்றன என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். நான் அன்றைக்குச் சொன்னதைப் போல, வேடிக்கையாகக் கேட்கவில்லை. ஒரு முதலமைச்சரே அந்த இடத்திற்குச் சென்று குண்டு இருக்கிறதா என்று பார்க்க முடியுமா என்பதை நீங்கள் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்கான எல்லா கடமைகளையும் செய்திருக்கிறோம்.

பெரிய அதிகாரிகள், இங்கே இருக்கிற தலைமைச் செயலாளர், மற்ற செயலாளர்கள் உள்துறைச் செயலாளர் இவர்கள் அத்தனை பேர்களும் அடிக்கடி கூட்டங்களை நடத்தி, அங்கே என்ன நடக்கிறது என்பதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந் திருக்கிறார்கள். இதற்கிடையிலேகூட, ஒரு அதிகாரி தவறு செய்து விட்டார். இங்கே ரொம்பவும் கோபமாகப் பேசினார். அந்த அதிகாரி மீது என்ன நடவடிக்கை என்று திரு. கணேசன் கேட்டார். அந்த அதிகாரி மீது நடவடிக்கை உண்டு என்று சொன்னதும், அவருடைய தலைவர் என்ன சொன்னார்? ஒரு ஜாதியைக் குறிப்பிட்டு, அந்த ஜாதியைச் சேர்ந்த அதிகாரி என்ற காரணத்தால் நடவடிக்கையா என்று அவருடைய தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்கள் ஓர் அறிக்கையின் மூலமாகக் கேட்டார். இதிலே ஜாதி ஒன்றும் கிடையாது. சதியைத் தடுக்க வில்லை, நாம் அரசின் சார்பாக விடுத்த தாக்கீதுகளையும் ஒழுங்காக நிறைவேற்றவில்லை, அதற்கான காரணங்களை விளக்குங்கள் என்று கேட்டால், விளக்கப்பட்ட காரணங்கள் ஏற்கத்தக்கதாக இல்லை. எனவே, அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கத்தக்க அளவுக்கு Charge Sheet அவர் மீது இப்போது போடப்பட்டு, விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கேகூட, அங்கே ஜாதி இடையிலே வந்து நுழைந்து, அந்த ஜாதியைக் கேவலப்படுத்துவதா; அந்த ஜாதியைச் சேர்ந்தவரைத் தண்டிப்பதா என்றெல்லாம்கூடக் கேட்டார்கள். நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அந்த வகையிலேதான் கோவை அதிகாரியிடம் விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது.

இவற்றிற்கெல்லாம் CBI விசாரணை வைக்கவில்லை. வைக்கவில்லை என்கிறார்கள். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். உறுப்பினர் திரு. கணேசன் அவர்களுடைய தலைவர்கள் எல்லாம் 5, 6 குற்றச்சாட்டுகளை, தொடர்ந்து இந்த அரசின்மீது சுமத்தி வருகிறார்கள். யார், இந்த TADA சட்டப்படி கைதானவர்களை எல்லாம் விடுதலை செய்தது? 16 கேள்விகளைக் கூட அவர்கள் கேட்டிருந்தார்கள். அதிலே ஒரு கேள்வி. ஏன் விடுதலை செய்தீர்கள் என்ற கேள்வி.

என் கையிலே இருப்பது டாக்டர் இராமதாஸ் எனக்கு எழுதிய கடிதம். இந்தக் கடிதம் 1997ஆம் ஆண்டு எனக்கு எழுதப்பட்டது,

''அன்பனரென்பீர்,

வணக்கம், சமுதாயத்தில் கடையரிலும் கடையராக உள்ள தலித் மக்களுள் சமீபத்தில் நடத்திய போராட்டங்களுக்காகக் கைதானவர்கள் எல்லாம் நாளைய ஆகஸ்ட் 15, உங்கள் பொது மன்னிப்பு அறிவிப்போடு விடுதலையாக இருப்பது மகிழ்ச்சிக் குரிய செய்தியாகும். அதே வேளையில், TADA போன்ற ஆட்கொல்லிச் சட்டங்கள் காலாவதியான பின்னரும், தமிழ்நாட்டில் TADA சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்கள் இன்றுவரை எந்த விசாரணையுமின்றி பிணையில்கூட, பிணை என்றால் ஜாமீன். ஜாமீனில் கூட வெளிவர முடியாதபடி 6, 7 ஆண்டுகளாகச் சிறையிலே கட்டுண்டு கிடப்பதை நினைவூட்ட விரும்புகிறேன். நாளை தாங்கள் வழங்க இருக்கும் பொது மன்னிப்பு, TADA சிறைவாசிகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். குற்றவியல் நடைமுறைச் சட்டங்கள் அடிப்படையில் அவர்கள் மீது விசாரணை வழக்குத் தொடரலாம். கருணையோடு பரிசீலிக்கவும்.

அன்புடன்
இராமதாஸ்.''

என்று பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் இராமதாஸ் அவர்கள் எனக்கு எழுதிய கடிதம். இதை எல்லாம் நான் நிறைவேற்ற வேண்டாமா? நிறைவேற்றினால், ஏன் விடுவித்தாய் என்று கேட்பதா? அன்று கடிதம்: இன்று கண்டனமா?

C.B.I. விசாரணை பற்றிக் கூட - நாங்கள் அதை எதிர்த்தவர்கள் அல்ல. 6-3-1998 அன்று செய்தியாளர்கள் என்னைத் தலைமைச் செயலகத்திலே சந்தித்து C.B.I. விசாரணை பற்றிக் கேட்டார்கள். நான் சொன்ன பதிலில், C.B.I. விசாரணையை நான் என்றைக்கும் மறுப்பவன் அல்ல. இன்னும்

சொல்லப்போனால், ஜெயலலிதா ஆட்சியிலே ஒரு வழக்கில் சுப்பிரமணியசாமி கோரிய C.B.I. விசாரணையை, ஜெயலலிதா ஆட்சியிலே மறுத்து இருந்தபோதிலும், நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் நீதிமன்றத்திலேயே அந்த மறுப்பைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, C.B.I. விசாரணைக்கு அரசின் சார்பில் நீதிமன்றத்திலே ஒப்புதல் அளித்து இருக்கின்றோம். வாசாத்தியில் நடைபெற்ற பயங்கர வன்முறையைப் பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி C.B.I. விசாரணை கேட்டபோது, ஜெயலலிதா ஆட்சியிலே மறுக்கப்பட்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மறைந்த நல்லசிவன் அவர்கள் உச்சநீதிமன்றம்வரை சென்று C.B.I. விசாரணைக்கு அனுமதி பெற்றார் என்பதை யாரும் மறந்துவிடவில்லை. சில வழக்குகளில் C.B.I. விசாரணைக்கு நீதிமன்றம் அனுமதித்த போது, அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்துக்குச் செல்வேன் என்று ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது கருத்து வெளியிட்டு இருக்கிறார் என்பதையும் யாரும் மறந்துவிட முடியாது.

இப்போது இந்த ஆட்சியிலே மதுரை லீலாவதி கொலை வழக்கில் தமிழக போலீசார் பாரபட்சமின்றி விசாரணை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். இன்னும் யாரும் இந்த 10 மாத காலத்தில் ஜாமீனிலே கூட வெளியே வரமுடியவில்லை. அவர்கள் தி.மு.க. காரர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு இருந்தாலும், யாரும் ஜாமீனில் வெளிவரவில்லை. இந்தக் கொலை வழக்கிலும் C.B.I. விசாரணை வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரியது. அதை ஏற்றுக்கொண்டு நாங்கள் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினோம்.

அதைப் போலவே, மேலவளவு சம்பவத்திற்கும் தேவர் பேரவையினர் C.B.I. விசாரணை வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அதையும் இந்த அரசு ஏற்றுக்கொண்டு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியது. ஆனால், இந்த இரண்டு பரிந்துரை களையும் மத்திய அரசு ஒப்புக்கொள்ளவில்லை. C.B.I. -க்கு பணி நிரம்ப இருக்கிறது. எனவே, இயலாது என்று பதில் அளித்து விட்டார்கள். இதிலிருந்து C.B.I. விசாரணைக்கு தி.மு.க. அரசு என்றைக்கும் தடையாக இல்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இப்போதுகூட C.B.I. விசாரணை கோரி ஜெயலலிதா நீதிமன்றம் சென்று இருக்கின்றார் . நான் அதைப்பற்றிக்கூடச் சொன்னேன்.திருச்சி, ஈரோடு மற்றும் திருச்சூர் ஆகிய நகரங்களில் புகைவண்டி நிலையங்களில் 6-12-1997 அன்று நிகழ்ந்த குண்டுவெடிப்பு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து திருச்சியிலும் ஈரோட்டிலும் நடைபெற்ற சம்பவம் குறித்து விசாரணையை C.B.I. மேற்கொள்ளலாம் என்று 7-12-1997 அன்று மத்திய இரயில்வே அமைச்சருக்கும், பிரதமருக்கும் நேர்முகக் கடிதங்கள் மூலம் எழுதி இருந்தேன். அந்தக் கடிதத்தில், "There are reasons to believe that the serial blasts are the handy work of certain Islamic fundamentalist forces. The possibility of the hands of certain foreign forces enemical to our national interest in these incidents cannot also be ruled out. It will be in our national interest if the Ministry of Railway can immediately order a CBI probe into these incidents so that the culprits can be brought to book at the earliest" என்று குறிப்பிட்டு இருந்தேன். இது தொடர்பாக மத்திய அரசு C.B.I.-யின் கருத்தைக் கோரிய போது, C.B.I. உள்துறைக்குத் தனது கருத்தைத் தெரிவித்து, உள் துறையின் சார்பில் 27-2-1998-ல் உள்துறை இயக்குநர் தமிழக அரசின் உள் துறைச் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் "Please refer to the letter dated 7-12-1997 from the Chief Minister of Tamil Nadu requesting for CBI enquiry in the cases of 3 powerful bomb blasts. The matter was taken up by the CBI who have now informed that the cases pertaining to Tamil Nadu State are being directly supervised by the IGP (Crime) CID and in Kerala the case is under the supervision of the DIG (Crime Branch), Kerala and in this situation the CBI feel that the local Police can handle these cases effectively and these cases do not merit investigations by the CBI".

உள்ளூர் காவல்துறையினரே ஒழுங்காகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், C.B.I. க்கு வேண்டாம் என்றுதான் சொல்லியிருக்கின்றார்கள். நாங்கள் C.B.I. விசாரணை வேண்டாம் என்று என்றைக்கும் சொன்னது கிடையாது. இப்போது இது

வரைக்கும் படித்துக் காட்டினேனே, எது மறைக்கப்பட்டிருக் கின்றது? நம்முடைய உள்ளூர் காவல்துறை, தமிழகத்திலே உள்ள போலீஸ், ஐ.ஜி. தலைமையிலே இந்தச் சிறப்புப் பிரிவு எந்த அளவுக்குச் செயல்பட்டு நாம் அன்றைக்கு ஹேஷ்யங்களாகச் சொன்னவை எல்லாம் கூட அவை ஹேஷ்யங்கள் அல்ல, உண்மைகள்தான் என்பதற்கு இந்தப் புலன் விசாரணையிலே இவ்வளவு செய்திகள் கிடைத்திருக் கின்றன என்பதைப் புரிந்துகொண்டிருக்க முடியும். இன்னும் பல செய்திகள் கிடைக்கக்கூடும். அவர்களை எல்லாம் உடனடியாக தண்டித்துவிட வேண்டாமா என்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூடச் சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் இப்படிப் பேசியது எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. ஏனென்றால், எந்த ஒரு குற்றத்திலும், அதற்கு என்று எவ்வளவோ சட்டங்கள் இருக்கின்றன. நாம்தான் பார்க்கிறோமே, நாம் ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் ஆயிற்று. என்ன சொன்னார்கள் மக்கள் நமக்கு? போனவுடனே குற்றம் புரிந்த எல்லோரையும் பிடித்து உள்ளே போடுங்கள் என்றுதானே நம்மை இங்கே அனுப்பினார்கள்? முடிந்ததா? காரணம் என்ன? சட்டம். சட்டத்தின் சந்து பொந்துகளில் யார் வேண்டுமானாலும் அங்கே இங்கே ஓடி விளையாடலாம். கடைசியில் விளையாடுகிறார்களா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால், அதுவரையிலும் விளையாட முடியும். சட்டத்தின் சந்து பொந்துகள் அப்படி இருக்கின்றன. எனவேதான் உடனடியாக தண்டிக்க முடியாது.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டார். தெரியாதா யார் கொன்றார்கள் என்று? மறுநாளே தீர்ப்பு அளிக்க முடிந்ததா? 7 வருஷம் ஆனது தீர்ப்பு அளிக்க. இப்போதும் அப்பீல் நடந்து கொண்டிருக்கிறது. அதேமாதிரி இந்திராகாந்தி கொலை நடந்து எத்தனை வருஷம் ஆனது? கொலை செய்தது யார் என்று நேரடியாகப் பார்த்தும் கூட, எத்தனை வருஷம் ஆனது? எனவே சட்டப்படி சில காரியங்கள் நடைபெறுகிறபோது உடனடியாக யாரையும் உள்ளே, சிறையிலே போட்டுவிட முடியாது. அதற்காகத்தான் National Security Act -ஐப் பயன்படுத்துகிறோம்

இப்போது கைது செய்யப்பட்டிருக்கின்ற இந்தத் தீவிரவாதிகள் பலபேர் மீது National Security Act பயன்படுத்தப்பட்டு அவர்கள் சிறையிலே வைக்கப்பட்டு இருக்கின்றார்கள். அவர்களை மறுபடியும் ஒரு வருடத்திற்குப்பிறகு விடக் கூடாது என்பதற்காகத் தான் புதிய சட்டத்தைத் தயாரித்துக்கொண்டு இருக்கின்றோம். சட்டம் அநேகமாகத் தயாராகிவிட்டது. விரைவில் இந்த அவையினுடைய பார்வைக்கு வர இருக்கின்றது. அவையிலே உள்ளவர்கள் நீங்கள் எல்லாம் தருகின்ற திருத்தங்களை எண்ணிப்பார்த்து, யோசித்து, அந்தத் திருத்தங்களோடு தேவைப் பட்டால் அந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொண்டு சட்டம் வர இருக்கின்றது. அந்தச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுத்து விசாரணை நடத்துவதற்காக, இதற்கானத் தனி நீதிமன்றம் அமைக்க, அதைப் பற்றியும் டி.ஜி.பி. யிடமிருந்து கருத்துரு அரசுக்கு வந்துவிட்டது. அந்தக் கருத்துருவும் இப்போது உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டு அவர்களுடைய அனுமதி எதிர்பார்க்கப்படுகின்றது. அது வந்து சேர்ந்தவுடன் நிச்சயமாக இந்த விசாரணைகள் எல்லாம் நடைபெற்று தீவிரவாதிகள் யாராக இருந்தாலும் இந்தப் புலன் விசாரணையிலே கிடைக்கின்ற தகவல்களை வைத்து, இந்த வழக்கில் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இங்கே, இந்து என்றோ முஸ்லீம் என்றோ சொல்லக் கூடாது. அந்த இயக்கத்தின் பெயரை சொல்லவேண்டுமென்று சொன்னார்கள். அப்படி ஏதாவது தவறு நடைபெற்றிருந்தால் இந்த அறிக்கையில் நான் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன். அல்-உம்மா என்றோ, ஜிகாத் என்றோ அவர்களைக் குறிப்பிட்டால் போதுமானது. அதைப்போல அவர்கள் மதத்தின் பெயரால் இந்து முன்னணி என்றும், இந்து மக்கள் கட்சி என்றும் பெயர் வைத்திருக்கின்றார்கள். அதைக் குறிப்பிடுகின்றபோது அப்படித்தான் குறிப்பிட்டாக வேண்டும். அந்தக் கட்சிகளை அந்த இயக்கங்களை அப்படித்தான் குறிப்பிட்டாக வேண்டும்.

இந்த விளக்கங்களை எல்லாம் நான் அளித்த பிறகும் யாருக்கும் இந்த அரசு தூய்மையாக எடுக்கின்ற நடவடிக்கைகள்

மீது கிஞ்சிற்றும் ஐயப்பாடு இராது என்றே நான் கருதுகின்றேன். அந்த வகையிலே இங்கே வைக்கப்பட்ட இந்த வெள்ளை அறிக்கையினை இந்த அவை ஏற்றுக்கொள்ளும் என்று நான் நம்புகின்றேன். அந்த நம்பிக்கையோடு இந்த உரையை உங்கள் முன்னால் நான் நிகழ்த்தியிருக்கின்றேன். மத நல்லிணக்கத்திற்கு, மதவாதங்களை ஒழித்துக் கட்டுவதற்கு, மதவெறியை வீழ்த்துவதற்கு, அனைவரும் சேர்ந்து பாடுபட இந்த அவையிலே மீண்டும் ஒருமுறை உறுதி எடுத்துக்கொள்ள இந்த விவாதம் பயன்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவில் எனது உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

அரசு அலுவலர் நலன்

உரை : 51 **நாள் : 18.05.1998**


மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி 110-ன்கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிக்க விரும்புகிறார்கள். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டப்பேரவை விதி 110-ன்கீழ் இந்த அறிக்கையை வைக்கிறேன்.

மத்திய அரசு தனது அலுவலர்கள் மற்றும் அனைத்திந்தியப் பணிகளின் அலுவலர்கள் பதவியிலிருந்து ஓய்வுபெறும் வயதினை 58-லிருந்து 60-ஆக உயர்த்தியுள்ளது. தமிழக அரசும் தனது அலுவலர்களின் ஓய்வுபெறும் வயதினை அதிகரிப்பது பற்றி 16-5-1998-ல் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலித்தது. அரசு அலுவலர் ஓய்வு பெறும் வயதினை 58-லிருந்து 60-ஆக உயர்த்தினால், வரும் இரண்டு ஆண்டுகளில் அரசுப் பணிகளில் காலி இடங்கள் ஏற்படுவது வெகுவாகக் குறைந்துவிடும். இதனால், இந்த இரண்டு ஆண்டுகளில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பது தடைபெற்றுவிடும். மேலும், அரசு ஊழியர்கள் பலருக்கு இந்த இரண்டு ஆண்டுகளில் பதவி உயர்வு கிடைப்பதில் தடை ஏற்பட்டு விடும். அரசு அலுவலர் ஓய்வுபெறும் வயதினை 60-ஆக உயர்த்துவதால் அரசுக்கு ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் வீதம் இரண்டு ஆண்டுகளுக்குச் செலவு குறை

யும். 1000 கோடி ரூபாய் குறையும் இரண்டு ஆண்டுகளுக்கு. ஆயினும், தமிழகத்தின் இளைஞர்களின் வேலைவாய்ப்பினைக் கருத்தில் கொண்டு தமிழக அரசின் அலுவலர்களுக்கு பதவியி லிருந்து ஓய்வுபெறும் வயது தற்போதுள்ள 58 ஆண்டாகவே தொடர்ந்து இருக்கலாம் என்று அரசு முடிவு செய்துள்ளது.

(மேசையைத் தட்டும் ஒலி)



இரயில்வே துறை நிகழ்ச்சி

உரை : 52 நாள் : 23.11.1998

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25ஆம் தேதி நடைபெற இருக்கின்ற ஒரு இரயில்வே துறை நிகழ்ச்சிக்காக அளிக்கப் பட்டுள்ள அழைப்பிதழ் குறித்து மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் இங்கே ஒரு பிரச்சினையை எழுப்பி, அதைத் தொடர்ந்து நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், சுப்பராயன் அவர்களும் கருத்தை ஏற்று இங்கே பேசியிருக்கின்றார்கள். இடையில் பாரதிய ஜனதா கட்சியி னுடைய சட்டமன்ற உறுப்பினர் வேலாயுதன் அவர்கள் வேறு ஒரு கருத்தை இங்கே குறிப்பிட்டு அந்த அழைப்பிதழில் எந்தத் தவறும் இல்லை என்று கூறியிருக்கின்றார்கள். சுப்பராயன் எழுப்பிய பிரச்சினை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டிய அந்தக் கருத்து இவையெல்லாம் இந்திய நாட்டை ஒரு மதச்சார்பற்ற நிலையிலே காண வேண்டும். அவ்வாறு இயங்க வேண்டும். எந்த ஆட்சியானாலும் அந்த ஒரு நிலையிலிருந்து மாறுபடக்கூடிய ஒரு நிலை இப்போது ஏற்படுகிறதோ என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துவதற்கான வழிமுறைகள் இப்போது கோலப்படுகின்றன என்ற அந்த உண்மையையும் விளக்குவனவாகத் தென்படுகின்றன. இதை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு மதச்சார்பற்ற நிலையை இந்தத் துணைக் கண்டத்திலே உருவாக்க வேண்டும் என்று எண்ணுகின்ற ஒவ்வொருவருடைய கடமையும் ஆகும். அந்தக் கடமையை நாம் நிறைவேற்றத் தவறினால் எதிர்காலத்திற்கு நாம் பதில் அளிக்க வேண்டியது மாத்திரமல்ல. எதிர்காலச் சந்ததியினரின் கோபத்திற்கும், சாபத்திற்கும்கூட ஆளாக வேண்டியவர்களாக ஆகிவிடுவோம்.

இது இரயில்வே விழாவினுடைய அழைப்பிதழில் சங்கராச்சாரியார் அவர்களுடைய பெயர் குறிப்பிட்டிருப்பது பற்றிய பிரச்சினை. எதிர்க்கட்சித் தலைவரும், சுப்பராயன் அவர்களும் இங்கே அழுத்தந்திருத்தமாக எடுத்துக்காட்டியது போல் சங்கராச்சாரியாரிடத்திலே நமக்கு எந்தவிதமான பகையும் கிடையாது, வெறுப்பும் கிடையாது. எல்லா மதங்களிலேயும் இருக்கின்ற குருமார்கள், பெரியவர்கள் ஆகியோரிடத்திலே என்ன மதிப்பு வைத்திருக்கின்றோமோ, அதே மதிப்பு சங்கராச்சாரியாரிடத்திலும் அவருடைய அடுத்த நிலையிலே உள்ளவரிடத்திலும் நமக்கு உண்டு. ஆனால் அப்படி மதிப்பது என்பது வேறு; அதே நேரத்தில் ஒரு அரசு நிகழ்ச்சியில் மதத்தைக் கொண்டு வந்து புகுத்துவது என்பதை ஏற்பதா, இல்லையா என்பது வேறு. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், அந்தக் கழகத்தினால் நடத்தப்படுகின்ற இந்த அரசைப் பொறுத்தவரையில் ஒருக்காலும் மதச்சார்பற்ற நிலைக்கு மாறாக எந்த நடவடிக்கையாக இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளாது என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மதச் சார்புடையவர்கள் அதிலே கலந்துகொள்ள வேண்டுமென்று ஒருவேளை இரயில்வே துறையினர், டெல்லியிலே இருக்கின்ற அமைச்சர் பெருமக்கள் அல்லது இங்கேயிருக்கின்ற இரயில்வே துறை அதிகாரிகள் விரும்பியிருந்தால் அதிலே ஒரு இஸ்லாமிய மார்க்கத்தினுடைய பெரியவரையும் கலந்து கொள்ளச் செய்திருக்கலாம். ஒரு கிறித்துவ பேராயரையும், ஆர்ச் பிஷப்பையும் அழைத்து அதிலே கலந்து கொள்கின்ற வாய்ப்பினை அவர்களுக்கு அளித்திருக்கலாம். அப்போது மதச்சார்பற்ற முறையிலே எல்லா மதத்தினரும் கலந்து, வேலாயுதன் சொல்வதைப் போல மதகுருமார்களுடைய அருளும் இரயில்வேக்கு வேண்டும் என்பதற்காக, அப்போதுதான் விபத்துக்கள் எதுவும் நடக்காமல் இருக்கும் என்ற முறையிலே (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா மதகுருமார்களையும் கலந்துகொள்ளச் செய்திருக்கலாம். அப்படி இல்லாமல் சங்கராச்சாரியாரை மாத்திரம் அழைப்பது என்பது இன்றைக்கு பா.ஜ.க. மீது தொடர்ந்து

சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுக்கு அவர்கள் தங்களை இலக்காக்கிக் கொள்கிறார்கள் என்பதைத் தவிர வேறு இல்லை. இதிலே நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் பொன்முடி பெயர் இருக்கிறது என்று சுப்பராயன் குறிப்பிட்டார். இந்த அவையிலேயே அதற்கு ஒரு கண்டனத் தீர்மானம் நிறை வேற்ற வேண்டுமென்று சொன்னார். சங்கராச்சாரியார் பெயர் போட்டிருப்பதற்காக, தீர்மானம் தேவையில்லை. இந்த அவையினுடைய ஒட்டுமொத்தக் கருத்தாக நான் சொல்கிறேன். யாராவது இதிலே தவறு இருந்தால், அந்தக் கருத்திற்கு உடன்பாடு இல்லையென்று கூறலாம்- ஒட்டுமொத்தக் கருத்தாகச் சொல்லுகின்றேன்- நாளைக்குள்ளாக திருத்தப்படாவிட்டால், நம்முடைய அமைச்சர் பொன்முடி அந்த விழாவில் கலந்து கொள்ள மாட்டார் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி)




காஞ்சி சங்கராச்சாரியார்

உரை : 53 **நாள் : 24.11.1998**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்த அவையிலே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்து வைத்த கருத்துக்கு, அவரே ஒரு தன்னிலை விளக்கம் அளித்து, நேற்று தவறான தகவலின் பேரில் அல்லது உண்மை யைச் சரியாகப் புரிந்துகொள்ளாத நிலையில், அப்படி ஒரு கருத்தை வெளியிட்டு விட்டேன் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, அவர்கள் வெளியிட்ட கருத்துக்குள் நான் சென்று விவாதிக்க விரும்பவில்லை. இறுதியாக ஒரு கோரிக்கைக்கு வைத்து, 'என்னைப் போலவே முதலமைச்சரும் இதைப் புரிந்து கொண்டு போக்குவரத்துத் துறை அமைச்சரை அந்த விழாவிலே கலந்து கொள்ளச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார். நேற்று நான் பேசும்போது, காஞ்சி சங்கராச்சாரியார் மீது தனிப்பட்ட முறையிலே எந்தவிதமான வெறுப்போ, பகையோ எங்களுக்குக் கிடையாது என்பதை எடுத்துக் கூறியிருக்கிறேன். அதையே நண்பர் சுப்பராயன் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் நேற்று விளக்கம் அளித்துவிட்டு, இறுதியாகச் சொன்ன போது, காஞ்சி சங்கராச்சாரியாருக்கு மாத்திரம் அல்ல இஸ்லாமிய, கிறித்துவ சமுதாயத்தைச் சார்ந்த பெரியவர்களும் அங்கே அழைக்கப்பட வேண்டும்; இதை ஏற்றுக் கொள்ளா விட்டால், போக்குவரத்துத் துறை அமைச்சர் அந்த விழாவிலே கலந்து கொள்ளமாட்டார் என்று நான் குறிபிட்டிருக்கிறேன். ஏன், நம்முடைய சுப்பராயன் அவர்களும், மூன்று பேருமேகூட கலந்துகொள்ளக்கூடாது என்பதுபோல வார்த்தை வைத்தார். இன்று காலையிலே, நான் அப்படிச் சொன்னதுகூட ஒரு நெருடல் என்று திராவிடர் கழகத்தினுடைய தலைவர் வீரமணி

அவர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். சங்கராச்சாரியார் மாத்திரமல்ல; கிறித்துவப் பெரியவர்களும், இஸ்லாமியப் பெரியவர்களும்கூட கலந்துகொள்ளக்கூடாது என்ற நோக்கில் அவர், மூன்று பேருமே விழாவிலே கலந்து கொள்ளலாம் என்று நான் சொன்னதை ஒரு நெருடல் என்று குறிப்பிட்டிருக்கிறார். அவருக்கு நெருடலாக இருப்பது எனக்கு நெருடலாக இருக்கலாம்; அல்லது இல்லாமல் இருக்கலாம். ஆனால், இன்றைக்குத் தமிழகத்தினுடைய சூழ்நிலை என்னவென்றால், மத நல்லிணக்கம் தேவை என்று எல்லாக் கட்சியினரும் ஒருமித்த குரல் கொடுத்து வருகிறார்கள். மதக் கலவரங்கள் ஆங்காங்கே, அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏற்பட்டு, பெரிய அளவிலே கூட கோவை மாநகரத்திலே வெடித்து, அதனுடைய காயங்கள், புண்கள் ஓரளவு ஆறினாலும்கூட வடுக்கள் இன்னும் மறையாத சூழ்நிலையில், இன்றைக்குத் தமிழகம் இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. எனவேதான், அந்த வடு மறையாத நேரத்தில், ஒரு விழாவிலே, ஒரு மதத்தினுடைய தலைவரை மாத்திரம் அழைத்து கலந்துகொள்ளச் செய்வது சரியாக இருக் காது என்ற அந்தக் கருத்தில்தான், மற்ற மதத் தலைவர்களும் கலந்துகொள்ள வேண்டும் என்று நான் குறிப்பிட்டேன். என்னுடைய கருத்தை இரயில்வே நிர்வாகம் ஆலோசித்து வருவதாக எனக்கு ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. அந்தக் கருத்து ஏற்கப்பட்டு, நாளைய தினம் கிறித்துவ சமுதாயத்தின் சார்பிலும், இஸ்லாமிய மார்க்கத்தின் சார்பிலும் பெரியவர்கள் கலந்து கொள்வார்களேயானால், எங்களுடைய அமைச்சர் திரு. பொன்முடி அவர்களும் அதிலே கலந்து கொள்வார். இல்லையானால், நேற்று எடுத்த நிலையிலேயிருந்து மாற்றம் இல்லை என்பதை நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மாஞ்சோலை எஸ்டேட்

உரை : 54 **நாள்: 27.11.1998**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குளிர்காலக் கூட்டத் தொடர் நாளைய தினம் நிறைவுறுகிற நேரத்தில் ஏதாவது Stunt - நாடகக் காட்சியை - நடத்திக்காட்ட வேண்டுமென்று (மேசை யைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி விரும்பி, எண்ணி அதை இங்கே செயல்படுத்த முனைகிறார். இதற்கான விளம்பரங்களை ஏடுகள் அல்லது மற்றவர்கள் தராமல் இருந்தால்தான் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தமிழகத்திலே எல்லாக் கட்சிகளும், கட்டிக் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணுகின்ற மரபுகளைப் பேணிப் பாதுகாக்க முடியும் என்பதை ஏடுகளுக்கும், மற்ற கட்சிகளினுடைய தலைவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பணிவன்போடு இந்த வேண்டுகோளையும் விடுக்கின்றேன்.

அடுத்ததாக, மாஞ்சோலை எஸ்டேட்டில் கொத்தடிமை முறை இருப்பதாகச் சொல்கிறார். அந்த மாஞ்சோலை எஸ்டேட் ஏறத்தாழ 70 ஆண்டுகாலத்திற்கு மேலாக வெள்ளைக்காரர் ஆட்சியில், காங்கிரஸ் கட்சி ஆட்சியில் மற்றும் தொடர்ந்து நடை பெற்று வருகிற ஆட்சிகளில் எல்லாம் இருந்து வருகின்றது. அந்த மாஞ்சோலை எஸ்டேட் தொழிலாளர்களுடைய நிலை அனைவருக்கும் நன்றாகத் தெரியும். பல யூனியன்கள் - தொழிலாளர் யூனியன்கள் - அங்கே இருக்கின்றன. சட்ட ரீதியான தங்களுடைய கோரிக்கைகளுக்கு சட்டப்பூர்வமான அளவிலே போராட்டங்களை அறவழியில் நடத்துகின்ற பல யூனியன்கள் அங்கே இருக்கின்றன. அன்றைக்கு நான் அதைக்

குறிப்பிட்டுச் சொன்னபோதுகூட, அவர் என்னைத் தனியாகத் தங்களுடைய அறையிலே சந்தித்தபோது, எங்கே யூனியன் இருக்கிறது. எந்த யூனியனும் இல்லை என்று என்னிடத்திலே சொன்னார். ஆனால், அங்கே பல யூனியன்கள் இருக்கின்றன. அந்த யூனியன்கள் சார்பாகத்தான் D.M.K., A.D.M.K., I.N.T.U.C., மற்றும் C.I.T.U. போன்ற அந்தக் கட்சிகளின் தலைவர்கள், அந்த யூனியன்களின் தலைவர்கள் எல்லாம்கூட கொத்தடிமை முறை மாஞ்சோலைப் பகுதியிலே இல்லை, அது தவறான செய்தி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இருந்தும்கூட அங்கே கிருஷ்ண சாமி அவர்கள் வலியச் சென்று, அங்குள்ளவர்களிடம், 57.17 பைசா ஒரு நாள் சம்பளம் பெறுகின்றவர்களுக்கு 150 ரூபாய் வாங்கித் தருகிறேன் என்று கூறியிருக்கிறார். ரூ. 50.17 என்பது ரூ. 150 ஆக இவரால் உயரும் என்று எதிர்பார்க்கிற காரணத் தால், சிலபேரை அவரால் அங்கே திரட்ட முடிந்திருக்கின்றது.

எப்படியும் வருகிற இரண்டொரு மாதங்களுக்குள் அங்கே இந்தச் சம்பளப் பிரச்சினைக்காக அவர்கள் கூடிப் பேசி ஒரு முடிவு எடுக்க இருக்கின்றார்கள். நியதிப்படி, முறைப்படி, விதிப்படி. அப்படி இருக்கும்போது, 'பனம்பழம் விழப் போவதைத் தெரிந்து, அதிலேபோய் காக்கை உட்காருவதைப் போல, அவர், தன்னால்தான் இந்தப் பனம்பழம் விழுந்தது என்பதைக் காட்டி, அங்குள்ள தொழிலாளிகளை ஏமாளிகளாக ஆக்கி, தான் விளம்பரம்பெறக் கருதுகின்றார் என்பதுதான் அப்பட்டமான உண்மையாகும். இவருடைய கூற்றை ஏற்காமல் வேலைக்குச் சென்றவர்கள் மிரட்டப்பட்டது மாத்திரம் அல்ல; கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்தக் கொலைக்குத் தூண்டுதலாக இருந்தவர்களிலே இவரும் ஒருவர் என்று கொலையுண்டவருடைய துணைவியாரே புகார் கொடுத்தி ருக்கிறார். அது பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த விசாரணை முடிவடையும் தருவாயிலும் இருக்கின்றது.

இந்தச் சூழ்நிலையிலே, விசாரணையிலேயிருந்து தப்பவோ அல்லது தான் நிரபராதி என்பதை எடுத்துக்காட்டு வதற்காகவோ நாடகம் ஆடுவதை இந்த அவை ஏற்றுக்

கொள்ளாது என்று நான் திடமாக நம்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலேயுள்ள கிருஷ்ணசாமியைத் தவிர, அனைத்து உறுப்பினர்களும் கட்சி வேறுபாடுகளைக் கடந்து கிருஷ்ணசாமியினுடைய போக்கை ஆதரிக்கவில்லை என்பதை நான் மிக நன்றாக அறிவேன். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக வெளியிலேயுள்ள கட்சிகள்கூட அவருடைய போக்கை நிச்சயமாக ஏற்றுக்கொள்ளாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இப்படிப்பட்ட சக்திகளை வளர விடுவது தமிழகத்திற்கே தீதானது. (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டி, இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கின்றேன்.

சட்டம் ஒழுங்குப் பிரச்சினை

உரை : 55 நாள்: 23.3.1999

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றம் கடந்த 1996ஆம் ஆண்டிலேயிருந்து காரசாரமான விவாதங்கள் சிலவற்றைச் சந்தித்த அனுபவமுடையதாக இருந்தாலும்கூட, நேற்று நடைபெற்ற சம்பவத்தைப் போன்ற சம்பவத்தை இந்த 3 ஆண்டுக் காலத்திலே இந்த மன்றம் சந்தித்ததில்லை. நேற்றைய தினம் நடைபெற்ற சம்பவம் குறித்து இங்கே தாங்கள் விளக்கிக் கூறியிருக்கிறீர்கள். அதைப் பற்றி வெளியிலே முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் விடுத்துள்ள அறிக்கை குறித்தும், அதிலே உள்ள உரிமைப் பிரச்சினை குறித்தும் கூறியிருக்கிறார்கள். ஒரு தன்னிலை விளக்கத்தை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களும் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பத்திரிகைகளிலே, அவரவர்களுடைய கருத்திற்கேற்ப சில செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், கட்சிகளின் தலைவர்களுக்கும் என்ன நடந்தது என்பது மிக நன்றாகவே, தெளிவாகவே தெரியும். உடல் நலிவுற்று, மூன்று, நான்கு நாட்களாக ஓய்வில் இருந்த நான், பதைபதைக்கும் இந்தச் சம்பவச் செய்தி கேட்டு ஓடோடி வந்து, இங்குள்ள தலைவர்களைச் சந்தித்து, அவர்கள் எல்லாம் கூறிய செய்திகளைத் தொடர்ந்துதான் முழு உண்மையையும் புரிந்து கொள்ள என்னால் இயன்றது. அதற்குப் பிறகு நடந்தவற்றை நான் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

22-3-1999 அன்று சட்டமன்றத்தில், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள்மீது நடைபெற்ற தாக்குதலைத் தொடர்ந்து,

திரு.தாமரைக்கனி, சுமார் ஒரு மணி அளவில், அரசினர் தோட்டத்திலே எண் 1, கோஷன் பிளாக்கிலே உள்ள தனது இல்லத்திற்கு வந்து, அங்கேயிருந்து தனது பாதுகாவல் தலைமைக் காவலர் அவர்- 1093 சமுத்திரக்கனியிடம், Assembly-ல் தகராறாகிவிட்டது; நான் Party office-க்குப் போகிறேன்; நீ அம்மாவைப் பார்த்துக்கொள்' என்று தன்னு டைய துணைவியாரைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, தன்னுடைய அம்பாஸிடர் கார் பதிவு எண் TN 67 Z 7020 வண்டியிலே சென்றுவிட்டார். பின்னர், அவர் அவ்வை சண்முகம் சாலை யிலே உள்ள அ.இ.அ.தி.மு.க. தலைமை அலுவலகத்திற்கு வந்து, தன்னுடைய காரை அங்கே விட்டுவிட்டு, போயஸ் தோட்டத்திலே உள்ள செல்வி ஜெயலலிதா வீட்டிற்குச் சென்று விட்டார். அப்போலோ மருத்துவமனையைச் சார்ந்த மருத்துவர்கள் Ambulance ஊர்தியுடன் போயஸ் தோட்டத்திற்கு பிற்பகல் 4 மணிக்குச் சென்றார்கள். பின்னர், செல்வி ஜெய லலிதா வீட்டில் திரு.தாமரைக்கனிக்கு தலை மற்றும் கைகளில் Bandage போடப்பட்டது. பின்னர் மாலை 5 மணியளவில், மேலே கூறிய மருத்துவர்கள் மற்றும் திரு.தாமரைக்கனியும் புறப்பட்டு, அப்போலோ மருத்துவமனைக்குச் செல்ல முற்படும் போது, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் வெளியிலே, இராதாகிருஷ்ணன் சாலையிலே, ஆங்காங்கே பாதுகாப்புப் பணியிலே இருப்பதை அறிந்து, போயஸ் தோட்டத்திலே உள்ள செல்வி ஜெயலலிதா வீட்டு Compound-க்கு உள்ளேயே Ambulance வண்டியிலே இருந்து இறங்கி, அதிலே இருந்து மாறி, அம்பாசிடர் கார் பதிவு எண் TN 01 J 2809 மூலம் வெளியே வர, அதனைத் தொடர்ந்து மற்ற கார்கள் வெளியே புறப்பட்டுச் சென்றன. அவர்கள் அண்ணா சாலை எல்.ஆர். சுவாமி வளாகம் அருகிலே உள்ள அப்போலோ சிறப்பு மருத்துவப் பிரிவு மருத்துவமனையின் சிகிச்சைப் பிரிவுக்குச் சென்று அங்கே அவரை உட்கார வைத்தனர். அப்போலோ சிறப்பு மருத்துவ மனையில், மருத்துவர்கள் இருந்தார்கள். ஆனால், எந்த மருத்து வரும் எந்தவிதமான சிகிச்சையும் திரு. தாமரைக்கனிக்குச் செய்யவில்லை.

மாண்புமிகு அமைச்சர் திரு.வீரபாண்டி ஆறுமுகம் அவர் களைச் சட்டமன்றத்தில் திரு.தாமரைக்கனி தாக்கியது தொடர்பாக, சட்டமன்றத்தில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பிறப்பித்த பிடி ஆணையை நிறைவேற்றிடும் முகத்தான், திரு. தாமரைக்கனியைக் கைது செய்ய வேண்டுமென்று போலீசார் கூறியதற்கு அப்போலோ மருத்துவமனை சிறப்பு மருத்துவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. எந்தவிதமான மருத்துவச் சிகிச்சையும் செய்யாமல், வெறுமனே திரு. தாமரைக்கனியை மருத்துவமனை யிலேயே வைத்து, அவருக்குப் பாதுகாப்புக் கொடுத்து, சட்டமன்றப் பேரவைத் தலைவர் பிறப்பித்த பிடி ஆணையை Serve செய்ய விடாமல், போலீசைத் தடுப்பது முறையல்ல என்று காவல்துறை அதிகாரிகள், மருத்துவர்களுக்கு விளக்கிக் கூறினார்கள். வரம்பு மீறி, திரு.தாமரைக்கனி அவர்களுக்கு மருத்துவர்கள் பாதுகாப்புக் கொடுப்பதைப் பார்த்தும், அப்போலோ மருத்துவமனை மருத்துவர்கள் கொடுக்கும் ஒத்துழைப்பு மற்றும் ஆதரவைப் பார்த்தும், அங்கே இருந்த முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்கள் செங்கோட்டையன், முத்து சாமி, கரூர் சின்னசாமி, மதுசூதனன், செல்வகணபதி மற்றும் அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் பாலகங்கா, ஆதிராஜாராம் மற்றும் அ.தி.மு.க.-வைச் சேர்ந்த 100 பேர், திரு.தாமரைக் கனியைச் சூழ்ந்து கொண்டு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் அதையொட்டிய இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டு, காவல் துறையினர் தங்கள் கடமையைச் செய்ய விடாமல் தடுத்து, கோஷம் போட்டார்கள்.

திரு.தாமரைக்கனி அவர்களுக்கு எந்தவிதமான ரத்தக் காயமோ அல்லது தீவிர சிகிச்சை செய்யவேண்டியதற்குரிய எந்தவிதமான நோயோ அல்லது காரணமோ இல்லாமல், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் பிறப்பித்த பிடியாணையிலிருந்து தப்பிக்க வேண்டி, சில மருத்து வர்கள் உதவியோடு தஞ்சம் புகுந்திருப்பது தெளிவானதால் அவரை மாலை 6-15 மணிக்கு, பிடியாணையை நிறைவேற்றும் முகத்தான் கைது செய்து, பிறகு அவரை சென்னை மத்திய சிறைச்சாலைக்குக் கொண்டு செல்வதற்கு முன்பாக, அவருக்குத்

தலையிலும் கைகளிலும் Bandage-கள் போடப்பட்டிருந்ததால் உண்மையிலே அவருக்கு ஏதாவது காயம் அல்லது அடிபட் டிருக்கின்றதா என்பதைக் கண்டறிய அரசு மருத்துவமனைக்கு அவரை மாலை ஆறே முக்கால் மணிக்கு அழைத்துச் சென்று, அங்கே அரசு பொது மருத்துவமனை டீன் (Dean) டாக்டர் பிரேம்குமார் தலைமையிலும் பின்வரும் மருத்துவர்கள் அடங்கிய குழு அவரை முழுமையாக இரண்டு மணி நேரம் அனைத்து மருத்துவப் பரிசோதனைகளையும் - தலை, மார்பு, கைகள், அடிவயிறு ஆகிய இடங்களில், X-Ray, Ultrasound Scanning, E.C.G., போன்ற மருத்துவப் பரிசோதனைகளைச் செய்தார்கள். சர்ஜரி பேராசிரியர் டாக்டர் ராமச்சந்திரன், அவசரகால சிகிச்சைப் பிரிவு மருத்துவர் டாக்டர் தாமோதரன், அவசர சிகிச்சைப் பிரிவு மருத்துவர் டாக்டர் உதயசேனாபதி, டாக்டர் ராஜதுரை, R.M.O. ஆகிய மருத்துவர்கள் அடங்கிய குழு வினர் இரண்டு மணி நேரம் தாமரைக்கனியைப் பரிசோதனை செய்தார்கள். அவருடைய தலையிலும், கைகளிலும் போடப் பட்டிருந்த Bandage-களைப் பிரித்துப் பார்த்ததில், எந்தவிதமான காயங்களோ அல்லது கன்றிப்போன காயங்களோகூட இல்லை என்பது தெரிய வந்தது. மேலும், மருத்துவக் குழுவினர் அவரை மருத்துவமனையில் வைத்து, மேல் சிகிச்சை செய்ய வேண்டிய எந்த நோயும் இல்லை என்றும் ஒருமித்த கருத்தைத் தெரிவித்த காரணத்தால், தாமரைக்கனி, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் பிடியாணையின்பேரில் இரவு 8-50 மணிக்கு, சென்னை மத்திய சிறைச்சாலையில் கொண்டுபோய் அனு மதிக்கப்பட்டார் என்ற இந்தச் செய்தியை இந்த அவைக்குக் கூறுகின்றேன்.

அதோடு சட்டமன்ற உறுப்பினர் திரு.கருப்பசாமி அவர்கள் கையிலே ஒரு பெரிய Bandage-ஐப் போட்டுக் கொண்டு படுத்திருப்பதைப் போன்ற ஒரு படம் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதுவும் மக்களை ஏமாற்றுவதற்காக எடுக்கப் பட்ட படம் என்பதையும், அந்த மருத்துவமனையில் தொடர்பு கொண்டு நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேசியபோது, அவரை வெளியே போகச் சொன்னால்

போக முடியாது என்று மறுத்து இங்கேயே இருக்கிறார்; அவர் போக மறுக்கிறார்; அவருக்கு எதுவும் இல்லை என்று அங்குள்ள மருத்துவர்கள் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் சொல்லியிருக்கின்றார்கள். அது மாத்திரமல்லாமல் அவர்கள் அவரை வெளியே அனுப்ப போலீசாருடைய துணையையும் நாடியிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. இந்த அளவிலே இடையில் ஏற்பட்ட நிகழ்வுகளைத் தங்கள் மூலமாக இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். ஆகவே இதைத் தெரிவித்துள்ளேன்.

செங்குன்றம் ஏரி

உரை : 56 நாள்:31.3.1999

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் சேலம் சென்று ஒரு தொழிற்சாலை திறப்பு விழாவிலே கலந்து கொள்வதற்கான எண்ணத்துடன், இரவு படுக்கைக்குச் சென்ற நான், விடியற்காலை 4½ மணியளவில் புலனாய்வுத் துறை I.G.-யால் மிகுந்த அவசரமான செய்தி என்று பரபரப்போடு எழுப்பப்பட்டு, சென்னையை அடுத்துள்ள செங்குன்றம் ஏரிக்கரை உடையும் அபாயத்திலே இருப்பதாகவும், அதன் காரணமாக, சென்னையும் அதன் சுற்றுப்புறமும் மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்படலாம் என்றும் சொன்னவுடன் மிகவும் அதிர்ச்சி அடைந்து, உடனடியாக தலைமைச் செயலாளரோடும், காவல் துறை அதிகாரி களோடும், பொதுப்பணித் துறை அதிகாரிகளோடும், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவரோடும் தொடர்பு கொண்டு உடனடியாக எச்சரிக்கைப் பணிகளை மேற்கொள்ளும்படியும், தாழ்வான பகுதிகளிலே உள்ள மக்களை எல்லாம் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லும்படியும் கூறியதோடு ஐந்தே கால் மணியளவிலே தலைமைச் செயலகத்திற்கு வந்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் தகவலை வழங்கி, தங்களுக்கும் தகவலை வழங்கி, அதன் பின்னர், அமைச்சர்கள் திரு. ஆற்காடு வீராசாமி, திரு.கோ.சி. மணி, சென்னை மாநகர மேயர், தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர் ஆகியோரோடு தலைமைச் செயலகத்திலே அவசரக் கூட்டம் நடத்தினேன். அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் திரு.சுந்தரம் அவர்கள் உடனடியாக, உடைப்பு ஏற்பட்ட இடத்திற்குச் சென்று, அங்கிருந்து எனக்குத் தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தார்.

செங்குன்றம் ஏரியில் நேற்று இரவு 10 மணியளவில் புழல்- அம்பத்தூர் சாலையில் வேலம்மாள் பாலிடெக்னிக் கட்டடத்திற்கும் செங்குன்றத்திலே உள்ள சென்னை குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் இடையே 30 அடி அகலமும், 25 அடி ஆழமுமான உடைப்பு ஏரிக்கரையில் ஏற்பட்டு இருக்கிறது. உடைப்பினுடைய அளவைச் சொன்னேன்; 30 அடி அகலம், 20 அடி ஆழம். இந்த உடைப்பு ஏற்பட்டபோது ஏரியில் அதன் கொள்ளளவான 300 கோடி கன அடி தண்ணீர் முழுவதுமாக ஏரியில் நிரம்பி இருந்தது. இரவு உடனடியாக அதிகாரிகள் மட்டத்தில் நடவடிக்கை எடுத்து, பக்கத்திலே உள்ள காவாங் குளம், குளத்தூர், லட்சுமிபுரம், தணிகாசலம் நகர், கொடுங்கையூர் ஆகிய ஊர்களிலே உள்ள மக்களுக்கு எச்சரிக்கை செய்யப் பட்டுள்ளது. இரவு துவக்கத்தில் சிறு கசிவு என்ற நிலையிலே இருந்ததால், பெரிய அளவில் இது பாதிப்பு ஏற்படாது என்று அதிகாரிகள் எனக்கு எல்லாம் அப்போது தெரிவிக்காமல் இருந் துள்ளார்கள். அதன் பின்னர்தான், நள்ளிரவுக்கு மேல் உடைப்பு ஏற்பட்டவுடன் தெரிவித்தார்கள். பொதுப்பணித் துறை அதிகாரிகள், சென்னை குடிநீர் வாரிய அதிகாரிகள் எல்லாம் அனைத்து நடவடிக்கைகளையும் அந்த உடைப்பை அடைப்ப தற்காக மேற்கொண்டு உள்ளார்கள். பாதிப்பு பெரிய அளவிலே நேரிட்டு இருந்தால், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவத்திற்குச் சொல்லப்பட்டு அவர்களும் தயார் நிலை யிலே வைக்கப்பட்டார்கள்.


தலைமைச் செயலகத்தில் இருந்து காலை 7 மணியளவில் நானும் அமைச்சர்களும், தலைமைச் செயலாளரும் நேராக செங்குன்றம் சென்று உடைப்பு எடுத்த இடத்தைப் பார்வையிட் டோம். உடைப்பு எடுத்த இடத்தைப் பார்த்தபோது, சென்னைக்கு ஏற்பட இருந்த மாபெரும் விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது. என்பது நன்றாகத் தெரிந்தது. ஏரியின் கரை, ஒரு ஆறு அளவுக்கு இடையிலே உடைந்துள்ள நிலையிலே உள்ளது. ஏரியிலே உள்ள உபரித் தண்ணீரை உடனடியாகக் குறைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உடைப்பு ஏற்பட்ட, தண்ணீர் வெளியே வந்த இடத்தில், தண்ணீர்

வெளியேற்றம் இப்போது பெரிதும் குறைந்துவிட்டது. சென்னை, திருவள்ளூர் மாவட்டக் காவல் துறையினர் D.G.P. சென்னை மாநகர ஆணையர் ஆகியோர் தலைமையில் அந்த இடத்திலிருந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில் குடிநீர் வாரிய அதிகாரிகளும், பொதுப்பணித் துறை அதிகாரிகளும் அந்த உடைப்பை அடைப்பதற்கான போர்க்கால நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்டுள்ளார்கள். தமிழக அமைச்சர்கள் திரு.தா.கிருட்டிணன், திரு.கு.பிச்சாண்டி, திரு.ஐ.பெரியசாமி, திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.புரசை ரங்கநாதன், திரு.செங்கை சிவம், திரு.திருவொற்றியூர் விஜயன், அங்கே சென்றபோது, அங்கே இருந்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய மாமனார் நேற்றையதினம் காலமாகிவிட்டார். அங்குச் சென்றிருந்த அமைச்சர் அதையும் பொருட்படுத்தாமல் சென்னைக்கு வந்து கொண்டிருந்தபோது, நான் அவருடன் செல் போனிலே இராணிப்பேட்டை அருகே தொடர்பு கொண்டு, வரவேண்டாம் என்று தடுத்து, திருப்பி அனுப்பிவிட்டேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உடைப்பின் காரணமாக, சென்னை மாநகருக்கு ஏற்படவிருந்த பேராபத்து, அரசு மேற்கொண்ட அனைத்து முன் னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாகத் தவிர்க்கப்பட்டதோடு, வருங்காலத்தில் சென்னை மாநகருக்குக் குடிநீர் பற்றாக்குறை ஏற்படாத அளவிற்கும் காப்பாற்றப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



பொடா சட்டம்

உரை : 57 நாள் : 16.4.1999

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்திய தேசிய லீக்கினுடைய தலைவர், அப்துல் லத்தீப் அவர்கள் சொல்கிற சட்டம், தடா சட்டம் அல்ல. தடா சட்டம் இப்போது இல்லை. தடா சட்டம் திரும்பப் பெறப்பட்டுவிட்டது. ஆனாலும், ஏற்கெனவே தடா சட்டத்தின்படிக் கைது செய்யப்பட்டவர்கள் மேல் உள்ள வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் இப்போது குறிப்பிடுவது Prevention of Terrorists Act, அதாவது POTA என்று சுருக்கமாக அழைக்கப்படுகின்ற சட்டமாகும்.

அது இந்த அவையிலே கொண்டுவரப்பட்டு, அந்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்டபோது, அவையிலே பெரும்பாலான உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உள்பட அனைவருமே அந்தச் சட்டம் அப்போது தேவை என்ற அளவுக்கு எடுத்துரைக்கின்றார்கள். ஏனென்றால், கோயம்புத்தூரிலே நடைபெற்ற தொடர் குண்டுவெடிப்பு, பலர் மாண்ட நிகழ்ச்சி, அதையொட்டி தீவிரவாதத்தைத் தடுக்கவேண்டும் என்பதற்காக அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. தடா சட்டத்தையே ஏற்றுக் கொள்ளாத முற்போக்குவாதிகள், ஏன், திராவிட முன்னேற்றக் கழகம் உள்பட, இந்த 'பொடா' சட்டத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை நாட்டு மக்கள் அனைவரும் நன்றாக உணர்வார்கள். மாண்புமிகு உறுப்பினர்களும் உணர்வார்கள்.

தீவிரவாதத் தடுப்புச் சட்டம் என்று தமிழிலே அதற்குப் பெயர். இதை, குடியரசுத் தலைவர் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டதாக மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் சொல்கிறார்கள். அதுவல்ல, குடியரசுத் தலைவர் அவர்களுடைய பார்வைக்குச் செல்வதற்கு முன்பே மத்திய அரசினுடைய உள்துறையிலிருந்து அது நமக்கு அனுப்பப்பட்டு, சில விளக்கங்களைக் கோரியிருந்தார்கள். சில Clarification- களைக் கேட்டிருந்தார்கள். கேட்கப்பட்ட நாள், 1998-ல், அது இங்கே திருப்பி அனுப்பப்பட்டு- தேவையில்லை என்ற எண்ணத்தோடு திருப்பி அனுப்பப்படவில்லை. அதிலே சில விளக்கங்கள் கோரப்பட்டிருந்தன. நாட்டிலே உள்ள நிலை, கட்சிகளுடைய கருத்துகள் ஓரளவுக்கு அமைதியான சூழ்நிலை திரும்புகின்ற கால கட்டம். எனவே, அவர்கள் விளக்கம் கேட்டதைச் சாக்காக வைத்துக்கொண்டு, அதற்கு இங்கேயே ஒரு கமிட்டியைப் போட்டு விட்டோம்.

இங்கே நம்முடைய உறுப்பினர் ஒருவர் பேசும்போது சொன்னாரே, 'கமிட்டியோடு போடு: இல்லாவிட்டால் தள்ளிப் போடு' என்று. அதைப்போல, ஒரு கமிட்டியை, சட்ட அமைச்சருடைய தலைமையிலே ஒரு கமிட்டி போடப்பட்டு, இதை ஆராய்ந்து சொல்லுக' என்று சொல்லியிருக்கிறோம். அது ஆராய்ந்து சொல்லப்பட்ட பிறகுகூட, நான் இப்போது இந்த அவைக்கு உறுதியளிக்கிறேன், இந்த POTA சட்டம் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் போன்றவர்கள் இங்கே எடுத்துக் கூறியதைப்போல, மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகவும், இங்கே எடுத்துக் கூறியதற்கொப்ப, அது Select Committee-க்கு நிச்சயமாக அனுப்பப்படும். உடனடியாக நடைமுறைக்கு வராது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தக் காலத்திலே கடிதோச்சி மெல்ல எறிக' என்று வள்ளுவரே சொல்லியிருக்கிறார். அந்த அளவிலே.

'கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்.'

என்ற அந்தக் குறளுக்கேற்ப, நீண்டநாள் செல்வாக்கோடு இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றவர்கள், கையை ஓங்கி மெதுவாக அடிக்க வேண்டும். 'கடிதோச்சி மெல்ல எறிக' என்று இருக்கிறது. அப்படி கடிதோச்சப்பட்டதுதான் POTA சட்டம், இப்போது மெல்ல எறிகிற கட்டத்திற்கு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கணினிப் பயிற்சி

உரை : 58 **நாள் : 20.4.1999**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.சுப்பராயன் அவர்கள் இங்கே எழுதியுள்ள இந்தப் பிரச்சினை மிக முக்கியமான ஒரு பிரச்சினை. அரசின் சார்பில் தமிழகத்திலே எதிர்கால இளைஞர்கள் Computer- கணினிப் பயிற்சி மூலமாக வேலை வாய்ப்புகளை நிரம்பப் பெறவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு நிதிநிலை அறிக்கையிலே ஒரு அறிவிப்பைச் செய்திருக்கின்றோம். 1,200 மேல்நிலைப் பள்ளிகளில் 11 ஆவது, 12 ஆவது வகுப்புகளில் கணினிப் பயிற்சி அளிக்கப்படும் என்றும், அந்தப் பயிற்சி அளிப்பதற்கு நிறுவனங்கள் மூலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும், அந்த முயற்சியில்கூட இன்னின்ன நிறுவனங்கள் என்று அரசே குறிப்பிடாமல், ஒப்பந்தப் புள்ளி - tender - கோரப்பட்டு, தகுதியுடைய நிறுவனங்கள் அந்த ஒப்பந்தப் புள்ளிகளிலே கலந்து கொண்டு போட்டியிட்டு, அவர்கள் - நிறுவனங்கள் - மூலமாக இந்தக் கணினிப் பயிற்சியைப் பள்ளிகளிலே தொடங்கலாம் என்கின்ற எண்ணத்தோடு கடந்த 20-3-1999 அன்று ஏடுகளிலே விளம்பரங்கள் செய்யப்பட்டன. அந்த ஒப்பந்தப் புள்ளிகள் 19-4-1999 அன்று திறக்கப்பட்டு. அறிவிக்கப்படும் என்றும் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

1,200 மேல்நிலைப் பள்ளிகளில் விருப்பப் பாடமாக கணினிப் பாடத்தை எடுத்துக்கொண்டு, அதிலே வெளிவருகின்ற மாணவர்கள், ஆண்டுதோறும் ஒரு பள்ளிக்கு 40 பேர் என்றால், ஒவ்வொரு ஆண்டும் 48 ஆயிரம் பேர், குறைந்தது 48 ஆயிரம் பேர் Software பயிற்சி பெற்றவர்களாக வெளியே வருவார்கள்;

வேலைவாய்ப்புக்கு உரியவர்களாக வெளிவருவார்கள் என்ற நல்ல எண்ணத்தோடுதான் இந்த அறிவிப்புச் செய்யப்பட்டு, அதற்கான விளம்பரமும் செய்யப்பட்டு, 19ஆம் தேதி அந்த ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. இடையில் சந்திரவதனம் மற்றும் நான்கு பேர் ஒரு வழக்கை உயர் நீதிமன்றத்திலே தொடுத்து, உயர் நீதிமன்றம் இந்த Tenders-ஐத் திறக்கக்கூடாது என்று இடைக்காலத்தடை விதித்திருப்பதாக, நம்முடைய திரு.சுப்பராயன் அவர்கள் இங்கே குறிப்பிட்ட... என்கின்ற வழக்கறிஞர் அவர்களே ஒரு தந்தியின் மூலமாக நம்முடைய Elcot நிறுவனத்திற்குச் செய்தியை அனுப்பினார்கள்.

உடனடியாக நீதிமன்றத்தை அணுகி, நீதிபதி முன்னிலையில் தலைமை வழக்கறிஞர், கூடுதல் தலைமை வழக்கறிஞர் இடைக்காலத் தடையை நீக்குமாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை நீதிபதிகள் ஏற்காமல் அரசு பிரதி வாக்குமூலம் தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறி, வழக்கை 21ஆம் தேதிக்கு ஒத்தி வைத்திருக்கின்றார்கள். எனவே, இந்த இடைக்காலத் தடையை நீக்குவதற்கு அரசு முயற்சி மேற்கொள்ளும். இங்கே கேட்டார்கள், என்ன காரணத்தால் இந்த இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது என்று. தடை விதிக்கப்பட வேண்டும் என்ற காரணத்தைத் தவிர, வேறு காரணம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மனுதாரர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், தங்களைப் போன்ற B.Sc., Computer Science படித்த பட்டதாரிகள் இருக்கும்போது, எங்களை விட்டு விட்டு இந்த ஒப்பந்தப் புள்ளிகளைத் திறப்பது நல்லதல்ல, நிறுவனங்களுக்கு அளிக்கக்கூடாது என்பதைப்போலத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளவில்லை எனக் கருதுகின்றேன்.

நாமே நேரிடையாக B.Sc., படித்தவர்களை, Computer Science படித்தவர்களை நியமிக்கவில்லை. ஆனால், இந்த ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்று, அதன் மூலமாகக்க குறிப்பிடப்படுகின்ற நிறுவனங்கள் இந்தப் பணியை ஆற்ற வரும்போது, அவர்கள் இந்த B.Sc., படித்தவர்களையும், Computer Science

படித்தவர்களையும் நிச்சயமாக எடுத்துக் கொள்வார்கள். அதிலே இந்த மனுதாரர்களும்கூட இருக்கலாம்; இல்லாமலும் போகலாம். அது வேறு விவகாரம். ஆனால், அரசாங்கமே நேரிடையாக எடுத்தால்தான் இவர்களெல்லாம் இந்த மனு போடுவதற்கு, இத்தகைய தடையை வாங்குவதற்குத் தகுதி இருப்பதாக என்னால் கருத முடியும்; ஆனால் நாம் அழைத்திருப்பதோ நிறுவனங்களை. நிறுவனங்கள்தான் இந்தப் பயிற்சி பெற்றவர்களை அமர்த்தி இவற்றைச் செய்ய முடியும்.

நாம் ஏன் நிறுவனங்களை இதிலே அழைத்திருக்கிறோம் என்றால், ஆண்டுக்காண்டு Computer-இலே Software முறை மாறக்கூடும். மாறிக்கொண்டே இருக்கிறது. நான் அதை பட்ஜெட்டிலேயே குறிப்பிட்டிருக்கின்றேன். நித்தம் நித்தம் மாறுகின்ற புதுமைகள்- புதுமைகள்கூட நித்தம் நித்தம் மாறும்- என்று குறிப்பிட்டிருக்கின்றேன். இந்த ஆண்டு புதுமையாக நாம் கருதுவது அடுத்த ஆண்டு புதுமையில்லாதவொன்றாக ஆகி விடும். எனவே, அரசாங்கமே இந்த Computers-ஐ வாங்கினால் அதிக நஷ்டத்திற்கு ஆளாக நேரிடும். எனவே, தனித்தனி நிறுவனங்கள்- மூலமாக இந்தப் பணியைச் செய்யச் சொல்ல லாம் என்றுதான் நிறுவனங்களுக்கு தாம் இந்தப் பணியை ஒப்ப டைப்பதற்காக, இத்தகைய ஒப்பந்தம் பற்றிய விளம்பரத்தைச் செய்தோம். அந்த விளம்பரத்தை வைத்து இதுவரையிலே 1,000 பேர் மனு செய்திருக்கிறார்கள். நேற்றைய தினம் இந்தச் செய்தியைப் படிக்காமல் சில பேர் எங்களைச் சுற்றிச் சுற்றி வர ஆரம்பித்து விட்டார்கள். ஏன், இந்த ஒப்பந்தம் இன்றைக்குத் திறப்பதாக இருந்தீர்களே, நாங்களெல்லாம் வந்திருக்கிறோமே, என்ற காரணத்தால் ஒப்பந்தம் திறக்கப்படவில்லை என்று அவர்களையெல்லாம் கேட்கத் தொடங்கிவிட்டார்கள்.

திரு.சுப்பராயன் அவர்கள் இங்கே சொன்னார்கள். அவ் வளவு வேகமாக என்னால் சொல்ல முடியாது. எப்பொழுதுமே கையிலே இருக்கிற அகப்பையில் உளுந்து இருந்தால் அல்லது பயறு இருந்தால் அல்லது பருப்பு இருந்தால் அதை வேகமாகச் சுழற்ற முடியாது. அது இல்லாத அகப்பையை வேகமாகச் சுழற்றலாம். திரு.சுப்பராயன் அகப்பையிலே உளுந்து இல்லை.

ஆகவே, வெறும் அகப்பையை வேகமாகச் சுழற்றுகிறார். என் கையிலே இருக்கிற அகப்பையிலே கொஞ்சம் உளுந்து இருக்கிறது அல்லது பயறு இருக்கிறது. வேகமாகச் சுழற்ற முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், நீதிமன்றங்கள் இதுபோன்ற இடைக்காலத் தடை கொடுக்கிற நேரத்தில், ஒரு நல்ல காரியத்திற்காகச் செய்யப்பட்டுள்ள இந்த அறிவிப்பை ஆனாலும் தொடர்ந்து நாம் மேல் முறையீடு செய்ய இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காமராஜர் மணி மண்டபம்

உரை : 59 **நாள் : 21.04.1999**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி கடற்கரையில் காமராஜர் அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில் காமராஜர் மணி மண்டபம் கட்டுவது பற்றி ஒரு செய்தியை இந்த அவையிலே தெரிவிக்க விரும்புகிறேன்.

19-4-1998 அன்று, கடந்த ஆண்டு, நாகர்கோயிலில் நடைபெற்ற ஜீவானந்தம் மணிமண்டபம் திறப்பு விழாவிலே பேசும்போது, கன்னியாகுமரியிலே காமராஜர் அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில், அவர்கள் நினைவாக மணிமண்டபம் கட்டப்படும் என்ற அறிவிப்பை நான் செய்திருந்தேன். பெருந் தலைவர் காமராஜர் மணிமண்டபம் அமைப்பதற்கான இடம் மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் 27-9-1996ஆம் நாளிட்ட ஆணையின்படி, கடற்கரையிலிருந்து 500 மீட்டர் தொலைவிற்குள் கட்டடங்கள் கட்டக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டப் பகுதியாகும். எனவே, இதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெறுவதற்காக தமிழக அரசின் சார்பில் 7-8-1998 அன்று கடிதம் அனுப்பப் பட்டது. இந்தக் கடிதத்திற்கு மத்திய அரசின் சுற்றுப்புறச்சூழல் மற்றும் வனத்துறை அனுப்பிய 7-10-1998 தேதிய பதில் கடிதத்தில் மேலும் சில விவரங்களைக் கோரியிருந்தார்கள். அந்த விவரங்கள் தமிழக அரசின் சார்பில் 21-1-1999 அன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. மேலும் இதற்கு நினைவூட்டுக் கடிதம், Reminder ஒன்று 22-2-1999 அன்று அனுப்பப்பட்டது. இதற்கு மத்திய அரசு அனுப்பிய பதில் கடிதத்தில் அந்த இடத்தில் நினைவகம் கட்டுவதற்கு அனுமதிப்பதற்கு இல்லை என்றும்,

அது தடை செய்யப்பட்ட இடம் என்றும், எனவே பரிசீலனை செய்வதற்கு இல்லை என்றும் தெரிவித்திருந்தார்கள். இதுபற்றிய விவரங்களை நிதிநிலை அறிக்கைக்குப் பதிலளிக்கும்போது நான் அவையிலே விளக்கியதோடு, 1-4-1999 அன்று மீண்டும் பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் பிரதமர் அவர்கள், இந்தப் பிரச்சினையில் தனிப்பட்ட முறையில் தலையிட்டு அந்த இடத்திலேயே பெருந்தலைவர் காமராஜர் நினைவிடம் கட்டுவதற்கு ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி அனுமதிக்க வேண்டுமென்று எழுதியிருந்தேன்.

மேலும் 19-4-1999 அன்று தமிழக அரசு சார்பில் மத்திய அரசுக்கு அனுப்பிய Fax செய்தியில் குறிப்பிட்ட இடத்திற்கு அருகிலேயே காந்தி மண்டபம் உள்ளது என்றும், மேலும் பல கட்டடங்கள் அந்தப் பகுதியிலே கட்டப்பட்டுள்ளன என்றும், எனவே அந்த இடத்தை, கடற்கரை ஒழுங்குமுறைப்படுத்தப் பட்ட பகுதி II என்று எடுத்துக்கொண்டு அங்கேயே காமராஜர் மணி மண்டபம் கட்ட அனுமதிக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது. இதற்குப் பிறகு நேற்று இரவு மத்திய அரசின் சுற்றுப்புறச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் தமிழக அரசுக்கு அனுப்பியுள்ள Fax செய்தியில் குறிப்பிட்டுள்ள தகவல் வருமாறு :

கன்னியாகுமரியிலுள்ள காந்தி மண்டபத்தை அடுத்துள்ள நிலப் பகுதியை CRZ-I என்பதிலிருந்து CRZ-II என மறுவகைப் படுத்தல் என்ற தலைப்பில் அனுப்பியுள்ள செய்தி :

கன்னியாகுமரியில் திரு. காமராஜருக்கு நினைவகம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கடற்கரையோர நிலப் பகுதியை CRZ-I என்பதிலிருந்து CRZ-II என மறுவகைப்படுத்தல் குறித்த முன்மொழிவை இந்த அமைச்சகம் பரிசீலித்து ஒப்புதல் அளித்துள்ளது என்ற செய்தி வந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இந்தப் பகுதியிலே எந்தவொரு வளர்ச்சிப் பணியையும் மேற்கொள்ளும்போது பின்வரும் நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ) எதிர்காலத்தில் வணிக அல்லது குடியிருப்பு வளாகங்கள் அங்கே கட்டப்படக்கூடாது;

(ஆ) அழகைக் காத்தல், பொதுமக்கள் நடமாட்டம் ஆகியவற்றைப் பராமரிப்பதில் வல்லுநர்களுடைய அறிவுரைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று அதிலே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந்த அனுமதியை வழங்கியதற்காக, ஒப்புதல் வழங்கியதற்காக மத்திய அரசுக்கு தமிழக அரசின் சார்பிலும், தமிழ் மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கணினிப் பயிற்சி

உரை : 60 **நாள் : 22.4.1999**

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வேறு ஒரு பிரச்சினையில் நீதிமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் இடையிலே ஏற்பட்டுள்ள பிணக்கு குறித்து நான் இந்த அவையிலே கருத்து தெரிவித்தபோது- இரண்டு மன்றங்களுடைய இறையாண்மையும் மதிக்க வேண்டும், போற்ற வேண்டும், காப்பாற்ற வேண்டும் என்ற கருத்தைத்தான் அறிவித்திருக்கின்றேன். நேற்று முன்தினம் நடந்தது- நம்முடைய நண்பர் சுப்பராயன் அவர்கள் கேள்வி வாயிலாக ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். கணினி பயிற்சி, தமிழகத்திலேயுள்ள 1200 மேல்நிலைப் பள்ளிகளில் ஒவ்வொரு ஆண்டும் 48,000 மாணவர்கள் சாஃப்ட்வேர் கற்று, வேலைவாய்ப்புக்குத் தகுதியுடையவர்களாக ஆக வேண்டும் என்பதற்காக அரசாங்கமே இதற்காக யாரையும் நியமிக்காமல், பட்டதாரிகளையோ பி.எஸ்.சி. அல்லது கம்ப்யூட்டர் சயின்ஸ், படித்தவர்கள் யாரையும், தானாக நியமிக்காமல் பயிற்சி நிறுவனங்களுக்கு டெண்டர் விடப்பட்டு அந்த நிறுவனங்கள் அத்தகைய பட்டதாரிகளை நியமித்துக் கொள்ளலாம் என்ற அளவில் 19-ஆம் தேதியன்று பிரிக்கப்படக்கூடிய அளவிலே ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரி, ஒப்பந்தப்புள்ளிகளை ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள், தங்கள் அந்தப் பணியை மேற்கொள்வதாக எடுத்துச் சொல்லி, அரசுக்கு அனுப்பியிருந்ததையொட்டி, அந்த ஒப்பந்தப் புள்ளிகளைப் பிரிக்கக்கூடாது என்று ஒருசிலர் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று இடைக்காலத் தடையாணை கோரியபோது தடையாணை உடனடியாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

அதைப்பற்றித்தான் இங்கே பிரச்சினை எழுப்பப்பட்டது, உதாரணமாக ஒரு பள்ளிக்கூடம் அல்லது ஒரு மருத்துவமனை அல்லது ஒரு பாலம் அல்லது ஒரு அணைக்கட்டு கட்ட வேண்டுமென்றால், அரசு ஒப்பந்தப்புள்ளி கோருகிறது. அதுவும், இந்த அரசு ஒளிவு மறைவில்லாத திறந்த ஒப்பந்தப் புள்ளிகளைக் கோரும் என்று தொடக்கத்திலேயே உறுதி யளித்து, பொறுப்பேற்றபோதே உறுதியளித்து அவ்வண்ணமே நடைமுறையிலே இருந்து வருகின்றது.

பாலமோ அல்லது சாலையோ அல்லது கட்டடங்களோ ஒப்பந்தப்புள்ளி மூலமாக எடுப்பவர்கள் அதற்குரிய பொறி யாளர்கள், பணியாளர்களை வைத்து, அந்தப் புள்ளியை முடிப்பது அவர்களுடைய கடமை. அதைப்போலத்தான் இந்தக் கணினி பயிற்சிக்காக நிறுவனங்கள் முன்வந்து, அவர்கள் இந்த ஒப்பந்தப்புள்ளியிலே வெற்றி பெற்று அதைத் தொடர்ந்து நடத்த முன்வந்தால், பட்டதாரிகளை, பயிற்சி பெற்ற கணினி பட்டதாரிகளை அந்தப் பணியிலே அமர்த்துவது, அவர்க ளுடைய பொறுப்புத்தான். இதிலே அரசுக்கு எந்தவிதமான பொறுப்பும் இல்லை.

இந்த அடிப்படையிலேதான் ஒப்பந்தப்புள்ளி கோரப் பட்டு அது 19-ஆம் தேதியன்று திறந்து பார்க்கவிருந்த நேரத்தில் இந்தத் தடை வந்துவிட்டது. இந்த முக்கியமான பிரச்சினையில் தமிழகத்திலேயுள்ள இளைஞர்கள், மாணவர்கள், எதிர்காலத் திலே கணினிமயமான இந்த யுகத்திலே வாழப்போகின்றவர் களுக்காக அரசு அறிவித்த ஒரு நல்ல திட்டத்திற்குத் தடை வந்து விட்டதே என்ற கவலையில் நம்முடைய சுப்பராயன் அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள். நான் அதைப்பற்றிச் சொல்லும் போது இப்படி நல்ல காரியங்களுக்காக இடைக்காலத் தடை அடிக்கடி நீதிமன்றங்களால் தரப்படுகிறது. ஆகவே, அந்தக் காரியங்களைச் செய்ய முடியவில்லை என்ற ஆதங்கத்தைத்தான் வெளிப்படுத்தினேயல்லாமல் தனிப்பட்ட ஒரு நீதிபதியைப் பற்றியோ அவருடைய தீர்ப்பைப் பற்றியோ எதுவும் சொல்லவில்லை. ஆனால், சில பத்திரிகைகளில் Mind apply செய்யவில்லை என்று நான் சொன்னதைப்போல செய்தி

வெளியிட்டிருக்கிறார்கள். நான் சொன்னதெல்லாம் ஒரு வேளை அரசாங்கத் தரப்பிலே வாதாடிய வழக்கறிஞர்கள் இந்த விவரங்களை நீதிபதிகளுக்குச் சொல்லாமல் இருந்திருக்கலாம் என்ற அந்த அர்த்தத்திலேதான் நான் சொன்னேன். எப்படியோ. பத்திரிகையில் வந்த செய்திகளை வைத்துக் கொண்டு மாண்பு மிகு நீதிபதி அவர்கள், தங்களையும் நான் சொன்ன கருத்தையும் திரு.சுப்பராயன் அவர்கள் சொன்ன கருத்தையும் விமர்சித்து இது நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து எடுக்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கின்றார்கள். இதில் சுப்பராயன் கூறும்போது நான் பெருந்தன்மையாக நடந்து கொள்வேன் என்று சொல்லி, அது கோழைத்தனம் என்பதைப்போல சொல்லாமல் சொன்னார்கள். பெருந்தன்மை சில நேரங்களில் கோழைத்தனமாகக் கருதப்படும். ஆனால், கோழைத்தனம் என்று கருதப்பட்டாலும் பெருந்தன்மை என்றைக்கும் நிலைக்கக்கூடியது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதையும் நாம் மறந்துவிடக்கூடாது. மீண்டும் மீண்டும் தொடர்ந்து இரண்டு இறையாண்மைமிக்க மன்றங்களுக்கிடையே தகராறுகள் வேண்டாம் என்பதுதான் என்னுடைய கருத்தாகும். நமக்குக் காரியம் முக்கியம். காரியம் என்றால், இந்த ஆட்சிப் பொறுப்பிலே ஏதோ இருக்க வேண்டும் என்ற அந்தக் காரியமல்ல. 50 ஆயிரம் பேரை கணினி இளைஞர்கள், ஆண் டொன்றுக்கு ஏறத்தாழ 50 ஆயிரம் பேரை கணினி பயிற்சி பெற்றவர்களாக சாஃப்ட்வேர் கற்றவர்களாக வேலைவாயப்புப் பெற தகுதி பெற்றவர்களாக உருவாக்குகின்ற அந்தப் பொற் காலம் உருவாக வேண்டும் என்பதான அந்தக் காரியம்தான் நமக்கு முக்கியம்.

பாரதத்திலே ஒரு நிகழ்ச்சி உண்டு. பேச்சு நீளமாகப் போனாலும் தயவுசெய்து மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் மன்னித்துக் கொள்ள வேண்டும். பாரதத்தில் அர்ச்சுனன் மீது ஒரேயொரு முறைதான் அம்பு எய்த வேண்டும் என்று அவனுடைய தாயார் கர்ணனிடத்திலே கேட்டு, கர்ணனும் ஒத்துக்கொண்டு, ஒரேயொரு கணையைத்தான் விடுவேன். அதில் அர்ச்சுனன் நிச்சயமாக இறந்து விடுவான் என்று சொல்லி அந்த அம்பை எய்தான். அந்த நேரம் பார்த்து சாரத்தியம் செய்து

கொண்டிருந்த கிருஷ்ண பரமாத்மா தேர்க்காலை தன்னுடைய பெருவிரலால் அழுத்த, தேர் கீழே அமுங்கி விட்டது. எய்யப் பட்ட அந்த அம்பு அர்ச்சுனனுடைய கிரீடத்தை மாத்திரம் பறித்துக் கொண்டு போய்விட்டது. அந்த நேரத்திலே கிருஷ்ண பரமாத்மா அந்தத் தேர்க்காலை ஒரு அடி கீழே அழுத்தாமல் இருந்திருந்தால் அர்ச்சுனனுடைய தலையே போயிருக்கும். இப்போது தலைக்குப் பதிலாக தலைப்பாகைதான் போயிற்று. எனவே தலைப்பாகை போகின்ற அளவுக்குத்தான் நம்முடைய பெருந்தன்மை இருக்கும். அதற்காகத் தலையை இழந்துவிடக் கூடாது. எதிர்கால இளைஞர்களுக்கான காரியத்தை விட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கின்றேன்.

நான் சொன்ன அந்தக் கருத்து, அன்றைக்குத் தெரிவித்த கருத்து நீதிமன்றத்திற்கு மனப் புண்ணை ஏற்படுத்தியிருக்கு மானால் அதற்காக நான் வருந்தக்கூடச் செய்கிறேன். ஏனென்றால், ஒரு பொறுப்பிலே இருப்பவன் இரண்டு மன்றங்களுக்கிடையே நடைபெறுகின்ற போட்டாபோட்டியை வளர விடுவது சரியல்ல. அதற்கு நானே காரணமாக இருப்பது சரியல்ல. எனவே, இப்பிரச்சினையை தங்களுடைய விருப்பத் திற்கு விட்டுவிடுகின்றேன் தாங்கள் குறிப்பிட்ட பகுதியை அவைக் குறிப்பிலிருந்து எடுத்தால், நண்பர் சுப்பராயன் அவர்களின் ஒப்புதல் இதற்கு இல்லையென்றால்கூட - எனக்காக ஒப்புதல் தருவார் என்று கருதி, இந்த விளக்கத்திற்குப் பிறகும் மறுக்க மாட்டார் என்ற எண்ணத்தோடு அன்றையதினம் நானும் அவரும் பேசிய பேச்சிலே ஏதாவது வேண்டத்தகாத செய்திகள் வார்த்தைகள் இருக்குமேயானால் அவற்றை அவைக் குறிப்பிலேயிருந்து எடுப்பதில் எனக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கோவை சட்டம் ஒழுங்குப் பிரச்சினை

உரை : 61 **நாள் : 4.5.1999**

மாண்புமிகு கலைஞர் திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் இந்த விஷயம் குறித்துப் பேசிவிட்டு இறுதியாகச் சொன்ன அந்த வேண்டுகோள், இந்த வழக்கைத் திரும்பப் பெற்று, சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால், நடைபெற்ற சம்பவம் - அவர் ஊரிலேயிருந்தும்கூட- அவருக்குத் திரித்துக் கூறப் பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. இதுபோன்ற சம்பவங்கள், சிறிய சிறிய விஷயங் களுக்காக உருவாவது நல்லது அல்ல என்பதை நாம் அனை வரும் உணர்ந்தாக வேண்டும். மற்றவர்களுக்கும் உணர்த்தியாக வேண்டும்.

கோவையிலே உள்ள காவல் ஆணையரைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நன்கு அறிவார்கள். (குறுக்கீடு) உட்கார்ந்து கொண்டே சொல்கிறார்கள் அவர் நல்ல ஆள் என்று. அதனாலே Record பண்ணுகிறோம். அவ்வளவுதான். (சிரிப்பு) திருச்சியிலே இருந்த அவரை அழைத்து கோவைக்குச் சென்று பணியாற்றுமாறு கேட்டுக் கொண்டபோது அவர் எனக்குச் சொல்லியனுப்பியதே யாரும், அங்குள்ள கட்சிக்காரர்களோ அல்லது அமைச்சர்களோ தலையிடாவண்ணம் என்னைச் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நிச்சயமாக இந்த அரசு குறுக்கிடும் முறையை என்றைக்கும் கடைபிடித்தது இல்லை, அதிலும் குறிப்பாக, கோவையைப் பொறுத்தவரையில் உங்கள் விருப்பம் போல், சட்டப்படி, நியாயப்படி நடந்து

கொள்ளலாம், யாரும் குறுக்கிடமாட்டோம், அப்படிக் குறுக்கிடு கின்ற பழக்கமும் இந்த அரசுக்கு இல்லை என்று, அவரை அழைத்து நான் சொல்லியனுப்பினேன். இதுவரையிலும் அத்தகைய ஒரு நல்ல பெயரை அவர் அங்கே எடுத்து வருகின்றார் என்பதையும் கோவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். அதைப்பற்றி எனக்குத் தரப்பட்டுள்ள விவரத்தை உங்கள் முன்வைக்க விரும்புகின்றேன்.

டெல்லியில் நிதித் துறையிலே கூடுதல் அரசுச் செயலாள ராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற திரு.உன்னி நாயர் என்பவ ருடைய மனைவி திருமதி ஜெயலட்சுமிக்கு, கோவை மாநகர ராஜ வீதியில் 229 ஆம் எண்ணில் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள மிகப் பெரிய வீடு ஒன்று உள்ளது. இந்த வீட்டை 1973ஆம் ஆண்டு திரு.கோவிந்தாச்சாரி என்பவருக்கு, வாடகைக்காக திருமதி ஜெயலட்சுமி விட்டிருந்தார்கள். அதற்கான ஆவணங்கள் உள்ளன. திரு.கோவிந்தாச்சாரி 1980 ஆம் ஆண்டு இறந்தவுடன், அவரது மகன் சேஷகிரி, தனது தந்தை கோவிந்தாச்சாரி இருந்த அறைகளில் வசித்து வந்துள்ளார். வீட்டின் மீதமுள்ள அனைத்து அறைகளும் வீட்டு உரிமையாளரிடமே இருந்திருக்கின்றன.

இந்நிலையில், உன்னி நாயருடைய மனைவி ஜெய லட்சுமி- வயது அவருக்கு 75 - அவர்கள், தனது வீட்டினுள்ளே குடியிருந்து வருவதை அறிந்து அதுபற்றி விசாரித்திருக்கிறார். திரு.சேஷாத்திரியின் உடந்தையுடன், ஆறு குடும்பத்தினர் அந்த வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து குடியிருப்பதை முழுமையாக அறிந்தவுடன், 23-4-1999 அன்று பி-1 கடைவீதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அந்தப் புகார் 23/99, நாள் 23-4-1999 என்ற எண்ணாகப் பதிவு செய்யப்பட்டு, பூர்வாங்க விசாரணைக்குப் பின், அரசு சட்ட வல்லுநரிடம் கருத்துக் கேட்கப்பட்டபோது, சம்பந்தப்பட்ட வீட்டை ஆக்கிரமிப்புச் செய்து இருப்பவர்களுக்கு, சேஷகிரியும், சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்பட்டுள்ளார்கள். கிரிமினல் அத்துமீறலுக்கான குற்றத்திற்கு உள்ளானவர்கள்; ஆகவே, வழக்குப் பதிவு செய்து கிரிமினல் நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்' என்று சட்டக்

கருத்து தெரிவித்ததன் பேரில் 24-4-1999 அன்று சேஷகிரியை மீண்டும் ஆய்வாளர் திரு.செல்வராஜ் விசாரணை செய்துள்ளார். அப்போது, தவறாகக் குடியிருக்க அனுமதித்து விட்டதாகவும், அவர்களை உடனடியாகக் காலி செய்துவிடுகிறேன் என்றும், கிரிமினல் வழக்குத் தேவையில்லை என்றும் கேட்டுக் கொண்ட தன் பேரில், ஆய்வாளர், கிரிமினல் வழக்குப் பதிவு செய்ய வில்லை.

25-4-1999 அன்று திருமதி ஜெயலட்சுமி, காவல் நிலையத்திற்கு வந்து, அவர்களுக்குள்ளேயே பிரச்சினையைப் பேசிமுடித்துக் கொண்டு விட்டதாகவும், திரு.சேஷாத்திரி அந்த வீட்டில் குடியிருந்த ஆறு குடும்பங்களையும் காலி செய்துவிட்டு, கட்டடத்தைத் தன்னிடம் கொடுத்து விட்டதாகவும் தெரிவித்ததன் பேரில், ஆய்வாளர் மறு விசாரணையை முடித்துக்கொண்டு கிரிமினல் வழக்குத் தொடராமலேயே விட்டுவிட்டார். சேஷகிரியினால், சட்டத்திற்குப் புறம்பாக, மேலே கண் வீட்டில் அத்துமீறி குடியிருக்க வைக்கப்பட்டவர்களுள் ஒருவர் திரு.அசோகன் என்ற வழக்குரைஞர். அவர் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்தவர். த.மா.கா.வைச் சேர்ந்தவரும் அல்ல, தி.மு.க.வைச் சேர்ந்தவரும் அல்ல, ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்தவர். அவர், தான் ஊரிலே இல்லாத நாளில், காவல்துறை யினரின் தலையீட்டின்பேரில், தனது வீடு காலி செய்யப்பட்டது என்று சுமார் 50 வழக்குரைஞர்களோடு 28-4-1999 அன்று மாலை 3.15 மணியளவில் (15.15) கோவை நீதிமன்ற வளாகத்தி லிருந்து, சட்டத்திற்குப் புறம்பாக, ஊர்வல ஒழுங்குமுறைச் சட்டம் அமலில் இருந்துகொண்டிருக்கும்போதே, எந்த அனுமதி யும் பெறாமல், ஊர்வலமாக ராஜவீதியில் அமைந்துள்ள சம்பந்தப்பட்ட வீட்டிற்குக் கோஷங்கள் எழுப்பி, வழக்குரைஞர் சங்கத் துணைத்தலைவர் செந்தில்வேல், செயலாளர் ராதா கிருஷ்ணன், துணைச் செயலாளர் ஜெயந்தி ஆகியோர் தலைமை யில் நடந்து சென்றார்கள். வீட்டிற்குச் சென்றவுடன், வீட்டின் முகப்பிலிருந்த காவலாளி ஜீவராஜ் என்பவரை அடித்துத் துரத்தித் தள்ளியுள்ளார்கள். கதவை உடைத்து அத்துமீறி உள்ளே நுழைந்தார்கள்.

அப்போது, சம்பவத்தைக் கேட்டு, சம்பவ இடத்திற்குச் சென்ற உதவி ஆய்வாளர் திரு.பாலமுருகன், அவர்களைத் தடுத்து நிறுத்த முயன்றபோது, அவர் வழக்குரைஞர்களால் பிடித்துத் தள்ளப்பட்டிருக்கிறார். சுமார் ஒரு மணி நேரம் வீட்டிற்குள் 75 வயதான திருமதி ஜெயலட்சுமியையும் அவரது மகள் திருமதி இந்திராவையும் வெளியில் வரச்சொல்லி, அச்சுறுத்தி, வெளியே வரவில்லை என்றால் வீட்டிற்குத் தீ வைத்துவிடுவோம் என்று சத்தமிட்டுள்ளார்கள். மிரட்டலுக்குப் பயந்து ஜெயலட்சுமியும், இந்திராவும் வெளியிலே வந்த பின்பு, உயர்நீதிமன்றத்திலே வழக்குத் தொடருவோம், உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடருவோம், நிம்மதியாக வீட்டில் குடியிருக்க முடியாது, டெல்லிக்குச் செல்ல முடியாது என்று அச்சுறுத்தி, திரு.அசோகனுக்காகவும் அவரது சகோதரர் திரு.ராஜேந்திரனுக்காகவும், இரண்டு குடியிருப்புகளுக்கான சாவிகளைக் கட்டாயப்படுத்திப் பெற்றுக் கொண்டு கலைந்து சென்று விட்டார்கள்.

வழக்குரைஞர்களின் சட்டத்திற்குப் புறம்பான செயல்கள், காவல் துறையினரால் முழுவதும் வீடியோ படமாகவும், புகைப் படமாகவும் எடுக்கப்பட்டிருக்கிறது.

உதவி ஆய்வாளர் பாலமுருகன் கொடுத்த புகாரின் பேரில், சட்டத்திற்குப் புறம்பாக ஊர்வலம் வந்ததற்காகவும், உதவி ஆய்வாளரைப் பணி செய்யவிடாமல் தடுத்து அச்சுறுத்தியதற்காகவும், பி-1 கடை வீதி காவல் நிலையக் குற்ற எண் 983/99, சட்டப் பிரிவுகள் 147, 188, 353 மற்றும் 508(1) இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

திருமதி ஜெயலட்சுமியையும் அவரது மகளையும் அச்சுறுத்தி வீட்டை முற்றுகையிட்டு, கட்டாயத்தின் பேரில் சாவியை வாங்கி, மீண்டும் திரு.அசோகனும் அவரது சகோதரர் ராஜேந்திரனும் இரண்டு குடியிருப்புகளைச் சட்ட விரோதமாக ஆக்கிரமித்துக் கொண்டதற்காக பி-1 கடைவீதி காவல் நிலையக் குற்ற எண் 984/99, 341, 147, 448, 427, 506 (2), 323, 386

இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகள் மற்றும் தமிழ்நாடு சொத்து (சேதப்படுத்துதல் மற்றும் அழித்தல்) தடுப்புச் சட்டம், 1992-ன் பிரிவு 3-ன் கீழும் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணையிலே உள்ளது.

வழக்குரைஞர் திரு.அசோகனும் அவரது கட்சியைச் சேர்ந்த சில வழக்குரைஞர்களும், சிவில் வழக்கில் காவல் துறையினர் அத்துமீறித் தலையிட்டுள்ளனர் எனக் குற்றம் சாட்டியுள்ளார்கள். அக்குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது. முதல் சம்பவத்தில், எந்தவிதமான சிவில் சம்பந்தப்பட்ட வழக்கும் இல்லை. திரு. அசோகனும் அவரது சகோதரனும் இன்னும் நால்வரும் திருமதி ஜெயலட்சுமி வீட்டினுள் குடியிருந்தது சட்டத்திற்குப் புறம்பானது. வீட்டின் உரிமையாளர் அவர்களை அனுமதிக்கவில்லை. வீட்டின் ஒரு பகுதியிலே வாடகைதாரரான சேஷகிரி என்பவர் அசோகனையும் பிறரையும் சட்டத்திற்குப் புறம்பாக, பணம் வாங்கிக்கொண்டு வீட்டில் குடியமர்த்தியிருக்கிறார்.

இச்செயல், சட்டத்தை மீறிய கிரிமினல் அத்துமீறல் குற்றமாகும். திரு.அசோகனும், திரு. சேஷாத்திரியும் இந்தக் கட்டடத்தை முழுமையாக அபகரித்துக்கொள்ளத் திட்ட மிட்டிருக்கிறார்கள்.

தான் இல்லாத நேரத்தில் தன் வீட்டுப் பொருள்களை எல்லாம் வெளியே தூக்கி எறிந்து விட்டதாக வழக்குரைஞர் அசோகன் கூறுவது தவறாகும். அந்த வீடு அசோகன் வீட்டிலே இல்லாத நேரத்தில் அவருடைய இல்லத்திலே இருந்தவர்கள் வீட்டைக் காலி செய்ய அவர்களே ஒப்புக்கொண்டு, காலி செய்து கொடுத்திருக்கிறார்கள்.

முதல் விசாரணையிலே, காவல் துறையினர் எந்த இடத்திலும் அசோகனை நேரிடையாகச் சந்திக்கவில்லை. அசோகனையும் பிறரையும் சட்டத்திற்குப் புறம்பாக குடியமர்த்திய சேஷகிரி அவர்களே, வழக்கு வேண்டாம் என்று திருமதி ஜெயலட்சுமியிடம் சொல்லி, சட்டத்திற்குப் புறம்பாகக் குடியிருப்பவர்களைக் காலி செய்து வீட்டை உரிமையாளர்களிடம்

ஒப்படைத்ததின் பேரில் கிரிமினல் வழக்குப் பதிவு செய்யப் படவில்லை.

வீட்டு உரிமையாளரின் எந்தவிதமான எழுத்து மூலமான அல்லது வாய்மொழி மூலமான உத்திரவின்றி வீட்டை ஆக்கிரமித்து குடியிருந்து வழக்குரைஞர் அசோகன் செய்த முதல் கிரிமினல் குற்றமாகும். மீண்டும் 28ஆம் தேதி சட்டத்திற்குப் புறம்பாக பிற வழக்குரைஞர்களோடு, அவர்கள் துணையோடு சென்று மீண்டும் சட்டத்தைக் கையிலே எடுத்துக் கொண்டு வீட்டை ஆக்கிரமித்தது இரண்டாவது குற்றமாகும்.

சக வழக்குரைஞர் ஒருவரின் உதவிக்காக மற்ற வழக்குரைஞர்களும் இணைந்து நீதிமன்றத்தை சில நாட்கள் புறக்கணித்த போதிலும் நேற்றையதினம் கிரிமினல் வழக்குரை ஞர்கள் அனைவரும் நீதிமன்றங்களுக்கு வருகை தந்துள்ளார்கள். சிவில் நீதிமன்றங்கள் தற்போது விடுமுறையிலே உள்ளன. மேலும் வழக்குரைஞர்கள் 8ஆம் தேதிக்குப் பிறகு பேசிக் கொள்ளலாம் என்று முடிவெடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

இதுபற்றிய செய்தியை கோவையிலே - உள்ள பத்திரி கையிலே கூட ‘‘வாடகை வீட்டுப் பிரச்சினை- ஊர்வலமாகச் சென்று வீட்டின் கதவை உடைத்த வழக்குரைஞர்கள் - எஸ்.ஐ.மீது தாக்குதல்’’ என்றும், ஆங்கில ஏட்டில் "Kovai lawyers take law into their own hands, assault S.I" என்றும் தலைப்பிட்டு செய்திகளை வெளியிட்டுள்ளன என்பதையும் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கோரியதற் கிணங்க இந்த வழ்க்கை இதற்கு மேல் தொடராமல் நிறுத்தி வைப்பதற்கு இந்த அரசு அவர்களுக்கு அறிவுறுத்தும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இனிமேலாவது இதுபோன்ற செயல்களில் வழக்குரைஞர்கள் உண்மை நிலையை அறியாமல் இத்தகைய கிளர்ச்சிகளில் ஈடுபடுவது சமுதாயத் திற்கு நல்லதல்ல என்பதை இந்த அவையின் மூலமாக அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

தென் மாவட்டங்களுக்கான குழு

உரை : 62 நாள் : 05.05.1999

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் இந்த அறிக்கையினை அவைமுன் வைக்கின்றேன்.

'தென் மாவட்டங்களில் உள்ள மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்திடவும், அவர்களின் கல்வி, பொருளாதார மேம்பாடு, வேலைவாய்ப்பு, தொழில் வளர்ச்சி போன்ற முன்னேற்றங்களை உருவாக்கிடவும், அரசு சார்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தறிந்து மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுத்தளிக்க உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும்' என்று 17-3-1999 அன்று இந்த அவையில் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். இந்த அறிவிப்பிற்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில், புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காக ''தென் மாவட்டங்களுக்கான சமூக, பொருளாதார தொழில் வளர்ச்சிக்கான உயர்நிலை ஆணையம்'' "High Power commission for Socio-economic and Industrial Development of Southern Districts" ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பின்வருமாறு :

(1) நீதியரசர் திரு. இரத்தினவேல் பாண்டியன், உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் - தலைவர்

(2) திரு. ஆர்.ஏ. சீதாராமதாஸ், I.A.S., - துணைத் தலைவர் (ஓய்வு)

(3) திரு. ஏ. வெங்கட்ராமன், I.A.S. - உறுப்பினர்

பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத் துறைச் செயலாளர் திரு. என். முருகன், I.A.S. இந்த ஆணையத்தின் செயலாளராக இருப்பார்.

ஆணையத்தின் தலைவர் நீதியரசர் திரு. இரத்தினவேல் பாண்டியன் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்தவர். துணைத் தலைவர் திரு. சீதாராமதாஸ் பிரிக்கப்படாத மதுரை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவராகப் பணிபுரிந்து அனுபவம் பெற்றவர். திட்டக் குழு உறுப்பினர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் தமிழக அரசில் வேளாண்மைத் துறை இயக்குநர், வேளாண்மைத் துறைச் செயலர், வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் போன்ற பொறுப்புக்களில் பணி புரிந்ததோடு மட்டுமல்லாமல் உலக வங்கியில் ஆலோசகராகவும் இருந்தவர்.

உயர்நிலை ஆணையத்தின் ஆய்வு வரம்புகள் Terms of reference பின்வருமாறு :

(1) புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், தேனி, தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்களில் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக உள்ளவைகளைக் கண்டறிதல்;

(2) மேற்கூறிய மாவட்டங்களில் உள்ள மக்களுக்குக் கல்வி, சமூக பொருளாதார மேம்பாடு, வேலைவாய்ப்பு போன்ற முன்னேற்றங்களை உயர்த்திட வழிவகைகளை ஆராய்தல்;

(3) மேற்கண்ட இனங்களில் தென் மாவட்டங்களில் உள்ள மக்களின் முன்னேற்றத்திற்கு அரசு சார்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து பரிந்துரை செய்தல்; மற்றும்

(4) மேற்படி பரிந்துரையின் அடிப்படையில் தென் மாவட்டங்களில் பொருளாதார வளர்ச்சிக்கான மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுத்தளித்தல்.

இந்த ஆணையம் ஜனவரி 2000-க்குள் தனது அறிக்கையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்புவனத்தில் நடைபெற்ற சம்பவம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் ஞானசேகரன் அவர்களும், தங்கமணி அவர்களும், கணேசன் அவர்களும், சந்தானம் அவர்களும், திருநாவுக்கரசு அவர்களும், டி. மணி அவர்களும் சில விளக்கங்களை இங்கே வழங்கியிருக்கின்றார்கள். அதற்கு மாறுபட்ட விளக்கங்கள் எதையும் நான் இங்கே சொல்லப் போவதில்லை. ஏனென்றால், அவர்களே நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்து இங்கே கூறியிருக்கின்றார்கள். அதில், தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் தங்கமணி அவர்கள் இங்கே பேசியபொழுது தேவர் ஜெயந்திக்கு அனுமதி கொடுத்து, அப்பொழுது தரப்பட்ட அதே பாதுகாப்பு இப்பொழுது தரப்படவில்லை என்று கேட்டார்கள்.

திருவண்ணாமலையிலே, கார்த்திகை தீபம் என்பதுதான் ஆண்டுதோறும் நடைபெறுகிற பெரிய திருவிழா. அதைப்போல, ஒவ்வொரு முறையும் திருவண்ணாமலைக்குச் செல்கின்ற பக்தர்கள், 10 பேர் போகிறார்கள் என்றால், அதற்கெல்லாம், கார்த்திகை தீபத்திற்குத் தரப்படுகின்ற பாதுகாப்பு தர இயலாது. ஏனென்றால், இப்படிப்பட்ட சம்பவங்கள் எதையும் அதில் எதிர்பார்க்கவும் முடியாது. அதைப்போலத்தான் ஆண்டுதோறும் நடைபெறுகின்ற தேவர் ஜெயந்தி நடைபெற்று வருகிறது என்றாலும்கூட, இப்பொழுது ஒரு சிறப்பு நேர்வாக, தேவர் அவர்களுடைய நினைவிடத்திற்கு திரு. சண்முகையா பாண்டியன் சில குழுவினரோடு செல்லவேண்டும் என்று அனுமதி கேட்டபொழுது, அதைத் தடுக்கத் தேவையில்லை, அனுமதி அளிக்கலாம் என்று அரசின் சார்பில் அறிவுரை வழங்கப்பட்டு, காவல் துறையினர் அவர்களுக்கு அனுமதியும் வழங்கினார்கள். நம்முடைய உறுப்பினர் சந்தானம் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, அந்த இடத்தில் எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை. அந்த

நினைவுமண்டபம் இருக்கிற இடத்திலோ அல்லது அதற்குச் செல்கின்ற அருகிலுள்ள வழியிலோ எந்த அசம்பாவிதமும் நடைபெறவில்லை. இந்த நிகழ்ச்சிக்குச் செல்லவேண்டுமென்று விரும்பிய சிலர், திருப்புவனத்திலிருந்து புறப்பட்டபொழுது, வேன் சொந்தக்காரர்கள், அல்லது வேன் ஓட்டுகின்றவர்கள் வர மறுத்துவிட்ட காரணத்தால், அல்லது வேன் தர மறுத்துவிட்ட காரணத்தால், அவர்கள் கோபப்பட்டிருக்கிறார்கள். கோபமுற்று சாலை மறியலிலே ஈடுபடுவோம் என்று சொன்னபொழுது, காவல் துறையினர் அவர்களை அமைதிப்படுத்தி, நாங்கள் உங்களுக்குப் பேருந்துகளை வழங்குகிறோம், அதிலே செல்லலாம் என்று 40, 50 பேர்களுக்காக பேருந்து ஏற்பாட்டையும் செய்தார்கள். ஆனால், உரிய நேரத்திலே பேருந்து வராமல் சற்று தாமதமாகிவிடவே, ஆத்திரமடைந்து கூட்டத்தினர் அந்த வழியாக எல்லாப் பேருந்துகள்மீதும் கற்களை வீசி, அவைகளைப் பெருமளவுக்கு உடைத்து, சேதப்படுத்தி இருக்கிறார்கள். பத்திரிகையிலேகூட படங்க ளெல்லாம் வந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் அந்தப் பத்திரிகையை இன்று காலையில் பார்த்திருக்கக்கூடும் என்று கருதுகிறேன்.

இந்தப் பேருந்துகளை உடைத்தவர்கள், 11 பேர் அப்பொழுதே அதே இடத்திலேயே கைது செய்யப்பட்டிருக் கிறார்கள், அவர்களிலே ஜெகதீசன் என்கிற ஒரு இளைஞன், மாணவன் என்று போடப்பட்டு இருக்கிறது. அவர் அந்தப் பதினோரு பேரில் ஒருவராகக் கைது செய்யப்படுவதற்கு முன்னால், போலீசாரால் அவர் மரணமடைந்தார் என்றும் செய்திகள் வந்துள்ளன. அந்தக் காயத்தின் காரணமாக அவரை மருத்துவ சிகிச்சைக்காக, திருப்புவனம் மருத்துவமனைக்குக் காவலர்கள் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். சிகிச்சைக்குப் பின் காவல் நிலையத்திற்கு அவர் கொண்டுவரப்பட்டார். காவல் நிலையத்திலே மீண்டும் அவரது உடல் நிலை மோசம் அடைந்ததால் காவல் துறை வாகனத்திலேயே மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது செல்லும் வழியிலேயே அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி எனக்குத் தரப்பட்டிருக்கிறது.

இந்த தகவல் கிடைத்த உடன் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பவ இடத்திற்கு விரைந்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளரோடு ஆலோசனை நடத்தினார். இதற்கிடையில் நெடுஞ்சாலையிலே ஒரு பெரிய கூட்டம் கூடி, குற்றம் சாட்டப்பட்டு, போலீஸ் ஸ்டேஷனிலே அடைக்கப்பட்ட 11 பேரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்றும், காவல் நிலையத்திலே உள்ள அனைத்து காவல் துறை அலுவலர்களையும் தற்காலிகப் பணி நீக்கம் செய்ய வேண்டுமென்றும் கேட்டார்கள். இதிலே சாதித் தகராறு எதுவும் இல்லை. ஏனென்றால், அடிபட்டு இறந்துபோன அந்த இளைஞரும், அடித்ததாகச் சொல்லுகின்ற காவலர்களிலே 3 பேரும் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அந்த எஸ்.ஐ. வேண்டுமானால் வேறு ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர். 3 பேரும் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அடிபட்டவரும், இறந்தவரும் அதே சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். எனவே, சாதித் தகராறுக்கு இதிலே இடமில்லை. காவல் துறைக்கும் அங்குள்ள மக்களுக்கும் - ஆத்திரப்பட்ட மக்களுக்கும் - இடையிலே ஏற்பட்ட தகராறே தவிர இதிலே சாதி மோதலுக்கு எந்தவிதமான இடமும் கிடையாது.

அதன்பிறகு இறந்தவருடைய உடல் மதுரை, இராஜாஜி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு போஸ்ட்மார்ட்டம் செய்யப்பட்டு, இதுகுறித்து உடனடியாக எனக்கு மாவட்ட ஆட்சியர் தகவல் கொடுக்க, நான் அவருக்கு வழங்கிய அறிவுரையின் அடிப்படையில் கோட்டாட்சியருடைய விசாரணைக்கும் ஏற்பாடு செய்து, அந்த ஆய்வாளரும் - துணை ஆய்வாளரும் - உடனடியாக இடைக்கால பணி நீக்கம் செய்யப் பட்டிருக்கின்றார். எல்லார்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று ஒரு கிளர்ச்சி அங்கே நடந்தபோது, விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்ற உறுதிமொழியும் தரப் பட்டிருக்கின்றது. காவல் துறைக்குச் சொந்தமான 4 வாகனங்கள், வருவாய்த் துறைக்குச் சொந்தமான ஒரு லாரி, இவை எல்லாம் பெருமளவுக்குச் சேதப்படுத்தப்பட்டன.

அ ஃதன்னியில், கடைகளை அடைக்கச் சொல்லி தகராறு செய்து கடைகளிலே கற்கள் வீசப்பட்டிருக்கின்றன. உயிர்,

உடைமைக்குச் சேதம் ஏற்படும் சூழ்நிலை உருவானபோது அதைத் தவிர்க்க Buck - shot 4 குண்டுகளும், Plastic குண்டு ஒன்றும் வானத்தை நோக்கிச் சுடப்பட்டு கூட்டம் கலைக்கப் பட்டிருக்கின்றது, கண்ணீர் புகையும் பிரயோகிக்கப் பட்டிருக்கிறது.

நேற்று மாலை 5 மணி அளவில் டாக்டர் சேதுராமன் மற்றும் சில தலைவர்கள் இறந்தவருடைய தந்தையான வெள்ளக்கண்ணுவுடனும் மற்றும் சிலருடனும் வந்து, மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்துகொண்டு விவாதித்து, இறந்தவருடைய குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதியும் வழங்கப்பட்டு, தற்போது ஒரு அமைதியான சூழ்நிலை அங்கே உருவாகி இருக்கிறது என்ற தகவலும் கிடைத்திருக்கின்றது.

ஒரு சிறிய விஷயத்தை எவ்வளவு பெரிய கலவரமாக சில பேர் ஆக்கிவிட்டார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்துவிடக்கூடாது. அந்தக் குடும்பத்துக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி போதுமானது அல்ல என்று மாண்புமிகு உறுப்பினர்கள் ஞானசேகரன் அவர்கள், தங்கமணி அவர்கள், கணேசன் அவர்கள், திருநாவுக்கரசு அவர்கள், டி. மணி அவர்கள், சந்தானம் அவர்கள் ஆகிய அனைவரும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். பொதுவாக, இதுபோன்ற சாவுகளுக் கெல்லாம் ஏற்கெனவே 5 ஆயிரம் ரூபாய், 10 ஆயிரம் ரூபாய்தான் கொடுக்கப்பட்டுவந்தது. இந்த ஆட்சியில்தான் அது 50 ஆயிரமாக உயர்ந்து, இப்போது ஒரு இலட்சம் ரூபாய் வரையிலே கொடுக்கப்படுகிறது. கொடுக்க கொடுக்க அதிகம் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைப்பது இயல்பானது. இருந்தாலும் இந்தக் கோரிக்கையை நான் அலட்சியப்படுத்த விரும்பவில்லை. ஒரு மாணவனுடைய உயிர் பறிக்கப் பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? போலீஸ்தான் காரணமா? அல்லது தேவையில்லாத ஆத்திரம்தான் காரணமா என்பதை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்காகத்தான் ஆர்.டி.ஓ. விசாரணை வைக்கப்படுகிறது.

ஆர்.டி.ஓ. விசாரணை முடிந்த பிறகு இன்னும் அந்தக் குடும்பத்திற்கு அந்த மாணவனால், அவருடைய உயிர்

பிரிந்ததால் ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டி, அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு எந்த வகையிலெல்லாம் உதவி செய்ய வேண்டுமோ அந்த வகையிலேயெல்லாம் இந்த அரசு உதவி செய்யும் என்பதையும் நிதியை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமானாலும் அதிகப்படுத்திக் கொடுக்கும் என்பதையும் நான் இங்கே உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். வேண்டுமென்றே வேன்களைத் தரக்கூடாது என்று போலீசார் சொல்லிவிட்டதாக இங்கே ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. அப்படி போலீசார் சொல்லியிருப்பார்களேயானால், வேன் தர அதனுடைய உரிமையாளர்கள் மறுத்துவிட்ட உடன் பேருந்துகளை வழங்குவதற்கு போலீசார் முன்வந்திருப்பார்களா என்ற அந்தக் கேள்விக்கும், இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னவர்கள் விடை காண வேண்டும். எனவே, எல்லா வகையிலும் அமைதியாக இருக்கவேண்டும் என்று போலீசார் விரும்பியும்கூட, அவர்களையும் மீறி எந்தப் பக்கம் இருந்தோ உணர்ச்சி வசப்படக்கூடிய ஒரு சூழ்நிலை எழுந்து இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

இந்தச் சம்பவத்தை மேலும் ஊதிப் பெருக்கக்கூடிய அளவிற்கு யாரும் முன்வர மாட்டார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கின்றது. அந்த வகையிலே நல்ல கருத்துக்களை இங்கே எடுத்துரைத்த மாண்புமிகு உறுப்பினர்களுடைய இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பின் அடிப்படையில் என்னுடைய விளக்கம் இந்த அளவிற்குப் போதுமானது என்று கருதி அமர்கின்றேன். வணக்கம்.

திருச்சி, நாகை புயல் மழை

உரை : 63 **நாள்: 23.11.1999**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி, தஞ்சை, நாகை மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள இயற்கையின் சீற்றத்தின் விளைவால் பாதிக்கப்பட்டுள்ள, நிலைமைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கவலையையும் கருத்துகளையும் எடுத்துக் கூறுகின்றார்கள். நாம் எதிர் பார்த்தற்கு மேலாகவே தமிழகம் முழுவதும் பெருமழை பெய்துள்ளது. குறிப்பாக திருச்சி, மிகப் பெரிய அளவிலும், தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்கள் ஓரளவிற்கும் பாதிக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிவாரணப் பணிகளிலே முழு அளவில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார்கள். உணவு அமைச்சரை நேற்று மாலையிலேயே திருச்சிக்கு அனுப்பி வைத்திருக்கின்றேன். இன்று இரவு நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் திருச்சிக்குச் சென்று நிலைமைகளை அறிந்து ஆவன செய்திட இருக்கின்றார்.

திருச்சியில் நேற்றிரவு வரை 275 மில்லி மீட்டர் மழையும், திருவெறும்பூரில் 333 மில்லி மீட்டர் மழையும் பெய்துள்ளது. இந்த மழையின் காரணமாக குடமுருட்டி ஆற்றில் அதன் கொள்ளளவான ஐந்தாயிரம் கன அடிக்குப் பதிலாக 22 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்ததால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, இரு கரைகளிலும் உடைப்பு ஏற்பட்டதால் நகரத்தின் தாழ்வான பகுதிகளான சண்முகா நகர், எம்.எம்.நகர், குமரன் நகர், கீதா நகர், அம்மையப்ப நகர், இராமலிங்க நகர், தியாகராய நகர், பாத்திமா நகர், பெஸ்கி நகர், சிண்டிகேட் பேங் ஆபிசர்ஸ் காலனி, அம்மன் நகர் ஆகிய பகுதிகளில் நீர் தேங்கி வீடுகளிலும் வெள்ளம் புகுந்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 45 ஆயிரம் பேர் திருமண மண்டபம் மற்றும் பள்ளிகளில் தங்க வைக்கப்பட்டு பால் மற்றும் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. திருச்சி மாநகராட்சி மூலமும் மதிய உணவுக் கூடம் ஒன்று திறக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த மழையினால் திருச்சி மாவட்டத்திலே ஒரு பெண் இறந்துள்ளார். இறந்தவர்களுடைய வேறு சில விவரங் களையும் இறுதியில் தர இருக்கின்றேன். காவல் துறையில் 117 பெட்டாலியன் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். திருச்சி மாவட்டத்தில் கல்வி நிலையங்களுக்கெல்லாம் 22ஆம் தேதி விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஏற்கெனவே திட்டமிட்டு இன்றைக்கும் நாளைக்கும் நடத்துவதாக இருந்த தேர்வுகள் அனைத்தும் ஒத்திவைக்கப் பட்டுள்ளன.

திருச்சி அருகில் உள்ள திருவெறும்பூர்- மஞ்சத்திடல் ஆகிய இடங்களுக்கிடையில் தண்டவாளத்தை வெள்ளம் அரித்ததன் காரணமாக, பயணிகள் புகைவண்டி ஒன்று தடம் புரண்டு தரையிலே இறங்கிவிட்டது. பயணிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு அங்கிருந்து அகற்றப்பட்டுவிட்டனர்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 21ஆம் தேதியன்று 75.88 மில்லி மீட்டரும், 22ஆம் தேதியன்று 99.5 மில்லி மீட்டரும், மழை பெய்துள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் 21ஆம் தேதியன்று 70.89 மில்லி மீட்டரும், 22ஆம் தேதியன்று 118.14 மில்லிமீட்டரும் மழை பெய்துள்ளது. இரண்டு மாவட்டங்களிலும் பொது அறிவிப்பு சாதனங்கள் மூலம் பாதுகாப்பான இடங்களுக்குப் பொதுமக்கள் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். வெண்ணாறு, வெட்டாறு கட்டமைப்புகளில் அதிகபட்ச வெள்ள நிலையைத் தாண்டி நீர்வரத்து உள்ளது. வெட்டாறில் அதிக அளவு தண்ணீர் செல்ல

முடியும் என்றாலும், வெண்ணாறு கட்டமைப்பு அச்சுறுத்தலாக உள்ளது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

தஞ்சை மாவட்டத்தில், திருச்சி-தஞ்சை நெடுஞ்சாலையில் செங்கிப்பட்டியில் சாலை அரிப்பு ஏற்பட்டு, போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக, சாலையில் இருபுறத்திலும் பேருந்துகளை நிறுத்தி பயணிகள் மாற்றம் செய்யப்பட்டு போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தற்போது சாலை சீரமைப்பு செய்யப்பட்டு தஞ்சை-திருச்சிக்கு இடையே வழக்கம்போல போக்குவரத்துகள் சென்று கொண்டிருந்தன. தஞ்சைக்கும் திருவெறும்பூருக்கும் இடையே தனி ரெயில்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தஞ்சை மாவட்டத்தில் இந்தப் பெருமழை காரணமாக ஒரு குழந்தை இறந்துள்ளதாகவும் செய்தி வந்துள்ளது. தேசிய நெடுஞ்சாலைத்துறை, மாநில நெடுஞ்சாலைத்துறை, வருவாய்த்துறை அலுவலர்கள் இணைந்து பணியாற்றிவருகின்றார்கள். தஞ்சை மாவட்டத்தில் சுமார் 30 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர் வெள்ளத்திலே மூழ்கியது. தற்போது வெள்ளம் வடிந்து கொண்டிருப்பதால் பயிர்களுக்கு எதுவும் சேதம் ஏற்படாதென்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தேசங்களில் இறந்தவர்களுடைய எண்ணிக்கை பல்வேறு செய்திகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள்கூட ஒரு சரியான கணக்கைச் சொன்னதாக நான் கருத இயலாது. ஏனென்றால், இதுபோன்ற இயற்கைச் சீற்றங்கள் வருகின்ற நேரத்தில், மழை, வெள்ளம் இவற்றின், காரணமாக இறந்து போகின்றவர்கள் எண்ணிக்கை மாத்திரமல்லாமல் இயற்கையாகவே இறந்து போகிறவர்களையும் இந்த மழையின் காரணமாக, வெள்ளத்தின் காரணமாக இறந்துவிட்டவர்கள் என்று சொல்லி, சிலர் எல்லோரையும் நான் சொல்லவில்லை, ஒரு சிலர், இந்த நிதியைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்கள். இவற்றையெல்லாம் சரி பார்த்தவகையிலே, இதுவரையில் கிடைத்த விவரம், தஞ்சையிலே 4 வயது பெண்குழந்தை,

விழுப்புரத்திலே ஒருபெண்மணி, திருச்சியிலே ஒரு பெண் என்கிற அளவில் 6 சாவுகளைப் பற்றிய செய்திதான் கிடைத்திருக்கின்றது. மேலும் ஓரிருவர் பலியாகிக் கூட இருக்கலாம். அவற்றையெல்லாம் கணக்கிட்டு அவர்களுக்கு உரிய தொகை, ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கின்ற தொகை வழங்கப்படும். ஏற்கெனவே ஆயிரம் ரூபாயிலிருந்து இப்போது கடந்த ஆண்டு 15 ஆயிரம் ரூபாய் வரையிலே இதுபோன்ற சாவுகளுக்கு இந்த அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது.

அதைப்போலவே, குடிசைகள் முழுமையாக பாதிக்கப்பட்டிருந்தால் ஆயிரம் ரூபாயும், பகுதியாக பாதிக்கப்பட்டிருந்தால் 500 ரூபாயும் வழங்கப்பட்டு வருகின்றது. ஆடு மாடுகளுக்குக்கூட, கன்று இறந்தால் 3 ஆயிரம், மாடு இறந்தால், 5 ஆயிரம், ஆடு இறந்தால் ஆயிரம் ரூபாய் என்று இந்த அரசு புதிய நிவாரணத் தொகையையும் கடந்த இரண்டு ஆண்டுகளாக வழங்கி வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள்.

ஏற்கெனவே இதற்கு முன்னெச்சரிக்கையாக நாம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அ.தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் இங்கே குறிப்பிட்டார். வானொலி மூலமாக முன்னெச்சரிக்கை செய்யப்பட்டு இருக்கிறது. பள்ளமான பகுதியிலே இருந்தவர்கள் எல்லாம் உயரமான இடத்திற்கு உடனடியாகக் கொண்டு போகப்படவில்லை என்று சொல்லப்பட்டது. ஆனால் ஒன்றை நாம் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். என்னதான் அதிகாரிகள் சென்று தலைகீழாக நின்றாலும், அல்லது ஆபத்து வருகிறது என்று சொன்னாலும்கூட, தாழ்வான பகுதியிலே இருக்கின்ற மக்கள் உடனடியாக அவர்களுடைய சொல்லைக் கேட்டு அந்த இடத்தைவிட்டு அகன்று அதிகாரிகள் குறிப்பிடுகிற இடத்திற்கு வர சுலபத்தில் சம்மதிப்பதில்லை. அதன் காரணமாக அவர்களுக்கும் கஷ்டம், நிவாரண உதவிகளைச் செய்யச் செல்கின்ற அதிகாரிகளுக்கும், நமக்கும் பெரும் கஷ்டம் ஏற்படுவதை எல்லோரும் உணர்ந்தே இருக்கின்றார்கள்.

ஆனாலும், ஏதாவது, எதிர்க்கட்சி, என்கின்ற முறையிலே அந்த இலக்கணத்திற்கு ஏற்ப, அரசின் மீது குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்லப்பட்டதேயல்லாமல், மனச்சாட்சியுள்ள எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்; திடீரென்று வந்த மழை; அதனலே ஏற்பட்ட விபத்து, சேதம்- இவற்றையெல்லாம் அரசு நிச்சயமாகக் கணக்கெடுத்து உரிய உதவிகளைச் செய்யும் என்பதும் தெரியும். குடிசைகள், வீடுகள் சேதம் பற்றிய விபரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன; இவற்றைச் சேகரித்து முடித்தவுடன் உரிய நிவாரணம் அளிக்கப்படும்.

மூன்று மாவட்டங்களிலும் பொறுப்பிலிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மிகுந்த சுறுசுறுப்போடு, ஆர்வத்தோடு, அக்கறையோடு, கவலையோடு இந்தக் காரியங்களில் ஈடுபட்டு இருக்கின்றார்கள். அரசும் தக்க நிவாரணத்தை வழங்கவும், பாதிக்கப்பட்ட இடங்களையும், பகுதிகளையும் உடனடியாகச் சீர் செய்யவும் முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவலையோடு என்னுடைய கவலையையும் இணைத்து வீடு இழந்தோர், உயிர் இழந்தோர் குடும்பங்களுக்கெல்லாம் என்னுடைய ஆறுதல்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சார்பாகத் தெரிவித்து அமர்கின்றேன்.

முத்து தேவன்பட்டி

உரை : 64 நாள்: 06.04.2000

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இதே மன்றத்திலே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் அப்போது அமைச்சராக இருந்த நண்பர் குழந்தைவேலு அவர்கள் தேனியிலே முத்துதேவன்பட்டியில் நான் நிலம் வாங்கியிருப்பதாக, என் பிள்ளைகளின் பெயரால் நிலம் வாங்கியிருப்பதாக ஒரு குற்றச்சாட்டை வெளியிலே சொன்னார். அதை அவையிலும் சொன்னார். அப்போதும் நானும் அன்றைய சக உறுப்பினராக இருந்த தம்பி துரைமுருகனும் ''இதை நிரூபிக்க முடியுமா. ஆதாரம் இருக்கிறதா'' என்று கேட்டபோது, ''இருக்கிறது'' என்று சொன்னார். ''அப்படியென்றால் நிரூபிக்க வேண்டும்'' என்று நான் சொல்லிவிட்டு, ''நீங்கள் நிரூபித்தால் நான் என்னுடைய பதவியை ராஜினாமா செய்கிறேன். நீங்கள் நிரூபிக்காவிட்டால் நீங்கள் உங்கள் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்'' என்று கேட்டேன். அந்த அறைகூவலை அவர் ஏற்றுக்கொண்டார். மறுநாள் ஆதாரம் தருவதாகச் சொன்னார். அப்போது சபாநாயகராக இருந்த அருமை நண்பர் மாண்புமிகு ராஜாராம் அவர்கள் அந்த ஆதாரத்தைத் தன்னிடம் மறுநாள் கொடுக்க வேண்டும் என்று கூறி ''அதை நான்- மற்ற தலைவர்களிடத்திலே கலந்து பேசி- என்னுடைய முடிவைச் சொல்வேன்'' என்று- நேற்று நீங்கள் சொன்னதைப் போல- அன்றைக்கு அவர் சொன்னார். ஆதாரம் கேட்டுக் கேட்டுப் பார்த்து- ஒவ்வொரு நாளும் கேட்டுக் கேட்டுப் பார்த்து- ஆதாரம் வரவில்லை. கடைசியாக ஒருநாள் ஓர் ஆதாரத்தைக் கொடுத்தார். அந்த ஆதாரத்தைக்கூட நீதி விசாரணை வைத்து உயர்நீதிமன்ற

நீதிபதியையோ, சுப்ரீம் கோர்ட் நீதிபதியையோ வைத்து விசாரிக்கவில்லை. எந்தச் சபாநாயகர் ஆதாரம் தர வேண்டு மென்று உத்தரவிட்டாரோ, அதே சபாநாயகர்தான் அந்த ஆதாரத் தைப் படித்துப் பார்த்துவிட்டு, ''இதிலே ஆதாரம் ஒன்றுமில்லை. ஆதாரம் தருவதாக நீங்கள்'' -முதலமைச்சராக இன்றைக்கு இருக்கின்ற, அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த என்னுடைய மகன் பெயரால்- ''ஒரு போலிக் கையெழுத்தை ஒரு forgery கையெழுத்தைப் போட்டு ஓர் ஆதாரத்தைக் கொடுத் திருக்கிறீர்கள்'' என்று சொன்னார்கள். அதற்குப்பிறகு நானும் ''போனால் போகிறது'' என்று விட்டுவிட்டேன். இல்லாவிட்டால் அவர்களுடைய சத்தியப்படி அவர் ராஜினாமா செய்திருக்க வேண்டும். ராஜினாமா செய்யச் சொல்லி நான் வற்புறுத்த வில்லை. அத்துடன் அது முடிந்துவிட்டது. ஆனால் அன்றைக்கு- ஏன் சொல்கிறேன் என்றால்- ''ஆதாரத்தை என்னிடத்திலே கொடுங்கள் நான் தீர்ப்புக் கூறுகிறேன்'' என்று சொன்னது அன்றைய 'ஸ்பீக்கராக' இருந்த, சபாநாயகராக இருந்த ராஜாராம் அவர்கள். கொடுக்கப்பட்ட ஆதாரத்தை அவர் படித்துப் பாத்து விட்டு, ''ஆதாரம் இல்லை'' என்று அவர் இதே அவையிலே வெளிப்படையாகச் சொன்னார். அதுதான் அவையைப் பொறுத்தவரையில் முறை; முறையாக இருக்க வேண்டும். ஆதாரத்தைக் கொடுத்துவிட்டு, ''உடனடியாக நீதி விசாரணை வையுங்கள்'' என்று சொன்னால், அது பொருத்தமாக இருக்காது. எனவேதான் நடந்த ஒரு முன்மாதிரியை இந்த அவையில் சொல்லி, அதன் மூலமாக உங்களுக்கும் நாட்டு மக்களுக்கும் இந்த உண்மையைத் தெரிவிக்க, என்னுடைய கடமையை நிறைவேற்றியிருக்கின்றேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, குற்றச்சாட்டுகள் பொறுத்தவரை இந்த அவையி னுடைய நிலையே என்னவென்றால், ஒருவர் மீது ஒரு குற்றச் சாட்டு சொன்னால், அப்போது என்ன சொல்வார்கள் என்றால் ''இதை வந்து வெளியே சொல்லிப் பார்'' (குறுக்கீடு) கொஞ்சம் அமைதியாகக் கேட்க வேண்டும். ''இந்தக் குற்றச்சாட்டை வெளி யிலே சொல்லிப் பார், உன் மேலே Case போடுகிறேன்'' என்று சொல்வார்கள். ஏனென்றால் இந்த அவைக்குள்ளே நடக்கின்ற

விவகாரங்கள் இந்த அவைக்குள்ளேயே முடிய வேண்டியவை. தீர்ப்பு அளிப்பதாக இருந்தாலும் சரி, அல்லது அந்தத் தண்டனையை ஏற்றுக்கொள்வதாக அறைகூவல் விட்டு, அந்தத் தண்டனையை ஏற்றுக் கொள்வதாக இருந்தாலும் சரி, அவைக்குள்ளேயே முடிய வேண்டிய காரியங்கள். அதை விடுத்து, நீதி விசாரணை என்றெல்லாம் கூறும்போது குற்றச் சாட்டு உண்மையாக இருக்குமானால் அவர் சொல்வதுபோல் பயங்கரமானதாக, பலமானதாக இருக்குமானால், அந்தக் குற்றச்சாட்டு இருந்தால், அந்தக் குற்றச்சாட்டை வைத்தே நாளைய தினம் அமைச்சர் மீது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வழக்குப் போடலாம். வெளியிலே சென்று வழக்குப் போடலாம். அந்தக் குற்றச்சாட்டைச் சொல்லி, வழக்குப் போட வழி இருக்கும்போது, அவைக்குள்ளேயே இதை எப்படித் தீர்ப்பது என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், உங்களிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது; இந்தக் குற்றச்சாட்டுக்கான ப்டடியல் இது என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் படித்துப் பார்த்துத் தீர்ப்புச் சொல்ல வேண்டிய கடமை தங்களுக்குத்தான் இருக்கிறது. பொறுப்பு தங்களுக்குத்தான் இருக்கிறது. அந்தப் பொறுப்பைத் தங்களிடத்திலே ஒப்படைத்து விட்டு- நான் நேற்றுக் கொடுத்திருக்கிற ஒரு குற்றச்சாட்டிலே கூட, 'நீங்கள் சொன்னால் போதும்' என்றுதான் உங்களிடத்திலே கொடுத்திருக்கிறேன். அதைக்கூட இங்கே நான் கிளப்பி இருக்க மாட்டேன். இந்த அளவிற்கு வந்தபிறகு, என்னவோ யாரோ அவர்கள்தான் பரிசுத்தவான்கள், ஆளும் கட்சியில் இருப்ப வர்கள் எல்லாம் தவறானவர்கள் என்கின்ற ஒரு புதிய கோஷத்தை இன்றைக்கு எழுப்பியிருப்பது எனக்கு வேடிக்கை யாக இருக்கிறது; வேதனையாகக்கூட இருக்கிறது. எனவே, நான் கொடுத்ததாக இருந்தாலும், அவர் கொடுத்ததாக இருந்தாலும், எல்லாவற்றிற்கும் இந்த அவைக்குள்ளேதான் தீர்ப்பு அளிக்கப்பட வேண்டும். அதிலே திருப்தியில்லை என்றால், வெளியிலே சென்று மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன் மீது வழக்குப் போட எல்லா உரிமையும் எதிர்க்கட்சித்

தலைவருக்கு இருக்கிறது. அந்த வழக்கைப் போடலாம். கவர்னரிடத்திலே அதற்கான அனுமதியைப் பெறலாம். எல்லா வழியும் இருக்கும்போது, இந்த அவைக்குள்ளேயே அதைத் தீர்த்து வைப்பதில் வழிவகை இருக்கும்போது, அதை விட்டுவிட்டு, நீதிபதியை நியமியுங்கள் என்று சொல்கிறார்கள். நீதிபதியை நியமிக்கின்ற அதிகாரம் தங்களுக்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நீதி விசாரணை என்றால், அரசு ஒரு நீதி விசாரணை வைக்க வேண்டும். அந்த நீதி விசாரணை தேவைதானா, தங்களிடத்திலே குற்றச்சாட்டைக் கொடுத்துவிட்ட பிறகு, நீதி விசாரணை தேவைதானா என்பதையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உணர்ந்துபார்க்கவேண்டும். குற்றச்சாட்டு மாண்புமிகு சபாநாயகர் அவர்களால் படித்துப் பார்க்கப்பட்டு, நிரூபிக்கப்படுமேயானால், உண்மை இருக்கிறது என்று அவர்கள் சொல்வார்களேயானால், நம்மை எல்லாம் அழைத்து அவருடைய அறையிலே சொல்வாரேயானால் அடுத்த நிமிஷம் பொதுப்பணித்துறை அமைச்சரை இந்தப் பதவியிலிருந்து நீக்குவதற்கு கருணாநிதி தயங்கமாட்டான் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். நான் நேற்றைய முன்தினம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதைப் படித்துக் காட்டினேன். ''சபாநாயகர் தீர்ப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன்'' என்று சொன்னார். அந்தத் தீர்ப்பிலே ''இரண்டு நாட்களுக்குள்ளே என்னுடைய முடிவைச் சொல்வேன், உங்களுடைய குற்றச்சாட்டை ஆதாரத்தோடு என்னிடம் கொடுக்க வேண்டும்'' என்று நான் சொன்னேன். இன்று சற்று முன்னர் அவையிலே புத்தக வடிவில் ஒன்றைக் கொடுத்தார்கள். ''நான் அதைப் படித்துப் பார்த்து, என்னுடைய முடிவைச் சொல்வேன்'' என்றதற்கு முன்னால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுந்து ''உயர் நீதிமன்ற விசாரணை வைக்க வேண்டும்'' என்றார்கள். முதலமைச்சர் சொல்வதைப் போல அந்த அதிகாரம் எனக்குக் கிடையாது. நான் என்னுடைய நடுநிலைத்

தன்மையில் எந்த நேரத்திலே உங்களுக்கு ஐயப்பாடு வருகிறதோ அதற்குப் பிறகு இந்தப் பதவியிலே இருக்கக் கூடாது என்ற கருத்திலேதான் தெளிவாகச் சொன்னேன். நான் நடுநிலையாக எந்தத் தீர்ப்புச் சொல்வதற்கும் தகுதியற்றவன் என்று நீங்கள் ஒரு முடிவிற்கு வந்தால் அதை ஒரு தீர்மானம் வழியாக நீங்கள் கொண்டு வாருங்கள் என்றேன். அப்போது ஓர் உறுப்பினர் உட்கார்ந்து கொண்டு 'எண்ணிக்கையில்லை' என்றார். அதற்குப் பதில் சொல்லும் வகையிலேதான் நான் சொன்னேன். நீங்கள் தீர்மானம் கொண்டு வந்தாலே நான் பதவி விலகுவேன், நான் தன்மானம் உள்ளவன் என்று சொன்னேன். (குறுக்கீடு) இல்லை நான் அதை விளக்கமாகச் சொல்ல வேண்டும். தேவையில்லாமல், வேறு யாரையோ தன்மானம் இல்லாதவர் என்று நான் சொன்னதாக யாராவது சொன்னால் அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதனாலே நான் தெளிவாகச் சொல்கிறேன். உங்களுக்கு என்னுடைய நடுநிலைத் தன்மையிலே சந்தேகமிருந்தால் ஒரு தீர்மானம் கொண்டு வாருங்கள். இந்தப் பதவியிலே, இந்த நாற்காலியிலே நான் உட்காரமாட்டேன். நான் நிச்சயமாக, நான் பேரவைத் தலைவராக இருந்தால், அந்தக் குற்றச்சாட்டில் உண்மை இருக்கிறதா இல்லையா என்கிற தீர்ப்பை நான்தான் சொல்வேனே ஒழிய வேறு யாருக்கும் அந்த உரிமையைக் கொடுக்க மாட்டேன்.

அங்கீகரிக்கப்படாத மனைகள்

உரை : 65 நாள் : 31.01.2001

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் இந்த அறிக்கையை இந்த மாமன்றத்திலே வழங்குகிறேன்.

நகர்ப்புறப் பகுதிகளில் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்தி அப்பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் ஏற்படுத்த வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். மேலும், இதுபோன்று பொதுமக்களிடமிருந்தும் கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அதுபற்றி நல்ல முடிவு காணப்படுமென்று நேற்றையதினம் இந்த அவையில் அறிவித்ததையொட்டி, அதிகாரிகளோடு கலந்து பேசி எடுக்கப்பட்ட முடிவினைத் தெரிவிக்கின்றேன்.

இந்தப் பிரச்சினை குறித்து ஏற்கெனவே ஆணைகள் பிறப்பித்தும், விளக்கங்கள் அளித்தும், நிபந்தனைகளைத் தளர்த்தியும், அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுதாரார்களிடமிருந்து பெருமளவில் விண்ணப்பங்கள் வரப்பெறாததால், இந்தத் திட்டத்தால் பெருமளவில் மக்கள் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்த சில நிபந்தனைகளை மேலும் தளர்த்தி பின்வரும் ஆணைகள் வழங்கப்படும்:-

1. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியைத் தவிர, இதர மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் 22-9-2000-க்கு முன்பு குறைந்தது 50 விழுக்காடு மனைகள் விற்கப்பட்டோ அல்லது கட்டடங்கள் கட்டப்பட்டோ இருக்கும் மனைப் பிரிவுகளுக்கு அனுமதி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

894.8115
TAM

2. இம்மனைப் பிரிவுகளில் உள்ள சாலைகளின் மொத்த நீளத்தில் குறைந்தது 75 விழுக்காடு சாலைகள் 20 அடி அகலத்திற்குக் குறையாமல் இருந்தால் போதும்.

3.அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளுக்குச் செலுத்தப் பட வேண்டிய அபிவிருத்திக் கட்டணமாக ஒன்றரை மடங்கு என்ற நிபந்தனை தளர்த்தப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவுகளுக்கு கட்ட வேண்டிய அபிவிருத்திக் கட்டணமான ஒரு மடங்கைமட்டும் கட்டினால் போதும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவில் உள்ள மொத்தப் பரப்பளவில் 10 விழுக்காட்டிற்கும் குறைவாக பொதுப் பயன்பாட்டிற்கான நிலம் இருக்குமேயானால், எந்த அளவிற்கு குறைவாக இருக்கின்றதோ அதற்கு ஈடான நிலத்தின் மதிப்பை தற்போதைய வழிகாட்டி பதிவேட்டின்படி 50 விழுக்காடு மட்டும் செலுத்தினால் போதும்.

P1002382

5. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற முறைப்படுத்தும் கட்டணமாக- Regularisation Fees - மாநகராட்சிப் பகுதிகளில் மனையின் பரப்பளவில் ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 20-ம், நகராட்சிப் பகுதிகளில் ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 10-ம், பேரூராட்சிப் பகுதிகளில் ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 3-ம் செலுத்தினால் போதும்.

6. இத்திட்டத்தின்கீழ் 30-6-2001-க்கு முன்னர் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம். எனவே, இத்திட்டத்தினுடைய சலுகைகளைப் பயன்படுத்தி, அங்கீகரிப்படாத மனைப் பிரிவுகளில் மனைகளை வைத்திருப்போர் அதனை முறைப்படுத்திக்கொண்டு உள்ளாட்சி அமைப்புகள் மூலம் அடிப்படை வசதிகளைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்தச் சலுகைகள் அறிவிக்கப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

ANNA CENTENARY LIBRARY
CHENNAI-600 085

